# கரைஎழில்

# 2013



ஸ்கந்தபுரம் வயல் காட்சி 2013.12.23

கலாசார பேரவையும்
கரைச்சிப் பிரதேச செயலகமும்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரை எழில்

2013

கலாசார பேரவை,
பிரதேச செயலகம்,
கரைச்சி,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூல் தலைப்பு**
கரை எழில்

**உரிமை**
பிரதேச செயலகம், கரைச்சி

**பக்கம்**
250

**பிரதிகள்**
600

**பதிப்பு**
மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்,
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்த் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறம் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!!
வாழ்த்துதுமே!!!

மனோண்மணீயம் சுந்தரனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக கீதம்

நெல் விளையம் கழனி நிறை
கரைச்சி வளம் பெருகி
பல்லாண்டு நீடு வாழ்கவே
பலவளமும் படைத்து வாழ்கவே

நெல்விளையும்

பண்பாடும் கலை நலமும்
கல்வி செல்வ வினைத்திறனும்
எல்லாரும் பெற்று வாழ்கவே
இன்ப சுகம் என்றும் மேவவே

நெல்விளையும்

இரணை மடுக்குளத்தால்
திரளும் திரவியங்கள்
ஏற்றத்தின் ஊற்றதாகவே
இணைத்தெழும் மேன்மை ஓங்கவே

நெல் விளையும்

அக்கராயன் முறிப்பு கரைச்சி
அபிவிருத்தி பிரதேச செயலகத்தினர்
தக்கபணி அணிபெறவே
தலைநிமிர்ந்து சிறந்து வாழ்கவே

நெல் விளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம் – கரைச்சி – கிளிநொச்சி

DIVISIONAL SECRETARIAT - KARACHCHI - KILINOCHCHI

ප්‍රාදේශීය මහ ලේකම් කාර්යාලය, කරච්චි, කිලිනොච්චි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

**திரு.கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலாளரும்,
கலாசாரப் பேரவைத் தலைவரும்

**திரு.ச.பீ.அமல்ராஜ்**
உதவித்திட்டமிடல் பணிப்பாளர்,

**திரு.ப.லுறேந்திரன்**
கணக்காளர்

**திரு.கு.றஜீபன்**
கலாசார உத்தியோகத்தர்

**திரு.சி.கருணாகரன்**

**திரு.சு.பிரசாந்தன்**
ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



## கிளிநொச்சிக்கான காலைப் பாரம்பரியத்தை கட்டியெழுப்புவோம்

மிக இளைய நகரமான கிளிநொச்சி தன்னுடைய வரலாற்றில் அதிகமான பாதிப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்தது. போரின் காலில் சிக்குண்ட இந்த நகரம் நம்பக் கடினமான அதிசயமாக ஒவ்வொரு தடவையும் அழிவில் இருந்து மீண்டமும் பச்சைப்பசேலென செழிக்கும் அதன் வயல்களைப்போல புத்தம் புதிதாக கிளிநொச்சியின் ஒவ்வொரு எழுகையும் இருக்கும். இப்பொழுது கிளிநொச்சி மீண்டெழுந்திருக்கிறது. ஆனால் இது நிரந்தர எழுச்சி இனி இதுவே சாஸ்வதமானது.

இந்த வகையில் கிளிநொச்சியின் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பும் பல்வேறுபட்ட பணிகளை ஆற்றிவருகின்றோம். கல்வி, தொழிற்துறைகள், விவசாய மேம்பாடு கலை மற்றம் பண்பாடு போன்ற அனைத்தையும் முழுமையான அபிவிருத்தியிலும் மேம்பாட்டிலும் உயர்வடைய வைக்கும் சமாந்தர இலக்கில் திட்டமிட்டு அவற்றை உருவாக்கி வருகின்றோம்.

வராற்றில் என்றும் இல்லாதவாறு கிளிநொச்சியின் வளர்ச்சி இன்று உள்ளது. புதிய பல்கலைக்கழக வளாகம் பல்கலைக்கழக நகராக செய்யப்பட்டுள்ளது. தொழிற்கூடங்கள் மிகப் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ளன. மாபெரும் விளையாட்டரங்கு கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் கிளிநொச்சியில் அரும்பொருட்காட்சியகம், பொது நூலகம், கலாச்சார மண்டபம், ஆகியவை அமைக்கப்பட வேண்டியுள்ளன. இவற்றை உருவாக்குவதற்காக நாம் முயன்று வருகின்றோம். மிக விரைவில் கிளிநொச்சி மக்களுக்கு இந்த வாய்ப்புக்கள் கிட்டும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்.

இந்த வகையில் கிளிநொச்சிக்கான கலைப்பாரம்பரியத்தை கட்டியெழுப்பும் வாய்ப்பையும் வளத்தையும் உருவாக்கும் பிரதேச கலாச்சார விழாவாக இது அமைகிறது. ஒவ்வொரு ஆண்டும் நடக்கின்ற இந்தப்பிரதேச விழாவானது தங்கள் வாழ்நாளில் கலைப்பங்களிப்பை வழங்கியவர்களை மதிப்பளிப்பதோடு அவர்களை ஊட்டமளித்து மேலும் ஊக்கமளிக்கும் விதமாக இருக்கினறது. அத்துடன் புதிய படைப்பாளிகளையும் கலைஞர் களையும் இது வளர்தெடுக்கிறது. இதனை இட்டு நான் பெருமையடைகிறேன். மேலும் கலாச்சாரப் பேரவை ஆண்டு தோறும் வெளியிட்டு வரும் கரைஎழில் மலர் 03 சிறப்புறவும் வாழ்த்துகின் றேன். என்னோடு இணைந்த இந்தப்பணிகளை சிறப்பாக செய்து செய்து வரும் கரைச்சி கலாச்சாரப் பேரவையின் தலைவரும் பிரதேச செயலருமான திரு. கோ. நாகேஸ்வரன் இந்த முயற்சிகளில் ஆற்றலோடு பெரும் பணியாற்றி வரும்கலாச்சார உத்தியோகத்தர் திரு. கு. றஜீபன் மற்றும் கலாச்சாரப் பேரவைக் குழுவினர் கலைஞர் பிரதேச செயலகப்பணியாளர்கள் ஆகியோரைப் பாராட்டுகின்றேன். எழில் கொஞ்சும் மகிழ் உயர்வெய்த நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

**முருகேசு சந்திரகுமார்**
**பாராளுமன்ற உறுப்பினரும்**
**பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவரும்**
**பிரதேச ஒழுங்கிணைப்புக் குழுத்தலைவரும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



தமிழர்கள் தொன்மையான நாகரீக பரம்பலைக் கொண்டவர்கள். பழமையினைப் பேணிப்பாதுகாப்பது அவர்களது வாழ்வியலின் ஓர் அம்சமாக இருந்திருக்கிறது. அந்தவகையில் கலையோடும் இலக்கியத்தோடும் இணைந்திருந்த மக்கள் வாழ்வியல் படிமுறைகளை, அவற்றின் வளரச்சிநிலைகளை ஊக்குவிக்கும் முகமாக கரைச்சி பிரதேச செயலகம் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சிக்குரியது.

இத்தகைய செயற்பாட்டின் முழுவடிவமாக வருடாவருடம் நடத்தப்படுகின்ற கலாசார விழாவும் அவ்விழாவில் வெளியிடப்படுகின்ற "கரைஎழில்" என்ற ஆய்வு மலரும் கலை இலக்கியத்தையும் பிரதேசம் சார்ந்த ஆவணப்படுத்தலையும் முதன்மைப்படுத்தி நிற்பது எதிர்காலத்திற்கு பயன்தரக்கூடியதாக உள்ளது. இவ்வருடம் கரைஎழில் மூன்றாவது இதழ் வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைவதோடு இம்முயற்சியில் அயராது ஈடுபட்டுவரும் பிரதேச செயலர் திரு கோ.நாகேஸ்வரன் அவர்களையும் கலாசார பேரவையினரையும் பாராட்டுகின்றேன்.

புதிய மாற்றங்களையும் புதிய முதலீடுகளையும் கண்டு வரும் கிளிநொச்சியின் பண்பாட்டுத்தளத்திலும் விளிப்புணர்ச்சி ஏற்பட்டுவருவது ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் என நம்புகின்றேன். இவ்வகையில் மாறிவரும் சூழலுக்கு ஏற்றவாறு பழமையில் நின்றும் விலகாது புதியவைகளை வரவேற்கும் கரைஎழில் ஆய்வு மலரில் சிறப்பான ஆக்கங்களை எழுதி வருகின்ற ஆய்வாளர்களதும், எழுத்தாளர்களதும் முயற்சி பாராட்டத்தக்கது. கரைபுரண்டோடும் கரைஎழில் வெள்ளம் காலநதி பயிர்களுக்கு நல்ல விருந்தாகட்டும்.

**திருமதி ரூபவதிகேதீஸ்வரன்**
**அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம்**
**கிளிநொச்சி மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



**"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்**
**செல்வரும் சேர்வது நாடு"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நல்விளை நிலங்களும் அறவோரும் குறைவுபடாத செல்வமுடையோரும் சேர்ந்தது நாடு என்று கூறப்படுகின்றது.

அவ்வகையில் வற்றாத நீர்வளமும் நெல்வளமும் கொண்டு மேலும் பல எழில்மிகு வளங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கரைச்சிப்பிரதேசம் கலை வளத்திலும் செழிப்பைக் கொண்ட பிரதேசமாகும். கரைச்சிப் பிரதேச மக்களின் வாழ்வியல்இ பண்பாட்டம்சங்களை பிரதிபலிக்கும் வகையில் பல்வேறு படைப்புக்களை உள்ளடக்கி கரைஎழில் எனும் மலர் மலர்வது மகிழ்ச்சிக்குரியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தின் கலை, பண்பாட்டம்சங்கள் இசைக் கலைஞர்களினதும் கலாநிறுவனங்களினதும் பங்கெடுப்பில் வளர்ச்சி கண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். கலைகள் காலத்தின் கண்ணாடி என்பதால், அக்காலத்தின் கலாசாரம், பண்பாடு மற்றும் சமூக விழுமியங்களை உயிர்ப்புடன் வெளிக்காட்டுவதோடுஇ சமூகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கும் ஆத்மீக ரகசியம் பொதிந்தவையுமாகும்.கலை அம்சங்கள் மேன்மேலும் வளர்வதற்கு வாழ்த்துவதோடு அக்கலை அம்சங்களை காலத்தால் அழியாது ஆவணப்படுத்தும் நோக்கில் கரைஎழில் என்னும் மலரினை வெளியிடுவதையிட்டு என் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கலாசாரப் பேரவையால் வருடம் தோறும் நடத்தப்படும் கலாசார விழா திறம்பட நடைபெறவும் அதுதொடர்பில் வெளியாகும் கரை எழில் மலர் சிறப்புற வெளிவரவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறைவனின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி செ.ஸ்ரீநிவாசன்**
**மேலதிக அரசாங்க அதிபர்**
**மாவட்ட செயலகம்**
**கிளிநொச்சி மாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



## கல்வி அமைச்சரின் செயலாளரிடமிருந்து

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகம் இவ்வாண்டும் கலாசார விழாவும் கரை எழில் மலர் வெளியீடும் நடத்துவதையிட்டு பெருமகழ்வடைகின்றேன். எமது பாரம் பரியங்களை பாதுகாக்கும் பொருட்டு பிரதேச செயலகம் எடுக்கும் இம்முயற்சி பாராட்டுக்குரியது. குறிப்பாக இந்த முயற்சியில் அயராது தன்னை ஈடபடுத்தி வரும் பிரதேச செயலாளர் திரு. கோ. நாகேஸ்வரனுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

வடமாகாணத்தின் மையப்பகுதியாக அமைந்திருப்பது கிளிநொச்சி மாவட்டம். இம் மாவட்டத்தின் சிறப்புமிகு ஆளுமைப் பிரதேசமாக அமைந்திருப்பது கரைச்சிபிரதேசம் இப்பிரதேசம் உற்பத்தி முயற்சிகளினதும் மற்றும் மாவட்ட மக்களின் நலன் சார் சேவைகளை வழங்கும் மையப்பிரதேசமாகவும் விளங்குகின்றது. இயற்கைய அன்னையின் சிறப்பு மிகு அம்சங்கள் பலவற்றைதன்னகத்தே கொண்டிருப்பது இப்பிரதேசத்தின் தனித்துவமாகும். வற்றாத நீர்வளம் கொண்ட இரணைமடுக்குளம் விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்கிறது. நெல் மற்றும் தானியங்களின் உற்பத்திப்பெருக்கம் நிறைந்த இப்பிரதேசம் கடும் உழைப்பாளிகளும் விவசாயிகளும் புகழ் பூத்த கலைஞர்களும் வாழும் பிரதேசமாக உள்ளது. யாவரும் அறிந்ததே.

கல்வி, கலை, விளையாட்டு போன்ற துறைகளில் முதன்மை பெற்று விளங்கும் இப்பிரதேசத்தில் பாரம்பரிய கூத்துக்கலைஞர்கள் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். தம் சிறப்பான ஆற்றுகையினால் பிரதேசத்திற்கு புகழ் தேடித்தந்தவர்கள் இவர்கள்.காத்தவராயன் கூத்து காவடி மற்றும் கரகம் போன்ற கிராமியக்கலைகள் இங்கு சிறப்பாக ஆற்றுகை செய்யப்படுகின்றமையை நாம் காணலாம்.

எமது பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் ஊடாக இப்பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரது நலன்களைக்ககருத்தில் கொண்டு பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். இப்பிரதேசத்தில் கலாசார நிகழ்வுகளுக்கென கலாசார மண்டபமொன்று அமைத்து வருவதோடு கலைஞர்களது மேம்பாட்டுக்காகவும் சமுதாய மெம்பாட்டுக்காகவும் எதிர்காலத்தில் பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுப்போம் என்பதையும் இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

இத்தகைய வனப்புமிக சிறப்புக்கள் அமையப்பெற்ற இப்பிரதேசத்தை நிர்வகிக்கும் கரைச்சிப்பிரதேச செயலகத்தின் கலாச்சாரப்பேரவையின் மூன்றாவது தடவையாக நடாத்தும் கலாசார விழா சிறப்புற நடைபெறவும், விழாவின் ஆவணாமாக வெளியிடப்படும் கரை எழில்" மலர் 2013 காத்திரமாகவும் வெளிவரவும் எனது நல்வாழ்த்துக்களையும் இறைவனின் ஆசிகளையும் வேண்டிநிற்க்கின்றேன்.

**திரு.சி. சத்தியசீலன்**
**செயலாளர், கல்விப்பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை அமைச்சு,**
**வடமாகாணம், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



கரைச்சி பிரதே செயலகத்தின் கரைஎழிலன் மூன்றாவது மலர் இவ்வாண்டிலும் உங்கள் கைகளில் மனம் பரப்பிக்கொண்டிருப்பதனை நினைத்து மனம் மிக மகிழ்கின்றோம்.

இவ்விழாவில் வெளியிடப்பட்ட கரைஎழில் 2013 தண்ணொளி பரப்பி உள்ளொளி பெருக்கித் தமிழ் இலக்கிய வானில் என்றும் நிலைத்திருக்கும் என்று உறுதியாக நம்புகின்றோம். எமது மொழி மிகப்பழமை வாய்ந்த செழுமையுடைய மொழியாகும்.

இதனை இனிமையான மொழி என்றும் அமுதென்றும் எமது மூச்சென்றும் பொதுவாக கூறி வருகின்றோம். இந்தவகையில தொன்மையான தமிழ் மொழியானது இன்றும் பாரெங்கும் வருவது நிரந்தரமானது.

எமது பண்பாட்டில் கலை இலக்கியமானது சமுதாயத்தை பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடி, புரதன இலக்கியங்கள் பாரம்பரியத்தை எமக்கு கற்பிக்கின்றன. கலை இலக்கியம் சமுதாயத்திற்காக என்கின்ற போது அவை சாகாவரம் பெறுகின்றன. இக்கலை இலக்கியமானது சமுதாய உணர்வுடன் படைக்கப்பட்டு சமுதாய முன்னேற்றத்திற்கான ஒரு கருவியாக பயன்படும் போது உயிர்புடைய தாகின்றது.

தங்களை கலை இலக்கியத்துறையில் ஈடுபடுத்தி அதன் வளர்ச்சிக்காக பங்காற்றி வருபவர்களது கலை இலக்கிய படைப்புக்கள் ஆய்வுக்கட்டுரைகளாக, நாடகங்களாக , கவிதைகளாக கட்டுரைகளாக இந்நூலில் வெளியிட்டுள்ளது. எமது எதிர்காலத்தலைமுறைக்கு நாம் வாழும் காலத்தில் நமது வாழ்வியல் பற்றி சிறுகுறிப்புக்களை மேலும் பதிவு செய்து ஆவணப்படுத்தி வைக்கப்படவேண்டியது எமது பாரிய பொறுப்பாகும் தமிழ் மொழி பேணும் தமிழர் பண்பாடு பேணலும் இதனால் தொடரும்

இக்காலத்தின் விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலால் இப்பனி இன்று இலகுவாகின்றது. இப்பணியினைச் செய்யும் நினைவோடு உருவான இத்தொகுப்பை இன்று வெளியிடுகின்றோம்.

இப்பணியில் எம்மோடு இணைந்த செயாற்றிய அனைத்து தமிழ் உள்ளங்கட்கும் எமது மனங்கனிந்த நன்றிகள்.

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை இப்பணிகளில் ஈடுபட ஆலோசனைகளையும் வழங்கி வழிகாட்டியாகவும் திகழும் பெரும்மதிப்பிற்குரிய கிளிநொச்சி மாவட்ட செயலரும் அரசாங்க அதிபரும் ஆகிய திருவாட்டி றூபாவதி கேதீஸ்வரன் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

அத்துடன் எமது கலைஇலக்கிய செயற்பாடுகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்த வரும் பிரதேச ஒருங்கினைப்பக் குழுத்தலைவரும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமாகிய உயர் திரு. முருகேசு சந்திரகுமார் அவர்கள் இவ்வாண்டும் கலைஞர்களுடைய இசை வளர்ச்சிக்காக மூன்ற இலட்சம் ரூபா பெறுமதியான இசைக்கருவிகளை வழங்கியுள்ளமையும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

**கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன்**
**பிரதேச செயலரும் கலாசாரப் பேரவை தலைவரும்**
**கரைச்சி , கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. இரணைமடுக் கலாசாரம் 01- 05
2. வளம் பெருக்கும் வாலிபர்களே 06-11
3. இளைஞர்களை கவர்ந்த கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம் 12-15
4. தண்ணீருக்கான யுத்தம் 16-20
5. வன்னிப் பெருநிலப் பிரதேசமும் பல்லினப் பண்பாடும் 21-33
6. கிளிநொச்சி மாவட்டத்தின் மீளநிலைப்படுத்தலும் நினைவழியா நிகழ்வுகளும் 34-38
7. போரின் பின்னரான சமூகபொருளாதார அபிவிருத்தியும் வடக்கு மக்களின் வாழ்க்கை நிலையும் 39-43
8. இணையிலாத் தமிழ் 44-47
9. நாகரீகம் மிக்க நாகர்கள் சைவசமயத்தின் மீது பேரபிமானங் கொண்டவர்கள் 48-54
10. தமிழர் பண்பாடு : இருப்பும் சவால்களும் 55-64
11. மீண்டும் வாருங்கள் காதுகளில் ஒலிக்கும் பிஞ்சுகளின் அழைப்பு 65-66
12. நிலைபேறான எதிர்காலத்திற்கான சுதேச அறிவு 67-74
13. அக்கராயன் வட்டகை (சமகாலமும் வரலாற்றுத் தடங்களும்) 75-83
14. சமயநெறி உணர்த்தும் வழிபாட்டு முறைமைகள் 84-94
15. சைவசமயச் செல்நெறியில் தலயாத்திரை 95-107
16. தமிழ்மொழியும் இற்றைப்படுத்தலும் 108-113
17. 1980களுக்குப் பின் வெளிவந்த ஈழத்துக் கவிதைகளில் இயற்கை 114-123
18. கடவுளின் ரூபம் ஆதாரம் வேதாந்த ரஹஸ்யம் 124-127
19. முருகனின் சிறப்புக்களும், வளர்ச்சிப் போக்கும் பற்றிய ஓர் ஆய்வு 128-129
20. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு 130-138
21. வெற்றிகரமான வாழ்க்கை 139-143
22. தென்னம்பிள்ளைக்கு மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழா 144-145
23. நவீன மயமாதலும் பண்பாட்டுப் பிறழ்வுகளும் 146-151


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பேராசிரியர் க.கணதிப்பிள்ளையின் நாடகநிலை பற்றிய சில தொடுகை நிலை குறிப்புகள் 152-156

25 எமது உரிமைகளை நாம் அறிவோம் 157-161

26. முயற்சியாளரின் வெற்றிக்கு வித்திடும் சிறந்த நிதிசார் நிபுணத்துவம் 162-166

27. மட்டக்களப்பு வடமோடிக்கூத்து ஆடலும் செந்நெறி நடனமும் 167-174

28. கரி காசாகும் போது காசு கரியாகிறதே ... 175-180

29. கரைசேரா படகுகள் 181-185

30. வண்ணமலர் வாரி அணைத்து 186-189

31. எதிர்பார்ப்பு 190-193

32. மலைத்தேச கலைச்சொத்து காமன்கூத்து 194-196

33. அரங்கினூடாக சிறுவர்களுக்கான உளரன் (மனோதிடம்)மேம்பாடு 197-198

34. வணங்காமுடி வெடியரசனின் பசுத்தீவின் வரலாற்றுக் காவியம் சரித்திர நாடகம் 199-208

35. வாய்மை காத்த மன்னன் 209-223

36. நட்பின் இலக்கணம் 224-225

37. கலியுகத்தில் அமைதியாய் வாழ 226-228

38. தமிழன் சிந்தனைகள் 229-233

39. ஸமான் கவிதைகள் 234-236


40. கிளையற்று அலையும் பறவையின் பெயர் 237-238

41. போன நண்பன் 239-240

42. ககனா கவிதைகள் 241-243

43. கலைஞர், எழுத்தாளர், சமூகசேவையாளர் விபரக்குறிப்பு கரைஎழில் விருது நூலில் இடம்பெறும் கலைஞர்கள் பற்றிய சுருக்கமான விபரக்குறிப்பு 244-249

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரணைமடுக் கலாசாரம்

மா.கணபதிப்பிள்ளை (M.A , SLEAS)
பணிப்பாளர்,
இலங்கைக்கான மும்மொழி அபிவிருத்தி

இலங்கையின் வடபுலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாங்குளத்தின் தென்பகுதியில் இருந்து ஆணையிறவு கடல்நீர் ஏரி வரை பாய்ந் தோடும் கனகராயன் ஆற்றை மறித்துக் கட்டிய நீர் கொள்பிரதேசம் "இரணைமடுக்குளம்" எனப் படும். இக் குளக்கட்டு பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் வடபுலத்தில் செல்வாக்குடன் விளங் கிய அரசாங்க அதிபர் வில்லியம் துவ்வனம் அவர்களின் காலத்தில் கட்டப்பட்டது. இக் குளம் இங்கு உருவாக்கப்படுவதற்கு முன்பே கிளி நொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் மக்கள் அடர்த்தியாய் வாழ்ந்திருக்க வேண்டும். ஏனெனில் 1950களை அண்மித்து குடியேற்றங் கள் வழங்கப்பட்டபோது தமக்கான காணிகளில் காடழித்தவர்கள் மட்பாண்டத் துண்டுகள், மண்டைஓடுகள் என்று பலவற்றைக் கண்டு இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

கண்டாவளை, புழியம்பொக்கணை, கரைச்சிப்பிரிவுகள் இரணைமடுக் குடியேற்றத்து க்கு முன்பே வாழ்ந்த மக்களின் இடங்களாகும். அவர்களின் உறுதிகள் பிரித்தானியர் காலத்து க்கு முற்பட்டவையாக இருக்கின்றது. இப்பிர தேசங்கள் பற்றிய முறையான தொல் பொருளி யல் ஆய்வுகளற்ற பிரதேசங்களாகவே இவை காணப்படுகின்றது. உருத்திரபுரத்தில் காணப் படும் சிவன் கோவில் கி.மு.2ம் நூற்றாண்டிற் குரியதாகவிருக்க வேண்டும். ஏனெனில் கொழும்பு தொல்பொருள் காட்சியகத்தில் ஒரு நடராசர் சிலை காணப்பட்டது. 1976ம் ஆண்டு களில் கருங்கல்லிலாலான அச்சிலை காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அச்சிலையின் கீழ் இது உருத்திரபுர சிவாலயத்திலிருந்து பெறப்பட்ட தாகவும், கி.மு 2ம் நூற்றாண்டுக்குரியதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது அச்சிலை கொழும்பு அரும்பொருட்காட்சியகத்தில் இல்லை.

உருத்திரபுர மக்களின் கர்ண பரம்பரை கதைகளின் ஊடாகவும், உருத்திரபுரம் சிவன் கோவில் கும்பாபிஷேக மலரில் கௌரவ கா.நாகலிங்கம் அதிபரால் (முந்நாள் கிளி. கிராமசபை அக்கிராசனர்) எழுதப்பட்டுள்ள கட்டுரை குறிப்புக்களாலும், அக்கோவிலின் புராதனம் சுட்டிக் காட்டப்படுவதுடன் இப்போது வழிபடும் சிவபெருமானின் ஆவுடையார் சதுரப் பாங்கானது எனவும் அது சோழர் காலத்திற்குரி யது என நம்பலாம் என பேசப்படுகிறது.

இச் சிவன் கோவில் யோக சுவாமிகள், வடிவேல் சுவாமிகள் போன்றோரின் ஆத்மீக பலத்தால் அடையாளம் காணப்பட்டதாகவும் அப் போது முறையாக உருத்திரபுரம் குடியேற்றம் வழங்கப்படவில்லை என்ற குறிப்புக்கள் காணப் படுகின்றது. இன்றும் இந்த உருத்திரபுரம், மகாதேவா ஆச்சிரமம், காந்தியம், குருகுலம், மாதாஜி சமாதி என்ற பல புண்ணிய செயற் பாட்டு நிலையங்களோடு புகழ் பெற்று நிற்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் காணமுடிகிறது. இப்பிரதேசங்கள் முறைப்படி ஆய்வுக்குட்படுத்தப்படுமானால் மேலும் பல வரலாற்றுண்மைகள் எங்களால் கண்டறியப்படலாம்.

மேலும் புழியம்பொக்கணை நாக தம்பிரான் கோவில் “நாக” வழிபாட்டுத்தல மாகும். வரணிப் பிரதேசத்தோடு நீண்ட வரலாற்றுத் தொடர்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. தென் இந்தியாவின் வேதாரணியம் என்ற கோவில் வரணி மக்களால் பூசிக்கப்பட்டு வந்தது. அதன் உரித்தை தமிழ்நாட்டு நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து வரணியைச் சேர்ந்தவர்கள் மீண்டும் பெற்று இருக்கிறார்கள். தற்போது வரணியைச் சேர்ந்தவர் ஒருவர்தான் வேதாரணித்தின் தர்ம கர்த்தாவாக இருந்து செயறபட்டு வருகிறார். வேதாரணியக் கோவிலும் சோழர் காலத்தின் பிற்பகுதியில் செல்வாக்குடன் காணப்பட்டது. அந்தக் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்து புழியம் பொக்கணை நாகதம்பிரான் வழிபாடும் காணப்பட்டு இருக்க வேண்டும் என நாம் நம்பலாம்.

மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இரணைமடுப் பிரதேசத்திலும், வேலணைச் சாட்டியிலும் கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் இதுவரை இலங்கை வரலாற்றியல் ஆராய்ச்சியாளர்களால் சொல்லப்பட்ட “பலாங்கொடை” மனித எலும்புக் கூட்டுக்கும் முந்தியது என்று சொல்லப்படுகின்றது. எனவே கனகராயன் ஆற்றுக் கரைகளில் இரணைமடுக் குளத்தை அண்மித்து ஒரு நாகரிகமுள்ள மனிதர்கள் வாழ்ந்திருக்க வேண்டும். “நாக” இனத்தின் வரலாற்றுப் பெருமைகள் எல்லாம் இதில் புதைந்து கிடக்க வாய்ப்புண்டு. அது சம்பந்தமான ஆய்வுகள் எமக்கு அத்தியாவசியமானவை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புதைபொருள் ஆய்வுத்துறையினரும் அதில் ஆர்வத்தோடு செயறபடும் பேராசிரியர். ப.புஸ்பரத்தினம் அவர்களும் இந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். அதற்கான நிதித் தேவையை புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் உதவும் பட்சத்தில் இரணைமடு கலாசாரத்தின் பண்புகள் மேலெழுப்பப்படலாம்.

**குடியேற்றம்**

1947ம் ஆண்டு நடைமுறைக்கு வரும் அரசாங்கம் 1948ம் ஆண்டுச் சுதந்திரத்தின் பின் 1952ம் ஆண்டு வரை செல்வாக்குப் பெற்று இருந்தது. இக்காலத்தில் பிரதமராகவும் விவசாய அமைச்சராகவும் இருந்த கௌரவ டி.எஸ். சேனநாயக்க அவர்கள் இலங்கையில் பல ஆறுகளையும் குளங்களையும் அண்மித்து குடியேற்றங்களை உருவாக்கினார். கல்லோயா குடியேற்றம், மின்னேரியா குடியேற்றம் போல் இரணைமடுக் குடியேற்றமும் ஏற்படுத்தப்பட்டது. இக்குடியேற்றத்திற்கு யாழ் மாவட்டத்திலிருந்து 13 D.R.O பிரிவுகளில் வாழ்ந்த மக்களில் பொருத்தமான விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அதே போல் தென் இலங்கையிலிருந்தும் சிலர் இக் குடியேற்றத்தில் குடியேறியிருந்தனர். அவ்வாறு வழங்கப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் தான், உருத்திரபுரம், கணேசபுரம், வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், பரந்தன், முரசுமோட்டை, முதலாம் இரண்டாம் மூன்றாம் நாலாம் ஐந்தாம் ஆறாம் வாய்க்கால் பிரதேசங்களாகும்.

இரணைமடு நீர்ப்பாசனத்தையும் மழையையும் நம்பி காலபோகம் சிறுபோகம் என்று இரண்டு போக நெற்செய்கையில் இங்குள்ள மக்கள் ஈடுபட்டனர். கடின உழைப் பாழிகளான இவர்கள் மிகக் கஷ்டப்பட்டு காடழித்து, கிணறுகள் வெட்டி, மனிதக் கூட்டுறவு உழைப்பால் தம் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். சொகுசான வாழ்க்கை முறையில் நாட்டமும், கடின உழைப்பில் நாட்டமில்லாத தென்னிலங்கை சிங்களச் சகோதரர்கள் தம் காணிகளை அயலிலுள்ள தமிழ் சகோதரர்களுக்கு விற்று விட்டுச் சென்று விட்டார்கள். வரட்சி, மலேரியா நோய், யானைகள் குரங்குகள் போன்றவற்றால் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரழிவு, வெள்ளப்பெருக்கு, அடிப்படை வசதிக் குறைபாடுகளால் சிங்களச் சகோதரர்கள் தொடர்ந்து அங்கு வாழாமல் போனார்கள் என்று புராதன குடியிருப்பாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட அத்தனை பிரச்சினைகளையும் தாங்கிக் கொண்டு தாம் வாழ்ந்த பிரதேசங்களைப் பொருத்தமான களனிகளாக்கினார்கள். யாழ் மாவட்டத்துக்கு உணவு வழங்கும் மாவட்டமாகக் கிளிநொச்சி மாறியது. யாழ்ப்பாணத்திலே பரமேஸ்வராக் கல்லூரியை ஏழ்மைமிக்க ஆண் மாணவர்களுக்கும் இராமநாதன் பெண்கள் கல்லூரியை ஏழ்மைமிக்க பெண் பிள்ளைகளுக்கும் என உருவாக்கிய சேர்.பொன். இராமநாதன் அவர்கள் கிளிநொச்சியில் உள்ள தனது 1000 ஏக்கர் காணியில் கிடைக்கும் விளைச்சலை அப் பிள்ளைகளுக்கு உணவாக்கினார். யாழ் மக்களின் வாழ்வேந்து பிரதேசமாகக் கிளிநொச்சி விளங்கியது.

கிளிநொச்சி பிராந்தியத்தில் வாழ்ந்த போதும் அம்மக்கள் தமது சொந்த ஊர் பெயர்களோடு தான் அறிமுகப்படுத்தப்பட்டனர். உதாரணமாக நெடுந்தீவு முருகேசு, குறிகாட்டுவான் மாரிமுத்து, அல்லைப்பிட்டி சிவஞானம், சாவகச்சேரி தில்லையம்பலம் என்றவாறு அழைக்கப்பட்டனர். கிளிநொச்சியில் ஓடிய உழவு இயந்திரங்களின் பெட்டியில் அவர்கள் சொந்த ஊர் தெய்வங்களின் பெயர்களை காண முடிந்தது. நயினை நாகபூசணி, சந்நிதியான், பன்றிதலைச்சி அம்மன், மண்டலாய்ப் பிள்ளையார் என்றவாறு காணப்படுகிறது. இன்றுவரை அந்த மக்கள் தம் சொந்த ஊர் தொடர்புகளை பின்பற்றுபவர்களாக கோவில் திருவிழாக்கள், திருமண நிகழ்வுகள், மரண நிகழ்வுகளில் அவர்கள் பிரசன்னத்தை காணக் கூடியதாகவே இருக்கும். எனவே தமக்கானதொரு தொழிற் பிரதேசமாக கிளிநொச்சியையும் தம் சொந்த பிரதேசங்களாக தம் மூதாதையர்கள் வாழ்ந்த யாழ்ப்பாணத்து ஊர்களின் பெயர் சொல்லும் முறைமையை இன்றும் காணலாம்.

கடந்த அறுபது ஆண்டுகளில் இரணைமடுக் கலாசாரத்தோடு சேர்ந்த அம்மக்களின் இன்றைய சந்ததியினர் தம்மை கிளிநொச்சியோடு தொடர்புபடுத்தி தாம் வாழும் பிரதேசத்தில் பாடசாலைகள், கோவில்கள், சமூக முன்னேற்ற சங்கங்கள், வாசிகசாலைகளை ஏற்படுத்தி தம்மை தம் வாழ் பிரதேசங்களோடு தொடர்புபடுத்திக் காட்டுகின்றனர். கிளிநொச்சி இன்று வளர்ந்து விட்ட நகரமாக காணப்படுகிறது. அந்த நிலை வருவதற்காகத் தம்மை அர்ப்பணித்து , காடழித்து நாடக்கி , இப் பிரதேசத்தை களனியாக்கி நம்மை நாமாக்க தம்மை அந்த மண்ணுக்கு உரமாக்கிச் சென்ற ஒவ்வொரு மனிதனது முயற்சியும் , தொண்டும் சிந்திக்கப்பட வேண்டியவை, சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டியவை.

கிளிநொச்சி பிரதேசத்தில் குடியேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம் ஓரே தடவையில் எல்லா குடியேற்றமும் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக : 1953இல் வட்டக்கச்சி குடியேற்றத் திட்டம் கொடுக்கப்பட்டது, பின்னர் 1958களில் வட்டக்கச்சி படித்த வாலிபர் திட்டம் கொடுக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாகத்தான் கிளிநொச்சி குடியேற்றத் திட்டங்கள் வழங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் சாவகச்சேரி தொகுதியுடன் தான் கிளிநொச்சி இணைந்திருந்தது. அக்காலத்து பாரளுமன்ற உறுப்பினர் கௌரவ குமாரசுவாமி அவர்களும், பின்னர் கிளிநொச்சி தொகுதியாக்கப்பட்ட பின் அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சிவசுந்தரம் அவர்களும் படிப்படியாக வளர்ந்து வரும் இரணைமடுக் குடியேற்றங்களைப் பார்த்து எதிர்காலத்தின் தூர நோக்கோடு இரணைமடுவுக்கு மகாவலி நீரைக் கொண்டு வர வேண்டுமென்று பாரளுமன்றத்தில் உரையாற்றினார்கள். அப்போது இருந்த ஏனைய பல தமிழ் பாரளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரைவேட் காட்டு சிந்தனையுள்ள பாரளுமன்ற உறுப்பினர் களும் சேர்ந்து "போத்தல்களில் தான் நீர் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக முடியும்" என்று கொச்சைப் படுத்தினரே தவிர அந்த தீர்மானத்திற்கு வலுச்சேர்க்க வில்லை. தூரநோக்கற்றவர்களின் அந்நடவடிக் கையால் பின்னர் அத்தீர்மானத்தில் அக்கறை காட்டப்படவுமில்லை. சிலவேளை மகாவலி திசைதிருப்பும் திட்டத்துடன் மகாவலி நீர் இரணைமடுக் குளத்திற்கு கொண்டு வரப்பட்டி ருப்பின் எந்தப் பிரச்சினையுமின்றி இரணை மடுக் குளத்தை நம்பிய மக்கள் மூன்று போகம் முறையாக பயிர் செய்ய வாய்பேற்ப்பட்டிருக்க லாம். ஆனால் இன்றோ தமது சொந்தக் காணியில் சிறுபோகத்தில் மொத்த நிலத்திலும் வேளாண்மை செய்ய முடியாதவர்களாகவே அவர்கள் காணப்படுகின்றார்கள். அதுமட்டுமல்ல ஒரு சில ஏக்கர் மட்டும் தான் சிறுபோகத்தில் செய்யும் வாய்ப்பை நீர்ப்பாசன பொறியிய லாளர்கள் வழங்குவார்கள். அந்த நிலத்திற்கும் 2012ம் வருடம் தண்ணீர் ஒழுங்காக கிடைக் காமையினால் 1500க்கு மேற்பட்ட ஏக்கர் வேளாண்மை எரிந்து போனது. இரணைமடு குளத்து நீர் இரணைமடு பிரதேச குடியிருப் பாளர்களுக்கு இரண்டு போகமும் வேளாண்மை செய்யப் போதியதாகவில்லை. இக் காரணத் தால் 20மூக்கு மேற்பட்ட மக்கள் தொடர்ந்து வறுமைக்கு கோட்டிற்கு கீழ் தான் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**கல்வி**

இரணைமடு பிரதேசத்தை நம்பி வந்த மக்கள் கடந்த 60 ஆண்டுகளில் மிக கடினமான நிலையிலேயே தான் கல்வி வாய்ப்பை பெறு கிறார்கள். 1982ம் ஆண்டு அகில இலங்கையி லும் மிகச் சிறப்பாக கிளிநொச்சிக் கொத்தணி தான் விளங்கியது அக்கொத்தணியின் முதலதிப ராகவிருந்த திரு.இரா. சின்னத்தம்பி அவர்கள் அக்கால கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அவர்களால் பாராட்டப்பட்டார்கள். அத்தகைய ஆற்றலும் திறமையுமுள்ள அதிபர்கள் கிளி நொச்சிக்கு வந்த போது அரசியற் காரணங்க ளால் அவர்களால் தொடர்ந்திருக்க முடியாது போனது. ஒரு தேசிய பாடசாலை இல்லை. சகல வளத்தோடும் கூடிய ஒரு பாடசாலை இல்லை என்ற நிலை காணபடுவதற்கு இங்கிருந்த அர சியல்வாதிகள் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து தம் வாழ்வை மொத்தமாக அர்ப்பணித்த ஆசிரி யர்கள் பலர் இருந்தனர். அவர்கள் மலேரியா நோய்க்குள்ளும் வரட்சியிலும் வெப்பத்திலும் மாணவர்களின் அக்கறையோடு இப்பிரதேசத் திலே வந்து தங்கி இருந்து கற்பித்தனர். அந்த செயற்பாடுகள் நிகழ்ந்த இடத்து மாணவர்கள் மிகச் சிறப்பாகத் துலங்கினார்கள். குருகுலம் அப்புஜி கதிரவேலு அவர்களின் பணி அளவிடற் கரியது அதேபோல் பல்வேறு அரசியல் பழி வாங்கலுக்கு அப்பாலும் நின்று தம்பணி செய்த ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் நினைவு கூரப்படவேண்டியவர்கள். 60 ஆண்டுகள் ஒரு யுகம் என்பார்கள். ஒரு யுகத்தில் எமது கற்றல் சாதனைகள் போதுமானவையில்லை எமது மாவட்டத்தில் பல்கலைப்பீடங்கள் பொறியியல் / விவசாயம் என்றார்கள் 1985ல் இதுபற்றி பேசப்பட்டது. இது கனவாகவே தொடர்ந்து தற்பொழுது நனவாகி வருகிறது.

- தேசிய கல்விநிறுவக வகுப்புக்களில் பூரணத்துவம்
- திறந்த பல்கலைக்கழக பிராந்திய நிலையத் தில் பூரண வாய்ப்பு
- தொழில்நுட்பக் கல்லூரி
- நுண்கலைக்கல்லூரி என்பவை தற்போது தான் கருக்கட்டத் தொடங்கியுள்ளன. அவற்றை நெறிப்படுத்தி பன்முக நுண்மதி கொண்ட சமூகத்தை கட்டி அமைப்பது எமக்கு அத்தியாவசியத் தேவையாகும்.

**சுகாதாரம்**

இரணைமடு பிரதேசங்களில் குறிப்பாக கிராமங்களில் சுகாதார வைத்தியசாலைகள் இன்னமும் போதிய வைத்தியர்களோடு இயங்க வில்லை. ஆண்டுதோறும் இலங்கையின் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களில் மட்டுமல்ல வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றவர்கள் வைத்திய கலாநிதிகளாக வருகிறார்கள். ஆனால் எமது வட்டக்கச்சி, இராமநாதபுரம், உருத்திரபுரம், அக்கராயன்குளம், தருமபுரம் வரையிலான மக்கள் வரையறைக்கு உட்பட்ட மருத்துவ வசதிகளுடன் தான் வாழ்கின்றார்கள் என்பது 96 சதவீதம் எழுத்தறிவுள்ள நாட்டிலுள்ள குறைபாடாகும். இன்னமும் யாழ்ப்பாணம் போங்கள் என்ற சொல்லும் அளவிற் தான் எமது கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையும் உள்ளது என்பது வேதனைக்குரியது.

எமது பிராந்தியம் யுத்தத்தின் பின் பாரிய நோயாளர்களைக் கொண்டதாக மாறிவருகின்றது. மகரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களில் கணிசமானவர்கள் கிளிநொச்சி மாவட்ட மக்களாய் உள்ளனர். உருத்திரபுரம், வட்டக்கச்சி ஜெயந்திநகர், கணேசபுரம், இராமநாதபுரம், தர்மபுரம், முரசுமோட்டை பகுதி கிணற்று நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. தண்ணீரில் கல்சியம் அதிகரித்துள்ளது. தரைக்கீழ் நீர் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும். மேலும் இப் பிரதேசமக்களின் குடிநீருக்குப் பொருத்தமான நடைமுறைகள் கண்டுகொள்ளப்படல் வேண்டும்.

எல்லா நிலையிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றோம் என்று சொல்கிறார்கள். ஆனால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குத்தான் கிளிநொச்சி நோயாளிகள் போக வேண்டும் என்ற நிலையில்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தில் சகல வாய்ப்புக்களும் வசதிகளும் உள்ள மருத்துவ நிலையம் வேண்டும். எமது ஏழை எளிய மக்கள் பெரும் தொகை பணத்துடன் யாழ்ப்பாணம், கொழும்பு செல்லும் நிலையில் இல்லை என்பதால் எம்மவர்கள் பூரண வைத்திய வாய்ப்பைப் பெறும் சகல பிரிவுகளும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்படுவதுடன் யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்தின் போதனா வைத்தியசாலை அந்தஸ்த்தை கிளிநொச்சி பெற ஆவன செய்யப்படல் வேண்டும்.

**முடிவுரை:**

இரணைமடு என்பது தனியான குளமல்ல. அது ஒரு கலாசார அடையாளமாகிவிட்டது. மொகஞ்ஞதாரோ – ஹரப்பா நாகரிகம் என்பது போல இரணைமடு நாகரிகம் என்பது பற்றி பேசப்படும் காலம் வெகு தொலைவிலில்லை. எம்மவர்கள் மிகச் சிறப்பாக வாழ்ந்ததொரு வரலாற்று பெருமை மிகு இரணைமடு பிரதேசம் பற்றிய ஆய்வுகளை துரிதமாக செய்தல் வேண்டும். நாம் நமது வரலாற்று ஆதாரங்கள் பலவற்றை இழந்துள்ளோம். இன்று காலத்தால் மூத்த "நாக" இனத்தின் எலும்புக் கூடுகள் காணப்படும் இரணைமடு பற்றிய ஆய்வை துரிதப்படுத்தி ஆராயாது விட்டால் அதுவும் காலத்தால் "பொய்யாய் பழங்கதையாய் போகும்" என்பதைச் சுட்டிக் காட்டுவதுடன், விழிப்புள்ள இனக் குளுமங்கள் தான் வாழும். சாய்ந்தால் சாய்கிற செம்மறி ஆடுகளாய் இல்லாமல் தூர நோக்கோடு சிந்தித்து எதிர்காலச் சந்ததி இன்பமாய் வாழ முயற்சி எடுங்கள் என கேட்டுக் கொள்கிறோம். "காலமும் கருத்தும்" என்று பேராசிரியர் வேலுப்பிள்ளை சொல்வது போல் , " இந்த நேரம் மட்டும் தான் உன்னுடையது" என்று வேத விவிலியம் சொல்வது போல் நாம் பொருத்தமாக சிந்தித்து செயலாற்ற வேண்டிய காலமிது. எமது காலத்தை தவற விட்டால் எதிர்காலச் சந்ததியின் தீரா வசைக்களாவோம். எல்லோரும் ஒன்றாய் நல்லதொரு இரணைமடுக் கலாசார சூழலொன்றுக்காய் தேடுவோம், செயற்படுவோம் என திடசங்கற்பம் பூண வேண்டும் என வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வளம் பெருக்கும் வாலிபர்களே

க.அரசரட்ணம்
கிளிநொச்சி

எந்த ஒரு நாட்டிலும் வாலிபர்களே வலு வுள்ளவர்களாக உள்ளனர். நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு மாற்றங்க ளில், முன்னேற்றங்களில் பாரிய பங்கேற்கின்ற னர். எமது நாடு இளம்பராயத்தினரின் செயற் பாட்டை, நன்கு அறிந்துள்ளது. எமது சமூகமும் வாலிபர்களின் செயற்திறனை நன்கு மதிப்பீடு செய்துள்ளது. இந்தவகையில் யாழ்ப் பாண வாலிபரூடாக கிளிநொச்சி வாலிபர்களின் செயற்பாட்டையும் அதன் இன்றைய நிலைபற்றி யும் விபரிப்பதே இவ்வாக்கியத்தின் நோக்கம், யாழ்ப்பாண மக்கள் கல்வியில் மிகுந்த கரி சினை உள்ளவர்கள். கல்வியை அரவணைத்து வளர்ப்பவர்கள். கல்வியை மதிப்பவர்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள முழுநேர விவசாயி ஒருவர், அல்லது முழுமையான தொழிலாளி ஒருவர், தனது பிள்ளையை ஒரு கல்லூயில் சேர்த்து விட்டால் போதும், பிள்ளை முன்னேறி விடும். அக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், அப் பிள்ளைக்கு ஏற்ற கல்வியைப் புகட்டி, வழி நடத்தி, சிறந்த தொழில் ஒன்றைத் தேடி வாழ்க்கை அமைக்க உதவுவர்.

அக்காலத்தில் இலங்கையை ஆண்ட ஆங்கில அரசு, யாழ்ப்பாண மக்களின் கடும் உழைப்பையும், நுண்ணறிவையும், கல்வியில் நாட்டத்தையும், கணித்து கல்வியில் கரிசினை காட்டியது. பல மிசனறிப் பாடசாலைகள் தோன்றி ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணத்தில் வளர்த்தன.

இதனால் இருபதாம் நுற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த வாலிபர்கள் இக்கல்வியால் பயனடைந்தனர். ஆங்கிலேயர் அரசாட்சி செலுத்திய மலேசியா, சிங்கப்பூர், மியான்மார் போன்ற நாடுகளுக்குச் சென்று தொழில் தேடி பொருளீட்டி வாழ்க் கையை மேம்படுத்த முடிந்தது. யாழ்ப்பாணப் பொருளாதார சமூக நிலையையும் முன்னேற்ற இயலுமாக இருந்தது.

பின்னர் அதே கல்வியை மேம்பாடடைந்த நிலையில் பெற்ற வாலிபர்கள், எண்ணிக்கை யில் கூடியவர்கள். இலங்கை அரசாங்கத்தி லேயே வேலை வாய்ப்பைத் தேடினர். இந்த வகையில் இலங்கை வைத்தியத்துறை, சட்டத் துறை, பொறியியற்றுறை, கணக்கீட்டுத்துறை, பொதுநிர்வாகத் துறை, விவசாயத்துறை, ஆகிய அரச நிறுவனங்களிலும், இணைந்த நிறுவனங் களிலும் நியமனங்களைப் பெற்றனர். இந்நாடு களில் வெளிநாட்டு மோகங்குறைந்து உள்நாட்டு வேலைகளிலே நாட்டம் ஏற்பட்டது. இங்கு வேலை வாய்ப்புப் பெற்ற இவர்கள் கடின உழைப்பாலும் அர்ப்பணிப்பான சேவையாலும் நீதிநியாயமான பணியாலும் உயர்வடைந்து பல திணைக் களத்தலைவர்களாக இருந்தனர். தாமும் செவ்வையான வாழ்க்கை வாழ்ந்து, வசதிகளைத் தேடினர். யாழ்ப்பாண மக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவ முடிந்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணப் பொருளாதாரம் மணியோடர் பொருளாதார மாகக் கொள்ளப்பட்டது. இக்கால கட்டத்தில் குடியிருப்பு வீடுகள் முதல் சகோதரர்களின் கல்வி, திருமணம் வரை, செவ்வை செய்யப் பட்டன. உடன் பிறப்புகளின் வேலை வாய்ப்புக் களிலும் இவர்கள் உதவினர். உயர்வடையவும் வழிகாட்டினர்.

இந்த நிலைபடிப்படியாக வளர்ச்சிய டைந்தது. அலுவலகத் தலைவர்களுடன் எல்லா நிலை அலுவலர்களும் யாழ்ப்பாணத்தவர்களா கவே இருந்தனர். இது பேரினவாதிகளுக்கு கொதிப்படைவை ஏற்படுத்தியது. பேரினவாத அரசுகள் ஆங்கிலக்கல்வியால் தமிழர்களுக்குக் கிடைத்த வாய்ப்பை ஒழிக்கத்திட்டமிட்டனர். சிங்களம் அரச கருமமொழியாக்கப்பட்டது. ஆங்கிலக்கல்வியால் மேல்நிலை அடைந்த தமிழர் இனரீதியாக ஒதுக்கப்பட்டனர். ஓரங்கட் டப்பட்டனர். சிங்கள மக்களே வேலை வாய்ப்புக் களைப் பதவி உயர்வுகளைப் பெற்றனர். இந் நிலையில் இக்கால கட்டத்திற்கு முன்புநியமனம் பெற்ற தமிழர்கள் சிங்களச்சட்டத்தால் கொடு மைப்படுத்தப்பட்டனர். பதவி உயர்வுகள் சம்பளம் உயர்ச்சி என்பன வேண்டும் என்றே தடைப்படுத்தப்பட்டன. அரசசேவை ஆட்சேர்ப்புக் களில் தமிழர்கள் மிக அரிதான வேலை வாய்ப்புக்களையே பெற்றனர். இப்பணிகளில் இருந்த தமிழர்களும் பல வழிகளிலும் கொடுமைப்படுத்தப்பட்டனர்.

இதன் பின்னர் இன விகிதாசார அடிப் படையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. சிங்கள மக்கள் தகுதி, தரம் பாராமல் பதவிகளில் இடம்பிடித்தனர். தமிழர் விகிதாசார அடிப்படை யில் கூட வேலை வாய்ப்பை பெறவில்லை. இந் நிலையில் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்று வேலை வாய்ப்புக்களைப் பெற்றனர். எந்த வகையிலும் பதவிகளைப் பெறுவதைத் தடை செய்ய தரப்படுத்தல் முறையையும் கொண்டு வந்தனர். இச்சட்டம் மூலம் எமது இளைஞர் யுவதிகள் பல்கலைக்கழகஞ் செல்லும் வாய்ப்புக் குத் தடை ஏற்படுத்தப்பட்டது. வாலிபர்களின் எதிர்காலக் கனவுகள் கலைந்தன.

இதன் அடுத்த கட்டமாக இளைஞர்களைத் தேடி அழிக்கும் திட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. இளைஞர்களே தமிழர்களின் வளமாக உந்து சக்தியாக இருக்கிறார்கள் என்பதே காரணம். இதற்கு வசதியாக அவசரகாலச்சட்டம் பயங்கர வாதச்சட்டம் என்பன கொண்டுவரப்பட்டன. சிங்கள இளைஞர்களையே பேரினவாத அரசுகள் "சேகுவேரா" என்று குறியிட்டு தேச விரோதிகள் எனப் பெயரிட்டு 1971லும் 1986லும் பல்லாயிரக் கணக்காக கொன்று குவித்தனர். இவற்றை எமது சமூகம் நன்கு புரிந்து கொண்டது. எக்கேடு கெட்டாலும் இலங்கையை விட்டு வெளியே செல்வோம் என்ற எண்ணம் மேலோங்கியது. முதலில் வசதியான குடும்பங்க ளைச் சேர்ந்தவர்கள் வெளிநாடு செல்வோம் என்ற எண்ணம் மேலோங்கியது. முதலில் வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வெளிநாடு சென்றனர். பேரினவாத அரசுகளின் இன வெறியை நன்கு உணர்ந்த கனடா, மேற்கு ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா, போன்ற நாடுகள் இவர்களுக்கு உதவினர்.

பின்னர் வெளிநாடு சென்ற வாலிபர் களின் தம்பிமாரும் சென்றனர். இவர்கள் இங்கு கற்ற அடிப்படைக்கல்வியோடு, மொழிதெரியாத வெளிநாடுகளில் கடுமையான குளிரில் பாடு பட்டு உழைத்துக் குடும்ப நிலைகளை மேம்படுத்தினர். பின்னர் பிரச்சினை உள்ள இளைஞர்கள் யாவரும் சென்றனர். இவர்கள் வெளிநாடு செல்ல குடும்ப உறுப்பினர்கள் உறவினர்கள், ஊரவர்கள், உதவினர். இதை எமது சமூகமே வழிநடத்தியது. இவர்களின் உயிர் காப்பாற்றப்பட்டதோடு வசதியாக வாழ வாய்ப்புக்கள் கிடைத்தன. பின்னர் இவர்களு டைய வாழ்க்கைத் துணைகள் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழர்களுக்கான கொடுமைகள் அதிகரித்ததால் இவர்கள் தமது பெற்றாரை அழைத்தனர். இவர்களுடைய பிள்ளைகள் அவ்வவ் நாட்டு மொழிகளிலே கல்வி கற்கின்றனர். இவர்கள் அனைவரும் அமைதியாக வாழ்ந்து ஊர் உறவுகளைப் பேணுகின்றனர்.

இவர்கள் பலர் அந்நாட்டு மொழிகளைக் கற்று அவர்களுடைய தொழில்களில் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொண்டனர். இவர்களிற் சிலரும் இவர்களுடைய பிள்ளைகளும் அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்றுத் தம்மை மேம்படுத்திக்கொண்டனர்.

இவர்களுடைய உழைக்கும் ஆற்றலும், எதையும் விரைவாக விளங்கிக் கொள்ளும் திறனும் இவர்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டன. இப்போது இந்நாடுகளில் பல அமைப்புக்கள், கல்வியில் மேம்பாடுடையவர்களால் வழிநடத்தப்பட்டு வலுவுள்ள அமைப்புகளாகச் செயற்படுகின்றன. இவற்றை அந்நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் மதித்து மரியாதை கொடுக்கின்றன.

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ந்த வரலாற்றை முன்னைநாள் மகாஜனாக் கல்லூரியின் பிரபல அதிபர். திரு. பொ. கனகசபாபதி எம்மை வாழவைத்தவர்கள் என்ற நூல் ஒன்றில் வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள 28 அதிபர்கள் 1930 முதல், பின்னரான 40 ஆண்டுகளில் தீவுப் பகுதி உட்பட யாழ்ப்பாணத்தில் பல பகுதி களிலும் கல்விப்பயிர் வளர்த்தவர்கள். யாழ்ப்பாணத்துக் கிராமங்களுக்கு மூலை முடுக்குகளுக்கு எப்படி கல்வியை எடுத்துச் சென்று வளர்த்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். மிசனறிமார் தொடங்கிய பாடசாலை களில் ஆங்கிலக் கல்வி இடம் பெற சைவ அமைப்புகளும் சைவச் சான்றோர்களும் தமிழ்மொழிக் கல்வியை மேம்பாடடையச் செய்தார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளார். இக்காலத்தில் இக்கல்வியால் யாழ்ப்பாண சமூகத்தில் தோற்றப்பெற்ற அரசியல் சமூக பொருளாதார வளர்ச்சி பற்றியும் எழுதியுள்ளார்.

இதுவரை, பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு வகைகளில் தோன்றிய சவால்களுக்கு முகங்கொடுத்து யாழ்ப்பாண வாலிபர்கள் எவ்வாறு கல்வியால் மேம்பாடடைந்தார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினர் என்பதைப் பார்த்தோம். இனி கிளிநொச்சியின் கல்விக்கும் அது எவ்வாறு எமது இளைஞர்களுக்கு உதவியது என்பவற்றைப் பார்ப்போம்.

இலங்கையிலேயே யாழ்ப்பாணக் கல்வி பெயர் பெற்றது. உலக நாடுகளில் கல்வியின் உயர்நிலை ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்படியான ஒரு கல்விப்பாரம்பரியமே கிளிநொச்சியிலும் நிலவியது. கிளிநொச்சி மாவட்டம் உருவாகுவதற்கு முன்னரான 25 ஆண்டுகளில் யாழ்ப்பாண ஆசிரியர்களே இங்கு பணியாற்றினர். கிளிநொச்சியில் பெரும்பான்மை கிராமங்கள் குடியேற்ற கிராமங்களே. குடியேற்றங்கள் ஆரம்பிக்கப்பட்டபோது கிராமங்களின் அடிப்படை வதிகளான வைத்தியசாலை. பாடசாலை, தபால் அஞ்சலகம், சந்தை, வழிபாட்டிடங்கள், கூட்டுறவுச்சங்கம் என்பன அமைக்கப்பட்டிருந்தன. பாடசாலைகளில் அதிபர், குடியிருப்பு, ஆசிரியர்கள் விடுதி என்பனவும் உருவாக்கப்பட்டிருந்தன. ஆரம்பக்கல்வியை தொடங்கவும் தொடரவும் வசதிகள் இருந்தன. இருந்தாலும் கிறீஸ்தவ அமைப்புகளும் சைவ அமைப்புக்களும் தேவையான இடங்களில் பாடசாலை அமைத்து அதிபர் ஆசிரியர்களை நியமித்து கல்வியை வளர்த்தனர்.

இங்கு அமைக்கப்பட்ட குடியேற்றங்களில் தீவுப்பகுதி, தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பெருந்தொகையினராக இருந்தனர். அவர்களுடைய உறவினர்கள் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து ஆசிரியப் பணியாற்றினர். பாடசாலைகளுக்கு அருகாமையில் இருந்த குடியேற்ற வாசிகள் இவ்வாசிரியர்களுக்கு உறைவிடம் உணவு கொடுத்து ஆதரித்தனர். இருந்தாலும் ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசமாக இருந்தது. ஆங்கிலம் கணிதம் விஞ்ஞான ஆசிரியர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவியது. தளபாடமும் பாடசாலைகளில் போதியளவு காணப்படவில்லை. தமிழ்ப்பாட ஆசிரியர்களே கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களையும் கற்பித்தனர். யாழ்ப்பாணக் கல்வி நிர்வாகத்தில் கிளிநொச்சி ஒரு பின்தங்கிய பகுதியாகவே கணிக்கப்பட்டது. இருந்தாலும் இங்கு பணியாற்றிய ஆசிரியர்களின் சேவை பாராட்டுக்குரியது. மிகுந்த அற்பணிப்புமிக்க பணி.

இங்கு தங்கள் குடும்பத்தோடு தங்கி, ஆரம்பக்கல்வியை கணிசமான அளவு பெற்றுக் கொள்ளக்கூடிய பாடசாலைகளாகவே இவற்றை பெற்றோர் கருதினர். வசதியுடைய பெற்றோர் தமது பிள்ளைகளை விடுதிகள் உள்ள பாடசாலைகளிற் சேர்த்து இடைநிலைக் கல்வியையும் உயர்கல்வியையும் கற்க வைத்தனர். ஏனையோர் ஊரில் உள்ள உறவினர்களுடன் பிள்ளைகளைத் தங்க வைத்து கல்வியைத் தொடர வகை செய்தனர். அதுவுமற்றோர் சாவகச்சேரி பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்து மிகுதிக் கல்வியைப் பெறவைத்தனர். இந்த நிலையிலும் இங்கு கல்வி கற்றோரும், யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்றோரும். சிரேஸ்ட தராதரப் பரீட்சையில் சித்தியடைந்திருந்தனர்.

இப்படியான ஒரு சூழலில் ·50 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு கல்விகற்று பட்டதாரியாகி கிளிநொச்சி மாவட்டத்தில் உயர்பதவி வகித்த ஒருவரைப்பற்றிக் குறிப்பிடலாம் என்று எண்ணுகிறேன். அவர்தான் நாங்கள் யாவரும் அறிந்த அரச அதிபர் திரு.தி. இராசநாயகம் அவர்கள். பூநகரி இலங்கையில் உள்ள பிரதேசச் செயலகங்களில் அபிவிருத்தி குறைந்த ஒரு பிரதேசம். இப் பிரதேசத்தில் உள்ள கிராமம் ஒன்றில் இருந்த பாரம்பரிய சித்த வைத்திய குடும்பத்தில் பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை அத்தாய் சிறி முத்துக்குமாரசாமி பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை பூநகரி மகா வித்தியாலத்திலும் பெற்றார். இவர் பாடசாலை நாட்களில் விளையாட்டுக்கள், விவாதம், பேச்சு ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலைக்கும் பெயரீட்டினர். கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

உயர் நிலைக்கல்வியை யாழ்ப்பாண இந்துக்கல்லூரியில் கற்றார். இக்காலத்தில் நாடகத்தில் பெயர் பெற்ற தேவன், யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரின் நெறியாள்கையில் நாடகங்களில் நடித்தார். யாரும் விரும்பாத வரலாற்றுப் பாடத்தைக் கற்று, பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார். யாழ்ப்பாணத்திலும், பேராதனையிலும், கல்வி கற்ற போது மாணவர் நலன், கல்வி மேம்பாடு என்பனவற்றில் பொதுப்பணியாற்றினார். பேராதனையில் பட்டப்படிப்பில் சித்தியடைந்தார். உயர்கல்வியின் பின் பல்கலைக்கழகஞ் செல்ல ஏழு மாதங்கள் இருந்ததால் அந்நாட்களில் கிளிநொச்சி விவசாயப் பாடசாலையிற் சேர்ந்து விவசாயக் கல்வி கற்று விவசாயத்தில் தேர்ச்சி பெற்றார்.

1968ம் ஆண்டில் இலங்கை சிவில் நிர்வாக சேவையில் புகுந்தார். தொடக்கத்தில் கணக்காய்வாளராகச் சேர்ந்து 1972 இல் திட்டமிடல் அமைச்சில் உதவியாளராகச் சேர்ந்தவர். 1981இல் திட்டமிடல் அதிகாரியாகி மன்னார் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றினார். மன்னாரில் 1987 முதல் 1992 வரை இந்து கலாச்சார மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சின் உதவிப்பணிப்பாளராகவும் பணி புரிந்தார். பின்னர் 1992 முதல் 1996 வரை பிரதி திட்டமிடல் பணிப்பாளராகவும் புனர்வாழ்வு அமைச்சின் திட்டப்பணிப்பாளராகவும் பதவிகள் வகித்தார். பின்னர் கிளிநொச்சியில் மேலதிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்க அதிபராகவும், 1997 முதல் அரசாங்க அதிபராகவும் பணியாற்றினார். 1999இல் திட்டமிடல் அமைச்சின் பணிப்பாளராக கடமை யாற்றிய இவர் 2002இல் மீண்டும் கிளிநொச்சி அரசாங்க அதிபராக பணிபுரிந்தார். பின்னரும் பல இடர்ப்பாடுகளின் பின் 2002 முதல் 2007 வரை அரச அதிபராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் மாகாணசபையிலும் பல உயரிய பதவிகள் வகித்து இப்போது இளைப் பாறிய நிலையிலும் மகாதேவா ஆச்சிரமம் சைவச் சிறுவர் இல்லத்தை நடாத்தி வருகிறார். அங்கு ஆண்களும் பெண்களுமாக 326 பேர் இரு பிரிவான விடுதிகளில் தங்கிப்படித்து வருகிறார்கள். இவர்கள் இவரது வழிநடத்தலால் கல்வியிலும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் மாவட்டத்தேசிய மட்டசாதனைகளை படைத்து வருகின்றனர். இவர் கிளிநொச்சியில் அரச அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பொருளாதாரத் தடையாலும் யாழ்ப்பாண இடப் பெயர்வாலும் பல இலட்சக்கணக்கான மக்கள் அவதியுற்றபோது உயிரையும் மதியாமல் மக்கள் பணிகளையாற்றியவர். இவர் தன் பணிக் காலத்தில் பின்தங்கிய கிளிநொச்சிப் பிரதேசங்க ளையும், பின் தங்கிய சமூகத்தைச் சேர்ந்த மக்களையும் உயர்த்திவிட முழுமனதோடு கடமை புரிந்தார். இந்தக்காலத்தில் பல அரச அதிபர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி வாலிபர்கள் இவர் கல்வி கற்றகாலத்தை அறிந்து கொள்ளமுடியும். இவர் பணியாற்றிய பின்தங்கிய இடங்களையும், பணியில் எதிர்கொண்ட இயற்கையான செயற் கையான இடர்ப்பாடுகளைப்புரிந்து கொள்ள முடியும். இன்றுள்ள இளைஞர்களுக்கு கல்வி கற்க எவ்வளவோ வசதிகள் உள்ளது. கல்வித் திணைக்களமும், அதிபர்களும் பல்வேறு வசதிக ளைத் தேடி அமைத்துக்கொடுத்துள்ளனர். கிளி நொச்சி மாவட்டமானதன் பின் கல்வி பிற மாவட்டங்களோடு போட்டி போடக்கூடியதாக வளர்ந்து விட்டது. ஆனால் இவ்வசதி வாய்ப்புக் களைப் பயன்படுத்தி உங்களையும், உங்கள் குடும்பங்களையும், ஊரையும் மேன்மையடை யச் செய்வது உங்கள் கைகளிலேயே உள்ளது.

இந்நிலையில், 2013 ஆண்டு சனவரியில் மானிப்பாயில் ஒரு கல்லூரியில், உரையாற்றிய ஓய்வு பெற்ற முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் வெளியிட்ட கருத்துக்கள் என் சிந்தனையைத் தூண்டின. அவர் தமது உரையில் யாழ்ப்பாணத்து இளைஞர் யுவதிகள் திட்டமிட்ட கலாச்சாரச் சீரழிவிற்கு இழுத்துச் செல்லப்படு கின்றனர். இதனால் பாலியல் வல்லுறவுகள், விபசாரம், களவுகள், கடத்தல்கள், ஒப்பந்தக் கொலைகள் போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். போதை வஸ்து பாவனையிலும் ஈடுபடுகின்ற னர். என்று தெரிவித்ததுடன், எமது பராம்பரியம் பழமையானது, சிறப்பு மிக்கது என்றும் கூறி யுள்ளார்.

இந்த இளம்பிராயத்தினருக்கே உரித் தான சில குணஇயல்புகள் உள்ளன. வெளுத்த தெல்லாம் வெள்ளை என்கிற எண்ணம், ஒத்த வயதினரின் சொற்கேட்டல், பெற்றோருடன் முரண்படல், பாலியல் உந்தல்கள், பொறாமை, கோபம், தம்மை ஒருங்கிணைந்தவர் குறை பாடுகள். நேரத்தை உரிய முறையில் பயன் படுத்தத் தவறுதல், சோம்பல் என்பவையே இத் தகையன. நான் அண்மையில் 100க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள், உயர்தர மாணவர் களுடன் உரையாடிய போது இந்த வயதில் உங்களுக்கு இடைஞ்சலான விடயங்கள் எவை என்று கேட்டேன். அப்போது ஆண்களில் சிலர் பாலியல் உந்தல்கள் என்று கூறினர். இந்த வயதில் காதல் முளைவிடுவது இயல்பானது, இயற்கையானது. சிலரை எந்த நேரமும் தூண்டித் துன்புறுத்தும் சிலரைப் பகுதி நேரங்களில் பூட்சி செய்யும். ஆனால் இவ்வுணர்வை விருத்தி செய்ய இந்த வயது அல்ல தருணம். 20 வயதுக்கு முன் யாரும் திருமணஞ் செய்து கொள்வதில்லை. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் எமது இளைஞர்களின் பெருமைக் குரிய விடயம் ஒன்றை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பாடசாலை மாணவர்களைவிட பல்கலைக்கழக மாணவர்கள் வயதில் கூடிய வர்கள். ஆனால் பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் காதலில் ஈடுபடுவ தில்லை என்று பல்கலைக்கழக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. சிங்கள, ஏனைய இன மாணவர் கள் காதலில் ஈடுபட, தமிழ் இளைஞர்கள் ஈடுபடுவதில்லை. தமிழ் இளைஞர்கள் கல்விக்கு முதலிடமும் முக்கிய இடமும் கொடுக்கின்றனர். அவர்களுக்கு நம்பிக்கை உண்டு பல்கலைக் கழகக் கல்வியின் பின் நல்ல திருமணம் தமக்கு உண்டு என்று இதை பாடசாலைகளில் உயர்தர மாணவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். பாடசாலையில் காதலில் ஈடுபட்டால் கல்வி கெடும், எதிர்கால வாழ்வு பாழாகும் ஆகவே அதைத் தவிர்க்க வேண்டும். அதே போன்று பாடசாலை விதிகளுக்கு முரண்படுவது, ஆசிரியர்களோடு மோதுதல் இவற்றைத் தவிர்க்க வேண்டும். பாடாசலை வாழ்வளிப்பது ஆசிரியர்கள் வழிகாட்டுவோர், பெற்றோர் எந்த வேளையும் உதவுபவர்கள், இந்த உறவுகளைப் பேணவேண்டும் முரண்படக்கூடாது.

உயர்நீதிமன்ற நீதியரசர் குறிப்பிட்டது போல், எமது பண்பாடு பழமையானது சிறப் பானது. எமது வாலிபர்கள் எல்லாம் கல்வியில் மேம்பாடடைவதும், உயர் தொழில் தேடுவதும், ஊர் உலகம் போற்ற வாழ்வதும் பாரம்பரிய மானது. அதை இன்றைய வாலிபர்களும் கைக்கொள்ள வேண்டும், கடைப்பிடிக்க வேண்டும் அதுவே எமது பண்பாடு.

எமது மாவட்டத்தில் சுயகட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து, சூழலுக்கு அடிமையாகாமல் வாழப் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் எமது வாலிபர்களின் முன்னோடிகள், அவர் களை எண்ணி எமது வாழ்க்கையை வளப்படுத் தலாம். எடுத்துக்காட்டாக திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அரச அதிபர்,திரு.ப.ஜெயராசா கணக்காளர், திரு.த.சத்தியமூர்த்தி வைத்தியர், திரு.க. கடம்பசீலன் எந்திரி, திரு. வரதன் அதிபர் இன்னும் பலர் உள்ளனர். எமது பிள்ளைகளின் கல்விப் பொதுப் பரீட்சைகளில் திறமையைக் காட்ட வழிநடத்தும் எல்லா ஆசிரியர்களும் போற்றப்பட வேண்டிய வர்களே. நீங்கள் இவர் களை முன்னுதராணமாகக் கொண்டு நன்றாகக் கற்று நலம் பெற்று வாழவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர்களை கவர்ந்த கனகபுரம் படித்த வாலிபர் குடியேற்றத் திட்டம்

**திரு நா.சோதிநாதன்**

கனகபுரம் கிராமத்தின் ஆரம்பகால உறுப்பினரும்
ஓய்வுபெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபரும்,
ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அதிகாரியும்

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாள் முதலாய் சிங்களப் பேரினவாத அரசுகள், தமிழர் இருப்பைக் கலைக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டனர். தமிழர் தாயகப் பகுதிகளில், அரச செலவில் திட்டமிட்டு, பாரிய சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டனர். சிங்களம் மட்டும், அரசகரும மொழிச்சட்டம், கொண்டு வந்தனர். அரச திணைக்களப் பதவிகளில் பெருமளவில் தமிழர்கள் இருப்பதை ஒழிப்பதற் கென, இச்சட்டநடை முறையைக் கொண்டு வந்தனர். இவ்வாறான அரசின் திட்டமிட்ட செயல்களுக்கு, தமிழ்த் தலைவர்கள் பல மாற்றுவழிகளை முன்வைத்தனர். தமிழ்த் தேசியத் தலைவர்கள் இன விடுதலை ஒன்றே, தீர்வுக்கு வழி, நாமும் எமது பகுதிகளில் சென்று குடியேறவேண்டும். அதுவே தாயக மண்ணை காப்பாற்றும் என்று முழக்கமிட்டனர். இக்கருத்து 1925 முதல் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் ஆண்டு மாநாடுகளில் வெளியிடப் பட்டது. இடது சாரிகள் வர்க்க விடுதலை ஒன்றே வழி என்று வற்புறுத்தியதோடு சிறு துண்டுகளாக்கப்பட் டுள்ள யாழ்ப்பாணக்காணிகள் பயிர்ச் செய்கை க்கு உகந்ததல்ல, இயல்புக்கேற்ற வேலையும் வேலைக்கேற்ற கூலியும் வேண்டும் என்றுரைத்த னர். இவர்களுடைய விவாத அரங்குகள் யாழ்ப் பாணத்தின் மூலைமுடுக்கெல்லாம் ஏட்டிக்குப் போட்டியாக 1950களின் மையப் பகுதியில், உச்சங்கண்டன. இவற்றால் இரண்டு பகுதியிலும் உள்ள நல்ல கருத்துக்களால் இளைஞர்கள் கவரப்பட்டனர்.

இதே காலத்தில் மிக அமைதியான முறையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் உயர் திரு ம. ஸ்ரீகாந்தா அவர்கள் எமது இளைஞர்கள் அரச உத்தியோகங்களுக்கு மாற்றீடாக எமது பாரம்பரியத் தொழிலை சிறிது மாற்றத்துடன் புதிய முறைகளில் மேட்டுப்பயிர்ச்செய்கையாக வும், கால்நடை வளர்ப்பாகவும் செய்யலாம். இப்படி முன்வரும் வாலிபர்களுக்கு கிளிநொச்சி யில் காணியும், அரச உதவிகளும் பெற்றுத் தரலாம் என்று கூறிவந்தார். இவர் யாழ்ப்பாண த்து சித்தர்பரம்பரையின் தவ முதல்வர் யோகர் சுவாமிகளின் தொண்டராகவும் திகழ்ந்தார். சுவாமிகள் தன் அருள்வாக்கில் எல்லாரும் அங்குதான் போகப்போகிறோம் என்று கூறி யதை ஏற்று, கிளிநொச்சியில் பல்வேறு வகையான திட்டங்களில் யாழ்ப்பாண மக்களை நகர்த்தியதோடு, பல குடியேற்றத் திட்டங்களை யும் உருவாக்கினார். 1950களில் காட்டுப் பிரதேசமாக இருந்த கிளிநொச்சி குடியேற்றத் திட்டங்களாகவும் நெற்களஞ்சியங்களாகவும் மாற்றமுற்றன.

இப்படியான நிலையில், தமிழ்த்தேசியத் தலைவர்கள், "வாழு வாழவிடு" என்ற, அரசியல் சித்தாந்தத்தை விரிவுபடுத்தவும், விரைவுபடுத்த வும் வவுனியா நகரில் 1958ம் ஆண்டு மே மாத இறுதியில், ஒரு மகாநாட்டைக் கூட்டினர். இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டி இலங்கையில் இனக்கலவரம் தோன்றியது. இது தமிழர் தாயகமான வட கிழக்கில் மட்டும் அல்ல மலையகத்திலும் பரவியது. பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். தமிழர் களுடைய வீடுகள், ஊர்திகள், தொழிலகங்கள் எல்லாம் சூறையாடப்பட்ட பின் எரியூட்டப் பட்டன. அரச பணியாளர்கள், தனியார் துறை ஊழியர்கள், கிராமப்புற சிறு வியாபாரிகள், எல்லோரும் வடக்கு கிழக்குக்கு கப்பல்களில் அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியானது. தமிழர்கள் நம்பியிருந்த தென்னிலங்கைப் பொருளாதாரம் சிக்கலை எதிர்கொண்டது. தமிழர் களுடைய அமைதியான வாழ்வு மெல்லமெல்ல அழிக்கப பட்டது.

இப்படியான காலகட்டத்தில், யாழ்ப்பாண இளைஞர்கள் யாழ்ப்பாண அரச அதிபரின் கருத்துக்களை மனங்கொணரத் தொடங்கினர். இந்த வேளையில் கோண்டாவிலில் இயங்கி வந்த கிராம முன்னேற்றப் பயிற்சி நிலையத்தில், பயிற்சி பெற இருபது வாலிபர்கள் சென்றனர். இவர்கள் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு பகுதிகளைச் சேர்ந்த முன்பின் அறியாத இளைஞர்கள். இப்பயிற்சி நிலையத்திற்குப் பொறுப்பான திரு.க.குமாரசாமி அவர்கள் 30 நாட்கள் நடாத்திய பயிற்சியில், நாளும் பொழுதும் புடம் போடப்பட்டார்கள். இறுதி நாள் அரச அதிபர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் உரை யாற்றினார். அப்போது பயிற்சி பெற்றவர்களில் 15பேர் குடியேற்றத்திட்டத்தை விரும்புவதாகத் தெரிவித்தனர்.

இத்திட்டம் பொறுப்பாளரால் அரச அதிபருக்கு தெரியப்படுத்தப்பட்டது. இதன்படி 1958ம் ஆண்டு, ஆடி அமாவாசை நாள், அரச அதிபர் காலை வேளை அலுவல்கள் முடித்து மதிய உணவுக்குப் போகுமுன் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அரச அதிபர், அங்கு கருத்துக் கூறுகையில் நீங்கள் இப்படி யான தீர்மானத்திற்கு வந்தது நல்ல சகுனம். ஆனால் நீங்கள் ஊரிலே கமம் செய்வது போன்ற ஒரு காரியம் அல்ல இது. நீங்கள் காட்டு வாழ்க் கையைத் தெரியாதவர்கள், காட்டு மிருகங் களின் தொல்லை அங்கு இருக்கும், உங்கள் வீடுகளில் இப்போது உள்ள அடிப்படை வசதிகள் அங்கு இல்லை. ஆனபடியால் நன்றாக யோசித்து திட்டத்தை தொடர்வது என்பதில் உறுதியாக இருங்கள்.

இவர்களை வழிநடத்த, திரு.க.குமார சாமி அவர்கள் முன்வந்தார். இவர்களில் நால்வர் திரு.க.குமாரசாமி அவர்கள் தலைமையில். கிளிநொச்சி சென்று இடங்களைப் பார்த்து, வேலைத்திட்டத்திற்கேற்ற காணியைத் தேட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. அன்று ஒரு வெள்ளிக்கிழமை நால்வரும் திரு.க.குமாசாமி அவர்களுடைய ஊர்தியில் காலை கிளிநொச்சி புறப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சியையடையும் போது காலை 8மணி இருக்கும். அந்நாட்களில் கிளிநொச்சியில் வசதி யான உணவகங்கள் இல்லாததால் கிளிநொச்சி கிளிஸ்தவ தேவாலயத்திற்கு அண்மையில் இருந்த சைவ வீட்டில் மதிய உணவுக்கு ஏற்பாடு செய்து விட்டு காடுநோக்கிப் புறப்பட்டனர்.

இப்போதைய கனகபுரம் வீதியின் மேற்கால், ஒரு மைல் வரையும் வடக்காக அரை மைல்வரையும் சென்று பார்வையிட்டு இப்போது கனகபுரம் தொடங்கும் இடத்தைத் தெரிவு செய்தனர். இவர்களே கனகபுரத்தின் அமை விடத்தைத் தீர்மானித்தனர். மாரிகாலம் தொடங்க உள்ள நிலையில் காடு வெட்டு ஆரம்ப மானது. தண்ணீர் சந்திரன் பூங்காவில் இருந்து பெறப்பட்டது. ஆனபடியால் கிணறு ஒன்று வெட்டும் பணியும் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டு வெட்டப்பட்ட காட்டில் பெரும்பகுதி சோளம் நாட்டப்பட்டது. படிப்படியாக வாழை, காய்கறிப் பயிர்கள், தென்னம்பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிரிடப்பட்டன. வேலி ஓரங்களில் இலவு, தேக்கு, சமண்டலை மரங்கள் நாட்டப்பட்டன.

1959ம் ஆண்டு ஜனவரி 9ந் திகதி, வட்டக கச்சி விவசாயப்பண்ணையில் கழித்துவிடப பட்ட, 50 கோழிகளுடன் வளர்ப்புத் தொடங்கி யது. பின்னர் ஒரு நாள் குஞ்சுகள் பலமுறை வளர்க்கப்பட்டு குஞ்சுகள், இளங்கோழிகள், முட்டையிடும் கோழிகள் என, 2000 கோழிகள் வளர்க்கப்பட்டன. இந்த ஆண்டு யூலாய் மாதம் இரண்டாம் பண்ணையும் 1960ம் ஆண்டு 3ம், 4ம், 5ம், 6ம் பண்ணைகளும் 1961ம் ஆண்டு 8ம், 9ம், 10ம், 11ம் பண்ணைகளும் தொடங்கின.

எல்லாமாக, 132 படித்தவாலிபர்கள் இத் திட்டத்தில் குடியமர்த்தப்பட்டனர். ஆளுக்கு 5 ஏக்கர் மேட்டுக்காணியும், ஒரு ஏக்கர் வயற் காணியும் வழங்கப்பட்டது. முதலாம். மூன்றாம் பண்ணையினர் மூன்று ஏக்கர் மேட்டு நிலத்தைப் பெற்றனர். இப்படியாக படித்தவாலிபர்கள் இங்கு குடியேறிவிட்டதை நல்லபடி காய்கறிச்செய்கை, கோழிவளர்ப்பு நடைபெறுகிறது. என்ற செய்தி யாழ்பாணம் பூராவும் பரப்பப்பட்டது. பல மாதர் சங்கங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், அரச அதிகாரிகள், அமைச்சர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றனர். இதனால் விசுவமடு படித்த வாலிபர் திட்டம், முத்தையன்கட்டு படித்த வாலிபர் திட்டம் திருவையாறு படித்தவாலிபர் திட்டம் மகளிர் திட்டங்கள் உருவாகின. தென்னிலங்கையிலும் படித்த வாலிபர் திட்டங்கள் தொடங்கி வைக்கப் பட்டன.

1961ம் ஆண்டு கனகபுரத்தில் குஞ்சுகள் வளரும் கோழிகள் முட்டையிடும் கோழிகள் எனப் 10000 கோழிகள் இருந்தன. நாள் ஒன்று க்கு 2000 முட்டைகள் கிடைக்கப்பெற்றன. விற்பனைத் திணைக்களம் முட்டைகளைக் கொள்வனவு செய்தது. சந்தையில் யாழ்ப்பாணக் காய்கறிகள் மலையக காய்கறிகள் இடம் பிடித்திருந்தன. இதனை முறியடித்து கனகபுரம் காய்கறிகள் கிளிநொச்சிச் சந்தையைப் பிடித் தனர். திட்டம் வெற்றிபெற்றதாகக் கருதப்பட்டது. இவர்கள் நல்வாழ்வு வாழ்ந்தனர். இந்நிலையில் கோழிகள் வளர்க்க முடியாத நிலமை உரு வானது. தன்னிறைவுப்பொருளாதாரத்தைக் கடைப்பிடித்த அரசு கோழிமருந்துகள் ஊக்கிக ளைத் தடை செய்தது. எவ்வளவு முயன்றும் இதில் வெற்றி பெற முடியவில்லை. கோழி வளர்ப்பு கைவிடப்பட்டது.

கிணறுகளில் யூலாய் முதல் ஒக்டோபர் வரை போதுமான நீர் கிடைப்பதில்லை. வீட்டுப் பாவனைக்கே சிலவேளைகளில் தட்டுப்பாடு பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. கனகபுரம் வாலிபர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் போகாமல் இங்கேயே உழைப்புத் தேடினர். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை. ஆனை யிறவு உப்பளம் என்பன இடம் கொடுத்தன.

1961ம் ஆண்டு தொடக்கத்தில், தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் முன், மறியல் போராட்டத்தை ஆரம்பித்தது. மக்கள் கூட்டம் கூட்டமாகப் பங்கு கொண்டு, தமது ஆதரவை வெளிப்படுத்தினர். யாழ் மாவட்ட அரச அதிபர் கொழும்புக்கு அமைச்சு செயலாள ராக மாற்றப்பட்டார். காணி நீர்ப்பாசனம் மின் சக்தி அமைச்சராக சி.பி.டி சில்வா சுதந்திரக்கட்சி அரசிலும் ஐக்கியதேசியக்கட்சி அரசிலும் தொடர்ந்து 10 ஆண்டுகள் பணியாற்றினார். ம.ஸ்ரீகாந்தா இவ் அமைச்சரின் செயலாளராக தொடர்ந்து பணியாற்றினார்.

அமைச்சின் செயலாளராகக் கடமை யாற்றிய காலங்களில் எமது வீடுகள் பூரண மாக்கப்பட்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. உள் வீதிகள் முதல்முறையாக செப்பனிட்டு அமைக்கப்பட்டன வீட்டுக்கொரு களிப்பறை கட்டி முடிக்கப்பட்டது. பல நோக்கு கூட்டுறவுச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அமைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு மேட்டு நிலக்காணிக்கு வசதியான இடங்களில் வயற் காணி கொடுக்கப்பட்டது. மாணாவாரிக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் கிடைத்தால், நல்லது என வயல் உரிமையாளர் கேட்டனர். அயலில் பழைய பாழடைந்த குளங்கள் உண்டா எனத் தேடுங்கள். என்று ஸ்ரீகாந்தா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

வயல் காணிகளின் தேவையை நிறைவு செய்யவும் மேட்டு நிலங்களில் உள்ள கிணறு களின் நீர் மட்டத்தை உயர்த்தவும் கனகபுரத் திற்கு தெற்கேயுள்ள குளங்கள் உதவும் என்றும் எண்ணினார். 1968ம் ஆண்டு அமைச்சர் சிபிடீ சில்வா வடபகுதிக்கு வந்தபோது கிளிநொச்சிக் கும் வருகை தந்தார். கனகபுரத்தில் பாராளு மன்ற உறுப்பினர் திரு.கா.பொ.இரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அம்பாள்குளம்,கந்தன்குளம், கனகபுரம்குளம் ஆகிய மூன்று குளங்களும் உடனடியாக அமைக் கப்படும் பணி தொடங்கும் என்று அறிவித்தார். அதே ஆண்டு குளங்களின் கட்டுமாணப்பணிகள் தொடங்கின. நீர்ப்பாசன வாய்க்கால்களும் அமைக்கப்பட்டன. இரு போக நெற்பயிர் செய்வதால் கனகபுரம் மக்களின் அரிசித்தேவை நிறைவு செய்யப்பட்டதுடன் மேலதிக வரு வாய்க்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. 1961ம் ஆண்டு நடுப்பகுதியில் ஆள்வீதவருமானம் ரூபா 2000க்கு கூடுதலாக இருப்பதாகக் கணிக்கப் பட்டது.

நீர்த்தேவையை நிறைவு செய்யும், நோக்கம் நிறைவடையவில்லை, இப்போது அக் குளங்கள் வேறு கிராமங்களில் உள்ளன. அரச அதிபர் நாள் தவறாமல் செவ்வாயும் வெள்ளி யும் கிளிநொச்சிக்கு வருவார். குடியேற்றவாசி களின் குறையை நேரில் கேட்டுத் தீர்த்து வைப்பார். அவர் அரச அதிபராக பணியாற்றிய போது எல்லாத்திணைக்கள தலைவர்களும் உதவியாளர்களும் ஒரு அணியாக ஒத்துழை த்து பணியாற்றினர். அலுவலக நேரத்திற்கு மேலாகவும் சனி, ஞாயிறு நாட்களிலும் பணி தொடரும்.

இவர் எம்மாணவரையும் வாழவைத்தார் என்பதால், அவருடைய பெயரில் ஸ்ரீகாந்தா படித்தவாலிபர் குடியேற்றத்திட்டம் எனப்பெயர் வைக்க எண்ணினோம். அவர் விரும்பவில்லை, எமது பிரதான தெருவுக்கு அவரது பெயர் வைக்கக் கேட்டோம். மறுத்துவிட்டார் அவர், மரணமான பின்பு அவரது பெயரில் ஸ்ரீகாந்தா சனசமூக நிலையம் ஸ்ரீகாந்தா முன்பள்ளியும் இயங்கிவருகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு முன்னோடியாக கனக புரம் திகழ்வதை எண்ணி சந்தோசப்படுவதோடு தொடர்ந்தும் முன்னோடிக் கிராமமாக திகழ்வத ற்கு, கனகபுரம் மக்கள் எல்லோரும் ஒற்றுமை யாகவும் செயல்வீரர்களாகவும் வழிகாட்டிகளா கவும் செயற்பட கனகாம்பிகை அம்மனின் ஆசி கிடைக்க கனகாம்பிகை அம்மனை வேண்டி நிற்போம். வாழ்க வளர்க கனகபுரம் கிராமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தண்ணீருக்கான யுத்தம்

மு.தமிழ்ச்செல்வன்

ஒரு இருபது வருடங்களுக்கு முன்னர் எனது அப்பா கூறியது இன்றும் எனக்கு ஞாபகத்தில் உள்ளது. ஆதாவது தனது காணியில் இருபது அடி ஆழத்தில் கிணறு ஒன்றை வெட்டினால் போதும் விவசாயத்திற்கும்,குடிநீர் பிரச்சினையையும் தீர்த்துக்கொள்ளலாம் என்று.

ஆனால் இன்று நான் புதிதாக வாங்கிய எனது காணியில் ஒரு நாற்பது அல்லது ஐம்பது அடியில் கிணறு வெட்டினால் போதும் எனது குடிநீர் பிரச்சினையை, தீர்த்துக்கொள்ளவென்று கூறுகின்றேன்.

அப்படியென்றால் நாளை எனது பிள்ளை எப்படிக் கூறப்போகிறது?எனது பிள்ளையின் பிள்ளை? எனது பிள்ளையின் அடுத்து வரும் இருபது முப்பது வருடங்களில் நிலத்தடி நீரின் நிலைமை?

தண்ணீர் தற்போதைய உலகில் ஒரு பற்றாக் குறையான விற்பனைப் பண்டமாக மாறியிருக்கிறது. வளைந்து நெளிந்து ஓடிய நதிகளில் வாரி அள்ளிப்பருகிய காலம் போய் வளைத்து நெளித்து வடிவமைக்கப்பட்ட போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரை காசு கொடுத்து வாங்கிக் குடிக்கும் காலம் வந்துள்ளதல்லவா? அதேபோன்றுதான் வருங்காலத்தில் தண்ணீருக்கான யுத்தமும் இடம்பெற வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளது.

அதாவது முன்னைய கால யுத்தங்கள் எல்லாம் நிலத்தை ஆக்கிரமிக்கும் நோக்கிலே இடம்பெற்றன. வலுமிக்க நாடுகள், வளம் உள்ள வலுவற்ற நாடுகளை, தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் தீவிரம் காட்டின. இதனால் ஏற்பட்ட காலனியாதிக்கப் போட்டிகள் நாடுகளிடையே போர்களாக மாறியது. குறிப்பாக மன்னர் கால யுத்தங்கள் நிலத்தை ஆக்கிரமிப்பதையே நோக்காக கொண்டது எனலாம்.

ஆனால் கைத்தொழில் புரட்சிக்குப் பின்னர் இயந்திர சாதனங்களின் பாவனை அதிகரிக்க, உலகின் இயங்கு சக்திக்கு கனியவளம் இன்றியமையாத ஒன்றாக விளங்கியது. இதனால் கனிய வளம் உள்ள நாடுகளை வல்லரசுகள் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பி களத்தில் இறங்க கனிய வளமிக்க நாடுகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஏனைய நாடுகளுடன் அணிசேர்ந்தன. இதன் போதும் நாடுகளிடையே முறுகல் நிலை தோன்றியது. இதில் சில யுத்தத்திலும் முடிவடைந்தன. இந்த எரிபொருள் வளங்களைச் சுரண்டுவதற்காக வல்லரசுகள் வளமிக்க நாடுகளுடன் சுதந்திர பொருளாதார உடன்படிக்கைகள் என்ற பெயரில் வளங்களைச் சுரண்டும் பல ஒப்பந்தங்களையும் செய்து கொண்டன.

இராஜதந்திர ரீதியில் உள்நோக்கங்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான ஒப்பந்தங்களுக்குள் சிக்கிக் கொள்ளாத நாடுகளுடன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசுகள் யுத்தத்திலும் ஈடுபடத் தயங்கிய தில்லை. மத்திய கிழக்கு நாடுகளில் இன்று இடம் பெறுவதும் இதுதான்.

இதன்படி உலகின் நேற்றைய யுத்தங்கள் நிலங்களை மையமாகக் கொண்டும் இடம் பெற்றன. இன்றைய யுத்தங்கள் எரிபொருளை மையமாகக் கொண்டு இடம்பெறுகின்றன. ஆனால் இனி நாளைய உலக யுத்தம் என்பது நாம் எவரும் எதிர்பார்க்காத ஒன்றுக்காக அமையுமா? என்பதுதான் இன்றைய கேள்வி. அதாவது தண்ணீரை மையமாகக்கொண்டு நாடு களிடையே யுத்தங்கள் ஏற்படலாம் என அஞ்சப் படுகிறது. உலகின் போக்கும் அதை நோக்கிச் செல்வதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதாவது உலக அளவில் உள்ள தண்ணீரில் 0.01 வீத நீர் மட்டுமே குடிநீராக உள்ளது. அந்த நீரும் தற்போது குறைந்தும் மாசுபட்டும் வரு கின்றமை உலக உயிரினத்திற்கே விடுக்கப்பட்டி ருக்கும் சவாலாகும். 1995 ற்குப் பின்பு புவியின் வெப்பம் பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது. புவியின் சாதாரண வெப்ப அளவின் விகிதம் பெருமளவுக்கு கூடியிருக்கிறது. கரியமிலவாயு ஓசோன் மண்டலத்தாக்கம் மீதேன் நைட்ரஸ் ஒக்சைட் என்பவற்றோடு காடுகளை அழிப்பதும் எரிபொருட்களின் வெப்பநிலை என்பன புவியின் வெப்பம் அதிகரிப்பதற்குக் காரணங்க ளாக அமைகின்றன. நான்கு இலட்சம் ஆண்டு களாக இல்லாத அளவுக்கு புவியில் காபனீ ரொட்சைட் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் தொழிற்சாலைகள் என ஆய்வுகள் கூறுகின்றன. இந்தக் கரியமில வாயுவினால் புவிக்கும் சூரியனுக்கும் இடையே உள்ள மிலன் கோவிட்ச் வலயம் பாதிப்படையும். அதன் விளைவு துருவப் பனி வேகமாக உருகும். இதனால் துருவ நன்னீர் வளம் குறைவடையும்.

மேலும் சுற்றுப்புறச் சூழல் சீர்கேடு காரண மாக முன்னைய காலங்களைப் போலன்றி அமில மழை அடிக்கடி பெய்து வருகிறது. அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இந்த அமில மழை காரணமாக நன்னீர் ஏரிகள் பாதிப்படைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அமில மழை அடிக்கடி பெய்து வந்தால் காலப் போக்கில் நன்னீர் ஏரிகள் அதன் நன்னீர்த் தன்மையை இழந்து விடலாம் என்ற அச்சம் தற்போது தலைதூக்கியுள்ளது. ஜேர்மனி, ஸ்கன்டினேவிய நாடுகளில் பெய்த அமில மழை காரணமாக காடுகளிலுள்ள மரங்களின் இலைகள், ஏன்? வேர்கள் கூட அழிந்திருக்கின்றன. இதன் விளைவுகள் கூட நிலத்தடி நீரைப் பாதிக்கின்றன.

இன்று பூமியில் நிலவுகின்ற நிலையற்ற வானிலை காரணமாக சில இடங்களில் அதிக மழையும் வேறு சில இடங்களில் வறட்சியும் நிலவி வருகிறது.

மேலும் புவி வாழ் மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர் கரையோரப் பிரதேசத்தில் வாழ்கின் றனர். ஆனால் இக்கரையோரப் பிரதேசங்களில் தான் நிலத்தடி நீர் பெருமளவுக்கு வெளியேறி வருகிறது. அத்தோடு கரையோர நன்னீர் வளம் உவர்நீராகவும் மாறி வருகிறது. இந்நிலையில் அதிகளவு நீர்ப்பயன்பாடு உள்ள கரையோரப் பிரதேசங்களின் நன்னீர் வளம் அருகி வருகின்ற மையால் எதிர்காலத்தில் இப்பிரதேச மக்கள் தங்களது நீர்த்தேவையினை முற்றுமுழுதாக இறக்குமதி செய்வதன் மூலமே நிறைவேற்றிக் கொள்ள வேண்டிய இக்கட்டான நிலை தோன்றி யுள்ளது.

இவ்வாறுதான் உலகத்தின் குடிநீராக இருக்கின்ற 0.01 வீத நீரும் அருகி வருகிறது. இதனைக் கருத்தில் எடுத்துத்தான் நாடுகள் இப்போதே பல முன்னோடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. சில நாடுகளின் தற்போதைய நகர்வுகளை ஆழமாகப் பார்க்கின்ற போது அவர் கள் நன்னீர் நிலைகளையும் கருத்தில் கொண்டே காய்களை நகர்த்து வதாகத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் சமீப காலமாக ஆட்டிக் பிராந்திய மலை முகடுகளுக்கு ரஷ்யா உரிமை கோரியதும் அதனால் ரஷ்ய எதிர்ப்பு நாடுகள் சீற்றமடைந்தமையையும் கவனத்தில் கொள்ள லாம். அதாவது ஆட்டிக் சமுத்திரத்திலுள்ள மலைப் பகுதிகள் ரஷ்யாவின் ஒரு பகுதி என அந்நாட்டு ஆய்வுக்குழு தெரிவித்த கருத்திற்கு அமெரிக்கா கனடா டென்மார்க் போன்ற நாடு கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையோடு ரஷ்யாவின் செயற்பாட்டினை அமெரிக்கா ஒரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையாக சித்தரித்துள்ள மையும் இரண்டு நாடுகளிடையே பரஸ்பர கருத்து முரண்பாட்டிற்கும் கொண்டு சென்றிருக் கின்றன.

இப்பிரதேசக் கடலில் 10000 பில்லியன் தொன் எரிபொருள் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. அத்தோடு அதன் மலைப் பகுதிகளி லிருந்து தூய்மையான குடிநீரையும் பெற்றுக் கொள்ளலாம். எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படும் பட்சத்தில் இப்பிராந்தியத்திலிருந்து குழாய் வழி மூலம் ரஷ்யாவுக்கு தூய குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கடல் நீரைக் குடிநீராக மாற்றுவதிலும் பார்க்க இதில் பல்வேறு நன்மைகள் உண்டு. இதனாலேயே ரஷ்யா ஆட்டிக் பிராந்தியத்தை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரும் முயற்சி யில் இறங்கியுள்ளது. அமெரிக்காவின் அழுத்தங்களையும் பொருட்படுத்தாது ரஷ்யா மீண்டும் மீண்டும் "லொமனோசோவ்" மலைத் தொடர் தனது நிலப்பரப்பின் ஒரு பகுதியென வாதிட்டு வருகிறது. இதனைவிட அண்மையில் அவுஸ்திரேலிய இயற்கை வள அமைச்சைச் சேர்ந்த குழுவினர் முதன் முதலாக விமான மூலம் அந்தாட்டிக்கா சென்று அங்குள்ள நிலை மைகளை ஆய்வு செய்து திரும்பியமையும் உலகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. அவுஸ்தி ரேலியாவின் இந்தப் பயணத்தை சில நாடுகள் தேவையற்ற பயணம் எனவும் விமர்சித்துள்ளன.

அடுத்து முக்கியமாக நீரை ஆக்கிரமிக்கும் உலகின் திட்டத்தின் வடிவமாக "காட்ஸ்" ஒப்பந்தம் பார்க்கப்படுகிறது. இவ் ஒப்பந்தம் ஒரு நாடு தமது துறைகளைப் பன்நாட்டு நிறுவனங் களுக்குத் திறந்து விடுவது பற்றிக் கூறுகிறது. அதில் முக்கியமாகத் தண்ணீரை தனியார் மயமாக்குவதில் தீவிர கவனம் செலுத்துகிறது "காட்ஸ்" ஒப்பந்தம் பெருமளவுக்கு வளமிக்க ஏழை நாடுகளை இலக்காகக் கொண்டு உரு வாக்கப்பட்டிருக்கிறது. இதன்படி இவ் வளமிக்க ஏழை நாடுகள் தங்களது துறைகளைப் பன் நாட்டு நிறுவனங்களுக்குத் திறந்துவிட மறுக்கும் சந்தர்ப்பங்களில் அவை வல்லரசுகளின் மிரட் டல்களையும் பொருளாதாரத் தடைகளையும் எதிர்கொள்ள வேண்டிவரும். இவ்வாறான நிலைமைகள் நாடுகளிடையே பரஸ்பர நல்லுற வைச் சீர்குலைக்கும். இதனால் வளமுள்ள வலுவற்ற நாடுகள் வல்லரசுகளின் அழுத்தங் களை எதிர் கொள்ள அணிசேர முற்படும். இந்நிலைமை உலக அமைதிக்கு மேலும் கேடு விளைவிப் பதாக அமையும்.

தண்ணீரை விழுங்கும் "காட்ஸ்" ஒப்பந் தத்தில் தண்ணீர் தொடர்பான பல சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் சில:- தண்ணீர் இயற்கையின் கொடை என்பத னையோ மனிதனின் அடிப்படை உரிமை என்பத னையோ காட்ஸ் ஏற்கவில்லை. இதன்படி தண்ணீர் ஒரு விற்பனைச் சரக்கு.

குடிநீர் விநியோகம் காசு கொடுப்பவர் களுக்கு மட்டும் வழங்கப்படும் சேவை எனவும், பன்நாட்டு முதலாளிகள் இதில் முதலீடு செய் தால் அவர்களுக்கு இலாபம் ஈட்டும் உரிமை யுண்டு. தண்ணீரின் விலையை நிர்ணயிப்பதில் ஒரு நாட்டு அரசு எந்த விதத் திலும் குறுக்கிட முடியாது.

தன்னுடைய வர்த்தகத்தை வளர்க்கும் நோக்கில் ஒரு பன்நாட்டு நிறுவனம் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தண்ணீரைக் கொண்டு செல்லலாம். அத்தோடு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யலாம். இதற்கு அரசுகள் தடைவிதிக்க முடியாது.

நிலத்தடி நீர் வற்றுவது சுற்றுச்சூழல், உயிரியல் சூழல், கலாச்சாரம் என எந்தவிதக் காரணத்திற்காகவும் தண்ணீர் விற்பனையின் மீது அரசு தடைவிதிக்கக் கூடாது. அவ்வாறு தடைவிதிப்பது சுதந்திர வர்த்தகத்திற்கு எதிரான நடவடிக்கையாகவே கொள்ளப்படும்.

குடிநீரின் தரம் குறித்து எந்த அரசும் தன்னிச்சையாகச் சட்டம் இயற்றவோ அதன் அடிப்படையில் பன்நாட்டு நிறுவனங்களுக்கு தடை விதிக்கவோ கூடாது.

தேசிய சட்டங்கள் உள்நாட்டு கம்பனிகளை மட்டுமே கட்டுப்படுத்தும். உலக வர்த்தக கழகத்தின் விதிமுறைகள் மட்டுமே பன்நாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும். உள்நாட்டு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் பன்னாட்டு நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாது.

இவ்வாறு தண்ணீர் தொடர்பாக "காட்ஸ்" ஒப்பந்தத்தின் விதிமுறைகள் காணப்படுகின்றது. இவற்றோடு மேலும் பல விதிமுறைகளை இவ்வொப்பந்தம் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் வாளியும் கயிறும் இன்றி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து கொண்ட மக்களிடம், நீங்கள் வருங்காலத்தில் தண்ணீர் தேடி அலையப் போகின்றீர்கள் என்றும் தண்ணீருக்கு காசு கொடுக்கப் போகின்றீர்கள், என்றும் பதினைந்து வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தால் எங்களை பைத்தியம் என்று கூறியிருப்பார்கள். ஆனால் இன்று எம் கண் முன்னே நடக்கிறதல்லவா. இப்படித்தான் நாளை தண்ணீருக்காக நாடுகளிடையே ஏற்படப்போகும் யுத்தமும்.

கடந்த காலங்களில் தண்ணீரின் நிரம்பல் அதிகமாக இருந்தது. கேள்வி குறைவாக இருந்தது. ஆனால், தற்போது கேள்வி அதிகமாகவும் நிரம்பல் குறைவாகமுள்ளது. தண்ணீருக்கான பாவனை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது.

அவ்வாறு ஏற்படும் போது நாடுகளிடையே போட்டிகள் தோன்றும். பின்னர் அப்போட்டிகள் போர்களாக மாறும், ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

தற்போது அமெரிக்கா, கனடா,மெக்சிகோ நாடுகளில் "நோப்தா" என்கிற ஒரு சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறையில் உண்டு. இவ்வொப்பந்தமும் தண்ணீரை ஒரு விற்பனைச் சரக்காக கருதுகிறது. இந்நிலையில் உலக குடிநீர் வளத்தில் இருபது வீத நீரைக் கொண்டுள்ள கனடாவிலிருந்து பன்நாட்டு நிறுவனங்கள் பெரிய மைதானங்கள் அளவிலான உறைகளில் நீரை நிரப்பி அதனை கப்பலில் கட்டி இழுத்துச் சென்று ஏற்றுமதி செய்கின்றன.

இதனைவிட நீர்வளம் குறைந்த மெக்சிக்கோவில், அந்நாட்டு மக்கள் தமது சொந்தக் கிணற்றிலிருந்து குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் எடுக்க அரசிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் உலக நிலைமையின் போக்கை எண்ணிப்பாருங்கள்.

ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க இராணுவத்திற்கு கொச்சியிலிருந்து கப்பலில் தண்ணீர் எடுத்துச் செல்ல ஒரு பன்நாட்டுத் தனியார் நிறுவனம் முயன்றது. பின்பு கொச்சி மக்களின் எதிர்ப்புக் காரணமாக கைவிடப்பட்டது. ஆனால் "காட்ஸ்" ஒப்பந்தத்தில் இந்தியா கைச்சாத்திட்டால், இவ்வாறான எதிர்ப்புகள் பன்நாட்டு நிறுவனங்களுக்கு ஒரு பொருட்டல்ல.

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளதால் உள்நாட்டிலும் எரிபொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் விலை உயர்வடைகிறது என ஊடகங்களில் வரும் செய்திகள் காலப்போக்கில் மாறி மசகு எண்ணெய் என்ற இடத்தில் தண்ணீர் என்ற சொல் பாவிக்கப்படும் நிலை ஏற்படப்போகிறது. காலம் அவற்றை நோக்கி நகர்வதாகத்தான் தென்படுகிறது.

தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக நாடுகள் நீர்வளம் உள்ள பிரதேசங்களை தங்களின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயலும். இதனால் சில பிரதேசங்களை பல நாடுகள் கையகப்படுத்த முயலும். இதன்போது ஏற்படு கின்ற முறுகல்கள், முரண்பாடுகள் போர்களில் முடிவடையும் வாய்ப்பே அதிகம்

எது எப்படியோ தண்ணீருக்கான பனிப் போர் தொடங்கிவிட்டதாகவே எண்ணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராம உத்தியோகத்தர்கள் - பிரதேச செயலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வன்னிப் பெருநிலப் பிரதேசமும் பல்லினப் பண்பாடும்

திரு. சாமுவேல் டேவிட்ராஜ்
(B.A, M.A)
அத்தாய்

பல்லினப் பண்பாடு என்பது பொதுவாக ஒரு சமுதாயமோ அல்லது ஒரு நிறுவனமோ அல்லது ஒரு அலகோ நல்லதோர் உறவுமுறையையோ அல்லது இடையறாத, நல்லெண்ணம் சார்ந்த தொடர்பையோ வளர்ச்சிப்படுத்துவதாகவும், வேறுபட்ட மக்கள் கூட்டத்தினரிடையே சுமூகமான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி கொள்வதாகும். அதாவது அவர்களை அங்கீகரித்து அவர்களுக்கு மரியாதை கொடுத்து வாழ்கின்ற ஒரு வாழ்க்கை முறையைக் குறித்து நிற்கின்றது.

அதாவது பகை, முரண்பாடற்ற நேச உறவு முறையினை ஒரு சுமூகமான சூழ்நிலையை மேற்கொள்வதற்க்காக, செயற்ப்படுகின்ற ஒன்றாகவே கொள்ளமுடியும். சமூகமாக வாழ்வாதார முறைகளை அமைத்து, அனைத்து மக்களோடும் இணைந்து வாழ்கின்ற ஒரு நிலையினை ஏற்ப்படுத்துவதாகும்.

பெரும்பாலும் பன்மைக் கலாசாரம் (Multy culture) தென்னாசியப் பிராந்தியத்தை மையமாகக் கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த நாடுகளுக்குரிய சமுதாயக் கூறுகளை கொண்டுள்ள மக்கள் திரட்சி, பலமொழி, பலமதம், பல கலாசார பின்னணியுடைய மக்கள் குழுமம், முரண்பாடுகள் இல்லாத நிலையில் வாழுதல் அல்லது விளங்கிக்கொள்ளுதலை, அல்லது மற்றையோரின் பண்பாட்டு அமைவுகளை விளங்கிக் கொள்ளும் வகையில் பல்வேறு நிலையில் ஒற்றுமையாக பரஸ்பர அறிவுடன் புரிந்துணர்வை விளங்கிக்கொள்வதற்கு பன்மைக் கலாசாரம் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் சிறந்த ஒரு ஊடகமாகும்.

பன்மைக் கலாசாரம் ஒரு சமூக அடிப்படையில் நிலைபெறவேண்டுமாயின் கீழ்வரும் காரணிகள் முதன்மை பெறுகின்றன.

- புவியியல் காரணிகள் (Geographical causes)
- சமூகக் கட்டுமாணங்கள் (Social structures)
- வாழ்க்கை முறை (Life style)
- அரசியல் முறை (Political system)

புவியியல் அடிப்படையில் மனிதனது பரிணாம வளர்ச்சி நிலைகள் தீர்மானிக்கப் படுகிறது. அவனது கலை கலாசாரம், சமயம், மொழி, எண்ணங்கள், நம்பிக்கைகள், தீர்மானங்கள் என்பன சமூகக் கட்டுமாணங்களாகவும் வாழ்க்கைமுறையின் முறைமைகள் இதன் பின்னணியிலேயே அரசியல் நிலைகளும் ஒரு சமூகத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. இவைகள் பிரதேசத்துக்கு பிரதேசம் நாட்டுக்கு நாடு கல்வியறிவு, அபிவிருத்தி, தொழில்நுட்பம், கண்டுபிடிப்புக்கள் பொருளாதாரநிலைகளின் அடிப்படையில் இன்று சற்று வேறுபட்டு வளர்ச்சி பெறுவதை அவதானமாகக் கொள்ளமுடியும்.

இதனடிப்படையில் தென்னாசியப் பிராந்தியத்தில் பல்லினப் பண்பாடு (Multy



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

culture) கொண்ட நாடுகளாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, பங்களாதேசம் போன்ற நாடுகளைக் குறிப்பிடமுடியும். தென்னாசியப் பிராந்தியத்தில் பல்லினப் பண்பாடு கொண்ட மக்கள் வாழும் நாடுகளுள் இலங்கையும் ஒன்றாகும். 1960 களில் வெளியிடப்பட்ட "இலங்கையின் மானுட வியல்" என்னும் நூலில் வரலாற்று சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்துவரும் மக்கள் பற்றிய விபரங்கள் வெளிப் படுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

மனிதப் பண்பாட்டு ஆய்வியல் அடிப் படையில் சிங்கள இனக் குழுமம் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் வடஇந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களின் வழித் தோன்றல்கள் எனவும் தமிழர்கள் தென்னிந்தியா வில் இருந்து புலம் பெயர்ந்து வந்த திராவிடர் களின் வழித்தோன்றல்கள் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் இலங்கையில் பல பாகங்களில் பெருங்கற்காலம் (megalithic culture) பண்பாட்டு மக்கள் வாழ்ந்த மையங் களை தொல்லியளாளர்கள் வெளிநிலைப் படுத்தியுள்ளனர். "கலாநிதி பு.நு.டானியல்" என்ற பிரித்தானிய தொல்லியல் ஆய்வாளர் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பண்பாடு பற்றிய வரைவிலக்கணத்தினை கொடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் வரலாறானது கிரேக்கர் காலத்துக்கும் பின்நோக்கி முன்னெடுத்துச் செல்ல ஏதுவானது எனக் கருத்துக்களை முதல்நிலைப்படுத்தியுள்ளார். அதாவது கிரேக் கர் காலத்திற்கும் முற்பட்ட ஒரு நிலையினை சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் பெருங்கற்கால பண் பாட்டு உணர்வுகளை மேலைத்தேச பல ஆய் வாளர்கள் மேற்கொண்டிருந்தனர். அதாவது சரசின் சகோதரர்கள் இதனையடுத்து "கென்றி செலிக்மன்" (H.Selegmen), 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஹாட்லி (Hartley), வெயிலண்ட் (Wayland) என்பவரும் ஏனைய ஆய்வாளர்களும் ஆய்வுகளை மேற்கொண்டு பல முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் பொதுவான அடிப்படையில் தென்னிந்தியா, இலங்கை என்பவற்றில் நிலவிய பெருங் கற்கால பண்பாடு பற்றி ஐரோப்பியர், இலங்கையர், இந்தி யர் எனப் பலவேறுபட்ட தேசத்தவரும் ஆய்வுகள் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் நிலவிய பெருங்கற்காலப் பண்பாடு தொடர்பாக மானிடவியலாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள், தொல்லியலாளர்கள், சமூகவியலாளர்கள் என பல வகையினரும் ஆராய்ந்துள்ளனர். அந்த வகையில் இலங்கை யின் தொல்லியல் வரலாற்றில் கி.பி 1965 இன் பின் ஒரு திருப்புமுனைக் காலமாக அதாவது தொல்லியல் ஆய்வுகள் பல இடம்பெற்ற கால மாக அமைந்துள்ளன. அவை பின்வருமாறு:

- 1969ம் ஆண்டில் அனுராதபுரத்தில் மேற்க் கொண்ட ஆய்வுக்களம்.
- 1970ம் ஆண்டில் கந்தரோடை மற்றும் பொம்பரிப்பு ஆய்வுக்களம்.
- 1980ம் ஆண்டில் மன்னாரில் தொல்பொருள் ஆய்வுமையம்
- 1980ம் ஆண்டில் 30 பெருங்கற்கால மையங்களை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கண்டறிந்தார்.
- 1980/1981 களில் ஆனைக்கோட்டை ஆய்வுமையம்
- 1993/1994 களில் பூநகரி தொல்லியல் ஆய்வுமையம்
- 1995ம் ஆண்டில் கந்தரோடை அகழ்வு மையம்

மட்டக்களப்பு கதிரவெளிப் பகுதி ஆய்வுப் பிரதேசம், வவுனியா மாவட்டத்தில் உள்ள "மாமடுவ" இராம ஆய்வுமையம், பலாங்கொட,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினபுரி, கித்துள்கொட போன்ற ஆய்வுப் பிரதேசங்களிலும் அக்கராயன் குள காட்டுப் பகுதியில் 3000 ஆண்டுகள் தொன்மையான ஈமச்சின்னங்கள், "நாக,தட" என்ற சொற்களை யுடைய தொல்பிராமி தமிழ் எழுத்துக்களைக் கொண்ட உலோக முத்திரையும் ந.குணரட்ணம் என்ற ஆய்வியலாளன் வெளிநிலைப்படுத்தி யுள்ளார்.

3000 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த கற்குவை ஈமச் சின்னங்கள், துனுக்காய், மல்லாவி பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. இதில் சுடுமண் சிற்பங்களும், வேறு பொருட் களும் கண்டெடுக்கப்பட்டன.

அக்கராயன் குளத்தின் அலைகரைப் பகுதியில் 2002ஆம் ஆண்டு ஆய்வாளர் ந.குணரட்ணம் என்பவரால் இரும்புருக்கு உலைகள் கண்டுபிடிக்கப்பட்டன. கோணாவில், முறிகண்டி, முல்லைத்தீவு, கோட்டை கட்டிய குளம், கொக்காவில், தண்ணிமுறிப்பு, புல் மோட்டை, நாகர்கோவில், வடமராட்சி கிழக்குப் பகுதி, கதிர்காமம், அநுராதபுரம், அம்பாந் தோட்டை, விஸ்வமடு, முள்ளியவளை போன்ற பிரதேசங்களில் ஏராளமான லட்சுமி நாணயங் கள் பிராமி எழுத்து பொறிக்கப்பட்ட கறுப்பு, சிவப்பு மட்பாண்ட ஓடுகள், சுடுமண் நாணயங் கள் பூநகரி, கந்தரோடையை ஒத்த வகையில் காணப்படுகின்றன. முல்லைத்தீவில் அச்சுக் குத்திய நாணயங்கள், லட்சுமி நாணயங்கள் கிடைத்துள்ளன. அக்கராயனில் உலோக மீன் சின்னம் கிடைத்துள்ளன. அது "நாகன்" என்ற தமிழ் பிராமி எழுத்துடன் காணப்படுகின்றது. இலங்கையில் சுமார் 75 இடங்களில் தொல்லி யல் ஆதாரங்களுடன் பெருங்கற்கால மனிதப் பண்பாடு நிலவியதற்க்கான சான்றுகளாக அமைகின்றன.

இலங்கையின் பெருங்கற்கால பண் பாட்டு மக்களது கலை மரபுகள் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடர் புற்றிருந்தாலும் இலங்கையில் அதிகமாக தனித்துவமானதாக விளங்குகின்றது. தீவக பிராந்தியத்திற்க்கான இயல்புகளை இலங்கை பெருங்கற்கால கலை வடிவங்கள் வெளிப் படுத்தி நிற்கின்றன. முருகைக் கற்களாலான ஈமக்கோபுரங்கள், சிப்பியின் படையல், சுறா முள்ளில் செய்யப்பட்ட மாலைகள், லட்சுமி நாணயங்கள் இலங்கைக்கே தனித்துவ மானவை. மேற்கூறிய முருகைக்கல், சிப்பி, மீன்முள், சுறாமுள் மாலை, சங்குவளையல்கள், முத்து என்பவற்றின் பாவனை பெருங்கற்கால பண்பாட்டில் இடம் பெற்றமை இலங்கையில் சமுத்திரவியல் பண்பாட்டு உணர்வுகள் நிலவி யதை உறுதியாக்குகின்றது.

இலங்கையில் அபிவிருத்தி கண்ட பெருங்கற்கால பண்பாட்டு வாழ்க்கை முறை யுடன் இணைந்ததாகவே தொடர்ந்தும் அரசியல், பொருளாதார, வர்த்தக, நீர்ப்பாசன நிறுவனங் களின் வளர்ச்சியும் காணப்பட்டிருந்தன. இருப்பிடம், இடுகாடு, குளம், வயற்பரப்பு எனும் நான்கு பிரதான அலகுகள் சிறப்பிடம் பெற் றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். பல்லினப் பண்பாட்டு அடிப்படையில் இலங்கையின் பெருங்கற்கால மனிதனது எண்ணங்கள், சிந்தனைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங் கள் யாவும் அவன் வாழ்ந்த பௌதீக சூழலின் தன்மைகளில் இரண்டறக் கலந்துள்ளதை அவனது பண்பாடு வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கைப் பெருங்கற்கால பண்பாடு களுடன் பின்னைய காலங்களில் அதாவது இலங்கையின் வரலாற்றுத் தொடக்க காலம் என்னும் கி.மு 3ஆம் நூற்றாண்டு எனப் பொவாக வரையறை செய்யப்பட்டிருப்பினும் பிராந்திய அடிப்படையிலும் எழுத்து மூலாதாரங்கள் அடிப் படையிலும் வரலாற்றுக் காலத் தொடக்கத்தினை கி.மு 5ஆம் நூற்றாண்டு என வரலாற்று ஆசிரியர்கள் வரையறுக்கின்றனர். இக்கால


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தின் பின் பல இனக் குழுமங்கள் இலங்கையில் பல பாகங்களிலும் குடியேறத் தொடங்கினர். கி.பி 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் அராபிய வர்த்தக குழுக்களின் வருகையோடு மூன்றாவது இனக்குழுவாகிய முஸ்லீம் இனம் உருவாகியது எனலாம். இவர்கள் வர்த்தக அடிப்படையில் இலங்கையில் வட, தென் பாகங்களிலும் ஏனைய பாகங்களில் குடியேறி வாழ்ந்ததற்கான பல தொல்லியல் ஆதாரங்கள் அதாவது நாணயங்கள், புழங்கு பொருட்கள், தடயங்கள் கண்டெடுக்கப்பட்டதிலிருந்து இவர்கள் தம் பண்பாட்டு அம்சங்களுடனும் இப் பிரதேச பண்பாடுகளுடனும் இணைந்து வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

இலங்கையில் இன்று இஸ்லாமியரின் கலை கலாச்சாரத்தின் அமைவுகளில் முஸ்லீம்கள் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் சோனகர் என்றே சோழர்களினால் குறிக்கப்பட்டனர். இலங்கையில் இன்று முஸ்லீம்கள் அரசியலில் மிகுந்த செல்வாக்கினை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது. பெரும்பான்மைக் கட்சிகள் இன்று முஸ்லீம் கட்சியை ஆதரித்துப் போகவேண்டிய சூழ்நிலைகள் இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ளது. இவர்கள் இலங்கையில் தமிழ் மொழியையே பேசுகின்றார்கள். தமிழ் மொழியில் பல இன பேச்சுவழக்குகள் இணைந்துள்ளதை அவதானிக்கமுடியும். இவர்கள் வன்னிப் பெருநிலப் பிரதேசங்களில் நிரந்தர குடிகளாகவும், வியாபார அடிப்படையிலும் வாழ்ந்து வருகின்றனர். தமது பண்பாட்டு அடிப்படைகள் மாறாத வகையில் அதாவது மதம், கலை கலாசாரம், திருமணம், மதக் கொள்கைகள், தொழுகை முறைகள், கட்டடக் கலாச்சாரம், கல்வி, என்பவற்றுடனும் தமிழ், சிங்களம் ஏனைய இனக் குழுமங்களுடன் சகோதரத்துவத்துடன் இணைந்து வாழ்வது ஒரு சிறந்த பல்லினப் பண்பாடாக இனங்காணப்படுகின்றது.

16ஆம் நூற்றாண்டுகளில் மேலைத்தேச கிறிஸ்தவ கலாசாரம் கீழைத்தேச நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்டபோது இஸ்லாமியர்கள் கிறிஸ்தவ மதத்திற்குள் உள்வாங்கப்படாமல் இருந்தமையும் ஒரு இறுக்க சமய கலாசார உணர்வு நிலைகள் உலகமயமாக்களுக்கு ஒரு தடையாக இருந்ததை நோக்கமுடியும்.

16ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஐரோப்பிய வருகையோடு குறிப்பாக போர்த்துக்கேயரின் (கி.பி1505–1656) வருகையோடு பறங்கியர் (Bughers) எனும் ஒரு புதிய இனக்குழு உருவாகியது. இவர்களும் மதம்பரப்பும் நோக்கோடும், வர்த்தக நோக்கோடும், தமது பண்பாட்டு அமைவுகளை இலங்கையின் பல பாகங்களிலும் நிலைபெறச் செய்தனர். இதன் பின்னணியில் ஒல்லாந்தருடைய வருகையும் (கி.பி 1656–1796) இலங்கையின் பல பாகங்களில் பல பண்பாட்டு மாறுதல்களை ஏற்படுத்தியது எனலாம். இலங்கையில் பௌத்த மதத்தின் அறிமுகமும் தேரவாத பௌத்த கொள்கைகளும், அரசியல் நிலைகளிலும் தனித்துவமான பண்பாட்டு உணர்வுகளிலும் பாரிய அசைவியக்கங்களை ஏற்படுத்திய போதும் ஒவ்வொரு இனத் தனிக் குழுமமும் தமக்கு உரித்தான இன அடையாளங்களை இழக்க விரும்பவில்லை என்பது வரலாற்றியல் அடிப்படையில் உணரமுடிகின்றது. இருப்பினும் இலங்கையின் வட, தென், கிழக்கு கரையோர பிராந்தியங்களில் இருந்த பிரதேச தனித்துவத்தில் பல பண்பாட்டு மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன.

சிங்களம், தமிழ், முஸ்லீம்களுக்கும் ஏனைய இனக் குழுமங்களுக்கிடையில் பண்பாடு, சமூக இருக்கைநிலை, பழக்க வழக்கம், வாழ்க்கையின் சமூக அந்தஸ்து நிலை, பொருளாதாரம், பணப்புழக்கம், மொழி, ஆடை, அணிகலன், கல்வி, மருத்துவம், கிராமிய வாழ்வு நிலை, நகர வாழ்வு நிலை, போக்குவரத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடல், உணவுப்பழக்கம், புழங்கு பொருட்கள் இன்னும் பல விடயங்களில் பாரிய அளவில் பண்பாட்டு மாற்றங்களும், பண்பாட்டு மேல்நிலையாக்கமும் நிகழ்ந்துள்ளன என்பதும் இது பல்லினப்பண்பாட்டு அமைவுகளின் அடியாக உருப்பெற்றது எனவும் நோக்கமுடியும்.

18ஆம்,19ஆம் நூற்றாண்டுகளில் பிரித்தானியர் (கி.பி 1796–1948) ஆட்சிக்காலத்தில் இந்தோனேசிய படைவீரர்களினால் "மலாயர்" என்ற புதிய ஒரு இனக்குழுமம் உருவாக்கப் பட்டது. இவர்கள் தம் புதிய பண்பாட்டு உணர்வுகளை இலங்கையில் பல பாகங்களிலும் நிலை பெறச்செய்தனர். இதே காலப்பகுதியில் பெருந்தோட்ட பயிர் செய்கைக்காக ஆங்கிலேயர்களினால் தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களினால் இந்திய வம்சாவழித் தமிழர்கள் (மலையகத் தமிழர்கள்) என்ற ஒரு புதிய இனக்குழுமம் தோன்றியது. இவர்களும் இன்று இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் தம் பண்பாட்டு அடிப்படைகளை ஏனைய இனக் குழுமங்களோடு இணைத்து தமது பண்பாட்டினை புதிய ஒரு அலகாக உருவாக்கிக்கொண்டனர். சிறப்பாக வடமராட்சி கிழக்குக்கரையோரம், வன்னிப் பெருநிலப் பரப்புகளிலும் இலங்கையின் கிழக்குக் கரையோரங்களிலும், மலையகப் பகுதிகளிலும் (தென்னிலங்கை) இந்த இனக் குழுமம் பரவலாக வாழ்ந்து வருகின்றது. இவர்களும் இலங்கைப் பண்பாட்டு அசைவியக் கவியலாளர்கள் என்றே கூறமுடியும்.

இலங்கையில் பண்பாட்டு பின்னணியில் பல இனக் குழுமங்களின் அடிப்படையில் வேறுபடுத்துவதில் பல முரண்பாட்டுக் கருத்து நிலைகளை தோற்றுவித்திருப்பினும் அவர்கள் தம் மதம், மொழி, வாழ்க்கைமுறை, பழக்க வழக்கம், பண்பாட்டு விழுமியங்கள் போன்ற அம்சங்களில் வேறுபாடுகள் கொண்டிருப்பதனால் இலங்கைத் தீவானது நீண்டகால பல்லினப் பண்பாடுகளைக் கொண்ட ஒரு நாடாகவும், பிரதேசங்களாகவும் இருந்து வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

பல்லினப் பண்பாட்டுருவாக்கத்தினால் இலங்கையில் பல பாகங்கள் புதிய பண்பாட்டு உணர்வுகளை தம் பண்பாட்டுடன் இணைப்பதில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன. பல்லினப்பண்பாட்டு அடிப்படை அம்சத்தில் வன்னிப் பெருநிலப்பிரதேசத்தின் தனித்துவமும் மாற்றம் கண்டுள்ளதை இனம்காணமுடிகின்றது.

வன்னிப் பெருநிலப் பிரதேசத்தின் தனித்துவத்தையும் அவர்கள் தம் சுதேசிய நிலைக்குரிய பண்பாட்டு உணர்வுகளையும் இனம் காண்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். இலங்கையின் சுருக்க வரலாறு எழுதிய "நிக்கொலசும், பரணவிதானவும்" பின்வருமாறு கருத்துக்களை முன்வைக்கின்றனர். வன்னி எனப்படுவது காடடர்ந்த பிரதேசமெனவும் "வன்னியர்" சிங்களவரிடையேயும் தமிழரிடையேயும் இருந்தன ரெனவும் அவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்துக்கும், கண்டி இராச்சியத்துக்குமிடையே பல பிரதேசங்களை ஆண்டனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

பேராசிரியர் சி.பத்மநாதனும், பேராசிரியர் க.இந்திரபாலாவும், பேராசிரியர் சிவத்தம்பியும் வன்னிப் பிரதேசம் பற்றிய வரலாற்றுக் கருத்துக்களை முன்வைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். வன்னிப் பெருநிலப்பிரதேச அடிப்படையில் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா புதிதாக உருப்பெற்ற கிளிநொச்சி பிராந்தியமும் உள்ளடக்கப் பட்டுள்ளது. வன்னிப் பிரதேச வரலாற்று அடிப் படையில் "அடங்காப்பற்று" பற்றிய குறிப்புகளும் "பண்டாரவன்னியனின் வீரம்" பற்றிய குறிப்புக் களும் முன்னிலைப்படுத்தப்படுகின்றது. "ப்றைஸ்றயான்" எனும் சமூகவியலாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு எல்லைகளை தொகுத்தார். அவரின் குறிப்புக்களில் வன்னிப் பெருநிலப்பிரதேசம் யாழ்ப்பாண பிரதேசம் சார்ந்த உணர்வு நிலைகள் காணப்படுகின்ற தையும் குறிப்பிடுகின்றார்.

பொதுவாக வன்னிப் பிரதேசத்தின் சமூக வரலாறு பற்றி அறிவதற்கு வரலாற்றுத் தொல்லியல் சான்றுகளும் வாய்மொழித் தகவல்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் அடிப்படையில் வன்னியர் எனப்படும் சமூகம் தமிழகத்தின் வடபிராந்தியத்தில் பரந்து வாழ்ந்துள்ளனர் எனவும், சோழப்பேரரசின் படைப்பிரிவில் சிறப்பிடம் பெற்றிருந்தனர் எனவும், முதலாம் இராஜராஜன் ஆட்சியை அடுத்து வன்னியர் சோழப்படைகளோடு இலங்கைக்கு வந்தனர் எனவும் பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார். இதன் அடிப்படையில் வன்னியர் எனும் சமூகத்தினர் கி.பி10ஆம் நூற்றாண்டுகளுக்குப் பின்னரே இலங்கை வன்னிப்பிராந்தியத்தோடு இணைந்துள்ளனர் என "கோணேசர் கல்வெட்டு" "வையாபாடல்", "மட்டக்களப்பு மான்மியம்" முதலிய தமிழ் நூல்களும் வன்னி பிராந்தியம் பற்றிய பல கருத்துக்களையும் தகவல்களையும் உணர்த்துகின்றன.

வன்னிப் பிரதேசத்தின் சமூக பண்பாட்டு வரலாற்றினை அவதானிக்கும் போது நீர் வளத்தை அடியொற்றியதாக குடியிருப்புக்க ளும் விளைநில விவசாய பொருளாதாரமே மேலோங்கியுள்ளதை அவதானமாகக் கொள்ள முடியும். ஓங்கிவளர்ந்த அடர்ந்த காடுகளின் நடுவே சிறிய குக்கிராமங்கள், அதனை அண்டிய பிரதேசத்தில் குளமும் குளம் சார்ந்த சூழலும் அதனை நம்பிய மிருகங்கள், பறவைகள், ஏனைய உயிரினங்கள், பச்சைப்பசேலென வயற்காட்சிகளும் மேட்டுநிலக் குடியிருப்பும் அதில் பனையோலையினால் வடிவமைக்கப் பட்ட கூரையும், வட்ட வடிவினையுடைய வீடும், மண்போட்டு உயர்த்தி பசுஞ் சாணமும், முருக்கமிலைச் சாறும் கலந்து மெழுகப் பெற்ற குளிர்மையான வீடும் காணப்பட்டன.

மேலைத்தேய பண்பாட்டு மேல்நிலை யாக்கம் சற்று பின்னான காலங்களில் உள் நுழைவுக்குட்படுத்தப்பட்டது எனலாம். வன்னிப் பிராந்திய சமூகக்கிராமங்கள் தம் தனிப்பெரும் பண்பாட்டு அடையாளங்களை குறித்துக் காட்டுவதற்கு குளத்தின் பெயர்களையும் நீர் நிலையினைக் குறிப்பதாகவும் அப்பிரதேசத் தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் காணப் படுகின்றது. அதாவது மடு, மோட்டை, கேணி, முறிப்பு, வாய்க்கால், கட்டு என்பன முதன்மை பெறுகின்றது.

வன்னி பெருநிலப் பிரதேசத்தின் நீர்வள நாகரீக தோற்றத்திற்கும் வன்னிப்பிராந்திய வரலாற்றிற்கும் இடையே காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட தென்னிந்திய படை யெடுப்புக்கள் (சோழராட்சி கி.பி 993-1070 வரை) முதன்மை பெறுகின்றன. அநுராத புரத்திலும், பொலநறுவையிலும் தலைமை ஆட்சி நிலவிய காலத்தில் தலைவர்களும், படைவீரர்களும், அரச பரம்பரையினரும் நிர் வாகிகள், வணிகர்கள், பிராாமணர்கள, கலைஞர்களும் இப்பிரதேசங்களில் நிரந்தர இருப்பிடமாகத் தேர்ந்தெடுத்திருந்த வரலாறு களும் காணப்படுகின்றன. உதாரணமாக முத்தரையன்கட்டு என்பது தமிழக அரசபரம் பரையினரும் குறுநிலவேந்தர் மரபினரும் இங்கு நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகமாக வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

வன்னிப் பெருநிலப்பிரதேசத்தை பொறுத்தவரையில் சமூக பண்பாட்டு வரலாற்று அம்சங்களில் அரசபரம்பரையினர்களும், யாழ்ப்பாணத் தொடர்புகளும், வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் செல்வாக்குகளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், சிங்கள வர்கள், முஸ்லீம்கள், பறங்கியர் போன்ற இனக் குழுமங்களும் ஒன்றிணைந்த பல்லினப் பண்பாடுகள் கட்டியெழுப்பப்பட்டு வளர்ச்சி யடைந்து வருகின்றதை அவதானமாகக் கொள்ள முடியும்.

வன்னிப் பெருநிலப் பிரதேசத்தின் மொழியில் பல்லினப் பண்பாட்டு சொற் பிரயோகங்கள் உச்சரிக்கப்படுவதை இன்று காணமுடிகின்றது. சிங்களம், தமிழ், முஸ்லீம், மலையக மொழி உச்சரிப்புக்கள் தமிழில் உரைநடையில் காணப்படுவதும் பல்லினப் பண்பாட்டு தாக்கமே எனலாம். நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், புழங்குபொருட்கள், செயற்பாடுகள், கலைப் பொருட்கள், சடங்குகள், விழாக்கள், அடையாளச்சின்னங்கள், குறியீடு கள் போன்றன பல்லின பண்பாட்டம்சங்கள் இணைந்து செயற்படுகின்றதை தெளிவாக அவதானிக்க முடிகின்றது. அதாவது தனித்துவ மான பல்லினப் பண்பாட்டு அம்சங்களில் பண் பாட்டு மாறுதல்களும் பண்பாட்டு மேல் நிலையாக்கமும் நிகழ்ந்துள்ளன. பொதுவாக வன்னிப்பிராந்திய வாழ்வியற் கோலங்களில் அச்சமூகத்தின் இருப்பிடம்(வீடு), தொழில் சார்ந்த விடயங்கள் உணவுப்பழக்கவழக்கம் தெய்வ வழிபாடு, சித்திரை வருடக் கொண்டாட்டம் என்பன அடிப்படை சுதேசியப் பண்பாடுகளாகப் பார்க்கப்படுகின்றது.

தொழில் அடிப்படையில் சுதேசியப் பொருளாதாரமே விவசாயம் ஆகும். இவ் வம்சமானது இப்பிரதேசத்திற்கென தனித் தன்மை கொண்டு விளங்குகின்றது. இதில் நெல் உற்பத்தியே முதன்மையாகின்றது. இவர் தம் பண்பாட்டு அம்சங்களில் நெல்லை களஞ்சியப் படுத்தும் தொழில்நுட்பம் மக்களிடையே உயர்ந்து நிற்பதை காணமுடிகின்றது. இதனை கொம்பறை அல்லது நெல்லுப்பட்டறை என அழைக்கப்பட்டது. வீட்டிற்குள் ஆறு கப்புக்களை ஒன்றரை முழ உயுரத்தில் நட்டு அதன் தடிகள் போட்டு பறன் அமைத்து மேல்பாகத்தில் மண் போட்டு மெழுகியும் காணப்படும். அதன்மேல் பனை ஓலையினால் வனையப்பெற்ற கூடையை வைத்து நெல்லினைப் போட்டு களஞ்சியப் படுத்துவார்கள். 15 அல்லது 20 மூட்டை நெல்லினைக் கொள்ளக்கூடியதாகவும் காணப் படும். இவ்வாறான அமைப்பில் வீட்டுக்கருகில் 2 முழம் அகலத்திலும், 3 முழம் உயரத்தில் கப்புப் போட்டு பறன் அமைப்பார்கள். அதன் மேற் புறத்தில் சிறுசிறு தடிகள்வைத்து வரிந்து மண்ணால் மெழுகி நெல் கீழே கொட்டுப்படாத வாறு அமைப்பார்கள். 7 முழம் உயரம் வரை வட்டமாக வரிச்சியினால் வரிந்து சுவர் வைப்பார்கள். மேற் பகுதியில் வட்டமான கூரை அமைப்பார்கள். அதனை உயர்த்தி நெல் எடுப்பதற்கும், வைப்பதற்கும் ஏற்ற வகையில் மேற்கூரையை செப்பனிடுவார்கள். இந்தக் கொம்பறைகளில் இருந்து வெள்ளிக் கிழமை களில் நெல்லினை வெளியே எடுக்கமாட்டார் கள். இவர்கள் மத்தியில் வெள்ளிக்கிழமை ஒரு முதன்மையான, பரிசுத்த நாளாக பார்ப்பது வழக்கமாகும். இதன் அடிப்படையில் இலட்சுமி இருப்பிடத்தில் நிறைந்திருப்பாள் என்ற நம்பிக்கை நிலவி வந்தது. இதன் அடிப்படையில் இப்பிரதேச மக்கள் தம் உறவினரையும், விருந்தினரையும் மேன்மையான நிலையில் உபசரிக்கும் ஒரு சிறந்த தனித்துவப் பண்பாடு உயர்ந்த நிலையினை காட்டுவதாக அமைகின்றது.

இவர்கள் தம் பண்பாட்டு அடிப்படைகளில் உணவுப் பழக்கவழக்கமும் இன்றியமையாதன வாகும். தமது உணவில் அதிகமாக மாட்டுப் பாலினை சேர்த்துக்கொள்வது வழக்கமாகும். மாடுகளை அதிகமாக வைத்திருக்கும் விவ சாயிகள் பாலைத் தயிராக்கி ஒவ்வொரு காலை வேளைகளிலும் கிராமத்தில் உள்ள வறுமையில் வாடும் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதும் அவர் தம் பயிலிலுள்ள சிறந்த பண்பாடாகப் பார்க்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. கிராமப்புற மக்களின் உணவுகள் மிகவும் எளிமையானவையாகும் இதற்கு உதாரணமாக கீழ்வரும் உரையினை பார்க்க முடியும்.

காட்டோரங்களில் படர்ந்து காய்க்கும் குருவித்தலைப்பாகற்காயோடு கருவாடு, கொச்சிக்காய் சேர்த்து பதஞ்சலி ஆக்கியிருந்த கறியும் பச்சையரிசிச் சோறும் என எடுத்து காட்டப்படுகின்றது. (ம.இரகுநாதன்–வன்னி பிரதேச நாவல்கள்)

வன்னி மக்களின் உணவுப் பழக்கங்களில் அரிசிப்பிட்டும், ஆடையும், தயிரும், எருமையின் நெய்யும் அவர்கள் தம் உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்ளும் பழக்கம் காணப்படுகிறது. ஏனையோருக்கு உணவளித்து விருந்தோம்பும் பழக்கம் உயர்ந்து காணப்படுகின்றது. வன்னிப் பிராந்திய மக்களிடம் தெய்வ பக்தியும் தெய்வ நம்பிக்கையும் உயர்வடைந்த ஒரு சிறந்த பண்பாட்டுணர்வாகப் பார்க்கப்படுகின்றது. காட்டுப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள் காவல் தெய்வங்களை வழிபடுவது வழக்கம். இங்கு வாழும் மக்களுக்கு "ஐயன்" வெறும் காவல் தெய்வம் மட்டுமல்ல கண்கூடாகக் காட்டும் தெய்வமாகவும் இருந்தது. மிருகங்கள் தாக்கம் விளைவிக்கும் வேளைகளில் ஐயனே! எனக் கூறினால் வரும் ஆபத்து விலகிப் போய் விடும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது.

வியாதிகள், பாம்புக்கடி, விடம்கடித்தல் போன்ற ஆபத்தான விடயங்களுக்குக் கூட புதூர் நாகதம்பிரான் மண், காணிக்கை கட்டுதல், நாணயக் குற்றியொன்றினை வெள்ளைத் துணியில் சுற்றி தமது கதவு நிலைகள், வளையில் அல்லது விடம்கடித்த இடங்களில் கடவுளை நேர்ந்து சுகம் கிடைக்கும் வரை கட்டிவிடுதல். இதுவும் ஓர் நம்பிக்கையாகப் பேணப்பட்டது.

இவர் தம் வாழ்வியல் கோலங்களில் தெய்வ நம்பிக்கையும் மருத்துவமும் ஒன்றோடு ஒன்று இரண்டறக் கலந்து செயற்படுவதை இனங் காணப்படுகிறது. மருத்துவ முறைகளில் மடித் தும்பைச் செடியை கசக்கி வைத்து காயங்களு க்கு மருந்து கட்டுதலும் நாவறப்பட்டையை அரைத்து கட்டும் முறை, வேப்பமரத்தின் இலை,பட்டை, வேர் என்பனவும் மூலிகையாக பயன்படுத்தும் மருத்துவப் பண்பாட்டினை நோக்க முடியும். மருத்துவத்தின் அடிப்படையில் தாம் வழிபடும் தெய்வத்திற்கு பொங்கல் செய்து மோதகம், வடை, வாழைப்பழம் வைத்து மடை போடுவார்கள். இது ஓர் பூஜை வடிவமாகக் காணப்படுகின்றது. "ஐயனார் சிந்து", "நாச்சிமார் சிந்து", "அண்ணமார் சிந்து" போன்றன தெய்வ வணக்க முறையில் பயன்படுத்தப்பட்டு வந்ததை அவதானிக்கமுடியும்.

இவர்களுடைய பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் காட்டில் முதலிப்பழம் பிடுங்குதல், விளாம்பழம் பிடுங்கு தல், பாலைப்பழம் பிடுங்குதல், விறகு வெட்டு தல், தேன் எடுத்தல், குழுமாடு பிடித்தல், உடும்பு பிடித்தல், ஆற்று மீன்,கடல் மீன்,ஓடை மீன் பிடித்தல், விவசாயம் செய்தல் என்பன இவர் தம் தொழில்களாக மேற்கொள்ளுகின்றனர்.

இவர்களுடைய எளிமையான வாழ்க்கை யில் இவர்களுடைய பண்பாட்டு அடிப்படையின் தனித்துவத்தை வெளிக்காட்ட மான் தோலில் உட்காருவது, சிரட்டையில் தேனீர்,கள் குடிக்கும் பழக்கமும், வீட்டு நிலத்தில் உட்காரவைத்து மான்தோல் விரித்து உணவு பரிமாறுவதும் இவர்களுடைய வழக்கமாகும். இதற்கமைவாக "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பது எமது இலக்கிய மரபாகும். இவர் தம் வாழ்வில் எளிமையான திருமண முறையும் எளிமையான வீட்டு விழாக்களும் இவர்களு டைய பண்பாட்டு அடிப்படைகளில் அவதானிக்க முடிகின்றது. இப் பிரதேச மக்கள் தம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகப்படுத்தும் தன்மைகளில் அவர்களுக்கு உரித்தான சூழலில் அம்சங்களை இணைத்தே முதல்நிலைப்படுத்துவதை காணமுடிகின்றது. உடலியல் அமைப்பில் வலிமையான தோற்றம், சிறந்த உடற்கட்டமைப்பு, வீரமான நடை, உடை, பாவனை என்பனவும் வெளிப்புறவயமாக இனங்காணப்படுகின்றது.

வன்னிப் பிராந்திய மக்கள் மத்தியில் வறுமையும் பொருளாதார வளர்ச்சியின்மையும், கல்வி நிலையில் பின்னடைவும் பணப் புழக்கம் குறைவானதாலும் பண்டைமாற்று முறையே அதிகமாகக் காணப்பட்டது. ஒருவருக் கொருவர் ஒத்தாசைகள், உதவிகள் புரிந்து தமது விவசாய நடவடிக்கைகளிலும் ஏனைய விடயங் களிலும் ஒன்றாக இணைந்து ஒற்றுமையாக செயற்பட்டு வந்ததை இனங்காண முடிகிறது.

இவர்கள் மத்தியில் பண்பாட்டு அமைவு களில் "ஒற்றுமை" எனும் உணர்வு நிலை உயர்வாக உணர்த்தப்படுகின்றது. சமூக அடிப்படையில் உயர்ந்த விவசாய அமைப்பு உடையவர்கள். தமது உறவுகளையும் தமது அயலவர்களையும் மதித்து திருமண நிகழ்வுகள் கோயில் திருவிழா, பிற கொண்டாட்டங்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். இவர் தம் மத்தியில் சமூகத் தலைவர்கள், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை களையும் அறிவுரைகளையும் கேட்டு ஒழுகி செயற்படும் ஒரு ஒற்றுமை நிலை உயர்ந்த ஒரு தனித்துவப் பண்பாடாக பார்க்கப்படுகின்றது. இவர்கள் சித்திரை வருட கொண்டாட்டத்தை வெகு விமர்சையாக கொண்டாடுவது வழக்க மாகும். வீடுகளை சுத்தம் செய்து, பலகார வகைகள் செய்து, புத்தாடை தரித்து கோயிலுக்கு செல்வதும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும் உணவு பகிர்தலும், ஊஞ்சல் கட்டும் நிகழ்வும் இவர்களுடைய பண்பாட்டில் முதன்மை பெறு கின்றது. இவர்கள் மத்தியில் ஒன்றாக இணைந்து கூடி வாழும் நிலை ஒற்றுமை செயற்பாடுகள் களவு, கொலைவெறிகள் அற்ற நிலை, உபசரிப்பில் மேலோங்கு நிலை, வந்தவர் களை வாழவைக்கும் நற்பண்புகள் இப் பிரதேசத்துக்கே தனித்தன்மை வாய்ந்த பண்பாடாகப் பார்க்கப் படுகின்றது.

இன்றைய வன்னிப் பிராந்திய சமூகப் பண்பாட்டு நிலையினை நோக்குமிடத்து இப் பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டின் அடிப் படையில் மேல்நிலையாக்கத்தின் அடிப்படையி லும் பண்பாட்டு மாறுதல்களின் அடிப்படையிலும் பல்லினப் பண்பாட்டு தன்மைகள் மேலெழுந்து வேறு பரிமாணங்களை கொண்டு வளர்ச்சி யடைவதையும் இனங்காண முடிகிறது. குடியேற் றத் திட்டங்கள், வெளிநாட்டு நிறுவனங்களு டைய அபிவிருத்தித் திட்டங்கள் தேசிய வாதத் தின் எழுச்சிகள் என்பனவும் பல்லினப் பண் பாட்டு வளர்ச்சிக்கு அஸ்திபாரமாக அமைந்து செயற்படுகின்றது. சில பிரதேசங்களில் சுதேச கன்னிமை அழியாத வன்னியின் இயற்கை அழகும் அதனோடு இணைந்த மக்களின் இயல் பான வாழ்வு நிலையும் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

வன்னிப் பிரதேசத்தின் புதிய பக்கத்தின் மலர்ச்சியில் உருவான புதிய குடியேற்ற வாசிகள் பலரும் தொகுத்த புதியதொரு பண் பாட்டு உருவாக்கம் நிலை கொண்டு வருவதை இனங்காண முடிகிறது. இதனடிப்படையில் மதிப்பிட முடியாத பண்பாட்டு வளங்கள், தொன் மங்கள், தமிழரின் பண்பாட்டுக் குறியீடுகள், கலை கலாசாரங்கள், விழுமியங்கள், மொழி, நிலம் என்பன சுரண்டப்படுவதையும் இருவேறு சமூகங்களின் பண்பாட்டு அமைவுகள் இணைக் கப்படுவதனால் சமூக முரண்பாடுகளும் பிரச் சனைகளும் உருவாவதைக் காண முடிகிறது.

பாரம்பரிய சுதேசிய வன்னிப்பிராந்திய மக்களிடையே பல சாதிப் பிரிவினரை அடை யாளங்காண முடிகிறது. கிராமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் ஒவ்வொரு சாதியினரும் தனித் தனிக் குழுக்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர். எனினும் தற்காலத்தில் அதன் நிலை தகர்க்கப்பட்டு பல குழுமங்கள் ஒன்று சேர்ந்து வாழும் பல்லினப் பண்பாட்டு நிலை உயர்ச்சி பெற்று வருகின்றன. பல்வேறு சாதிக் குழுமங்கள் காணப்படினும் ஒரு சாதியினர் ஒரு சாதியினரை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி வாழ்கின்ற நிலையினை இப்பிரதேசத்தில் காணமுடியாதுள்ளது. சாதியின் பெயரில் எந்தவொரு சமூகத்தினருடைய சமூக உரிமை மறுக்கப்பட்டதற்கான வரலாற்றுப் பதிவுகள் முன்னிலைப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

வன்னிப் பிராந்திய மக்கள் மத்தியில் "சீதனம்" ஒரு சமுதாயப் பிரச்சினையாக உருவாகவில்லை எனலாம். எனினும் அது தற்கால சமூக கண்ணோட்டத்தில் அசைவு நிலைக்கு உட்பட்டு வருவதை உணரமுடிகிறது. இந்த அசைவியக்கத்தை யாழ்ப்பாண சமூகத்தில் "மலாயர்" வர்க்கத்தினரின் உதயத்தை தொடர்ந்தே சீதனம், நன்கொடை என்பன சமூகத்தில் வலுப்பெற்றுள்ளதை அவதானிக்க முடிகிறது. வன்னிப் பிரதேச மக்களின் பண் பாட்டிலும், வாழ்வு நிலையிலும், சமூக நிலை யிலும் பொதுவான பிரச்சினையாக இனங் காணக்கூடியது வறுமை நிலையும் போதிய கல்வி வாய்ப்பு இன்மையுமே ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இன்று பல்லினப் பண்பாட்டு உணர்வுகள் சுதேசிய வன்னி மக்களின் பண்பாட்டில் ஒரு அசைவியக்கத்தை அல்லது பண்பாட்டு மேல் நிலையாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றதை இனங்காணமுடிகிறது.

பல்லினப் பண்பாட்டுச் சேர்க்கையினால் வன்னி மக்கள் பெரும் இன்னல்களையும் முரண் பாடுகளையும் சிரமங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். இதனடியிலே புதிய பணம் படைத்த அதிகாரிகளும் வேறினக் குழுமங் களின் சக்திகளும் அரச அதிகாரிகளும் இம் மக்களின் நிலையான வாழ்வின் வழிகளை சுரண்டிப் பிழைப்பதனாலும் இம் மக்களின் வாழ்க்கைத்தரங்கள் கீழ்தள்ளப்பட்டு வருகின்றன. வன்னி வாழ் மக்களின் பண்பாட்டு நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட இதுவும் காரணமாக அமைகின்றன. சிறு பிள்ளைகளை வீட்டு வேலைகளுக்கு அமர்த்துதல், வயது வந்த பெண் பிள்ளைகளின் வாழ்க்கைமுறை பாதிப் படைதல், வேலையற்ற நிலை, இளம் விதவை கள் துன்புறுத்தப்படுதல், மனித உழைப்பிற்கேற்ற ஆண், பெண் ஊதியங்கள் வழங்கப்படாமல் ஏமாற்றுதல், சிறுவர் துஸ்பிரயோகங்கள், நிலங்கள் சூறையாடப்படுதல் போன்ற பல தாக்கங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்ட முடியும்.

மேற்கண்ட அடிப்படையில் வன்னிப் பிரதேச மக்கள் பெரும்பாலும் வாழும் சூழலே உலகம் என நினைப்பவர்கள். இவர்களின் ஆசைகளும் தேவைகளும் எளிமையானவை கள். அளவுக்கதிகமாக ஆசைப்படாததால் அவர்களின் வாழ்வு நிலையில் பிரச்சினைகள், முரண்பாடுகள் மிகக் குறைவானதாகக் காணப்படுகின்றது. சவால்கள் எழுவது அரிதாக உள்ளதால் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஆனால் இன்று பல்லினப் பண்பாட்டு அடிப்படையில் அரசியல் வாதிகளின் இனவாதப் போக்கின் அடிப்படையிலும் ஏமாற்றப்பட்டு வேதனைப் படுத்தப்படுகிறார்கள் என்பதும் பல்லினப் பண்பாட்டு அமைவுகளின் வழியாக இனங்காண முடிகின்றது. உதாரணமாக வன்னிக் கிராமங் களில் தொழில் நிமித்தமாக வந்த சிங்கள, முஸ்லீம் மக்களும், உள்ளூர்த் தமிழ் மக்களும் இனப்பகை எதுவுமின்றி மகிழ்ச்சியாக ஒன்றுகூடி வாழ்ந்த வாழ்வுநிலை இனவாத அரசியல் அடிப்படையில் பல முரண்பாடு களையும் பல விரோதங்களையும் தூண்டியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் ம.இரகுநாதன் வன்னிப் பிரதேச நாவல்களை தொகுத்து நோக்கியுள்ளார். அதில் வன்னி நாவல்கள் அடிப்படையில் அவர் பின்வருமாறு மூன்று நிலைகளில் வன்னி மக்களை வகைப்படுத்தியுள்ளார். அதாவது முதலாவது பகுதியினர் வெளியுலகம் தெரியாதவர்கள். இவர்களின் ஆசைகளும் தேவைகளும் குறைவானவை. இதனால் வாழ்வில் பிரச்சினைகள், முரண்பாடுகள் குறைவானதாகும். இரண்டாவது வகையினர் சிங்கள மக்களோடு இணைந்து வாழ்பவர்கள். இவர்களிடையே இனவாதம் இல்லை, இவர்கள் இன,மத,மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையாக வாழ்பவர்கள். அரசியல் இவர்தம் வாழ்வியலை குலைத்து வருகின்றது. மூன்றாவது வகையினர் வன்னிப் பிரதேசத்தில் வந்து குடியேறிய யாழ்ப்பாண மக்கள். இவர்கள் யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள். இவர்களே கிளிநொச்சிப் பகுதியை வளம்படுத்தியவர்கள் எனலாம்.

இவர்களை அடுத்து வன்னிப் பிராந்தியத்தில் உருவான முஸ்லீம் மக்களின் மலர்ச்சியும் சிங்கள மக்கள் குடியேற்றங்களும், கிறிஸ்தவ மதம் பல இடங்களில் வேரூன்றியமையும் அங்கு வாழ்கின்ற சுதேசிய வன்னிப் பிரதேசத்தில் எழுந்த பண்பாட்டு மாற்ற நிகழ்வுகளாகக் காணப்படுகின்றது. வன்னிப் பிராந்தியத்தில் பல பாகங்களில் புதிய கிறிஸ்தவ ஆலயங்களும் அவை சார்ந்த மதப் போதனைகள் கிறிஸ்தவர்கள் அவர் தம் சமூகம், கலைத்துவமான கலாசார பின்னணியும், பண்பாட்டு விழுமியங்களும், பௌத்த சமயம் சார்ந்த வழிபாட்டிடங்களும், மதப் போதனைகள், கலை கலாசார பண்பாட்டு கலை நிகழ்வுகள், பண்பாட்டு விழுமியங்களும், தமிழ் சிங்கள திருமண உறவுகள் என்பனவும் பல்லினப் பண்பாட்டு அடிப்படையில் புதிய திருப்பங்களை உருவாக்கி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

தற்கால அரசியல், பொருளாதார, குடியேற்ற அடிப்படையில் புதிய பௌத்த குடியேற்றங்களும் முஸ்லீம் பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ ஆலயங்கள், வெளிநாட்டு நிறுவனங்களும் வன்னிப் பிராந்தியத்தில் பல பாகங்களிலும் நிறுவப்பட்டு செயற்படுகின்றதை அவதானிக்கமுடியும். இதனடிப்படையில் பல்லினம் இணைந்த ஒரு சமூக களமாக மாறிவருகின்றதையும் இனம்காண முடியும். பல்லினப் பண்பாட்டு அடிப்படையில் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியும், பண்பாட்டில் பல மாறுதல்களை ஏற்படுத்துகின்றது. பொருள் சார்ந்த பண்பாட்டு அடிப்படையிலும் பல மாறுதல்கள் நிகழ்கின்றன. உணவுப்பழக்கம், ஆடை, அணிகலன்கள், இருப்பிடம், புழங்குபொருட்கள், பாவனைப்பொருட்கள் போன்ற விடயங்களில் விஞ்ஞான தொழில்நுட்பம் பல மாற்றத்தினை நிகழ்த்தி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. பொருள் சார்ந்த பண்பாட்டில் புழங்கு பொருள் முக்கியத்துவம் பெறுகின்றது. அம்மியிலே அரைத்து உரலிலே இடித்து உணவு தயாரிக்கும் பழக்கம் இன்று அருகி, இயந்திர சாதனங்களின் பாவனை இன்று மேலோங்கியுள்ளது. விவசாய நடவடிக்கைகளுக்கு பாரியளவு இயந்திரப் பண்பாடுகள் களமிறங்கி செயற்படுவதை இனங்காண முடியும். மின்சார அடிப்படையில் நவீன தொழில்நுட்ப புழங்கு பொருள் பாவனைக்கு வந்துள்ளது. தொழில்நுட்ப வளர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும் கலை கலாசார தன்மைகளைக் கூட அசைத்து விடுகின்றன. தொலைக்காட்சி (Telivision), இணையத்தளம் (Internet), கையடக்கத் தொலைபேசி (Mobile phone), தொலைநகல் (Fax) போன்ற தொடர்பாடல்கள் உலக மயமாக்களின் உயர்ந்த நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.

சுதேசிய நிலையில் காணப்பட்ட மட்பாண்டங்கள், மூங்கில் பொருட்கள், ஓலைப் பெட்டிகள், நெசவுத்தொழில், பித்தளை புழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்கள் போன்றன இன்று எமது பயன்பாட்டி லிருந்து அருகிக் குறைந்துவிட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். வன்னிப் பிராந்தியம் இன்று தொழில் நுட்பத்திலும், விஞ்ஞானத்தி லும், போக்குவரத்திலும், தொடர்பாடலிலும், உலகத்தொடர்புகளிலும் பாரிய மேல் நிலையை கண்டு வருகின்றது. மருத்துவத் துறைகள் தொழில்நுட்ப, விஞ்ஞான முறைகளில் வளர்ச்சி பெற்றுவருகின்றன.

பொதுவாக கீழைத்தேச நாடுகள் பல்லினப் பண்பாடுகளை ஏற்றுக் கொள்வதில் பாரிய சவால்களை எதிர்நோக்குகின்றன. ஏனைய பண்பாட்டுத் தழுவல்கள் சமூக இருக்கை நிலையில் முரண்பாடுகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தி வருகின்றதை அவதானிக்க முடியும். இதற்கான காரணம் மக்கள் சிறந்த ஒரு உயரிய வாழ்க்கைத் தரத்தை அடையவில்லை. வறுமையான நாடுகள், பொருளாதார நலிவுகள், சுரண்டல்கள், போதிய கல்வியறிவு தொழில்நுட்ப வளர்ச்சியின்மை, ஆயுத கலாசார அடிப்படையிலான இன மோதல்கள், பழமைவாதம் என்பனவும் புதிய பண்பாடுகளை ஏற்பதில் தடைகளும், முரண் பாடுகளும், பிரச்சினைகளும் தோற்றுவிக்கப் படுகின்றன.

எனவே பண்பாடு பற்றிய கருத்து நிலைகள் 17ஆம்,18ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த கருத்து நிலைகளிலும், பண்பாட்டு பரவல் அடிப்படையிலும் சமூகங்களிடையே பாரிய பண்பாட்டு மாறுதல்கள் மேல்நிலை யாக்க செயலாக்கம் ஏற்படலாயிற்று. இதில் பின் நவீனத்துவமும் ஒரு முக்கிய ஆணிவேராக அமைகின்றது. பின் நவீனத்துவம் 20ஆம் நூற்றாண்டின் கடந்த 40 ஆண்டுகளில் பண்பாடு பற்றிய கருத்தியலின் நிலையிலும் புதிய சிந்தனையினை தோற்றுவித்துள்ளது. இது புதிய பண்பாட்டு சிந்தனையாக மாற்றமடைந்து உலக வரலாற்றின் உலகப் போர்கள் ஓய்ந்த பின் புதிய கருத்துநிலைகள் தோற்றம் பெற்று ஒவ்வொரு பண்பாட்டு அமைவுகளிலும் ஊடுருவத் தொடங்கியது. உலகில் செல்வாக்கடைந்த இயற்கை வாத அமைப்பு, மாக்ஸிய வாதம், நவீனத்துவ வாதம் போன்ற கோட்பாடுகளைத் தொடர்ந்து பின்நவீனத்துவமும், கீழைத்தேச நாடுகளிலும் பண்பாட்டு பரவல் அடிப்படையில் செல்வாக்கு பெறத்தொடங்கியது.

அதாவது ஒரு தனிமனிதன் எந்த நாட்டிலும் தனது வாழ்க்கையை அமைக்கவும் அந்த நாட்டின் விதிமுறைகளுக்கு அமைய தனது பண்பாட்டு விடயங்களை பின்பற்றவும் வேறு பண்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும் அரசியல், பொருளாதாரம், மதம் சார்பான விடயங்களில் பங்குகொள்ளவும் உரித்துடைய பல்லினப் பண்பாடு எழுந்து வருவதை இனங்காண முடியும். இதன் அடியாக பண்பாட்டு கருத்து நிலையிலும் பண்பாட்டு பரவல் நிலைகளிலும் கூட பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன. உலகசந்தை, தகவல் தொழில் நுட்பம் புதிய கண்டுபிடிப்பு என்பன சமகால பண்பாட்டுச் சிந்தனைகளில் கலாசார ஐக்கியம், சமூக நல்லிணக்கம் என்பன இனங்காணப்படும் ஒரு புதிய கருத்து நிலைகளின் பின் ஒரு பண்பாட்டு உருவாக்கம் முதன்மை பெறுகின்றது.

உலகமயமாக்கலிலும் பின்நவீனத்துவத் தின் அடிப்படையிலும் பல்லினப் பண்பாட்டு அடிப்படையிலும் பண்பாட்டுப் பரவல் கருத்து நிலையில் தொல்லியல் முறைகளும் செல் வாக்குச் செலுத்துகின்றது. அதாவது பண்பாட் டின் மாற்றம், புதிய கருத்தியலை இன்றும் தோற்றுவித்த வண்ணம் காணப்படுகின்றது. தொல்லியல் வரலாற்று ஆய்வுகளும் அதனை கண்டறியும் நிலையில் விஞ்ஞான ரீதியான தொல்லியல் பரிசோதனைகளில் மரபணு முறைகள், பல்லினப்பண்பாட்டுக் கருத்து நிலையில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றன. உலகளாவிய ரீதியில் வாழும் மனிதப் பண்பாடுகள் ஒரு மையங்களிலிருந்தே தோற்றம் பெற்றுள்ளன என்பதையும் அவர்தம் பண்பாட்டின் கூறுகளை ஏனைய சமூக அமைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு மாற்றியமைத்துக் கொள்கின்றனர் என்பதை விரிவுபடுத்தி தெளிவுபடுத்துகின்றதை அவதானிக்க முடியும்.

எனவே பல்லினப் பண்பாட்டு பரவல் பற்றிய கருத்துநிலை காலத்துக்கு காலம் விரிவடைந்து மாற்றத்திற்குள்ளாக வளர்ச்சியடைந்துள்ளதை இன்று ஆய்வுக்குட்படுத்தும் நிலையில் அது ஆரம்ப நிலையிலிருந்து இன்றைய நிலை வரையிலும் பல்லினப்பண்பாட்டுப் பரவல் அடிப்படையிலேயே வளர்ச்சியடைந்து உயர்ச்சி பெற்றுள்ளதை அவதானிக்கமுடியும். அதாவது தேசம், தேசியவாதம், உயர் தொழில் நுட்பம், உலகமயமாதல். பின்நவீனத்துவம், தொல்லியல், கைத்தொழில், பண்பாட்டு புரட்சிகள், புதிய சிந்தனை வாதங்கள் என்பவற்றினால் காலத்திற்கு காலம் பல்லினப் பண்பாட்டு பரவலும் பண்பாடு மாற்றம் பற்றிய கருத்து நிலையும் மாற்றமடைந்து வருகின்றதை அவதானிக்க இடமுண்டு. இதற்கு மேலாக பண்பாட்டு பரவல் மாற்றத்தில் கலாசார ஒருமைத் தன்மை, ஐக்கியம், உயர்ந்த சுற்றுக் சூழல், பாலியல் சமத்துவம் என்பனவும் ஓர் உயர்ந்த பண்பாடாக பார்க்குமளவிற்கு அவைகள் விழுமியங்களாகவும் மதிக்கப்படுகின்றன. எனவே இன்று தொழில்நுட்பம், விஞ்ஞானம், அரசியல், மதம், இனம் என்ற அடிப்படையின் நிழலிலே பல்லினப் பண்பாட்டு பரவல் உயர்ந்து நிற்பதையும் உலகமயமாக்கலின் அடிப்படையில் இன்று சிறிய ஒரு நாட்டின் வளர்ச்சி காணாத இடங்களில் எல்லாம் இந்த உணர்வுகள் சென்றடைவதை இனங்காண முடிகின்றது.

எனவே இலங்கையின் ஒரு பகுதியாக வன்னிப் பெருநிலப்பரப்பு காணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் தற்காலத்தில் மிக வேகமாக பல்லினப் பண்பாட்டசைவாக்கம் நிகழ்கின்றன. எனினும் இப்பிரதேசங்களின் அடிப்படை சுதேசிய பண்பாடு உடைக்கப்படுவதையும் கலாசார சீரழிவுகளும் தேசிய வாதம் பிரதிநிதித்துவப்படுத்துவதும் புதிய பண்பாட்டுணர்வுகளை சுதேசிய பண்பாட்டு அடிப்படைகளுடன் இணைப்பதில் முரண்பாடுகளும், சர்ச்சைகளும் எழுந்துள்ளதையும் இனங்காணமுடிகின்றது. ஒரு பல்லினப் பண்பாட்டடிப்படையில் பல இன, மொழி, கலாசார, மத அடிப்படையில் முரண்பாடுகள் இல்லாத வகையில் காணப்படுவது இயல்பாகும். ஆனால் இன்று கீழைத்தேச நாடுகளில் பல்லினக் கலாச்சார நிலைகளை ஏற்றுக் கொள்வதில் பல இடாப்பாடுகள் காணப்படுவதை இங்கு இனங்கான முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


1. திருக்கேதீச்சரம் சைவ மாநாட்டு மலர் – 1960 (வன்னியும் வன்னியரும்)
2. வன்னி பிராந்திய தமிழராட்சி மகாநாட்டு மலர்
3. வன்னிப் பிரதேச நாவல்களின் தொகுப்பு (கலாநிதி ம.இரகுநாதன்)
4. இலங்கையில் வன்னியர் (கலாநிதி பேராசிரியர் சி.பத்மநாதன்)
5. தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும் (கலாநிதி ப.புகூஷ்பரட்ணம்)
6. பூநகரி தொல்பொருளாய்வு – (பேராசிரியர் ப.புகூஷ்பரட்ணம்)
7. இலங்கை பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள் (பேராசிரியர் செ.கிருக்ஷ்ணராஜா)
8. இலங்கைத் தமிழர் வரலாற்றின் சில பாகங்கள் (முனைவர் பேராசிரியர் சத்திய சீலன்)
9. வன்னியர் வரலாறு – பேராசிரியர் வித்தியானந்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்டத்தின் மீளநிலைப்படுத்தலும் நினைவழியா நிகழ்வுகளும்

அ.கேதீஸ்வரன் BA.HONS (ECN) ,MPHIL (ECN)
உதவித்திட்டப்பணிப்பாளர்
மாவட்ட செயலகம் கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்டத்தின் குடியேற்ற வரலாற்றில் 2008 ல் நிகழ்ந்த முழுமையான இடப்பெயர்வு இம்மாவட்ட வரலாற்றில் மீண்டும் ஒரு புதிய வாழ்வை தொடக்க அனைவரையும் நிர்ப்பந்தித்தது.அந்த நிகழ்வு முழுமையாக பதிவுசெய்யப்பட வேண்டிய கடுமையான நிகழ்வாகும்.அவ்வாறான எண்ணப்பாட்டில் ஒரு சிறிய முயற்சியே இப்படைப்பாகும்.

**மீள்குடியேற்ற காலகட்டம்**

இலங்கை வடகிழக்கு மாகாணங்களில் கடந்த மூன்று தசாப்தகால கொடிய போரின் முடிவுக்கான காலப்பகுதியான 2009 ம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய 95 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து சென்று வவுனியா மாவட்டத்தில் அடைக்கப்பட்ட நலன்புரிக் கிராமங்களிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் வாழந்த துயர வரலாற்றை முடிவுக்கு கொண்டுவர பலரும் எடுத்த முயற்சியின் காரணமாக இரண்டு வருடகால பகுதியினுள்ளே அனைத்து நிவாரணகிராமங்களிலும் வாழ்ந்த மக்களையும் மீளக்குடியேற்ற முடிந்தது. என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.அதனுடன் இணைந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய மூன்று முன்னரங்க கிராமங்களிலும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பரவிப் பாஞ்சான் தவிர ஏனைய அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் மக்கள் முழுமையாக குடியேற்றப்பட்டு விட்டனர். கடந்த மூன்று தசாப் தங்களில் இடம்பெயர்ந்த அனைவருமே எவ்வித முன்னறிவிப்புமின்றி இப்பிரதேசங்களில் மீளக்குடியமரக் கூடிய நிலை இன்று காணப்படுகின்றது. இவ்வகையில் நிவாரணக் கிராமங்களிலிருந்து மீளக்குடியமர்ந்து வாழும் மக்களுக்கும் அவர்கள் மீளக்குடியமர்ந்து நான்காண்டுகள் நிறைவடைந்து வருகின்றது.எடது மாவட்டத்தை பொறுத்து இந்த சாதனை ஒரு நினைவடத்தக்க செயற்பாடு என்பதில் சந்தேகமில்லை. உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரில் மீளக்குடியமர்த்துதல் என்பதில் இவ்வளவு பெரிய அனுபவம் இலங்கையின் வரலாற்றில் முதன்முறையான தாகும். லட்சக்கணக்கான மக்களை இடைத்தங்கல் முகாம்களில் வைத்து பராமரிப்பதும் இயலாத விடயமாகும். கடந்த காலத்தில் வவுனியா மாவட்டத்தின் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் அமைக்கப்பட்ட கதிர்காமர் ஆனந்த குமாரசாமி அருணாசலம், வலையம்-4, வலையம்-5, வலையம்-6, மருதமடு வீரபுரம் தருமபுரம் சுமதிபுரம் திருகோணமலை மாவட்டத்தின் சகனகம-1, சகனகம-II, யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைக்கப்பட்ட இராமாவில் கைதடி ஆகிய இடைத்தங்கல் முகாம்களில் மொத்தமாக தங்கவைக்கப்பட்ட மூன்று லட்சத்திற்கு மேற்பட்ட மக்களில் 78782 பேர் எமது மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர் இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக எம்மால் இம்முகாம்களிலிருந்து அழைத்துச்செல்லப்பட்டு குடியமர்த்தப்பட்டவர்க ளாகும் இதனைவிட 43431 பேர் உறவினர் நண்பர்கள் வீடுகளில் வசித்து தாங்களாக வந்து குடியேறியவர்களாகவும் உள்ளனர். எமது மாவட்டத்தின் முதலாவது மீள்குடியேற்றமானது 6-11-2009 அன்று பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள முழங்காவில் ஜெயபுரம்வடக்கு ஜெயபுரம்தெற்கு நாச்சிக்குடா கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 240 குடும்பங்களை 864 பேர் அழைத்துச் செல்சப்பட்டதுடன் ஆரம்பிக்கப் பட்டது இன் நாள் இம்மண்ணின் ஒரு பொன்னா ளாகும் இதனைத் தொடர்ந்து 1-12-2009 ல் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் மீள்குடி யேற்றமும் 20-2-2010ல் பளைப்பிரதேச செயலர் பிரிவின் மீள்குடியேற்றமும் 23-2-2010ல் கண்டாவளை பிரதேச செயலக பிரிவின் மீள்குடியேற்றமும் தொடங்கப்பட்டது.

மீள்குடியேற்றத்துக்கென அதிகார உயர் பீடம் (Competant Authority) அறிவிக்கும் கிராமங்கள் அப்போது இவ் அதிகார பீடத்தின் தலைமை இணைப்பாளராக இருந்த கேணல் வடகொட பிட்டிய முலம் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மீள் குடியேற்றத்துக்கெனப் பொறுப்பாக இருந்த இணைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும் அந்த அறிவிப்பை நாம் ஒவ்வொரு முகாம்களின் பொறுப்பதிகாரி களுக்கும் அறிவித்து மக்கள் அழைத்துவரப் படுவதற்கான முன் ஆயத்தங்கள் செய்யப்படும் அத்துடன் உரிய கிராமங்களின் பொறுப்பிலுள்ள படைப்பிரிவுகளுக்கும் அறிவிக்கப்படும். அப்படைப்பிரிவிலிருக்கும் பொதுசனத்தொடர்பு அலுவலர்களுடன் சுமார் இருபது வரையான இராணுவ அலுவலர்களை எமது வாகனங்களில் அழைத்துக்கொண்டு முதல்நாள் இரவே முகாம் களுக்கு சென்று தங்கி அதிகாலை 5 மணி முதல் மக்களின் பதிவுகளை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கும் இந்த பணிகளில் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளராக உதவித்திட்ட பணிப் பாளர் திரு.சுதர்சனும் கிளிநொச்சிக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு.அ.கேதீஸ்வரனும் முல்லைத்தீவுக்கு உதவித்திட்டமிடல் பணிப் பாளர் திரு.சிறீரங்கன் அவர்களும் வவுனியா விற்கு உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. கிருபாசுதனும் இணைப்பாளர்களாக இருந்து இம்மக்கள் மீள்குடியமர அழைத்துவரும் பணி களை செய்தனர். எமது மாவட்டத்தின் அழைப்புக்குழுவில் திரு.புவிராஜ் (சிறுவர் உரிமை அலுவலர்), திரு.சிவநேசன் (விளை யாட்டு அலுவலர்), திரு.ஜெயதாஸ் (கலாசார அலுவலர்), திரு.சேகர் (கிராம அலுவலர்), திரு.மணிதாஸ் (சாரதி) திரு.சுரேஸ் (சாரதி) ஆகியோரின் தந்திரோபாய முன்னெடுப்புக்கள் பாராட்டுக்குரியது. ஆட்களை ஏற்றியிறக்க பஸ்களும் லொறிகளும் ஐழுஆ நிறுவனம் வழங்கும். அதனைப்பெற காலையில் நாம் முதலில் நடவடிக்கை எடுத்து முகாம்களின் எண்ணிக்கைக்கமைய அனுப்பி வைத்து விட்டால் அதுவே மீள் அழைத்து வருவதில் கிடைத்த வெற்றியாக இருக்கும். எம்மால் 20 பஸ்கள் கோரினால் அது முழமையாகக் கிடைப்பது உறுதியில்லை.ஏதோ கிடைத்தஅளவு முடியுமான எண்ணிக்கையை மீள கொண்டுவர வேண்டுமென்ற உந்துதலில் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம். மக்களும் இந்த முகாம் வாழ்வினை முடிவுறுத்தும் பொன்னாள் என்பத னால் கூடுதல் ஒத்துழைப்பைத் தருவார்கள். அவ் வாறு ஒவ்வொரு முகாமிலிருந்தும் பஸ்களும் லொறிகளும் வலயம் 5 இற்கு கொண்டு சென்று நிறுத்தப்பட்டு பாதுகாப்பு அலுவலர்களின் பாதுகாப்புடன் தொடரணியாகப்பயணிப்போம். இடையில் எவ்வித சோதனைகளும் இல்லை என்பதால் பயணம் சுலபமாயினும் அடிக்கடி பழுதடையும் பஸ்ஸோ லொறியோ தொடரணி பயணத்தை தாமதப்படுத்துவது வழமையானது முகாம்களில் ஏற்றப்பட்டோரை பற்றி இராணுவ அதிகார பீடத்துக்கும் உரிய பிரதேச செயலாளர் களுக்கும் நாம் அறிவிக்கும் போது அவர்கள் போதிய ஆயத்தங்களை மேற்கொள்வதற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாராகி விடுவார்கள். அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் இவ் எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ள அவரை ஊடகங்கள் கலைத்துப்பிடித்துக்கொள்வது வழமை. உதவி அரசாங்க அதிபர்களான சத்தியசீலன், சுலோஜினி, முகுந்தன் ஆகியோர் இந்தப்பணி களில் வல்லுநர்களாகப்பங்காற்றிய போது துணை வசதி வழங்குவதிலோ திட்டப்பணிப் பாளர் ஜெயராணி, திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன், கணக்காளர் ஜெயராசா உணவுத் திட்டப்பிரதிப் பணிப்பாளர் கௌரிதாசன ஆகியோரின் அணிகள் தமக்கென வழங்கப்பட்ட உதவிப்பொருட்களுடனும் பணத்துடனும் ஏனைய வசதியளிப்புக்களான தறப்பாள், இந்தியன் பொதி, தகரங்கள், சமைத்த உணவு, என்பவற்றுடனும் இடைத்தங்கள் முகாம்களில் பணியாற்றத்தொடங்கி விடுவார். 3 தினங்கள் இங்கு தங்கவைக்கப்பட்ட காலங்களில் வெடி பொருட்களின் அபாயம் தொடர்பான விழிப் புணர்வுப்பயிற்சியும் வீடுகளுக்கு அழைத்துச் சென்று காட்டுதலும் நடைபெறும். இதிலே பலர் தமது வீடுகளுக்கு மகிழ்வாக சென்றுசேர சிலர் நில வெடிகளின் பகுதி, இராணுவ பயன் பாட்டிலுள்ள பகுதி, மண் அணைகள் உள்ள பகுதி என தற்காலிக முகாமில் மேலும் பல தினங்கள் தங்கியிருப்பதும் அதனை அழைத்து வந்த நாம் நச்சரிக்கப்படுவதும் கூட நடந்து முடிந்துவிட்டது.

மீள்குடியேற்றத்துக்கென வாகனங்களை ஒழுங்கமைத்து அவர்களை நேரடியாக தற்காலிக தங்குமிடங்களான பாடசாலைக்கு கொண்டு சென்று அங்கு ஆகக்கூடியது மூன்று நாடகள் தங்கவைக்கப்பட்டு தற்காலிக தறப்பாள் கள் கூரைத்தகடுகள் என்பனவும் அவசரமாக தேவைப்படும் ஏனைய வசதிகளான குடிநீர் போன்றனவும் வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இம் மீள் குடியேற்றமானது பின்னர் பல்வேறு வாழ்வாதார வசதியளிப்புக்களுக்கூடாக முழு நிலை பெறச்செய்யப்பட்டதாகும் இவ்வகையில் எமதுமாவட்டத்தில் இன்றுவரை மீளக்குடி யேற்றப்பட்டவர்களின் விபரம் வருமாறு

**மீள்குடியமர்த்தப்படட் சனத்தொகை விபரம்**

| பிரதேச செயலர் பிரிவு | மொத்த சனத்தொகை | |
|---|---|---|
| | குடும்பம் | அங்கத்தவர்கள் |
| கரைச்சி | 22522 | 70363 |
| கண்டாவளை | 7623 | 24490 |
| பூநகரி | 6912 | 24355 |
| பளை | 3537 | 11908 |
| மொத்தம் | 40594 | 131116 |

இவ் மீளக்குடியேற்றத்தில் மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலிருந்து அழைத்து வருவதற்கான பஸ்கள் லொறிகள் என்பன ஐழுஆ நிறவனத்தினால் வழங்கப்பட்டன அவற்றை கோரிப்பெற்று உரிய முகாம்களில் உள்ளோரை தயார்படுத்தி ஏற்றி தற்காலிக தங்குமிடங்களாக செயற்படும் பாடசாலைகளு க்கு எடுத்துவரப்பட்டு அங்கு மூன்று நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படும். இதனை பல நோக்கு கூட்டுறவு சங்கங்களின் உதவியுடன் பிர தேச செயலக உத்தியோகத்தர்கள் மேற்கொள் வர். இக்காலப்பகுதியில் அவர்கள் தங்கள் வீடுக ளைச் சென்று பார்வையிடல் கண்ணிவெடி விழிப்புணர்வு பெறல் அவசர உதவி நிதியாக ரூபா 5000 பெறல் விவசாய உபகரணத் தொகுதி பெறல் தற்காலிக கூரை விரிப்புக்கள் தகரங்கள் என்பன பெற்றுக்கொள்ளுதல் ஆகிய செயற்பாடு கள் நிறைவேற்றப்பட்டு தமது வீடுகளுக்கு அவர்களின் உடமைகளுடன் கொண்டு சென்று சேர்க்கப்படுவர். இந்தளவு செயற்பாடுகளும் மிகக்குறைந்த மனித வலுவுடன் சுறுசுறுப்பாக மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதிலும் குறிப்பாக எமது மாவட்டத்தை நிரந்தரமாகக் கொண்டு முதன்முதலாக அரச அதிபராகப் பதவி உயர்வு பெற்ற திருமதி றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் இம் மாவட்ட மீள்குடியேற்றம் முழுமைக்கும் தலைமையேற்று வழிப்படுத்தியதும் அவரது வழிகாட்டலில் மாவட்ட பிரதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலக அலுவலர்கள் அனை வருமே இரவு பகல் பாராது எவ்வித ஊக்கிவிப்பு கொடுப்பனவு களும் இன்றி உணர்வுடன் கூடிய உழைப்பை வழங்கியிருந்தது இன்றும் என்றும் மறப்பதற் கான நிகழ்வு அல்ல.

**மீள்குடியேற்றத்தினைத் தொடர்ந்த நிலைமாறு காலகட்டம்**

மீளக்குடியமர்ந்த மக்களின் அடுத்த கட்ட நிலையாக அவர்களை இயல்பு வாழ்க்கைக்குக் பழக்கப்படுத்திக் கொள்வதற்கான காலப்பகுதி யாக இருந்தது. இடைத்தங்கள் முகாம்களில் நெருக்கமாகக் குடியிருந்த இவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாகவும் சிதறுண்ட நிலையிலும் பலர் வந்து குடியேறாத நிலையி லும் ஆங்காங்கே குடியிருக்க நிர்ப்பந்திக்கப் பட்ட போது நிலைமாற்ற தொடக்க காலம் பெரும் சவால் நிறைந்ததாக இருந்தது. புதர் மண்டிய வீதிகள் யாரும் பராமரிக்காத காணிகள், பாழ டைந்த கிணறுகள் வாழ் விடங்கள் எல்லாமே ஒருவித பயப்பிராந்தியை ஏற்படுத்திக் கொண்டிருந்த போது காசுக்கான வேலை (cash for work) என்ற திட்டம் அரசால் அறிமுகம் செய்து நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் பல்வேறு வீதிகளும் போக்குவரத்து ஏற்ற வகையில் மாற்றப்பட்டதுடன் பொது நிலையங் களும் சுத்தம் செய்யப்பட்டன. மீள் எழுச்சித் திட்டம், நெக்கொட் கருத்திட்டம், ENDRP கருத் திட்டம் என்பனவும் அரசுசாரா நிறுவனங்களும் இணைந்து இவ்வேலைத் திட்டத்தை அமுலாக்கி யிருந்தன. கட்டமைப்பு திருத்தல்களுடன் வாழ் வாதார அபிவிருத்திக்கான மரக்கறி செய்கை விதைகள், விலங்கு வளர்ப்புக்கான விலங்குகள் சிறுமுயற்சி அபிவிருத்திக்கான நன்கொடைகள் என்பன வாழ்வாதார மேம்பாடு குறித்து வழங்கப்பட்டது. வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் வைத்தியசாலைகள் பாடசாலை கள் முக்கிய அரச திணைக்களகங்கள் போன்றன புணரமைக்கப்பட்டன. நடுத்தர குளங்களின் புனரமைப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. வங்கிகளினால் வழங்கப்பட்ட பல்வேறு கடன் திட்டங்கள் லீசிங் கம்பனிகளால் வழங்கப்பட்ட வாகனங்கள் போக்குவரத்துச் சேவையை மேம்மடுத்தியதுடன் விவசாய பொறி கருவி களையும் எடுத்து வந்தன. வீட்டு வசதித்து றையை மேம்படுத்துவதில் அரசுசார நிறுவனங் கள் தற்காலிக வீடுகளை அமைத்து வழங்கின. நிரந்தர வீடுகளை அமைப்பதில் வடக்கு கிழக்கு வீடமைப்பு நிர்மானத்திட்டம், இந்திய நிதியுதவி யுடனான வீடமைப்புத்திட்டம் UNHABITAT இலங்கைச் செஞ்சிலுவை சங்கம் சுவீஸ் ஒத்து ழைப்பு நிறுவனம் என்பன பெரும் பங்காற்றி வருகின்றன. மீள்குடியேற்றத்தின் போது வழங்கப்பட்ட 12 தகரங்களுடன் தற் காலிகமாக வழங்கப்பட்ட வீடுகளை தொடர்ந்து அரசு சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளை வழங்கின. இவை இருவருட கால பயன்பாட்டு இலக்குடன் தற்காலிகமாக வழங்கப் பட்டதால் இடைமாத காலகட்டத்தில் நிரந்தர வீடுகளின் தேவை ஒரு பெரும் தேவையாக மாறியிருந்தது. இம் மாவட்டத்தில் காணப்பட்ட 77 சதவீதமான வீடுகள் முழுஅளவிலும் 10 சத வீதமான வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந் தினால் மிக சில வீடுகளே நல்ல நிலையில் காணப்பட்டன.இந்த வகையில் நிரந்தரமாக சேதமடைந்த 25615 வீடுகளையும் பகுதியாக சேதமடைந்த 6346 வீகளையும் கடும் சேத மதிப்பீட்டு குழுவினால் அய்வு செய்து அறிக்கை யிடப்பட்டது அப்போது கொள்கையளவில் தனி நபர்களுக்கு வீடுகளை கட்டி வழங்கும் நிறுவன ஏற்பாடுகள் காணப் படாமையால் ஆசிய அபிவிருத்தி வங்கியால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென மட்டும் வீடுகளை அமைக்கப்பெற்ற வடகிழக்கு வீடமைப்பு நிர்மாணத்திட்டம் (NEHEP) 3.50000 பணத்தை வழங்கி வீடுகளை அமைக்க முன்வந்தது அதனைத்தொடர்ந்து வீடுகளை அரசாங்க நிதியில் அமைத்து வழங்கும் பல கருத்திட்டங் கள் அறிமுகம் செய்து வைக்கப் பட்டன. இதனை கீழ்வரும் அட்டவனை முலம் புரிந்து கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்டத்தின் வீடமைப்புத் தகவல்கள்

| பிரதேச செயலர் பிரிவு | சேதமடைந்த நிரந்தர வீடுகள் | சேதமடைந்த பகுதித்திருத்த வீடுகள் | இதுவரை கட்டிமுடித்த நிரந்தர வீடுகள் | இதுவரை திருத்தியமைக்கப்பட்ட பகுதிச்சேத வீடுகள் | தேவையான நிரந்தர வீடுகள் | தேவையான பகுதித்திருத்த வீடுகள |
|---|---|---|---|---|---|---|
| கரைச்சி | 12399 | 3930 | 7577 | 2415 | 4832 | 1515 |
| கண்டாவளை | 5686 | 1387 | 3590 | 1051 | 2096 | 336 |
| பூநகரி | 4544 | 555 | 4529 | 301 | 285 | 254 |
| பளை | 2986 | 474 | 2168 | 349 | 818 | 155 |
| மொத்தம் | 25615 | 6346 | 18699 | 4119 | 8031 | 2230 |

**நிலைமாறு காலகட்டத்தை தொடர்ந்து வரும் அபிவிருத்திக் கட்டம்**

நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து மீள்குடியமர்ந்து அடிப்படை தற்காப்பை மட்டும் பெற்றுக்கொண்ட மக்களை அவர்களது இயலுமைக்கும் வளகிடைப்பனவுக்கும் ஏற்ற வகையில் அபிவிருத்தி செய்வதற்கான செயற் பாடுகள் இப்பொழுது பெருமளவு உட்வேகத்து டன் நடைபெற்று வருகின்றது.இந்த அபிவிருத்தி முயற்சியானது துறை .ரீதியான கவனத்துடன் இப்பொழுது இடம்பெற்று வருகின்றது இதனை வெளிக்காட்டும் அட்டவனை கீழே காட்டப் பட்டுள்ளது.

**மொத்த முதலீட்டுச் செலவின விபரம் மில்லியன் ரூபாவில்**

**கிளிநொச்சி மாவட்டம்**

| இல | பிரிவு | 2009 - 2013 வரையான முதலீடு |
|---|---|---|
| 1 | விவசாயம் | 294.31 |
| 2 | சமூக மட்ட அமைப்புகள் | 267.65 |
| 3 | மீள்குடியேற்றம் | 1061.72 |
| 4 | நீர்ப்பாசனம் | 1110.65 |
| 5 | கைத்தொழில் | 23.28 |
| 6 | வீடமைப்பு | 6131.13 |
| 7 | மீன்பிடி | 234.88 |
| 8 | கால்நடை | 529.3 |
| 9 | சுகாதாரம் | 2253.97 |
| 10 | கல்வி | 1861.33 |
| 11 | உள்ளூராட்சித் திணைக்களம் | 447.82 |
| 12 | கூட்டுறவு | 112.47 |
| 13 | வீதி அபிவிருத்தி | 14298.68 |
| 14 | வாழ்வாதாரம் | 415.86 |
| 15 | கிராமிய அபிவிருத்தி | 1094.27 |
| 16 | நீர் மற்றும் சுகாதார வசதிகள் | 89.79 |
| 17 | விளையாட்டும் கலாச்சாரமும் | 26.24 |
| 18 | பொது நிர்வாகம் | 1391.09 |
| 19 | மின்சாரம் | 702.7 |
| | **மொத்தம்** | **32347.14** |

இதன் பிரகாரம் மீள்குடியமர்வுக்கு பின்னரான நான்கு ஆண்டுகளில் 3234 கோடி ரூபா அரச முதலீடாக செய்யப்பட்டிருக்கிறது. தனியார் துறையினரும் தமது சொந்த நிதியி லிருந்து பலமுதலீடுகளை மேற்கொண்டிருக்கின் றார்கள். அந்த முதலீடுகள் நிலைபேறான அபி விருத்தியின் பாதையில் எமது மாவட்டத்தை எடுத்துச்செல்லும் என்பதுடன் அதன் தொடராக மகிழ்ச்சியான வாழ்வொன்றின் தொடக்கமா கவும் அமையும் என நம்பிக்கை கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போரின் பின்னரான சமூகபொருளாதார அபிவிருத்தியும் வடக்கு மக்களின் வாழ்க்கை நிலையும்

## 1. அறிமுகம்

அவலங்களையும் அழிவுகளையும் மிச்சமாக விட்டுச் செல்வதே போர் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. கட்டுமானங்களோடு மனிதமும் மனித மனங்களும் அழிவுகளையும் வடுக்களையும் சந்தித்துள்ளது. எதிர்காலம் தொடர்பான நம்பிக்கை தொலைந்து போனது. அடுத்த கட்டம் தொடர்பாகவும் அபிவிருத்தி தொடர்பாகவும் சிந்திக்கும் நிலையில் யாரும் இருக்கவில்லை.

அரசுக்கும் அரசுசாரா அமைப்புக் கழுக்கும் போருக்குப் பின்னரான இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதென்பது சவால் நிறைந்ததாகவே காணப்பட்டது. மிகக் குறைந்த நிதி வளத்தோடு இது சவாலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இலங்கை மத்திய வருமான நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டதனால் இலங்கைக்கான சர்வதேச உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டன. இந்த நிலையில் இடம்பெற்ற சமூக பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் இயல்பு நிலையை திருப்புவதில் எந்தளவுதூரம் பங்களித்தது என்பதனை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விசேடமாக மீள்குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி, சுகாதாரம், உட்கட்டுமான அபிவிருத்தி, வயதானவர்களின் நிலை, கண்ணிவெடியகற்றல் கல்வி ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் / மாற்றத்தினால் இயல்பு நிலை திரும்பப் போதுமானதாவென ஆராயப்படவுள்ளது.

## 2. மீள்குடியேற்றம்

இலங்கையில் மீள்குடியேற்றம் முடிவடைந்து விட்டதாகப் பேசப்பட்டாலும், இது இன்னமும் முழுமையடையவில்லையென்பதே உண்மையாகும். இடம்பெயர்ந்த மக்களின் பெரும்பாலனவர்கள் மீள்குடியேற்றப்பட்டாலும் இன்னமும் மீள்குடியேற்றம் முற்றுப் பெறவில்லை. பல ஆயிரக் கணக்கானவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதில் பல்வேறு கிரமங்களை எதிர்கொள்கிறார்கள். சில இடங்களில் கண்ணிவெடியகற்றல் பூரணப்படுத்தப்படாததாலும் இன்னும் சில இடங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாலும் இடம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறார்கள். சொந்த இடத்தில் மீள்குடியேறுவதென்பது ஒரு தனி மனிதனின் சமூகபொருளாதார அபிவிருத்தியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இடம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயம், மீன்பிடி, மற்றும் கால்நடை வளர்ப்பை தங்களின் வாழ்வாதாரத் தொழிலாகக்கொண்டிருப்பதனால் சொந்த இடத்திலே மீள்குடியேறுகின்ற போது தான் அவர்களின் வருமான வழிகளை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. பொருளாதார அபிவிருத்தி

போரால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் வாழ்வாதாரம் சிதைக்கப்பட்டது மட்டுமல்ல, பொருளாதார அபிவிருத்திக்கான மனித மூலதன அபிவிருத்திக்கான மனித மூலதன அபிவிருத்தியும் பௌதீக வள அபிவிருத்தியும், நிறுவனச் சட்டமைப்புக்களும் சிதைவடைந்து போயின. போருக்குப் பின்னரான கொசோவா வில் பாரிய பொருளாதார எழிற்சியை அவ தானிக்க முடிந்தது. இது அரச மற்றும் தனியார் துறையினது உயர்ந்தள விலான முதலீடுகாளல் சாத்தியமாகியது. போருக்கு பின்னரான ஈரள் எண்ணை ஏற்றுமதியூடாக பாரிய பொருளா தார அபிவிருத்தியைப் பதிவு செய்தது. ஆனால் அவ்வாறான ஓர் பாரிய பொருளாதார அபிவிருத்தியை போரின் பின்னரான வட இலங்கையில காண முடியவில்லை. விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு துறைகள் படிப் படியாக வளர்சியடைந்து வருகின்ற அதேநேரம் இது ஒரு பாரிய அபிவிருத்தி நிலையைப் பதிவு செய்யவில்லை. கடந்த ஆண்டுகளில் வரலாற் றில் முதல் முறையாக நெல் உற்பத்தி பாரிய வளர்ச்சி நிலையை (14%) பதிவு செய்துள்ளது. இதில் வடமாகாணத்தின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்தின் மீள் உற்பத்தி கணிச மான அளவு வளர்ச்சிகண்டுள்ளது. ஆனால் 1983 ஆண்டில் இலங்கையின் மொத்த மீன் உற்பத்தியில் 41% பங்களிப்புச் செய்ததோடு ஒப்பிடும்போது வளர்ச்சி போதுமானதாக வில்லை.

தனியார் சேவைநீர்வளங்களின் வருகை யாலும் ஒரு சில உற்பத்திச் சாலைகளின் உருவாக்கத்தினாலும் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ள அதேநேரம் உள்ளூர் வளங் களை அடிப்படையாகக் கொண்ட சுயதொழில் முயற்சியுடன் எதிர்பார்த்த வளர்ச்சியைப் பதிவு செய்யவில்லை. சரியான தொழில் திட்டமிடலின் மையால் கடன் சுமை அதிகரித்துள்ளமை பரவ லாக அவதானிக்கப்படுகின்றது. உள்ளூர் வளங் களை மையப்படுத்திய உற்பத்தி ஊக்குவிப்பும் சந்தை வாய்ப்புக்களை உருவாக்குதல் அல்லது பயன்படுத்தலே நிலைத்து நிற்கக்கூடிய பொரு ளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

### 4. உள்ளக நல்லாட்சி

உள்ளூராட்சி தேர்தல்கள் மற்றும் வடமாகாண சபைத்தேர்தல் சரியான முறையில் நடாத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் வகிபாகம சமூகபொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் எந்தளவு தாமதமுள்ளது என்பது நோக்கத்தக்கது.

அரச சேவை வளங்கு நிறுவனங்களைப் பொறுத்தவரையிலே மீள்குடியேற்றத்தின் ஆரம்பக் கட்டங்களில் தலையீடுகளையும் தடு மாற்றங்களையும் எதிர்கொண்டு சேவையாற் றிய நிலை மாற்றமடைந்து தற்போது மேம் படுத்தப்பட்ட இயலளவோடு நிறைவான மக்கள் சேவை வளங்கப்படுவது அவதானிக்கப்படுகின் றது. சமூக பொருளாதார அபிவிருத்தியில் மத்திய மற்றும் மாகாண அரசு நிறுவனங்களின் வகிபாகம இன்றியமையாதது. இன் நிறுவனங் கள் சமூக பொருளாதார அபிவிருத்தியை மையப்படுத்தி இணைந்து பணியாற்ற வேண்டு மென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5. உட்கடுமான அபிவிருத்தி

போரினால் மிக மோசமாக அழிவடைந்த வடக்கின் உட்கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதில் அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. உலக வங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச அமைப்புக்களும் சீனா மற்றும் இந்தியா அரசுகளும் அரசின் இம் முயற்சிக்கு நிதிப்பங்களிப்பு செய்து வருகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. வீதி அபிவிருத்தி, மின்சார வளங்கல், புகையிரதப் பாதைகள், நீர்பாசனக்குளங்களின் அபிவிருத்தி, தொலைத்தொடர்பு சேவை, வலையமைப்பு அபிவிருத்தி என்பன சமூக பொருளாதார அபிவிருத்திக்கான அத்திவார மாகக் காணப்படுகின்றது. குறுகிய காலத்தில் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் அரசு வெற்றி கண்டுள்ளது. இவ் உட்கட்டுமான அபிவிருத்தியில் உச்சப்பயனைப் பெற்று பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தக்கூடிய வகையிலே மனித மூலதனம் விருத்தி செய்யப்பட வேண்டுமென்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

### 6. பெண்களின் வாழ்க்கை நிலை

நடந்து முடிந்த போர் பெண்கள் மீது இரட்டிப்பு அமைகளை அமர்த்தியிருக்கிறது. ஏறக்குறைய 20% மான பெண்கள் குடும்பத்துக்கு தலைமையேற்று சுமைதாங்கவேண்டிய நிலை களுக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். நாளாந்த வீட்டு வேலைகளுக்கு மேலதிகமாக பெண்கள் வாழ்க்கைச் செலவை எதிர்கொள்வதற்கு வரு மானம் ஈட்டலிலும் ஈடுபடவேண்டியது காலத் தின் கட்டாயமாகும். இவ்வாறான பெண்கள் பல்வேறு சமூகப் பிரச்சனைகளை எதிர்கொண்டு தமது அன்றாட வாழ்க்கையை ஓட்டிச் செல்கி றார்கள். வாழ்வாதார அபிவிருத்திச் செயற் பாடுகள் பரவலாக மேற்க்கொள்ளப்பட்டாலும் இவ்வாறான பெண்களை தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கான நிலைத்து நிற்கக் கூடிய வாழ்வாதார உதவிகள் போதுமானதாக வில்லை.

### 7. முதியவர்களின் நிலை

இடம்பெயர்வின் இக்கட்டில் பல குடும்பங்கள் முதியவர்களை கைவிட்டு அல்லது பிரிந்து சென்றதென்பது ஜீரணிக்க முடியாதவொன்று. இடம்பெயர் முகாம்களிலும் மீள் குடியேற்றத் தின் பின்னரும் நலிவுற்றவர்கள் என்ற அடிப் படையில் முதியவர்களின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படவில்லை. அடுத்த சந்ததிக்கான அரிய பல தகவல்களை வழங்கக் கூடிய மிகச் சிறந்த வளமாக முதியவர்கள் கருதப்பட்டாலும் அவர்கள் சரியாகப் பயன் படுத்தப்படவில்லையென்பதே உண்மையாகும். வடக்கின் முதியவர்கள்மீது விசேட கவனம் செலுத்தி அவர்களை சமூகமயப்படுத்த வேண்டி யது காலத்தின் கட்டாயமாகும்.

### 8. சிறுவர் பாதுகாப்பு

போரினால் மிக மோசமான உடல் உளப் பாதிப்புக்களை சந்தித்தவர்களாக சிறுவர்கள் காணப்படுகின்றார்கள். இக்கொடிய போர் பல ஆயிரக்கணக்கான சிறுவர்களை அனாதை களாக்கியிருக்கிறது. இத்தகைய சிறார்களின் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்த வேண்டியது கட்டாயமானது. பல்லாயிரக் கணக்கான பெற்றோரை இழந்த சிறுவர்கள் பல்வேறு சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டாலும் அவர்களின் கல்வி வளர்ச்சியானதும் மகிழ்ச்சியான வாழ்க்கைக் கானதுமான சூழல் காணப்படுகிறதா என்பது கேள்விக்குரியதே. உறவினர் நண்பர்களோடு வாழ்கின்ற பெற்றோரை இழந்த சிறுவர்கள் பல்வேறு அழுத்தங்களுக்கும் சுமைகளுக்கும் முகம் கொடுத்து வாழ்வது அவதானிக்கப்பட்டுள் ளது. தந்தையை இழந்த சிறுவர்கள் தாயோடு இணைந்து குடும்ப வருமானத்துக்காக உழைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் விசேட கவனம் செலுத்தினாலும் இன்னும் கணிசமான அளவினர் சிறுவர் தொழிலாளர்களாக சுமை தாங்குகின்றார்கள். இத்தகைய சிறார்களின் கல்வி தொடர உதவுவது மட்டுமல்லாமல் இவர் களின் குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத் திக்கும் உதவி செய்யவேண்டியது தவிர்க்க முடி யாதது. இளைய தலைமுறை வலுவூட்டப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது அவர்களே எமது எதிர்காலத் தூண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. கண்ணிவெடியகற்றல்**

பெருமழையின் பின்னரான தூவாணம் போல போர் முடிந்த பின்னும் கண்ணிவெடிகளும் வெடிக்காத வெடிபொருட்களும் அச் சுறுத்தலாகவேயுள்ளன. மீள்குடியேற்ற நோக்கங் கருதி பெரும்பாலான வாழ்விடப் பிரதேசங்கள் கண்ணிவெடியகற்றப்பட்டு மீள்குடியேற்றம் நடை பெற்றிருந்தாலும், பல வாழ்வாதார விளை நிலங்களில் கண்ணிவெடியகற்றும் நிபுணர்களின் கருத்துப்படி இலங்கையில் கண்ணிவெடி அபாயம் முழுமையாக நீங்க இன்னும் 10–15 ஆண்டுகள் செல்லாமெனக் கருதப்படுகின்றது.

**10. சுகாதாரம்**

போரினால் சுகாதாரத்துறை சார்ந்த பௌதீக வளங்கள் அழிவடைந்த நிலையில் அவற்றின் புனர்நிர்மானம் அல்லது கட்டுமான மென்பது மிக விரைவாக நடந்தேறியுள்ளது. சுகாதாரத் துறை சார் அளணியினரின் அளவும் முன்னரை விட அதிகரித்துள்ள போதும் அது போதுமான தாகவில்லை. குறிப்பாக விசேட மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் இன்னும் பற்றாக்குறையாகவேயுள்ளது. முழுமையான சுகாதார வைத்திய வசதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்க்கு ஆளணி நிரப்புதல் மற்றும் அவர்களின் இயலளவு மேம்பாடு என்பது முக்கியமானது.

போரின் கோர வடுக்கள் இன்னமும் இடம் பெயர்ந்தவர்களின் மனதில் இன்னும் அகல வில்லை. அவர்கள் மிக மோசமான உளப் பாதிப்புக்குள்ளானவர்களாகக் காணப்படுகிறார் கள். உளநல மருத்துவ சேவையின் தேவை பரவலாக உணரப்பட்டாலும் அது போதுமான தாகவில்லை.

**11. கல்வி**

போர் கல்விச் சூழலை மிக மோசமாகப் பாதித்துள்ளது. கல்வி கட்டுமானங்களின் அழிவு மட்டுமல்ல கல்வியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்களின் உடல் உளப்பாதிப்புக் கள் காரணமாக அவர்களின் கல்வி மீதான நாட்டத்தைக் குறைத்துள்ளது. போரின் பின்னரான அபிவிருத்தி செயல்முறையில் கட்டுமானங் களின் அபிவிருத்தியில் கவனம் செலுத்தப் பட்டுள்ளபோதும் கல்விசார் மனித மூலதன விருத்தியில் அதிக கவனம் செலுத்தப்பட வில்லை. வட மாகாண மகக்ள் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவது காலாகால மாக அவதானிக்கப்படுகின்ற விடயமாகக் காணப்படுகின்றது. அவர்கள் கல்வியறிவை பெற்றுக் கொள்வதனை ஓர் கலாச்சார மூலதன விருத்தியாகக் கருதுகிறார்கள். இயல்பாகவே பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவேண்டு மென்ற ஆர்வம் அனேகமான குடும்பங்களில் மேலோங்கியுள்ளது. ஆனால் சில குடும்பங் களின் வறுமையும் குடும்பச் சூழலும் பிள்ளை களை பாடசாலைக்கு அனுப்ப முடியாதவாறு தடையாகவுள்ளது. இத்தகைய பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கு விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயமானது.

**முடிவுரை**

போர் வடமாகாணத்தின் சமூக பொருளாதாரச் சூழலை மிக மோசமாகப் பாதித்துள்ளது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மிகுந்த பிராயத்தனத்தோடு செயற்பட்டு வருகின் றன. பாரிய கட்டுமானங்களின் அபிவிருத்தி யானது சமூக பொருளாதார மாற்றத்துக்கான அடித்தளமாக அமைந்தாலும் ஒட்டுமொத்த சமூக பொருளாதார அபிவிருததியென்பது உட் கட்டுமான அபிவிருத்தியோடு மனித மூலதன விருத்தியும் இணைகின்றபோதுதான் முழுமை யடைய முடியும். வட மாகாணததைப் பொறுத்த வரையிலே கட்டுமான அபிவிருத்திக்கு நிகராக வாழ்வாதார அபிவிருத்தியோ, திறன் விருத் தியோ, சமூக கட்டுமான அபிவிருத்தியோ இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவில்லையென்பது சுட்டிக் காட்டத்தக்கது. இது போரின் வடுக்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் முழுமையாக விடுபடவில்லையோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்துகின்றது. அதே நேரம் குறுகிய காலத்தில் இடம்பெற்றுள்ள பாரிய உட்கட்டுமான அபிவிருத்தியென்பது குறிப்பிட்டுச் கூறக்கூடிய அபிவிருத்தி அடைவு என்பதை மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் . . !"

அன்று பாரதியார் அறைகூவியதற்கு காரணங்கள் இல்லாமலில்லை யாரோ ஒரு பேதை சொன்னதொரு பொல்லாத வார்த்தையை முன்வைத்தே
"மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும் . . . ." என்றார்.

ஆயினும் நம் தமிழன்னைக்கு அக்கதி நேர்ந்திட யாம் அனுமதித்தல் தகுமா?

# இணையிலாத் தமிழ்

**மரியநாயகம் கேசவன்**
உருத்திரபுரம் கிழக்கு

மனித குலத்தின் வளர்ச்சிக்கும், ஆவணப் படுத்துகைக்கும் ஆதார சுருதியாக அமைவது மொழி என்றால் மிகையாகாது. உலக மொழி களில் முச்சங்கம் வளர்த்த தேமதுரந் தித்திக்கும் தொன்மையும், புதுமையும், வளமும், வனப்பும் நிறைந்த தமிழ்மொழியின் சொந்தக் காரர்கள் என்ற வகையில் நாம் பெருமைப் பட்டுக்கொள்ள முடியும்.

மொழி வளர்ச்சி என்பது ஒரு ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியில் தங்கியுள்ளது. மனித அறிவு வளர்ச்சியில் பாசை ஒரு கண்ணாடி என்பர். சமூகத்தின் வளர்ச்சியில் மொழியின் பங்கு காத்திரமானதும், விசால மானதுமாகும். ஒரு நாட்டினுடைய மக்களின் அறிவு வளர்ந்து வர வர அந்நாட்டின் பாசையும் விசாலமடைந்து வருகின்றது என்பது மஹாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கருத்து.

**முதல் மொழி தமிழ்**

மனிதன் தன் கருத்தை பிறர் அறிதற் பொருட்டு ஒரு பரிவர்த்தனைக்கருவியாக, பொது ஊடகமாகவே மொழியைப் பயன்படுத்து கின்றான். பொதுவாக மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கும் சிறப்பான வாழ்க்கைக்கும் அவசியமானது அவன் பேசுகின்ற மொழிதான் மக்கள் தம் பேச்சும், மூச்சும், வீச்சும் அவர்கள் பேசும் மொழியில் தான் தங்கியிருக்கிறது என்பார்கள். ஒரு இனத்தின் அடையாளமும் அவர்கள் பேசும் மொழிதான். மனிதனாக இம்மண்ணில் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் அவர்களின் தாய் மொழிதான் முகவரி என்பதை எவரும் மறந்திடலாகாது. மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிமையான மொழி வேறெது வும் இல்லை என்று மொழிந்தார் பாரதியார். அத்துணை சிறப்பு வாய்ந்த தமிழ் மொழி திராவிட மொழிகளில் மிகநீண்ட இலக்கிய மரபைக் கொண்டுள்ளது. திராவிட மொழிக் குடும்பத்திற்கு தமிழ் மொழியே மூத்த மொழி யாகும். இக்குடும்பத்தில் இருளா, Kaikadi, பேட்டா, குறும்பா, Sholage மற்றும் Yerukula என்னும் மொழிகள் அடங்கும். தமிழ்மொழிக் குடும்பம், தமிழ் – மலையாளம் மொழிகளின் ஒரு துணைக் குடும்பமாகும். தமிழ் – மலை யாளம் மொழிகள், தமிழ் – குடகு மொழிக் குடும்பத்தின் துணைப் பிரிவாகும். தமிழ் – குடகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிக்குடும்பம். தமிழ் – கன்னடம் மொழிக் குடும்பம், திராவிட மொழிக் குடும்பத்தின் துணைப் பிரிவுகளுள் ஒன்றான தென் திராவிட மொழிக்குடும்பத்தின் உட்பிரிவுகளில் ஒன்றாகும்.

மொழியில் ஆய்வாளர்களின் பகுப்பி னடிப்படையில் திராவிடம், ஆரியம் என பிரித்து நோக்குகையில் தமிழ், தெலுங்கு மலையாளம், கன்னடம், துளு என்பவை தம் இலக்கணம், இலக்கிய வரம்புகள் தமிழ் மொழியைச் சார்ந் தவையே. உச்சரிப்பு, பொருள் கூட தமிழின் வழியிலேயே நிற்கும். குறிப்பாக சொற்கள், வசன அமைப்பு ஆகிய அம்சங்களில் தமிழை நெருக்கமாக ஒத்துள்ள ஒரு மொழியாக மலையாளம் காணப்படுகிறது.

சங்ககாலம் தொட்டு இன்றுவரையான காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்களை நோக்குகின்ற போது "கத்து கடல் பறித்தும், கல்லாதார் தீவைத்தும் குத்து வடமொழியின் கூர்பட்டும்" அழிந்தொழிந்து போகாது "கன்னட மும் களி தெலுங்கும் கவின் மலையாளமும், துளுவும்" தனது உதிரத்திலே தோன்றி வளர்ந்து கிளைமொழிகள் பெற்று மலர்ச்சியுற தான் தனது கவின்குன்றாது சீரிளமைத்திறனுடன் தமிழ் மொழி மிளிர்கின்றது. முதல், இடை, கடை சங்கங்களிலே வளர்ந்த நம் தமிழ்மொழியே முடியுடை மன்னர்களும் கண்ணெனப் போற்றி வளர்த்து வந்துள்ளார்கள்.

### செம்மொழிகளில் தமிழ்

**"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து – சங்கத்**
**திருப்பிலே யிருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை**
**நெருப்பு நின்று கற்றோர் கருத்திலே நடந்தோர் என்று**
**மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்"**

எனச் சிறப்பிக்கப்படும் நம் தமிழ் மொழி யானது ஈராயிரம் ஆண்டுகள் தொன்மை வாய் ந்த இலக்கியச் செழுமங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள ஒரேயொரு செம்மொழி எனும் பெருமை தமிழுக்குரியதே. உலகில் வழங்கும் செம் மொழிகளில் ஒன்றாக விளங்கும் நம் அரும் பெருஞ் சொத்தான தமிழ்மொழி ஏனைய செம் மொழிகளான சீனம், ஈபுறு, இலத்தீன் போன்ற வற்றைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிக மானதும், காத்திரமானதுமான இலக்கியங்க ளைக் கொண்டு மிளிர்வதாக ஆராய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலகில் இன்று பேசப்படுகின்ற பல்லாயி ரக் கணக்கான மொழிகளுள் செம்மொழித் தகுதியினைப் பெற்றவையாக எட்டு மொழிகள் சிறப்புப் பெறுகின்றன.

ஒரு மொழியைச் செம்மொழியாகக் கொள்ள சில தகுதிவிதிகள் தேவைப்படுகின்றன.

1. பண்டைய காலம் தொடக்கம் நீண்டகால பயன்பாடு உடையதாக அதாவது 2000 வருடத்திற்கு மேற்பட்ட பயன்பாடு உடைய தாக இருத்தல் வேண்டும்.
2. நீண்ட கால இலக்கியப் பாரம்பரியம் உடையதாக இருத்தல் வேண்டும்.
3. வேறெந்த மொழிகளிலிருந்தும் கிளைத்து எழாததாக இருத்தல் வேண்டும்.

இத்தகைமைகளை உடைய மொழிகளே செம்மொழி வரிசையில் இடம்பெற முடியும். இத் தகுதிகளை தன்னகத்தே கொண்ட மொழிகளா கிய கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், ஹீப்ரு, பாரசீகம், அராபிக், சீனம் ஆகிய மொழிகளே நீண்டகாலமாக செம்மொழிகள் என்ற அந்தஸ்தி னைப் பெற்றுள்ளன.

ஆயினும் தமிழ் மொழியையும் செம் மொழியாக அணிசேர்க்க நீண்டகாலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது கடந்த 2004 ஆம் ஆண்டளவிலேயே கைகூடி யமை மனங்கொள்ளத்தக்கதே. எவ்வாறெனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் செம்மொழி என்னும் உயர் தகுதியினை நம் தமிழ்மொழி பெற்றுக்கொண்டமை உலகு வாழ் தமிழ்பேசும் அனைவருக்கும் பெருமையும், பெரும்பயனும் கிடைக்கும் என்பதில் ஐய மில்லை. இத்தகைய உயர் தகுதியினைப் பெற்ற தனால் தமிழ்மொழி பல வாய்ப்புக்களையும், வசதிகளையும் பெற்று மேலும் வளர்ச்சி பெறும் நிலையில் விளங்குகின்றது. உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழுக்கென்று தனித்துறை அமைக்கப்பட்டுத் தமிழைக் கற்கும், கற்பிக்கும் பேறு இதன் மூலம் வழங்க முடிகின்றது. அத்து டன் தமிழ் மொழியிலுள்ள சிறந்த இலக்கியங் கள் வேற்று மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வும், வேற்று மொழியிலுள்ள உயர் இலக்கியங் கள் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்படவும் வாய்ப்புக்கள் கிட்டியுள்ளன.

இவ்வகையிற் பாரதியார்,

**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்**
**இறவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"**

என அன்றே ஆற்ற வேண்டிய பணிக ளைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களைப் பிற மொழிகளி லும், பிறமொழிச் சிறந்த இலக்கியங்களைத் தமிழிலும் மொழி பெயர்க்க வேண்டும் என்பதுடன் தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் பிறநாட்டவர் நம் தமிழ் மொழியை கற்பதனை ஊக்குவித்தல் வேண்டும். அத்துடன் கடந்த 2010 இல் கோவையில் இடம்பெற்ற செம்மொழி மாநாட்டினைப் போன்று தொடர்ந்தும் பல செம்மொழி மாநாடுகளை நடாத்திப் புதிய துறைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு புடம் சேர்த்தல் வேண்டும்.

**கணனி யுகத்தில் தமிழ்**

காலங்கள் பல கடந்து இன்றொரு பொற் காலத்திலே வேகமாக வீறுநடை பயிலுபவனாக இன்றைய மிலேனிய யுகத்து மனிதன் மார்புதட்டி எழுச்சியுடன் இயந்திரகதியில் இயங்கிக் கொண் டிருக்கும் கணனி யுகம் இது. விலங்குகளோடு விலங்குகளாகத் தம்மையே யார் என்று தெரியாது தம்மை மறந்து நடைபயின்றது கற்காலம். ஆயினும் தற்கால நவீனத்துவ வளர்ச்சிப் பின்னணியில் பூகோள மயமாக்கலு டன் தொழிநுட்ப வளர்ச்சியின் உயர் செயற்பாட் டுத் தள விரிவாக்கத்தின் பிரதிபலனால் வேட்டுப் பரம்பரை இன்று செவ்வாய்க் கிரகத்தை ஆய்வு செய்யப் புறப்பட்டு விட்டது.

மாற்றங்கள் நிலையாது மாறுகின்ற உலகினிலே மானிடனின் மாற்றத்தை ஏற்றுக் கொண்டு காலநீரோட்டத்தில் கங்கு கரை தெரியாமல் துரித முன்னேற்றம் கொண்டுள் ளான். வளர்ச்சியடைந்த இன்றைய சமுதாயம் இணையப் பயன்பாட்டின் வாயிலாக தம் பல்வகைத் தேவைகளையும் நிவர்த்திக்க முடிவதால் மின்னியல் உலகில் தன்னிகரில்லா இடத்தினை இணையம் பெற்றுவிட்டது எனலாம்.

இன்றைய தகவல் தொழில் நுட்ப உலகிலே அயல்மொழியாகிய ஆங்கிலமே கோலோச்சிவரும் நிலையிலும் நம்மவர்கள் புலம்பெயர்ந்து வேற்று நாடுகளில் வேற்று மொழிகளுக்குரியவர்களாக மாறிச் செல்ல பாரதியாரின் கூற்றுப்படி மேற்கு மொழிகள் தான் அவனியில் ஓங்குமோ என்ற பயம் உள்ளத்தில் ஏற்படுகின்றது. ஆயினும் தமிழ் ஆர்வலர்களின் உளத்தில் எழுந்த அச்சத்தைப் போக்கும் முகமாக அன்று ஏடுகளிலும், ஓலைச் சுவடிகளிலும் மாத்திரம் அடைபட்டுக் கிடந்த எம் சங்கத்தமிழ் இன்று புதியதோர் பரிணாமம் பெற்றுப் பரிமளிப்பதைப் பார்க்கின்றோம். என்ன விந்தை, இலக்கணத்துடன் கூடிய இயற் றமிழ், இசையுடன் கூடிய இசைத்தமிழ், அபி நயத்துடன் கூடிய நாடகத்தமிழ் என முத்தமிழாகி மிளிர்ந்தவள் இன்று புதிய பரிணமிப்போடு அறிவியற் தமிழ், கணனித் தமிழ், இணையத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் என்ற பல்துறை வளர்ச்சிகளை நோக்கு கின்ற போது பாரதியாரின் கூறியது போல "மெல்லத் தமிழ் இனிச் சாகும் அந்த மேற்கு மொழிகள் அவனியில் ஓங்கும்" என்ற நிலை எம் தாய் மொழிக்கு நேராது என்று நம்ப முடிகின்ற தல்லவா? நன்னூலார் கூற்றுப்படி இன்றைய கணனியுலகிலே இணையத்தில் தமிழ் இரண்டறக் கலந்துள்ளது. கடந்த 2011 ஆம் ஆண்டுவரை பத்து இணையத்தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளமை யாமறிந்ததே. இணைய மாநாடுகள் நாடுகள் தோறும் இடம்பெறுவதால் பல்வேறு நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ் அறிஞர்கள். தமிழர் அல்லாத தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள் ஒன்றுகூடி தமிழ் மொழி பற்றி ஆராய்வதோடு, ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக் கப்படுகின்றன. இவையாவும் ஒட்டுமொத்த மாகத் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அருந்துணை புரிவனவே.

பல்வேறு நாடுகளிலும் தமிழில் கணனி, விசைப்பலகை போன்றனவும் உருவாக்கப் படுவது வரவேற்கத்தகுந்ததே. கூடவே இன்றைய நாட்களில் கணனி சார்ந்தவர்களின் மிக முக்கிய மான பொழுதுபோக்கு வழியாக இருப்பவை சமூக வலையமைப்புக்களாகும். இவை பொழுதுபோக்கம்சமாக மட்டுமன்றி ஒரு குறிப் பிட்ட துறைசார்ந்தவர்களிடையே ஒன்றிணைக் கும் ஒரு ஊடகமாகவும் இவை திகழ்கின்றன. இவ் சமூகவலையமைப்புக்களிலும் இன்று நிறையவே தமிழ் விடயங்கள் இலத்திரனியல் வடிவமாக்கப்பட்டு பகிரப்பட்டு வருவது கண்கூடு.

இவை தவிர இன்று இலங்கையில் ஏராளமான கணனி சார் சஞ்சிகைகள், புத்தகங் கள் போன்றன தமிழில் வெளிவந்து கொண் டிருக்கின்றதுடன் பல கணனி சார்ந்த இணையக் குழுக்களும் இன்று ஆரம்பிக்கப்பட்டு வருவது பாராட்டத்தகுந்த விடயமாகும். இவற்றையெல் லாம் பார்க்கும் போது "வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து….." என்றுரைக்கப்படும் தமிழ் உலகு இன்று கணனித் தமிழலகாகி பாரெங்கும் பரந்துள்ளது.

"காலம் என்பது கறங்கு போற் சுழன்று மேலது கீழாய், கீழது மேலாய் மாறி வருவதோர் தோற்றம்" என்ற அறிஞர் கருத்துக்கிணங்க எமது தாய் மொழியாம் தமிழும் நமது மரபுகள், பாரம்பரியங்கள் சிலவற்றை வேற்றுமொழித் தாக்கங்களினால் இழந்தாலும் காலந்தோறும் புதுமைகளை ஏற்று இன்று இணையத்தமிழாக புத்துயிர் பெற்றுள்ளது.

நமது தாய்மொழியாகி நம் வாழ்வில் சகல நிலைகளிலும் கலந்துள்ள தமிழை மேலும் மெருகேற்ற வேண்டியது. நம் ஒவ்வொருவரதும் தலையாய கடமை.

**"ஓடையிலே என் சாம்பல் ஓடும்போதும்**
**ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்…"**

என்று பாடிய நம்நாட்டுப் பாவலர் "பாடையிலே நான் ஊர்ந்து போகும்போதும் பைந்தமிழே நான் படித்துச் சாக வேண்டும்" என்று அவாவுற்றார் பாருங்கள்! எது எப்படியா யினும் தன்னை ஒப்பாரும், மிக்காரு மின்றி தன்நிகரில்லாத் தமிழன்னையைக் கன்னித் தமிழாய் காண்பதில் எத்தனையின்பம்……


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாகரீகம் மிக்க நாகர்கள் சைவசமயத்தின் மீது பேரபிமானங் கொண்டவர்கள்

பேராசிரியர் கலாநிதி சி. பத்மநாதன்

### 1.1 இலங்கையில் தமிழர் பிரதேசங்கள்

**ப**தினேழாம், 18ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் சேவை புரிந்த ஐரோப்பிய அதிகாரிகளும், வரலாற்று ஆசிரியர்களும் இலங்கையின் சமுதாயங்களைப் பற்றிச் சில சமங்களிலே தெளிவான உறுதியான குறிப்புக் களை எழுதியுள்ளன.

இலங்கையில் ஒல்லாந்தர்களின் வசமாக இருந்த பிரதேசங்களை ஆங்கிலேயர்கள் போர் புரியாது இரத்தம் சிந்தாது பெற்றுக் கொண்டார் கள். பிரெஞ்சுப் புரட்சியாளர்கள் ஒல்லாந்து நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அங்கு வற்றேவியக் குடியரசு என்ற அமைப்பை உரு வாக்கினார்கள். அரசன் அங்கிருந்து இங்கி லாந்துக்கு ஓடிவிட்டான். இலங்கைப் பிரதேசங் களை இங்கிலாந்துக்கு ஒரு உடன்படிக்கை மூலம் வழங்கினான். 1976ஆம் ஆண்டின் இந்தியாவிலுள்ள பிரித்தானியரின் கொம்பனி அரசாங்கம் இலங்கைப் பிரதேசங்களை பொறுப் பேற்றுக் கொண்டது.

அதன் பின்பு பிரித்தானியா, ஒல்லாந்தர் வசமிருந்த பிரதேசங்களின் நிர்வாகம், நீதி பரிபாலனம் என்பன தொடர்பான ஒரு அறிக்கை யினை கிளைக்கோர்ண் (Cleghorn) என்பவரிட மிருந்து பெற்றுக்கொண்டனர். அவர் கொழும்பி லுள்ள ஒல்லாந்தர்களின் ஆவணச் சுவடிகள் நிலையத்திற்குப் பொறுப்பாக இருந்தவர். அம்ஸ்ரடாம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். அதீதமான கல்வித்தகைமை யுடன் நிர்வாக சேவையில் அனுபவமும் கொண் டிருந்தார்.

இலங்கைத் தீவின் குடியானவர்களைப் பற்றிச் சொல்லும்போது, இரண்டு தேசிய இனங் களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். சிங்களவர், தமிழர் குறித்து அவர்களை அவ்வாறு வர்ணிக் கின்றார். புராதன காலம் முதலாக இலங்கையில் இரண்டு தேசிய இனங்கள் வாழுகின்றன. தென்மேற்குக் கரையோரங்களிலும் மத்திய பகுதியிலும் வாழ்பவாகள் சிங்களவர் என்றும், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மாவட்டங்களில் வாழ்பவர்கள் தமிழர்கள் என்றும் குறிப்பிடுகின் றார். ஒல்லாந்த அதிகாரிகளின் ஆவணக் குறிப்புக்களின் அடிப்படையைக் கொண்டும் அக் காலத்தின் சனத் தொகையின் அடிப்படையில் அவர் இவ்வாறு இரு தேசிய இனங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

கரொய்டர் என்பவர் 1960இல் எழுதிய இலங்கை நிர்வாகம் பற்றிய விபரமான அறிக் கையில் இதே போன்ற கருத்தைக் குறிப்பிட்டுள் ளார். இலங்கையில் ஒல்லாந்தர் வசமுள்ள பிரதேசங்கள் இரு வெவ்வேறான பிரிவுகளைக் கொண்டுள்ளன என்றும் ஒன்றிலே சிங்களவ ரும் அதாவது தென்மேற்கிலே சிங்களவரும் வடகிழக்குப் பகுதியிலே தமிழரும் வாழ்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். கிழக்குப் பிராந்தியத்தில் நிர்வாக அதிகாரிகளாக இருந்த ஒல்லாந்தர்கள் அப்பகுதியில் வாழ்ந்த மக்க ளைப் பற்றிச் சொல்லும் விபரங்களும் கிளெ கோர்ன் கூறுவதை உறுதிப்படுத்துகின்றன. ஃபான் செண்டெல் (Van Sendel) என்ற திரு கோணமலைக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரி 1786இல் தினக்குறிப்புப் பதிவேடு ஒன்றை எழுதியுள்ளார். அவர் திருகோண மலைப்பற்று, தம்பலகாமம் பற்று, கொட்டியாரம் பற்று, காட்டுக்குளம் பற்று ஆகிய நான்கு பிரிவு களிலும் உள்ள ஊர்களுக்குச் சென்று அங்குள்ள குடியானவர்கள், இயற்கைவளம், வயல்நிலங் கள், தோப்புகள், கைத்தொழில்கள் முதலானவற் றைக் குறித்த விபரங்களை எழுதியுள்ளார். இந்த நான்கு பிரிவுகளிலும் அடங்கிய கிராமங்களில் தமிழரும் முஸ்லீம்களுமே வாழ்ந்தனர் என்று அவர் குறிப்பிடுகின்றமை கவனத்திற்குரியது. குடியானவர்களில் வேறெந்த இனத்தவர்களும் அடங்கியிருந்ததாக அவருடைய பதிவேட்டில் ஓர் இடத்திலாவது சொல்லப்படவில்லை. திரு கோணமலை நகரப் பற்று தவிர்ந்த ஏனைய மூன்று பற்றுகளிலும் பரம்பரையாக ஆட்சி யுரிமை பெற்றிருந்த வன்னியர்களைப் பற்றி அவர் குறிப்பிடுகின்றார். அவர் இந்த ஊர்களுக் குச் சென்றபோது இந்த மூன்று பற்றுகளிலும் பதவியில் இருந்த வன்னியர்களின் பெயர்க ளைக் காணலாம்.

திருகோணமலை போலவே மட்டக் களப்புப் பகுதியிலும் ஒரு தனியான நிர்வாக அலகை ஒல்லாந்தர் உருவாக்கியிருந்தனர். வழமைப்படி மட்டக்களப்பு தொடர்பாக மேஜர் புர்நாட் (Major Bournard) ஒரு விரிவான அறிக்கை எழுதியுள் ளார். அதிலே அப்பிரதேசத்து நிர்வாக பொருளா தார, சமூக விடயங்கள் பற்றி மிக விரிவான குறிப்புகள் அமைந்துள்ளன. தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகிய இருசாரார் மட்டுமே அங்கு வாழ்ந்த குடியானவர்கள் என்று சொல்லப் படுகின்றது.

ஸ்கொட்லாந்தில் பிறந்தவரான ரொபேட் நொக்ஸ், கண்டி இராச்சியத்திற்கு வந்திருந்த சமயத்தில் அரசாங்கம் அவரைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருந்தது. பல்லாண்டு கள் அவர் இவ்வாறு காலம் கழித்ததால், சிங்கள மொழியையும், கண்டிச் சமுதாயத்தையும் அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் சிறையிலிருந்து இரகசியமாக வெளியேறி, வடக்குப் பக்கமாகப் பிரயாணம் செய்து நுவரகலாபியாவை அடைந்தார். அங்கிருந்து வடக்கு நோக்கிச் சென்றபோது சிங்கள மொழி யினைப் புரிந்து கொள்ள முடியாத சமூகத்த வரை எதிர்நோக்கினார். ஒரு சமயம் அவருக்கு அச்சம் ஏற்பட்டது. தன்னைக் கைப்பற்றிக் கண்டி அரசனிடம் அனுப்பிவிடுவார்களோ என்ற ஏக்கம் உண்டானது. ஆனால் அவர் நினைத்ததற்கு மாறாக அவர் தப்பி ஓடுவதற்கு அவர்கள் உதவி புரிந்தார்கள்.

ரொபேட் நொக்ஸ் தமிழ்மொழி பேசப் படுகின்ற தமிழர் தேசம் பற்றித் தனது நூலிற் குறிப்பிடுகின்றார். குருத்து ஓயா என்கின்ற ஆறு கண்டி இராச்சியத்துக்கும் இந்த தமிழ்தேசம் என்பதற்கும் எல்லையாக அமைந்தது என்றும் குறிப்பிடுகின்றார். குருத்து ஓயாவைக் கடந்து வடக்கு நோக்கிச் செல்லும்போது அவர் தமிழர் வாழும் விவசாயக் கிராமமொன்றை அடைந் தார். அங்கே அவர்கள் விவசாயத்திற்குப் பயன் படுத்தும் காளைகளையும், வண்டிகளையும் பார்த்தார். இவர் சென்றபோது அங்குள்ள புலோக்களிலே குரக்கன் விளைந்திருந்தது. அங்குள்ளவர்களால் சிங்களமொழியைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் அவர் குறிப்பிடுகின்றார். வேறொரு இடத்திலே அவர் தமிழர்தேசம் என்று குறிப்பிடும் நிலப்பிரிவைக் கைலாய வன்னியன் நாடு என்று வர்ணிக்கின் றார். அவர் வடக்கிலுள்ள தமிழர்வாழும் வன்னிப்பிரதேசத்தைக் கைலாய வன்னியன் காடு என்று சொல்கிறார் என்பது தெளிவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்டபோது கைலாய வன்னியன் அவர்களுக்கு அடங்காமல் சுதந்திரமாகத் தனது பற்றுக்களைப் பரிபாலனம் செய்தான். பிற வன்னியர்கள் அவரைத் தமது தலைவராக ஏற்றுக்கொண்டதன் காரணமாகவே வன்னிநாடு, கைலாய வன்னியன் நாடு என்று 17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர்களாற் குறிப்பிடப் பட்டுள்ளது. வன்னியர்கள் போர்த்துக்கேயருக் குப் பின்பு ஒல்லாந்தர்களுக்கும் அடங்கிவிடாது கிளர்ச்சி புரியும் வழக்கம் உடையவர்கள். இதன் காரணமாகவே "அடங் காப்பற்று வன்னி" என்று வர்ணிக்கப்பட்டது. மேற்கிலும் கிழக்கிலும் கடல்வரை பரந்திருந்த வன்னிநாட்டை அடங் காப்பற்று என்றனர். அங்கே கைலாயவன்னி யனுக்கு பின்பு அததி மாபாணன், நல்ல மாப்பாணன், சேனாதிராய முதலியார், பண்டார வன்னியன் என்னும் பிரபல மான வன்னியர்கள் வெவ்வேறு காலங்களில் அதிகாரம் செலுத்தி னர். வன்னி நாட்டில் பனங்காமம் கரிக்கட்டு மூலை, கருநாவல்பற்று, மேல்பத்து, முள்ளிய வளை, தென்னமரவாடிப் பற்று, செட்டிகுளம் பற்று எனும் ஏழு பிரிவுகள் இருந்தன. இவை ஒவ்வொன்றையும் வன்னியம் என்ற பட்டம் பெற்ற தலைவர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் முடிசூடிக்கொள்வதில்லை. நாணயங்களை வழங்கவில்லை. மற்ற எல்லா அம்சங்களிலும் அரசருக்குரிய அதிகாரங்களைப் பெற்றிருந்த னர். நிர்வாகம், நீதிபரி பாலனம், ஆலய பரி பாலனம், வேளாண்மை முதலான துறைகளில் அவர்கள் அதிக அதிகாரம் கொண்டிருந்தனர். அதேபோல மட்டக்களப்பிலும் வன்னியரின் ஆட்சி பூர்வகாலம் முதலாக நிலைபெற்றிருந் தது. வெருகல் ஆறு முதலாக பாண்மை வரையான சுமார் 150 மைல் நீள முடைய நிலப்பரப்பைக் கொண்டது. முற்காலத்து மட்டக் களப்பு தேசம் அது எழுவான் கரை, படுவான் கரை என்ற பிரிவுகளைக் கொண்டது. நடுவிலமைந்த ஏரியின் காரணமாக இந்தப் பாகுபாடு அமைந்தது. அங்கே ஏறாவூர், மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, சம்பாந்துறை, நாடுகாடு, பாணமை என்ற குறுநிலப்பிரிவுகளைப் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், நாட்டார் பாடல், ஆலயங்களில் படிக்கும் பாடல்கள், ஐரோப்பியர் எழுதிய ஆவணங்கள் என்பவற்றின் மூலமாக அறிய முடிகிறது. அங்கு அதிகாரம் செலுத்தியவர்கள் குறுநில மன்னர்கள் என்று வருணிக்கப்படுகின் றனர். ஆயினும் ஒல்லாந்தர் காலத்து ஆவணங் கள் சிலவற்றில் இவர்களை "அரசர்" என்றும் அவர்களின் ஆட்சிப்புலங்களை இராச்சியங்கள் என்றும் குறித்துக் கொண்டனர். முற்காலங்களில் இவர்கள் சுதந்திரமாக இருந்தார்கள் என்று கண்டி மன்னனின் மேலாதிக்கம் ஏற்பட்டது என்றும் பர்ணண்ட் குறிப்பிடுகின்றார். கண்டி மன்னரின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்த காலத் தில் மட்டக்களப்புத் தேசம் என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. சில சமயங்களில் அதனை முக்குவர் தேசம் என்றனர். வன்னியர்களிற் சிலர் முக்குவர் சமூகத் தலைவராக இருந்தனர். மட்டக் களப்புத் தேசத்தில் வேளாண்மை முறை, சமுதாய அமைப்பு என்பன தனிப்பண்புகள் உடையவை. இவற்றிற்குரிய மரபுகள் இலங்கை யில் வேறெங்கும் காணப்படாதவை. வன்னியர் படைபலமும், அதிகாரங்களும் மட்டக்களப்புத் தேசத்து வன்னியர்களின் சுயாட்சி உரிமையின் அடிப்படையில் பிரதேசத்து நிர்வாக அதிகாரம் பெற்றிருந்தனர். அவர்களுக்கு உரித்தான பற்றுக்களின் நிர்வாகம், நீதிபரிபாலனம், வரி சேகரித்தல், வேளாண்மை, ஆலய பரிபாலனம் முதலானவற்றில் அவர்கள் அதிகாரம் கொண்டி ருந்தனர். யானை, தேன், மெழுகு ஆகியவற் றைச் சம்பிரதாயபூர்வமாக அரசனுக்குத் திறை யாகச் செலுத்த வேண்டும். போர் ஏற்படும் காலங்களில் அரசனுக்கு ஆதரவாகப் படைத் துணை வழங்க வேண்டும். அதுமட்டுமன்றிப் பல சமயங்களில் அரச படையின் தலைவர்களாக வன்னியர்கள் கடமையாற்றியதாக அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசதானியில் குழப்பமும் தகராறும் ஏற்பட்டபோது சில சமயங்களில் ஒரு சாராரு க்கு ஆதரவு வழங்க நேர்ந்தது. விமலதர்மனுக் கும் ஜெயவீரபண்டாரனுக்கும் இடையே போர் ஏற்பட்டபோது மட்டக்களப்புத் தேசத்து வன்னி பங்கன் ஜெயவீரபண்டாரனுக்கு ஆதரவாக அனுப்பியிருந்த படைகளின் விபரங்களைப் பிலிப்பூஸ் போல்ட் (Phillippus Baldacus) வர்ணிக்கின்றார். பல்லாயிரக் கணக்கான போர்வீரர்களையும் அலியன் யானைகளையும் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கான வண்டி களையும், காளைமாடுகளையும் இவர்கள் அனுப்பியதாகச் சொல்லப்படுகின்றது. தமது பிராந்தியங்களில் சுயாட்சி அதிகாரம் பெற் றிருந்ததோடு, கிழக்கிலங்கை வன்னியர்கள் இராசதானியிலும் இராட்சிய அதி முக்கியமான விடயங்கள் தொடர்பாக நடந்த ஆலோசனைக் கூட்டங்களிலும் பங்குபற்றினார்கள். அயல் நாட்டவரோடு மேற்கொள்ளப்போகும் போர் நடவடிக்கைகள், உள்நாட்டுக் கலகங்கள் தொடர்பான விடயங்கள் ஆளும் அரசனுக்குப் பின்பு அவனுடைய வாரிசை நிர்ணயித்தல் போன்ற விடயங்களைப் பிரதானிகளோடு கலந்து ஆலோசனை நடத்திய பின்னரே அரசன் தீர்மானிப்பான். இவ்வாறான கூட்டங்களில் சிங்களப் பிரதானிகளோடு கிழக்கிலங்கைத் தமிழ்ப் பிரதானிகளும் கலந்து கொள்கின்றமை குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியதாகும். ஒரு சமயத்தில் மட்டக்களப்பு வன்னிபம் குமார பண்டாரம், பழுகாமத்து வன்னிபம், செல்லப் பண்டாரம், போரதீவு வன்னிபம், தர்மசங்கரி, பாண்மை வன்னிபம் சமரவாய் முதலானவர் இராசதானியில் நடைபெற்ற கூட்டத்தில் பிரசன்னமாய் இருந்தார்கள்.

ஒல்லாந்து நாட்டைச் சேர்ந்தவரான ஸ்பில்பேர்கன் (Spilhergen) 17ஆம் நூற்றாண் டின் ஆரம்பத்தில் வந்திறங்கி, கண்டி இராச்சியம் சென்றான். மட்டக்களப்பில் இறங்கியபொது அங்கு தர்மகங்காதரன் வன்னியமாக விளங்கி னான். அவனுடைய நிர்வாகத்துக்குப் பொறுப் பாக இருந்த முதலியார் ஒருவர் கடற்கரைக்குச் சென்று ஸ்பில்பேர்கனைச் சந்தித்தார். இரு சாராரும் பரிசில்களைப் பரஸ்பரம் வழங்கி விட்டு அடுத்தநாள் வன்னிபத்தின் ஏற்பாட்டினால் ஸ்பில்பேர்கனுக்கும் கப்பலில் வந்தவர்களுக் கும் விருந்துபசாரம் நடைபெற்றது. அவர்களை வரவேற்கும் வண்ணமாக மூன்று யானைகள் கால்களை மடக்கி மரியாதை செய்தன என்று சொல்லப்படுகின்றது. வன்னிபத்தைச் சுற்றி 400 வாட்படையினர் வந்திருந்த ஐரோப்பியர் களுக்கு மரியாதை செய்தார்கள். அதன் பின்னர் அதனை அடுத்த நாட்களில் வன்னிபத்தின் ஆதரவோடு ஒல்லாந்தர் கண்டி இராசதானிக்குச் சென்றனர்.

### 1.2 தமிழர் குடியேற்றம்

இலங்கையில் பழைய கற்காலம், குறுணிக் கற்காலம் என்பவற்றைச் சேர்ந்த பண் பாடுகளே மிகவும் புராதனமானவை. பழைய கற்காலத்து மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்குக் கல்லி னால் அமைந்த கருவிகளைப் பயன்படுத்தினார் கள். பல்லாயிரம் ஆண்டுகள் இவர்கள் இலங்கை யில் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவர்களை அடுத்து குறுணிக் கற்காலத்து மக்கள் தோன்றினர். அவர்கள் சிறிய அளவிலான கூரிய கற்களை எலும்புகளிலோ, மரத்துண்டுகளிலோ பொருத்தித் தமது தேவைகளுக்குப் பயன் படுத்தினர். அவை மணற் பாங்கான, கிளறி கிழங்குகளை எடுப்பதற்கும், காய்கனிகளை வெட்டுவதற்கும், விதைகளை உடைத்து உண்பதற்கும் பயன்பட்டன. சிற்றாறுகளிலும், ஆறுகளிலும் கடற்கரையிலும் பிடிக்கக் கூடிய மீன்களையும், முயல் காட்டு ஆடுகள் போன்ற சிறிய மிருகங்களைப் பிடித்து அவற்றை உரித்து மாமிசத்தைத் துண்டமாக்குவதற்கும் பயன் படுத்தினார்கள். இராக்காலத்திலும் மழை, குளிர் ஆகியவற்றிலிருந்தும் கொடிய மிருகங் களில் இருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வ தற்கும் குகைகளில் வசித்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்சம் இலங்கையின் புராதன குடிக ளாக இயக்கரையும், நாகரையும் குறிப்பிடுகின் றது. தமிழர் வரலாறு பற்றிய நூல்களில் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலும் இயக்கர், நாகர் என்போரை இலங்கையின் ஆதி வாசிகளாகக் கொள்கின்றது. நாகரீகமடையாத ஆதிவாசிகளை இந்நூல்கள் இயக்கர் என்று குறிப்பிடுகின்றனர். அவர்களைக் காட்டிலும் "நாகர்" மிகவும் முன்னேற்றம் அடைந்துள்ளார் கள் போலத் தெரிகின்றது.

இலங்கையிற் காணப்படும் 2000 திற்கும் அதிகமான பிராமிச் சாசனங்களில் நாகரைப் பற்றிய குறிப்புக்கள் மிகுந்து காணப்படுகின்றன. மகாவம்சம் குறிப்பிடுகின்ற புராதன அரசர்களிற் பலர் நாகவம்சத்தினர், இளநாகன், குஞ்சநாகன், கல்லாட்டா நாகன், மகல்லக நாகன் முதலான அரசர்கள் நாகர் என்று சொல்லப்படுகின்றது.

இலங்கையின் வடக்கில் அமைந்த யாழ்ப்பாண தீபகற்பமும் அதனோடு இணைந் திருக்கின்ற பெருநிலப்பகுதியும், முற்காலத்தில் "நாகதீபம்" என்று குறிப்பிடப்பட்டது. அங்கு நாகர்கள் வாழ்ந்தனர் என்று மகாவம்சத்திலும் குறிப்புகள் உள்ளன. நாகர்கள் இலங்கையின் வேறு பகுதிகளிலும் வாழ்ந்தனர். மேற்குக்கரை யோரம், கிழக்குக்கரையோரம், வடமத்தியபகுதி முதலானவற்றிலும் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்குப் பல ஆதாரங்கள் உண்டு.

தென்கிழக்கு இலங்கையில் அண்மைக் காலத்திற் கண்டெடுக்கப்பட்ட நாணயம் ஒன்றில் "திசபுரதாட்ட நாகராசன்" என்ற வாசகம் எழுதப் பட்டுள்ளது. நாகரிற் சிலர் பிராகிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற் றிருந்தனர் என்பதை இந்த வாசகம் உணர்த்து கின்றது.

இலங்கையின் பூர்வ குடிகளான நாகருக் கும், தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்திருத் தல் வேண்டும். பழந்தமிழ் நூல்களில் அடங்கிய பாடல்களின் ஆசிரியர் பலர் "நாகனார்" என்ற பெயரால் வழங்கினர். அங்கு பல இடப் பெயர் களும் "நாகர்" என்ற சொல்லோடு தொடர்புடை யனவாகக் காணப்படுகின்றன. புராதன காலத் தில் "நாகர்" எனப்படு வோர் பரத கண்டத்தின் பல பாகங்களிலும் பரவியிருந்தனர். கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலத்தில் மத்திய இந்தியாவில் "நாக" என்ற பெயருடைய குலத்தவர் பலர் அரச பதவி பெற்றிருந்தனர். அதுமட்டுமன்றி அவர்களுடைய சாசனங்களிற் சைவ சமயத்தின் மீது நாகர் அபிமானம் கொண்டுள்ளனர் என்பதையும் அறிய முடிகின்றது. நாகருடைய தொடர் இலங் கையில் எவ்வாறு ஏற்பட்டது என்பது இன்னமும் சரியாக விளக்கப்படவில்லை. "நாகர்கள்" தமிழ் மொழி பேசினார்கள் என்ற கருத்து இலங்கை யிற் சில தொல்லியல் ஆய்வாளர்களினால் முன் வைக்கப்படுகின்றது. இது வருங்கால ஆராய்ச்சி களின் மூலமாகவே தெளிவாக்கம் பெறும்.

நாகர்களுக்கும், தென்னிந்தியாவில் வழங்கி இலங்கையிற் பரவிய பெரும்கற்படைப் பண்பாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று கருதப்படுகின்றது. இலங்கை வரலாற்றில் பெரும் கற்படைக் காலப்பண்பாடு பரவியதன் விளைவாக நாகரீக வளர்ச்சி ஆரம்பமாகியது. இந்தப் பண்பாட்டின் செல்வாக்கு கிறிஸ்துவுக்கு முன் 5ஆம் நூற்றாண்டளவில் ஏற்பட்டது எனக் கருதலாம். பெரும் கற்படைக் காலப் பண்பாடு என்பது தென்னிந்தியாவில் கி.மு. ஆயிரமாம் ஆண்டளவில் ஆரம்பமாகிப் பரவியதொன் றாகும்.

அது கர்நாடக தேசத்திலிருந்து தெற்கு நோக்கிப் பரவித் தமிழகத்திலும், கேரளாவிலும் ஆந்திர தேசத்தின் சில பாகங்களிலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியது. இப் பண்பாட் டைச் சேர்ந்த மக்கள் இரும்பின் உபயோகத்தை இப்பகுதிகளில் அறிமுகம் செய்தார்கள். தமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ழகத்திலும், இலங்கையிலும், கர்நாடகத்திலும் பழக்கத்திலுள்ள கத்தி, ஈட்டி, வாள் முதலிய கருவிகள் பெருமளவிற்கு வடிவமைப்பிலும் அளவிலும் பெரும் கற்படைக் காலத்தில் ஈமக் கல்லறைகளிற் கண்டெடுக்கப்பட்டனவற்றை ஒத்துள்ளன.

பெரும் கற்படைக் காலத்துப் பண்பாட்டு அம்சங்களை அவர்களின் ஈமக்கல்லறைகள் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. அவர்கள் பலவிதமான ஈமச்சடங்குகளை வேறு வேறு கோலங்களில் அமைத்த கல்லறைகள், தாழிகள் போன்றவற்றில் பயன்படுத்தியுள்ளனர். பதுக்கை, கல்திட்டை, கல்வட்டம், குடைக்கல், ஈமத்தாழி, ஈமப்பேழை என்பன அவர்களாற் பயன்படுத்தப் பட்டுள்ளன. அத்துடன் சில கல்லறைகளின் அண்மையில் நெடுநிலை என்று சொல்லப்படும் மிக உயரமான நடுகற்கள் காணப்படுகின்றன. இப்பண்பாட்டினுடைய அடையாளங்களாக அமைவன இரும்புக் கருவிகள், கருஞ் செம்மண் கலங்கள் ஆகியனவாகும். அவர்கள் கல்லறை களிலே இறந்தோரின் சடலங்களைச் சில சமயம் முழுமையாகப் புதைத்தனர்.

சில சமயங்களில் ஈமத்தாழிகளில் சடலங் களை வைத்து அவற்றைப் புதைத்தனர். இறந்த வர்களின் சமுதாய நிலைக்கேற்ப, சடங்குகளில் வேறுபாடுகள் ஏற்பட்டன. தலைவர்கள், வீரர்கள் இறக்குமிடத்து வாள்களை வைத்து அவற்றின் மேல் சடலத்தை வைத்தார்கள். தலை மக்களின் சடலங்களைப் புதைத்த இடங்களிலே நெடு நிலை அல்லது நடுகற்களை நிறுத்தினார்கள். இந்தப் பண்பாடு பரவியதன் காரணமாகக் கிராமிய வாழ்க்கை உற்பத்தி முறை என்பன வளர்ச்சியடைந்தன. ஈமக்காடுகளுக்கு அண்மை யில் அமைந்த சில குடியிருப்புக்களில் பல்லா யிரவர் செறிந்து வாழ்ந்தனர். வேளாண்மையும், வாணிபமும் கைத்தொழில் முறைமையும் விருத்தி பெறுவதற்கு இவர்களே காரணமாயி ருந்தனர்.

இரும்புக் கருவிகளை உற்பத்தி செய்வதாற் காடுகளை அழிந்து அல்லது காடுகளை வெட்டிப் பரந்த அளவில் வயல் நிலங்களை உருவாக்கி னார்கள். பெரும்மரங்களை வெட்டிப் பெரும் கட்டிடங்களை அமைக்க முடிந்தது. கடற் பிரயாணங்களுக்கு வேண்டிய நாவாய்களை யும் அவர்களாற் செய்து கொள்ள முடிந்தது. மீன்பிடித்தொழில், நீண்ட கடற் பிரயாணங்கள் என்பவற்றிலும் ஈடுபாடு கொண்டனர்.

இந்தப் பண்பாடுடைய மக்கள் கடல் வழியாக இலங்கையை அடைந்தனர். முத்து, சங்கு முதலான கடல் வளங்களும், இரத்தினங் கள் போன்ற மலை வளங்களும், தேக்கு, முதிரை, கருங்காலி போன்ற காட்டு வளங்களும் அவர்களைக் கவர்ந்தன. தென் இந்திய அல்லது தமிழகக் கரையோரங்களில் இருந்து இலங்கை யின் கரையோரங்களுக்கு அவர்கள் சென்று குடியேறினார்கள். அவ்விதமான குடியேற்றங் களின் அடையாளங்கள் புத்தளம், மாந்தை, கந்தரோடை, கதிர்காமம், உகந்தை, கதிரவெளி, அனுராதபுரம் போன்ற இடங்களிற் கிடைத்துள் ளன. இலங்கையில் இன்னும் வேறு பல இடங்களிலும் அவை காணப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் அதற் கண்மையில் உள்ள தீவுகளிலும் முதன் முத லாகக் குடியேறியவர்கள் தமிழகத்தில் இருந்தும் சென்ற பெருங்கற்படைக்காலத்து மக்கள் என்பது இப்பொழுது தெளிவாகியுள்ளது. அங்கு பழைய கற்காலத்தவர்களும், குறுணிக் கற்காலத் தவர்களும் வாழ்ந்தமைக்குச் சான்று இல்லை. இரும்பு ஆயுதங்களால் நிலத்தை வெட்டிக் கிணறுகளை அமைத்து நீரைப் பெற்றுக் கொள் ளும் ஆற்றல் கொண்டிருந்ததனாற் பெரும் கடற் படைக்கால மக்கள் அங்கு குடியேறினர்கள். இலங்கையின் வடமேற்கிலும் கிழக்கிலும் பரவிய அம்மக்கள் அங்கு வாழ்ந்த குறுணி கற்காலச் சமுதாயத்துடன் இணைந்து விட்டனர். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் வாழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுணிக்கால மக்கள் பெருங்கற்பாலப் பண்பாட்டின் அம்சங்களை அறிந்து அவற்றைத் தாமும் பின்பற்றினார்கள். இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ்பேசும் மக்களின் மூதாதையர்கள் இந்தப் பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியிருப்புக்களை ஏற்படுத்தி வேளாண்மை, மந்தை வளர்ப்பு, உலோகத் தொழில், மீன்பிடித் தொழில், வாணிபம், மரத் தொழில் முதலான தொழில்களில் விருத்தியடைவதற்கும் அவர்களும் அவர்களின் பிற் சந்ததியினரும் ஏதுவாக இருந்தனர். இலங்கைத் தமிழ்ச் சமுதாயம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட உற்பத்தியைக் கொண்டது என்பது இப்போது தொல்லியற் சான்றுகளாற் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்திலும், வடக்கு வன்னிப் பிரதேசங்களிலும், கிழக்கிலங்கையிலும் அமைந்த குடியிருப்புக்கள் சிறு இராச்சியங்களாக இயங்கின. காலப்போக்கில் அவை இணைந்து கொண்டதனால் அப்பிரதேசங்களில் மத்திய காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன. வன்னி இராச்சியங்கள் எல்லாம் கி.மு. காலத்துச் சிற்றரசுகளை மூலமாகக் கொண்டவை. அவை தொடர்ச்சியாக நிலைபெற்றிருந்தன. அநுராதபுரம், பொலநறுவை ஆகிய இராசதானிகள் காலத்திலும் அவை நிலைபெற்றிருந்தன.

மகாவம்சம் துட்டகாமினியினுடைய வடக்கை நோக்கிய படையெடுப்பை வர்ணிக்கும்போது தென்கிழக்கிலங்கையி லேயே அவன் 32 தமிழ் அரசர்களை வென்று அடக்கிவிட்டு முன்னேறிச் சென்றான் என்று சொல்கின்றது. வேறும் ஒரு நூல் இந்தக் குறிப்பைக் குறிப்பிடுகின்றது. "சீகளவத்துப்பஹரண" என்பது அந்நூலாகும். இந்தக் குறிப்பை நவீனகால இலங்கை வரலாற்றிலே மறைத்து விட்டார்கள். சிற்றரசர்கள் அல்லது குறுநில மன்னர்கள் தனியாகவும், கூட்டாகவும் வன்னி என்று சிறப்புப் பெயரால் குறிப்பிடுவது வழக்காகியது. நெடுங்காலமாக நிலைபெற்றுவந்த குறுநிலப் பிரிவுகளை ஒரு காலகட்டத்தில் இவ்வாறு குறிப்பிடத் தொடங்கினார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலே தமிழ் பேச்சு மொழியாக வழங்கியமைக்கு ஆதியான பிராமிச் சாசனங்கள் ஆதாரமாகும். அவற்றிலே தமிழரைப்பற்றியக் கூறப்படுகின்றது. அநுராதபுரம், பெரிய புளியங்குளம், திருமலையில் உள்ள சேருவில, அக்கரைப்பற்றிலுள்ள குடுவில் ஆகியவற்றில் கிடைத்த ஐந்து பிராமிச்சாசனங் களில் தமிழரைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. அவர்கள் அனைவரும் பௌத்த சமயத்திற்கு ஆதரவு வழங்கிப்பிராகிருதப் பெயரைச் சூட்டிக் கொண்டார்கள். ஆதிகாலத்து இலங்கையில் வாழ்ந்த தமிழர் பெரும்பாலும் பௌத்தர்களாக இருந்தார்கள் என்பதற்கு இந்த ஆதாரங்களும் வேறு பல சாசனங்களும் சான்றாக உள்ளன.

அநுராதபுர சாசனம் தமிழர்களாகிய சமணர்களைப் பற்றியும், கப்பலோட்டும் தமிழர்களைப் பற்றியும், கப்பலோட்டும் தமிழர்களைப் பற்றியும் குறிப்பிடுவதோடு, இளபரத என்னும் ஒருவனையும் குறிப்பிடுகின்றது. பரதர் சமூகத்தவரையே இலங்கைப் பிராமிச் சாசனங்கள் முன்பு இளைஞரான இத்தாலிய ஆய்வாளர் ஒருவர் முன்வைத்தார். அந்தக்குறிப்பு அண்மைக் கால ஆய்வுகளினால் உறுதியாகி விட்டது.
சப்த மகா தேவியரின் பெயர்கள்

1. பிராஹ்மி
2. கௌமாரி
3. மாஹேஸ்வரி
4. வைஷ்ணவி
5. வராஹி
6. மாஹேந்திரி
7. சாமுண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் பண்பாடு : இருப்பும் சவால்களும்

பேராசிரியர் கலாநிதி கி. விசாகரூபன்
எம்.ஏ.பிஎச்டி
தமிழ்த்துறைத் தலைவர்,
யாழ் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

**த**மிழ் மக்களிடையே பன்னெடுக்காலமாகத் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு தமிழர் பண்பாட்டு வழக்காறுகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருவதனைப் பார்க்க முடிகிறது. இவ்வழக்காற்று வகைமைகள் பலவும் பல்வேறு வகையான மாற்றங்கள் அழிவுகளை எதிர்கொண்டு வருகின்றன.

உலகளாவிய நிலையில் நின்று பார்க்கும் போது இவ்வாறான சவால்கள் வெறுமனே தமிழர்பண்பாட்டு வழக்காறுகளுக்கு மட்டும் பொருந்துவதாக அமையாது உலகின் பல்வேறு இனங்களின் சுதேசியப் பண்பாடு சார்ந்த வழக்காற்று வகைமைகளுக்கும் பொருந்துவதாகவே உள்ளமை கருதத்தக்கதாகும்.

தமிழர் பண்பாட்டில் நாட்டார் பண்பாட்டு வகைமைகள் பெறும் முக்கியத்துவமான வகிபாகமானது (Role) இவ்வழக்காற்று வழமைகளைச் செழுமையுடன் தக்க வைத்துக் கொள்வது தொடர்பான புலமைச் சிரத்தையினை இது தொடர்பான ஆய்வாளர்களிடையே அண்மைக்காலமாக ஏற்படுத்தி வருகிறது. பண்பாடு, சமூகவியல் இலக்கியம் மற்றும் மானுடவியல் முதலான ஆய்வுப் புலங்களில் அடிப்படைத்தரவுகளாக அமையக்கூடிய இவ் வழக்காற்று வகைமைகள் ஒரு இனத்தின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதிலும் கணிசமான பங்கை அளிக்கக் கூடியவையாகும்.

விவரண ஆய்வு முறையியல் சார்ந்து வருகின்ற இக்கட்டுரையானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுத் தரவுகளின் வழியே இவ்வழக்காற்று வகைமைகள் எதிர் கொள்ளும் உயிர்த்துடிப்புடன் தக்கவைப்பது தொடர்பான தீர்வுகள் சிலவற்றையும் முன் வைப்பதாக அமைகிறது.

நாட்டார் வழக்காற்று வகைமைகள் என்னும் போது அவற்றுள் வாய்மொழிசார் நாட்டார் வழக்காறுகள் (Verbal Folklore) வழக்கங்கள் சார்ந்த நாட்டார் வழக்காறுகள் (Customary Folklore) பொருள்சார் நாட்டார் வழக்காறுகள் (Material Folklore) என்பன உள்ளடங்குகின்றன. மேலே குறிப்பிட்ட வகைப் பாடுகளைச் சார்ந்து வருகின்ற நாட்டார் பேச்சு முறைமைகள் மரபுவழித் தொடர்கள், வாக்கிய அமைப்புக்கள், பழமொழிகள், விடுகதைகள், பாடல்கள், இசைமரபுகள், நாட்டுப்புற நம்பிக்கைகள் நாட்டுப்புற வழக்கங்கள், விழாக்கள், நாட்டார் நடனங்கள், நாடகங்கள், சைகைகள், நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டார் கட்டடக் கலை, கைவினைப்பொருட்கள், கலைகள், ஆடைகள், உணவு நடைமுறைகள் முதலான கேள்விப்புல மற்றும் பார்வைப்புல வழக்காற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைமைகள் பலவும் இன்று வேகமாக வழக் கிழந்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

நாட்டார் வழக்காற்று வகைமைக்குச் சவால்விடுகின்ற காரணிகளாகப் பலவற்றைச் சுட்டமுடியும். பொதுநிலையில் பார்க்கும் போது சமகால அரசியல், சமூகம், பொருளாதாரம், அறிவியல், விஞ்ஞானம் மற்றும் சமயம் முதலானவற்றில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு விதமான வளர்ச்சிகள், மாற்றங்கள் முதலான வற்றை இதற்கான காரணிகளாகக் குறிப்பிட லாம். மேற்படி புலங்களில் ஏற்பட்டு வருகின்ற வளர்ச்சிகள், மாற்றங்கள் குறித்த இனத்தின் பண் பாட்டு வேர்களை, அந்த இனத்தின் தனித்துவங் களை மிகவும் பாதிப்பனவாக அமைந்து காணப் படுகின்றன. இவற்றை வருமாறு வகைப்படுத்தி நோக்க முடியும்.

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் அழிவுக்கான காரணிகளைப் பிரதானதாக இரண்டு வகையாகப்பகுத்து நோக்கலாம். அவையாவன:

1. இயற்கை அழிவு
2. செயற்கை அழிவு

மேலே சுட்டிய இரண்டு விதமான வகைப்பாடுகளுள்ளும் பல்வேறு காரணிகளைச் சுட்டமுடிகிறது.

### 1.1 இயற்கை அனர்த்தங்கள்

வழக்காறுகள் இயற்கையாக அழிந்து போதல் என்பது குறித்த விடயப்பரப்பில் நில நடுக்கம், சூறாவளி, வெள்ளப்பெருக்கு எரிமலை வெடிப்பு முதலானவை ம்க்கியத்துவம் பெறு கின்றன. இவற்றுள் எரிமலை வெடிப்புப் போன்ற சிலவகையான இயற்கை அழிவுகள் எமது பௌதீக மற்றும் புவியியல் அமைப்புக் காரண மாக எமக்குத் தொடர்பில்லாதனவாக இருக்க லாம். ஆயினும் இவை தவிர்ந்த பிற அழிவுகளுக் கான சாத்தியப்பாடுகள் நிறையவே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுனாமி (Tsunami) என்ற கடல்கோள் தொடர்பான அனுபவத்தை நாம் நேரடியாக அனுபவித்த போது அது எமது சமூக பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் ஏற்படுத்திய தாக்கங்களையும் நாம் உணர்ந்து கொண்டோம். கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலே கடல்கோளைப் பார்த்திருந்தவர்களுக்கு சுனாமியால் வடக்குக் கிழக்கின் பாரம்பரியமான பூர்வீகக் கிராமங்கள் பலவும் அவற்றின் வழக்காறுகளுடன் கழுவப் பட்டுப் போனதைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. செம்மலை, நாயாறு, முல்லைத்தீவு, பொக்கணை, மாத்தளன், தாளையடி, பருத்தித் துறை, வல்வெட்டித்துறை, நாகர்கோவில், செம்பியன்பற்று முதலான மீனவக்கிராமங்கள் பலவும் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்டன. இப் பாதிப்பு அவர்களின் சுதேசியப் பண்பாட்டு அடையாளங்களையும் விட்டு வைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவ் அனர்த்தங்களினால் வழக்காறுகள் பலவும் அவற்றைப் படைப் பொருடுன் சேர்ந்து போவது சாத்தியமாகிறது.

### 1.2 கையளிப்புக் குறைபாடு

நாட்டார் வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பாரம் பரியத்தின் கையளிப்புக் குறைபாடும் ஒரு காரணமாகும். வழக்காற்று வகைமைகள் தொடர்பான கையளிப்பை அல்லது பரிமாற லைத் தொடர்ந்து வரும் தலைமுறையினரிடம் கையளிக்க எம்முன்னோரில் பலரும் தவறி விட்டனர். சோதிடம், மருத்துவம் கைவினைக் கலைகள் மற்றும் பல்வகைக் கலைப்பயில்வுகள் முதலானவை தொடர்பான தெளிவான தகவல்க ளைத் தமது சொந்தப் பிள்ளைகளுக்கே முழு மையாகக் கையளிப்பதை எம்முன்னோரில் பலரும் திட்டமிட்டுத் தவிர்த்திருக்கின்றனர். முழுமையாகக் கற்றுக்கொடுத்தால் தமது தனித்துவம் இழக்கப்பட்டுவிடும் என்ற ஒரே காரணத்துக்காகப் பாரம்பரியமாகப் பேணிவந்த பல்வேறு விடயங்களை இவர்களில் பலரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்முடனேயே கொண்டு சென்று விட்டனர். முறையான பயிற்சியின்றி சோதிடம், மருத்துவம் தொடர்பான குறியீட்டு வாசகங்களை (Codeword) விளங்கிக் கொள்ளமுடியாதென்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக தீப்புண்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட வேண்டிய சிகிச்சைமுறை குறித்த குறியீட்டு வாசகத்தை இவ்விடத்தில் வகை மாதிரியாக தருதல் பொருத்தமாகும். வாகம் வருமாறு:

**"தாயைக் கொன்றான் சாறெடுத்து**
**தடவிக் கொண்டால் தீர்ந்திடுமே"**

இவ்வரிகளிலே வரும் தாயைக் கொன்றான் என்ற சொற்றொடர் குறித்து நிற்கும் தாவரத்தின் வெளிப்படையான பெயர் என்ன என்பது சிக்கலான விடயமாக உள்ளது. மேற்படி சொற்றொடர் வாழைமரத்தையே சுட்டிநிற்கிறது. குலையீன்ற வாழை ஈற்றில் தன்னையே இழந்து கொள்வது வழமையாகும். இப்படிப் பல்வேறு குறியீட்டு வாசகங்களை பாரம்பரிய மருத்துவம் மற்றும் சோதிடம் முதலான வழக்காறுகளில் பயில் நிலையில் இன்றும் இருந்து வருகின்றன.

### 1.3 கையளிப்பு ஊடகக் குறைபாடு

வழக்காற்று வகைமைகளின் இயற்கையான அழிவுக்கு எமது பண்பாட்டில் முன்னர் பயிர் நிலையில் இருந்த கையளிப்பு ஊடகங்களின் பலவீனமான தன்மைகளும் ஒருவகைக் காரணம் எனலாம். குறிப்பாக எழுத்து நிலைப்பட்ட பதிவுகள் பலவற்றுக்கும் நாம் பனை ஓலையையே நெடுங்காலமாகப் பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பனையோலையிலேயே சோதிடம், மருத்துவம், வானியல், பிற அறிவியல் மற்றும் இலக்கியங்கள் தொடர்பான பல்வேறு விடயங்களும் பதிவு செய்யப்பட்டன. குறைந்தது ஐம்பது வருடங்களே தாக்குப்பிடிக்கக்கூடிய இப்பனையோலைச் சுவடிகளைத் தொடர்ந்துவரும் சந்ததிகளுக்குக் கையளிப்பதில் பல்வேறு சிரமங்கள் எதிர் கொள்ளப்பட்டன. நாம் பனையோலையைப் பயன்படுத்திய காலகட்டங்களில் உலகின் பிற பண்பாடுகள் பலவும் மரப்பட்டை, மிருகத்தோல், சுடுமண் கட்டிகள், கல் முதலான ஊடகங்களைப் பயன்படுத்தி வந்தமையை இவ்விடத்தில் சுட்டுதல் வேண்டும்.

### 1.4 வழக்காற்றைப் படைப்போரின் தாழ்வுணர்ச்சி

வழக்காற்றைப் படைப்போரிடத்துக்குக் காணப்படுகின்ற தாழ்வுணர்ச்சி, ஈடு பாடின்மை, மறதி, குழப்பம், தொடர்ச்சியான பயில்வின்மை பொருளாதாரச்சிக்கல்கள் முதலானவையும் இவ்விடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. நாட்டுப்புறமக்கள் பலரும் தம்மிடையேயுள்ள தனித்துவத்தை வினைத்திறனை உணர்ந்தவர்களாகப் பல போது இருப்பதில்லை. இன்றைய இளந்தலைமுறையினரிடத்தும் பல்வேறு வழக்காறுகளைப் படைப்பது குறித்த பயிற்சி இன்மை பரவாலாகக் காணப்படுகிறது. வகை மாதிரியாக...

1. பாய்பின்னுதல் (பல்வகைப்பாய்கள், தடுக்கு, பந்திப்பாய், களப்பாய், புற்பாய்)
2. சுளகு, பெட்டி முடைதல் (பல்வகைச் சுளகு, மூடல்பெட்டி, அடுக்கப்பெட்டி, நீற்றுப்பெட்டி, பனங்கட்டிக்குட்டான்..)
3. பனைமட்டை வரிச்சு
4. பனை ஓலைப்பதப்படுத்துகை (ஓலைத் தெரிவு நுட்பம், பதப்படுத்துகை, வார்தல் நுட்பம், சாயமூட்டுதல், பனை ஓலை வேய்தல்...)
5. பட்டை இழைத்தல் (துலாப்பட்டை, கைப் பட்டை, பீலிப்பட்டை...)

முதலான பொருள்சார் வழக்காறுக ளைப் படைக்கும் திறன் அருகி வருகிறது. பன்னாட்டுக் கலாச்சாரப் பின்புலத்தில் நாட்டார் பண்ணை சார்ந்த உற்பத்திகளுக்கான தேவை (Demand) மற்றும் சந்தை வாய்ப்புக்கள் (Marketing Facilities) பெருகியுள்ள சூழலில் இவற்றைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கக் கூடிய வினையாளர்களைத் தேடிப் பிடிப்பது கடினமாக உள்ளது. தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்பு முதலான பெரு நகரங்களில் தமிழர்களின் பாரம்பரிய உணவு வகைகள் தொடர்பான விளம்பரங்கள் வெகு கவர்ச்சியாக காட்சிப்படுத்தப்பட்டு வருவதை இவ்விடத்தில் குறிப்பிடலாம். குறிப்பாக "கூழ்" அதனுள் உள்ளடங்கியுள்ள பல்வேறு கடல் சார் உணவுகளின் பங்குகளுடனும் காட்சிப்படுத்தப் பட்டுள்ளது.

வழக்காற்று வகைமைகளைப் பாரம் பரியமாகப் பேணுவதைச் சிலர் தாழ்வுணர் வாகக் கருகின்றனர். தமது "அடிமைச்சின்னமாக" இவ்வழக்காற்று வகைமைகள் சிலவற்றை இவர்கள் பார்க்கின்றனர். ஆற்றுகைக் கலை களை இவ்வாறான தாழ்வுணர்ச்சிக்கான பொருத்தமான எடுத்துக்காட்டுகளாகச் சுட்ட முடியும். பறைமோளம் அடித்தல், உடுக்கு அடித்தல், கூத்தாடுதல், கூத்துப்பழக்குதல் முதலானவற்றைத் தொடர்ந்து செய்வதனால் சமூக அதிகார அடுக்கமைவில் தமக்கான இடம் மேலும் பின்தள்ளப்படும் என்றே இவர்களில் பலரும் நம்புகின்றனர். கூத்தாடிகள், சின்ன மேளம், ஆட்டகாரிகள், நாடகக்காரர்கள் முதலான பட்டப்பெயர்கள் (Micknanes) தாங்கி நிற்கும் சமூகப் பொருண்மைகளை இவ் விடத்தில் இணைத்துப் பார்த்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வழக்காறுகளைப் பேணுதல், பின்பற்றுதல் என்பது தமது அடை யாளத்தைத் தாமே மீண்டும் புதிப்பித்துக் கொள்வதாக இக்கலைகளில் பலரும் கருதுவ தால் பல்வேறு கலைகளும் தொடர்ச்சியான பயில்வு இன்றி இயற்கையாக அழிந்து போகக் காரணமாகிறது. மிருதங்கத்தைப் பயில்வதில் காணப்படும் ஆர்வத்தை மத்தளத்தைப் பயில்வதிலோ அல்லது பறைமேளம் அல்லது தவிலைப் பழகுவதிலோ காணமுடியாது. சாஸ்திரீய நிலைப்பட்ட கருவிகளைப் பயில்வதில் சமூக அந்தஸ்தும் செல்வாக்குச் செலுத்துவதாகக் காணப்படுகிறது.

### 1.5 வழக்காற்றுப்பியல்வின் குறுகிய வட்டம்

தமிழர் பண்பாட்டிலுள்ள நாட்டுப் புறக் கலைகள் பலவும் துரதிஷ்டவசமாக சில வகையான சாதிக்குழுக்களிடம் தலைமுறை தலைமுறையாக அடைக்கலம் கொண்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகைப் பயில்வுக்கான வகைமாதிரியான எடுத்துக் காட்டாகக் காத்தான் கூத்தைக் குறிப்பிட முடியும். கலைப்பயில்வையும் சமூக விடுதலையையும் ஒன்றாக முடிச்சுப்போடும் முயற்சி இவ்வகைக் கலைகளின் அருந்தலுக்கு மேலும் உரமூட்டி வருகிறது.

### 1.6 நவீன உற்பத்திகளுடன் போட்டிபோட முடியாமை

பொருள்சார் நாட்டார் வழக்காற்று வகைமைகளைப் படைக்கும் பலரும் இன்று அவற்றைப் படைக்கும் முயற்சியை வேகமாகக் கைவிட்டு வருகிறார்கள். நவீன தொழில்நுட்ப உத்திகளை உள்வாங்கி கவர்ச்சிக்கரமாகச் சந்தைகளில் உலாவி வரும் நவீன உற்பத்திகளு டன் பாரம்பாரியமான தொழில்நுட்பங்களைத் தாங்கிவரும் நாட்டுப்புற பொருள்சார் உற்பத்தி வகைமைகளால் போட்டிபோட முடியாதிருக்கி றது. பிளாஸ்ரிக், அலுமினியம், இரும்பு முதலான பலவையான உலோகங்களிலான புழங்கு பொருட்கள் பலவும் மரபுசார் புழங்கு பொருட் கள் பலவற்றுக்கும் சவாலாக உள்ளன. பிளாஸ் ரிக் கதிரைகள், பிளாஸ்ரிக் பாய், பிளாஸ்ரிக் சட்டிகள், பிளாஸ்ரிக்சுளகு, நவீன வர்ணக் குழம்புகள், நவீன உணவு வகைகள், கொக்கா கோலா, "பெப்சி" பன்ரா முதலான நவீன குளிர் பானங்கள் முதலான வற்றுடன் ஓலைப்பாயும், ஈர்க்கும் சுழகும் கோழிச்சாயமும், புழுக்கொடி யல் மாவும், ஒடியல் மாவும், பனாட்டும், மோரும், பழங் கஞ்சியும் போட்டி போடுவதென்பது சிக்கலான விடயமாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை நகரை அண்டியிருந்த ஓடக்கரைப் பலகாரக்கடைகள் பலவும் இன்று மூடுவிழாக்கண்டு வருகின்றன. சிலகடைகளின் துவாரங்கள் சீமெந்துக் கலவை கொண்டு நிரந்தரமாக அடைக்கப்பட்டுள்ளமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். பாரம்பரியமான உணவுகள் மீதான நாட்டமின்மையும், "பலகாரம் சுட்டு விற்கும்" பிழைப்புக் குறித்த சமூக அந்தஸ்து நிலைப்பாடும் இவ்வகைச் சிறு கைத்தொழில் முயற்சிகளைப் பாதித்து வருவதனை பார்க்க முடிகின்றது.

## 2. செயற்கையான அழிவுகள்

செயற்கையான நாட்டார் வழக்காற்று வகைமைகள் அழிந்து போவதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. அவற்றை வருமாறு பகுத்து நோக்கலாம்.

### 2.1 உற்பத்திச் செயற்பாடுகளில் நவீன கருவிகளின் வருகை

நாட்டார் வழக்காற்று வகைமைகள் பலவும் நவீன கருவிகளின் வரவால் பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன. குறிப்பாக விவசாயம், மீன்பிடி, கைவினைத்தொழில் முதலான செயற்பாடுகளில் ஆரம்ப காலங்களில் நவீன கருவிகளைப் பயன்படுத்துவது அரிதாகவே காணப்பட்டது. ஆண்களும் பெண்களுமாகப் பலரும் கூடி இவ்வேலைகளைச் செய்து வந்தார்கள். இவ்வகையான உற்பத்தி முயற்சிகளின்போது பாரம்பரியத் தொழில் நுட்பத்துடனான கருவிகளின் பயன்பாடு மற்றும் அக் கருவிகளின் உற்பத்தியும் அதிகரித்திருந்தது. அத்துடன் வாய்மொழி சார்ந்த கலை வடிவங்களுக்கான பயில்நிலைச் சாத்தியமும் பாரம்பரியத் தொழில் முயற்சிகளில் அதிகமாகவே இருந்தது.

வயற்களங்களில் வேலை செய்யும் போது ஆண்கள் பாடும் பாட்டுக்குப் பெண்கள் எதிர்ப் பாட்டுப் பாடுதலும், பழமொழி சொல்லுவதும், விடுகதை போடுவதும் என வயற்களமே கலகலத்திலிருந்தது. பலர் சேர்ந்து தோணியைக் கடலினுள் பாய்ச்சும் போதும், அதனை மீண்டும் கரை ஏற்றும் போதும், வலையிழுக்கும் போழ் ஏலேலோப் பாட்டுக்களைப் பாடினர். இத்தகைய தொழில்சார்ந்த சூழ்நிலைகள் வாய்மொழிக் கலைகளின் செழிப்பான இருப்புக்கு வாய்ப்பாக அமைந்திருந்தன.

புராண இதிகாச கதைகளையும், நாட்டுப் புறக் கதைகளையும் கேட்டுக்கொண்டு சுருட்டுச் சுற்றவும், பிற கைவினைக் கலைகளை இயற்றவும் முடிந்த சூழலை இன்று FM வானொலி முற்றாகத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுள்ளது.

வயல் வேலைகளில் நீர்ப்பம்பிகளும், (Water Pump) உழவு இயந்திரங்களும் (Tractor) முழுமையாக ஈடுபடுத்தப்படுகின்றன. இவற்றின் பல்முனைப்பயன்பாடு (Multiple Use) மனித வளத்தின் பயன்பாட்டினைக் கணிசமானளவு குறைத்துள்ளது. நீரிறைத்தல், அருவி வெட்டுதல், சூடடித்தல், விளைபொருட்களை வீட்டுக்குக் கொண்டு வருதல் என அனைத்து வேலைகளையும் மேற்படி இயந்திரங்களே செய்து விடுகின்றன. பலர் சேர்ந்து வலையை இழுக்கின்ற முயற்சியை விசைப்படகின் இயந்திரம் ஒன்றே சாதித்து விடுகின்றது. இத்தகு நவீன முயற்சிகள் இத்தொழில்களுடன் சேர்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகள் பலவற்றையும் இல்லாது ஒழித்து விடுகிறது.

பொருளாதார அடிக்கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான நவீன மயப்படுத்தல்கள் சுதேசிய பொருளாதாரக் கட்டமைப்புக்களோடு சேர்த்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைகளை மிகவும் நலிவடையச் செய்கின்றன எனலாம்.

### 2.2 புலப்பெயர்வு

நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் பாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரியத் தொழில்களைப் புரிவதில் உள்ள அச்சுறுத்தல் மற்றும் பொருளாதார நலக்குறைவு முதலியன காரணமாக பண்பாடு மற்றும் தொழில்வினையாளர் பலரும் வேகமாகத் தமது பூர்வீகக் கிராமங்களை விட்டுப் புலம்பெயர்ந்து வருகிறார்கள். வழக்காறுகளை அடுத்த தலை முறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டிய இளந்தலைமுறையினர் பலரும் பெருவாரி யாகப் பிறநாடுகளில் நிரந்தரமாகத் தங்கி விடுவதும், இவ்வகையிலான வழக்காறுகளின் வழக்கிழப்புக்குக் காரணமாகி விடுகின்றது.

கொழும்பு, மத்திய கிழக்கு நாடுகள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் முதலாக இவர்களின் புலப் பெயர்வு அமைந்து காணப்படுகின்றது. உயிர்ப் பாதுகாப்பு, பொருளாதார மேம்பாடு முதலான வற்றை மட்டும் முன்னிறுத்தாது சமூக அந்தஸ் தையும் முன்னிறுத்தி இத்தகைய புலப்பெயர்வு கள் நடைபெற்று வருகின்றன. இதனால் பன்னாட் டுக் கலாசாரங்களும், தமிழர் பண்பாட்டில் ஊடுருவ வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளமை யையும் இவ் விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

**2.3 சமயம்**

வழக்காறு வகைமைகள் பலவற்றின் வழச்சிறப்புக்குச் சமயமும் ஒருவகைக் காரணம் எனலாம். சமயம் என்னும்போது பிறமத ஊடாட்டம், சமஸ்கிருதமயப்பாடு, வழிபாட்டு மரபுகள் மீதான மாறுதல்கள் முதலானவற்றைக் குவிமையப்படுத்த முடியும்.

சைவசமயத்தை மையப்படுத்திய தமிழ் நாட்டார் வழக்காற்று வகைமைகளில் அதிகம் பாதிப்பை உண்டுபண்ணிய மதம் கிறிஸ்தவ மதமே எனலாம். கல்வி, தொழில்வாய்ப்பு, பொருளாதார நலன்கள், சமூக அந்தஸ்து முதலான காரணிகளை முன்னிறுத்தி மேற் கொள்ளப்படும் கிறிஸ்தவ மதமாற்ற முயற்சிகள் சுதேசிய பண்பாட்டு வழக்காற்று வகைமை களில் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன. கவர்ச்சிகரமான இழப்புகளுக்கு ஆட்பட்டுச் செல்லும் மக்களில் பலரும் புதிய மத அனுட்டான நடைமுறைகளுக்குப் பழக்கப்படுத் தப்படும் போது தலைமுறை தலைமுறையாகப் பேணிவந்த மதநம்பிக்கைகள், அது தொடர்பான வழக்கங்கள், வழிபாட்டு மரபுகள் மற்றும் சடங்குகள் முதலானவற்றை மறுதலித்தே செய் கின்றார்கள். இதனால் மேற்படி மரபுகளுடன் இயைந்து வழர்த் தெடுக்கப்பட்ட வழக்காறுகள் கைவிடப்படுகின்றன. அல்லது மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன எனலாம்.

காத்தான்கூத்து, கோவலன் கூத்து, உடுக்கடி யாடல், கரகம், காவடி முதலான ஆற்றுகைக் கலைகள் பலவும் சைவசமய சூழலைச் சார்ந்தே பயிலப்பட்டு வருகின்றன. சுதேசிய மக்கள் கிறிஸ்த வத்துக்கு மாறியதன் பின்னர் இவ்வழக்காறுகள் பலவும் கைவிடப் பட்டுள்ளன. தமிழ் பாரம்பரியக் கலைவடிவங்களின் உள்ளீடுகளில் கிறிஸ்தவ மதம் தொடர்பான விடயங்கள் புகுத்தப்பட்டும் பயிலப்பட்டு வருவதனையும் பார்க்க முடிகின்றது. தவிர மதம் மாறுகின்றபோது ஏலவே கைக்கொண்டிருந்த மதம் தொடர்பான விடயங்கள் புகுத்தப்பட்டும் பயிலப்பட்டு வருவதனையும் பார்க்க முடிகின் றது. தவிர மதம் மாறுகின்றபோது ஏலவே கைக் கொண்டிருந்த மதம் தொடர்பான நம்பிக்கை கள், ஆசாரங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிபாட்டு மரபுகள் முதலானவை கேள்விக் குறியாகின்றன.

சமஸ்கிருதமயப்பாடும் நாட்டார் வழக் காற்று வகைமைகளின் வழச்சிறப்புக்கு ஒரு வகைக் காரணமாக இருந்து வருகிறது. நாட்டுப் புற வழிபாட்டில் இருந்த சிறு தெய்வக் கோயில் களில் பலவும் இன்று வேகமாகச் சமஸ்கிருத மயப்படுத்தப்பட்டு வருவதனைப் பார்க்க முடிகின்றது. விளக்கு வைத்து வழிபாட்டிலிருந்த சிறு தெய்வக் கோவில்கள் ஆகமநிலைப்படுத்தப் பட்டபோது அதுவரையும் அத்தெய்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாக நடைபெற்று வந்த வழிபாட்டு மரபுகள், நம்பிக்கைகள், சடங்குகள் முத லானவை உள்ளிட்ட பலவேறு மரபுகளும் மாற்றம் பெறுகின்றன அல்லது வழக்கிழக் கின்றன எனலாம். உயர்மரபுக்குள் நாட்டுப்புறத் தெய்வங்கள் கொண்டு வரப்படும்போது அடியவனுக்கும் ஆண்டவனுக்கு மான இடை வெளி அதிகரிக்கின்றது. நாட்டுப்புற நிலையில் பல்வேறு விதமான சடங்குகள் மற்றும் வழி பாட்டு மரபுகளுடாகத் தெய்வங்களுடன் நேரடி யாகத் தொடர்பு கொண்டிருந்த பூசாரியும், நாட்டுப் புற மக்களும் அவ்வகையான தொடர்பு களுக்கு பிராமணன் என்ற ஊடகத் தொடர் பாளரை (Mediator) தொடர்புகொள்ள வேண்டிய தேவை வருகிறது.

அண்ணமார், பிடாரி, காளி, முனி, வைரவர், விருமன், ஐயன், கண்ணகி முதலான கிராமியத் தெய்வங்கள் சமஸ்கிருத மயப் பாட்டில் பிள்ளையார், முத்துமாரி, முனீஸ்வரன், ஞான வைரவர், இராஜராஜேஸ்வரி முதலான புதிய பெயர்களைப் பெறுவதுடன் நாட்டுப்புற மரபில் வந்த குளிர்த்தி, பொங்கல், கூத்துப் போடுதல், மடைபவல் (மாமிசம் உட்பட), விளக்கு வைத்தல், பலியிடல் முதலியனவும் மாற்றம் பெறலாயின. இவ்வாறான மாறுதல்கள் அனைத்தும் இவ்வழிபாட்டுமரபுகளைச் சார்ந்து வளர்த்தெடுக்கப்பட்ட கலைமரபுகளைப் பெரிதும் பாதிப்பனவாகக் காணப்படுகின்றன. ஆகம நிலைப்பட்ட வழிபாட்டு மரபில் நாட்டுப் புற வழக்காற்று வகைமைகள் பலவும் கைவிடப் பட்டுள்ளதனையும் பார்க்க முடிகின்றது.

## 2.4 சாஸ்திரிய நிலைப்பட்ட கலைகளின் செல்வாக்கு

தமிழ் மக்களிடையே செந்நெறி மரபு அல்லது பெரும்பாரம்பரிய மரபு சார்ந்த கலைப் பயில்வு தொடர்பான ஈடுபாடு அண்மைக் காலமாக அதிகரித்துச் செல்வதனைப் பார்க்க முடிகின்றது. தங்கள் பிள்ளைகளுக்குப் பரத நாட்டியம், கர்நாடக சங்கீதம், வீணை, மிருதங்கம் முதலானவற்றுள் ஒன்றையாவது பயிற்றுவிக்க இம்மக்களில் பலரும் விரும்புகின் றார்கள். உயர்கல்வித் தகைமையுடன் சாஸ்திரிய நிலைப்பட்ட இக்கலைகளுள் ஒன்றி லாவது தம்பிள்ளைகள் ஆட்சி பெற்றிருப்பதை சமூக அந்தஸ்தின் (Social Status) குறியீடாகவும் இம்மக்களில் பலரும் பார்க்கிறார்கள்.

மேற்படி நிலைப்பாடானது நாட்டார் மரபு சார்ந்த கலைப்பயில்வுகளுக்கான சாத்தியப் பாட்டை நிராகரிப்பதாக உள்ளது. குறிப்பாக நாட்டுப்புற நடனங்களான கும்பி, கோலாட்டம், கரகம், காவடி முதலான ஆற்றுகைக்கலலை களைப் பயிலப்பலரும் முன்வருவதில்லை. இக்கலைவடிவங்களைப் பயிற்றுவிக்கக்கூடிய வளவாளர்களும் போதிய அளவில் எம்மிடம் இல்லை. கல்வித் திணைக்களத்தினர் "தமிழ்த் தினவிழா" முதலான நிகழ்வுகளில் இவ்வாறான நாட்டுப்புற நிகழ்வுகளைக் கட்டாயமாக இடம் பெறச் செய்கிறார்கள் தவிர தைப்பொங்கல், வருடப்பிறப்பு முதலான பண்டிகை நாட்களில் ஆர்வலர்களில் சிலர் இவற்றை நிகழ்த்துகிறார் கள். இவ்வாறான முயற்சிகள் நாட்டார் வழக்காறு வகைமை களின் அழிவைத்தடுத்து நிறுத்தல் போது மானவை அல்ல என்பதனையும் குறிப்பிடல் வேண்டும்.

நாட்டார் வழக்காறு வகைமைகளை அவை ஆற்றுகை செய்யப்படுகின்ற இயல்பான சூழலிருந்து விடுவித்து நவீன படச்சட்ட மேடை களிலும், பிற இடங்களிலும் அறிக்கை செய்யப் படும் போது அவற்றின் உயிர்த்துடிப்பு மற்றும் தனித்துவம் முதலியன பெரும்பாலும் இழக்கப் படுகின்றன என்றே சொல்லலாம்.

இயல்பாகத் தோன்றுகின்ற சூழலில் படைக்கப்படுகின்ற இவ்வழக்காறுகளை ஆய்வுக் காகவும் பிறரை மகிழ்விக்கவும் இன்னும் பலவற்றுக்காவும் மேடையேற்றுகின்ற போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வழக்காற்று வடிவங்களினூடே புலப்படு கின்ற பண்பாட்டு அடை யாளங்களைத் தரிசிக்க முடியாது போய்விடுகிறது.

### 2.5 பாடவிதானம்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் நடைமுறையி லிருக்கும் கல்விக் கொள்கை மற்றும் பாட விதானங்களில் குறித்த பிரதேசத்து மக்களின் சுதேசியப் பண்பாடு சார்ந்த வழக்காற்று வகைமைகளுக்கு முக்கியத்துவம் தரப்படாமை இவ்விடத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒன்றாகும். தன்னாட்சி அதிகாரம் கொண்ட இப்பிரதேசங்களின் பல்கலைக்கழகங்கள் கூட தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களைப் பேணித்தக்க வைத்துக் கொள்ளக் கூடிய இவ்வழக்காறுகள் தொடர்பான பயில்வைப் பெரிதும் முனைப்புறுத்தவில்லை என்றே சொல்லலாம்.

நாட்டார் வழக்காறுகள் தொடர்பான கற்கைகளுக்கென தனித்துறை எதுவும் இப் பிரதேசத்துப் பல்கலைக்கழகங்களில் இல்லை என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும்.

பாடசாலை மற்றும் பல்கலைக் கழகங்கள் சார்ந்த கல்விக் கொள்கைகளில் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் குறிப்பாக உலகவங்கி முதலானவை பெரும் செல்வாக்குச் செலுத்தி வருகின்றன. "சந்தைக்கேற்ற கல்வி" என்ற கொள்கையில் பெரும்பாலும் பொருளா தார நலன்களே முன்னிறுத்தப்படுகின்றன. குறிப்பாகச் சொல்வதானால் முதலாளித்துவத் தில் பொருளாதார இலக்கை திருப்திப்படுத்துவ தாகவே இக்கல்விக் கொள்கைகள் அமைந்துள் ளன. நடைமுறையிலிருக்கும் கல்விக் கொள்கை கள் உயர், சமூக கலாசார விழுமியங்களை உயர்வாகச் சித்தரிப்பனவாக அமைந்துள்ளத னால் இவ்வாறான ஒரு சூழலில் கல்வி பயிலுகின்ற மாணவன் ஒருவன் தன்னுடைய சுய அடையாளங்களை இழப்பதற்கான வாய்ப்புக் களே அதிகமாக உள்ளன எனலாம்.

### 2.6 புலமைச்சிரத்தை ஈடுபாடு

நாட்டுப்புறவியல் அறிஞர்களது புலமைச் சிரத்தையானது பெரும்பாலும் வாய் மொழி வழக்காற்று வடிவங்கள் மீதான குவிந்துள்ள தனை அவதானிக்க முடிகிறது. நாட்டுப்புறப் பாடல்கள், கவிதைகள், விடுகதைகள், பழமொழிகள் முதலான வழக்காறுகள் மீதான ஆய்வுகள் மற்றும் தொகுப்பு முயற்சிகளே அதிகமாக நடை பெற்றுள்ளதனை அவதானிக்க முடிகிறது. அத்துடன் இத்துறை சார்ந்த ஆய்வு களில் கூட ஆய்வு முறையியலைப் பெருமள வில் பார்க்க முடியவில்லை. நாட்டார் வழக் காற்று வகைமைகளை அவற்றின் சூழமைவுகளு டன் பொருந்திப் பார்த்து முடிவு க்கு வருவதான ஆய்வுகள் இன்னும் முனைப்புப் பெறவில்லை என்றே சொல்லலாம். இத்துறை சார்ந்த நவீன அணுகு முறைகள் மற்றும் ஆய்வியல் நுட்பங்க ளைப் பயின்று இது தொடர்பான ஆய்வுகள் முன்னெடுக்கப்படும் போது இவ்வழக்காற்று வகைமைகளின் புலமை முக்கியத்துவம் தெரியவரும். பொருள்சார் மற்றும் வழக்கங்கள் சார்ந்த வழக்காறுகள் மீதான ஆய்வுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

### 2.7 திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் உலகமயமாதல்

திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் உலகமயமாதல் என்பன காரணமாக சுதேசிய இனங்கள் பலவும் தமது தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களை இழந்து வரு கின்றன. அனை வர்க்குமான ஒரே வகையான பண்பாட்டு பன்னாட்டுப் பண்பாடு ஆகியன வற்றை நேரடியாகவும் மறைமுகமாகவும் மேற்படி காரணிகள் செயற்படுத்தி வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைப்பண்பாடு குறித்த திணிப்புக்கு நாட்டார் வழக்காற்று வகைமைகள் குறிப்பாக நாட்டார்கலை இலக்கிய மரபுகள் பெரிதும் பயன்பட்டு வந்தாலும் அவை வெறும் விற்பனை உத்திகளாக மட்டுமே நிலைநிறுத்தப்படுவத னைக் காணக் கூடியதாக உள்ளது.

திறந்த பொருளாதார கொள்கை காரண மாக எமது பொருளாதாரம் பெரிதும் இறக்குமதி களிலேயே தங்கியுள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதனால் சுதேசியப் பண்பாடு சார்ந்து வருகின்ற தொழில் நுட்பங்கள் மற்றும் உற்பத்திகளுக்கான வாய்ப்புக்கள் பெரிதும் பாதிப்படைகின்றன. இத் தன்மை காரணமாக இத்துறை சாாந்த வளர்த் தெடுக்கப்படும் வழக்காற்று வகைமைகள் பலவும் வழக்கிழந்து வருகின்றன. விவசாயம், கடல் வேளாண்மை, சிறுகைத்தொழில் மற்றும் கைவினை சார்ந்த தொழில்கள் பலவற்றிலும் இத்தகைய பாதிப்புக்களை இனங்காண முடிகிறது. வகை மாதிரியாக மாடுகளின் உதவி கொண்டு நீர் இறைக்கும் சூத்திரக் கிணறுக ளையோ மரப்பலகைகளைக் கொண்டு கட்டப் படும் வத்தைகள் கட்டுமரங்கள், தோணிகள் முதலானவற்றையோ இவற்றைப் பராமரிக்கும் மரபுசார்ந்த தொழில்நுட்பங்களையோ இன்று பெருமளவில் பார்க்க முடியாதிருக்கிறது.

இடியப்ப உரல், பல்வகை அச்சு உரல்கள், உரல்ககள், திருகுவலை, புட்டுக்குழல் முதலான பல்வகைப் புழங்கு பொருட்களும் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக இன்று அலுமினியம், சில்வர், இரும்பு முதலான உலோகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டு சந்தைக்கு வந்துள்ளன. இந்நிலைமையானது இது தொடர்பான வினையாளர்களைப் பெரிதும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

**2.8 பழமை போற்றாத பண்பு**

பழமை போற்றாத பண்பு இன்று அதிகமாகி விட்டது. நவநாகரீகத்தின் மீதான நாட்டம் இன்று அனைத்துத் துறைகளையும் பாதித்துள்ளது. இதற்கு நாட்டார் வழக்காற்றிலும் விதிவிலக் கல்ல. இருந்தாலும் இத்தகைய போக்கினால் பிற துறைகளைவிட நாட்டார் வழக்காற்றியலே அதிகம் பாதிப்புள்ளாக்கியுள்ளது எனலாம்.

**முடிவுரை**

தமிழர்களுடைய பண்பாட்டு அடை யாளங்களை மீட்டுருவாக்கம் செய்யக்கூடிய வழக்காற்று வகைமைகள் பலவும் இன்று வேகமாக வழக்கிழந்து வருகின்றன. இவற்றை உயிர்த்துடிப்புடன் அவற்றின் தனித்துவமான அடையாளங்களோடு பேணிப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

இயற்கை சார்ந்த அழிவுகளைக் கட்டுப் படுத்துவதில் மனித முயற்சியின் பங்கு குறிப்பிட் டுச் சொல்லும்படியாக அமையப் போவதில்லை. ஆயினும் செயற்கையான காரணங்களினால் இவ் வழக்காறுகள் அழிந்து போகாமல் பாது காக்கப் பலவற்றை முன்னெடுக்க வேண்டி யுள்ளது.

தமிழர்களுக்கான கல்விக்கொள்கை யில் நாட்டார் வழக்காற்றில் முக்கியத்துவம் பெற வேண்டும். பல்கலைக்கழகப் புத்தி ஜீவிகளும் பாடசாலைச் சமூகத்தினரும் தமிழ் அரசியல்வாதிகளும் எனப்பலரும் இணைந்த இதனைச் சாதிக்க முனைய வேண்டும். இத்துறை சார்ந்த உலகலாவிய நிலையில் ஏற்பட்டுவரும் நவீன கோட்பாடுகள் மற்றும் ஆய்வு முறைமை களை எமது புலமையாளருக்கும் எட்டும்படி செய்ய வேண்டும்.

அழிந்து வரும் நாட்டார் வழக்காறுகள் தொடர்பான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்காக இது தொடர்பான அரும் பொருளகம் உடனடியாக நிறுவப்பட வேண்டும். பொருள்சார் வழக்காற்று வகைமைகள் பலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அரும் பொருளகத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். தமிழர்களது அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாப்பதற்கான சட்டவலு அல்லது அரசியல் ஆதரவு இத்துறை சார்ந்த ஈர்க்கப்பட வேண்டும்.

வழக்காற்று வகைமைகளைப் படைப் போர்களது சமூக பொருளாதார நிலைமை களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிய வேண்டும். கூடவே இவ்வாறான பண்பாட்டு வினையாளர்களது ஒழுக்கங்களை யும் சீர்ப்படுத்துவதற்கும் ஆவன செய்ய வேண்டும்.

நாட்டார் கலைமரபுகளை குறித்த ஒரு வட்டத்தினர்க்கு மட்டும் ஆற்றுகை செய்யாமல் பிறமக்களும், பிற இனத்தவரும் இக்கலைமரபு களின் தனித்துவங்களோடு இவற்றைத் தரிசிப்ப தற்கான வாய்ப்புக்களைக் கண்டறிய வேண்டும். இத்துறை சார்ந்த கலைஞர்களது வரலாறுகள் மற்றும் மேதைமைகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆய்வுகள் இத்துறைசார்ந்த ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

**துணைநின்ற நூல்கள்**


1. விசாகரூபன்.கி. 2003, நாட்டார் வழக் காற்றியல் – ஓர் அறிமுகம், மலர் பதிப்பகம், கந்தர்மடம்.
2. சிவத்தம்பி. கா (ப.ஆ) 1980, இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்காற்றியல், தமிழ்த் துறை, யாழ்ப்பல்கலைக்கழகம்.
3. சிவசுப்பிரமணியன். ஆ. 1999, மந்திரமும் சடங்குகளும், மக்கள் வெளியீடு, சென்னை.
4. சுந்தரம்பிள்ளை.செ. 1990, ஈழத்து இசை நாடக வரலாறு, யாழ் இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.
5. சுப்பிரமணியன். ச.வே. 1971, தமிழில் விடு கதைகள், உலகத் தமிழாராச்சி நிறுவனம், சென்னை.
6. பக்தவலச்சலபாரதி. சி. 1999, பன்னாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
7. பக்தவச்சலபாரதி. சி. 2002, தமிழர் மானிடவியல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
8. பாலசுந்தரம். இ, 1979, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடம், தமிழ்ப்பதிப்பகம், சென்னை.
9. பெருமாள். ஏ.என், 2003, தமிழக நாட்டுபுற கலைகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
10. லூர்து.தே, 1988, நாட்டார் வழக்காற்றியல், மணிவாசகப்பதிப்பகம், சென்னை.
11. லூர்து.தே, 1997, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம். பாளையங்கொட்டை.
12. Dundes Alan, 1980, Interpreting Folklore, Bloomingtion, Indiana University Press.
13. Don Yoder, 1972, Folklore and Folklife An Introduction. the University of Chicago, U.S.A.
14. Bhagwat Durga, An outline of Indian Folklore, Popular Prakashan, Bombay 1958.
15. Laksmanan Chettiar S.M.L Folklore of Tamilnadu National Book Trust NewDelhi, 1973.
16. Van Gennep Arnold, The Rites of Passage, Routledge and Keganpall Limited, London, 1960.
17. Shanmgampillai and Erica A.e Folk Belieft of the Tamils Mathucalus Pathippagam, Madurai, 1987.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் வாருங்கள் காதுகளில் ஒலிக்கும் பிஞ்சுகளின் அழைப்பு

பேராசிரியர் சி.மௌனகுரு

கிளிநொச்சி கரைச்சிப் பிரிவு பிரதேச செயலாளர் திரு நாகேஸ்வரனின் கீழ் இயங்கும் கலாசார உத்தியோகஸ்தர்களான திரு. றஜீவன தும் செல்வி சுகன்யாவினதும் அழைப்பின் பேரில் கிளிநொச்சியில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்கும் பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கும் கிளிநொச்சிக் கலைஞர்களுக்கும் ஒரு நாடகப் பயிற்சிப் பட்டறை நடாத்த எமது குழுவினருடன் கிளி நொச்சி செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

பங்குனி மாதம் 13ஆம் 14 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நாடகப் பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக இசை விரிவுரையாளர்களான சரஸ்வதி யும் பிரதீபனும் மட்டக்களப்பு அரங்க ஆய்வுகூட உறுப்பினர்களும் என்னுடன் இதில் ஈடுபட்டனர். பாடசாலை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக் கும், உள்ளூர்க் கலைஞர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

அனைவரும் மிக்க ஆர்வத்தோடு பங்குகொண்டனர்.

இரண்டு நாட்கள் அப்பயிற்சிப் பட்டறை நடைபெற்றது.

முதல் நாள் காலை பாடசாலை மாணவர்களும் மாலைஆசிரியர்களும்,

இரண்டாம் நாள் கிளிநொச்சி பிரதேச கலைஞர்களும் பட்டறையில் கலந்து கொண்ட னர்.

கிளிநொச்சி பிரதேச மாணவர்கள் மிகுந்த திறன் மிகுந்தவராயிருந்தனர்.

அறியும் ஆர்வம் அவர்களின் முகங் களில் சுடர் வீசியது.

உள்ளூர் கலைஞர்கள் தம் திறமை களைக் காட்டினர்.

தமது கலைகளை வளர்க்க தமக்கு உதவிகள் தேவை எனக்கூறினார்,

அப்பட்டறை தமக்கு மிகமிகப் பிர யோசனமாக இருந்தது என்று கலந்துரை யாடலின் போது அனைவரும்தெரிவித்தனர்.

எமக்கும் அப்பயிற்சிப் பட்டறை மிகுந்த மனத் திருப்தியையும் மகிழ்ச்சியையும் தந்தது.

14ஆம் திகதி காலை பாரதிபுரம் விவே கானந்த வித்யாலயாத்திற்கு எமது குழுவினரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயசேகர் அழைத்துச்சென்றார்.

மெல்ல மெல்ல உருவாகும் அப் பாட சாலையில் அர்ப்பணிபோடு வேலை செய்யும் அதிபர் திருமதி ஜெயலக்ஷ்மி மாணிக்கவாச கத்தையும் அர்ப்பணிப்போடு வேலை செய்யும் ஆசிரியர்களையும் நான் கண்டேன். மகிழ்ச்சி யோடு வரவேற்றனர்.

அப்பாடசாலை மாணவர்களுடன் உரையாடியமை மேலும் மகிழ்ச்சி தந்தது.

எம்வருகைக்காக அவர்கள் ஆவலுடன் காத்திருந்தனர்.

எம்மைக்கண்டதும் அப்பிஞ்சுகளின் முகத்தில் கண்ட மகிழ்ச்சியும், ஆர்வமும் எம்மை நெகிழ" வைத்தன.

அப்பாடசாலையின் இன்னிய அணியி னர் தமது இன்னிய அணியினை எமக்கு நிகழ்த்திக்காட்டினார், கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நாம் வடிவமைத்த இன்னிய அணியின் சாயலை அது ஒத்திருந்தமை எமக்கு மகிழ்ச்சியையும் ஆச்சரியத்தையும் தந்தன.

கிழக்குப்பல்கலைக் கழக இன்னிய அணியில் நாம் பறை, மத்தளம், உடுக்கு, சவணிக்கை எக்காளம் என உள்ளூர் இசைக் கருவிகளை உள்ளடக்கியிருந்தோம்.

அவ்வாத்தியங்களை அவர்களும் பயன் படுத்தினர்.

மாணாக்கர் உற்சாகத்துடன் பறையை முழக்கினர்.
எக்காளம் ஊதினர்.
ஆலவட்டம் தாங்கி நடந்து காட்டினர்.
பார்க்க அழகாக இருந்தது.
எம்மை அசத்திவிட்டனர்.

தமிழரின் புராதன வாத்தியமான பறை கிளிநொச்சியின் ஒரு கிராமப் பள்ளியில் ஒலிக்கிறது

எங்கோ ஆரம்பித்த ஒன்று எங்கோ தளிர்க்கிறது.

இதனை மேற்கு நாடுகளில் தளிர்க்க வைக்கிறார் பாலசுகுமார்.

7ஆம் ஆண்டு மாணவர்களை அவ் வகுப்பு ஆசிரியர் எம்மிடம் அழைத்து வந்தார்.

அவர்கள் நெருக்கமாக எம்மோடு உரையாடினர்.

தப்பி வந்த தாடி ஆடு என்னும் எனது சிறுவர் நாடகப் பாடல்களைப் பாடும்படி என்னைக் கேட்டுக்கொண்டனர்
நான் பாடினேன்.
அவர்களும் எம்மோட சேர்ந்து பாடினர்.
அருமையான பொழுதுகள் அவை.
மறக்க முடியாத கணங்கள் அவை.
பாடசாலைவிட்டு வரும்போது
மீண்டும் வாருங்கள்
என்று அன்போடு அப்பிஞ்சுகள் கூறினர்.

அப்பிஞ்சுகளின் அழைப்பு இப்போதும் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலைபேறான எதிர்காலத்திற்கான சுதேச அறிவு

**பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர்-சமூகவியல் பேராசிரியர்
சமூகவியல்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

சுதேச அறிவென்பது குறித்தவொரு பண்பாட்டின் அல்லது சமூகத்தின் தனித்துவமான அறிவுத் திரளாகும். உள்ளுர் அறிவு, நாட்டார் அறிவு, மக்கள் அறிவு, மரபுவழி ஞானம், மரபு வழி விஞ்ஞானம், எனவும் சுதேச அறிவு அறியப் படுகின்றது. உலகளாவிய மனித சமூகங்கள் யாவும் தத்தம் சூழமைவில் செழுமையான அனுபவங்களை பெற்றுக்கொள்கின்றன. இந்த அனுபவங்களின் வெளிப்பாடாக சுதேச அறிவுத் திரளமைப்பு திகழ்கின்றது.

இந்த அறிவானது தலைமுறை தலை முறையாக கடத்தப்படுகின்றது. வாய்மொழியா கவும் பண்பாட்டுச் சடங்குகளினடியாகவும் இவை கையளிக்கப்படுகின்றன. விவசாயம், கால்நடை வளர்ப்பு, வேட்டை, மீன்பிடி போன்ற வாழ்வாதார செயற்பாடு களிலும் நோய்களுக்கு எதிரான மருந்து, கல்வி, சூழல் காப்பு போன்ற பரந்த செயற்பாடுகளின் வழியாகவும் நிலை பேற்றுக் கான வழி வகைகளை இவை வெளிப் படுத்துகின்றன.

இச் சுதேச அறிவுத் திரளானது முழு தளாவியது. இன்றைய நவீன அறிவுமுறையின் துண்டாடல்கள் இங்கு இல்லை. இவ்வறிவானது இம் மக்களின் ஆத்மீக நலம், பண்பாடு, மொழி என்பவற்றில் வேர்விட்டுள்ளது. இது அவர்களின் வாழ்க்கை முறையாகவே உள்ளது. சுதேச வாழ்வினை ஆளுகின்ற விதிகளின் தொகுப்பாக வும், சூழல் வளங்களை காக்கின்ற முறைமை யாகவும் கூட அது விளங்குகின்றது. இந்த அறிவி னைக் காப்பதும் பகிர்ந்து கொள்வதும் ஒரு கடமையாகவே மேற்கொள்ளப்பட்டது. இதன் வழி இவ்வறிவானது இயங்கியல் தன்மை கண்டது. சுதேச வாழ்வியலில் நல்லதொரு வாழ்வுக்கான ஞானமாகவும் இவ்வறிவானது போற்றப்பட்டது. இதயத்தையும் மூளையையும் ஒருங்கிணைக்கும் அறிவாக இதனை குறிப்பிட லாம்.

சுதேச அறிவு என்பது குறித்வொரு இடத்தில் வாழும் மக்களின் அனுபவம் சார்ந்தது. சுதேச அறிவானது வாய்மொழி மூலமாகவும் போலச் செய்தல் போன்ற முறைகளின் ஊடகவும் காலங்காலமாக கடத்தப்படுகின்றது. இவ்வறிவானது ஒவ்வொரு பண்பாட்டிலும் முயன்று தவறுதல் வழியாகக் கட்டமைக் கப்படுகின்றது. பல தலைமுறைகளுக்கு ஊடாக இந்த அறிவுத் திரளமைப்புக் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.ஏனைய அறிவின் வடிவங்களோடு ஒப்பிடுகையில்சுதேசஅறிவானது பெருமளவி ற்கு பகிர்ந்து கொள்ளப்படுகின்ற அறிவாக உள்ளது. இதனால் தான் மக்கள் விஞ்ஞானம் என்ற அடைமொழி சுதேச அறிவிற்கு வழங்கப் படுவதைக் காணலாம்.சுதேச அறிவானது, இயற்கை வளங்கள் பற்றிய உணர்திறனும் சூழலியல் அறிதிறனும் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனித்துவ ஆக்கிரமிப்புகளுக்கு முன்னதாக தத்தம் பண்பாட்டுப் புலங்களில் சுதேச சமுதாயங்கள் கண்ட இவ்வறி வானது, அவர்களின் இனத்துவ அடையாளமாகவும் பண்பாட்டு உரிமையாகவும் கூட விளங்கியது. சுதேச மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனங்கள் இதனை தெளி வாகவே புலப்படுத்துகின்றன. தத்தம் நிலங்க ளோடு சுதேச மக்கள் கொண்டுள்ள ஆத்மீக ரீதியான ஈடுபாட்டின் அறுவடையாக விளங்கும் இவ்வறிவுத் திரளை காக்கின்ற உணர்வு விழிப்பு என்பது இம் மக்களின் பண்பாட்டு அடையாளங் களை பாரம்பரிய மேன்மைகளை காக்கும் செயற்பாடாகவும் அர்த்தம் பெறும்.

சுதேச மக்களின் வாழ்வாதாரமாக வறிய மக்களின் சமூக மூலதனமாக விளங்கிய சுதேச அறிவின் மீது காலனித்துவ காலம் முதலாக ஏற்பட்ட தாக்கங்கள் துயரம் தருபவை. குறுகிய கால நலன்கள் பிரச்சினைகளுக்கான தீர்வுகளினடியாக பாரம்பரிய அறிவின் நிலை பேறான மேன்மைகள் புறந்தள்ளப்பட்டன. மேலை உலகின் சமூக பொருளாதார அரசியல் நோக்கங்களின் அடியாக அறிவியல் உலகம் தழுவியது என்ற வாய்பாடு முன்வைக்கப் பட்டது. காலனித்துவ சூழல் இத்தகைய கருத் தாக்கங்களை சுதேச பண்பாடுகளும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுகொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம். இதேவேளையில் உற்பத்தி அதிகரிப்பு, மிகை லாபம் என்ற முதலாளித்துவ தத்துவ மேலாண்மையும் இணைந்து கொண்டது. மக்களுக்கான உற்பத்தி என்ற நிலைபோய் உற்பத்திகளுக்காக மக்கள் என்றானது. இந்த வணிக முதன்மை பண்பாட்டில் அறிவை மிஞ்சிய மதிப்பை தொழில்நுட்பம் பெற்றுக் கொண்டமையும் இங்கு நம் கவனத்திற் குரியது. இயற்கையை அறிவியல் வென்றிட வேண்டும் என்பது இலக்காக அறம் பிழைத்த அறிவியல் தொழில்நுட்ப பயணம் தொடர்ந்தது.

ஆதிச் சமூகங்களில் தொழில்நுட்ப கருவிகளின் பயன்பாடு என்பது மனிதத் தேவை களின் அடியாகவே அமைந்தது. கருவிகள் மிகச் சிலவாகவும் அக் கருவிகளை கையாளுதல் என்பது மனித திறன்களின் வெளிப்பாடாகவும் காணப்பட்டது. இன்றோ தலைகீழ் மாற்றமாக கருவிகள் கையாளும் மனிதனை கட்டுப்படுத்து வனவாக மாற்றங்கட்டுள்ளன. எந்தவிதமு நியமங்களுமற்ற தொழில்நுட்ப நோக்கிடை மனித மதிப்பீடுகள் பொருள் இழந்து போயின. தனிமனித ஆக்கத்திறன் சுயம் என்பவற்றனைப் புறம் தள்ளி மனிதனை தொழில்நுட்ப பிராணி யாக்கும் நிலைமாற்றம் விளைந்துள்ளது.

மரபு-நவீனத்துவம் என்ற இரட்டை நிலைக் கருத்தாக்கங் களின் அடியாகவே இந்த புறந்தள்ளுதல் அமைந்திடக் காணலாம். "மரபைத் தவிர்க்க வேண்டும், நவீனத்துவத்தைத் தழுவ வேண்டும்" எனும் இந்த விழுமிய நோக்கி லான கருத்தாக்கம் ஒரு புலமை மரபாகவே வளர்க்கப்படுகின்றமை இங்கு நம் கவனத்திற் குரியது. படிமலர்ச்சிக் கோட்பாடு, அதனடியான மேம்பாடு தொடர்பான கருத்தாக்கங்கள் யாவும் நவீனமயமாக்கத்தையே மேம்பாடாக வரித்து நிற்கின்றன. இது சார்ந்த புலமையாளர்கள் மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடையில் நிகழுகின்ற ஒரு போராட்டமாக மேம்பாட்டினை சித்திரிக்கவும் செய்கிறார்கள். தேசங்களை வகைப்பாடு செய்வதற்கும் இந்த வாய்பாடுகளை பயன்படுத்த இவர்கள் தவறவில்லை. வளர்ந்த நாடுகள் - வளர்ந்து வரும் நாடுகள் அல்லது குறைவிருத்தி நாடுகள் என்ற அடையாளங் களின் விளக்க உரைகளாக நவீனமயப்பட்ட நாடுகள், நவீனமயமாகிவரும் நாடுகள், குறைந் தளவிற்கு நவீனமயப்பட்ட நாடுகள் என இவர் கள் முன்மொழிகின்றனர். இதனடியாக நவீன மயமாக்கத்தின் மேலை மாதிரிகளை இவர்கள் வரப்பிரசாதங்களாக குறிப்பிடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச அறிவியல் தொடர்பான கவனிப்புகளோ, பகுப்பாய்வுகளோ இல்லாம லேயே நவீனத்துவத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளும் நிலைமை பெரும்பாலான நாடுக ளின் அனுபவம் ஆனது. காலனித்துவகால மேலை ஆட்சியாளர்களின் கருத்தியல் ஆதிக் கம், கல்வி முறைவழியான சமூகமயமாக்கம் போன்றவற்றின் ஊடாக மேலைமயமாக்கம் என்பது ஒரு விழுமியமாக, உளச்சார்பாகவே பல புலங்களிலும் வளர்க்கப்பட்டன. மேற்கண்ட இந்த சிந்தனை போக்கினை கேள்விக்குள்ளாக் கிய மாக்சிய வாதிகளின் மேம்பாட்டுச் சிந்தனை கள் நம் கவனத்திற்குரியன. நவீனமயமாக்க, தொழில்மயமாக்க சமூகங்களில் இயற்கை மனிதனுக்கு அந்நியப் பட்டு போனமையும் சமூக ஒழுங்கமைவின்மையும் தனிமனிதக் குழப்பங் களும் அதிகரித்துப் போனமையும் மரபார்ந்த அறிவியல் வாழ்க்கை முறைகள் பற்றிய அவசியத்தினை உணர்த்தி நிற்கின்றன. நவீன அறிவும் அவ்வறிவின் வழியான மனிதரைத் தேடும் ஆராய்ச்சியும் வெறும் சந்தை ஆராய்ச்சி யாக சந்தையை மையமாகக் கொண்ட நுகர் வோரைத் தேடும் முயற்சிகளாகவும் முடிந்து போனமை இன்றைய வரலாறாகும்.

இவற்றிற்கு அப்பால் உலகளாவிய மனிதன், உலக மயமாக்கம் என்ற நவீன கருத்தாக்கங்ளும் கூட சந்தையை மையமாகக் கொண்ட லாப கணக்குகளாகவே அமைந்துள்ள மையும் நம் கவனத்திற்குரியது. சுதேச அறிவை, சுதேச வாழ்க்கை முறையை புறந்தள்ளுகின்ற இந் நடைமுறைகள் நவீனத்துவத்தின் பெயரால் நடக்கின்ற வணிகங்களாகவே அமைந்த ஆபத்து இன்று பெரிதும் உணரப்படுகின்றது. நவீனத்து வத்தின் வழியான மேம்பாடு என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வாழ்வின் அனைத்து தளங்களையும், அனைத்து தரப்பின ரையும் சென்றடையவில்லை. குறிப்பாக சமூக-பொருளாதார நீதி, பொருளாதாரச் செழிப்பு, அரசியல் சுதந்திரம், சுகாதாரம், கல்வி என்பவற்றில் தமக்குரிய பங்கினை பெறமுடியாத வாறு மறுக்கப்பட்ட மக்கள் எந்தளவிற்கு அவற்றினைக் கேட்கவும் பெறவும் முடிகின்றது என்பதனைப் பொறுத்தே உண்மையான அறிவின் பயனைத் துணிந்திடமுடியும்.

நவீனத்துவத்தின் வழியாக வந்த இந்த ஒருபக்கச் சார்பான மேம்பாடு பற்றிய தன் விமர்சனங்களிடை "சுதேச அடையாளங் களை-மரபுகளை மீள உறுதிசெய்தல், மேட்டுக்குடி-பொதுமக்கள் என்ற வேறுபாடுகள் அகன்ற புதியதொரு சுய பிரதிமையை வளர்த்தல், "நாம் யார்க்கும் குடியல்லோம்", நாம் இரண்டாம் தரப்பிரஜைகள் அல்ல எனும் நிலையினை எய்துதல் எனும் பண்பாட்டு உருமாற்றச் செயன் முறைகளை வலியுறுத்தும் போட்சின் கருத்தியல் நம் கவனத்திற்குரியது. (Portes, 1976) மரபுகளை உறுதிசெய்தல், மேட்டுக்குடியினரின் அறிவாதிக் கத்திலிருந்து விடுபட்ட பொதுமக்கள் வாழ்வி யலை உறுதிசெய்தல் எனும் இவ்விலக்குகளி னடியாகவே இன்று மீளவும் சுதேச அறிவிற்குத் திரும்புதல், சுதேச வாழ்க்கை முறைகளை அங்கீ கரித்தல் எனும் சிந்தனை இன்றைய சமுதாய மேம்பாட்டுப் புலங்களில் முதன்மை பெறக் காணலாம். சுதேச அறிவை, அதன் வழியான வாழ்க்கை முறைகளை பற்றிய அனுபவங்களை நேரடியாகவே அம்மக்களிடம் சென்று கற்றுக் கொள்ளுதல் என்பது இன்று சமுதாய மேம் பாட்டு முறையிலாகவே வளர்க்கப்பட்டுள்ளமை எம் கவனத்திற்குரியது.

இந்நிலையில் சுதேச அறிவிற்கும் பண்பாட்டுப் பல்வகைமைக்கும் இடையிலான உறவுபற்றிய மானிடவியல், சமூகவியல் சார்ந்த ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் பயனானவை. பல்வேறு பண்பாடுகளிடையான சுதேச அறிவின் முறைமைகளை புரிந்து கொள் வதற்கும் ஒப்பிடுவதற்குமான நான்கு பிரதான வழிமுறைகளை இக்கல்வி புலங்கள் எம தாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒத்த விடயங்கள் தொடர்பான வேறுபட்ட அறிவு
- வேறுபட்ட விடயங்கள் தொடர்பான வேறு பட்ட அறிவு
- வேறுபடும் வழிகளில் ஒழுங்கமைக் கப்படும் அறிவு
- வேறுபடும் வழிகளில் பெறப்படும், பரிமாற்றப்படும் அறிவு

இத்தகைய பண்பாட்டு பன்மையை மறுக்கும் நவீன அறிவு முறைமையானது, மிக எளிதான ஒரு சூத்திரத்திற்குள் பாரம்பரிய அறிவை மூடி நிற்கின்றது. இலகுவானது, உடனடியானது, லாபகரமானது என்ற இந்த சூத்திரத்திற்குள் நிலைபேறான வாழ்வினைக் காத்து நிற்கும் சுதேச அறிவின் மகத்துவம் உணரப்படாமையின் விலைகளை இன்றைய உலகம் பெருமளவில் கொடுத்துள்ளது. அறிவிய லின் வளர்ச்சி என்பது அழிவின் வளர்ச்சி எனும் படியான அனுபவங்களையே அதிகளவில் தருகின்ற நிலையில், மனித இருப்பை காப்பது முதல் மனித வாழ்வுக்கான சூழலை இயற்கை வளங்களை காப்பது வரை மீளவும் சுதேச அறிவே தஞ்சம் எனும் நிலைமைகள் இன்று மேழெளக்காணலாம். எடுத்துக்காட்டாக விவசாயப் புலங்களில் நவீன வணிக விவசாய தொழில் நுட்பத்தின் வழி ஒரே பயிர் என்ற நிலையில் இழக்கப்பட்ட நிலவளத்தை, போசாக் குக் உதவாத பயிரின பெருக்கத்தை கேள்விக் குள்ளாக்கும் பல ஆய்வனுபவங்களை இன்று காணமுடிகின்றது.

உண்மையில் பிரச்சினை அறிவிய லிலா அல்லது நியாயம் மறந்த தொழில்நுட்ப ஆதிக்கத்திலா என்பதனை ஆழ நோக்குவது அவசியமாகும். "அறிவியல் என்பது பல்வேறு மாற்று அறிவு மூலங்களைக் கொண்டது -- பன்மைத் தன்மையானது" என்ற உண்மையினடி யாகவே இன்றைய விழிப்புணர்வுச் செயல் திட்டங்கள் அமைகின்றன. வளர்முக நாடுகள் என்றும், குறைவிருத்தி நாடுகள் என்றும் பட்டி கட்டப்பட்ட நாடுகள் பலவற்றினதும் உணவு உற் பத்தி, சுகாதாரமான வாழ்க்கை முறைகள், நலமான பண்பாட்டு கோலங்கள் என்பன சுதேச அறிவின் மேன்மைக்கான சான்றுகளாக விளங்குவன.

இந்தவகையில் லெவி ஸ்ரோஸ் போன்ற சமூக-மானிட வியலாளர்களின் ஆய்வுகள் வெளிப்படுத்தும் உண்மைகள் நம் கவனத்திற்குரியன. பல்வேறு இனக்குழு மனிதர் களோடும் உடனிருந்து அவன் பசியையும் நோயையும் தன்னதாக உணர்ந்து கொண்டு ,அவனை பயிலும் மனிதநேய நெறியாக மானிட வியல் போற்றப்படும். இந்தவகையில் செவ் விந்தியர்கள் பற்றிய தன்னுடைய ஆய்வொன் றின் முடிவுரையாக லெவிஸ்ரோஸ் குறிப்பிடும் கருத்துக்கள் சுதேச அறிவின் பெறுமதியை வெளிப் படுத்தி நிற்கக் காணலாம். இன்றைய மனிதனின் கொந்தளிப்பான வாழ்வுக்கான ஒரு மாற்று வாய்ப்பாக சுதேச மக்களின் வாழ்க்கை முறையை, மனிதத் தன்மை கொண்ட அவர்களு டைய பண்பாட்டுக் கோலங்களை ஓர் அழகிய கண்ணாடிப் படிவம் போல பாதுகாத்துக் கொள்வது நம் கடமை என்பார் லெவிஸ்ரோஸ் (Levi-Strauss). லெவிஸ்ரோசின் இந்தக் கருத்தாக்கம் அமைப்பியலின் கற்பனாவாதமாக கருதப் பட்டாலும் சுதேச பண்பாட்டு வாழ்வின் பெறுமதியை வெளிப்படுத்தும் வாசங்கள் என்பதனை மறுக்கமுடியாது.

இயற்கையோடு இயைந்த வாழ்விய லில், பல்வேறு கேடுகளையும் விளைவித்த அறிவின் பெயரிலான அனைத்துச் செயன் முறை களையும் கேள்விக்குள்ளாகுவதும், இல்லா தொழிப்பதும் எங்களின் காலக் கடமையாகும். வீட்டிலிருந்து காடு வரை இந்தக் கடமைக்கான எல்லைகள் விரிந்துள்ளன. விட்டிலே அன்னையர்கள் கைப்பட தயாரிக்கப்பட்ட சத்துமாவைத் தூரத்தள்ளி இயந்திர அரையலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளாஸ்ரிக் பைகளில் வந்து சேரும் வெளிநாட்டு உணவே அதிக சத்துக் கொண்டது என்ற விளம்பரங்களுக்குப் பின்னால் உள்ள பொய்மைகளை வெளிப்படுத்த வேண்டி இருக்கின்றது. இது போலவே சமூகநலக் காடுகள் என்ற பெயரில் யுக்கலிப்ரஸ் போன்ற ஓரே மரங்களை, காணும் வெளியெலாம் நாட்டி மண்ணின் வளத்தை கெடுத்த நடைமுறைகளுக்கு எதிராகவும் விழித்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது. மேம்பாடு என்ற பெயரில் அடர்ந்து நிலத்தை காத்து நின்ற பண்பாட்டின் மரங்கள் யாவும் அழித்தொழிக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராகவும் செயல்பட வேண்டியுள்ளது. இவ்வாறே அதிக விளைச்சல், உயர் இலாபம் என்ற பெயரில் அறிமுகமாகும் இரசாயன உரங்கள் வழியான நில நஞ்சூட்டல் போன்றனவும் நம் கவனத்திற்குரியன. சாதாரண மண்ணின் மைந்தரான விவசாயிகளின் பொது அறிவில் கூட புலப்படக் கூடிய தீமைகள் அறிவின் பெயரால் இரவோடு இரவாக அகற்றப்பட்ட நிலைமைகள், விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். இந்தவகையில் பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கும் அவர் தரும் பெருந்தொகையான நிதி உபாயங்களுக்கும் அடிமைப்பட்டு உயிரி தொழில் நுட்பம் என்றும் வீரிய விதைகள் என்றும் சுதேச பண்பாட்டின் வழக்கங்களை இல்லாதொழிக்கும் உயர்கல்வி நிறுவனங்களின் ஆய்வு போக்குகளும் கூட மீள்விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அவ்வாறே மருத்துவம் என்றாலே அது அலோபதி மருத்துவம் தான் என்றான நிலைமையில் இருந்து மானிடவியல் அழுத்தி நிற்கும் முழுதளாவிய மருத்துவம் என்ற இலக்கினை நோக்கிய நகர்வும் நம்பிக்கை தருவன. சுதேச மருத்துவ முறைமைகளை மலினப்படுத்தி புறந்தள்ளும் நிலைமைகள் காணப்பட்ட போதிலும் கூட முன்னுதாரணமான ஒன்றிணைக்கப்பட்ட சுதேச நவீன அறிவு திரள் கட்டமைப்புக்களின் வளர்ச்சி நிலைகளை இன்று அதிகளவில் காண முடிகின்றது.

பண்பாட்டு பல்வகைமையுடனான அறிவுத் திரளமைப்பின் வளர்ச்சியிலேயே நிலைபேறான மேம்பாடு தங்கியுள்ளது என்ற இன்றைய விழிப்பின் பயனாய் அறிவைத் தேடி, அறிவின் மூலங்களைத் தேடி மக்களிடம் செல்லும் ஆய்வுப் பயணங்கள் இன்று சமூதாய பங்கேற்புடனான ஆய்வு, தீர்மானங்களை எடுத்தல் என்றவாறு வளர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதேச மக்கள் நிலைபேறான வாழ்வுக்கான பரந்த பொது நிலைப்பட்ட அறிவினைக் கொண்டிருக்கின்றார்கள். ஆயினும் இன்று நிலவும் நியம கல்வி அமைப்புக்கள், சுதேச அறிவுத் திரளினை அவ்வறிவின் கற்றல் முறைமைகளை ஏற்றுக்கொள்வதில்லை. இன்றைய கல்வி மரபின் புறந்தள்ளலினால் பெருமளவான சுதேச அறிவுத் திரளை நாம் இழந்துவிட்டோம்.

புதிய விழிப்புணர்வின் பயனாய் உள்ளூர் பண்பாட்டின் வழியான அறிவை மதிக்கவும், அதனை இன்றைய கல்வி முறைமையில் பொருத்தமான முறையில் இணைக்கவும் வேண்டிய இன்று மேற்கொள்ளப்படும் ஏற்பாடுகள் நம்பிக்கை தருவன. இம் முயற்சிகள் பின்வரும் இலக்குடன் மேற்கொள்ளப்படுகின்றன:

- நிலை பேறான வாழ்விற்கான சுதேச அணுகுமுறைகளை ஆராதித்தல்
- நிலைபேறான சமுதாயத்தை பேணிக் கொள்வதில் சுதேச அறிவினதும் மரபு வழியான கற்றல் முறைமைகளினதும் இடத்தினை வலியுறுத்துதல்
- சுதேச அறிவினையும் அதன் கற்பித்தல், கற்றல் செயன் முறைகளையும் தாழ நோக்கும் "நவீன" கல்வி முறையின் போக்கினை விளங்கிக் கொள்ளுதல்.
- இன்றைய பாடசாலை கலைத்திட்டத்தில் சுதேச அறிவினையும், அதன் கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகளையும் பொருத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான முறையில் இணைக்கக் கூடிய வாய்ப்புக்களை இனங்காணல்.

மேற்கண்ட இலக்குகளினடியான முதல் செயல்பாடாக சுதேச அறிவு அனுபவங்களுக் கான தேடல் அமைகின்றது. சுதேச பண்பாடு களின் அனுபவமிக்க முதியவர்கள் இந்தத் தேடலின் குவிமையங்கள் ஆகின்றார்கள். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்பது தமிழின் முதுமொழி. இவ்வாறே "முதியவர் ஒருவர் இறக்கின்ற பொழுது ஒரு பெரும் நூலகமே எரிகின்றது" என்பது ஆபிரிக்காவில் இன்றும் போற்றப்படும் பழமொழி. இத்தகைய பெருமைக்குரிய சுதேச அறிவின் மூலவர்களை நாடி அவர்கள் அறிவு அனுபவங்களை சேகரிக் கும் ஆய்வுக் களங்கள் பலவற்றை இன்று ஆபிரிக்க பண்பாட்டுப் புலங்களில் காண முடியும். நவீன இலத்திரனியல் சாதனங்களின் வழியான ஒளிப்பதிவு முறைமைகளைப் பயன் படுத்திப் பெறப்படும் இவ்வறிவுத் திரளானது ஏனைய புலங்களுக்கும் வழிகாட்டிகளாகின்ற மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த அனுப வங்கள் எங்கள் புலங்களுக்கும் விரிவுபெற வேண்டும்.

19ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் பெரும்பாலான வளர்முக நாடுகளில் காலனித் துவ அரசுகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட நியம கல்விமுறையானது அரச நிர்வாகிகளை, எழுது வினையர்களை, ஆசிரியர்களை இன்னோரன்ன தேவைகளுக்கான பயிற்சியாளர்களை உரு வாக்கும் கல்வியாக மட்டுப்பட்டுப்போனது. மேலை முதலாளித்துவ தொழில்மயமாக்க உலகின் இலக்குடனான கருத்துருவ அறிவு முறைமையே இங்கு வழங்கப்பட்டது. சுதேச அறிவிற்கோ அல்லது சுதேச கல்வி முறைமை க்கோ மிகச் சிறிய இடமே இருந்தது. பல சந்தர்ப் பங்களில் சுதேச அறிவானது பொருத்தமற்றது, அறிவுபூர்வமற்றது, காலாவதியானது என்ற கருத்தாக்கமும் ஆதிக்கம் பெற்றிருந்தது.

இன்று ஏற்பட்டுள்ள சுதேச அறிவு தொடர்பான விழிப்புணர்வானது பாடசாலைக் கலைத்திட்டத்திலும் கற்பித்தல், கற்றல் செயன் முறையிலும் சுதேச அறிவு – அறிமுறைகளுக் கான இடத்தினை அழுத்தி நிற்கின்றது. இதன்வழி மாணவர்கள் தங்கள் அம்மா, அப்பா, அம்மம்மா, அப்பப்பா, தாத்தா, பாட்டி இன்னும் சமுதாயத்து விளங்கும் மூத்தோர் அனைவரிட மும் உறவாடுதலுக்கான களங்களை ஊக்குவிக் கலாம். தம் மூத்தோரை அவர் அறிவை மதிக்கும் உளச்சார்பையும் இது வளர்த்திடும். இளைய– முதிய தலைமுறையினருக்கிடையிலான தலை முறை இடைவெளியினை மேவவும் அவர்களுக் கிடையிலான ஒத்திசை வினை மேம்படுத்தவும் இது வழிசமைக்கும். ஒரு விதத்தில் பண்பாட்டு பரிமாற்றத்தினை உறுதி செய்யும் முகவராகவும் இக்கலைத் திட்ட இணைப்பு பயன்தரும். நவீன வாழ்வின் உலக மயமாக்க அலைகளிடை அடை யாளம் தொலைககின்ற அவலங்களிலிருந்தும் சுதேச பண்பாடுகள் காக்கப்படவும் இச்சுதேச அறிவுக் கல்வி பெருந்துணையாகும்.

சுதேச சமுதாயங்கள் தம்சூழமைவுடன் இசைவாக்கம் கொண்டு சூழல் வளங்களை அளவோடு பயன்படுத்துவன மீள் உற்பத்திக் கான எல்லைகளை அறிந்து செயற்படுவன. நிலை பேறான சுதேச அறிவானது இம்மக்களின் சுற்றுச்சூழல் தொடர்பான விழுமியங்கள் உளச் சார்புகளையும் வெளிப்படுத்துவன. இந்த விழு மியங்களும், உளச்சார்புகளுமே அவர்களின் செயற்பாடுகளை வழிப்படுத்தி நிலைபேறான ஒரு வாழ்வின் சொந்தக்காரர்களாக அவர்களை ஆக்கியது. எனவே சுதேச அறிவு தரும் இந்த விழுமியங்கள் உளச்சார்புகள் பற்றிய கற்ற லானது நிலைபேறான எதிர்காலத்திற்கான எங்கள் தூர நோக்கிற்கு வல்லமை சேர்க்கும் எனலாம்.

சுதேச அறிவானது ஏற்கனவே நாம் குறித்தவாறு பண்பாட்டின் பொக்கிசமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளது. மரபுகள், வழக்காறுகள், நாட்டார் கதைகள், நாட்டார் பாடல்கள், நாட்டுக் கூத்து, புராணங்கள், பழமொழிகள், தொன்மங்கள் எனும் பல்வேறு வடிவங்களில் இவை காக்கப் பட்டுள்ளன. இப் பண்பாட்டுக் கூறுகளை பாட சாலைக் கலைத்திட்டத்தின் மூலங்களாக ஆக்குவதன் மூலம் சுதேச அறிவினை இன்றைய தலைமுறை மாணவர்களின் வாழும் அறிவுத் திரளாக்கமுடியும். இதன் வழியாக மாணவர் களின் எண்ணக்கருவாக்க எல்லைகள் விரியும். சுதேச புலங்களையும் கடந்து புதிய அனுபவங் களில் பண்பாட்டு அறிவினை பயன்படுத்தும் வாய்ப்புகளும் ஏற்படும். எங்கள் கல்வி அமைப்பில் இவ்வாறான பண்பாட்டு அம்சங்கள் ஆங்காங்கே தலைகாட்டிய போதும் அவை வெறுமனே ரசனை சார்ந்த அல்லது மனனப் பாடங்களாக முடிந்து போகின்றமையும் இங்கு கவனம் பெற வேண்டும். இந்த பண்பாட்டு செல்வங்களுக்குள் இருக்கின்ற அறிவின் கூறுகளை இனங்கண்டு, இனங்காட்டும் வல்லமை கொண்டவர்களாக எங்கள் ஆசிரிய வல்லமைகள் வளர்க்கப்படுவதும் அவர்களின் ஈடுபாடும் பங்கேற்பும் இன்றியமையாதன.

வினைத்திறனான கல்விக்கான தத்துவ மாக அறிந்தவற்றிலிருந்து அறியாதனவற்றிற்கு நகர்தல் முன்வைக்கப்படும். இந்த அறிதல் முறையை சுதேச அறிவுக் கல்வியிலும் பயன் படுத்துதல். மாணவர்கள் தத்தம் வாழ்வு புலங்க ளான கிராமங்களில் தொடங்கி பின்னர் பிராந் திய, தேசிய, உலகளாவிய சூழல் அறிவு என பயணிக்கலாம். பெரும்பாலான சமூகங்களில் எண்ணற்ற சுதேச அறிவு பொக்கிஷங்கள் உள்ளன. பல நூற்றாண்டு கால சூழலுடன் இசைந்த வாழ்வின் சாரங்களாக இவை விளங்கு கின்றன. நிலம், காலநிலை, நீர், வனம், வன விலங்குகள், கனிமங்கள் என பல்வேறு விடயங் கள் தொடர்பாக இவ்வறிவுத் திரள் விளங்கு கின்றது. அனுபவ ஞானமாகவுள்ள இந்த அறிவுத் திரளினை பொருத்தமான முறையில் கல்வியில் பயன்படுத்தும் பொழுது அந்த அறிவின் பயன் தலைமுறை தலைமுறையாக தொடர்ந்திடும் எனலாம்.

தம் சூழமைவில் களப்பணிகளை மேற்கொள்வதன் மூலம் அதிகளவு அறிவினைப் பெற்றுக் கொள்ளமுடியும். எடுத்துக் காட்டாக விவசாய புலமொன்றில் மண் வகைகள், பயிர் வகைகள் தொடர்பாக உள்ளூர் விவசாயிகளு டனும் அவர்கள் கைக்கொள்ளும் மரபார்ந்த பயிர்ச் செய்கை முறைகள் பற்றியதுமான கலந்துரையாடல்கள் இந்தவகையில் பெரும் பயன் விளைக்கும்.

எங்கள் புலங்களில் இன்று பெருமள விற்கு நவீனத்துவம், அதிகலாபம் என்ற இலக்கில் ஆக்கிரமித்துள்ள பயிர்ச்செய்கை முறைகள் நிலத்தின் வளத்திற்கு கேடான இரசாயன உள்ளிடுகைகள் பற்றிய அனுபவங் களை மாணவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தாலும் உள்ளூர் சுதேச நடைமுறைகள் தொடர்பான மாணவர்களின் கேள்விகள் இன்றைய நடை முறைகள் பற்றிய மீள் சிந்தனைக்கு வழி சமைக்கும்.

இவ்வாறாக சுதேச அறிவுக் கல்வியில் ஏற்படும் மேம்பாடானது குறித்ததொரு பண் பாட்டுப் புலத்திற்கு மட்டுமன்றி உலகளாவிய மனித சமுதாயத்திற்கும் பயன் தருவதாக அமையும். அதேவேளையில் சுதேச அறிவை இன்றைய காலத்து சமூக ஆட்சி, நியமங்களுடன் பொருத்தமான முறையில் இணைத்துக் கொள் ளாத போது சுதேச அறிவின் உரிமைங்களை பிறர் எடுத்துக்கொள்ளும் ஆபத்தும் உள்ளது. எங்கள் பண்பாட்டுப் புலத்தின் வேம்பின் மகத்து வமும் அதன் மருத்துவ பயன் உரிமங்களும் அமெரிக்கமயமான நிலைமை இதற்கான எடுத்துக்காட்டாகலாம். இது சுதேச அறிவை அதன் பண்பாட்டு நியமங்களுக்கு பங்கம் ஏற்படாத வகையில் இன்றைய அறிவியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியமங்களோடு வளர்த்தெடுத்தலின் அவசியத்தையும் உணர்த்தி நிற்கின்றது.

அறிவியலின் வளர்ச்சி இத்தகு நிலைகள் வல்லமையான மேம்பாட்டின் விசைகளாக தொழிற்படும். ஆபிரிக்கப் பண்பாட்டுப் புலங்கள் பலவற்றில் இன்று நிகழும் போரிற்குப் பின்னரான மீள்வாழ்வுக்கான நிகழ்ச்சித் திட்டங்களில் இந்த சுதேச அறிவின் வல்லமைகள் பதிவு பெறுவதினை இங்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். குறிப்பாக இரண்டு வருடங்களுக்குள்ளாகவே மீள்குடியேற்றப்பட்ட ஐந்து மில்லியன்களுக்கும் அதிகமான மொசாம்பிக் மக்களின் வாழ்வனுபவங்கள் பற்றிய சமுதாய தலைவர்களின் நம்பிக்கைக் குரல்கள் ஏனைய பண்பாட்டுப் புலங்களுக்கும் வழிகாட்டியாக அமைவன. நிலைபேறான மேம்பாட்டிற்கான பயணத்தில் இத்தகைய மீள் சிந்தனையும், அறிவுத் திரள்களை பொருத்தமாக ஒன்றிணைக்கும் நடைமுறைகளும் நிறைந்த நன்மைகளை தரும் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன் வட்டகை
## (சமகாலமும் வரலாற்றுத் தடங்களும்)

கருணாகரன்



"அலியன் யானை" என்றொரு கதையை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருந்தார் ச.முருகானந்தன். வன்னேரிக் குளத்தில் மருத்துவராக வேலை பார்த்த காலத்தில் இந்தக் கதையை எழுதினார் ச.மு. படித்து முடித்த கையோடு 26 வயதில் வன் னேரிக் குளம் மருத்துவமனைக்கு முதல் நிய மனம் கிடைத்து வந்தவர் ச.மு. காட்டையே அறிந் திராத ஒரு யாழ்ப்பாண வாசியைக் கொண்டு வந்து யானைக்காட்டின் மத்தியிலிருக்கும் சிற்றூர் ஒன்றில் "வேலை பார்" என்று சொன் னால் யார்தான் ஏற்பார்கள்? சரியான போக்கு வரத்துக் கிடையாது. பகலிலேயே தெருவில் தலைக்கறுப்பைக் காண்பது அபூர்வம். மின் சாரம் இல்லை. ஊரில் ஏதோ சாட்டுக்கு இருக்க வேணும் என்ற மாதிரி இருந்த ஒரேயொரு கடை. அதுவும் சின்னஞ்சிறிய ஓலைக்கொட்ட கையில். ச.மு வந்த பஸ்ஸிலேயே திரும்பிக் கிளம்பினார். "வேலையாவது மண்ணாங்கட்டி யாவது. இதைவிட ஊருக்குப் போய் வெங்கா யம் வைத்துப் பிழைக்கலாம்" என்று நினைத் தார்.

ஊருக்குத்திரும்பியவர் "எதற்கும் ஒரு தடவை மாற்று இடமொன்றைக் கோரிப் பார்க்க லாம்" என்று அதிகாரியைச் சந்திக்கச் சென்றார். "வேண்டுமானால் இரண்டு ஆண்டுகள் மட்டும் அங்கே வேலை செய். பிறகு திரும்பி வருவதைப் பற்றி யோசிக்கலாம்" என்று திருப்பி அனுப்பி னார் அதிகாரி. என்றாலும் மனம் தயங்கியது. வேறு வழியின்றி மறுபடி திரும்பி வன்னேரிக் குளத்துக்கு வந்த ச.மு வுக்கு மெல்ல மெல்ல ஊர் பிடித்துக் கொண்டது. ஆட்கள் பிடித்தனர். அப்படியே அங்கேயே இருந்து விட்டார். பிறகு வன்னேரிக்குளத்தில் அவர் சொன்னதே வேதம். இறுதியாக ச.மு, தன்னுடைய ஓய்வை அங்கி ருந்தே எடுத்தார். அவ்வளவு காலம் அங்கே சேவை. அங்கேதான் வாழ்க்கை. வன்னேரிக் குளத்தோடு ஒன்றி ஒன்றாகி விட்டார் ச.மு.

ச.மு வை விட வேறு யார்தான் அங்கே விரும்பி வருவார்கள்?

அந்த நாட்களில் அக்கராயன், ஸ்கந்த புரம், வன்னேரிக்குளம் போன்ற இடங்களில் காட்டு யானைகளே ராஜாங்கம் நடத்தின. வயலில், வாழைத்தோட்டங்களில், தென்னந் தோப்புகளில் ஏன் தெருக்களிலும்கூட. பொழுது கவிழ்ந்தால் இந்தப் பகுதிகளில் பயணம் செய்வ தற்கு அஞ்சுவார்கள். வழியில் பெரும்பாலும் எங்காவது யானைக்கூட்டத்தில்தான் முட்டிக் கொள்ள வேண்டும். சிலவேளைகளில் தனி யனில். மழைக்காலத்தில் இது நிச்சயம். தெருவில் வேறு சனப்புழக்கம் இல்லை. ஒன்றிரண்டு பஸ்க ளைத் தவிர வேறு வண்டிகள் கிடையாது. வயல் விதைப்புக்காலத்திலும் சூடடிப்பு வேளையிலும் ட்ரக்ரர்கள் நடமாடும். அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள்தான் இந்தப் பகுதிகளில் இருந்தவர்களின் வாழ்க்கை ஓடியது. தொழில்களும் ஓடின. வேறு என்னதான் செய்ய முடியும்? நிலவுக்கு ஒளிந்து பரதேசம் போக முடியுமா? வேளாண்மைக் காலத்தில் காட்டெருமை, பன்றி, யானை என்று எல்லாவற்றுக்கும் காவல். காவல் இல்லையென்றால் எல்லாமே காலி. காடுகளின் மத்தியில் ஊரை வைத்திருந்தால், பயிர்களை விளைத்தால் இதை விட வேறு எப்படியிருக்கும்? எப்படித்தான் திட்டமிட்டார்களோ தெரியாது, ஓங்கிச் சடைத்து வளர்ந்திருந்த காட்டின் மத்தியில் சனங்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதற்கு?

1950களில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கும் கிளிநொச்சிக்கும் ஏராளம் குடும்பங்கள் குடியேற வந்தன. யாழ்ப்பாணத்தில் நிலமும் தொழிலும் போதாது. நிலம் இருந்தவர்களுக்கும் அதன் அளவு போதாது. பஞ்சம் பிழைக்க வேண்டுமானால் பரதேசம் போகலாம் என்று கிளம்பி வன்னிக்கும் கிளிநொச்சிக்கும் வந்தார்கள். வன்னி என்றால், அது காடின்றி வேறென்ன?

காட்டாறுகளை வழிமறித்துக் கட்டப்பட்ட குளங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே வன்னியிலும் கிளிநொச்சியிலும் குடியேற்றங்கள் நடந்தன. கொக்காவில் – அக்கராயன் காட்டை அறுத்துப் பாய்ந்து பூநகரிக் கடலில் சேரும் நிலையாற்றையும் வலம்பற்று ஆற்றையும் மறித்து அக்கராயன் குளத்தைக் கட்டினார்கள். நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் நவரத்தினம், ஆறுமுகம் ஆகியோரைக் கொண்ட குழுவினர் இதில் ஈடுபட்டனர் என்று தகவல்.

தென்னியன் குளத்தின் கீழிருந்து ஓடிவரும் மண்டைக்கண்ணாற்றை வழிமறித்து வன்னேரியில் ஒரு குளம். அதன் பொறியியலாளர்......?

இதற்குப்பிறகு அக்கராயனில் குடியேற்றத்திட்டங்கள் வந்தன. பிறகு ஸ்கந்தபுரத்தில். 2ஆம் உலகப்போர்க்காலத்தில் சிங்கப்பூரிலிருந்தும் மலேசியாவிலிருந்தும் நாடு திரும்பிய தமிழர்களுக்கு நட்ட ஈடாகவும் தொழில் துறையாகவும் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் அக்கராயனில் காணிகளை வகுத்துக் கொடுத்தார்கள். ஒரு தலைக்கு 05 ஏக்கர் மேட்டு நிலமும் 10 ஏக்கர் வயற்காணியும். மொத்தம் 1500 ஏக்கரில் திட்டம். 75 சிங்கப்பூர் – மலேசிய வருகையாளர்கள். 25 பேர் வருமான வரி செலுத்துவோர். மொத்தமாக 100 தலைகள். இதற்கு நீர் அக்கராயன் குளத்திலிருந்து வலது கரையினால் பாய்ந்தது.

இப்படியெல்லாம் கிடைத்தும் பல பேர் அக்கராயனுக்கு வரவேயில்லை. யானை, நுளம்பு, பாம்பு என்று மனிதனுக்கு விரோதியான அத்தனை பிராணிகளோடும் கூடி வாழ்வது அவ்வளவு சுலபமானதல்ல. போதாக்குறைக்கு பாதையோ பயணமோ வேறு ஒழுங்கில்லை. இந்தச் சீரில் யாரய்யா வந்து காட்டில் நாடமைப்பார்? வந்தவர்களும் கையில் இருந்த சேமிப்பையும் வந்த வருவாயையும் செலவழித்துக் களைத்தார்கள். ஆனாலும் மண்ணை நம்பினால் அது கைவிடுவதில்லை. காலம் செல்லச் செல்ல பயிர்கள் செழித்தன. பயிர்கள் செழிக்க வாழ்க்கையும் செழித்தது. வாழ்க்கை செழிக்க அங்கே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைக்கு வெளியூரிலிருந்து பிரமுகர்களை அழைத்து வந்தார்கள் மலாயன் பென்சனியர்கள். அப்படி வந்தவருள் ஒருவர் தனிநாயகம் அடிகள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? மலேசியன் பென்சனியர்கள் பலருக்கு ஒழுங்காகத் தமிழில் பேசத் தெரியாது. எனவே தங்களின் இந்தத் தெரியாத்தனத்தை மறைப்பதற்காக அவர்கள் தனிநாயகம் அடிகளை அழைத்து வந்தார்கள்.

இங்கே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். மத்திய வகுப்புத்திட்டத்தில் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் – இவரும் மலேசியாவிலிருந்து வந்திருந்தவர்தான் – (கமலம்மா என்று பெயர்) தனியாகவே துணிச்சலுடன் பல விசயங்களைச் சாதித்தார். என்றால், உழவு செய்வதில் இருந்து துவக்கெடுத்துச் சுடுவது வரையில் ஆள் படு விண்ணி. அதே காலத்தில் இந்தப் பகுதியில் இருந்த இன்னொருவர் "சுபாஸ்" சந்திரன். யாழ்பாணத்தில் உள்ள "சுபாஸ் ஹொட்டேல்" உரிமையாளர். பின்னாளில் இவர் பெரும் பிரபலஸ்தவர். தொடக்கத்தில் (சிறுவயதில்) அக்கராயனில் கமம் செய்தவர்.

ஸ்கந்தபுரம் குடியேற்றத்திட்டத்தை உரு வாக்கியவர்களில் முக்கியமானவர் அப்போது யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராக இருந்த சிறிஸ்கந்தராஜா. அவருடைய பெயரிலேயே குடியேற்றத்திட்டத்தை உருவாக்கலாம் என்றார் காணி அதிகாரியாக இருந்தவர். சனங்களும் ஆமோதித்தார்கள். ஆனால், அவருடைய பெயரில் வில்லங்கமான ஒரு சொல் இருந்தது. அது சிறி சட்டம் பற்றி பலரும் கொந்தளித்துக் கொண்டிருந்த காலம். எனவே அவருடைய பெயரின் முன்பகுதியிலிருந்த சிறி என்ற சொல்லை எடுத்து விட்டு "ஸ்கந்தபுரம்" என்று பெயர் வைத்தனர். அதுவே வழமையாயிற்று. ஆனால், வரலாறு ஒரு போதும் நேர்கோட்டில் பயணிப்பதில்லையல்லவா! புலிகளின் காலத்தில் (1997 – 2008) வரையில் அவர்கள் ஸ்கந்தபுரத்தை "கந்தபுரம்" என்றே அழைத்தனர். பேருந்துகளில் கூட "கந்தபுரம்" என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

அக்கராயனில் பாய்ந்து கொண்டிருந்த இந்தக் காட்டாறுகளை வழிமறித்து இதற்கு முன்னும் பல குளங்களை முன்னோர் கட்டியி ருக்கிறார்கள். அவற்றின் எச்சங்கள் இன்னும் அங்கும் இங்குமாகச் சிதைந்திருப்பதைக் காணலாம். அநேகமாக அது கறுப்புச் சிவப்பு சுடுமண் காலம் என்று சொல்லப்படுகிறது. கி.மு. – கி. பி முன்பின்னான காலம் எனச் சொல் வோரும் உண்டு. இன்னும் இந்தக் கறுப்புச் சிவப்பு மண்சிதைவுகளை இந்தப் பகுதிகளில் காணலாம். குறிப்பாக அக்கராயன் – அம்பலப் பெருமாள் சந்தியிலிருந்து தெற்கே தென்னியன் குளம் செல்லும் வழியிலும் காட்டோரங்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் இவை தாராளம். தென்னியன் என்பதே ஒரு தமிழ் மன்னன் என்று கூட ஐதீகம் உண்டு. மட்டுமல்ல, அம்பலப் பெருமாள், அக்கராயன் என அன்றைய தலைவர் கள் அல்லது அரசர்கள், வணிகர்கள் இருந்திருக் கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அக்கராயன் குளமும் ஏற்கனவே சிதைந்த நிலையிலிருந்த குளத்தை ஆதரமாக வைத்துக் கட்டப்பட்ட ஒன்றுதான். குளத்தின் தென்கரையில் இதைத் தெளிவாகப் பார்க்க லாம். அதிலும் குளம் வற்றும் கோடைகாலங் களில் இந்தப் புலப்பாடு இன்னும் துலக்கமாகும். பழைய குளத்தைப் புதுப்பித்துக் கட்டும்போது ஏராளமான மண்ணோடுகளையும் பழைய நாணயங்களையும் கண்டெடுத்திருக்கிறார்கள் அங்கு வேலைசெய்த பணியாளர்கள். பிறகு இதை அறிந்த தொல்சேகரிப்பாளர்கள் தாங்க ளும் சுயமாகத் தேடிப் பலவற்றைக் கண்டெடுத் துள்ளனர். இன்னும் மண்டைக்கண்ணாற்றின் வழிநெடுகிலும் அதன் தீரங்களிலும் அங் கொன்று இங்கொன்று என இந்தச் சிதிலங்க ளைப் பொறுக்கலாம். நான்கூட அப்படிச் சில சிதிலங்களைப் பொறுக்கியிருக்கிறேன். இந்தப் பகுதிகளில் மேகநாதன், குணரத்தினம் ஆகிய இருவரும் இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப் பதில் ஆர்வமாக இருந்தார்கள். சில சந்தர்ப்பங் களில் மேகநாதனுடைய தொடர்பின் வழியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்து றைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் கூட இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மாணவர்களே வந்து இந்தப் பகுதிகளைப் பார்த்திருக்கிறார்கள். முக்கியமாக அக்கராயன்குளத்துக்கு வடக்கிலுள்ள – இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணாவில் என்று சொல்லப்படும் இடத்தின் கிழக்குப் – பகுதியில் உள்ள காட்டில் சிதைந்திருக்கும் இன்னொரு சிறிய குளத்தை அண்மித்துள்ள மேடொன்றில் புதைந்திருந்த தொல்சின்னத்தை. இங்கே செங்கல்லால் ஆன புராதன பதிகை ஒன்று உண்டு. அகழ்ந்தபோது தமிழ்ப்பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண் தகடுகள் காணப்பட்டன. கூடவே மண்ணாலான பானையின் உள்ளே வைக்கப்பட்ட உலோகத்தி லான உருக்கள் மற்றும் சாம்பல். மேலும் சுடு மண் சிற்பங்களும். இதைவிட உலோகத்தாலும் கல்லாலும் ஆன சில புராதன நாணயங்களும். அணிகலனாக கழுத்துமாலையில் கோர்க்கப் படும் மணிமுத்துப் பரல்கள். இவையெல்லாம் அங்குமிங்குமாக இன்னும் மண்டைக்கண் ஆற்றின் தீரங்களில் சிதறிக்கிடக்கின்றன. வேட் டைக்காரர்களும் காட்டுக்குச் செல்வோரும் அவற்றைக் கண்டெடுத்திருக்கிறார்கள். என்றால், இங்கே பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்க்கை நீண்டிருக்கிறது. ஒரு நாகரீக நீட்சியை அவர்கள் தங்களோடு கொண்டிருக்கி றார்கள்.

இதைப்போல இங்குள்ள வேறு சில இடங்களிலும் தொல்சின்னங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அக்கராயன் இரண்டாம் பகுதி வாய்க்கால் பகுதியை அண்மித்து, பெ.கணேசன் வீட்டில் ஒரு தொகுதி மண்ணாலான யானை களும் மனித உருக்களும் குழாய் வடிவிலான வேறு சில சுடுமண்பொருட்களும். ஏறக்குறைய இரண்டடி உயரம் வரையான மண்யானைகள். நேர்த்தியான கைவண்ணங்களில். தென்னை மரத்துக்கு பசளை இடுவதற்காக அகழ்ந்தபோது இவை கிடைத்தன என்று சொல்கிறார் பெ. கணேசன். கணேசன் அக்கராயன் பிரதேசத்தின் முக்கியமான எழுத்தாளர். ஆசிரியர். (தற் பொழுது பாரதிபுரம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகிறார்). இன்னொரு தொகுதித் தொல்சுவடுகள் கண்ணகைபுரத்தில் நாகமுத்து என்ற விவசாயி ஒருவரினால் காணப்பட்டன. பிறகு அவற்றை அடையாளம் கண்டார் மேகநாதன். அங்கே மண்ணாலான சிற்பங்களும் ஒரு வகையான உலோகத்திலான கருவிகளும் கல்லாயுதங்களும் இருந்தன. ஆனாலும் அதிக ஈடுபாட்டோடு இந்தப் பகுதியில் வரலாற்றுச் சுவடுகளைத் தேடியவர் குணரத் தினமே. இதற்காக அவர் நடந்த தொலைவு வியப் பூட்டுவது. இந்தப் பகுதியில் இன்னொரு ஆச்சரி யம், இரும்பை ஒத்த உலோகப்பொருள்போலக் காணப்படும் சிதிலங்கள். பரிசோதனைக்காக அவற்றை மூதாதையர்கள் ஆலைப்படுத்த முயற்சித்திருக்கலாம் என்பது தி.தவபாலனின் நம்பிக்கை. ஆனால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் தொகுத்தும் முழுமைப்படுத்தியும் பார்ப்பதற் காக காலக்கனி யார் கையிலும் இன்னும் கிட்ட வில்லை.

அக்கராயன் பகுதியில் இன்னொரு நவீன ஆச்சரியம், இங்கே அமைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி என்ற தென்னிலங்கைக் கிளர்ச்சி யாளருக்காக அமைக்கப்பட்டிருந்த சிறைக் கூடங்கள். இந்த நாளில் என்றால் இதைப் "புனர்வாழ்வு மையங்கள்" என்று சொல்லியிருப் பார்கள். இப்பொழுது அக்கராயன் மகா வித்தி யாலயமாக ("காம்ப்"படி பள்ளிக்கூடம்) இயங்கிக்கொண்டிருக்கும் கட்டிடத்தொகுதியின் முந்திய வடிவமே இந்தச் சிறைக்கூடங்கள். 1971இல் ஜே.வி.பியின் கிளர்ச்சி முறியடிக்கப் பட்டபொழுது சிறைப்பிடிக்கப்பட்டவர்களை இங்கேகொண்டுவந்து அடைத்தது அரசு. சிறை யிருந்த புதல்வர்களைத் தேடிவந்த பெற்றோர் கள் தங்கிச்செல்லவும் கண்காணிப்பு அதிகாரி கள் தங்கவும் அமைக்கப்பட்ட கட்டிடங்களே இன்றைய ஆசிரிய விடுதிகள். அப்பொழுது அமைக்கப்பட்ட கண்காணிப்பு வீதிகள் இன்னும் சிதைந்த நிலையில் இருப்பதைக் காணலாம். எப்படியோ ஒரு சிறைத் தொகுதி இப்படிக் கல்வித்தொகுதியாக மாறியிருப்பதில் மகிழ்ச்சியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது அக்கராயன் பிரதேசம் சற்று வரட்சி கூடிய ஒன்றே. பூநகரி, துணுக்காய், மன்னார்த் தொடர்ச்சியான மேற்குப் பக்கம் பொதுவாகவே வரட்சியான பகுதிதான். இந்தத் தொடர்ச்சியாகவே அக்கராயனும் உள்ளது. ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களை விடச் சற்று செழிப்பான காடுகளையும் குளங்களை யும் உடையது. ஆனாலும் கரைச்சியின் பிற பகுதிகளுடன் நோக்கினால் அக்கராயன் வெம்மையேந்தியே.

முறிப்பு, அக்கராயன், வன்னேரி என மூன்று பெரிய குளங்களும் மணியங்குளம், மணற்குளம் என வேறு சிறிய சில குளங்கள் இருந்தாலும் இந்தப் பிரதேச மேட்டு நிலங்கள் கடும் வரட்சியில் தவிப்பவை. குளங்களின் கீழே விரிந்து நெடுத்த வயற்படுக்கைகள் உள்ளன. ஆனால் அந்த அளவுக்கு மேட்டில் குடிநீரை எடுப்பதே சிரமம். ஆனாலும் இங்குள்ள வலியன் கள் இதைக் கடந்தும் தங்களை எப்படியோ விளைத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். முன்னர் இங்கிருந்த ஆதிக்குடிகள் ஆற்றின் படுகையோரங்களில் இருந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியெல்லாம் இன்று காடு. முன்னர் காடாக இருந்த பகுதி இன்று ஊர்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. எப்படியோ, இன்றைய ஊர் மடியில் வலது கரையிலும் இடதுகரையிலுமாக தென்னையும் மாவும் வளர்ந்திருக்கின்றன. வீதிகள் இன்னும் அறுத்தோடிகளாக இருந் தாலும் சனங்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டும்தானிருக்கிறார்கள். வயல்களில் பயிர்விளைகிறது. காடுகளில் வேட்டை நடக்கிறது. 10ஆம் நம்பர் 12ஆம் நம்பர் தோட் டாக்களைப் போடும் சொட்கண்கள் இருந்த போது அதைக் கொண்டு போனவர்கள், பிறகு கட்டுத்துவக்கோடு வேட்டையாடினார்கள். அதுவும் இல்லாமற்போனபின், வெங்காய வெடி யிலும் பொறிவெடியிலும் வேட்டையாடுகிறார் கள். அதற்கும் வாய்க்காதவர்கள் பொறி வைக்கிறார்கள். அல்லது தடம் வைக்கிறார்கள். எப்படியோ இறைச்சி வேகிறது சட்டிகளில்.

நான் அக்கராயனுக்கு முதன் முதலில் போயிருந்த பொழுது எனக்கு ஆச்சரியமாக இருந்தது அங்கே இருந்த கரும்புத் தோட்டம். ஏறக்குறைய 220 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் கரும்பு விளைந்திருந்தது. நடுவே கரும் பாலை. நாற்பது, ஐம்பதுபேர் வேலைசெய்தார் கள். செழித்திருந்த கரும்பை வெட்டி ஆலையில் இட்டு, அதைச் சாறாக்கி.... இதையெல்லாம் செய்வதைப் பார்க்க வாயில் இனித்தது.

அந்த நாட்களில் எங்கள் வீட்டுக் கிணற்றடியில் இரண்டு அடி கரும்பு மட்டுமே நின்றது. தைப்பொங்கல், நவராத்திரி போன்ற பண்டிகைக்காலங்களில் எடுத்துக்கொள்வதற் காக என ஐயா அந்தக் கரும்பு அடிகளை நாட்டி வளர்த்தார். மற்றும்படி கரும்புத் தோட்டத்தை வேறெங்கும் கண்டதில்லை, அந்த வயதில். கரும்புத்தோட்டத்துக்குப் போயிருந்தபோது சர்க்கரைப்பாணி தந்தார்கள். பிறகு பள்ளிச் சுற்றுலாவில் அதை விளக்கமாகப் பார்த்தேன். ஏறக்குறைய அக்கராயனுக்கு ஒரு சிறப்படை யாளத்தை ஒரு காலம் தந்தது அந்தக் கரும் பாலை. பின்னர் எங்கள் நாடு எப்படியெல்லாம் சீரழிந்ததோ அதைப்போல அந்தக் கரும்புத் தோட்டமும் சிதைந்து போயிற்று. இன்று அங்குள்ள காணிக்காக பெரும்போராட்டமே நடக்கிறது. அன்று இந்த ஆலைக்கு ஏழுபேர் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். இரண்டு பேர் சிங்களர். இருவர் முஸ்லிம்கள். மூவர் தமிழர்கள். மனோஜராக இருந்தார் கோபாலசிங்கம். பின்னாளில் இவரே கரும்புத் தோட்ட முதலாளி என அழைக்கப்பட்டார். கரும்புத்தோட்டத்தில் இறுதிவரையில் தன்னை நிறுத்திக் கொண்டிருந்த கோபாலசிங்கத்தை இறுதியாக 2009 மார்ச்சில் வலைஞர் மடத்தில் அகதியாகப் பார்த்தேன். வெறுங்கையோடும் கனக்கும் மனதோடும் கண்கள் பனிக்க நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர் இருந்த நிலையில் இன்று கரும்புத் தோட்டம் இருக்கிறது. இனிப்பும் இனிமையும் போயிற்று.

அக்கராயன், வன்னேரிப்பக்கத்தின் யானைகள் பற்றி தொடக்கத்தில் குறிப்பிட்டிருந் தேன் அல்லவா! இந்தியன் ஆமிக்காலத்தில் (இந்திய அமைதிப்படை) தலைமறைவாகத் திரிவோருக்குப் பெரும் சவாலாக இருந்தன இந்த யானைகள். ஒரு தடவை முறிப்பில் விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த லூக்காஸ் அம்மானின் குறூப்பை இந்தியன் ஆமி கலைத்தது. அது ஒரு பின் னேரப்பொழுது. அவர்கள் கோணாவிலுக்குள் ளால் இறங்கி அக்கராயன் கழிவாற்றாற் கடந்து, ஸ்கந்தபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இந்தியன் ஆமியின் இன்னொரு ரோந்து அணி நின்றது. இதனால், லூக்காசின் அணி, ஸ்கந்த புரத்தில் நிற்க முடியாமல் மணியங்குளத்திற்குள் இறங்கி எட்டாம் கட்டையில் நிமிர, அங்கே நின்றது யானைக்கூட்டம். கையில் துவக்கிருந் தாலும் அந்த நேரத்தில் யானையைச் சுட முடியுமா? ஒரு புறம் வேடன்... மறுபுறம் நாகம்... தத்தளித்துப்போனார்கள். பிறகு எப்படியே எல்லை கடந்தது புலிகளின் அணி.

யானைகளின் ஊர்வலம் நீண்ட காலத்துக்கு முன் என்றில்லை. 1990க்குப் பிறகும் இதுதான் நிலைமை. முறிப்புத் தொடக்கம் ஜெயபுரம் கிராஞ்சி வரை யானை களின் ஆட்சியே இந்த வழியில்.

1995 இல் யாழ்ப்பாண இடப் பெயர்வுடன் வன்னிக்குப் பெருக்கெடுத்து வந்த சனம் அக்கராயனுக்கும் வரத் தொடங்கியது. பிறகு கிளிநொச்சி – சத்ஜெய இடப்பெயர்வோடு (1996) அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக் குளம் எனச் சனங்கள் பெருகப் பெருக யானை கள் காடுகளுக்குள் அடங்கின. கிளிநொச்சி இடம்பெயர்வு அக்கராயன் வட்டகையை ஒரு சிறு நகராக்கியது. சந்தைகளும் கடைகளும் குடியிருப்புகளும் சுற்றயல்கள் எங்கும் பெருகி, ஸ்கந்தபுரம் ஒரு மையப்பட்டினம் போலாகியது. கிளிநொச்சியின் நிர்வாக மையமே அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதியில் 1996 – 2002 வரை இயங்கியது. கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஸ்கந்தபுரம் மேற்கில் ஒரு கீற்றுக்கொட்ட கையில் இருந்தது. அப்போதங்கே அரச அதிபராக இருந்தவர் உடுவை தில்லைநடராஜா. ஒரு அரச செயலகத்தை அனர்த்த முகாமைத்து வப் பிரிவை இயக்குவதைப்போல இயக்க வேண்டிய நிலையில் இருந்தார் உடுவை. அவர் ஒரு எழுத்தாளராக இருந்தபோதும் நாங்கள் யாரும் அவருடன் இலக்கியம் பற்றி ஒரு வார்த்தை பேசியதில்லை. உடுவை இருந்தவரை அவர் உட்பட எல்லோருக்கும் கடுமையான வாழ்க்கை நெருக்கடிகள். காரணம், அப்போது தான் இடம்பெயர்ந்து வந்திருந்தோம். அந்த நிலையில் இருப்பதற்கு இடம் தேடுவது, தொழில் தேடுவது, குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் தேடுவது என்று பொழுதுகள் கழிந்தன. சில போது இதற்கெல்லாம் பொழுதுகள் போதாது.

அப்பொழுது வாய்க்கால் முழுவதும் தீர்த்தக்கரை போலிருந்தன. எந்த நேரமும் வாய்காலில் கூட்டம் அலைமோதும். ஒரு வளவில் பத்துப் பதினைந்து குடும்பங்களின் குடியிருப்புகள் என்றால் கிணறுகள் தாங்குமா? இந்த மாதிரி அகதிகள் பெருகும்போது கழிப்ப றைக்கும் தண்ணீருக்குமே பெரும்பிரச்சினை உண்டாகிறது. அக்கராயனில் இரண்டுக்குமாக அவலப்பட்டவர்கள் லட்சத்திற்கும் மேல்.

சனங்கள் நெரியும் அந்தச் செம்மண் தெருக்களில் திரிவதெல்லாம் அகதிகள் என்று சொல்ல முடியாது. இடம்பெயர்ந்திருந்தாலும் எப்படியோ மகிழ்ச்சியாகத் திரிந்தார்கள் பலரும். நெருக்கடிகள் இருந்தபோதும் சிறிய அளவிலேனும் வருமானம் கிடைத்தது. பொருட் களின் விலையும் அதிகமில்லை. விறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிகள், வேட்டைக்காரர்கள், விவசாயிகள், கூலியாட்கள் எல்லாம் ஓரளவுக்கு உழைக்கக் கூடிய ஒரு நிலையுள்ள சூழல் வாய்த்ததே ஆறுதல். இதற்குள்ளும் இலக்கியக் கூட்டங்கள் நடந்தன. புத்தக வெளியீடுகள் நிகழ்ந்தன. என்னு டைய முதலாவது புத்தகம் (ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்) ஸ்கந்தபுரம் சந்தியில் அமைந் திருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கீற்றுக் கொட்டகையில் வெளியிடப்பட்டது. பிறகு அமர தாஸின் கவிதைகள் (இயல்பினை அவாவுதல்). அமரதாஸ் அந்த ஊரைச் சேர்ந்தவரும் கூட. அவர் அங்கிருந்து உருவாகிய ஒரு முக்கிய மான ஒளிப்படப் படைப் பாளியும் ஆவார். அக்கராயனில் இருந்தபோதே சு.மகேந்திரன் தன்னுடைய சிறுகதைகளின் தொகுதியையும் (காலவெளி) மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பையும் (தீ நிழல்) வெளியிட்டார். தாமரைச்செல்வியின் "ஒரு மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியும் அக்கராயனிலேயே வெளியிடப்பட்டது. பெ.கணேசன் அந்த ஊரில் படித்து எழுதத் தொடங்கிய ஒரு படைப்பாளி என்பதைச் சொன்னேன் அல்லவா! ஒரு காலம் கணேசன் கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பலருடைய எழுத்தாக்கங்களைத் தொகுத்து "கதிரொளி" என ஒரு மலரை உருவாக்கி யிருக்கிறார்.

ஸ்கந்தபுரத்திலிருந்து உருவாகிய இன்னும் சில முக்கியமான கலைத்துறை ஆளுமைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஒருவர் தற்பொழுது (2002 – 2013...) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகத் துறை விரிவுரையாளராக இருக்கும் ரதிதரன். ஸ்கந்தபுரத்திலிருந்த நாள்களில் ஒரு நாடக இயக்கத்தையே உருவாக்கி வைத்திருந்தார் ரதிதரன். விளைவாக சில ஆண்டுகள் அக்க ராயன் மகா வித்தியாலயம் பல போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்று வந்தது. பின்தங்கிய பிரதேசமொன்றின் பாடசாலை இப்படித் தொடர்ந்து வெற்றிகளைப்பெறுவது பலருக்கும் அந்த நாட்களில் ஆச்சரியம். ரதிதரன் தலைமையிலான நாடகக் குழுவின் ஆற்றலுக்கு முக்கியமானது அவர்களிடையே இருந்த புதிதைத் தேடும் முனைப்பும் சமநிலைப்பட்ட நடத்தைகளும் ஊக்கமுமே. இதை (1996 – 2000) அக்கராயனில் நான் இருந்த காலத்தில் நேரில் பார்த்திருக்கிறேன்.

அக்கராயனில் நாங்கள் இருந்த காலத்தில், கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் பல நல்ல நாடகங்களைத் தந்து கொண்டிருந்தது. பெரும்பாலும் ஆசிரியர்கள் பங்கேற்ற நாடகங் கள். அது க.விஜயசேகரனின் மையத்தில் உருவாகிய நாடக இயக்கம். அந்த அழகியற் கலாமன்றத்தில்தான் நாங்கள் தேர்ந்த திரைப் படங்களைத் திரையிட்டோம். சத்யஜித் ரேயின் பதேர்பாஞ்சாலி, சாருலதா, பிறவி, சிதம்பரம், அகிரா குரோஸாவின் சாமுராய் மற்றும் குறும்படங்கள், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் கம்பெரலியா, செம்மீன் போன்ற படங்கள். மட்டுமல்ல, ஸ்கந்தபுரத்தில் இரண்டு வாசகர் வட்டங்கள் கூட அன்று இயங்கியிருக்கின்றன. ஒன்று "காலச்சுவடு" வாசகர் வட்டம். மற்றது, "வெளிச்சம்" வாசகர் வட்டம். வெளிச்சத்தின் முதலாவது வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டதே அக்கராயனில்தான். பின்னர் "செம்மணி" "ஆனையிறவு" ஆகிய கவிதை நூல்கள் வெளி யிடப்பட்டதும் ஸ்கந்தபுரத்திலேயே. இலக்கம் 01. பாடசாலைக்குப் பின்புறத்திலிருந்த டானியல் விளையாட்டரங்கில் "ஆனையிறவு" நூலினை வெளியிட்டு புலிகளின் தளபதி பால்ராஜ் ஆற்றிய உரையைக் கேட்பதற்கு ஐயாயிரத்துக் கும் அதிகமானவர்கள் கூடியிருந்தார்கள். புலிகளின் இராணுவச் சாதனைகளைப் பற்றி பால்ராஜ் மிடுக்கோடு பேசினார். அதைப்போல "சிங்கள நாகரிகத்துக்கு இழுக்கைத் தரும் வகையில் இறந்தோரின் நினைவிடங்கள் இடித்தழிக்கப்படுகின்றன. அந்த மாதிரியே செம் மணியிலும் மனிதப் புதைகுழிகள் உருவாக்கி யுள்ளன. இவை சிங்கள மக்களைத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனியச் செய்யும் செயல்கள்" என்றார் மு.தி. இரண்டு உரைகளும் முக்கியமானவையாக இருந்தன.

அப்பொழுது அக்கராயனைச் சூழவும் ஏறக்குறைய 20 பாடசாலைகள் இயங்கின. கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் எட்டுத் தலைமைச் சங்கங்கள் இருந்தன. அங்கே இயங்கிய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "சங்கமம்" என ஒரு மாதப்பத்திரிகையை வெளியிட்டது. அதில் அநாமிகன், வேல் லவன், திருநகரூர் ஜெகா போன்றோர் தங்களின் ஆரம்பகாலக் கவிதைகளை எழுதினார்கள். அன்ரன் அன்பழகன், கனகலிங்கம், அ.கேதீஸ்வரன், சொலமன் சூ.சிறில் போன்றவர்கள் சங்கமத்தின் ஆசிரியர் குழுவில் செயற்பட்டனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்புற முள்ள திடலில் நான்கு ஆண்டுகளாக வண்டிச் சவாரி நடந்தது. வன்னியெங்குமிருந்து சவாரிக் காளைகளும் வண்டிக்காரர்களும் வந்து சவாரி செய்தார்கள். சவாரியைப் பார்க்கக் கூட்டம் அலைபுரளும். சனத்திரளைக் கண்டால் சவாரி மாடுகளுக்கு மிரட்சி. சவாரிக்காரருக்கு உஷார். பிறகென்ன, காளைகள் தறிகெட்டு ஓடின. வெற்றிக் கூச்சல்கள் அகதிக் கூடாரங்களைக் கிழித்து வானில் எழுந்தன. அது அகதிகளின் நகரம். எல்லா இடங்களிலும் குடிசைகள். காணும் திசைதோறும் குடிசைகள், அகதிகள், அவலம்... என்றிருந்தாலும் இந்த மாதிரியான காரியங்களும் நடந்து கொண்டிருந்தன.

அக்கராயன் வட்டகையில் அந்த நாள்களில் ஆட்சி செய்தது மலேரியா. ஏறக்குறைய ஒரு ஆண்டில் மட்டும் 26,000 பேர்வரையில் மலேரியாவினால் தாக்கப்பட்டிருந்தனர். காடுகளைக் குடைந்து அங்கே குடியிருந்த சனங்களை பீரங்கிகள் மட்டும் தாக்கவில்லை, நுளம்பும் பாம்பும் கூடத் தாக்கின. ஆனால், என்ன செய்ய முடியும்? வேறு எங்கே போக இயலும்? வன்னிமுழுவதும் நுளம்பும் காடும் பாம்பும் தானே! நுளம்புக்கடியினாலும் பாம்புக் கடியினாலும் நிறைந்துகொண்டிருந்தது அக்கராயன் மருத்துவமனை. அங்கேதான் இயங்கியது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையும். ஆனாலும், அவற்றால் நோயாளிகளைத் தாங்கிக்கொள்வதற்கு முடியவில்லை. சாவு வீதத்தைக் குறைக்க முடிந்ததே தவிர, முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. போதாக்குறைக்கு நெருப்புக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் வேறு பரவிக்கொண்டிருந்தன. சுத்தமான குடிநீர் குறைந்தால் பெருமளவு வியாதிகள் தானாகவே வந்து சேரும் என்பது மருத்துவ விதி. அன்றைய நாட்களில் அக்கராயன் சுடுகாட்டில் நெருப்பு அணைந்ததில்லை.

2000ஆம் ஆண்டு கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் மீட்ட பிறகு, மீண்டும் மெல்ல மெல்லச் சனங்கள் கிளிநொச்சிக்கு நகரத் தொடங்கினர். மெல்ல வடியத்தொடங்கியது அக்கராயனும். அதுவரையிலும் கோணாவிலில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம் வரையிலும் நிறைந்திருந்த சனக்குடியிருப்புகள் பின்னர் வெறிச்சோடிக் காணாமற் போயின. பெருகி வந்த சனங்கள் அக்கராயன் வட்டகையில் மரங்களின் கீழ் இருந்த சின்னஞ்சிறிய கோயில்களையெல்லாம் பெரிதாக்கி விட்டார்கள். இத்தியடி அம்மன், ஸ்கந்தபுரம் முருகன், ஐயனார்புரம் ஐயனார், அக்கராயன் பிள்ளையார், வன்னேரிக்குளம் முருகன், இரண்டாம் கொலனி கண்ணன்கோயில் எல்லாம் இந்த வகையின. சனங்கள் வடிந்த பிறகு இந்தக் கோயில்களும் வெறித்து விட்டன. இடப்பெயர்வினால் இயல்பான வளர்ச்சியன்றி, ஒரு பலூனைப் போல திடீரென ஊதிப்பெருத்த நகரம் அதே விசையில் வடிந்து களையிழந்தது. பிறகு மறுபடியும் ஊர்வாசிகளும் மாடுகளும் மட்டும் நடமாடும் தெருக்களைக் கொண்டிருந்தன அக்கராயன், வன்னேரி, ஸ்கந்தபுரம், கோணாவில் புரங்கள். "மண்ணால் கட்டப்பட்ட அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினம்" மெல்ல மெல்ல மழையில் கரைந் தழிந்தது.

ஆனாலும், ஊர்வாசிகள் வேட்டைக்குப் போனார்கள். வயல்களை விளைத்தார்கள் விவசாயிகள். அலைச்சலில்லாமல் களைப் பில்லாமல் தெரியாத முகங்களைத் தேடித் திரியாமல் கடிதங்களைக் கொடுத்தனர் தபால் ஊழியர்கள். பள்ளிகள் இயங்கின. பிள்ளைகள் ஆரவாரமில்லாமல் பாடசாலைக்குப் போய் வந்தார்கள். எங்கும்போல அங்கும் இரவும் பகலும் வந்து போயின. வழமைபோல எல்லாம் நடக்கின்றன என எண்ணிக்கொண்டிருந்தபோது அக்கராயனுக்கே வந்தது இடப்பெயர்வு. முன்னர் இடம்பெயர்ந்து வந்தவர்களை அரவணைத்து, ஆதரித்த அக்கராயன் வட்டகையின் அத்தனை ஊர்களும் இப்பொழுது இடம்பெயர்ந்தன. மூட்டை முடிச்சுகள், வண்டி வாகனங்கள் என தெருவுக்கு வந்தது பெயர்த்தெடுக்கப்பட்ட வாழ்க்கை. அப்படியே அது தெருநீளம் சிந்திச் சிதறி, முள்ளிவாய்க்கால் ஊடாக வவுனியா மெனிக் பாம் வரை சென்றது.

2010 சனங்கள் மீண்டும் அக்கராயன் வட்டகைக்கு வந்தபோது அங்கே காடும் புதரும் யானைகளும்தான் மறுபடி இருந்தன. காணுமிட மெங்கும் கைவிடப்பட்ட வீடுகள், உடைந்தும் சிதைந்தும் போன பொருட்கள், பாழடைந் திருந்த வீதிகள்.... ஒரு தொல்குடியிருப்பைப் போல மாறியிருந்த அந்த வட்டகையில் படைச் சிப்பாய்களும் இல்லையென்றால், அது புராதன காலத்துக்கே திரும்பியிருக்கும். ஆனாலும் "மனிதர்கள் மறுபடியும் தங்கள் ஊர்களைக் கட்டியெழுப்பத் தொடங்கினார்கள்". ஊர்களு க்கு வந்தவர்கள் மீண்டும் காடுகளை வெட்டிக் களனிகளை உண்டாக்கினார்கள். வளவுகளைத் திருத்தி வீடுகளை அமைத்தார்கள். இப்பொழுது ச.மு அங்கில்லை. இருந்திருந்தால் அவர் இன்னொரு யானைக்கதையை எழுதியிருக்கக் கூடும். – அலியன் யானை என்றோ தனியன் யானை என்றோ.

வரலாற்றாசிரியர்களுக்குத்தான் எத்தனை சிரமம், அழிந்தழிந்து உயிர்பெறும் மையங்களைப் பற்றி எழுதித்தீர்ப்பதற்கு?

எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கும் போது ஜெயமோகனின் "விஷ்ணுபுரம்" நாவலே நினைவில் வருகிறது. ஒரு போது பெரும் கீர்த்தியுடன் இருந்த "விஷ்ணுபுரம்" பின்னொரு போதில் தகர்ந்து சிதைந்து போகிறது. ஆனாலும் அங்கும் மனித இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக் கிறது...

விஷ்ணுபுரத்தையும் முதன் முதலில் அக்கராயனில்தான் பெற்றோம். அங்கேதான் அதை வாசித்தேன்.

வரலாற்றின் விசித்திரம் மகத் தானாதா? பெருந்துக்கமுடையதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம்



# சமயநெறி உணர்த்தும் வழிபாட்டு முறைமைகள்

**திரு.கோ.நாகேஸ்வரன்**
பிரதேச செயலர்
கரைச்சி.

உலகத்தின் தொன்மைச் சமயமான சைவ சமயம் சிவனைத் தெய்வமாகக் கொண்டு விளங்கும் சமயமாகும். சிவபெருமானை முதன்மையாகக் கொண்டாலும் இயற்கைப் பொருள்களில் சிவனைக் கண்டு வழிபடும் சமயம் ஆகும். அதாவது ஆகியவற்றிலும், இயற்கைப் பொருள்களான மரங்கள், செடிகள், பூக்கள் ஆகியவற்றிலும் கடவுள் தன்மையைக் கண்டு வழிபடுகிற சமயம் ஆகும். அவ்வாறு வழிபடுகிற பொழுது வழிபாட்டு முறைமைகளுக்குத் தொன்றுதொட்டு நெறிமுறைகளை வகுத்துக் கொண்ட சமயமும் ஆகும். வேதங்கள் என்றும், ஆகமங்கள் என்றும், சித்தாந்தம் என்றும் நூல்களைப் படைத்துக் கொண்டு அதன்வழி வழிபாட்டு நெறிமுறைகளை விதிகளாகக் கொண்டுள்ள சமயம் ஆகும். ஆனால் அதே நேரத்தில் விதிமுறைகளைக் கடுமையாக ஆக்கிக் கொள்ளாமல் எக்காலத்திலும், எப்பருவத்தர்க்கும் உரியதாக எளிய வழியில் ஆக்கிக் கொண்டுள்ள சமயமும் ஆகும். எனவேதான் சைவசமயம் உலக நாடுகள் பலவற்றிலும் பரவியிருக்கிறது. இத்தகைய சைவ சமய எளிய விதிமுறைகளையும் வழிபாட்டினையும் இப்பாடத்தில் அறிய உள்ளோம்.

**சமய நெறி**

சைவ சமயத்தில் கடவுள் கொள்கைகளையும், சிவவழிபாட்டு முறைமைகளையும் விளக்கிக் கூறுகின்ற முதன்மையான நூல்கள் வேதங்கள், சிவ ஆகமங்கள் (பிரமாணங்கள்) ஆகும். வேதங்கள் ரிக், யசுர், சாமம், அதர்வணம் என நான்காகும். சிவ ஆகமங்கள் 28 ஆகும். வேத, சிவ ஆகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்றவை ஆகும். இதனை, "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்று திருமூலர் குறிப்பிடுவார். வேதங்கள் நான்கும் இந்து சமயத்தின் கொள்கைகளைக் கூறுகின்றன. ஆனால் சிவ ஆகமங்கள் சைவ சமயத்தின் நெறிமுறைகளை மட்டும் கூறுகின்றன. சிவாகமங்களில் கடவுளின் இயல்புகள், கடவுள் ஆன்மாவிற்குச் செய்யும் அருள்நிலை, கடவுளை வழிபடும் முறைகள், வழிபடும் இடங்களின் அமைப்புகள், திருக்கோயில்களில் நடக்கும் சடங்குகளின் வகைகள், அவைகளை நடத்தும் முறைகள், வழிபடுவோர்க்குரிய இயல்புகள், சைவச் சாதனங்கள் ஆகியவை விரிவாக விளக்கப்படுகின்றன.

28 ஆகமங்களும் இன்றைய நடைமுறையில் மக்களிடையே இல்லை. அவற்றின் கருத்துகளை எளிமைப்படுத்திச் சித்தாந்த நூல்கள், சைவத் திருமுறைகள் தந்து கொண்டிருக்கின்றன. எனவேதான் திருமுறைகளில் ஒன்றான திருமந்திரம் தமிழ் வேதமாகக் கருதப் பெறும். அந்நூல் கூறுகிற முறைமையில் சமய நெறிமுறைகளும், சமயவழிபாட்டு முறைகளும் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. மேலும் 14 சாத்திர நூல்கள் கூறுகின்ற சிவ தத்துவங்கள் மக்களால் அறிந்து கொள்ளப்பெற்றன. தத்துவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதோடு மட்டுமல்லாமல் தத்துவங்கள் கூறுகின்ற வழிபாட்டு முறைமைகள் இன்றையத் திருக்கோயில் வழிபாட்டு முறைமைகள் இன்றையத் திருக்கோயில் வழிபாட்டிலும், சமய வழிபாட்டிலும் கையாளப்படுகின்றன. சாத்திரமும் தோத்திரமும்

**நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்**

என்பது சிவஞானசித்தியார் பாடலாகும். இப்பாடலின் பொருள்: சைவம் சார்ந்து சிவனை வழிபடுகிறவர்கள் சிவனுடைய திருவருளைப் பெறவேண்டுமானால நால்வகை நெறிமுறைக ளைக் கடைபிடிக்க வேண்டும். தாதமார்க்கம் சன்மார்க்கம் என்பன சிவபிரானை அடையும் நன்மார்க்கங்கள் ஆகும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பெயராலும் வழங்கப் பெறுதல் உண்டு என்பது இப்பகுதியினு டைய பொருளாகும். எனவே மார்க்கம் என்ற சொல் நெறி அல்லது வழி என்ற பொருளைக் கொண்டு சைவசமய நெறிகள் நான்கைக் குறிப்பிடுகின்றது எனலாம்.

இத்தகைய நால்வகை நெறிகளும் மக்கள் பின்பற்றக்கூடிய எளிய நெறிமுறைகளே ஆகும். இந்த நெறிமுறைகளைப் பின்பற்றினால் அடையும் பயன்கள் சாத்திர நூல்களிலும், தோத்திர நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. அப்பயன்களும் நான்காகக் கூறப்பெற்றுள்ளன. தாதமார்க்கத்தின் வழிநின்றால் இறைவனுடைய உலகத்தைச் (சாலோகம்) சென்றடையலாம். சற்புத்திர மார்க்க நெறி நின்றால் இறைவனுக்கு அருகில் செல்லும் அருளைப் பெறலாம். இது சாமீபம் ஆகும். சகமார்க்கத்தின் நெறி நின்றால் இறைவனின் உருவ அடையாளங்களைப் பெறலாம். இது சாரூபம் எனப்படும். இறுதியான சன்மார்க்க வழி நின்றால் இறைவனின் திரு வருளை முழுமையாகப் பெறலாம். இதனைச் சாயுச்சியம் என்பர். வடமொழியில் இந்த சாயுச்சியம் என்பது பருமுத்தி என்றும் மற்ற மூன்றும் அபரமுத்தி என்றும் கூறப்படும். இவற் றின் விரிவைச் சாத்திரங்கசளும், தோத்திரங்க ளும் தெளிவாக விளக்குகின்றன.

**தாதமார்க்கம் (தொண்டு நெறி தாச மார்க்கம்)**

தாதமார்க்கத்தைப் பேச்சு நடையில் தாசமார்க்கம் என்று சொல்வதுண்டு. தாசான தாசன் என்றால் தொண்டனுக்குத் தொண்டன் என்று பொருள்படும். எனவே தாத அல்லது தாச என்பது கொண்டு என்ற பொருளில் கையாளப் பெறுகிறது. இறைவனை வழிபடுகின்ற பொழுது உள்ளத்தில் இறையுணர்வு ஏற்படச் சில செயல் கள் செய்ய வேண்டும். அதுவே வழிபாடாகும். இந்த வழிபாடுகள் தான் இங்கு நெறிமுறைகளா கக் கூறப்பெறுகின்றன. அந்த அடிப்படையில் சமய வழிபாட்டின் தொடக்கமாகக் கூறப்படுவது தொண்டு நெறியாகும். தொண்டு என்பது திருக் கோயிலுக்கும், திருக்கோயிலில் எழுந்தருளி யுள்ள இறைவனுக்கும், இறைவனை வழிபட்டு ஞானம் பெற்ற அடியார்களுக்கும் பணி செய்வ தாகும். அதாவது தன்னை அடியவனாகப் பணி செய்யும் ஆளாகக் கருதிக் கொண்டு சிவ பிரானையும் அவனருள் பெற்ற அடியாரையும் தலைமக்களாக எண்ணி அவர்களுக்குத் தொண்டு செய்வதாகும். அவ்வாறு தொண்டு செய்யும் பொழுது என்னென்ன செய்யலாம் என்பதைச் சாத்திரங்களும், தோத்திரங்களும் சொல்லுகின்றன. இம்மார்க்கத்தைக் குறிக்கின்ற சரியை என்ற சொல்லும் தொண்டு என்ற பொருளைத்தான் தரும். அதாவது சரீரம் என்ற உடம்பினால் செய்யப்பெறும் தொண்டாகும். இந்தத் தொண்டுகளைத் திருமுறைகள் வரை யறுத்துக் காட்டுகின்றன. அப்பரின் கீழ்க்காணும் பாடல் இதனை விளக்கும்.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்நது பாடித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே
(அப்பர் தேவாரம் – 6.31.3)

இப்பாடலைப் போலவே சிவஞானசித்தியார் என்ற சாத்திர நூலும் 271ஆம் பாடலில் இம் மார்க்கத்தின் செயல்முறைகளைக் குறிப்பிடுகிறது. அதாவது தொண்டு நெறி என்பது திருக்கோயில்களில் குப்பைகளைப் பெருக்கி, திருக்கோயில் முழுவதும் தண்ணீர் கொண்டு மெழுகி, இறைவனுடைய திருவுருவத்தில் அணிவிப்பதற்குப் பூமாலைகளைக் கட்டி, பூக்கள் பூப்பதற்கு நந்தவனங்கள் அமைத்து, கோயில்களில் திருவிளக்கு ஏற்றி, இறைவனை வாயாரப் போற்றிப் புகழ்வது ஆகும். மேலும் சிவனடியார்களைக் கண்டால் தங்களுக்கு ஏதேனும் தொண்டு செய்ய வேண்டுமா என்று கேட்டு அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் ஆகும். இந்த நெறியில் நின்றால் இறைவனுடைய உலகத்திற்குச் செல்லுகின்ற திருவருளைப் பெறலாம்.

### சற்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி)

சற்புத்திர நெறியைக் கிரியாபாதம் என்று கூறுவர். கிரியை என்றால் மந்திரங்கள் வழி இறைவனுக்கு வழிபாடு செய்வதாகும். அதாவது இறைவனின் அருவுருவ வடிவமாகிய சிவலிங்கத்திற்கு அண்மையில் இருந்து மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகைச் செயல்களை முறைப்படி செய்து வழிபடுதல் ஆகும். அதாவது முதல் நெறியில் வெறும் பணிகளைச் செய்தவர்கள் இந்த நெறியில் அபிடேகம் செய்தல், மாலை சாற்றுதல், தூபதீபம் காட்டுதல் ஆகியவற்றைச் செய்யும் பொழுது மந்திரத்தைச் சொல்லிச் செய்ய வேண்டும். முதல் வழியில் அகத்திலும் புறத்திலும் மந்திரம் சொல்வது நிகழாது செயல் மட்டுமே நிகழும் இந்நெறியில் மந்திரங்களைச் சொல்வதும் ஆகமங்கள் சொல்லுகின்ற சடங்குகளைக் (கிரியை) செய்வதும் சடங்குகளைச் செய்யும் பொழுது தன்னை இறைவனுடைய அன்பராகப் பாவித்துக் கொண்டு செய்வதும் ஆகும். திருக்கோயிலில் இருக்கும் இலிங்க உருவத்திற்கு இத்தகைய வழிபாட்டைச் செய்தால் அது பரார்த்தம் எனப்படும்.

ஒருவர் தன் பொருட்டாக ஞான ஆசிரியரிடத்தில் இருந்து இலிங்க வடிவத்தைப் பெற்று இத்தகைய வழிபாட்டைச் செய்தால் அதற்கு ஆன்மார்த்தம் என்று பெயர். இத்தகைய சமய நெறியைச் செய்தால் இறைவனுக்கு அருகிலிருக்கும் அருளைப் பெறலாம். இத்தகைய செய்திகளைச் சாத்திரங்களும் தோத்திரங்களும் சுட்டிக் காட்டுகின்றன.

புத்திமார்க் கம்புகலின், புதியவிரைப் போது
புகைஒளிமஞ் சனம் அமுது முதல்கொண்டு ஐந்து
சுத்திசெய்துஆ சனம், மூர்த்தி, மூர்த்தி மானாம்
சோதியையும் பாலித்துஆ வாகித்து, சுத்த
பத்தியினால் அருச்சித்து, பரவிப் போற்றிப்
பரிவினொடும், எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும், இக்கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர், நினையுங்காலே
(சிவஞான சித்தியார் – சுப. 273)

என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுகிறது. இதே வழிமுறைகள் சம்பந்தர் தேவாரத்தில் முதல் திருமுறை 21ஆவது பதிகத்தின் 4ஆம் பாடலிலும் கூறப்பெற்றுள்ளன.

### சகமார்க்கம் (தோழமை நெறி)

இந்நெறி யோகமார்க்கம் எனவும் கூறப்பெறும். யோகம் என்பதற்குப் பொருள் ஒன்றுதல் என்பதாகும். அதாவது உயிரானது இறைவனோடு ஒன்றுதல் ஆகும். அவ்வாறு ஒன்றும் பொழுது மனத்தால் ஒன்றி நிற்பது ஆகும். மனம், புத்தி, கண், கை, கால் ஆகியவற்றைப் புறத்தே ஒன்றச் செய்து அடக்கி அகத்திலே கொண்டு வந்து இறைவனோடு ஒன்றச் செய்தலாகும். இது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வகையாகக் கூறப்படுவதும் உண்டு. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும்.

| | | |
|---|---|---|
| இயமம் | – | நூல்களில் கூறிய தீய ஒழுக்கங்களை அறவே விலக்குதல் |
| நியமம் | – | நூல்கள் கூறுவனவற்றைக் கடைப்பிடித்தல் |
| ஆசனம் | – | உடற்பயிற்சிகளின் மூலம் ஆசனங்களைக் கைக் கொள்ளுதல் |
| பிராணாயாமம் | – | இயற்கையாக இயங்கும் மூச்சுக் காற்றினை வசப் படுத்துதல் |
| பிரத்தியாகாரம் | – | தான் நினைத்த பொருளின் வடிவாக மாற்றிக் கொள்ளு தல் |
| தாரணை | – | மனத்தை அடக்கி ஒரு வழியில் நிறுத்துல் |
| தியானம் | – | இறைவனைத் தன்னுடைய தியான வடிவினால் ஒளி வடிவினனாக எண்ணுதல் |
| சமாதி | – | அந்த எண்ணத்தில் தன்னை மறந்து இறைவனோடு ஒன்றுதல். |

இத்தகைய வகைகளால் இறைவனை நோக்கித் தவம் செய்வதே யோகம் எனப்படும். இத்தகைய தவத்தால் இறைவனோடு ஒன்றி விடுகின்ற காரணத்தால் இறைவனுக்குத் தோழமையாகின்ற அருள் கிடைக்கின்றது. எனவேதான் இந்நெறி தோழமை நெறி ஆயிற்று. இந்நெறியை உயிராவணம் என்று தொடங்கும் நாவுக்கரசர் தேவாரப் பாடலும், தேடுவேன் தேடுவேன் என்று தொடங்கும் சுந்தரர் தேவாரப் பாடலும், சிவஞான சித்தியாரின் 273ஆம் பாடலும் குறிப்பிடுகின்றன. இந்த நெறி நின்றால் சிவவடிவாகிய சிவஞானியாகலாம்.

**சன்மார்க்கம் (நன்னெறி)**

நான்காவது நெறி சன்மார்க்கம் என்ற நன்னெறியாகும். இதை ஞானபாதம் என்று குறிப்பிடுவர். ஞானம் என்பதற்கு அறிவு என்பது பொருள். இந்த அறிவு மெய்ப்பொருளை அறிவ தைக் குறிக்கும். முன்னைய மூன்று நெறிகளும் ஞானத்தை அடையும் வழி என்றாலும் இந்த நெறியே மெய்ப்பொருளாக விளங்கும் இறை வனை முழுமையாக அறியும் வழியாகும். எனவே இதனைச் சிவஞானம் என்பர். சமய நூல் கள் பலவற்றையும் அறிந்து தெளிந்து பதி, பசு, பாசம் என்ற மூன்றினுடைய இலக்கணங்களை அறிதல் வேண்டும். இலக்கணங்களை அறிவ தோடு தத்துவங்களைப் பற்றிய ஆய்வுகளைச் செய்து உண்மைப் பொருளை அறிய வேண்டும். பல சமய நெறிகளில் செல்லாது சைவசமயத் தின் வழியில் சென்று மூலமுதற் பொருளை அறிய வேண்டும். இத்தகைய ஞானம் கைவரப் பெற்றால் அதுவே நன்னெறியாகும். இந்த நெறியைத்தான் சைவ சித்தாந்த சாத்திரங்கள் வலியுறுத்தி எழில்ஞான பூசை என்று குறிப்பிடு கின்றன. குறிப்பிட்டுச் சொன்னால் இந்த நெறி ஞானநூல்களின் வழி இறைவனாகிய மெய்ப் பொருளை அறிவதாகும். இந்நெறியினுடைய பயன்சாயுச்சியமாகிய இறைவனுடைய திருவரு ளைப் பெறுவதாகும். இந்நெறியின் சிறப்பைச் சிவஞான சித்தியார் கீழ்க்கண்டவாறு குறிப் பிடுகிறது.

**ஞானநூல் தனை ஓதல், ஓது வித்தல்**
**நல்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்றா**
**ஈனம்இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவன் அடி அடைவிக்கும் எழில்ஞான பூசை**
**(சித்.சுப– 275)**

இவ்வாறு சைவ சமய நெறிகளாக நால்வகை நெறிகளைச் சிவாகமங்கள் குறிப்பிடு கின்றன. சிவாகமங்கள் வழி சாத்திர நூல்களும், தோத்திர நூல்களாம் திருமுறைகளும் குறிப்பிடு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடைமுறை வழிபாடு**

சைவ சமயத்தில் வழிபாடு என்பது இன்றி யமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் இவ்வழி பாடும் உடன் தோன்றிற்று. கடவுள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளச் சாதனமாக வழிபாடு கையாளப் பெற்றது. வேத ஆகமங்கள் இவ்வழி பாடுகள் நடத்தும் முறைமைகளை வகுத்துக் காட்டியுள்ளன. காலத்திற்குக் காலம் வழிபாட்டு மாறவில்லை. தொன்று தொட்டு நடந்து வருகி றது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலத்தில் அச்சம் அடிப்படையாக இருந்ததால், வழிபாடும் அச்சத்தின் அடிப்படையிலேயே அமைந்தது. அச்சத்திற்குரிய பொருள்களைக் கடவுள்களா கக் கொண்டு வழிபட்டதால் அவ்வழிபாடு முதன் முதலில் இயற்கை வழிபாடாக அமைந்தது.

சூரியன், சந்திரன், வருணன், சிங்கம், புலி, மரங்கள் இவற்றை வழிபட்டனர் மக்கள். எனவேதான் இன்றைய சைவக் கோயில்களில் சூரிய, சந்திரர்களின் உருவங்களும், சிங்கம், புலி, நந்தி ஆகிய விலங்குகளின் உருவங்களும், தலவிருட்சம் என்ற அடிப்படையில் மரங்களும் அமைந்தன. இவைகள் தொடக்கக் கால இயற்கை வழிபாட்டிற்குரிய தெய்வங்களை வணங்கும்போது உணவுப் பொருள்களைப் படைத்தல், பலியிடுதல், ஆரவாரம் செய்து கூத்தாடுதல் ஆகியவை நடந்துள்ளன.

இந்த இயற்கை வழிபாடு சிறுகச் சிறுக வளர்ந்து முழுமுதற் கடவுளை உருவ வழி பாட்டில் வழிபடத் தொடங்கிய பிறகு வழிபாட்டு முறைமைகளும். விழாக்களும், சிறப்புப் பூசனை களும் தோன்றின. வழிபாட்டில் பூசனை என்ற சடங்கு அன்றாடப் பூசனை என்றும் சிறப்புப் பூசனை என்றும் வகுத்துச் செய்யப்பட்டது. இதனைத் திருக்குறள், மழை இல்லை என்றால் வழிபாட்டில் சிறப்புப் பூசனை நடக்காது என்று குறிப்பிடுகிறது.

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**

**(திருக்குறள். வான் சிறப்பு -8)**

இத்தகைய பூசனைகள் வளர்ந்து பூசனை செய்வதற்குரிய முறைமைகள், அதற்குரிய கருவிகள், நேரங்கள் என்றெல்லாம் சைவ சமய வழிபாட்டில் வகுத்துக் காட்டப் பெற்றன.

**அன்றாட வழிபாடு**

வழிபாடு என்பது பின்பற்றுதல் அல்லது வணங்குதல் என்ற பொருளைத் தரும். சைவ சமயம் உருவ வழிபாட்டைக் கொண்ட சமயம் ஆகும். காண முடியாத கடவுளுக்குப் பலவித மான உருவங்களை உண்டாக்கி அவற்றை நாள் தோறும் வழிபட்டு வருதல் சைவ சமயத்தின் வழக்கமாயிற்று. இந்த உருவங்களை எல்லாம் ஓரிடத்தில் அமைத்து வழிபட்டதால் திருக் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. திருக்கோயில் அமைத்தல் என்பது உயர்ந்த பணியாகவும் கருதப்பட்டது. வீடுகளில் மனிதர் கள் எப்படி வாழுகின்றார்களோ அதுபோலவே திருக்கோயில்களிலும் வாழ்வியல் முறையில் வழிபாடுகள் அமைக்கப் பெற்றன.

நாள்தோறும் திருக்கோயில்களில் குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தல், திருக் கோயில்களை மெழுகுதல் ஆகிய பணிகள் வழிபாட்டு முறைகளாக மாறின. கோயில்களில் விளக்கேற்றுதல், நறுமணம் வீச நறும்புகை களை உண்டாக்குதல் என்பன நாள்தோறும் செய்யும் பணிகள் ஆயின. எப்படி வீடுகளில் வாழுகிற மக்கள் நீராடி அழகுபடுத்திக் கொண்டு உணவுகளை உண்டு வாழுகின்றார்களோ, அதுபோல நாள்தோறும் திருக்கோயிலில் உள்ள கடவுளர்களுக்கு நீராட்டுதலை அபிடேகமா கவும் அழகு செய்தலை அலங்காரமாகவும், உணவு படைத்தலை நைவேத்தியமாகவும், இவற்றைச் செய்வதை அன்றாட வழிபாடாகவும் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை நாள்தோறும் நடக்கிற பொழுது ஒரு நாளினை முதல் காலம். இரண்டாம் காலம், மூன்றாம் காலம். நான்காம் காலம், ஐந்தாம் காலம் எனப் பிரித்துக் கொண்டு பூசனைகள் செய்யப் பெற்றன. இந்தக் காலங்களுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டன. விசுவரூப வழிபாடு, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று காலங்களுக்குப் பெயரிட்டு ஒவ்வொரு நாளும் வழிபாடு செய்யப்பெற்றது. விசுவரூப வழிபாடு என்பது அதிகாலையில் நடத்தப்பெறும் சடங்காகும். காலசந்தி காலை சுமார் 9 மணிக்கு நடத்தப்படுவதாகும். உச்சிக் காலம் என்பது மாலையிலும், அர்த்தசாமம் முன் இரவிலும் நடத்தப்பெறுவதாகும். இத்தகைய வழிபாட்டு நேரங்கள் நாள்தோறும் நடத்தப்படு கின்ற வழிபாடுகளுக்குரியனவாகக் கொள்ளப் பட்டன.

பிற சமங்களில் வார நாட்களில் குறிப்பிட்ட நாட்களில்தான் வழிபாடுகள் நடை பெறுகின்றன. ஆனால் சைவ சமயத்திலோ வார நாட்கள் முழுமையும் வழிபாடுகள் நடத்தப் பெறுகின்றன. இவ்வழிபாடுகளில் வழிபாடு செய்கின்றவர்கள் குருக்கள் என்றழைக்கப் படுகின்றனர். அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளும், மேற்கொள்ளும் பொழுது கடைப் பிடிக்க வேண்டிய செயல்முறைகளும் வகுக்கப் பெற்று நடைமுறைப்படுத்தப்பெற்றன. அதாவது உடல் தூய்மையோடு வழிபாடு செய்ய வேண்டும். திருநீறு உருத்திராக்கம், பூணூல் அணிந்திருக்க வேண்டும். சட்டை அணிந்து கொள்ளக் கூடாது என்ற மரபுகள் பின்பற்றப் பட்டு வருகின்றன. இத்தகையோர் வழிபாடாம் பூசனைகளைச் செய்வதால் பூசாரிகள் என்று அழைக்கப்பட்டனர். சைவ சமயத்தில் இவ்வழி பாட்டைச் சிவன் கோயில்களில் செய்பவர்கள் அந்தணர்கள் ஆவார்கள். அதிலும் அவர்கள் சிவாச்சாரியார் மரபினர் ஆவார்கள். சிறு கோயில்களில் வழிபாடு செய்கிறவர்கள் பூசாரி கள் என்றே அழைக்கப்பட்டனர்.

நாள் வழிபாட்டில் தெய்வ உருவங்களு க்கு நீர், பால் கொண்டு அபிஷேகம் செய்தல், மலர்களால் அலங்கரித்தல், விளக்குகளால் அழகு செய்தல், உணவுப் பொருள்களைப் படைத்தல், தீபங்களை ஏற்றி வழிபாடு செய்தல் ஆகியவை இன்றியமையாத வழிபாடுகளாகக் கருதப்பட்டன. இது திருமுறையில்.

**சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் – (அப்பர்தேவாரம்)**

என்றும்,

**யாவர்க்குமாம் இறைவதற்கு ஒரு பச்சிலை**

**(திருமந்திரம்)**

என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. இத்த கைய சடங்குமுறை வழிபாடுகள் நாள்தோறும் நடப்பதால் அவற்றைப் புறவழிபாடு என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. (திருக்கோயில் வழிபாடு இல்லாது, வழிபாட்டு முறைகளை மனத்தகத்தே கொண்டு வந்து மனத்தாலே கடவுளை வழிபாடு செய்வது அக வழிபாடா கும்).

கோயில் வழிபாட்டில், வழிபட வருகின்ற வர்களுக்குத் திருநீறும், பிரசாத வகைகளும் இறைவன் அருளாக வழங்கப்பெற்றன. வழிபாடு நடக்கின்ற பொழுது மங்கல இசைக் கருவிகள் முழக்கப் பெற்றன. இசைக்கருவிகளை முழக்கு கின்றவர்களும் திருக்கோயில் பணியாளர்களா கவே கருதப்பட்டன. வழிபாடு செய்கின்றவர் களுக்கு எவ்வாறு நெறிமுறைகள் அமைக்கப் பெற்றனவோ அதுபோல வழிபட வருகின்ற மக்களுக்கும் விதிமுறைகள் வகுக்கப் பெற்றன. உடல் தூய்மையோடு திருக்கோயிலுக்கு வர வேண்டும். திருநீறு அணிந்து கொண்டு வர வேண்டும். இறைவனுக்குரிய பெயர்களையோ அல்லது அடியார்களின் பாடல்களையோ கூறிக் கொண்டு வர வேண்டும். பூசனைக்குரிய பொருள்களைக் கொண்டுவர வேண்டும். கோயில் பணிகளைச் செய்ய வேண்டும். கரங் கூப்பி வணங்க வேண்டும். தரையில் விழுந்து வணங்க வேண்டும் என்பன அவை. அவ்வாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் போது ஆண்கள் தலை, செவிகள், கைகள், தோள்கள், முகம் ஆகிய எட்டு அங்கங்கள் (அவயவங்கள்) பூமியில் பாடும்படி வணங்க வேண்டும். அது அட்டாங்க நமஸ்காரம் எனப்படும் பெண்கள் தலை, கரங்கள், முழங் கால் அகிய அங்கங்கள் பூமியில் படும்படி வணங்க வேண்டும். அது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். இவ்வாறெல்லாம் வழிபாடுகள் நாள் தோறும் திரக்கோயில்களில் நடைபெற்று வருகின்றன.

சிறப்பு வழிபாடு

நாள்தோறும் வழிபடுகின்ற வழிபாட் டோடு சிறப்பு வழிபாடுகள் சில குறிப்பிட்ட நாள் களில் சைவ சமயத்தில் மேற்கொள்ளப்படு கின்றன. இந்தச் சிறப்பு வழிபாடுகளில் அடிப் படை வழிபாடுகள் மாறுவதில்லை. நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டோடு சிறப்பு வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுவன ஐம்பொன்னால் ஆகிய திருவுருவங்களை உலாவாக எடுத்து வருதல், வேள்விகள் நடத்துதல், சிறப்பான அலங்காரம் செய்தல் ஆகியவையாகும். சைவ சமயத்திற்குரிய சிறப்பான நாட்களில் திருக் கோயில் இருக்கும் இடங்களைப் பொறுத்தும் திருக்கோயில் அமைந்துள்ள சூழலைப் பொறுத் தும் சிறப்பு விழாக்கள் முக்கியத்துவம் பெறு கின்றன.

பொதுவான சிறப்பு விழாக்கள் எல்லாத் திருக்கோயில்களிலும் நடைபெறும். எடுத்துக் காட்டாக விநாயகர் சதுர்த்தி விழாவைக் குறிப்பிடலாம். விநாயகர் சிலை எந்தெந்தத் திருக்கோயில்களில் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த விழா நடைபெறும்.

நவராத்திரி விழாவும் புரட்டாதி மாதத் தில் அம்பிகை இருக்கும் அனைத்துத் திருக் கோயில்களிலும் நடைபெறும். சில சிறப்பான விழாக்கள் திருவுருவங்களின் சிறப்பை அடிப் படையாகக் கொண்டு நடைபெறும். இவ்விழாக் களில் மாசிமக விழா, கார்த்திகைத் தீப விழா, பூச விழா ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்த விழாக்கள் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற திருக் கோயில்களில் மாசிமகத்தில் நடைபெறுகிற விழா மாசிமக விழாவாகும். கார்த்திகைப் பௌர்ணமி நாளில் மலையைச் சார்ந்த திருக் கோயில்களில் நடைபெறும் விழா கார்த்திகைத் தீப விழாவாகும். தை மாதத்தில் பௌர்ணமி நாளில் முருகன் கோயில்களில் நடைபெறும் விழா பூச விழாவாகும். இத்தகைய விழாக்க ளோடு விரதம் இருந்து நடத்தப் பெறும் விழாக்க ளும் உண்டு.

முருகனுக்கு விரதம் இருந்து ஐப்பசி மாதத்தில் நடைபெறும் விழா கந்தசஷ்டி விழாவாகும். கிருத்திகை நாளில் விரதம் இருந்து கொண்டாடப்படும் விழா கிருத்திகை விழாவாகும். திருவாதிரை நாளில் விரதம் இருந்து நடத்தப்படும் விழாவிற்குத் திருவாதிரை விழா என்பது பெயராகும். இத்தகைய விழாக் கள் தவிர மாதத்தில் வருகின்ற பிரதோஷ நாள். அமாவாசை நாள், பௌர்ணமி, சதுர்த்தி, வார வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் திருக் கோயில்களில் சிறப்புப் பூசனை நடைபெறுவ தும் உண்டு. இவை அனைத்தும் சிறப்பு வழிபாடுகள் ஆகும்.

**இலிங்க வழிபாடு**

சைவ சமயத்தில் குரு, இலிங்க, சங்கம வழிபாடு என்பது சிறப்பிடம் பெறுவதாகும். இத்தகைய மூன்று வழிபாட்டில் இலிங்க வழிபாடு என்பது அருவுருவத்திலும் காண்பது சைவ சமய மரபாகும். விநாயகர், முரகன், சக்தி உள்ளிட்ட தெய்வங்களுக்கு உருவங்களை அமைத்து வழிபடுதல் உருவ வழிபாடு எனப் படும். அருவ வழிபாடு என்பது ஏகாந்த நிலை யில் இறைவனை வழிபடுதல் ஆகும். அதாவது எந்தவிதமான உருவமும் இல்லாத வெட்ட வெளியை வழிபடுதல். இந்த அமைப்பு எல்லாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்களிலும் இருப்பதில்லை. சில குறிப்பிட்ட திருக்கோயில்களில்தான் உண்டு. எடுத்துக் காட்டிற்குச் சிதம்பர இரகசியத்தைக் கூறலாம்.

இறைவன் உருவத்தோடும், உருவ மில்லாமலும் இருப்பவன். இது அருவுருவ வழிபாடாகும். இதனை வெளிப்படுத்துவது சிவலிங்க உருவம் ஆகும். அதாவது இலிங்க வடிவம் எந்த உருவத்தையும் குறிப்பதில்லை. ஆனால் அதே நேரத்தில் உருவமில்லாமலும் இருப்பதில்லை. எனவேதான் அருவுருவ வழி பாட்டிற்குச் சிவலிங்கம் முக்கியத்துவம் பெறுகி றது. இவ் உருவ வழிபாட்டில் திருக்கோயில் மையப் பொருளாக அமைகிறது.

**திருக்கோயில் அமைப்பு**

தெய்வ உருவங்கள் எழுந்தருளப் பெற்ற இடம் திருக்கோயில் ஆகும். சைவத் திருக் கோயில்கள் மனித உடலைப் போலவே அமைக்கப் பெற்றுள்ளன.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

என்று இதனைத் திருமந்திரம் குறிப்பிடும். உடம்பிலுள்ள பாதம் போன்றது திருக்கோயில் கோபுரமாகும். முழங்கால் ஆஸ்தான மண்டபம் ஆகும். தொப்புள் பலிபீடம் ஆகும். மார்பு மகாமண்டபம் ஆகும். கழுத்து அர்த்த மண்டபம் ஆகும். தலை கர்ப்பக்கிரகம் ஆகும். தலையின் உச்சி கருவறை விமானம் ஆகும். இவ்வாறு உடம்பின் அமைப்பைத் திருக்கோயிலுக்கு ஒப் பிட்டுக் கூறலாம். சைவத் திருக்கோயில்களில் இராசகோபுரம், கருவறை விமானங்கள், மதில் சுவர் ஆகியவை புறத்தோற்றத்தில் வெளிப்படும் திருக்கோயிலுக்குள்ளே கொடிமரம், பலிபீடம், அர்த்த மண்டபம், பிரகாரம், மகா மண்டபம், கருவறை ஆகிய பகுதிகள் அமைக்கப் பெற் றிருக்கும். கருவறையின் மேல் உள்ள கோபுரம் விமானம் எனப்படும். மதில்சுவரை ஒட்டியுள் ளவை கோபுரங்கள் எனப்படும். கோபுரங்களில் முதன்மையாகப் பெரிய நிலையில் அமைந் திருப்பது இராசகோபுரம் ஆகும்.

திருக்கோயில்களில் கருவறை என்பது எல்லாத் திருவுருவங்களுக்கும் அமைதல் இல்லை. சிவன், விநாயகர், முருகன், சக்தி, சண்டிகேசுவரர் ஆகிய உருவங்களுக்கு மட்டுமே கருவறைகள் அமையும். மற்ற தட்சணாமூர்த்தி, பிரம்மா, கொற்றவை ஆகிய உருவங்கள் சுவர்களில் உள்ள கோட்டங்களில் (சன்னல் போன்ற அமைப்பு) அமைக்கப்பெறும். அம் பலத்தில் நடராசர் உருவம் அமைக்கப் பெறும். நவக்கிரகங்கள், நந்தி, மயில், சிங்கம், சிவன் அடியார்கள் உள்ளிட்ட உருவங்கள் பீடங்களில் அமைக்கப் பெறும். திருக்கோயில்கள் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) என்ற வழிபாட்டு முறையில் புதுப் பிக்கப் பெறும். இவ்வுருவங்களை வழிபடுவ தோடு திருக்கோயில் கோபுரங்களை வழிபாட் டாலே திருவருள் கிடைக்கும் என்ற நம்பிக்கை யும் உண்டு. "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்ற பழமொழி இதனால் எழுந்தது.

**தெய்வ உருவங்கள்**

நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும் செய்யப் பெறுகின்ற உருவங்கள் சைவக் கோயில்களில் பலவாறாகக் காணப்படுகின்றன. கடவுள் ஒருவரே அவரே சிவன் என்ற கொள்கை யைக் கொண்டது சைவ சமயம். அக்கடவுளின் அருளைப் பெறுவதற்காகப் பல தெய்வ வடிவங்களை அமைத்து வழிபடும் சமயம் சைவ சமயம் ஆகும். எல்லாத் தெய்வ வடிவங்களிலும் சிவனே எழுந்தருளுகின்றான் என்பது சைவ சமயக் கொள்கையாகும். இதனை

**யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி**
**மாதொரு பாகனார் வந்து எய்துவார்**

என்று சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார் கூறும். சைவத் திருக்கோயில்களில் உள்ள தெய்வ உருவங்கள் அனைத்திலும் சிவபெருமானே மூலாதாரமாய் எழுந்தருளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றான் என்பது நம்பிக்கையாகும்.

திருக்கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் கொடிமரம் அமைப்புக் காணப்பெறும். கொடி மரம் என்பது இறைவனின் முத்தொழிலைக் குறிக்கக் கூடிய அடையாளம் என்பர். இறைவன் முத்தொழிலையும் கொண்டு உலகத்தை நடத்துகின்றான் என்பதை அறிவிக்கவே கொடி மரதம் நாட்டப்பெறுகிறது. அதற்குப் பின்னர் பலிபீடம் அமைக்கப் பெறும். இது தத்துவப் பொருளான பாசத்தைக் குறிப்பதாகும். இப் பலிபீடம் நந்தி தேவருக்குப் பின்னால் அமைக் கப்பெறும். சிவபெருமானின் கருவறைக்கு முன்னே நந்திதேவரின் உருவமான காளை வாகனம் அடையாளச் சின்னமாக அமைந்திருக் கும். நந்திதேவர்தான் சைவ சமயத்தின் முதல் ஆசிரியர் ஆவார். இவரை வணங்கிய பின்னர் தான் சிவவழிபாட்டைத் தொடங்க வேண்டும்.

அடுத்துப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி வடிவம் காணப்பெறும். இது கல்லாலமரத்தின் கீழ் சனகர், சனந்தனர், சனாதரர், சனற்குமாரர் என்ற நால்வர்க்கும் உபதேசம் செய்கின்ற வடிவம் ஆகும்.

அதன்பின் கருவறைக் கோட்டத்தில் (சன்னல் போன்ற அமைப்பு) அண்ணமலையார் வடிவம் இருக்கும். இது பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிய வரலாற்றைக் குறிப்பதாகும். சிவலிங்க வடிவத்தின் இலிங்கம் மட்டுமே இதில் காணப்பெறும்.

அடுத்துக் கருவறையில் வள்ளி தெய்வானையோடு கூடிய முருகன் உருவம் அமைந்திருக்கும். முருகனுக்கு ஆறு திருமுகங்க ளும், பன்னிரு கைகளும் உடைய உருவம் அமைக்கப் பெற்றிருக்கும். அடுத்தது அடியார்க ளில் முன்னவராகிய சண்டிகேசுவரர் திருக்கரு வறை அமைந்திருக்கும். இவர் சிவனடியார் களில் ஒருவர். அமர்ந்த கோலத்தில் மனித வடிவில் உள்ளவர். முருகனுக்கும் சண்டிகேசு வரர்க்கும் இடையில் உள்ள கோட்டங்களில் நான்கு தலைகளோடு கூடிய பிரம்மா, காளி வடிவத்தோடு கூடிய கொற்றவை உருவங்கள் அமைந்திருக்கும். அதன்பிறகு ஆடவல்லான் எனப்படும் நடராசரின் அம்பலம் காணப்படும். இறைவனுடைய ஐந்தொழிலைக் காட்டுகின்ற நடராசரின் வடிவம் சைவ சித்தாந்த வடிவ மாகவே அமைக்கப் பெற்றிருக்கும்.

இதனை அடுத்துப் பைரவர் உருவம் அமைந்திருக்கும். நாய் என்ற விலங்கின் வடிவத்தோடு நின்ற வடிவில் காட்சி தரும் இவ்வுருவம் எல்லாத் தத்துவங்களையும் வெளிப்படுத்தி ஆன்மாக்களை ஈடேற்றும் வடிவம் ஆகும். உலகப் பற்றையும், உடல் பற்றை யும் விட வேண்டும் என்ற தத்துவத்திற்கேற்ப ஆடையில்லாது இவ்வுருவம் காணப்படும். அதன்பின் ஒன்பது கோள்களாகிய நவக்கிரகங் களின் வடிவங்களும், சூரிய, சந்திர வடிவங் களும் காணப்பெறும். இத்தகைய தெய்வ உருவங்கள் மூலம் வழிபடுகின்ற வழிபாடு இலிங்க வழிபாடு எனப்படும்.

இத்தகைய உருவங்களுக்கு நடுவில் கோயிலின் மையமாக அமைந்திருப்பது சிவ லிங்க உருவமாகும். சிவலிங்கம் சிவபெரு மானின் அருவுருவத் திருமேனி ஆகும். சிவலிங்க வடிவம் பீடம், ஆவுடை, இலிங்கம் என்ற மூன்று பாகங்களைக் கொண்டதாகும். பீடம் பிரம்ம வடிவமாகும். அதற்கு மேலே உள்ள ஆவுடை விஷ்ணு பாகம் ஆகும். ஆவுடைக்கு மேல் உள்ள நீண்டுள்ள இலிங்க வடிவம் உருத்திரனைக் குறிப்பதாகும். எனவே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் உள்ளடக்கமே இலிங்கம் என்று கூறப்பெறும். இந்த இலிங்கம்பற்றிய செய்தி மிக விரிந்த செய்தியாகும். இலிங்கபுராணம் என்ற ஒரு புராணமே உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் சக்தியாகிய உமையவளுக்குத் தனியாகக் கருவறை அமைந்திருக்கும். உமையாள் வடிவம் அருட்சக்தி வடிவம் ஆகும். கோயில்கள் அமைந்துள்ள இடங்களுக்கு ஏற்ப உமையவளின் பெயர்களும் மாறி மாறி வழங்கப் பெறும். சிவபெருமானுக்கு எதிரே நந்தி வடிவம் இருக்கும். சில திருக்கோயில் களில் சக்தியின் வாகனமாகிய சிங்க வடிவம் இருக்கும்.

இவ்வாறு திருக்கோயில் அமைப்பில் பல்வேறு உருவங்களில் சிவபெருமானைக் கண்டு வழிபடுகின்ற வழிபாடே குரு, இலிங்க, சங்கம என்ற வழிபாட்டில் இலிங்க வழிபாடாகும்.

**குரு, சங்கம வழிபாடு**

சைவ சமயத்தின் மற்ற இரு வழிபாடா கிய குரு, சங்கம வழிபாடு தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வழிபாடாகும். சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று இறைவனுடைய திருவருளைக் குருவின் மூலமாகத்தான் பெறமுடியும் என்பதாகும். குரு என்பவர் உயிர்களின் பாசங்களை நீக்குபவர் ஆவார். இறைவனைப் பற்றிய தத்துவங்களைக் கூறி இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு வழிகாட்டுநர் குரு ஆவார். இக்குருவின் மூலமாக உபதேசமாகிய திருவருளைப் பெற்று அதன்மூலம் இறைவனின் அருளைப் பெறலாம். குருவிடம் ஞான நூல்களைக் கேட்கும் பொழுது பக்தியுடன் இருந்து கேட்க வேண்டும். குருவின் உபதேசப்படி ஒழுக வேண்டும். குருவிற்குச் செய்யும் தொண்டே சிறந்த தொண்டாகும். குருவை வழிபட்டு அருள் பெற்றவர்கள் மாணிக்கவாசகர், திருமூலர், மங்கையர்க்கரசி யார், அப்பூதியார் ஆகிய அடியார்கள் ஆவர்.

சங்க வழிபாடு என்பது சிவனடியார் களின் திருக்கூட்டத்தை வணங்குகின்ற வழிபாடாகும். சிவனடியார்கள் என்பவர்கள் சிவபிரானிடம் மெய்யன்பு கொண்டவர்கள். சிவச்சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் அணிந்தவர்கள் இத்தகைய திருச்சின்னங் களோடு சிவனுக்குத் தொண்டாற்றி அவனுடைய அருளைப் பெற்றவர்கள் ஆவார்கள். அடியார்க ளைச் சிவபெருமானாகாவே பாவித்து அவர் களுக்குத் தொண்டுகள் செய்து வழிபடுவது சங்கம வழிபாட்டின் சிறப்பாகும். சிவனடியார் களை வழிபடுகின்ற சங்கம வழிபாட்டின் சிறப்பாகும். சிவனடியார்களை வழிபடுகின்ற சங்கம வழிபாடு சைவ சமயத்தில் சிறப்பிடம் பெற்றதாகும். பெரிய புராணத்தில் கூறப்படும் அடியார்களில் பலர் இத்தகைய சங்கம வழிபாட் டால் இறைவனுடைய அருளைப் பெற்றவர்கள் ஆவார்கள். இச்சங்கம வழிபாட்டில் கருவிக ளாகப் பயன்படுபவை உருத்திராக்கமும், திரு நீறும் ஆகும்.

**சிவச் சின்னங்கள்**

சிவ வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவன சிவச்சின்னங்களாகும். இவற்றைச் சாதனங்கள் என்றும் குறிப்பிடுவர். சிவச்சின்னங்களில் முதன்மை பெறுவது உருத்திராக்கம் ஆகும். உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தை எரித்த பொழுது சிவபிரானது மூன்று கண்களிலிருந்து சிந்திய மணியை உருத்திராக்கம் என்று கூறுவதுமுண்டு. எனவே இறைவனுடைய கருணையை நினை வூட்டும் சாதனமாக உருத்திராக்கத்தைக் கொள் வதுமுண்டு. சைவர்கள் இத்திருச் சின்னத்தை அணிந்தால்தான் சைவராகக் கருதப்படுவர். உருத்திராக்கம் ஒன்று முதல் பதினாறு திரு முகங்கள் கொண்டதாகக் கிடைக்கிறது. ஒவ்வொரு முகத்திற்கும் பயன் கூறப்படுகிறது. இதை அணிவதற்குச் சில விதி முறைகளும் உண்டு. இன்னின்னவர் இவ்வாறு அணிய வேண்டும் என்ற விதிகளையும் ஆகம நூல்கள் கூறுகின்றன.

சிவச்சின்னங்களில் அடுத்ததாகிய திருநீறு என்பது குற்றமற்ற பசுவின் சாணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பினால் சுடுவதால் உண்டாகும் நீறாகும் (சாம்பல்). இத்திருநீற்றை அணிவது சைவர் களின் கடமையாகும். சாணம் ஆன்மாவையும், சாணத்திலுள்ள அழுக்குகள் மலங்களையும், சாணத்தை எரிக்கின்ற நெருப்புத் திரு வருளையும், எரித்தபின் கிடைக்கும் திருநீறு மலம் நீக்கப்பெற்ற ஆன்மாவையும் குறிக்கும் என்பர். சாதாரணமாகத் திருநீறை அணிந்தால் அதற்கு அணிதல் என்று பெயர். நீரில் குழைத்து அணிந்தால் உபதேசம் பெற்று அணிதல் என்று பொருள்படும். இவ்வாறு உபதேசம் பெற்று அணிகின்ற திருநீற்றை மனித உறுப்புக்களின் இன்னின்ன இடத்தில் அணிய வேண்டும் என்ற விதிமுறைகள் உண்டு. இவற்றைச் சாத்திரங் களும் தோத்திரங்களும் கூறுகின்றன.

இவ்வாறு சைவ சமய வழிபாட்டில் குரு, சங்கம வழிபாடுகள் சிறப்புற அமைந்துள்ளன. அவற்றின் வழியில் சாதனங்களும் அமைந் துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பினார். "வேலையாவது மண்ணாங்கட்டி யாவது. இதைவிட ஊருக்குப் போய் வெங்கா யம் வைத்துப் பிழைக்கலாம்" என்று நினைத் தார்.

ஊருக்குத்திரும்பியவர் "எதற்கும் ஒரு தடவை மாற்று இடமொன்றைக் கோரிப் பார்க்க லாம்" என்று அதிகாரியைச் சந்திக்கச் சென்றார். "வேண்டுமானால் இரண்டு ஆண்டுகள் மட்டும் அங்கே வேலை செய். பிறகு திரும்பி வருவதைப் பற்றி யோசிக்கலாம்" என்று திருப்பி அனுப்பி னார் அதிகாரி. என்றாலும் மனம் தயங்கியது. வேறு வழியின்றி மறுபடி திரும்பி வன்னேரிக் குளத்துக்கு வந்த ச.மு வுக்கு மெல்ல மெல்ல ஊர் பிடித்துக் கொண்டது. ஆட்கள் பிடித்தனர். அப்படியே அங்கேயே இருந்து விட்டார். பிறகு வன்னேரிக்குளத்தில் அவர் சொன்னதே வேதம். இறுதியாக ச.மு, தன்னுடைய ஓய்வை அங்கி ருந்தே எடுத்தார். அவ்வளவு காலம் அங்கே சேவை. அங்கேதான் வாழ்க்கை. வன்னேரிக் குளத்தோடு ஒன்றி ஒன்றாகி விட்டார் ச.மு.

# அக்கராயன் வட்டகை

## (சமகாலமும் வரலாற்றுத் தடங்களும்)



கருணாகரன்

"அலியன் யானை" என்றொரு கதையை இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருந்தார் ச.முருகானந்தன். வன்னேரிக் குளத்தில் மருத்துவராக வேலை பார்த்த காலத்தில் இந்தக் கதையை எழுதினார் ச.மு. படித்து முடித்த கையோடு 26 வயதில் வன் னேரிக் குளம் மருத்துவமனைக்கு முதல் நிய மனம் கிடைத்து வந்தவர் ச.மு. காட்டையே அறிந் திராத ஒரு யாழ்ப்பாண வாசியைக் கொண்டு வந்து யானைக்காட்டின் மத்தியிலிருக்கும் சிற்றூர் ஒன்றில் "வேலை பார்" என்று சொன் னால் யார்தான் ஏற்பார்கள்? சரியான போக்கு வரத்துக் கிடையாது. பகலிலேயே தெருவில் தலைக்கறுப்பைக் காண்பது அபூர்வம். மின் சாரம் இல்லை. ஊரில் ஏதோ சாட்டுக்கு இருக்க வேணும் என்ற மாதிரி இருந்த ஒரேயொரு கடை. அதுவும் சின்னஞ்சிறிய ஓலைக்கொட்ட கையில். ச.மு வந்த பஸ்ஸிலேயே திரும்பிக்

ச.மு வை விட வேறு யார்தான் அங்கே விரும்பி வருவார்கள்?

அந்த நாட்களில் அக்கராயன், ஸ்கந்த புரம், வன்னேரிக்குளம் போன்ற இடங்களில் காட்டு யானைகளே ராஜாங்கம் நடத்தின. வயலில், வாழைத்தோட்டங்களில், தென்னந் தோப்புகளில் ஏன் தெருக்களிலும்கூட. பொழுது கவிழ்ந்தால் இந்தப் பகுதிகளில் பயணம் செய்வ தற்கு அஞ்சுவார்கள். வழியில் பெரும்பாலும் எங்காவது யானைக்கூட்டத்தில்தான் முட்டிக் கொள்ள வேண்டும். சிலவேளைகளில் தனி யனில். மழைக்காலத்தில் இது நிச்சயம். தெருவில் வேறு சனப்புழக்கம் இல்லை. ஒன்றிரண்டு பஸ்க ளைத் தவிர வேறு வண்டிகள் கிடையாது. வயல் விதைப்புக்காலத்திலும் சூடடிப்பு வேளையிலும் ட்ரக்ரர்கள் நடமாடும். அவ்வளவுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குள்தான் இந்தப் பகுதிகளில் இருந்தவர்களின் வாழ்க்கை ஓடியது. தொழில் களும் ஓடின. வேறு என்னதான் செய்ய முடியும்? நிலவுக்கு ஒளிந்து பரதேசம் போக முடியுமா? வேளாண்மைக் காலத்தில் காட்டெருமை, பன்றி, யானை என்று எல்லாவற்றுக்கும் காவல். காவல் இல்லையென்றால் எல்லாமே காலி. காடுகளின் மத்தியில் ஊரை வைத்திருந்தால், பயிர்களை விளைத்தால் இதை விட வேறு எப்படியிருக்கும்? எப்படித்தான் திட்டமிட்டார்களோ தெரியாது, ஓங்கிச் சடைத்து வளர்ந்திருந்த காட்டின் மத்தி யில் சனங்களைக் கொண்டு வந்து குடியேற்று வதற்கு?

1950களில் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கும் கிளிநொச்சிக்கும் ஏராளம் குடும் பங்கள் குடியேற வந்தன. யாழ்ப்பாணத்தில் நிலமும் தொழிலும் போதாது. நிலம் இருந்தவர் களுக்கும் அதன் அளவு போதாது. பஞ்சம் பிழைக்க வேண்டுமானால் பரதேசம் போகலாம் என்று கிளம்பி வன்னிக்கும் கிளிநொச்சிக்கும் வந்தார்கள். வன்னி என்றால், அது காடின்றி வேறென்ன?

காட்டாறுகளை வழிமறித்துக் கட்டப் பட்ட குளங்களை ஆதாரமாக வைத்துக் கொண்டே வன்னியிலும் கிளிநொச்சியிலும் குடியேற்றங்கள் நடந்தன. கொக்காவில் – அக்கராயன் காட்டை அறுத்துப் பாய்ந்து பூநகரிக் கடலில் சேரும் நிலையாற்றையும் வலம்பற்று ஆற்றையும் மறித்து அக்கராயன் குளத்தைக் கட்டினார்கள். நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் நவரத்தினம், ஆறுமுகம் ஆகியோரைக் கொண்ட குழுவினர் இதில் ஈடுபட்டனர் என்று தகவல்.

தென்னியன் குளத்தின் கீழிருந்து ஓடிவரும் மண்டைக்கண்ணாற்றை வழிமறித்து வன்னேரியில் ஒரு குளம். அதன் பொறியிய லாளர்......?

இதற்குப்பிறகு அக்கராயனில் குடி யேற்றத்திட்டங்கள் வந்தன. பிறகு ஸ்கந்தபுரத் தில். 2ஆம் உலகப்போர்க்காலத்தில் சிங்கப்பூரி லிருந்தும் மலேசியாவிலிருந்தும் நாடு திரும் பிய தமிழர்களுக்கு நட்ட ஈடாகவும் தொழில் துறையாகவும் மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் அக்கராயனில் காணிகளை வகுத்துக் கொடுத் தார்கள். ஒரு தலைக்கு 05 ஏக்கர் மேட்டு நிலமும் 10 ஏக்கர் வயற்காணியும். மொத்தம் 1500 ஏக்கரில் திட்டம். 75 சிங்கப்பூர் – மலேசிய வருகையாளர்கள். 25 பேர் வருமான வரி செலுத்துவோர். மொத்தமாக 100 தலைகள். இதற்கு நீர் அக்கராயன் குளத்திலிருந்து வலது கரையினால் பாய்ந்தது.

இப்படியெல்லாம் கிடைத்தும் பல பேர் அக்கராயனுக்கு வரவேயில்லை. யானை, நுளம்பு, பாம்பு என்று மனிதனுக்கு விரோதியான அத்தனை பிராணிகளோடும் கூடி வாழ்வது அவ்வளவு சுலபமானதல்ல. போதாக்குறைக்கு பாதையோ பயணமோ வேறு ஒழுங்கில்லை. இந்தச் சீரில் யாரய்யா வந்து காட்டில் நாடமைப் பார்? வந்தவர்களும் கையில் இருந்த சேமிப்பை யும் வந்த வருவாயையும் செலவழித்துக் களைத் தார்கள். ஆனாலும் மண்ணை நம்பினால் அது கைவிடுவதில்லை. காலம் செல்லச் செல்ல பயிர் கள் செழித்தன. பயிர்கள் செழிக்க வாழ்க்கையும் செழித்தது. வாழ்க்கை செழிக்க அங்கே ஆரம் பிக்கப்பட்ட பாடசாலைக்கு வெளியூரிலிருந்து பிரமுகர்களை அழைத்து வந்தார்கள் மலாயன் பென்சனியர்கள். அப்படி வந்தவருள் ஒருவர் தனிநாயகம் அடிகள். இதற்குக் காரணம் என்ன தெரியுமா? மலேசியன் பென்சனியர்கள் பலருக்கு ஒழுங்காகத் தமிழில் பேசத் தெரியாது. எனவே தங்களின் இந்தத் தெரியாத்தனத்தை மறைப்பதற்காக அவர்கள் தனிநாயகம் அடி களை அழைத்து வந்தார்கள்.

இங்கே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். மத்திய வகுப்புத்திட்டத்தில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண் – இவரும் மலேசியாவிலிருந்து வந்திருந்தவர்தான் – (கமலம்மா என்று பெயர்) தனியாகவே துணிச்சலுடன் பல விசயங்களைச் சாதித்தார். என்றால், உழவு செய்வதில் இருந்து துவக்கெடுத்துச் சுடுவது வரையில் ஆள் படு விண்ணி. அதே காலத்தில் இந்தப் பகுதியில் இருந்த இன்னொருவர் "சுபாஸ்" சந்திரன். யாழ்பாணத்தில் உள்ள "சுபாஸ் ஹொட்டேல்" உரிமையாளர். பின்னாளில் இவர் பெரும் பிரபலஸ்தவர். தொடக்கத்தில் (சிறுவயதில்) அக்கராயனில் கமம் செய்தவர்.

ஸ்கந்தபுரம் குடியேற்றத்திட்டத்தை உருவாக்கியவர்களில் முக்கியமானவர் அப்போது யாழ்ப்பாணத்தின் அரசாங்க அதிபராக இருந்த சிறிஸ்கந்தராஜா. அவருடைய பெயரிலேயே குடியேற்றத்திட்டத்தை உருவாக்கலாம் என்றார் காணி அதிகாரியாக இருந்தவர். சனங்களும் ஆமோதித்தார்கள். ஆனால், அவருடைய பெயரில் வில்லங்கமான ஒரு சொல் இருந்தது. அது சிறி சட்டம் பற்றி பலரும் கொந்தளித்துக் கொண்டிருந்த காலம். எனவே அவருடைய பெயரின் முன்பகுதியிலிருந்த சிறி என்ற சொல்லை எடுத்து விட்டு "ஸ்கந்தபுரம்" என்று பெயர் வைத்தனர். அதுவே வழமையாயிற்று. ஆனால், வரலாறு ஒரு போதும் நேர்கோட்டில் பயணிப்பதில்லையல்லவா! புலிகளின் காலத்தில் (1997 – 2008) வரையில் அவர்கள் ஸ்கந்தபுரத்தை "கந்தபுரம்" என்றே அழைத்தனர். பேருந்துகளில் கூட "கந்தபுரம்" என்றே குறிப்பிடப்பட்டிருந்தது.

அக்கராயனில் பாய்ந்து கொண்டிருந்த இந்தக் காட்டாறுகளை வழிமறித்து இதற்கு முன்னும் பல குளங்களை முன்னோர் கட்டியிருக்கிறார்கள். அவற்றின் எச்சங்கள் இன்னும் அங்கும் இங்குமாகச் சிதைந்திருப்பதைக் காணலாம். அநேகமாக அது கறுப்புச் சிவப்பு சுடுமண் காலம் என்று சொல்லப்படுகிறது. கி.மு. – கி. பி முன்பின்னான காலம் எனச் சொல்வோரும் உண்டு. இன்னும் இந்தக் கறுப்புச் சிவப்பு மண்சிதைவுகளை இந்தப் பகுதிகளில் காணலாம். குறிப்பாக அக்கராயன் – அம்பலப் பெருமாள் சந்தியிலிருந்து தெற்கே தென்னியன் குளம் செல்லும் வழியிலும் காட்டோரங்களிலும் ஆற்றுப்படுகைகளிலும் இவை தாராளம். தென்னியன் என்பதே ஒரு தமிழ் மன்னன் என்று கூட ஐதீகம் உண்டு. மட்டுமல்ல, அம்பலப் பெருமாள், அக்கராயன் என அன்றைய தலைவர்கள் அல்லது அரசர்கள், வணிகர்கள் இருந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அக்கராயன் குளமும் ஏற்கனவே சிதைந்த நிலையிலிருந்த குளத்தை ஆதரமாக வைத்துக் கட்டப்பட்ட ஒன்றுதான். குளத்தின் தென்கரையில் இதைத் தெளிவாகப் பார்க்கலாம். அதிலும் குளம் வற்றும் கோடைகாலங்களில் இந்தப் புலப்பாடு இன்னும் துலக்கமாகும். பழைய குளத்தைப் புதுப்பித்துக் கட்டும்போது ஏராளமான மண்ணோடுகளையும் பழைய நாணயங்களையும் கண்டெடுத்திருக்கிறார்கள் அங்கு வேலைசெய்த பணியாளர்கள். பிறகு இதை அறிந்த தொல்சேகரிப்பாளர்கள் தாங்களும் சுயமாகத் தேடிப் பலவற்றைக் கண்டெடுத்துள்ளனர். இன்னும் மண்டைக்கண்ணாற்றின் வழிநெடுகிலும் அதன் தீரங்களிலும் அங்கொன்று இங்கொன்று என இந்தச் சிதிலங்களைப் பொறுக்கலாம். நான்கூட அப்படிச் சில சிதிலங்களைப் பொறுக்கியிருக்கிறேன். இந்தப் பகுதிகளில் மேகநாதன், குணரத்தினம் ஆகிய இருவரும் இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப்பதில் ஆர்வமாக இருந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் மேகநாதனுடைய தொடர்பின் வழியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் கூட இந்தத் தொல்பொருட்களைச் சேகரிப்பதற்காக இங்கே வந்திருக்கிறார். சில சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக மாணவர்களே வந்து இந்தப் பகுதிகளைப் பார்த்திருக்கிறார்கள். முக்கியமாக அக்கராயன்குளத்துக்கு வடக்கிலுள்ள – இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணாவில் என்று சொல்லப்படும் இடத்தின் கிழக்குப் - பகுதியில் உள்ள காட்டில் சிதைந்திருக்கும் இன்னொரு சிறிய குளத்தை அண்மித்துள்ள மேடொன்றில் புதைந்திருந்த தொல்சின்னத்தை. இங்கே செங்கல்லால் ஆன புராதன பதிகை ஒன்று உண்டு. அகழ்ந்தபோது தமிழ்ப்பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட மண் தகடுகள் காணப்பட்டன. கூடவே மண்ணாலான பானையின் உள்ளே வைக்கப்பட்ட உலோகத்தி லான உருக்கள் மற்றும் சாம்பல். மேலும் சுடு மண் சிற்பங்களும். இதைவிட உலோகத்தாலும் கல்லாலும் ஆன சில புராதன நாணயங்களும். அணிகலனாக கழுத்துமாலையில் கோர்க்கப் படும் மணிமுத்துப் பரல்கள். இவையெல்லாம் அங்குமிங்குமாக இன்னும் மண்டைக்கண் ஆற்றின் தீரங்களில் சிதறிக்கிடக்கின்றன. வேட் டைக்காரர்களும் காட்டுக்குச் செல்வோரும் அவற்றைக் கண்டெடுத்திருக்கிறார்கள். என்றால், இங்கே பல நூற்றாண்டுகளாக மக்கள் வாழ்க்கை நீண்டிருக்கிறது. ஒரு நாகரீக நீட்சியை அவர்கள் தங்களோடு கொண்டிருக்கி றார்கள்.

இதைப்போல இங்குள்ள வேறு சில இடங்களிலும் தொல்சின்னங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. அக்கராயன் இரண்டாம் பகுதி வாய்க்கால் பகுதியை அண்மித்து, பெ.கணேசன் வீட்டில் ஒரு தொகுதி மண்ணாலான யானை களும் மனித உருக்களும் குழாய் வடிவிலான வேறு சில சுடுமண்பொருட்களும். ஏறக்குறைய இரண்டடி உயரம் வரையான மண்யானைகள். நேர்த்தியான கைவண்ணங்களில். தென்னை மரத்துக்கு பசளை இடுவதற்காக அகழ்ந்தபோது இவை கிடைத்தன என்று சொல்கிறார் பெ. கணேசன். கணேசன் அக்கராயன் பிரதேசத்தின் முக்கியமான எழுத்தாளர். ஆசிரியர். (தற் பொழுது பாரதிபுரம் வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றுகிறார்). இன்னொரு தொகுதித் தொல்சுவடுகள் கண்ணகைபுரத்தில் நாகமுத்து என்ற விவசாயி ஒருவரினால் காணப்பட்டன. பிறகு அவற்றை அடையாளம் கண்டார் மேகநாதன். அங்கே மண்ணாலான சிற்பங்களும் ஒரு வகையான உலோகத்திலான கருவிகளும் கல்லாயுதங்களும் இருந்தன. ஆனாலும் அதிக ஈடுபாட்டோடு இந்தப் பகுதியில் வரலாற்றுச் சுவடுகளைத் தேடியவர் குணரத் தினமே. இதற்காக அவர் நடந்த தொலைவு வியப் பூட்டுவது. இந்தப் பகுதியில் இன்னொரு ஆச்சரி யம், இரும்பை ஒத்த உலோகப்பொருள்போலக் காணப்படும் சிதிலங்கள். பரிசோதனைக்காக அவற்றை மூதாதையர்கள் ஆலைப்படுத்த முயற்சித்திருக்கலாம் என்பது தி.தவபாலனின் நம்பிக்கை. ஆனால் அதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எல்லாவற்றையும் தொகுத்தும் முழுமைப்படுத்தியும் பார்ப்பதற் காக காலக்கனி யார் கையிலும் இன்னும் கிட்ட வில்லை.

அக்கராயன் பகுதியில் இன்னொரு நவீன ஆச்சரியம், இங்கே அமைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி என்ற தென்னிலங்கைக் கிளர்ச்சி யாளருக்காக அமைக்கப்பட்டிருந்த சிறைக் கூடங்கள். இந்த நாளில் என்றால் இதைப் "புனர்வாழ்வு மையங்கள்" என்று சொல்லியிருப் பார்கள். இப்பொழுது அக்கராயன் மகா வித்தி யாலயமாக ("காம்ப்"படி பள்ளிக்கூடம்) இயங்கிக்கொண்டிருக்கும் கட்டிடத்தொகுதியின் முந்திய வடிவமே இந்தச் சிறைக்கூடங்கள். 1971இல் ஜே.வி.பியின் கிளர்ச்சி முறியடிக்கப் பட்டபொழுது சிறைப்பிடிக்கப்பட்டவர்களை இங்கேகொண்டுவந்து அடைத்தது அரசு. சிறை யிருந்த புதல்வர்களைத் தேடிவந்த பெற்றோர் கள் தங்கிச்செல்லவும் கண்காணிப்பு அதிகாரி கள் தங்கவும் அமைக்கப்பட்ட கட்டிடங்களே இன்றைய ஆசிரிய விடுதிகள். அப்பொழுது அமைக்கப்பட்ட கண்காணிப்பு வீதிகள் இன்னும் சிதைந்த நிலையில் இருப்பதைக் காணலாம். எப்படியோ ஒரு சிறைத் தொகுதி இப்படிக் கல்வித்தொகுதியாக மாறியிருப்பதில் மகிழ்ச்சியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சியின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது அக்கராயன் பிரதேசம் சற்று வரட்சி கூடிய ஒன்றே. பூநகரி, துணுக்காய், மன்னார்த் தொடர்ச்சியான மேற்குப் பக்கம் பொதுவாகவே வரட்சியான பகுதிதான். இந்தத் தொடர்ச்சியாகவே அக்கராயனும் உள்ளது. ஒப்பீட்டளவில் ஏனைய பிரதேசங்களை விடச் சற்று செழிப்பான காடுகளையும் குளங்களை யும் உடையது. ஆனாலும் கரைச்சியின் பிற பகுதிகளுடன் நோக்கினால் அக்கராயன் வெம்மையேந்தியே.

முறிப்பு, அக்கராயன், வன்னேரி என மூன்று பெரிய குளங்களும் மணியங்குளம், மணற்குளம் என வேறு சிறிய சில குளங்கள் இருந்தாலும் இந்தப் பிரதேச மேட்டு நிலங்கள் கடும் வரட்சியில் தவிப்பவை. குளங்களின் கீழே விரிந்து நெடுத்த வயற்படுக்கைகள் உள்ளன. ஆனால் அந்த அளவுக்கு மேட்டில் குடிநீரை எடுப்பதே சிரமம். ஆனாலும் இங்குள்ள வலியன் கள் இதைக் கடந்தும் தங்களை எப்படியோ விளைத்துக்கொண்டுதானிருக்கிறார்கள். முன்னர் இங்கிருந்த ஆதிக்குடிகள் ஆற்றின் படுகையோரங்களில் இருந்திருக்கிறார்கள். அந்தப் பகுதியெல்லாம் இன்று காடு. முன்னர் காடாக இருந்த பகுதி இன்று ஊர்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. எப்படியோ, இன்றைய ஊர் மடியில் வலது கரையிலும் இடதுகரையிலுமாக தென்னையும் மாவும் வளர்ந்திருக்கின்றன. வீதிகள் இன்னும் அறுத்தோடிகளாக இருந் தாலும் சனங்கள் போய்க்கொண்டும் வந்து கொண்டும்தானிருக்கிறார்கள். வயல்களில் பயிர் விளைகிறது. காடுகளில் வேட்டை நடக்கிறது. 10ஆம் நம்பர் 12ஆம் நம்பர் தோட் டாக்களைப் போடும் சொட்கண்கள் இருந்த போது அதைக் கொண்டு போனவர்கள், பிறகு கட்டுத்துவக்கோடு வேட்டையாடினார்கள். அதுவும் இல்லாமற்போனபின், வெங்காய வெடி யிலும் பொறிவெடியிலும் வேட்டையாடுகிறார் கள். அதற்கும் வாய்க்காதவர்கள் பொறி வைக்கிறார்கள். அல்லது தடம் வைக்கிறார்கள். எப்படியோ இறைச்சி வேகிறது சட்டிகளில்.

நான் அக்கராயனுக்கு முதன் முதலில் போயிருந்த பொழுது எனக்கு ஆச்சரியமாக இருந்தது அங்கே இருந்த கரும்புத் தோட்டம். ஏறக்குறைய 220 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் கரும்பு விளைந்திருந்தது. நடுவே கரும் பாலை. நாற்பது, ஐம்பதுபேர் வேலைசெய்தார் கள். செழித்திருந்த கரும்பை வெட்டி ஆலையில் இட்டு, அதைச் சாறாக்கி.... இதையெல்லாம் செய்வதைப் பார்க்க வாயில் இனித்தது.

அந்த நாட்களில் எங்கள் வீட்டுக் கிணற்றடியில் இரண்டு அடி கரும்பு மட்டுமே நின்றது. தைப்பொங்கல், நவராத்திரி போன்ற பண்டிகைக்காலங்களில் எடுத்துக்கொள்வதற் காக என ஐயா அந்தக் கரும்பு அடிகளை நாட்டி வளர்த்தார். மற்றும்படி கரும்புத் தோட்டத்தை வேறெங்கும் கண்டதில்லை, அந்த வயதில். கரும்புத்தோட்டத்துக்குப் போயிருந்தபோது சர்க்கரைப்பாணி தந்தார்கள். பிறகு பள்ளிச் சுற்றுலாவில் அதை விளக்கமாகப் பார்த்தேன். ஏறக்குறைய அக்கராயனுக்கு ஒரு சிறப்படை யாளத்தை ஒரு காலம் தந்தது அந்தக் கரும் பாலை. பின்னர் எங்கள் நாடு எப்படியெல்லாம் சீரழிந்ததோ அதைப்போல அந்தக் கரும்புத் தோட்டமும் சிதைந்து போயிற்று. இன்று அங்குள்ள காணிக்காக பெரும்போராட்டமே நடக்கிறது. அன்று இந்த ஆலைக்கு ஏழுபேர் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். இரண்டு பேர் சிங்களர். இருவர் முஸ்லிம்கள். மூவர் தமிழர்கள். மனோஜராக இருந்தார் கோபாலசிங்கம். பின்னாளில் இவரே கரும்புத் தோட்ட முதலாளி என அழைக்கப்பட்டார். கரும்புத்தோட்டத்தில் இறுதிவரையில் தன்னை நிறுத்திக் கொண்டிருந்த கோபாலசிங்கத்தை இறுதியாக 2009 மார்ச்சில் வலைஞர் மடத்தில் அகதியாகப் பார்த்தேன். வெறுங்கையோடும் கனக்கும் மனதோடும் கண்கள் பனிக்க நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று அவர் இருந்த நிலையில் இன்று கரும்புத் தோட்டம் இருக்கிறது. இனிப்பும் இனிமையும் போயிற்று.

அக்கராயன், வன்னேரிப்பக்கத்தின் யானைகள் பற்றி தொடக்கத்தில் குறிப்பிட்டிருந் தேன் அல்லவா! இந்தியன் ஆமிக்காலத்தில் (இந்திய அமைதிப்படை) தலைமறைவாகத் திரிவோருக்குப் பெரும் சவாலாக இருந்தன இந்த யானைகள். ஒரு தடவை முறிப்பில் விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த லூக்காஸ் அம்மானின் குறூப்பை இந்தியன் ஆமி கலைத்தது. அது ஒரு பின் னேரப்பொழுது. அவர்கள் கோணாவிலுக்குள் ளால் இறங்கி அக்கராயன் கழிவாற்றாற் கடந்து, ஸ்கந்தபுரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே இந்தியன் ஆமியின் இன்னொரு ரோந்து அணி நின்றது. இதனால், லூக்காசின் அணி, ஸ்கந்த புரத்தில் நிற்க முடியாமல் மணியங்குளத்திற்குள் இறங்கி எட்டாம் கட்டையில் நிமிர, அங்கே நின்றது யானைக்கூட்டம். கையில் துவக்கிருந் தாலும் அந்த நேரத்தில் யானையைச் சுட முடியுமா? ஒரு புறம் வேடன்... மறுபுறம் நாகம்... தத்தளித்துப்போனார்கள். பிறகு எப்படியே எல்லை கடந்தது புலிகளின் அணி.

யானைகளின் ஊர்வலம் நீண்ட காலத்துக்கு முன் என்றில்லை. 1990க்குப் பிறகும் இதுதான் நிலைமை. முறிப்புத் தொடக்கம் ஜெயபுரம் கிராஞ்சி வரை யானை களின் ஆட்சியே இந்த வழியில்.

1995 இல் யாழ்ப்பாண இடப் பெயர்வுடன் வன்னிக்குப் பெருக்கெடுத்து வந்த சனம் அக்கராயனுக்கும் வரத் தொடங்கியது. பிறகு கிளிநொச்சி – சத்ஜெய இடப்பெயர்வோடு (1996) அக்கராயன், ஸ்கந்தபுரம், வன்னேரிக் குளம் எனச் சனங்கள் பெருகப் பெருக யானை கள் காடுகளுக்குள் அடங்கின. கிளிநொச்சி இடம்பெயர்வு அக்கராயன் வட்டகையை ஒரு சிறு நகராக்கியது. சந்தைகளும் கடைகளும் குடியிருப்புகளும் சுற்றயல்கள் எங்கும் பெருகி, ஸ்கந்தபுரம் ஒரு மையப்பட்டினம் போலாகியது. கிளிநொச்சியின் நிர்வாக மையமே அக்கராயன் ஸ்கந்தபுரம் பகுதியில் 1996 – 2002 வரை இயங்கியது. கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஸ்கந்தபுரம் மேற்கில் ஒரு கீற்றுக்கொட்ட கையில் இருந்தது. அப்போதங்கே அரச அதிபராக இருந்தவர் உடுவை தில்லைநடராஜா. ஒரு அரச செயலகத்தை அனர்த்த முகாமைத்து வப் பிரிவை இயக்குவதைப்போல இயக்க வேண்டிய நிலையில் இருந்தார் உடுவை. அவர் ஒரு எழுத்தாளராக இருந்தபோதும் நாங்கள் யாரும் அவருடன் இலக்கியம் பற்றி ஒரு வார்த்தை பேசியதில்லை. உடுவை இருந்தவரை அவர் உட்பட எல்லோருக்கும் கடுமையான வாழ்க்கை நெருக்கடிகள். காரணம், அப்போது தான் இடம்பெயர்ந்து வந்திருந்தோம். அந்த நிலையில் இருப்பதற்கு இடம் தேடுவது, தொழில் தேடுவது, குளிக்கவும் குடிக்கவும் தண்ணீர் தேடுவது என்று பொழுதுகள் கழிந்தன. சில போது இதற்கெல்லாம் பொழுதுகள் போதாது.

அப்பொழுது வாய்க்கால் முழுவதும் தீர்த்தக்கரை போலிருந்தன. எந்த நேரமும் வாய்காலில் கூட்டம் அலைமோதும். ஒரு வளவில் பத்துப் பதினைந்து குடும்பங்களின் குடியிருப்புகள் என்றால் கிணறுகள் தாங்குமா? இந்த மாதிரி அகதிகள் பெருகும்போது கழிப்ப றைக்கும் தண்ணீருக்குமே பெரும்பிரச்சினை உண்டாகிறது. அக்கராயனில் இரண்டுக்குமாக அவலப்பட்டவர்கள் லட்சத்திற்கும் மேல்.

சனங்கள் நெரியும் அந்தச் செம்மண் தெருக்களில் திரிவதெல்லாம் அகதிகள் என்று சொல்ல முடியாது. இடம்பெயர்ந்திருந்தாலும் எப்படியோ மகிழ்ச்சியாகத் திரிந்தார்கள் பலரும். நெருக்கடிகள் இருந்தபோதும் சிறிய அளவிலேனும் வருமானம் கிடைத்தது. பொருட் களின் விலையும் அதிகமில்லை. விறகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிகள், வேட்டைக்காரர்கள், விவசாயிகள், கூலியாட்கள் எல்லாம் ஓரளவுக்கு உழைக்கக் கூடிய ஒரு நிலையுள்ள சூழல் வாய்த்ததே ஆறுதல். இதற்குள்ளும் இலக்கியக் கூட்டங்கள் நடந்தன. புத்தக வெளியீடுகள் நிகழ்ந்தன. என்னு டைய முதலாவது புத்தகம் (ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்) ஸ்கந்தபுரம் சந்தியில் அமைந் திருந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் கீற்றுக் கொட்டகையில் வெளியிடப்பட்டது. பிறகு அமர தாஸின் கவிதைகள் (இயல்பினை அவாவுதல்). அமரதாஸ் அந்த ஊரைச் சேர்ந்தவரும் கூட. அவர் அங்கிருந்து உருவாகிய ஒரு முக்கிய மான ஒளிப்படப் படைப் பாளியும் ஆவார். அக்கராயனில் இருந்தபோதே சு.மகேந்திரன் தன்னுடைய சிறுகதைகளின் தொகுதியையும் (காலவெளி) மொழிபெயர்ப்புக் கதைகளின் தொகுப்பையும் (தீ நிழல்) வெளியிட்டார். தாமரைச்செல்வியின் "ஒரு மழைக்கால இரவு" சிறுகதைத் தொகுதியும் அக்கராயனிலேயே வெளியிடப்பட்டது. பெ.கணேசன் அந்த ஊரில் படித்து எழுதத் தொடங்கிய ஒரு படைப்பாளி என்பதைச் சொன்னேன் அல்லவா! ஒரு காலம் கணேசன் கிளிநொச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பலருடைய எழுத்தாக்கங்களைத் தொகுத்து "கதிரொளி" என ஒரு மலரை உருவாக்கி யிருக்கிறார்.

ஸ்கந்தபுரத்திலிருந்து உருவாகிய இன்னும் சில முக்கியமான கலைத்துறை ஆளுமைகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஒருவர் தற்பொழுது (2002 – 2013...) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நாடகத் துறை விரிவுரையாளராக இருக்கும் ரதிதரன். ஸ்கந்தபுரத்திலிருந்த நாள்களில் ஒரு நாடக இயக்கத்தையே உருவாக்கி வைத்திருந்தார் ரதிதரன். விளைவாக சில ஆண்டுகள் அக்க ராயன் மகா வித்தியாலயம் பல போட்டிகளில் தொடர்ச்சியாக வெற்றிகளைப் பெற்று வந்தது. பின்தங்கிய பிரதேசமொன்றின் பாடசாலை இப்படித் தொடர்ந்து வெற்றிகளைப்பெறுவது பலருக்கும் அந்த நாட்களில் ஆச்சரியம். ரதிதரன் தலைமையிலான நாடகக் குழுவின் ஆற்றலுக்கு முக்கியமானது அவர்களிடையே இருந்த புதிதைத் தேடும் முனைப்பும் சமநிலைப்பட்ட நடத்தைகளும் ஊக்கமுமே. இதை (1996 – 2000) அக்கராயனில் நான் இருந்த காலத்தில் நேரில் பார்த்திருக்கிறேன்.

அக்கராயனில் நாங்கள் இருந்த காலத்தில், கிளிநொச்சி அழகியல் கலாமன்றம் பல நல்ல நாடகங்களைத் தந்து கொண்டிருந்தது. பெரும்பாலும் ஆசிரியர்கள் பங்கேற்ற நாடகங் கள். அது க.விஜயசேகரனின் மையத்தில் உருவாகிய நாடக இயக்கம். அந்த அழகியற் கலாமன்றத்தில்தான் நாங்கள் தேர்ந்த திரைப் படங்களைத் திரையிட்டோம். சத்யஜித் ரேயின் பதேர்பாஞ்சாலி, சாருலதா, பிறவி, சிதம்பரம், அகிரா குரோஸாவின் சாமுராய் மற்றும் குறும்படங்கள், லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸின் கம்பெரலியா, செம்மீன் போன்ற படங்கள். மட்டுமல்ல, ஸ்கந்தபுரத்தில் இரண்டு வாசகர் வட்டங்கள் கூட அன்று இயங்கியிருக்கின்றன. ஒன்று "காலச்சுவடு" வாசகர் வட்டம். மற்றது, "வெளிச்சம்" வாசகர் வட்டம். வெளிச்சத்தின் முதலாவது வாசகர் வட்டம் உருவாக்கப்பட்டதே அக்கராயனில்தான். பின்னர் "செம்மணி" "ஆனையிறவு" ஆகிய கவிதை நூல்கள் வெளி யிடப்பட்டதும் ஸ்கந்தபுரத்திலேயே. இலக்கம் 01. பாடசாலைக்குப் பின்புறத்திலிருந்த டானியல் விளையாட்டரங்கில் "ஆனையிறவு" நூலினை வெளியிட்டு புலிகளின் தளபதி பால்ராஜ் ஆற்றிய உரையைக் கேட்பதற்கு ஐயாயிரத்துக் கும் அதிகமானவர்கள் கூடியிருந்தார்கள். புலிகளின் இராணுவச் சாதனைகளைப் பற்றி பால்ராஜ் மிடுக்கோடு பேசினார். அதைப்போல "சிங்கள நாகரிகத்துக்கு இழுக்கைத் தரும் வகையில் இறந்தோரின் நினைவிடங்கள் இடித்தழிக்கப்படுகின்றன. அந்த மாதிரியே செம் மணியிலும் மனிதப் புதைகுழிகள் உருவாக்கி யுள்ளன. இவை சிங்கள மக்களைத் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனியச் செய்யும் செயல்கள்" என்றார் மு.தி. இரண்டு உரைகளும் முக்கியமானவையாக இருந்தன.

அப்பொழுது அக்கராயனைச் சூழவும் ஏறக்குறைய 20 பாடசாலைகள் இயங்கின. கூட்டுறவுச் சங்கங்களில் மட்டும் எட்டுத் தலைமைச் சங்கங்கள் இருந்தன. அங்கே இயங்கிய கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் "சங்கமம்" என ஒரு மாதப்பத்திரிகையை வெளியிட்டது. அதில் அநாமிகன், வேல் லவன், திருநகலூர் ஜெகா போன்றோர் தங்களின் ஆரம்பகாலக் கவிதைகளை எழுதினார்கள். அன்ரன் அன்பழகன், கனகலிங்கம், அ.கேதீஸ்வரன், சொலமன் சூ.சிறில் போன்றவர்கள் சங்கமத்தின் ஆசிரியர் குழுவில் செயற்பட்டனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு முன்புற முள்ள திடலில் நான்கு ஆண்டுகளாக வண்டிச் சவாரி நடந்தது. வன்னியெங்குமிருந்து சவாரிக் காளைகளும் வண்டிக்காரர்களும் வந்து சவாரி செய்தார்கள். சவாரியைப் பார்க்கக் கூட்டம் அலைபுரளும். சனத்திரளைக் கண்டால் சவாரி மாடுகளுக்கு மிரட்சி. சவாரிக்காரருக்கு உஷார். பிறகென்ன, காளைகள் தறிகெட்டு ஓடின. வெற்றிக் கூச்சல்கள் அகதிக் கூடாரங்களைக் கிழித்து வானில் எழுந்தன. அது அகதிகளின் நகரம். எல்லா இடங்களிலும் குடிசைகள். காணும் திசைதோறும் குடிசைகள், அகதிகள், அவலம்... என்றிருந்தாலும் இந்த மாதிரியான காரியங்களும் நடந்து கொண்டிருந்தன.

அக்கராயன் வட்டகையில் அந்த நாள்களில் ஆட்சி செய்தது மலேரியா. ஏறக்குறைய ஒரு ஆண்டில் மட்டும் 26,000 பேர்வரையில் மலேரியாவினால் தாக்கப்பட்டிருந்தனர். காடுகளைக் குடைந்து அங்கே குடியிருந்த சனங்களை பீரங்கிகள் மட்டும் தாக்கவில்லை, நுளம்பும் பாம்பும் கூடத் தாக்கின. ஆனால், என்ன செய்ய முடியும்? வேறு எங்கே போக இயலும்? வன்னிமுழுவதும் நுளம்பும் காடும் பாம்பும் தானே! நுளம்புக்கடியினாலும் பாம்புக் கடியினாலும் நிறைந்துகொண்டிருந்தது அக்கராயன் மருத்துவமனை. அங்கேதான் இயங்கியது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையும். ஆனாலும், அவற்றால் நோயாளிகளைத் தாங்கிக்கொள்வதற்கு முடியவில்லை. சாவு வீதத்தைக் குறைக்க முடிந்ததே தவிர, முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. போதாக் குறைக்கு நெருப்புக் காய்ச்சல், மூளைக் காய்ச்சல் வேறு பரவிக்கொண்டிருந்தன. சுத்தமான குடிநீர் குறைந்தால் பெருமளவு வியாதிகள் தானாகவே வந்து சேரும் என்பது மருத்துவ விதி. அன்றைய நாட்களில் அக்கராயன் சுடுகாட்டில் நெருப்பு அணைந்ததில்லை.

2000ஆம் ஆண்டு கிளிநொச்சியை விடுதலைப் புலிகள் மீட்ட பிறகு, மீண்டும் மெல்ல மெல்லச் சனங்கள் கிளிநொச்சிக்கு நகரத் தொடங்கினர். மெல்ல வடியத்தொடங்கியது அக்கராயனும். அதுவரையிலும் கோணாவிலில் இருந்து வன்னேரிக்குளம், ஜெயபுரம் வரையிலும் நிறைந்திருந்த சனக்குடியிருப்புகள் பின்னர் வெறிச்சோடிக் காணாமற் போயின. பெருகி வந்த சனங்கள் அக்கராயன் வட்டகையில் மரங்களின் கீழ் இருந்த சின்னஞ்சிறிய கோயில்களையெல்லாம் பெரிதாக்கி விட்டார்கள். இத்தியடி அம்மன், ஸ்கந்தபுரம் முருகன், ஐயனார்புரம் ஐயனார், அக்கராயன் பிள்ளையார், வன்னேரிக்குளம் முருகன், இரண்டாம் கொலனி கண்ணன்கோயில் எல்லாம் இந்த வகையின. சனங்கள் வடிந்த பிறகு இந்தக் கோயில்களும் வெறித்து விட்டன. இடப்பெயர்வினால் இயல்பான வளர்ச்சியன்றி, ஒரு பலூனைப் போல திடீரென ஊதிப்பெருத்த நகரம் அதே விசையில் வடிந்து களையிழந்தது. பிறகு மறுபடியும் ஊர்வாசிகளும் மாடுகளும் மட்டும் நடமாடும் தெருக்களைக் கொண்டிருந்தன அக்கராயன், வன்னேரி, ஸ்கந்தபுரம், கோணாவில் புரங்கள். "மண்ணால் கட்டப்பட்ட அந்தப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினம்" மெல்ல மெல்ல மழையில் கரைந் தழிந்தது.

ஆனாலும், ஊர்வாசிகள் வேட்டைக்குப் போனார்கள். வயல்களை விளைத்தார்கள் விவசாயிகள். அலைச்சலில்லாமல் களைப் பில்லாமல் தெரியாத முகங்களைத் தேடித் திரியாமல் கடிதங்களைக் கொடுத்தனர் தபால் ஊழியர்கள். பள்ளிகள் இயங்கின. பிள்ளைகள் ஆரவாரமில்லாமல் பாடசாலைக்குப் போய் வந்தார்கள். எங்கும்போல அங்கும் இரவும் பகலும் வந்து போயின. வழமைபோல எல்லாம் நடக்கின்றன என எண்ணிக்கொண்டிருந்தபோது அக்கராயனுக்கே வந்தது இடப்பெயர்வு. முன்னர் இடம்பெயர்ந்து வந்தவர்களை அரவணைத்து, ஆதரித்த அக்கராயன் வட்டகையின் அத்தனை ஊர்களும் இப்பொழுது இடம்பெயர்ந்தன. மூட்டை முடிச்சுகள், வண்டி வாகனங்கள் என தெருவுக்கு வந்தது பெயர்த்தெடுக்கப்பட்ட வாழ்க்கை. அப்படியே அது தெருநீளம் சிந்திச் சிதறி, முள்ளிவாய்க்கால் ஊடாக வவுனியா மெனிக் பாம் வரை சென்றது.

2010 சனங்கள் மீண்டும் அக்கராயன் வட்டகைக்கு வந்தபோது அங்கே காடும் புதரும் யானைகளும்தான் மறுபடி இருந்தன. காணுமிட மெங்கும் கைவிடப்பட்ட வீடுகள், உடைந்தும் சிதைந்தும் போன பொருட்கள், பாழடைந் திருந்த வீதிகள்.... ஒரு தொல்குடியிருப்பைப் போல மாறியிருந்த அந்த வட்டகையில் படைச் சிப்பாய்களும் இல்லையென்றால், அது புராதன காலத்துக்கே திரும்பியிருக்கும். ஆனாலும் "மனிதர்கள் மறுபடியும் தங்கள் ஊர்களைக் கட்டியெழுப்பத் தொடங்கினார்கள்". ஊர்களு க்கு வந்தவர்கள் மீண்டும் காடுகளை வெட்டிக் களனிகளை உண்டாக்கினார்கள். வளவுகளைத் திருத்தி வீடுகளை அமைத்தார்கள். இப்பொழுது ச.மு அங்கில்லை. இருந்திருந்தால் அவர் இன்னொரு யானைக்கதையை எழுதியிருக்கக் கூடும். — அலியன் யானை என்றோ தனியன் யானை என்றோ.

வரலாற்றாசிரியர்களுக்குத்தான் எத்தனை சிரமம், அழிந்தழிந்து உயிர்பெறும் மையங்களைப் பற்றி எழுதித்தீர்ப்பதற்கு?

எல்லாவற்றையும் எண்ணிப்பார்க்கும் போது ஜெயமோகனின் "விஷ்ணுபுரம்" நாவலே நினைவில் வருகிறது. ஒரு போது பெரும் கீர்த்தியுடன் இருந்த "விஷ்ணுபுரம்" பின்னொரு போதில் தகர்ந்து சிதைந்து போகிறது. ஆனாலும் அங்கும் மனித இயக்கம் நிகழ்ந்து கொண்டிருக் கிறது...

விஷ்ணுபுரத்தையும் முதன் முதலில் அக்கராயனில்தான் பெற்றோம். அங்கேதான் அதை வாசித்தேன்.

வரலாற்றின் விசித்திரம் மகத் தானதா? பெருந்துக்கமுடையதா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயநெறி உணர்த்தும் வழிபாட்டு முறைமைகள்

திரு.கோ.நாகேஸ்வரன்
பிரதேச செயலர்
கரைச்சி.

உலகத்தின் தொன்மைச் சமயமான சைவ சமயம் சிவனைத் தெய்வமாகக் கொண்டு விளங்கும் சமயமாகும். சிவபெருமானை முதன்மையாகக் கொண்டாலும் இயற்கைப் பொருள்களில் சிவனைக் கண்டு வழிபடும் சமயம் ஆகும். அதாவது ஆகியவற்றிலும், இயற்கைப் பொருள்களான மரங்கள், செடிகள், பூக்கள் ஆகியவற்றிலும் கடவுள் தன்மையைக் கண்டு வழிபடுகிற சமயம் ஆகும். அவ்வாறு வழிபடுகிற பொழுது வழிபாட்டு முறைமைகளுக்குத் தொன்றுதொட்டு நெறிமுறைகளை வகுத்துக் கொண்ட சமயமும் ஆகும். வேதங்கள் என்றும், ஆகமங்கள் என்றும், சித்தாந்தம் என்றும் நூல்களைப் படைத்துக் கொண்டு அதன்வழி வழிபாட்டு நெறிமுறைகளை விதிகளாகக் கொண்டுள்ள சமயம் ஆகும். ஆனால் அதே நேரத்தில் விதிமுறைகளைக் கடுமையாக ஆக்கிக் கொள்ளாமல் எக்காலத்திலும், எப்பருவத்தர்க்கும் உரியதாக எளிய வழியில் ஆக்கிக் கொண்டுள்ள சமயமும் ஆகும். எனவேதான் சைவசமயம் உலக நாடுகள் பலவற்றிலும் பரவியிருக்கிறது. இத்தகைய சைவ சமய எளிய விதிமுறைகளையும் வழிபாட்டினையும் இப்பாடத்தில் அறிய உள்ளோம்.

**சமய நெறி**

சைவ சமயத்தில் கடவுள் கொள்கைகளையும், சிவவழிபாட்டு முறைமைகளையும் விளக்கிக் கூறுகின்ற முதன்மையான நூல்கள் வேதங்கள், சிவ ஆகமங்கள் (பிரமாணங்கள்) ஆகும். வேதங்கள் ரிக், யசுர், சாமம், அதர்வணம் என நான்காகும். சிவ ஆகமங்கள் 28 ஆகும். வேத, சிவ ஆகமங்கள் சிவபெருமானால் அருளிச் செய்யப்பெற்றவை ஆகும். இதனை, “வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்” என்று திருமூலர் குறிப்பிடுவார். வேதங்கள் நான்கும் இந்து சமயத்தின் கொள்கைகளைக் கூறுகின்றன. ஆனால் சிவ ஆகமங்கள் சைவ சமயத்தின் நெறிமுறைகளை மட்டும் கூறுகின்றன. சிவாகமங்களில் கடவுளின் இயல்புகள், கடவுள் ஆன்மாவிற்குச் செய்யும் அருள்நிலை, கடவுளை வழிபடும் முறைகள், வழிபடும் இடங்களின் அமைப்புகள், திருக்கோயில்களில் நடக்கும் சடங்குகளின் வகைகள், அவைகளை நடத்தும் முறைகள், வழிபடுவோர்க்குரிய இயல்புகள், சைவச் சாதனங்கள் ஆகியவை விரிவாக விளக்கப்படுகின்றன.

28 ஆகமங்களும் இன்றைய நடைமுறையில் மக்களிடையே இல்லை. அவற்றின் கருத்துகளை எளிமைப்படுத்திச் சித்தாந்த நூல்கள், சைவத் திருமுறைகள் தந்து கொண்டிருக்கின்றன. எனவேதான் திருமுறைகளில் ஒன்றான திருமந்திரம் தமிழ் வேதமாகக் கருதப் பெறும். அந்நூல் கூறுகிற முறைமையில் சமய நெறிமுறைகளும், சமயவழிபாட்டு முறைகளும் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. மேலும் 14 சாத்திர நூல்கள் கூறுகின்ற சிவ தத்துவங்கள் மக்களால் அறிந்து கொள்ளப்பெற்றன. தத்துவங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவதோடு மட்டுமல்லாமல் தத்துவங்கள் கூறுகின்ற வழிபாட்டு முறைமைகள் இன்றையத் திருக்கோயில் வழிபாட்டு முறைமைகள் இன்றையத் திருக்கோயில் வழிபாட்டிலும், சமய வழிபாட்டிலும் கையாளப்படுகின்றன. சாத்திரமும் தோத்திரமும்

**நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்**

என்பது சிவஞானசித்தியார் பாடலாகும். இப்பாடலின் பொருள்: சைவம் சார்ந்து சிவனை வழிபடுகிறவர்கள் சிவனுடைய திருவருளைப் பெறவேண்டுமானால நால்வகை நெறிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். தாதமார்க்கம் சன்மார்க்கம் என்பன சிவபிரானை அடையும் நன்மார்க்கங்கள் ஆகும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பெயராலும் வழங்கப் பெறுதல் உண்டு என்பது இப்பகுதியினுடைய பொருளாகும். எனவே மார்க்கம் என்ற சொல் நெறி அல்லது வழி என்ற பொருளைக் கொண்டு சைவசமய நெறிகள் நான்கைக் குறிப்பிடுகின்றது எனலாம்.

இத்தகைய நால்வகை நெறிகளும் மக்கள் பின்பற்றக்கூடிய எளிய நெறிமுறைகளே ஆகும். இந்த நெறிமுறைகளைப் பின்பற்றினால் அடையும் பயன்கள் சாத்திர நூல்களிலும், தோத்திர நூல்களிலும் கூறப்பட்டுள்ளன. அப்பயன்களும் நான்காகக் கூறப்பெற்றுள்ளன. தாதமார்க்கத்தின் வழிநின்றால் இறைவனுடைய உலகத்தைச் (சாலோகம்) சென்றடையலாம். சற்புத்திர மார்க்க நெறி நின்றால் இறைவனுக்கு அருகில் செல்லும் அருளைப் பெறலாம். இது சாமீபம் ஆகும். சகமார்க்கத்தின் நெறி நின்றால் இறைவனின் உருவ அடையாளங்களைப் பெறலாம். இது சாரூபம் எனப்படும். இறுதியான சன்மார்க்க வழி நின்றால் இறைவனின் திருவருளை முழுமையாகப் பெறலாம். இதனைச் சாயுச்சியம் என்பர். வடமொழியில் இந்த சாயுச்சியம் என்பது பருமுத்தி என்றும் மற்ற மூன்றும் அபரமுத்தி என்றும் கூறப்படும். இவற்றின் விரிவைச் சாத்திரங்கசளும், தோத்திரங்களும் தெளிவாக விளக்குகின்றன.

**தாதமார்க்கம் (தொண்டு நெறி தாச மார்க்கம்)**

தாதமார்க்கத்தைப் பேச்சு நடையில் தாசமார்க்கம் என்று சொல்வதுண்டு. தாசான தாசன் என்றால் தொண்டனுக்குத் தொண்டன் என்று பொருள்படும். எனவே தாத அல்லது தாச என்பது கொண்டு என்ற பொருளில் கையாளப் பெறுகிறது. இறைவனை வழிபடுகின்ற பொழுது உள்ளத்தில் இறையுணர்வு ஏற்படச் சில செயல்கள் செய்ய வேண்டும். அதுவே வழிபாடாகும். இந்த வழிபாடுகள் தான் இங்கு நெறிமுறைகளாகக் கூறப்பெறுகின்றன. அந்த அடிப்படையில் சமய வழிபாட்டின் தொடக்கமாகக் கூறப்படுவது தொண்டு நெறியாகும். தொண்டு என்பது திருக்கோயிலுக்கும், திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனுக்கும், இறைவனை வழிபட்டு ஞானம் பெற்ற அடியார்களுக்கும் பணி செய்வதாகும். அதாவது தன்னை அடியவனாகப் பணி செய்யும் ஆளாகக் கருதிக் கொண்டு சிவபிரானையும் அவனருள் பெற்ற அடியாரையும் தலைமக்களாக எண்ணி அவர்களுக்குத் தொண்டு செய்வதாகும். அவ்வாறு தொண்டு செய்யும் பொழுது என்னென்ன செய்யலாம் என்பதைச் சாத்திரங்களும், தோத்திரங்களும் சொல்லுகின்றன. இம்மார்க்கத்தைக் குறிக்கின்ற சரியை என்ற சொல்லும் தொண்டு என்ற பொருளைத்தான் தரும். அதாவது சரீரம் என்ற உடம்பினால் செய்யப்பெறும் தொண்டாகும். இந்தத் தொண்டுகளைத் திருமுறைகள் வரையறுத்துக் காட்டுகின்றன. அப்பரின் கீழ்க்காணும் பாடல் இதனை விளக்கும்.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா**
**நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்**
**புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்நது பாடித்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் மாதீயென்றும்
ஆரூரா வென்றென்றே யலறா நில்லே
(அப்பர் தேவாரம் – 6.31.3)

இப்பாடலைப் போலவே சிவஞானசித்தி யார் என்ற சாத்திர நூலும் 271ஆம் பாடலில் இம் மார்க்கத்தின் செயல்முறைகளைக் குறிப்பிடு கிறது. அதாவது தொண்டு நெறி என்பது திருக் கோயில்களில் குப்பைகளைப் பெருக்கி, திருக் கோயில் முழுவதும் தண்ணீர் கொண்டு மெழுகி, இறைவனுடைய திருவுருவத்தில் அணிவிப்பதற் குப் பூமாலைகளைக் கட்டி, பூக்கள் பூப்பதற்கு நந்தவனங்கள் அமைத்து, கோயில்களில் திரு விளக்கு ஏற்றி, இறைவனை வாயாரப் போற்றிப் புகழ்வது ஆகும். மேலும் சிவனடியார்களைக் கண்டால் தங்களுக்கு ஏதேனும் தொண்டு செய்ய வேண்டுமா என்று கேட்டு அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதும் ஆகும். இந்த நெறியில் நின்றால் இறைவனுடைய உலகத்திற் குச் செல்லுகின்ற திருவருளைப் பெறலாம்.

## சற்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி)

சற்புத்திர நெறியைக் கிரியாபாதம் என்று கூறுவர். கிரியை என்றால் மந்திரங்கள் வழி இறைவனுக்கு வழிபாடு செய்வதாகும். அதாவது இறைவனின் அருவுருவ வடிவமாகிய சிவ லிங்கத்திற்கு அண்மையில் இருந்து மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகைச் செயல்களை முறைப்படி செய்து வழிபடுதல் ஆகும். அதாவது முதல் நெறியில் வெறும் பணிகளைச் செய்தவர் கள் இந்த நெறியில் அபிடேகம் செய்தல், மாலை சாற்றுதல், தூபதீபம் காட்டுதல் ஆகியவற்றைச் செய்யும் பொழுது மந்திரத்தைச் சொல்லிச் செய்ய வேண்டும். முதல் வழியில் அகத்திலும் புறத்திலும் மந்திரம் சொல்வது நிகழாது செயல் மட்டுமே நிகழும் இந்நெறியில் மந்திரங்களைச் சொல்வதும் ஆகமங்கள் சொல்லுகின்ற சடங்குக ளைக் (கிரியை) செய்வதும் சடங்குகளைச் செய்யும் பொழுது தன்னை இறைவனுடைய அன்பராகப் பாவித்துக் கொண்டு செய்வதும் ஆகும். திருக்கோயிலில் இருக்கும் இலிங்க உருவத்திற்கு இத்தகைய வழிபாட்டைச் செய்தால் அது பரார்த்தம் எனப்படும்.

ஒருவர் தன் பொருட்டாக ஞான ஆசிரி யரிடத்தில் இருந்து இலிங்க வடிவத்தைப் பெற்று இத்தகைய வழிபாட்டைச் செய்தால் அதற்கு ஆன்மார்த்தம் என்று பெயர். இத்தகைய சமய நெறியைச் செய்தால் இறைவனுக்கு அருகிலி ருக்கும் அருளைப் பெறலாம். இத்தகைய செய்தி களைச் சாத்திரங்களும் தோத்திரங்களும் சுட்டிக் காட்டுகின்றன.

புத்திமார்க் கம்புகலின், புதியவிரைப் போது
புகைஒளிமஞ் சனம் அமுது முதல்கொண்டு ஐந்து
சுத்திசெய்துஆ சனம், மூர்த்தி, மூர்த்தி மானாம்
சோதியையும் பாலித்துஆ வாகித்து, சுத்த
பத்தியினால் அருச்சித்து, பரவிப் போற்றிப்
பரிவினொடும், எரியில்வரு காரியமும் பண்ணி
நித்தலும், இக்கிரியையினை இயற்று வோர்கள்
நின்மலன்தன் அருகிருப்பர், நினையுங்காலே
(சிவஞான சித்தியார் – சுப. 273)

என்று சிவஞான சித்தியார் குறிப்பிடுகி றது. இதே வழிமுறைகள் சம்பந்தர் தேவாரத்தில் முதல் திருமுறை 21ஆவது பதிகத்தின் 4ஆம் பாடலிலும் கூறப்பெற்றுள்ளன.

## சகமார்க்கம் (தோழமை நெறி)

இந்நெறி யோகமார்க்கம் எனவும் கூறப் பெறும். யோகம் என்பதற்குப் பொருள் ஒன்றுதல் என்பதாகும். அதாவது உயிரானது இறைவ னோடு ஒன்றுதல் ஆகும். அவ்வாறு ஒன்றும் பொழுது மனத்தால் ஒன்றி நிற்பது ஆகும். மனம், புத்தி, கண், கை, கால் ஆகியவற்றைப் புறத்தே ஒன்றச் செய்து அடக்கி அகத்திலே கொண்டு வந்து இறைவனோடு ஒன்றச் செய்தலாகும். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு வகையாகக் கூறப்படுவதும் உண்டு. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாகும்.

| | | |
|---|---|---|
| இயமம் | – | நூல்களில் கூறிய தீய ஒழுக்கங்களை அறவே விலக்குதல் |
| நியமம் | – | நூல்கள் கூறுவனவற்றைக் கடைப்பிடித்தல் |
| ஆசனம் | – | உடற்பயிற்சிகளின் மூலம் ஆசனங்களைக் கைக் கொள்ளுதல் |
| பிராணாயாமம் | – | இயற்கையாக இயங்கும் மூச்சுக் காற்றினை வசப் படுத்துதல் |
| பிரத்தியாகாரம் | – | தான் நினைத்த பொருளின் வடிவாக மாற்றிக் கொள்ளு தல் |
| தாரணை | – | மனத்தை அடக்கி ஒரு வழியில் நிறுத்துல் |
| தியானம் | – | இறைவனைத் தன்னுடைய தியான வடிவினால் ஒளி வடிவினனாக எண்ணுதல் |
| சமாதி | – | அந்த எண்ணத்தில் தன்னை மறந்து இறைவனோடு ஒன்றுதல். |

இத்தகைய வகைகளால் இறைவனை நோக்கித் தவம் செய்வதே யோகம் எனப்படும். இத்தகைய தவத்தால் இறைவனோடு ஒன்றி விடுகின்ற காரணத்தால் இறைவனுக்குத் தோழமையாகின்ற அருள் கிடைக்கின்றது. எனவேதான் இந்நெறி தோழமை நெறி ஆயிற்று. இந்நெறியை உயிராவணம் என்று தொடங்கும் நாவுக்கரசர் தேவாரப் பாடலும், தேடுவேன் தேடுவேன் என்று தொடங்கும் சுந்தரர் தேவாரப் பாடலும், சிவஞான சித்தியாரின் 273ஆம் பாடலும் குறிப்பிடுகின்றன. இந்த நெறி நின்றால் சிவவடிவாகிய சிவஞானியாகலாம்.

**சன்மார்க்கம் (நன்னெறி)**

நான்காவது நெறி சன்மார்க்கம் என்ற நன்னெறியாகும். இதை ஞானபாதம் என்று குறிப்பிடுவர். ஞானம் என்பதற்கு அறிவு என்பது பொருள். இந்த அறிவு மெய்ப்பொருளை அறிவ தைக் குறிக்கும். முன்னைய மூன்று நெறிகளும் ஞானத்தை அடையும் வழி என்றாலும் இந்த நெறியே மெய்ப்பொருளாக விளங்கும் இறை வனை முழுமையாக அறியும் வழியாகும். எனவே இதனைச் சிவஞானம் என்பர். சமய நூல் கள் பலவற்றையும் அறிந்து தெளிந்து பதி, பசு, பாசம் என்ற மூன்றினுடைய இலக்கணங்களை அறிதல் வேண்டும். இலக்கணங்களை அறிவ தோடு தத்துவங்களைப் பற்றிய ஆய்வுகளைச் செய்து உண்மைப் பொருளை அறிய வேண்டும். பல சமய நெறிகளில் செல்லாது சைவசமயத் தின் வழியில் சென்று மூலமுதற் பொருளை அறிய வேண்டும். இத்தகைய ஞானம் கைவரப் பெற்றால் அதுவே நன்னெறியாகும். இந்த நெறியைத்தான் சைவ சித்தாந்த சாத்திரங்கள் வலியுறுத்தி எழில்ஞான பூசை என்று குறிப்பிடு கின்றன. குறிப்பிட்டுச் சொன்னால் இந்த நெறி ஞானநூல்களின் வழி இறைவனாகிய மெய்ப் பொருளை அறிவதாகும். இந்நெறியினுடைய பயன்சாயுச்சியமாகிய இறைவனுடைய திருவரு ளைப் பெறுவதாகும். இந்நெறியின் சிறப்பைச் சிவஞான சித்தியார் கீழ்க்கண்டவாறு குறிப் பிடுகிறது.

**ஞானநூல் தனை ஓதல், ஓது வித்தல்**
**நல்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல், நன்றா**
**ஈனம்இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவன் அடி அடைவிக்கும் எழில்ஞான பூசை**
**(சித்.சுப– 275)**

இவ்வாறு சைவ சமய நெறிகளாக நால்வகை நெறிகளைச் சிவாகமங்கள் குறிப்பிடு கின்றன. சிவாகமங்கள் வழி சாத்திர நூல்களும், தோத்திர நூல்களாம் திருமுறைகளும் குறிப்பிடு கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நடைமுறை வழிபாடு

சைவ சமயத்தில் வழிபாடு என்பது இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலம் முதல் இவ்வழிபாடும் உடன் தோன்றிற்று. கடவுள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளச் சாதனமாக வழிபாடு கையாளப் பெற்றது. வேத ஆகமங்கள் இவ்வழிபாடுகள் நடத்தும் முறைமைகளை வகுத்துக் காட்டியுள்ளன. காலத்திற்குக் காலம் வழிபாட்டு மாறவில்லை. தொன்று தொட்டு நடந்து வருகிறது. கடவுள் நம்பிக்கை தோன்றிய காலத்தில் அச்சம் அடிப்படையாக இருந்ததால், வழிபாடும் அச்சத்தின் அடிப்படையிலேயே அமைந்தது. அச்சத்திற்குரிய பொருள்களைக் கடவுள்களாகக் கொண்டு வழிபட்டதால் அவ்வழிபாடு முதன் முதலில் இயற்கை வழிபாடாக அமைந்தது.

சூரியன், சந்திரன், வருணன், சிங்கம், புலி, மரங்கள் இவற்றை வழிபட்டனர் மக்கள். எனவேதான் இன்றைய சைவக் கோயில்களில் சூரிய, சந்திரர்களின் உருவங்களும், சிங்கம், புலி, நந்தி ஆகிய விலங்குகளின் உருவங்களும், தலவிருட்சம் என்ற அடிப்படையில் மரங்களும் அமைந்தன. இவைகள் தொடக்கக் கால இயற்கை வழிபாட்டிற்குரிய தெய்வங்களை வணங்கும்போது உணவுப் பொருள்களைப் படைத்தல், பலியிடுதல், ஆரவாரம் செய்து கூத்தாடுதல் ஆகியவை நடந்துள்ளன.

இந்த இயற்கை வழிபாடு சிறுகச் சிறுக வளர்ந்து முழுமுதற் கடவுளை உருவ வழிபாட்டில் வழிபடத் தொடங்கிய பிறகு வழிபாட்டு முறைமைகளும். விழாக்களும், சிறப்புப் பூசனைகளும் தோன்றின. வழிபாட்டில் பூசனை என்ற சடங்கு அன்றாடப் பூசனை என்றும் சிறப்புப் பூசனை என்றும் வகுத்துச் செய்யப்பட்டது. இதனைத் திருக்குறள், மழை இல்லை என்றால் வழிபாட்டில் சிறப்புப் பூசனை நடக்காது என்று குறிப்பிடுகிறது.

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு**
**(திருக்குறள். வான் சிறப்பு -8)**

இத்தகைய பூசனைகள் வளர்ந்து பூசனை செய்வதற்குரிய முறைமைகள், அதற்குரிய கருவிகள், நேரங்கள் என்றெல்லாம் சைவ சமய வழிபாட்டில் வகுத்துக் காட்டப் பெற்றன.

### அன்றாட வழிபாடு

வழிபாடு என்பது பின்பற்றுதல் அல்லது வணங்குதல் என்ற பொருளைத் தரும். சைவ சமயம் உருவ வழிபாட்டைக் கொண்ட சமயம் ஆகும். காண முடியாத கடவுளுக்குப் பலவிதமான உருவங்களை உண்டாக்கி அவற்றை நாள் தோறும் வழிபட்டு வருதல் சைவ சமயத்தின் வழக்கமாயிற்று. இந்த உருவங்களை எல்லாம் ஓரிடத்தில் அமைத்து வழிபட்டதால் திருக் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெற்றது. திருக்கோயில் அமைத்தல் என்பது உயர்ந்த பணியாகவும் கருதப்பட்டது. வீடுகளில் மனிதர்கள் எப்படி வாழுகின்றார்களோ அதுபோலவே திருக்கோயில்களிலும் வாழ்வியல் முறையில் வழிபாடுகள் அமைக்கப் பெற்றன.

நாள்தோறும் திருக்கோயில்களில் குப்பைகளைக் கூட்டிச் சுத்தம் செய்தல், திருக் கோயில்களை மெழுகுதல் ஆகிய பணிகள் வழிபாட்டு முறைகளாக மாறின. கோயில்களில் விளக்கேற்றுதல், நறுமணம் வீச நறும்புகைகளை உண்டாக்குதல் என்பன நாள்தோறும் செய்யும் பணிகள் ஆயின. எப்படி வீடுகளில் வாழுகிற மக்கள் நீராடி அழகுபடுத்திக் கொண்டு உணவுகளை உண்டு வாழுகின்றார்களோ, அதுபோல நாள்தோறும் திருக்கோயிலில் உள்ள கடவுளர்களுக்கு நீராட்டுதலை அபிடேகமாகவும் அழகு செய்தலை அலங்காரமாகவும், உணவு படைத்தலை நைவேத்தியமாகவும், இவற்றைச் செய்வதை அன்றாட வழிபாடாகவும் கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை நாள்தோறும் நடக்கிற பொழுது ஒரு நாளினை முதல் காலம். இரண்டாம் காலம், மூன்றாம் காலம். நான்காம் காலம், ஐந்தாம் காலம் எனப் பிரித்துக் கொண்டு பூசனைகள் செய்யப் பெற்றன. இந்தக் காலங்களுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டன. விசுவரூப வழிபாடு, காலசந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, அர்த்தசாமம் என்று காலங்களுக்குப் பெயரிட்டு ஒவ்வொரு நாளும் வழிபாடு செய்யப்பெற்றது. விசுவரூப வழிபாடு என்பது அதிகாலையில் நடத்தப்பெறும் சடங்காகும். காலசந்தி காலை சுமார் 9 மணிக்கு நடத்தப்படுவதாகும். உச்சிக் காலம் என்பது மாலையிலும், அர்த்தசாமம் முன் இரவிலும் நடத்தப்பெறுவதாகும். இத்தகைய வழிபாட்டு நேரங்கள் நாள்தோறும் நடத்தப்படு கின்ற வழிபாடுகளுக்குரியனவாகக் கொள்ளப் பட்டன.

பிற சமங்களில் வார நாட்களில் குறிப்பிட்ட நாட்களில்தான் வழிபாடுகள் நடை பெறுகின்றன. ஆனால் சைவ சமயத்திலோ வார நாட்கள் முழுமையும் வழிபாடுகள் நடத்தப் பெறுகின்றன. இவ்வழிபாடுகளில் வழிபாடு செய்கின்றவர்கள் குருக்கள் என்றழைக்கப் படுகின்றனர். அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளும், மேற்கொள்ளும் பொழுது கடைப் பிடிக்க வேண்டிய செயல்முறைகளும் வகுக்கப் பெற்று நடைமுறைப்படுத்தப்பெற்றன. அதாவது உடல் தூய்மையோடு வழிபாடு செய்ய வேண்டும். திருநீறு உருத்திராக்கம், பூணூல் அணிந்திருக்க வேண்டும். சட்டை அணிந்து கொள்ளக் கூடாது என்ற மரபுகள் பின்பற்றப் பட்டு வருகின்றன. இத்தகையோர் வழிபாடாம் பூசனைகளைச் செய்வதால் பூசாரிகள் என்று அழைக்கப்பட்டனர். சைவ சமயத்தில் இவ்வழி பாட்டைச் சிவன் கோயில்களில் செய்பவர்கள் அந்தணர்கள் ஆவார்கள். அதிலும் அவர்கள் சிவாச்சாரியார் மரபினர் ஆவார்கள். சிறு கோயில்களில் வழிபாடு செய்கிறவர்கள் பூசாரி கள் என்றே அழைக்கப்பட்டனர்.

நாள் வழிபாட்டில் தெய்வ உருவங்களு க்கு நீர், பால் கொண்டு அபிஷேகம் செய்தல், மலர்களால் அலங்கரித்தல், விளக்குகளால் அழகு செய்தல், உணவுப் பொருள்களைப் படைத்தல், தீபங்களை ஏற்றி வழிபாடு செய்தல் ஆகியவை இன்றியமையாத வழிபாடுகளாகக் கருதப்பட்டன. இது திருமுறையில்.

**சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் – (அப்பர்தேவாரம்)**

என்றும்,

**யாவர்க்குமாம் இறைவதற்கு ஒரு பச்சிலை**

**(திருமந்திரம்)**

என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. இத்த கைய சடங்குமுறை வழிபாடுகள் நாள்தோறும் நடப்பதால் அவற்றைப் புறவழிபாடு என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. (திருக்கோயில் வழிபாடு இல்லாது, வழிபாட்டு முறைகளை மனத்தகத்தே கொண்டு வந்து மனத்தாலே கடவுளை வழிபாடு செய்வது அக வழிபாடா கும்).

கோயில் வழிபாட்டில், வழிபட வருகின்ற வர்களுக்குத் திருநீறும், பிரசாத வகைகளும் இறைவன் அருளாக வழங்கப்பெற்றன. வழிபாடு நடக்கின்ற பொழுது மங்கல இசைக் கருவிகள் முழக்கப் பெற்றன. இசைக்கருவிகளை முழக்கு கின்றவர்களும் திருக்கோயில் பணியாளர்களா கவே கருதப்பட்டன. வழிபாடு செய்கின்றவர் களுக்கு எவ்வாறு நெறிமுறைகள் அமைக்கப் பெற்றனவோ அதுபோல வழிபட வருகின்ற மக்களுக்கும் விதிமுறைகள் வகுக்கப் பெற்றன. உடல் தூய்மையோடு திருக்கோயிலுக்கு வர வேண்டும். திருநீறு அணிந்து கொண்டு வர வேண்டும். இறைவனுக்குரிய பெயர்களையோ அல்லது அடியார்களின் பாடல்களையோ கூறிக் கொண்டு வர வேண்டும். பூசனைக்குரிய பொருள்களைக் கொண்டுவர வேண்டும். கோயில் பணிகளைச் செய்ய வேண்டும். கரங் கூப்பி வணங்க வேண்டும். தரையில் விழுந்து வணங்க வேண்டும் என்பன அவை. அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கும் போது ஆண்கள் தலை, செவிகள், கைகள், தோள்கள், முகம் ஆகிய எட்டு அங்கங்கள் (அவயவங்கள்) பூமியில் பாடும்படி வணங்க வேண்டும். அது அட்டாங்க நமஸ்காரம் எனப்படும் பெண்கள் தலை, கரங்கள், முழங் கால் அகிய அங்கங்கள் பூமியில் படும்படி வணங்க வேண்டும். அது பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். இவ்வாறெல்லாம் வழிபாடுகள் நாள் தோறும் திரக்கோயில்களில் நடைபெற்று வருகின்றன.

சிறப்பு வழிபாடு

நாள்தோறும் வழிபடுகின்ற வழிபாட் டோடு சிறப்பு வழிபாடுகள் சில குறிப்பிட்ட நாள் களில் சைவ சமயத்தில் மேற்கொள்ளப்படு கின்றன. இந்தச் சிறப்பு வழிபாடுகளில் அடிப் படை வழிபாடுகள் மாறுவதில்லை. நாள்தோறும் நடைபெறும் வழிபாட்டோடு சிறப்பு வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுவன ஐம்பொன்னால் ஆகிய திருவுருவங்களை உலாவாக எடுத்து வருதல், வேள்விகள் நடத்துதல், சிறப்பான அலங்காரம் செய்தல் ஆகியவையாகும். சைவ சமயத்திற்குரிய சிறப்பான நாட்களில் திருக் கோயில் இருக்கும் இடங்களைப் பொறுத்தும் திருக்கோயில் அமைந்துள்ள சூழலைப் பொறுத் தும் சிறப்பு விழாக்கள் முக்கியத்துவம் பெறு கின்றன.

பொதுவான சிறப்பு விழாக்கள் எல்லாத் திருக்கோயில்களிலும் நடைபெறும். எடுத்துக் காட்டாக விநாயகர் சதுர்த்தி விழாவைக் குறிப்பிடலாம். விநாயகர் சிலை எந்தெந்தத் திருக்கோயில்களில் இருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த விழா நடைபெறும்.

நவராத்திரி விழாவும் புரட்டாதி மாதத் தில் அம்பிகை இருக்கும் அனைத்துத் திருக் கோயில்களிலும் நடைபெறும். சில சிறப்பான விழாக்கள் திருவுருவங்களின் சிறப்பை அடிப் படையாகக் கொண்டு நடைபெறும். இவ்விழாக் களில் மாசிமக விழா, கார்த்திகைத் தீப விழா, பூச விழா ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இந்த விழாக்கள் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். கடலோரப் பகுதிகளில் இருக்கின்ற திருக் கோயில்களில் மாசிமகத்தில் நடைபெறுகிற விழா மாசிமக விழாவாகும். கார்த்திகைப் பௌர்ணமி நாளில் மலையைச் சார்ந்த திருக் கோயில்களில் நடைபெறும் விழா கார்த்திகைத் தீப விழாவாகும். தை மாதத்தில் பௌர்ணமி நாளில் முருகன் கோயில்களில் நடைபெறும் விழா பூச விழாவாகும். இத்தகைய விழாக்க ளோடு விரதம் இருந்து நடத்தப் பெறும் விழாக்க ளும் உண்டு.

முருகனுக்கு விரதம் இருந்து ஐப்பசி மாதத்தில் நடைபெறும் விழா கந்தசஷ்டி விழாவாகும். கிருத்திகை நாளில் விரதம் இருந்து கொண்டாடப்படும் விழா கிருத்திகை விழாவாகும். திருவாதிரை நாளில் விரதம் இருந்து நடத்தப்படும் விழாவிற்குத் திருவாதிரை விழா என்பது பெயராகும். இத்தகைய விழாக் கள் தவிர மாதத்தில் வருகின்ற பிரதோஷ நாள். அமாவாசை நாள், பௌர்ணமி, சதுர்த்தி, வார வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் திருக் கோயில்களில் சிறப்புப் பூசனை நடைபெறுவ தும் உண்டு. இவை அனைத்தும் சிறப்பு வழிபாடுகள் ஆகும்.

**இலிங்க வழிபாடு**

சைவ சமயத்தில் குரு, இலிங்க, சங்கம வழிபாடு என்பது சிறப்பிடம் பெறுவதாகும். இத்தகைய மூன்று வழிபாட்டில் இலிங்க வழிபாடு என்பது அருவுருவத்திலும் காண்பது சைவ சமய மரபாகும். விநாயகர், முரகன், சக்தி உள்ளிட்ட தெய்வங்களுக்கு உருவங்களை அமைத்து வழிபடுதல் உருவ வழிபாடு எனப் படும். அருவ வழிபாடு என்பது ஏகாந்த நிலை யில் இறைவனை வழிபடுதல் ஆகும். அதாவது எந்தவிதமான உருவமும் இல்லாத வெட்ட வெளியை வழிபடுதல். இந்த அமைப்பு எல்லாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில்களிலும் இருப்பதில்லை. சில குறிப்பிட்ட திருக்கோயில்களில்தான் உண்டு. எடுத்துக் காட்டிற்குச் சிதம்பர இரகசியத்தைக் கூறலாம்.

இறைவன் உருவத்தோடும், உருவமில்லாமலும் இருப்பவன். இது அருவுருவ வழிபாடாகும். இதனை வெளிப்படுத்துவது சிவலிங்க உருவம் ஆகும். அதாவது இலிங்க வடிவம் எந்த உருவத்தையும் குறிப்பதில்லை. ஆனால் அதே நேரத்தில் உருவமில்லாமலும் இருப்பதில்லை. எனவேதான் அருவுருவ வழிபாட்டிற்குச் சிவலிங்கம் முக்கியத்துவம் பெறுகிறது. இவ் உருவ வழிபாட்டில் திருக்கோயில் மையப் பொருளாக அமைகிறது.

**திருக்கோயில் அமைப்பு**

தெய்வ உருவங்கள் எழுந்தருளப் பெற்ற இடம் திருக்கோயில் ஆகும். சைவத் திருக்கோயில்கள் மனித உடலைப் போலவே அமைக்கப் பெற்றுள்ளன.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

என்று இதனைத் திருமந்திரம் குறிப்பிடும். உடம்பிலுள்ள பாதம் போன்றது திருக்கோயில் கோபுரமாகும். முழங்கால் ஆஸ்தான மண்டபம் ஆகும். தொப்புள் பலிபீடம் ஆகும். மார்பு மகாமண்டபம் ஆகும். கழுத்து அர்த்த மண்டபம் ஆகும். தலை கர்ப்பக்கிரகம் ஆகும். தலையின் உச்சி கருவறை விமானம் ஆகும். இவ்வாறு உடம்பின் அமைப்பைத் திருக்கோயிலுக்கு ஒப்பிட்டுக் கூறலாம். சைவத் திருக்கோயில்களில் இராசகோபுரம், கருவறை விமானங்கள், மதில் சுவர் ஆகியவை புறத்தோற்றத்தில் வெளிப்படும் திருக்கோயிலுக்குள்ளே கொடிமரம், பலிபீடம், அர்த்த மண்டபம், பிரகாரம், மகா மண்டபம், கருவறை ஆகிய பகுதிகள் அமைக்கப் பெற்றிருக்கும். கருவறையின் மேல் உள்ள கோபுரம் விமானம் எனப்படும். மதில்சுவரை ஒட்டியுள்ளவை கோபுரங்கள் எனப்படும். கோபுரங்களில் முதன்மையாகப் பெரிய நிலையில் அமைந்திருப்பது இராசகோபுரம் ஆகும்.

திருக்கோயில்களில் கருவறை என்பது எல்லாத் திருவுருவங்களுக்கும் அமைதல் இல்லை. சிவன், விநாயகர், முருகன், சக்தி, சண்டிகேசுவரர் ஆகிய உருவங்களுக்கு மட்டுமே கருவறைகள் அமையும். மற்ற தட்சணாமூர்த்தி, பிரம்மா, கொற்றவை ஆகிய உருவங்கள் சுவர்களில் உள்ள கோட்டங்களில் (சன்னல் போன்ற அமைப்பு) அமைக்கப்பெறும். அம்பலத்தில் நடராசர் உருவம் அமைக்கப் பெறும். நவக்கிரகங்கள், நந்தி, மயில், சிங்கம், சிவன் அடியார்கள் உள்ளிட்ட உருவங்கள் பீடங்களில் அமைக்கப் பெறும். திருக்கோயில்கள் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் (குடமுழுக்கு) என்ற வழிபாட்டு முறையில் புதுப்பிக்கப் பெறும். இவ்வுருவங்களை வழிபடுவதோடு திருக்கோயில் கோபுரங்களை வழிபாட்டாலே திருவருள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உண்டு. "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்ற பழமொழி இதனால் எழுந்தது.

**தெய்வ உருவங்கள்**

நாள் வழிபாடும் சிறப்பு வழிபாடும் செய்யப் பெறுகின்ற உருவங்கள் சைவக் கோயில்களில் பலவாறாகக் காணப்படுகின்றன. கடவுள் ஒருவரே அவரே சிவன் என்ற கொள்கையைக் கொண்டது சைவ சமயம். அக்கடவுளின் அருளைப் பெறுவதற்காகப் பல தெய்வ வடிவங்களை அமைத்து வழிபடும் சமயம் சைவ சமயம் ஆகும். எல்லாத் தெய்வ வடிவங்களிலும் சிவனே எழுந்தருளுகின்றான் என்பது சைவ சமயக் கொள்கையாகும். இதனை

**யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி**
**மாதொரு பாகனார் வந்து எய்துவார்**

என்று சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார் கூறும். சைவத் திருக்கோயில்களில் உள்ள தெய்வ உருவங்கள் அனைத்திலும் சிவபெருமானே மூலாதாரமாய் எழுந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றான் என்பது நம்பிக்கையாகும்.

திருக்கோயிலின் உள்ளே நுழைந்தவுடன் கொடிமரம் அமைப்புக் காணப்பெறும். கொடி மரம் என்பது இறைவனின் முத்தொழிலைக் குறிக்கக் கூடிய அடையாளம் என்பர். இறைவன் முத்தொழிலையும் கொண்டு உலகத்தை நடத்துகின்றான் என்பதை அறிவிக்கவே கொடி மரதம் நாட்டப்பெறுகிறது. அதற்குப் பின்னர் பலிபீடம் அமைக்கப் பெறும். இது தத்துவப் பொருளான பாசத்தைக் குறிப்பதாகும். இப் பலிபீடம் நந்தி தேவருக்குப் பின்னால் அமைக் கப்பெறும். சிவபெருமானின் கருவறைக்கு முன்னே நந்திதேவரின் உருவமான காளை வாகனம் அடையாளச் சின்னமாக அமைந்திருக் கும். நந்திதேவர்தான் சைவ சமயத்தின் முதல் ஆசிரியர் ஆவார். இவரை வணங்கிய பின்னர் தான் சிவவழிபாட்டைத் தொடங்க வேண்டும்.

அடுத்துப் பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி வடிவம் காணப்பெறும். இது கல்லாலமரத்தின் கீழ் சனகர், சனந்தனர், சனாதரர், சனற்குமாரர் என்ற நால்வர்க்கும் உபதேசம் செய்கின்ற வடிவம் ஆகும்.

அதன்பின் கருவறைக் கோட்டத்தில் (சன்னல் போன்ற அமைப்பு) அண்ணமலையார் வடிவம் இருக்கும். இது பிரமனும் திருமாலும் அடிமுடி தேடிய வரலாற்றைக் குறிப்பதாகும். சிவலிங்க வடிவத்தின் இலிங்கம் மட்டுமே இதில் காணப்பெறும்.

அடுத்துக் கருவறையில் வள்ளி தெய்வானையோடு கூடிய முருகன் உருவம் அமைந்திருக்கும். முருகனுக்கு ஆறு திருமுகங்க ளும், பன்னிரு கைகளும் உடைய உருவம் அமைக்கப் பெற்றிருக்கும். அடுத்தது அடியார்க ளில் முன்னவராகிய சண்டிகேசுவரர் திருக்கரு வறை அமைந்திருக்கும். இவர் சிவனடியார் களில் ஒருவர். அமர்ந்த கோலத்தில் மனித வடிவில் உள்ளவர். முருகனுக்கும் சண்டிகேசு வரர்க்கும் இடையில் உள்ள கோட்டங்களில் நான்கு தலைகளோடு கூடிய பிரம்மா, காளி வடிவத்தோடு கூடிய கொற்றவை உருவங்கள் அமைந்திருக்கும். அதன்பிறகு ஆடவல்லான் எனப்படும் நடராசரின் அம்பலம் காணப்படும். இறைவனுடைய ஐந்தொழிலைக் காட்டுகின்ற நடராசரின் வடிவம் சைவ சித்தாந்த வடிவ மாகவே அமைக்கப் பெற்றிருக்கும்.

இதனை அடுத்துப் பைரவர் உருவம் அமைந்திருக்கும். நாய் என்ற விலங்கின் வடிவத்தோடு நின்ற வடிவில் காட்சி தரும் இவ்வுருவம் எல்லாத் தத்துவங்களையும் வெளிப்படுத்தி ஆன்மாக்களை ஈடேற்றும் வடிவம் ஆகும். உலகப் பற்றையும், உடல் பற்றை யும் விட வேண்டும் என்ற தத்துவத்திற்கேற்ப ஆடையில்லாது இவ்வுருவம் காணப்படும். அதன்பின் ஒன்பது கோள்களாகிய நவக்கிரகங் களின் வடிவங்களும், சூரிய, சந்திர வடிவங் களும் காணப்பெறும். இத்தகைய தெய்வ உருவங்கள் மூலம் வழிபடுகின்ற வழிபாடு இலிங்க வழிபாடு எனப்படும்.

இத்தகைய உருவங்களுக்கு நடுவில் கோயிலின் மையமாக அமைந்திருப்பது சிவ லிங்க உருவமாகும். சிவலிங்கம் சிவபெரு மானின் அருவுருவத் திருமேனி ஆகும். சிவலிங்க வடிவம் பீடம், ஆவுடை, இலிங்கம் என்ற மூன்று பாகங்களைக் கொண்டதாகும். பீடம் பிரம்ம வடிவமாகும். அதற்கு மேலே உள்ள ஆவுடை விஷ்ணு பாகம் ஆகும். ஆவுடைக்கு மேல் உள்ள நீண்டுள்ள இலிங்க வடிவம் உருத்திரனைக் குறிப்பதாகும். எனவே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளின் உள்ளடக்கமே இலிங்கம் என்று கூறப்பெறும். இந்த இலிங்கம்பற்றிய செய்தி மிக விரிந்த செய்தியாகும். இலிங்கபுராணம் என்ற ஒரு புராணமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் சக்தியாகிய உமையவளுக்குத் தனியாகக் கருவறை அமைந்திருக்கும். உமையாள் வடிவம் அருட்சக்தி வடிவம் ஆகும். கோயில்கள் அமைந்துள்ள இடங்களுக்கு ஏற்ப உமையவளின் பெயர்களும் மாறி மாறி வழங்கப் பெறும். சிவபெருமானுக்கு எதிரே நந்தி வடிவம் இருக்கும். சில திருக்கோயில் களில் சக்தியின் வாகனமாகிய சிங்க வடிவம் இருக்கும்.

இவ்வாறு திருக்கோயில் அமைப்பில் பல்வேறு உருவங்களில் சிவபெருமானைக் கண்டு வழிபடுகின்ற வழிபாடே குரு, இலிங்க, சங்கம என்ற வழிபாட்டில் இலிங்க வழிபாடாகும்.

### குரு, சங்கம வழிபாடு

சைவ சமயத்தின் மற்ற இரு வழிபாடா கிய குரு, சங்கம வழிபாடு தத்துவத்தின் அடிப்படையில் அமைந்த வழிபாடாகும். சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று இறைவனுடைய திருவருளைக் குருவின் மூலமாகத்தான் பெறமுடியும் என்பதாகும். குரு என்பவர் உயிர்களின் பாசங்களை நீக்குபவர் ஆவார். இறைவனைப் பற்றிய தத்துவங்களைக் கூறி இறைவனுடைய அருளைப் பெறுவதற்கு வழிகாட்டுநர் குரு ஆவார். இக்குருவின் மூலமாக உபதேசமாகிய திருவருளைப் பெற்று அதன்மூலம் இறைவனின் அருளைப் பெறலாம். குருவிடம் ஞான நூல்களைக் கேட்கும் பொழுது பக்தியுடன் இருந்து கேட்க வேண்டும். குருவின் உபதேசப்படி ஒழுக வேண்டும். குருவிற்குச் செய்யும் தொண்டே சிறந்த தொண்டாகும். குருவை வழிபட்டு அருள் பெற்றவர்கள் மாணிக்கவாசகர், திருமூலர், மங்கையர்க்கரசி யார், அப்பூதியார் ஆகிய அடியார்கள் ஆவர்.

சங்க வழிபாடு என்பது சிவனடியார் களின் திருக்கூட்டத்தை வணங்குகின்ற வழிபாடாகும். சிவனடியார்கள் என்பவர்கள் சிவபிரானிடம் மெய்யன்பு கொண்டவர்கள். சிவச்சின்னங்களாகிய திருநீறு, உருத்திராக்கம் அணிந்தவர்கள் இத்தகைய திருச்சின்னங் களோடு சிவனுக்குத் தொண்டாற்றி அவனுடைய அருளைப் பெற்றவர்கள் ஆவார்கள். அடியார்க ளைச் சிவபெருமானாகாவே பாவித்து அவர் களுக்குத் தொண்டுகள் செய்து வழிபடுவது சங்கம வழிபாட்டின் சிறப்பாகும். சிவனடியார் களை வழிபடுகின்ற சங்கம வழிபாட்டின் சிறப்பாகும். சிவனடியார்களை வழிபடுகின்ற சங்கம வழிபாடு சைவ சமயத்தில் சிறப்பிடம் பெற்றதாகும். பெரிய புராணத்தில் கூறப்படும் அடியார்களில் பலர் இத்தகைய சங்கம வழிபாட் டால் இறைவனுடைய அருளைப் பெற்றவர்கள் ஆவார்கள். இச்சங்கம வழிபாட்டில் கருவிக ளாகப் பயன்படுபவை உருத்திராக்கமும், திரு நீறும் ஆகும்.

### சிவச் சின்னங்கள்

சிவ வழிபாட்டில் சிறப்பிடம் பெறுவன சிவச்சின்னங்களாகும். இவற்றைச் சாதனங்கள் என்றும் குறிப்பிடுவர். சிவச்சின்னங்களில் முதன்மை பெறுவது உருத்திராக்கம் ஆகும். உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தை எரித்த பொழுது சிவபிரானது மூன்று கண்களிலிருந்து சிந்திய மணியை உருத்திராக்கம் என்று கூறுவதுமுண்டு. எனவே இறைவனுடைய கருணையை நினை வூட்டும் சாதனமாக உருத்திராக்கத்தைக் கொள் வதுமுண்டு. சைவர்கள் இத்திருச் சின்னத்தை அணிந்தால்தான் சைவராகக் கருதப்படுவர். உருத்திராக்கம் ஒன்று முதல் பதினாறு திரு முகங்கள் கொண்டதாகக் கிடைக்கிறது. ஒவ்வொரு முகத்திற்கும் பயன் கூறப்படுகிறது. இதை அணிவதற்குச் சில விதி முறைகளும் உண்டு. இன்னின்னவர் இவ்வாறு அணிய வேண்டும் என்ற விதிகளையும் ஆகம நூல்கள் கூறுகின்றன.

சிவச்சின்னங்களில் அடுத்ததாகிய திருநீறு என்பது குற்றமற்ற பசுவின் சாணத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பினால் சுடுவதால் உண்டாகும் நீறாகும் (சாம்பல்). இத்திருநீற்றை அணிவது சைவர் களின் கடமையாகும். சாணம் ஆன்மாவையும், சாணத்திலுள்ள அழுக்குகள் மலங்களையும், சாணத்தை எரிக்கின்ற நெருப்புத் திரு வருளையும், எரித்தபின் கிடைக்கும் திருநீறு மலம் நீக்கப்பெற்ற ஆன்மாவையும் குறிக்கும் என்பர். சாதாரணமாகத் திருநீறை அணிந்தால் அதற்கு அணிதல் என்று பெயர். நீரில் குழைத்து அணிந்தால் உபதேசம் பெற்று அணிதல் என்று பொருள்படும். இவ்வாறு உபதேசம் பெற்று அணிகின்ற திருநீற்றை மனித உறுப்புக்களின் இன்னின்ன இடத்தில் அணிய வேண்டும் என்ற விதிமுறைகள் உண்டு. இவற்றைச் சாத்திரங் களும் தோத்திரங்களும் கூறுகின்றன.

இவ்வாறு சைவ சமய வழிபாட்டில் குரு, சங்கம வழிபாடுகள் சிறப்புற அமைந்துள்ளன. அவற்றின் வழியில் சாதனங்களும் அமைந் துள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவசமயச் செல்நெறியில் தலயாத்திரை

## சம்பந்தர் பாடல்களினூடாக ஓர் ஆய்வு

**சி.ரமணராஜா**
விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**அறிமுகம்**

"சைவ சமயச் செல்நெறியில் தல யாத்திரை" சம்பந்தர் பாடல்களினூடாக ஓர் ஆய்வு என்னும் தலைப்பில் இவ்வாய்வு அமையப் பெற்றுள்ளது. சைவம் சிவனுக்கு இறைமை கூறி வழிபடும் நெறியாகும். சிந்து வெளி காலத்திலிருந்து சைவ நெறியின் தொன்மைச் சிறப்பினை அறிஞர்கள் கண்டுணர்ந்து தெளிவுபடுத்தியுள்ளனர். தொன்மைச் சிறப்புடன் திகழும் சைவ சமயமானது பல்வேறு கால கட்டங்களினூடாக வளம் பெற்று வந்துள்ளது. அந்த வகையில் தமிழக வரலாற்றில், பல்லவர் காலம் சைவ சமயத்தினை மறுமலர்ச்சியுறச் செய்து சைவம் தழைத்தோங்க வழி வகுத் திருந்தது. இதனாலேயே இக்காலத்தில் தமிழகம் மனித மைய ஈர்ப்புச் சூழலில் இருந்து சமய மைய ஈர்ப்புச் சூழலுக்கு மாறத் தொடங்கியதாக சமய அறிஞர்கள் கருதுவர்.

பல்லவர் காலத்திலே அரசியல், சமயச் சூழலமைவுகள் சைவத்தையும், தமிழையும் முற்றாகப் பாதிக்கச் செய்திருந்தன. அதாவது மாற்றம் என்பதனை வேண்டி நின்ற ஒரு காலப் பகுதியாக இக் காலப் பகுதி அமைந்திருந்தது. இதன் அடிப்படையில் சமூகத்திலும் "சமயத்தி லும் மாற்றங்கள் தேவை" என்ற தன்னுணர்ச்சி யின் வெளிப்பாடாக பக்தி இயக்கம் முகிழ்ப்பு நிலை எய்தியது. அத்தகையதொரு சூழலில் தமிழினால் பக்தி செய்து, அம் மொழியினால் இறைபுகழ் பாடி பக்தி இயக்கப் பின்னணியில் புறச் சமயச் சூழலை சைவச் சூழலாக மாற்றி யமைத்த வகையில் சைவ வரலாற்றில் சம்பந்தர் முதன்மைப்படுத்தப்படுகின்றார்.

பல்லவர் காலத்தில் சைவ சமய மரபுக்கும், சைவ தத்துவச் செழுமைக்கும், கலையியல் மற்றும் வாழ்வியல் முறைமைக்கும் புதிய செல்நெறிகளை அமைத்த தனிப்பெருங் கவிஞராகச் சம்பந்தர் விளங்குகிறார். "மிகு சைவத்துறை விளங்கச்"[1] செய்ய வந்தவரென்று சேக்கிழாரால் சம்பந்தர் அறிமுகம் செய்யப்படுகி றார். மேலும் சிவனடியைச் சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் ஞானப்பாலுண்ட மாத்திரத்தே சம்பந்தருக்குக் கிடைத்ததாகவும் சேக்கிழார் சுட்டிக்காட்டியுள்ளார். அடியார் கூட்டம் புடைசூழ, மகிழ்ச்சியோடும், பெருமிதத் தோடும் தமிழக ஊர்கள் தோறும் வலம் வந்த ஒருவராக சம்பந்தரை அவரது பாடல்களூடாக அறிந்துணர முடிகிறது.

இத்தகைய வெளிப்பாடுகள் சைவசமயச் செல்நெறியில் சம்பந்தரின் வகிபாகம் எத்தகைய தென்பதை புலப்படுத்துவதாக அமைகின்றன.

**தலயாத்திரை**

இந்துக்களின் வழிபாட்டு முறையில் மற்றுமொரு வடிவம் தலங்களை நோக்கிய புனிதப் பயணங்களாகும். திருக்கோயில்களுக் குச் சிறப்பைக் கொடுப்பன மூர்த்தி, தலம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தம் ஆகையினால் இவை, முறையே அமை யப் பெற்ற திருத்தலங்களை நோக்கியதாக சமயச் சான்றோரின் புனிதப் பயணங்கள் அமைந்திருந்தன. தலங்களை நோக்கிய புனிதப் பயணங்கள் தலயாத்திரைகளாக வளர்ச்சி கண்டு விளங்கின.

யாத்திரை என்ற சொல்லானது "யா" என்ற எழுத்திலிருந்து பிறந்ததாகும். இச் சொல்லானது போவது, பிரயாணம் செய்தல், தெய்வத்தையோ, புண்ணியத்தையோ நாடி கோயிலுக்கோ மற்ற தலம், தீர்த்தம் முதலிய வற்றுக்கோ தனியாகவோ, கூட்டமாகவோ மக்கள் செல்வது எனப் பொருள்படுகிறது. மேலும் யாத்திரைகளானவை தலயாத்திரை, தீர்த்த யாத்திரை, பாதயாத்திரை, இரதயாத்திரை என்று பல வகைப்படுகின்றன.

ஆன்மீக வாழ்க்கையில் தம்மை ஈடு படுத்திக் கொண்டவர்கள் தலங்களை நோக்கிய தாக தமது பயணங்களை மேற்கொண்டிருந் தனர். நீண்ட பயணங்களை மேற்கொண்டு வெகு தொலைவிலுள்ள திருக் கோயில்களுக்குச் சென்று கோவிலைச் சுற்றி வந்து அங்குள்ள தெய்வ விக்கிரகங்களையும், தலவிருட்சம், தீர்த்தங்களையும் வணங்கிவிட்டு, காணிக்கை களையும் செலுத்தி விட்டு வருதலென்பது மகிழ்ச்சி தரும் அனுபவமாகும். இச் செயற்பாடு கள் ஆன்மீக வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர்களின் சிறப்பான பணியாக அமையப் பெற்றுள்ளது.

தல யாத்திரைகளைப் பொறுத்தவரை யில், அதனை மேற்கொள்பவரின் நம்பிக்கை, அவர்கள் அந்த இலக்கினை அடைந்தவுடன் பெறும் மகிழ்ச்சி, கூட்டமாகச் சேர்ந்து செயற் படும் மனப் பக்குவம் ஒருமித்த முடிவு, ஒருங் கிணைந்த செயற்பாடு, வழியில் ஏற்படும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல், தலங்களைக் கண்டவுடன் அவர்கள் பெறும் மனநிறைவு ஆகியவை மிகவும் சிறப்புடையன வாகக் காணப்படுகின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து நவீன முறையிலான போக்குவரத்துச் சாதனங் கள் புழக்கத்தில் வரும் காலம் வரை மக்களின் நடமாட்டமும், தூரத்திலுள்ள பிரதேசங்களுக் கிடையில் போக்குவரத்துக்களும் ஏற்படுவதற் குத் தலயாத்திரைகளே பெரிதும் காரணமாயி ருந்தன. இவை பெரு நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் திருத்தலங்களுக்குப் போகும் வழக்கத்தினை யும் மேம்படுத்தியிருந்தன.

**சம்பந்தர் காலப் பின்னணி**

"அந்த இருண்ட காலப் பகுதியில் தமிழகத்தில் மாபெரும் அரசியல், சமய, மொழி மாறுதல்கள் தோன்றித் தமிழரின் வாழ்வையும், நாகரிகத்தையும் பல புதிய திருப்பங்களுக்கு உட்படுத்தின" என்று மு.மு.பிள்ளையவர்கள், சங்கமருவிய காலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை யானது, பல்லவர் காலத்திற்கு முன்பிருந்த காலச்சூழலை தெளிவு படுத்துவதாயுள்ளது. தமிழக வரலாற்றில் கி.பி 2ம் நூற்றாண்டு தொடங்கி கி.பி 7ம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சமண, பௌத்த சமயங்களின் மேலாதிக்கம் காணப்பட்டிருந்ததாகும்.

களப்பிரர் ஆட்சியிலும், பின்னர் 6ம் நூற் றாண்டளவிலும், பல்லவர் மற்றும் முற்காலப் பாண்டியர் ஆட்சிக் காலங்களிலும் தமிழகத்தில் சமண சமயம் மிகுந்த செல்வாக்கினைப் பெற் றிருந்தது. ஆட்சியதிகாரத்துவம் மிக்க மதமாக சமணமே விளங்கியது. ஆதலால் பெரும்பா லான மக்களும் அந்நெறி நின்று ஒழுகினர். அச் சமயங்கள் பாலி மற்றும் பிராகிருத மொழி களில் தாம் சார்ந்த சமய தத்துவங்களை விளக் கின. உயிர்க் கொலைகளையும், வேள்விகளை யும் எதிர்த்தன. உயிரிரக்கம், அறம், மனித நேயம் என்பவற்றை வலியுறுத்தின. அதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில் கடுமையான துறவறம், உண்ணா நோன்பு, நுண்கலைகள் எதிர்ப்பு, பெண்களை மதியாத போக்கு என்பவற்றை வலியுறுத்தின.[3]

இத்தகையதொரு காலச் சூழலில் புறச் சமயங்களுக்கு மாற்றாக வைதீக சமயங்களை வளர்த்தெடுக்க வேண்டிய தேவையும் அவசிய மும் பக்தியியக்கச் செயற்பாட்டாளர்களிடம் தோன்றியிருந்தது. அச்சமயங்கள் வற்புறுத்திய கொள்கைகளுக்கு மாற்றாக இல்லறம் பேணல், நுண்கலைகள் யாவும் இறையின்பத்தை ஏற் படுத்தி, இறையுணர்வைத் தூண்டி வீடு பேற்றிற் குத் துணை புரியும் என்பதனை வலியுறுத்திப் பேசுதல், தமிழை வளம்படுத்தல், அதன் மூலம் பக்தி, சமயம், மற்றும் தத்துவங்களை விளக்கு தல் என்பவற்றுக்கு மக்களை ஒருங்கிணைந்து செயற்பட வைப்பதென்பது பக்தி இயக்கத்தின ரின் இன்றியமையாத கடமையாகவும் அமைந் திருந்தது. மேற்கூறிய மாற்றத்திற்காக பக்தி இயக்கத்தை தலைமையேற்று வழிநடத்திய ஒருவராக சம்பந்தர் சைவ உலகில் போற்றப்படு கிறார்.

திருஞான சம்பந்தருடைய காலம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு களுண்டு. பெரும்பாலான அறிஞர்களின் கருத்தினடிப்படையில் சம்பந்தரின் காலம் கி.பி 7ம் நூற்றாண்டு எனக் கொள்ள முடிகிறது. இவரது பாடல்கள் தேவாரங்கள் என சைவ பக்தி உலகில் வழங்கப்பட்டு வருகின்றன. பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளும் இவரால் பாடப்பட்டனவாகும். இதில் மொத்த மாக 384 பதிகங்கள் உள்ளன. அவற்றுள் திருத்தலப் பதிகங்களின் எண்ணிக்கை 377 ஆகும். பொதுத் திருப்பதிகங்கள் 7 ஆகும். இவர் 220 சிவத்தலங்களைப் போற்றிப் பாடியுள்ளார்.[4]

சம்பந்தரின் பதிகங்கள் ஊரக வரலாற்றி னையும், மக்களின் வழக்குகளையும் பதிவு செய்து வைத்துள்ளது. திருஞான சம்பந்தர் ஒரு தலத்தைப் பற்றிப்பாடும் போது, அக்காலத்தில் அப்போது நிலவிய மக்கள் வாழ்க்கைமுறை, பொருளியல் நடவடிக்கை, மக்கள் வழக்கு, இயற்கை வழங்கிய சிறப்புக்கள், இறைவன் இறைவியரின் திருக்கோலச் சிறப்பு, அருளாற் றற் சிறப்பு, வழிபாட்டு முறைகள், தலத்தின் எழிலார்ந்த சிறப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக் கிப் பாடியுள்ளார்.

எடுத்துக்காட்டாக, திரு ஈங்கோய் மலைப் பகுதியில் குறிஞ்சி வாழ்க்கையையும், திரு வண்ணாமலைப் பதிகத்தில் மருத வாழ்க்கை யையும் பாடியுள்ளார். அவ்வாறே இப் பதிகத்தில் காவிரியிலிருந்து பிரிந்து சென்ற நீர்ப்பாசனக் கல்வாய்களைப் பற்றிப் பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.[5]

இவ்வாறாக அவற்றைப் பாடிய முறைக் கும், இயற்கைத் தன்மைகளை வெளிப்படுத்தக் கையாண்ட வியூக முறைகளுக்கும், பாடிய சந்தர்ப்பத்திற்கும் அவருக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது யாதெனில், அவரால் ஊர் ஊராக மேற்கொள்ளப்பட்ட தலயாத்திரை களே எனலாம்.

**சம்பந்தரின் தல யாத்திரை முறை**

திருஞான சம்பந்தரின் தலயாத்திரை யானது பதின்மூன்று ஆண்டுகளாக இடம் பெற்றிருந்தது. அவர் சைவசமய மறுமலர்ச்சிக் காக யாத்திரை செய்ய ஆரம்பித்த காலச் சூழலானது, அரச ஆதரவுடன் சமண சமயம் மேலெழுச்சி பெற்றிருந்த காலமாகும். பல்லவ மன்னர்களும் பெரும்பாலான மக்களும் சமண நெறியினைப் பின்பற்றியொழுகினர். இவ்வா றான புறச் சமயச் சூழலில் அதுவும் பால்ய வயதி லேயே மிக்க ஆளுமையுடைய ஒருவராக சம்பந்தர் தனது பக்தி நடவடிக்கைகளை முன் னெடுக்க முயன்றிருக்கின்றார். வயது மட்டும் ஒருவருடைய ஆளுமையைத் தீர்மானிப்ப தில்லை. மனப் பக்குவமும், இறைபற்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான நம்பிக்கையும், திட்டப் பாங்கான செயற்பாடுகளுமே ஆளுமையின் ஊற்றிடங்க ளாக உள்ளன என்பதனை சம்பந்தரின் வாழ்வியலை அறிந்து கொள்பவர்கள் யாவரும் தெளிவாக விளங்கிக் கொள்வர். அதுமட்டுமன்றி இறைவன் துணையுடன் மதவாதிகளிடம் இருந்து வந்த எதிர்ப்புக்களை சம்பந்தர் மிகவும் சாதுரிய மாக எதிர்கொண்டிருக்கின்றார் என்பதனையும் அவரது வாழ்வியலூடாக அறிந்துணர முடி கின்றது.

மூன்றாவது வயதில் தொடங்கிய அவரது தலயாத்திரைகள் பதினாறு வயதுவரை தொடர்ந்திருந்தது. நான்கு யாத்திரைகள் ஏழு வயதுக்குள் இடம் பெற்றிருந்தன. ஐந்தாவது தல யாத்திரை மிகவும் விசாலமானதாகச் சிறப்புப் பெற்றிருந்தது. இக்கட்ட யாத்திரிரையின் போது பல்வேறு பிரதேசத்துத் தலங்களை சென்று வழிபட்டு, அதிகளவில் பதிகங்களைப் பாடியுள் ளார். இக் காலத்தில் 218 பதிகங்களைப் பாடிய தாக அறிய முடிகிறது. சைவ சமய வரலாற்றுப் போக்கில் பல மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு பயணமாகவும் இக் காலகட்ட யாத்திரை அமைந்திருந்தது. ஆறாவது யாத்திரையை தனது பதின்நான்காவது வயதிலேயே ஆரம்பித் திருக்கிறாரெனில் ஐந்தாம் கட்ட யாத்திரை யானது ஏழு ஆண்டுகளாக நீட்சி பெற்றிருந்த தெனக் கொள்ள முடிகிறது.

ஊரின் எல்லைக்கு வெளியே திருக் கோயில் கண்களுக்குத் தெரியும் வரை இள வயதில் தந்தையின் தோள் மீதமர்ந்தும், பின்னர் பல்லக்கிலும் சென்றுள்ளார். கோயில் தென்பட்ட தும் நடந்து சென்று திருக்கோவிலை வலம் வந்து உள்ளே சென்று வழிபட்டுப் பதிகம் பாடியுள் ளார். நான்காம் கட்ட யாத்திரையோடு தந்தை யார் சீர்காழியில் இருக்க அடியவர் கூட்டத்தோடு தல யாத்திரையை மேற்கொண்டிருந்தார். தீருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணி, திருநாவுக்கரசு நாயனார், முருகநாயனார், சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார்களுடன் சேர்ந்தும் அவரது பயணங்கள் இடம் பெற்றன. திருநாவுக்கரசருடன் இணைந்து சம்பந்தர் மேற்கொண்ட திருத்தலங்களை நோக்கிய பயணங்கள் வரலாற்று முக்கியத்துவமுடையன வாகக் காணப்படுகின்றன.

அரச ஆதரவு மிகுந்த சமண சமயச் சூழலிலேயே சம்பந்தரின் தலயாத்திரைகள் தொடர்ந்திருந்தன. போக்குவரத்து வசதிகள், ஒழுங்கான வீதிப் புனரமைப்புகள், போதியளவு தங்குமிட வசதிகள், அன்ன சத்திரங்கள் இல்லாத காலச் சூழலில் மக்களினுடைய ஆதரவினை மட்டும் நம்பியே இவர் இந்தத் தல யாத்திரிரை களை முன்னெடுத்திருந்தார். இந்த வகையில் சம்பந்தரின் தலயாத்திரை முறைமைகள் அமைந்திருந்தமை காணத்தக்கதாகும்.

**சம்பந்தரும் தலயாத்திரைகளும்**

சம்பந்தர் தமது காலச் சூழலில் மேற்கொண்ட சைவ பக்தி இயக்கப்பணியை முதன்மைப்படுத்தி மக்கள் சக்தியைக் கட்டி யெழுப்பவும் பிற சமயத்தவரின் கருத்துக்களை நிராகரணம் செய்து தாம் சார்ந்த சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்கா கவும் ஊர்கள் தோறும் அமைந்துள்ள திருத் தலங்களை நோக்கிப் புனிதப் பயணங்களை மேற்கொண்டிருந்தார். இத்தகைய பயணங்களா னவை சைவ சமய வளம்படுத்தலுக்கான அணுகு முறையாகவும், பிரசார முறையாகவும் அமைந் திருந்தன.

திருஞான சம்பந்தர் இறைவனால் பிரமபுரத்தேரிக்கரையில் ஆட்கொள்ளப்பட்டது முதற்கொண்டு இறைவனைப் போற்றிப் பாடுவ தற்காக தலயாத்திரைகளை மேற்கொள்வதனை வழக்கமாக்கிக் கொண்டார். இவரது இத்தகைய செயற்பாடுகளுக்கு அவர் சார்ந்த சமுதாயத் தினரோ-பெற்றோரோ காரணமாக இருந் திருக்கவில்லை. யாரும் அவர்களை இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தூண்டியவர்களுமல்லர். அவ்வா றெனின், இவருக்கு இத்தகைய ஞானம் எங்கிருந்து வந்தது? ஞானம் என்பது இரு வகைப்படும். ஒன்று இறையருளால் தாமாக வருவது. மற்றையது நாமாக முயன்று பெறுவது. இங்கு சம்பந்தருக்கு முதல் நிலை ஞானமே கிடைக்கப் பெற்றது. இந்த ஞானம் ஞான வடிவினளாகிய அன்னையின் பாலை உண்ட மாத்திரத்தில் கிடைக்கப் பெற்றது. இதற்கு இறைவனின் ஆணை இருந்தது. இறைவனின் அருளினால் இச் செயல்கள் நடந்தன, என்பதை சம்பந்தரே குறிப்பிட்டிருக்கக் காணலாம். இவ்வாறு ஞானப் பாலுண்டதனைத் தொடர்ந்து தலங்களை நோக்கித் தொடர்ந்த புனிதப் பயணங்களானவை அவரது இறுதிக் காலம் வரை அவரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

ஒவ்வொரு செயலுக்கும், தொழிலுக்கும் நோக்கங்கள் பலவுண்டு. அவ் வகையிலேயே சமயம்சார் பெரியோர்கள் மேற்கொண்ட யாத்திரைகளும் நோக்கம் கருதியனவாகவே அமைகின்றன. சம்பந்தரும் தமது நோக்கத்தை நிறைவு செய்வதற்கு திட்டப்பாங்கான ஒரு பிரசார முறைமையாகவே தல யாத்திரைகளை முன்னெடுத்திருந்தார். இத்தகைய பயணங்களை புத்தி பூர்வமாக செயற்படுத்தியதன் விளைவாக சமூக மாந்தரிடையே தாம் சார்ந்த சைவக் கொள்கைகளைப் பல நிலைகளிலும் அவரால் பரப்பிக் கொள்ள முடிந்தது.

சைவம் சார் கொள்கைகளை அறிந்து கொள்வதற்கான வடமொழித் தேர்ச்சியும், அவற்றைச் சமூகத்தில் எடுத்துப் பேசுவதற்குரித் தான தமிழறிவும், மற்றும் இசைப் புலமையும் என பல்வேறுபட்ட ஆளுமைகளைக் கொண் டிருந்த சம்பந்தர் அவற்றை வெளிப்படுத்து வதற்கு தலங்களை மைய நிலையங்களாகவும் கொண்டிருந்தார். சமூகத்தின் இருப்பு நிலை யென்பது அது வாழும் சமூகத்தில் தங்கியுள்ளது. இதனை அன்றே உணர்ந்திருந்த சம்பந்தர் தலங்கள் தோறும் யாத்திரைகளை மேற்கொண் டிருந்தார். ஏனெனில் திருக்கோயில்கள் சமய சின்னங்களாகவும், சமுதாய நிறுவனங்களா கவும் நகரவளர்ச்சித் தளங்களாகவும் விளங்கி யமையினால் சம்பந்தரது பயணங்களும் தலங்களை நோக்கியதாக மையங்கொண்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தர் சைவநெறியினைத் தழைத் தோங்கச் செய்வதன் பொருட்டு பதின்மூன் றாண்டுகளாக தலயாத்திரைகளை மேற் கொண்டிருந்தார். அவ் வகையில் தலங்களை நோக்கிய அவரது பயணங்களை ஆறு கட்டங்க ளாகப் பகுத்தாராய முடிகிறது.

முதல் யாத்திரை – சீர்காழியில் இருந்து புறப்பட்டு திருக்கோலக்கா சென்று மீண்டும் சீர்காழிக்குத் திரும்பியமை. திருக்கோலக்காத் தலத்தில் தனது கரங்களால் தாளமிசைத்து,

**"மடையில் வாழை பாய மாதரார்**
**குடையும் பொய்கைக் கோலக் காவுளான்**
**சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்**
**உடையும் கொண்ட உருவம் என்கொலோ"**[6]

என்ற பதிகம் பாடினார். இதன் விளை வாகவே அவருக்கு இறைவனால் பொற்றாளம் வழங்கப்பட்டது. இறைவி அதற்கு ஓசை கொடுத்தருளினார். யாத்திரையின் தொடக்கமே சம்பந்தருக்கு இறைவனின் ஆணையும் துணை யும் கிடைக்கப்பெற்றிருந்தமையினை உணர முடிகிறது.

இரண்டாவது தல யாத்திரை – சீர்காழியி லிருந்து ஆரம்பமாகிய இவரது இரண்டாம் கட்ட யாத்திரையானது நனிபள்ளி, தலைச் சங்காடு, வலம்புரம், காவிரிப்பூம் பட்டினம், சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், சிரபுரம் முதலிய தலங்களைச் சென்று வழிபட்டு பதிகம் பாடி மீண்டும் சீர்காழியைச் சென்றடைவதாக அமைந்திருந்தது.[7] ஒவ்வொரு தலயாத்திரை களும் சைவ சமயச் செந்நெறியில் பல மாற்றங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்படுத்தியிருப்பினும் இரண்டாம் கட்ட யாத்திரையானது முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தமையைக் காணலாம். திரு நனிபள்ளி, திருவெண்காடு ஆகிய திருத்தல யாத்திரைகள் பின்னைய நாட்களில் சம்பந்தருக் குச் சிறப்பையளிக்கும் பயணங்களாக அமைந் திருந்தன.

மூன்றாவது தலயாத்திரை சீர்காழியில் இருந்து தான் சம்பந்தரின் இக்கட்ட யாத்தி ரையும் ஆரம்பமானது. திருக்குருகாவூர், மயேந் திரபள்ளி, திருவெள்ளடை, திருக்கலிக்காமூர் ஆகிய திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி பதிகங்களைப் பாடியதன் பின்னர் மீண்டும் சீர்காழி வந்து தங்கியிருந்தார். இக் காலத்தில் திருநீல கண்ட யாழ்ப்பாணரும், அவருடைய துணைவியார் மதங்கசூளாமணி அம்மையாரும் திருஞானசம்பந்தப் பிள்ளை யாரை வணங்குவதற்குச் சீர்காழி வந்தனர்.[8]

• நான்காவது தல யாத்திரை – சீர்காழியி லிருந்து திருத்தில்லையை நோக்கியதாக இவரது நான்காம் கட்டத் தலயாத்திரை அமையப் பெற்றிருந்தது. இந்த யாத்திரையில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் சம்பந்தருடன் சென்றிருந்தார். தில்லைக்கூத்தன் பாதம் பணிந்து வழிபட்டதன் பின்பு பல தலங்களை நோக்கி அடியவர்களோடு பயணமானார். இவ் வகையில் திரு வேட்களம், திருக்கழிப் பாலை, திருநெல்வாயில் அரத்துறை, திருவெருக்கத் தம்புலியூர், திருமுதுகுன்றம், பழுவூர், திருப் பெண்ணாகடம், விசய மங்கை, திருவைகா, திருப்புறம்பியம், சேய்ஞலூர், வாழ்கொளி, புத்தூர், திருக்கடம்பூர், திருநாரையூர், திருக் கறிப்பறியலூர் முதலிய தலங்களைப் பணிந்து வழிபட்டு பதிகங்கள் பாடி, சீர்காழிக்கு மீண்டார்.[9]

ஐந்தாவது தல யாத்திரை – சம்பந்தரது ஐந்தாவது தல யாத்திரையும் சீர்காழியிலிரு ந்தே ஆரம்பமாகின்றது. இக்கட்ட யாத்திரையின் போது, சோழ நாடு, கொங்கு நாடு, பாண்டிய நாடு ஆகிய இடங்களில் உள்ள தலங்கள் தோறும் சென்று பதிகங்கள் பலவற்றைப் பாடி யுள்ளார். திருக்கண்ணார், புள்ளிருக்கு வேளீர், திருப்பாச்சிலாச்சிரமம், திருச்செங்காடு (கொடிமாடச் செங்குன்றூர்) திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழ மண்ணிக் கரை, திருமணஞ்சேரி, திருவெதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக் குடி, திருவியலூர், திருந்துதேவன்குடி, திரு வின்னம்பர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருப்பெரும்புலியூர், திருநெய்த் தானம், திருமழபாடி, திருக்கானூர், திருவன்பி லாந்துறை, திருவடமாந்துறை, திருச்சிராப் பள்ளி, திருவலஞ்சுளி, பழையாறை, திருச்சக்தி முற்றம், பட்டீச்சுரம், திருவாவடுதுறை, திருத் தருமபுரம், திருச் செங்காட்டங்குடி, திருமருகல், திருப்புகலூர், திருவாரூர், திருக்கடவூர், திரு ஆக்கூர், திரு வீழிமிழலை, திருமறைக்காடு (வேதாரண்யம்) திருவாய்மூர், திருக்குற்றாலம், திருநெல்வேலி, இராமேசுவரம், திருத்தெளிச் சேரி, திருக்கடவூர், திருப்பூந்துருத்தி என்ற தலங்களை நோக்கிய தாக அவரது தல யாத்திரை விரிவு கண்டிருந்தது.[10]

இராமேஸ்வரத்தில் நின்று கொண்டு இலங்கையின் கிழக்கிலும், மேற்கிலும் அமைந்திருக்கின்ற புராதன சிவத் தலங்களான திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய திருத்தலங்களை மனதினால் வணங்கிப் பதிகம் பாடினார். இலங்கையிலே பாடல் பெற்ற சிறப்புக்குரியதாக மேற்கூறிய திருத்தலங்கள் காணப்படுவதனால் இலங்கையிலுள்ள பெரும் பான்மையான இந்துக்களால் வழிபடப்பட்டு வரும் தலங்களாகவும், புனிதப் பயணங்களை மேற்கொள்வதற்குரிய புனித இடங்களாகவும், வரலாற்றுத் தொன்மையுடைய தலங்களாகவும் அவை விளங்கி வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாவது தல யாத்திரை – சம்பந்தரின் பதின்நான்காவது வயதிலே ஆறாவது தல யாத்திரை தொடங்கப் பெற்றது. திருவோத்தூர், திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம், காஞ்சிபுரம், திருக்காளத்தி, திருவேற்காடு, ஒன்றியூர், மயிலாப்பூர், திருவான்மியூர், திருக் கழுக்குன்றம், திருமேற்றளி, திருக்கச்சி, நெறிக் கரைக்காடு, திருவாலங்காடு, திருப்பாசூர், திருவெண்பாக்கம், திருக்காரிகரை என்ற தலங்களை நோக்கியவாறு சம்பந்தரின் இத்தல யாத்திரை அமையப் பெற்றிருந்தது. இதுவே அவரது இறுதிக்கட்ட யாத்திரையாகவும் அமைந்தது. தனது 16 ஆம் வயதில் திருமணமும், சோதியில் கலத்தலுமாகிய நிகழ்வு இடம் பெறும் வரை அவரது திருத்தல யாத்திரைப் பணி தொடருற்று விளங்கியது.

**பல்லவர் கால சைவசமய மறுமலர்ச்சியில் சம்பந்தரது தலயாத்திரையின் செல்வாக்கு**

ஒவ்வொரு செயலுக்கும், தொழிலுக்கும் நோக்கங்கள் இருப்பது போல அவற்றின் விளைவுகளும் நிறையவே உண்டு. பிற சமயச் சூழலில் தோன்றி வாழ்ந்து, சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்ட பக்தியி யக்கத் தலைமையாளர்களில் ஒருவரான சம்பந்தர் மேற்கொண்ட தலயாத்திரைகள் ஏலவே கூறப்பட்டது போன்று ஆறு கட்டங்களா கவும் அதே வேளை சீர்காழியை மையப் படுத்தியதாகவும் அமையப் பெற்றிருந்தன. தலங்களை நோக்கியதான அவரது புனிதப் பயணங்கள் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற் படுத்தியிருந்தது. இறைவனின் துணையுடனே அத்தகைய மாற்றங்களை அவரால் செய்ய முடிந்தது. இத்தகையதான மாற்றங்கள் அக் கால மற்றும் பிற் கால சைவ நெறியில் தாக்கங்களை ஏற்படுத்தியதோடு, பின்னைய நாட்களில் தல யாத்திரையின் அவசியத்தையும் உணர்த்த லாயிற்று.

இவ்வுலகியலில் பிறப்பெடுத்து நல் வினையாற்றி வீடுபேறு பெற வேண்டிய தேவையில்லாத ஜீவன் முத்தர் தாமென்பதனை சம்பந்தரே குறிப்பிட்டிருக்கின்றார். இத்தகைய ஒருவர் இம் மண்ணின் மேல் பிறப்பிக்கப்பட்ட தற்குக் காரணம் யாது? இத்தகைய ஒருவர் ஊர்ஊராகச் சென்று இறைவனை ஏன் வணங்க வேண்டும்? அவ்வூரில் உறையும் இறைவனைக் காணவேண்டும்? என்ற சிந்தனையில் இறங்கிய சேக்கிழாருக்கு அந்த உண்மை புலப்படலா யிற்று. சம்பந்தர் ஊர்கள் தோறும் செல்வதற்குக் காரணம் யாதெனில் பல்லிடங்களிலும் வாழும் மக்கள் இவரை நாடிச் சீர்காழிக்கு வருத லென்பது இயலாத காரியம். எனவே சீர்காழித் தலைவர் மக்களை நாடி அவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்றார் என்ற உண்மை புலப்பட சேக்கிழார் தமக்கேயுரிய முறையில் இதற்கு விளக்கம் தருகிறார்."

மானிடவியல், வரலாற்றியல், சமூக வியல், கலையியல், சமயவியல், மெய்யியல், அறிவியல் மற்றும் அறவியல் ஆய்வாளர்களு க்கு தகுந்த தடயங்களைத் தந்து நிற்கும் சான்றா தாரங்களாக, சம்பந்தரின் பாடல்கள் அமைந்து விளங்குகின்றன. இத்தகையதான கூறுகளைத் தமது பதிகங்களில் தரையிறக்கம் செய்வதற்கு அவரது தலப் பயணங்களும், அங்கு அவர் நேரடியாகக் கண்ட அனுபவ நிலைக் காட்சிக ளும் உதவியிருக்கலாம் எனக் கொள்ள முடியும்.

சம்பந்தரின் ஆறு கட்டத் திருத்தல யாத்திரைகளும் அக்கால சமுதாயத் தளத்திலும், சமய நிலையிலும் செல்வாக்குச் செலுத்தி யிருந்தன. முதலாவது திருத்தல யாத்திரையே சம்பந்தருக்கு சமூக அங்கீகாரத்தை வழங்கியது. திருக்கோலக்காவில் கையால் தமாளமிசைத் துப் பாடும் போது இறைவனால் பொற்றாளம் வழங்கப் பெற்றமையும் இறைவியால் அதற்கு ஓசை கொடுக்கப் பெற்றதுமான நிகழ்வு இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, நனிபள்ளியூர் மக்களின் வேண்டுகோளின் படி தந்தையின் தோள்மீத மர்ந்து நனிபள்ளிக்குச் சம்பந்தர் பயணமானார். அங்கு இறைவன் மீது திருப்பதிகம் பாடினார். இத் திருப்பதிகத்தின் பாடல்கள் எல்லாவற்றிலும் முதல் இரண்டு அடிகளில் பாலைநிலத்தின் இயல் பும், பின்னிரண்டடிகளில் மருத நிலத்தினதும், நெய்தல் நிலத்தினதும் இயல்புகள் கூறப்பட்டிருக் கின்றன. சான்றாக,

காரைகள் கூகை முல்லை களவாகை யீகை
படர் தொடரிகள் ளிகவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடகாடமர்ந்த
சிவன் மேவு சோலை நகர்தான்
தேரைகள் ஆரைசாய மிதி கொள்ள
வாழை குதிகொள்ள வள்ளை துவழ
நாரைகளாரல் வாரவயன் மேதிவைகு
நனிபள்ளி போலு நமர்காள்.[12]

"மடை இடை வாளை பாய முகிழ் வாய் தெரிந்து
மனம் நாறும் நீலம் மலரும்
நடை உடை அன்னம் வைகும் புனலம் படப்பை நனிபள்ளி"[13]

"வெறுமலர் தொட்டு விட்ட விசைபோன கொம்பில்
விடுபோது அலர்ந்த விரைசூழ் நறுமலர் அல்லி புல்லி ஒலி
வண்டு உறங்கும் நனிபள்ளி"[14]

"குளிர்தரு கொம்மலோடு குயில் பாடல் கேட்ட
பெடை வண்டு தானும் முரல நளிர்தரு சோலைமாலை நரை
குருகு வைகு...."[15]

"அகிலுந்தி யொண்பொன் இடறி
நாகமொ டாரம்வாரு புனல் வந்தலைக்கும்..."[16]

"நகை மலி முத்திலங்கு மணல் சூழ் கிடக்கை"[17]

"புறவிரி முல்லை மௌவல் குளிர்பிண்டி புன்னை
புனை கொன்றை துன்று பொதுளி நறவிரி போதுதாது புது
வாசம் நாறும் நனிபள்ளி"[18]

என்றமைந்த இப் பாடல்கள் சுட்டத் தக்கவை. பாலை, நெய்தல், மருதம் ஆகிய நிலத்தினியல்புகள் இங்கு குறிப்பிடப் பட்டிருத்தலால், பாலை நிலமாக இருந்த திரு நனிபள்ளி நெய்தல் நிலமாக மாறும்படி சம்பந்தரால் பாடியருளப் பெற்றதென்ற வழக்கு நீண்ட காலமாக இருந்து வருகின்றது.[19] பயன்பாடற்றதோர் நிலத்தினை சம்பந்தர் தன தாளுமையால் செம்மையாக்கிப் பயன்பாட்டிற் குரியதாக மாற்றியமைத்திருக்கலாம். அதாவது மக்களுக்குப் பயன்படாத இயற்கைத் தன்மை யைச் சம்பந்தர் இறையருளால் பாடிப் பயன் பெறும் நிலமாக மாற்றினார் என்றே இதனை உணர வேண்டும்.[20] இன்றைய காலத்தில் முல்லை நிலங்கள், மருத நிலங்கள் குடியேற்றப் பகுதிகளாக மாற்றியமைக்கப்படுவதும், நெய்தல் நிலங்கள் பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களாக மாற்றியமைக்கப்படுவதும் இவ் விடத்தில் ஒப்புநோக்கத்தக்கது. இதற்கும் ஒருவரது ஆணை அவசியமாகின்றது. அது தற்காலத்தில் ஆட்சியாளர்களின் ஆணையா கவே அமையப் பெறுகின்றது. சம்பந்தரும் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கிப் பாடிய பதிகத்தின் 11ம் பாடலில்,

"நனிபள்ளி உள்க வினை கெடுதல்
ஆணை நமதே"

என்ற வகையில் ஆணையிட்டுப் பாடியிருக்கக் காணலாம்.

சம்பந்தரது இரண்டாவது தல யாத்திரை யில் திருவெண்காட்டுத் திருத்தலமும் ஒன்றாக விருந்தது. திருவெண்காடு பழைய சிவத் தலங்களில் ஒன்றாகும். சோமதீர்த்தம், அக்கினி தீர்த்தம், சூரிய தீர்த்தம் என்ற மூன்று தீர்த்தங்கள் அங்கு இருக்கின்றன. அம் மூன்றையும் "முக் குளம்" என்றும் அங்குள்ள நீரை "முக்குளத்து நீர்" என்றும் சொல்வார்கள். அவை மிக்க புனிதமானவை. இத் திருத்தலத்தைச் சம்பந்தர் சென்றடைந்தார். அங்கு இறைவனை வழிபட்ட வர்களின் காண்பதற்கரிய செயல்களாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளாலும், அடியவர் கூறும் அனுபவ வார்த்தைகளாலும் கவரப்பட்டார். பிள்ளை யில்லை என்று வருந்திய தம்பதியர், மனைவி க்கு நீண்ட நாட்களாகப் பேய் பிடித்திருக்கிற தென்று கவலையுற்ற கணவன், பேயாடும் மகளிர், வறுமை நீங்கவில்லையே என்று கூறும் மக்கள்...... என்ற மனோநிலையில் பலரையும் அத் தலச் சூழலில் சம்பந்தர் கண்டுணர்ந்தார்.

**வெண் காட்டானென் றுள்ளாடி யுருகாதார்**
**உணர்வுடைமை யுணரோமோ**[21]

**"திருவெண் காட்டானென் றோதியவர்**
**யாது மொரு தீதிலரென் றுணருமினே**[22]

**வெண்காடு மேவிய அண்ணலை அடிதொழ**
**அல்லல் இல்லையே**[23]

என்று இறைவனின் பெருமையை நினைந்தின்புற்றார். அங்கே தாம் கண்டவற்றை யும், கேட்டவற்றையும், அனுபவித்தவற்றையும் தம்பதிகத்திலே இணைத்துப் பாடியுள்ளார்.

**பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினை**
**வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும்**
**வேயனதோள் உமைபங்கன்வெண்காட்டு முக்குளநீர்**
**தோய்வினையா ரவர் தம்மைத்தோயாவாந் தீவினையே**[24]

என்று முக்குளநீரின் மகத்துவத்தையும், அத்தல வழிபாட்டின் சிறப்பினையும் எடுத்தியம்பியிருக் கிறார்.

இன்றைய மருத்துவவியலாளர்கள் மகப் பேறின்மைக்குக் காரணங்களாக மன அழுத்தம், வேலைப்பழு, அமைதியற்ற வாழ்வு, ஓய் வின்மை என்பனவற்றைக் குறிப்பிடுகின்றனர். சுற்றுலாப் பயணங்கள் இவற்றுக்குத் தீர்வாகின்ற தென ஆலோசனையையும் வழங்குகின்றனர். இதனை அன்றே உணர்ந்திருந்தவராகச் சம்பந்தர் விளங்கக் காணலாம். இதற்கு மெய் கண்ட தேவரது பிறப்பினைச் சான்றுபடுத்தலாம்.

திருவெண்காட்டு இறைவனின் திருப் பெயராகிய சுவேதனப் பெருமான் என்ற இளமைப் பெயரையுடையவர் மெய்கண்ட தேவர். அச்சுதகளப்பாளர் இவரது தந்தை யாரா வார். அச்சுதகளப்பாளரின் குலகுருவாக விளங்கியவர் அருணந்தி சிவாச்சாரியார் என்னும் சகலாகம பண்டிதர். அச்சுத களப்பாளரு க்கு குழந்தைப் பேறின்மை என்பது மனக்குறை யாக இருந்தது. இதனைத் தன் குருவிடம் எடுத்து விளக்கினார். அவர் உடனே தம்முடைய பாரா யணத்திலுள்ள தேவாரத்தை எடுத்துக் கயிறு சார்த்திப் பார்த்த போது "பேயடையா பிரிவெய் தும்" என்ற பதிகம் கிடைக்கப் பெற்றது. இதில்,

**"பிள்ளையினோடு உள்ள நினை**
**வாயினவே வரம் பெறுவர்"**

என்றிருப்பதனை கண்ணுற்ற அருணந்தி சிவாச் சாரியார், இறைவனை நினைந்து அதிசயித்து, திருவெண்காட்டிற்குச் சென்று முக்குளநீரில் நீராடிவழிபட்டு சில காலம் அங்கேயே தங்கி யிருக்கும்படி அச்சுத களப்பாருக்கு ஆலோசனை வழங்கினார். அவ் ஆலோசனையின்படி செயற் பட்ட அச்சுதகளப்பாளருக்கு ஆண்மகவு பிறந்தது. அம்மகவே பின்னாட்களில் இந்திய மெய்யி லாளர்கள் போற்றுகின்ற மெய்கண்ட தேவராவார். 12 சூத்திரங்களால் அமைந்த சிவஞான போதம் இவரது படைப்பேயாகும்.

சம்பந்தருடைய தல யாத்தரையின் பெறு மானங்களில் ஒன்றாகவே இந்நிகழ்வினைக் கருத முடிகிறது. இவ் வகையில் சம்பந்தரின் நேரடி அவதானிப்புகளுக்கும் அதன் குறிப்புக் களை பதிகத்தின் மூலம் வெளிப்படுத்திய தன்மைக்கும், பின்னாளில் மெய்கண்ட தேவர் என்னும் முதற் சந்தானசாரியாரின் பிறப்பிற்கும், ஒரு வகையில், சைவ சித்தாந்த செல் நெறியின் வளர்ச்சிக்கும் சம்பந்தரின் திருவெண்காட்டுத் தலப்பயணமே அடிப்படையாக அமைந்திருந்தது எனக் கூறிக் கொள்ள இயலும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசமயச் சூழலிலே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியதாக ஏழு ஆண்டுகள் நீடித்திருந்த அவரின் ஐந்தாம் கட்டத் திருத்தல யாத்திரையைக் குறிப்பிடலாம். சமணர்களோடு வாதம் செய்தமை, புத்தரை வாதில் வென்றமை, திருநாவுக்கரசு நாயனாருடன் சேர்ந்து திருத் தலப் பயணங்களை முன்னெடுத்திருந்தமை, வாசி தீரக் காசு நல்கியமை, ஆலயச்சூழலை நோக்கி மக்களை அதிகளவில் ஈர்த்தமை ஆலயச் சூழலை மையமாகக் கொண்டு அற்புதங் களை நிகழ்த்தியமை, மக்களுக்கு நம்பிக்கைத் தன்மையை ஊட்டியமை, திருமறைக்காடு ஆலயத்தின் திருக்கதவு அடைக்கப் பாடியமை, சமுதாயத்தில் உள்ள மக்களிடம் உணர்வு மேலிடப் பெற்றவராக அற்புதங்களூடாக சமுதாயத் தளத்தில் காணப்பட்ட குறைகளைப் போக்கியமை என்றவாறாக அக்காலச் சைவ சமய நிலையில் மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தியிருந்தார். இத்தகைய செயற்பாடுகள் பிறரிடத்திலே சம்பந்தர் பற்றிய நல்ல பிரதி மையை உண்டு பண்ணியது. சமூகத்தில் அங்கீ காரத்தை வலுப்படுத்தியது.

பாண்டிநாட்டு யாத்திரை அப்பரது சொல் லையும் மீறியதாக அமைந்திருந்தது. இதனா லேயே அரசியலுக்கூடாகச் சமய நிலையில் மாற்றம் கண்ட பெருஞ்செயல் இடம் பெற்றது. பாண்டியன் சிவநெறியை விட்டு சமணர் வசப்பட்டான். மக்கள் பலரும் அச் சமயம் சார்ந்த னர். சிவனுறையும் கோவில்கள் பள்ளிகளா கவும், பாழிகளாகவும் மாற்றப்பட்டன. இந் நிலை யில், அரசமாதேவியாரின் அழைப்பிற்கிணங்கி, பாண்டிநாடு சென்று மன்னனை மனம் மாற்றி சைவத்தின்பால் செயற்பட வைத்ததுடன் சமணர் களுடனும் வாதங்களைப் புரிந்து சைவத்தின் இருப்பினைத் தக்க வைத்தார்.

தேவாரங்கள் ஊரக வரலாற்றினையும், ஒவ்வொரு ஊர்களிலும் அல்லது வட்டாரத்தி லும் காணப்பட்ட தொன்மங்களையும் பதிவு செய்து வைத்துள்ளது. திருஞான சம்பந்தர், யாத்திரைகளின் மூலம் தாம் சென்ற சிவத் தலங்களின் வரலாற்றினைப் பதிவு செய்யும் வகையில் பாடல்களைப் பாடியுள்ளார். அவ் வகையில் திருத்தல வர்ணனை, திருத்தலச் சிறப்பு, திருத்தல வழிபாட்டுச் சிறப்பு, அவற்றின் பயன் என்பன பாடல்களின் உட்கிடக்கைகளாக உள்ளன. இத்தகைய தொன்மங்களே பிற்பட்ட காலங்களில் விரிவான தல புராணங்கள் உருவாகிளூ சமயம், மெய்யியல், கலை மற்றும் ஒழுக்கம் ஆகிய மரபுகளை விளக்க அடிப்படை யாக விளங்கின.

பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் கோயில்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாய மாற்றங்கள் பல தமிழகத்திலே ஏற்பட்டன. அதாவது கோயில்கள் அமைப்பிலே மிகப் பெரியனவாகி நகரங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. கோயில்களை மையமாகக் கொண்டு நகரங்கள் வளர்ச்சியடைவதற்கு தேவாரமுதலிகளே காரண புருஷர்களாக அமைந்திருந்தனர். தல யாத்திரைகளும் சைவர்களின் சமய வாழ்க்கையில் ஒரு பிரதான இடத்தைப் பெறத் தொடங்கின. பின்னாளில் இத்தகைய மாற்றத்திற்கு சம்பந்தரால் மேற் கொள்ளப்பட்ட தலயாத்திரைகளும், அவரது பாடல் பதிவுகளுமே அடிப்படையாக விளங்கின எனலாம்.

இந்துக்கள் உருவாக்கிய சமய நிறுவனங் களில் பிரதான இடத்தை வகிப்பன திருக் கோயில்களாகும். இத் திருக்கோயில்களைப் போற்றித் திருஞான சம்பந்தர் பாடிய திருத்தலப் பதிகங்கள் 377 ஆகும். பாடல் பெற்ற திருத் தலங்களாகையால் அத் தலங்கள் சைவ மரபிலே மென்மேலும் சிறப்பெய்தித் திருத்தலங்கள் எனக் கொள்ளப்பட்டன. இத்தகைய சிறப்புடைய திருத்தலங்களானவை கலை வளர்க்கும் அரங்கு களாக, கலைஞர்களின் இருப்பிடங்களாக, பாடசாலைகளாக, மருத்துவ நிலையங்களாக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றங்களாக, வங்கிகளாக பக்தி மையங்க ளாக விளங்கி சைவ மரபு நீட்சியடையப் பணியாற்றின.

சம்பந்தர் தனது பதிகங்களிலே இயற்கை வளம், சுற்றுச் சூழல் என்பவற்றுக்கு முக்கியத்து வம் கொடுத்திருந்தார். இயற்கையின் எழிலிலே இறைவனைக் கண்டு அந்த எழிலையும் வாயாரப் பாடும் தமிழ் விரகர் சம்பந்தராதலின் தலங்களின் வளப்பத்தைச் சொற்சித்திரமாகத் தீட்டுகின்றார். சான்றாக சோழ நாட்டில் கும்ப கோணத்துக்கு அருகிலுள்ள திருவைகாவூர் இயற்கைக் காட்சியை,

**"தாழை இள நீர் முதலிய காய்கமுகின்**
**வீழ நீரை தாறு சிதறி**
**வழையுதிர் வீழ் கனிகள் ஊறிவயல்**
**சேறு செய்யும் வைகாவிலே"**[25]

என்று வர்ணித்திருக்கின்றமையைக் குறிப்பிட லாம்.

சைவ நாயன்மார்கள் நால்வரில் இயற்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த ஒருவராக சம்பந்தர் முதனிநிலை பெறுகின்றார். அவரது பதிகங்கள் பலவற்றில் பாடல்களின் இரண்டு அல்லது மூன்று அடிகள் இயற்கையைப் பாடுவதை அவதானிக்க முடியும். சம்பந்தரின் இவ்வாறான இயற்கை ஈடுபாட்டுக்குப் பொதுவாக அவரது இளமைப் பருவத்தின் இயற்கையை இரசிக்கும் குதூகல மனப்பாங்கையே பலரும் பொதுவாக காரணம் காட்டுவதுண்டு.[26] ஆனால் அதற்கும் மேலாக அவர் மக்களின் உள்ளங் களை நிறைவிப்பதற்கான ஒரு உளவி யல் உத்தி முறையாக இந்த வர்ணனை முறைமையைக் கொண்டிருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.[27] தாம் முதன் முதலில் ஆட்கொள்ளப் பட்ட சூழல் இயற்கை சூழ்ந்த திருத்தலமாகையால் அதனைத் தனது வாழ்நாளில் தொடர முற்பட்டிருக்கலா மெனவும் எண்ண இடமுண்டு. பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்கள் மேற்கூறிய ஊகத்தின் வழி நின்று விளக்கம் தந்துள்ளார்.

"தம் பிரதேசத்தைப் பற்றிப் பிறர் புகழத்தாம் கேட்டு மகிழ்தல் என்னும் மன நிலையையே பயன்படுத்தித் தம் காரியத்தைச் சாதிக்கச் சம்பந்தர் முயல்கிறார் போலத் தெரிகிறது. பிற்போக்கான பிரதேசங்களில் போக்குவரவு வசதிகள் குறைந்த பகுதிகளில் ஆங்காங்கு குடியிருக்கும் மக்களிடையில் பிரதேச உணர்ச்சி மிகுந்து காணப்படும். சம்பந்தர் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பிரயாணஞ் செய்தவராதலால், இவ்வாறுள்ள பிரதேசங்கள் பலவற்றைக் கண்டிருப்பார். இவ்வாறான பிரதேசங்களைக் குறித்து, உள்ளது விரித்தும், இல்லது புணர்த்தியும் அப் பிரதேசங் களைச் சேர்ந்தவர்களிடம் கூறினால் அவர்க ளால் அகம் மிக மகிழ்ந்து எப்பெரிய காரியத்தை யும் செய்ய முனைந்து நிற்றலை இன்றுங் காணலாம். பிரதேச உணர்ச்சியைப் பயன்படுத் திச் சைவசமய மறுமலர்ச்சியில் மக்களை முன்னின்று உழைக்கச் செய்யும் சம்பந்தர் இந்த முறையைக் கையாண்டிருக்கிறார் போலத் தெரிகிறது."[28]

சம்பந்தருடைய தலயாத்திரையின் தலைமைத்துவ ஆளுமை என்ற அம்சத்தை கருத்தொன்றி நோக்கும் போது பேராசிரியரின் இந்த ஊகம் பொருத்தமான ஒன்றாகவே தெரிகிறது.

**முடிவுரை**

திருஞான சம்பந்தர் கண்ணுற்ற திருத் தலக்காட்சிகள் பலவாகும். இவ்வாறு நேரடி யாகக் கண்ணுற்று அனுபவம் பெறுவதற்கு அவருக்கு தல யாத்திரைகளே அடிப்படையாக அமையப் பெற்றிருந்தது. தமிழ் நாட்டில் தேவார காலத்திற்கு முன்பே சிவாலயங்கள் இருந்து வந்தன. அடியார்கள் அவ்வவ் ஊர்களில் இருந்து ஆலய வழிபாடு செய்து வந்தார்கள். ஆரம்ப காலம் முதற்கொண்டே தமிழர்களுக்கு கடவுளுணர்வும், கடவுளின் மீது அன்புணர்வும் இருந்து வருகின்றன. இவை தேவார காலத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் அதிக முனைப்புடன் வீறுகொண்டெழுந்தன. இதற்குச் சம்பந்தர் உள்ளிட்ட தேவார முதலி களின் தல மையச் செயற்பாடுகள் உந்து சக்தி யாக அமைந்தன. சம்பந்தரின் திருத்தல யாத்திரைகள் சீர்காழியை மையப்படுத்தியதா கவும், பல்லிடங்களை நோக்கியதாகவும் விரிவு பெற்றிருந்தது. சம்பந்தரின் இத்தகைய திட்டப் பாங்கான அணுகுமுறையும், பிரசார முறைமை யும் ஆலய வழிபாட்டினூடாக பல மாற்றங்களை யும், புது வடிவிலான நிகழ்ச்சிகளையும் வழங்கி யிருந்தன.

திருஞான சம்பந்தர் தல யாத்திரைகள் மூலமாக சிவத் தலங்கள் அனைத்தையும் கண்டு சிவானுபவம் பெற்ற நிலையில் அவற்றைத் தம் திருப்பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளார். அவர் பாடியருளியனவாக இன்று நமக்குக் கிடைக்கும் திருப்பதிகங்களோடு தொடர்புடைய தலங்கள் அனைத்தையும் நாம், சோழ நாட்டில் காவிரிக்கு வட கரையிலுள்ள தலங்கள், காவிரி க்கு தென் கரையிலுள்ள தலங்கள், ஈழநாட்டுத் தலங்கள், பாண்டி நாட்டுத் தலங்கள், நடு நாட்டுத் தலங்கள், தொண்டை நாட்டுத் தலங்கள், துளுவ நாட்டுத் தலங்கள், வட நாட்டுத் தலங்கள் என வகைப்படுத்தி வரையறை செய்து நோக்க முடிகிறது.[29]

ஒரு தலத்தைப் பற்றிக் கூறும் போது அத் தலத்தின் இயல்பான வரலாறு, ஆலயச் சிறப்பு, தலம் தொடர்பான புராண நிகழ்ச்சிகள், அத் தலத்தில் இறைவன் ஏதோ ஒரு கோலம் தாங்கி அடியவரை ஆட்கொண்டருளிய நிகழ்ச்சி, காலத்தில் நிகழ்ந்த அற்புதச் செயல்கள், தீர்த்தச் சிறப்பு, தலவிருட்ச மகிமை, ஆலயத்தில் வழி வழியாக இடம் பெற்று வரும் சிறப்பு விழாக்கள், வழிபாடுகள் என இவையனைத்தையும் சம்பந் தர் பதிகங்களில் தெளிவாகக் காணமுடிகின் றன.[30] இவ்வுத்திகளின் மூலம் ஒரு தலத்தின் மீது மக்களுக்கு அதீத ஈடுபாட்டினை ஏற்படுத்திய ஒருவராக சம்பந்தர் திகழ்கிறார்.

ஒரு சுற்றுலாவின் போது இயற்கையின் அதிசயங்களைப் பார்த்து இரசிக்கும் மனோ நிலை நம்மில் பலருக்குண்டு. மலைகள், ஆறுகள், மலர்கள், அருவிகள், வான் தொடும் சிகரங்கள், விலங்கினங்கள், பட்சிகள், மரங்கள், புல்லினங்கள் என்றவாறாக இயற்கையிறந்த அதிசயங்களைக் கண்டு வியக்கின்றோம். இயற்கையின் இத்தகைய அம்சங்களை சம்பந்தர் தனது பாடல்களிலே பொருத்தமுறக் கையாண்டுள்ளார். அத்தகைய வெளிப்படுத்தல் களானவை பிறர் ஒவ்வொரு தலங்களுக்குச் செல்வதற்கும் தூண்டுதலாக அமைந்து விடு கின்றன. பிற்காலத்தவர் சுற்றுலா மையங்க ளாகத் தலங்களைத் தெரிவு செய்வதற்கும் அவை முன்னோடிச் சிந்தனைகளாக அமைந் துள்ளன.

ஆகவே, தமிழர் மரபில் சங்க காலம் தொடங்கிச் சம்பந்தருக்கு முன்பு வரை இப்படி ஊர் ஊராகச் சென்று இசை பாடி நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய நிகழ்ச்சி நடை பெறவில்லை எனத் துணிந்து கூறிக்கொள்ள இயலும். சம்பந்தரே இந் நிகழ்ச்சியை தூர நோக்குச் சிந்தனையுடன் முதல் முறையாக முன்னெடுத்தவர். எனவும் கொள்ள முடியும். இதன் பின்பே சைவ ஆலயங்கள் மக்களின் ஈர்ப்பு மையங்களாக விளங்கத் தொடங்கின. ஆலய வழிபாட்டு முறைமைகள் விரிவு பெற்றன. இந்து நுண்கலைக் கூறுகள் ஆலயங்களுடாக வளர்ச்சி கண்டன. திருக்கோயில்களை ஆதார மாகக் கொண்டு நகரங்கள் வளர்ச்சி பெற்றன. திருக்கோயிலின் கட்டிட அமைப்புக்களானவை குகைக் கோயில், ரதக் கோயில்கள், கற்றளிக் கோயில்கள், என்ற வடிவங்களில் பரிமாண வளர்ச்சி பெற்று விளங்கின. பின் நாட்களில் கோயில்களை அடிப்படையாகக் கொண்டு சமுதாய மாற்றங்கள் பலவும் தமிழகத்தில் ஏற்பட்டன. தல யாத்திரைகளும் சைவர்களின் வாழ்வியலில் பிரதான இடத்தைப் பெறத் தொடங்கின. சமய உணர்வினையும், அறிவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் மக்கள் பெறுவதற்கு கோயில்களே மூலங்களாகவும் அமைந்துள்ளன. இவ்வாறு சம்பந்தர் பல்லவர் கால புறச் சமயச் சூழலிலிருந்து மேற்கொண்டிருந்த திருத்தல யாத்திரைகளானவை அக்கால மற்றும் பிற்கால சைவசமய மாற்றங்களுக்கு உறுதுணையாக அமைந்து விளங்கியிருக்கின்றதெனலாம்.

**அடிக்குறிப்புக்கள்**

1. பெரிய புராணம் – 1904
2. வில்கின்ஸ்.ஜே.டபிள்யூ., தமிழில் ச.சரவணன், (2009), நவீன இந்துத்துவம், சந்தியா பதிப்பகம், சென்னை. ப.88.
3. வேங்கட்ராமன்.சு.,(2007), இந்திய இலக்கியச் சிற்பிகள் திருஞானசம்பந்தர், சாகித்ய அகாதெமி, ப.11.
4. இரத்தின சபாபதி.வை.டாக்டர், (1982) திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு - முதற் தொகுதி, டாக்டர்.எஸ்., இராதாகிருஷ்ணன் மெய்யுணர்வு மேல்நிலைக்கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம். ப.ஒ.
5. சமூக விஞ்ஞானம், (ஏப்ரல் – மே – ஜூன் 2012) காலாண்டு ஆய்விதழ், இதழ் – 35, ஜானி ஜான் கான் சாலை இராயப் பேட்டை, சென்னை. ப.13.
6. திருஞானசம்பந்தர் தேவாரம், 23.1
7. சிங்கார வேலன் சொ.(1969) திருஞான சம்பந்தர் வரலாற்றாராய்ச்சியும், தேவாரத் திறனாய்வும், கழக வெளியீடு. ப.7.
8. மே.கு.நூ – ப.8.
9. மே.கு.நூ – ப.11.
10. மே.கு.நூ – பக்.13 – 15.
11. ஞானசம்பந்தன்.அ.ச., (1999), பெரியபுராணம் ஓர் ஆய்வு, கங்கை புத்தக நிலையம், சென்னை. ப.177.
12. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.1
13. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.2
14. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.3
15. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.4
16. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.6
17. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.7
18. திருஞானசம்பந்தர் தேவாரம், 220.9
19. சிங்காரவேலன்.சொ., மு.கு.நூ. ப.8.
20. வேங்கட்ராமன்.சு. மு.கு.நூ. ப.19.
21. திருஞானசம்பந்தர் தேவாரம், 184.9
22. திருஞானசம்பந்தர் தேவாரம், 184.10
23. திருஞானசம்பந்தர் தேவாரம், 273.6
24. திருஞானசம்பந்தர் தேவாரம், 184.2
25. திருஞானசம்பந்தர் தேவாரம், 329.1
26. சுப்பிரமணியன்.நா., (2002), நால்வர் வாழ்வும் வாக்கும், கலைஞன் பதிப்பகம், சென்னை, ப.102.
27. மே.கு.நூ – ப.102.
28. வேலுப்பிள்ளை.டாக்டர்.ஆ., (1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், மூன்றாம் பதிப்பு, பாரிபுத்தகப் பண்ணை, சென்னை. பக்.108 – 109.
29. சோமசுந்தரம். P.S., (2006),சம்பந்தர் காட்டும் திருத்தலக் காட்சிகள், எர்.கே.எம்.பப்ளிகேஷன், தியாகராயநகர், சென்னை – ப.14.
30. மே.கு.நூ – ப.14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு இனத்தினுடைய பாரம்பரியங்களில் மொழி மிகவும் பிரதான அடத்தைப் பெறுகிறது. இலங்கையில் வாழும் தமிழ் சமூகத்தில் இன்று பாரம்பரியங்கள் கை நழுவிச் செல்கிறன.இதனை நாம் விழிப்போடு தேடிக் காக்க வேண்டீயள்ளது. எமது மொழி எமது சொத்து, எமது வாழ்வின் மனித அடையாளம். எனவே மொழி பற்றிய அடிப்படைகளையும் பாரம்பரியங்களையும் அதன் விழுமியங்களையும் பேணுவது நிலைத்திருத்தலுக்காக போராடும் தேவைக்கு ஒப்பானதாக இருக்கிறது.

போராட்ட காலத்தில் தழிழ்மொழி ஒரு வகையில் படிமலர்ச்சியடைந்து இருக்கிறது என்பது உண்மை. எனினும் அது தேய்வு அடைந்து அல்லது அழிந்து போன நிலைமைகளை நாம் நோக்காது உள்ளமை அது இன்றைய மானுடனது தேவையை பூர்த்தி செய்ய வக்கற்று இருக் கின்றமை என்பன ஒரு வாழும் மொழிக்குரிமைக்காரர்களாகிய எமது கண்ணில் கருத்தில் பட வேண்டிய ஒன்று இதனை விரிவாகப் பார்ப்போம். ஆங்கிலமொழிலை இக் கட்டுரைக்கு உதவிக்காக பயன்படுத்த வேண்டியுள்ளது.

ஒரு மொழி நடைமுறையில் உள்ள எமது தேவைகளைப்புர்த்தி செய்யத்தவறின் அது dead langnage எனவாகி விடுகிறது. சமஸ்கிருதம், இலத்தி, கிறீக் போன்றன இத்தகு செத்த மொழிகளாகி விட்டன.

உலகிலுள்ள (6000) ஆறாயிரம் மொழிகளுள் செம்மொழி என்ற மகிமைக்குரிய மொழியை நாம் பேணுவது, காப்பது, வளர்ப்பது என்ற தளத்தில் செயற்படுவது வினைத்திறனுடையதாக இருக்கிறதா என தமிழ் சமுதாயம் ஒருகணம் மறு பரிசீலனை செய்யவேண்டி உள்ளது. இதனை கல்விப்புலத்தை அடிப்படையாக வைத்து நோக்குவோம்.

ப...ட...ம்.... = படம்ய.... னய.... ஆஅ....

கா...லை.... = காலை மயய .......டயை

வீ...டு............= வீடு எநந.....னர......

பிள்ளைக்கு மொழியின் அடிப்படைகளுள் ஒன்றான எழுத்துக்கள் துண்டங்களாக அறிமுகப் படுத் தப் படுகின் றன. ஓலிகளாக phoneme fshf.

பிஜாஜே சொல்வது போல் முழுமையில் இருந்து துண்டங்குளுக்குப்பின் துண்டங்களிலிருந்து முழுமைக்கு என்ற கோட்பாடு பின்பற்றப்படுவதாக தெரியவில்லை. இதனால் மொழி மூலத்தின் முழுத் தோற்றப்பாட்டையும் பிள்ளைகள் அறியாதிருக்கிறார்கள். பின் இடைநிலை Secondary வகுப்புக்களிலாவது அது பற்றி பாடத்திட்டம் கருத்தில் எடுக்கவில்லை என்பது இங்கு வேதனை தரும் ஒர் விடயமாகும். இதன் மூலம் வாழ்க்கைக்கு உதவாத மொழி அறிவை கற்றுக்கொண்டுள்ள மாந்தர்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளாந்தம் கல்விப்புலம் தோற்று விக்கிறது. அறிஞர்கள் முதல் குற்றவாளிகள் ஆசிரியர்கள் இரண்டாவது குற்றவாளிகள் மாணாக்கர் மூன்றாவது குற்றவாளிகள்.

பிள்ளை ஒரு விடயத்தை தெரிந்திருக்க ஆசிரியர் அதனை அறிமுக்கப்படுத்தி இருக்க வேண்டும். ஆசிரியன் ஒரு விடயப்பரப்பைக் கற்பிக்க மொழிக்கலைத்திட்ட அறிஞர்கள் அதனைப் பரிந்துரை செய்து பாடத்திட்டத்தில் அதனை சேர்த்திருக்கவேண்டும். தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தில் நாம் குறிப்பிடும் விடயத்தை உட்படுத்தி இருப்பினும் அதனை மாணவர்களுக்கு புகுத்த நடைமுறைப் படுத்துவோர் அக்கறை எடுக்கப்படவில்லை.

ஒரு இனத்தினுடைய இவ் அடையாளங் களில் முதன்மையானதாக கருதப்படும் மொழி அழிந்து செல்வதற்கு பாடசாலையும் காரணமாகி விடுகிறது. ஒரு விடயம் நடைமுறையில் பயிலப் படாவிடின் அது புதைபொருள் ஆராய்ச்சிக்குரிய விடயமாகி விடுகிறது இயல்பே. விடயம் இது தான்.

இன்று எமது கல்விப்புலத்தில் க.பொ.த உயர்தரம் கற்றுப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை பரீட்ச்சித்துப்பார்த்தபோது 4% மாணவர்கள் மட்டுமே குறிப்பிட்ட விடயத்தை தெரிந்தவர்களாக இருப்பதைக் காணமுடிந்தது.

50 பரீட்சார்த்திகளில் இப்பரி சோதனை நடத்தப்பட்டது, வினா பின்வருமாறு வழங்கப்பட்டது. "உங்கள் கைகளில் தரப்பட்டு ள்ள வெற்றுத்தாளில் தமிழ் நெடுங் கணக்கை எழுதுங்கள்." தமிழ் நெடுங்கணக்கை இரண்டு மாணவர்கள் மாத்திரமே நேர்த்தியாக சரியாக எழுதி ஒப்படைத்தனர். மற்றவர்கள் உயிர் எழுத்து, மெய்எழுத்து எத்தனை எனவும் நெட் டொலி , குற்றொலி பற்றியும் இதர இலக்கண விடயங்கள் பற்றி அலம்பி இருந்தார்கள்.

இது ஒரு பயங்கரமான சமிக்ஞை யாகவே பார்க்கப்பட வேண்டியதாயிற்று. இது ஒரு மொழிப் பாரம்பரியத்தின் அறுந்த நிலை. (Disconnected state of the langnaage from the heritage) எனக் குறிப்பிடலாம். தனது நாளாந்த வாழ்க்கைக்கு பயன்படுகின்ற எழுத்தின் அமைப்பை, எழுத்துத் தொகுதியை அறிந்திருக் காத ஒரு மாணவன் ஏன் சங்க கால மக்கள் வாழ்வை அறிய வேண்டும். சிலப்பதிகாரத்தின் கற்பனா கீர்த்தியை அறிய வேண்டும். திருக் குறளின் காலத்தைத் தேட வேண்டும். தமிழ் இலக்கியத்தில் உள்ள செய்யுள் முறையை, செய்யுள் தகவலை, செய்யுள் அமைப்பை ஏன் இன்னோரன்ன விடயங்களில் அக்கறை கொள்ள வேண்டும?.

அவருக்கு தமிழ் ஆளுமை பட்டம் ஏன்? அங்கீகாரம் ஏன்? தமிழ் நெடுங்கணக்கை பட்டப் பாடநெறியில் தான் கற்பிக்க வேண்டுமா? அப் பாடநெறியில் பல்கலைக்களகங்கள் இதனைச் சேர்த்துள்ளனவா? எனவே இதில் மாணவர்கள் எவரையும் குற்றம் சாட்டுவது அர்த்தமாகாது. பானையில் அருந்தால் தானே அகப்பையில் வரும் பரிதாபம் அந்த மாணவர் செல்வங்கள் அவர்களுக்கு இந்த 13 ஆண்டுகளில் எவரும் அரிவரியை போதிக்கவில்லை . இது பாடசாலை யிலன் பொறுப்பு என்பது மேலும் வலியுறுத்த வேண்டாம்.

இது போலவே மொழியின் அதிக அழகியல் பாங்கு. ஒரு அழகான பாடலைக் கேட்டுரசித்தல் அதனனை நுணுகி அனுபவித்தல், அதை நுணுகி பகுப்பாய்வு செய்தல் மொழிக் கலையின் இத்தகைய அழகியலின் பங்கு பற்றி சீர்துாக்கி நோக்குதல் என்பனவும் ஆகும். இது, தான் பெற்ற அறிவால், திறனால் மொழிக்கு தான் என்ன செய்யமுடியும் என மாணவனை சிந்திக்க வைப்பதும் அவனை செயற்பட வைப்பதுமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய மொழிக்கல்வி கொடுமுடி களின் பணி என்பது தட்டிக்களிக்கமுடியாது. ஆறுமுகநாவலர் மேலைத்தேய மொழி முறை களிலிருந்து பெற்ற அனுபவத்தைக் கொண்டு தழிழ் மொழியை செழுமைப்படுத்தியுள்ளார். இற்றைப்படுத்தியுள்ளார். இன்று தழிழில் பயிலும் மொழிக் குறியீடுகள் நிறுத்தற் குறி, வியப்புக்குறி, வினாக்குறி முதலியன இவரால் ஆங்கிலத்தில் இருந்து தழுவப்பட்டவை என்பர். இவை தழிழ்மொழி அடுத்த பரிமாணத்திற்கு நகர்த்தப்பட உதவின. தழிழில் 247 குறியீடுகள் எழுத்து என்ற பெயரில் உள்ளன. இவை இன்றுள்ள மனிதர்களின் மொழித்தேவையை பூர்த்தி செய்யமுடியாது தவிக்கின்றன.

வடமொழி எழுத்துக்களை கலந்து எழுதுகிறோம். இற்றைக்கு 500-600 ஆண்டு கள் பழமை மட்டும் கொண்ட சிங்களமொழியில் ஒலியன்கள் phonemes தேவைக்கேற்ப உரு வாக்கப்படுவதை கண்கூடாக காண்கின்றோம்.

ஒரு மொழி சூழலின் தேவையில் தான் தோன்ற முடியும். எல்லா மொழிகளும் அவ் வாறே தோன்றின. மொழி மனிதன் தோன்றும் முன் தோன்றி மனிதனுக்காக காத்திருக்க வில்லை அல்லவா . இன்று சிலரிடம் மொழியில் தீண்டாமை என்ற வெறித்தனம் கவிந்துள்ளது தூய தழிழ் என்பது எது என்று நிரூபிக்க முடி யாதுள்ளவரை மொழியின் கூட்டுக்கள் (திசைச் சொற்கள், தற்சமம், தற்வபம்) போன்ற அணுகு முறைகளும் தமிழை வளர்க்கும் அல்லவா?

ஓர் உண்மை எமது கண்ணிலும் கருத்திலும் உணரப்பட வேண்டும். அதாவது முந்தைய மனிதனின் தேவை போன்றல்லாது இன்றைய மனிதனின் தேவை பல மடங்கு அதிகரித்து விட்டது. இதற்கு இணையாக எமது மொழியை நகர்த்த பின்னிற்ப்போமானால் மொழி செத்துவிடும். மொழியில் வெறித்தனமும் தீண்டாமையும் விடுத்து பிற மொழி அனுபவங் களை எமதாக்கிகொள்ளுதலும் புதுச்சொற்கள் கொண்டுவரப்படுவதை ஏற்பதும் இன்று எமது தவிர்க்க முடியாத மாற்றமாக அமைய வேண்டும். இதுவரை தமிழறிஞர்கள் ஏன் இதனைச் செய்யவில்லை என வேதனையாகவுள்ளது. சில முக்கிய விடயங்களை மட்டும் நோக்குவோம்.

மொழி பிரயோகத்தின் போது குறிப் பாக பெயர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் ஒருவருடைய பெயரின் முதலெழுத்தை ஒலியாக உச்சரிப்பது அபாண்டம். ஏனெனில் ஒரு எழுத்து என்ற குறியீட்டுக்கு பெயர் உள்ளது. உதாரணமாக A இது ஏ அதுபோல மு இது மூணா மு...mu என்ற ஒலியல்ல. மு. வரதராசாவை மூணா வரதராசா எனத் தான் உச்சரிக்க வேண்டும். MU வரதராசா அல்ல. எனவே தழிழ் மொழியின் பாரம்பரியங்கள் உடையாமலும், மூடமை துறந்தும் கையாளுதல் அவசியம் அல்லவா?

முன்பள்ளி தொடக்க வகுப்புக்களில் தான் எழுத்துக்களை ஒலியாக கற்ப்பிக்கிறார் கள். சிறார்கள் இலகுவாக பற்றிக்கொள்வதற் காக. பின்னர் பாடசாலைகளில் இதனை நிவர்த்தியாக்கி எழுத்துக்களின் பெயர்களை புகட்டுதல் அவசியமாகிறது. மூன்றுசில்லு வண்டியை வளர்ந்தபின் பயன்படுத்துவதில்லை அல்லவா.

இன்று பிரதான வானொலிகளிலும் பிராந்திய, மற்றும் மாற்று ஒலிபரப்புகளிலும் ஒலிகள் எழுத்தின் பெயர்களுக்குப்பதிலாக உச் சரிக்கப்படுகின்றன என்பது மிகவும் வேதனை யானது. அதற்கு வானனொலிகளின் கண்ணிய மற்ற வியாபார ஒலிபரப்பாளர்களே காரணம் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல" என்பதோடு தழிழின் வரன்முறை களை ஓரளவு பேணி 21ம் நூற்றாண்டுக்கும் பின்னரும் எமது மொழி பொருத்தமுடையதாக வளர்த்தல். வேண்டுமே. ஏறத்தாழ 20 ஆண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன் தழிழ் எழுத்துக்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டது. அது கணனி மய உலகில் தன்னை இசைவுபடுத்திக்கொண்டது.

ஆனால் ஆங்கிலத்தில் Ba, Pa, Ka, Ga, Sha, Dee, Tee, Ha முதலிய அதிர்வொலி, அதிரா ஒலிகளை ஏற்படுத்தும் குறியீடுகளை அறிஞர்கள் தழிழுக்கு கொண்டுவர வேண்டும். இதனை Voiced , Viceless என்பர்.

தழிழை கன்னியாக வைத்திருக்க ஆசைப் பட்டால் கன்னித்தழிழாயிருந்து, குமரி முற்றிக் குரங்காகிவிடும். ஆங்கிலத்தில் நான்கு லட்சம் சொற்கள் இருக்கிறது என்பது வியக்க வேண்டியதல்ல ஏனெனில் ஆங்கில அறிஞர்களிடம் மொழித்தீண்டாமை இல்லை. ஏனைய மொழிகளிடமிருந்து பயன்பெறத் தயங்குவதுமில்லை தமது மொழியில் வேறொன்றும் கலந்துவிடக்கூடாதென்கிற பதகளிப்புமில்லை.

வெறும் தழிழ், தழிழ் என்று கோசமிடுவோர் தமது கருத்துக்கள் எதிர்காலத்தில் தழிழை நிர்க்கதியாக்கிவிடும். எனவுணர்ந்து கொள்ளவில்லை. எமது கண்ணுக்கு முன் மிக அழகாக, மிடுக்கோடு இளைய சிங்களமொழி செழுமையாக வளர்ந்து நவீன மனித விஞ்ஞான பொருளாதார கலாச்சார தேவைகளை நிறைவு செய்கிறது என்பதை நாம் வியப்போடு பார்க்க வேண்டியுள்ளது. தனித்தழிழ் பற்றிய கோசக்காரர்கள் பிற்போக்கான சக்திகள். தழிழை வளர்க்கப்போவதில்லை. உலக தரத்திற்கு இலக்கியல் வாழ்வுக்கு அமைய மொழியை வியாபிக்க இடையூறானவர்களே. மொழி மனிதருக்குப்பயன்பட வேண்டும்.

ஆங்கிலத்தைக் கலந்து மொழிப் பாவனை செய்வது தான் பிழையே ஒழிய ஆங்கிலத்தை எமது வாழ்வுத்தளத்தில் பிரயோகிக்கக்கூடாது என கூச்சலிடுவது முட்டாள் தனம். ஆங்கிலத்தை மொழிப்பயன்பாட்டு வேளையில் துணைக்கு அவசியம் ஏற்படும் போது பயன்படுத்தப்படுவது வழுவல்ல. ஏனெனில் உலகம் பலகலாசாரத்தின் கலவையே. Code mixing or Code Switching என ஆங்கில மொழி பெயர்பாலர்கள் கலந்து பேசுவதை குறிப்பிடுகின்றனர் இன்றையசமூகத்தில் அது தேவையாகவேயுள்ளது.

எமது மொழியின் தேவையை பூர்த்தி செய்து வருகின்ற கிரந்த எழுத்துக்களுக்கு ஈடாக புதிய குறியீடுகளை (தமிழ் பாரம்பரியத்தைத் தழுவி) உருவாக்கவேண்டும். தமிழில் 247 எழுத்தென தொல்காப்பியர் முதல் நன்நூலார் வரை குறிப்பிட்டதனை மாற்றக் கூடாதென நிற்பதும், 2000ஆண்டு பழைய நிலப்பிரபுத்துவ சமூகத்தின் தேவைக்கான மொழியின் அளவோடு நின்று நவீன 21ம் நூற்றாண்டின் வாழ்வுக்கான மொழித் தேவையை அது நிறைவு செய்யாதிருப்பதும் சரியோ? என ஒரு நொடி சிந்திக்க வேண்டியுள்ளது.

செய்யுட்காலத்து தமிழ் இன்றைய தமிழாக உரைநடை முறைமை அதிலும் கணணி உலக வலைப்பின்னலுக்கு ஏற்ற தமிழாக நாம் நகர்த்த வேண்டும். கன்னித்தழிழ்...... தொடக் கூடாது எனின் பிறமொழிகளில் தொங்க வேண்டிவரும் உதாரணமாக எமது பேச்சு வழக்கில் "ஒக்கமே" என சிலர் முழுவதும் எனக் கருத்துப்படக் கதைப்பதை காண்கின்றோம். இது சிங்களத்தில் இரவல் வாங்கிய சொல் ஏன் இது புகுந்ததெனில் தமிழில் "முழுதும்" என்ற உருபன் அந்த மனிதனுடைய உணர்வுக்குரிய ஒலி அமைப்பாக இடம் பிடிக்கவில்லை என்பதே உண்மை. இவ்வாறே எமது சில அறிஞர்களது சொற்களஞ்சியங்களும் சரியாக தமிழோடான கருத்தை உருவாக்காத சொற்களை ஆக்கியுள்ளமை அவை பயன்படாதள்ளமையும் குறிப்பிடத்தக்கதே. கல்விப்புலத்தில் ஆக்கப்பட்ட சொற்களை குறிப்பிட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜ்,ஹ்,ஸ்,க்ஷ் எமது மொழியின் பிரயோகத்துக்கு அடிக்கடி உதவும் கிரந்த மெய்கள் ஆனால் இவை உதிர்க்கும் ஒலி நுண்மைக்கு ஏற்ப ஏன் தமிழ் தழுவிய குறியீடுகளை நாம் அறிமுகப் படுத்தக் கூடாது.

நன்னூலை இன்றும் கட்டிக்காப்பதோ, தொல்காப்பியத்தை வரம்பு மீறாமல் பேணுவதோ எமது இன்றைய மானுடத்தின் மொழித்தேவையை பூர்த்தி செய்யாது. பழைய இலக்கணச் சிந்தனை முறைமைகளை கையாள வேண்டுமா. கி.பி.12,13ம் நூற்றாண்டில் இயற்றப் பெற்ற நன்னூலை வைத்து மொழிபயன் பாட்டை பூரணமாக அடையமுடியாது. மேலும் ஆங்கிலதினும் Grammarian View இலிருந்து ஆங்கில மொழி Linguists View ஆக மாறி விட்டது. பழைய ஆங்கில இலக்கண நூல்களில் சில வழக்குக்கொவ்வாதவையாக போயின.

தமிழ் இலக்கண மரபு பெரும்பாலும் சொல்லிணக்கண மரபேயாகும், சொற்களுக்கி டையே உள்ள வாக்கிய உறவுகள் பற்றிய செய்திகள் தமிழ் இலக்கண நூல்களில் அரி தாகவே காணப்படுகின்றன வாக்கிய அமிசங் களும் சொல்லிலக்கண அடிப்படையிலேயே விளக்கப்படுகின்றன. இதனால் தமிழ் இலக்கணம் கற்கும் மாணவனுக்குச் சொற்களுக் கிடையே உள்ள வாக்கிய உறவுகள் பற்றிய தெளிவு கிடைப்பதில்லை மொழிப்பயன்பாட் டில் வாக்கியம் ஒரு அடிப்படை அலகாகும். செம் மையாக வாக்கியங்களைப் பயன்படுத்த முடியா விட்டால் மொழி மூலமான தொடர்பாடல் ஆற்றலுடன் அமையாது. வாக்கிய அமைப்பு பற்றிய பயிற்சி இன்மையால் நன்கு சொல்லிணக் கணம் பயின்ற மாணவர்கள் கூடப் பிழையின்றி வாக்கியம் எழுத முடியாதவர்களாக உள்ளனர்." எனக் குறிப்பிடும் பேராசிரியர் எம்.ஏ.நுகுமான் அவர்களின் கருத்துக்கள் நோக்கற்பாலது.

"மொழியின் பிரதான பயன்பாடு தொடர்பாடல் ஊடகமாக்கினும் அதன் பாரம் பரியம் மொழியின் பிறிதொரு பயன்பாடாக இன அடையாளம், அதற்கு அப்பாலும் சில வகிபங்குகளை பெற்று விட்டது. அவ்வாறாக சிந்தனை ஊடகமாக விழுமியங்களின் தளமாக விளங்கும் மொழி நாளாந்தம் செழுமைப்படுத் தப்பட வேண்டும். தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் தமிழ் அதிகமாக செயற்படினும் இரு நிலத் திணிவுகளிலும் வாழ்வோர் இம் மொழியை இற்றைப்படுத்தும் வேகம் அக்கறை ஒரு நோக்க மானதானதாக கருதப்படுகின்றது."

இன்று பிற நாட்டின் பெயர்களை இடங் களை, கண்டுபிப்புக்களை, (பெயர், வினை) சரியாக உச்சரிக்க எமது மொழி அகலப்பட வில்லை. அதனால் சிலவற்றை கொச்சையாக, அன்றேல் வேறு விதமாக உச்சரிக்கின்றோம், எழுதுகின்றோம் ஆனால் திராவிட மொழி களிலே மூத்த மொழியென பெருமையடைகி றோம். உயர்ந்த இலக்கியம் உண்டென்கிறோம். பிற மொழி எழுத்துக்களை இரவல் வாங்கக் கூடாது. ஏன்ற நிலையால் எமக்கு நெருக்கடிகள் வருகின்றன உதாரணமாக ஆசிரியர் ஐவ்வர் குறிப்பது போல ஹரி — அரி கரி என

**ஹட்லர் —கிட்லர் இட்லர் என**

**ஹர்த்தால் – கர்த்தால் என**

**ஜிம்மிகாட்டர்– கிம்மி காட்டர்ஃ சிம்மி காட்டர் என**

**முஹம்மத் அஜ்மீர் அஸ்லம் முஹம்மத் அச்சீர் அசலம்**

எனத்தான் தமிழிலுள்ள 30அடிப்படை ஒலிக்கேற்ப எழுதலாம். எனவும்.இருக்கிறோம் இது எவ்வளவு சிரிப்பாக இருக்கும்.

ராமன் —இராம ஜலம் – சலம் ஜடம் – சடம் ருத்திரன் —உருத்திரன அஸ்வினி —அச்சுவினி லக்ஸ்மி —இலக்குமி ஹோமர் —ஓமர் கஸ்தூரி—கத்தூரி

இதுவும் இன்றைய எமது மொழியின் பரட்டை நிலவரத்தை எடுத்து காட்டுகின்றது. ஏதாவது ஒரு பெயரை எமது மொழி அடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் தான் கூப்பிடப் போகின்றேன் என அடம் பிடிப்பது அவரது பெயரை இழிவுபடுத்துவ தாகும். பேராசிரியர் சிவசேகரம் ஓர் மூத்த தமிழ்,ஆங்கிலம் புலமையாளர் அவர் மொழி பற்றி பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"கணித விஞ்ஞானக் குறியீடுகளின் இலக்கணம் தமிழ் இலக்கணத்தினின்று வேறு பட்ட ஒன்று அதைத் தமிழ் மூலம் விஞ்ஞானம் கற்பிக்கும் நூல்களில் தாராளமாக உலாவ விடுகிறோம். அது பற்றி அறிஞர்கள் கவலைப் படுவதாகத் தெரியவில்லை Shakespeare ஐ மட்டும் சேக்ஷ்க்ஸ்பியர் என்று எழுதினால் புனிதத்துவம் பற்றி கதைப்பவர்கள் அதனை செகப்பிரியர் என்பர் Dudly – இடட்டிலி Stamp – தாம்பு King George– யோச்சு மன்ன Oedipus– இடிப்பசு என எழுத வற்புறுத்துவர் இதனை நவீன தமிழ் மாணாக்கர்கள் அறிஞர்கள் மனங் கொள்வதோடு தமிழை இற்றைப்படுத்த முயல வேண்டும்."

விடுதலைப் போராட்ட இலக்கியங் களில் குறிப்பாக கவிதைகளில் மொழி மிகவும் செல்வாக்கைப் பெற்றதால் புதிய சொற்கள் ,உணர்வுகளை புலப்படுத்த பயன்னட்டன. தமிழ் மொழிக்கு அதிகப் படியான சொற் களஞ்சியம் அமைந்துள்ளது. இதனை ஏற்பதோடு தமிழ் மொழியை ஆக்கிரமித்துள்ள இலக்கணக்கட்டுக் களை அறுத்துக் கொண்டும் புதிய குறியீடுகளை ஊடகங்களில் அறிமுகப்படுத்த நாம் முனைய வேண்டும் அதுவும் ஒரு அறிஞர் சபை அதனை அங்கிகரீத்து புளக்கத்திற்கு விடுவது விளை திறன் உடையதாக அமையும்.

ங வரிசையின் ஞ வரிசையின் ந வரி சையின் எழுத்துக்களில் எத்தனை எழுத்துக்கள் பயன் படுகின்றது. நாம் புதிய எழுத்துக்களை உருவாக்கி புதிய இலக்கணத்தையும் உலகில் உள்ள எந்த ஒலியையும் உச்சரிக்கக்கூடிய குறியீடுகளை (எழுத்து) உருவாக்க திட சங் கற்பம் கொள்வது 21 ம் நூற்றாண்டில் தமிழை இற்றைப்படுத்தும் பெரும் பணியாக அமையும். ஆங்கிலத்தில் உள்ளது போல் ஆறுமுக நாவலர் கறியீடுகளை தமிழுக்கு கொண்டு வந்து இற்றைப்படுத்தினார். Bilabial plosive-f தமிழில் ஏன் வரக் கூடாது ப என்ற எழுத்து pa வா ba வா க என்பது ka வா ga வா என எமக்கு பிரச்சி னையாகவுள்ளது பின்வருவது பேராசிரியர் நுகுமான் அவர்களின் கூற்று

"ஐ உருபு 6 பொரளில் மட்டும்தான் வரும் என பவணந்திமுனிவரும் பின் ஆறுமுக நாவலரும் சொல்லிச்சென்றனர் அக்கல் அழித்தல் அடைதல நீக்கல் ஒத்தல் உடைமை அகியன வினையின் பொருளன்றி வேற்றுமை யின் பொருளல்ல என்பர் அவ்வாறு எனின் தலையைச் சொறிந்தான் கன்னத்தைக் கிள்ளி னான் இவற்றில் சொறிதல்ப் பொருள் கிள்ளல்ப் பொருள் என விபரிக்க வேண்டியிருக்கும்" என்கிறார் எனவே இலக்கணத்திலும் குறியீடு களிலும் சொற்களஞ்சியத்திலும் வாக்கியங் களிலும் தமிழை இற்றைப்படுத்தவேண்டும்.

சிலரிடம் ராமாயணத்தின்மீது துவேசம் உண்டு அந்த அழகுதமிழை கற்பனை நயத்தை எங்கிருந்து தமிழ் இனிப்பெறமுடியும் இதில் ஒன்றை சரியாக விளங்கினால் போதும் தமிழை இஸ் லாமியர்கள் கிறிஸ்த்தவர்கள, ஆங்கிலே யர்கள் எனப் பலரும் வளர்த்ததை நாம் மனங் கொள்ள வேண்டும் எனவே எங்கள் மொழியை வளரவிடாது தூய தழிழ் கதைத்து கருவறுக்கா மல் நவீன சமூகத்தின் மொழித்தேவைக்கேற்ப புதியனவற்றை கண்டு பிடிப்பது முக்கியமான குறியீடுகளை ஆக்குவது. graphic அவசியம் என உணரவேண்டும். பயன்பாடல்லாத எழுத்துக் களை ஒதுக்கி கழித்துவிடுவதும் எழுத்தின் எண்ணிக்கையை குறைப்பதும் புது ஒலிகளை Phoneme உருவாக்குவதும் என்ப வற்றில் தான் தழிழ் மொழி நிலைக்கும் சிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1980களுக்குப் பின் வெளிவந்த ஈழத்துக் கவிதைகளில் இயற்கை



சி.ரமேஷ்

**இயற்கை**

இயற்கை என்பது இயல்பாக இருப்பது என்னும் பொருள் கொண்டது. அதாவது மனிதனால் உண்டாக்கப்படாமல் இயல்பாகவே தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகிய அனைத்தையும் இயற்கை என்கிறோம். உலகெங்கும் பரந்துகிடக்கும் கனிமப் பொருட்கள், நீர்வளம், நிலவளம், காடுகள், வனவிலங்குகள், தானாகத் தோன்றும் இடி, மின்னல், மழை, காற்று, மேகம் முதலான அனைத்தும் இயற்கை வளம் எனப்படும். இவ் வகையில் சூழலுடனும் மனிதவாழ்வுடனும் இயைந்த வகையிலேயே இயற்கை சித்திரிக் கப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் முதல் இற்றை வரை தமிழர் வாழ்வியலில் இயற்கை முக்கியம் பெற்றுள்ளது. வானோங்கும் மலை, அங்கிருந்து நுரை மோத பொங்கி பிரவகித்துப் பாயும் அருவி, நீர்நிலைகளை உள்வாங்கி அலை பொங்க நிறைந்தொளிரும் கடல் என இயற்கையைத் தன் கற்பனைக்கு அமைவாக எழில் ததும்பக் கவிஞன் பாடியுள்ளான். புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீனால் எழுதப்பட்ட "நம் நாட்டின் நானிலக் காட்சிளும்" என்னும் கவிதை பண்டைத் தமிழ் மரபுக்கமைய இலங்கை வள நாட்டின் குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம் முதலான நானிலத்தின் காட்சிகளை விளித்துப்பாடுகின்றது. நாவலியூர் சோமசுந்தரப் புலவரின் இலங்கை வளத்தைப் போன்றே இக்கவிதைகளும் காலத்தால் அழியாத கவிதைகளாக விளங்குகின்றன. கவிஞனானவன் இயற்கையைப் பலவிதமாக விதந்து பாடுகின்றான், அதேசமயம் இன்றைய வாழ்க்கையின் உண்மைகளை இயற்கையுடன் இணைத்து வெளியிடுகிறான். இவ்வகையில் ஈழத்துக் கவிதைகளில் இயற்கை முக்கியம் பெறுகிறது. கடலாகவும், நிலவாகவும், சூரியனாகவும், வானவில்லாகவும், புல்லாகவும், தூய காற்றாகவும், சுடரும் உடுக்களாகவும் உலகெங்கும் பொங்கிக் கிடக்கும் இயற்கை, ஈழத்து நவீன கவிதையில் பலவண்ணக் கோலங்களுடன் மையம் கொள்கிறது.

**வைகறை**

வேதகாலத்தில் உஷையோடு தொடர்புடைய சமய நம்பிக்கையோடு அணுகப்பெற்ற "வைகறை", ஈழத்து நவீன தமிழ்க் கவிதைகளில் அழகியல் சார்ந்த வர்ணனைக்கூடாகவும் அதே வேளை மனிதவாழ்வுடன் இயைந்த வகையிலும் எடுத்துரைக்கப்படுகிறது. வனப்பு பற்றிய வர்ணனையாக வெளிப்படும் வைகறை அழகியலோடும், ஆத்மீகத்தோடும் மனிதன் கொண்ட உறவையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

காலைப்பொழுதொன்றின் இரம்மியமான சூழலை இயற்கைவர்ணனைக் கூடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துரைக்கும் கவிதையே வாசுதேவனின் "மிச்சம்".

**"மெல்லிய காற்றில் / மேனி சிலிர்த்தது / ஒளி ஈட்டிகள் / எய்து எய்து /**
**உதிக்கும் சூரியன் / இரத்தம் சிந்திய / புரட்சியின் முடிவில் / வெளியே**
**தெரிய வரும் ஃ வெற்றியைப் போல..."**

என்னும் அடிகளில் இதம் தரும் வைகறை புலன்னுகர்வுக்குரிய காட்சிப் பொருளாக மாறிவிடுகிறது.சூரியயோதயத்தை புறக்காட்சிப் படிமங்களுக்கூடாக காட்சிப் படுத்தும் நீதிவாக்கியரின் கவிதை அழகியல் தன்மையுடன் தன்னை முன்மொழிகிறது.

**"சூரியன் நித்திரை உதறி / நிலத்துக்கு / தங்கமுலாம் பூச / வானம்**
**சோம்பலை முறித்து / அவிழ்த்து விட்ட / கூந்தலை ஃ அள்ளி முடியும்**
**குங்குமச் சிமிழை / நெற்றியில் கொட்டி / வைகறையோ / இருட்டை**
**சலவைக்குப் போடும்"**

நீதிவாக்கியர் கவிதையில் தோற்ற அழகோடு ஒளிரும் வைகறை மு.பொ.வின் "காலை" யில் கவிதையில் தூய்மையின் ஒளிக் கீற்றாய் துலங்குது.

**"ஞானியின் நுதல் போலவே ஒளி / காலுதே கீழ்வானகம் / ஆழியில் துயில்**
**நீங்கியே திரு / மாலவன் விழிப்புற்றனன்! / ஊமையாய் தனிலிங்கமாய் வதி /**
**உத்தமன் உமை பற்றினன் / பானுவின் பரித் தேரிடும் ஒலி / பாயுது வினை**
**கோருது..."**

மு.பொ.வின் கவிதையில் கர்மயோக மாய் ஒளி காலும் "வைகறை" கி.பி.அரவிந்தனிடம் "இனி ஒரு வைகறை " தொகுப்பாய் உருக் கொள்கிறது. யதார்த்த வாழ்வை விடியலுடன் இணைக்கும் இத்தொகுப்பு புதிய பொருண்மைக் கூடாகப் புலரும் காலையை எடுத்துரைக்கிறது.

**"குத்தெனச் / சாய்ந்து சரிந்து / சட்டென / மேலெழ நிமிர்கையில் /**
**எச்சமிட்டது யார் தலையில் விடியுமோ? / கண்களை உரசும் / சூரியத்**
**தெறிப்பு; / முகிழுக்குள் மறையும் / உயிர் கொத்திப் பருந்து. / மனிதம்**
**உறைந்து / உயிர்த்தது"**

படிமமாய் ஒளிரும் இவ்வடிகளில் சூரியத் ஒளித்தெறிப்பு புதியகோணத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. மற்றும் புலர்காலப் பொழுதில் சூரியன் உதயமாகும் காட்சியை மரு தமைந்தனின் "கங்குல் நகர்ந்தாள் கதிரோன் எழுந்தான்" , அன்புடீனின் "பிணம் தின்னிச் சூரியன்" முதலான ஈழத்துக் கவிதைகள் பல வற்றில் காணலாம்.

### 3.2.1.2. சூரிய அஸ்தமனம்

நவீன ஈழத்துக்கவிதைகளில் வைகறைக்காட்சிகள் சித்திரிக்கப்பட்டது போல சூரிய அஸ்தமனக்காட்சிகளும் தோற்ற அழகு கெடாதவாறு எடுத்துரைக்கப் படுவதைக் காண லாம். கனலாய் எரிக்கும் சூரியன் மாலையில் தன்னியல்பு மாறித் தோன்றும் தன்மை மு.பொ.வின் "நடுப்பகல்" என்னும் கவிதையில் விதந்து பாடப்படுகிறது

**"உச்சி விசும்பில் உருளும் கதிரோன்**
**மிச்சம் இருந்து நிழலும் தேய்ந்து**
**செத்து மடியும் செவ்வானாட்சி**
**பச்சைக் கனவாய் பதைக்கும் உலகம்"**

சூரியஅஸ்தமனத்துக்கும் மனிதனுக்கு மிடையிலான ஒத்திசைவை ஈழத்துக்கவிதைகள் சிலவற்றில் காணலாம். மனிதன் தன்னையும் இயற்கையுடன் இணைத்துக் கொண்டு தன்னைப் போலவே இயற்கையை உணரும் பாங்கினை ஈழத்துக்கவிதைகள் சித்திரித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"மேற்கினிலே எங்களது / சூரியனின் அஸ்தமனம் / வைகறையில் உதயத்தில் /
வாழ்வு நிமிருமென்ற / பொய்களினை என்றோ / புதைத்து விட்டு—நிகழ் காலச் /
சூரியனைத் தொலைத்துச் சூனியத்தில் வாழ்வு..."**

இயல்பாய் நிகழும் இயற்கை நிகழ்வு ஆனந்த பிரசாத்தின் அஸ்தமனக் கவிதையில் மனித வாழ்வின் பிரதிமையாய்த் தோற்றம் பெறுகிறது.

**கோடை**

மனிதனின் இயல்பு வாழ்வில் இன்பத்துக்குப் பின்னணியாக நிற்கும் இயற்கை அவனின் துன்பங்களுக்கும் கால்கோளாக அமைகிறது. அவ்வகையில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பங்குனிப் பிற்பகுதியில் அனலாய் எறிக்கும் கோடை மனிதனை மாத்திர மன்றி அனைத்து ஜீவராசிகளையும் வாட்டும். அக்கோடை கவிஞர்களின் அநுபவச் சுவடாக ஈழத்துக்கவிதைகளில் சுவர்கிறது.

**"இது / சரியான உஸ்ணம் / கொடுமைகளைக் கண்டு மெய்சிலிர்த்துப்
போச்சோ? / இந்தக் கொதிப்பில் மண்ணுக்குள் நெளிகின்ற / நாக்குள்ளியும்
கருகும் / ... நிச்சயமாய் இனிமையில்லை / நியாயம் இருந்தது உஸ்ணம் /
ஒரு வகைப் புழுக்கம் / திரும்பும் இடமெல்லாம் வெறுப்பான சூழல்..."**

சோலைக்கிளியின் "கவிதை எழுதாத ஒரு கோடைத் தினம் 1986ல்" கோடையின் கொடுமையைப் பேசுவதுடன், கோடையால் ஏற்படும் மன அங்கலாய்ப்பையும் வெளிப் படுத்துகிறது. கோடையின் தன்மையை அதன் இயல்பு வழி வெளிப்படுத்தும் கவிதைகளே ஈழத்தில் அதிகம் எழுதப்பட்டுள்ளன. கட்புலப் படிமங்களுக்கூடாக வெளிப்படுத்தும் இக் கவிதைகளிலே உணர்வுத் தளத்தை விடச் சித்திரிப்புத் தளமே மேலோங்கி நிற்கிறது.

**கொதித்துக் கொதித்து வழிகிறது / சூரியன் / கருகிக் கருகி சுருள்கிறது / பூக்கள் / செடிகொடிகள்
ஆகாயத்தில் அடுப்பு மூட்டி / சூரியனைக் காச்சுவது யார்? / அனலாய்த்
தகிக்கிறது வெயில் / ஆவியாய் பறக்கிறது ஆறுகள்..."**

சு.வில்வரத்தினத்தின் "கோடை" நடுப் பகலின் அகாலமாகத் தோன்றி கானல் திரை வெளி யெங்கும் வெறுமைக்குள் உழலும். இயற் கையை அழித்து மேய்ச்சலற்ற வயல்வெளி யெங்கும் கானல் அரவுகளாய் நகரும". இதனைப் போன்றே சு.வி.யின் "நெற்றிமண்" ணில் தன்னியல்புநிலை மாறாத கோடை "அக்னி பிரவாகமாய் எறிக்கிறது. ஆழக்கிணற்றில் பாய்ந்து நீரை வற்றச் செய்கிறது. மரங்களை மூழியாக்கி பாலைவெளியில் விரல் நீட்டிப் பரித விக்கிறது. நெடுங்கனலாய் எறிக்கும் கோடை நெருப்பெரிவாய், தீக்குளிப்பாய் சகல ஜீவராசிக ளையும் சுட்டெரிக்கிறது". ஈழத்துக் கவிதைகளில் கோடை காட்சி அமைவுகளை அடிப்படையாகக் கொண்டும் உணர்வுகளின் வாயிலாகவுமே வெளிப்படுகிறது.

**நிலவு**

நிலவு பற்றிய வர்ணனைப் போக்கு களை ஈழத்துக் கவிதைகளில் அதிகம் காணலாம். மனித உணர்வுகளைச் சிறப்பாக விளக்கிக் காட்டவும் நிலவு பயன்படுகிறது. வாழ்வியற் பிரச்சினைகள் சிக்கலான நிலையில் மனிதன் தன் துயரங்களில் இருந்து மனஆறுதல் அடையும் புகலிடமாகவும் நிலவு இருந்துள்ளது. நிலவை இரக்க உணர்வோடு அணுகும் நிலை யும் தற்காலக்கவிதைகளில் காணப்படுகிறது.

"கற்பனாவாதம் உணர்வுகளை ஓங்கச் செய்து கொள்கிறது. கருத்துக்களை இலட்சி யங்களாகச் செறிவுபடுத்திக் கொள்கிறது... அது சித்திரிப்புக்களை அளிக்கவேண்டியிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களைக் கொடுக்க வேண்டியிருக்கும்". உணர்வுகளை ஓங்கச் செய்து, சித்திரிப்பு முறைக்கூடாக இயங்கும் கற்பனா வாதப் போக்கே பெரும்பாலான ஈழத்துக் கவிதைகளில் இடம்பெறுகிறது.

**"பச்சை அடம்பன்கொடி, / பாய்விரித்த மணற்பரப்பில் / கத்தரிப்பூ,**
**நீலத்தில் எங்கும் மலர் விரியும் / கண் அளந்த நீலம் / இரவு**
**ஒரு பகலாக / நிலவு உலவும் வானவெளி / நீளத்தில், ஆழத்தில்...**
**நீலப்பளிங்குகளாய் / நீர்ப்பரப்பெங்கும் நிலாவெளியும்"**

சித்திரிப்புவழி இயங்கும் சேரனின் இக்கவிதையில் நிலவு விவரிப்புவழி காட்சி யனுபவத்தைக் கொடுக்கிறது. வானில் சிரித்தபடி தோன்றும் சித்திரை நிலவை வர்ணிக்கும் ஆதிரையின் "வானவெளியிற் கூட" என்னும் கவிதையும் கற்பனாவாத விவரண உத்தியை உள்வாங்கி இயங்கும் கவிதையாகும்.

அழகியல் சித்திரிப்புவழி இயங்கும் கவிதைகளில் உணர்வுகளுக்கப்பால் வர்ண னைத்தன்மையே அதிகம் மேலோங்கிக் காணப் படுகிறது. அழகியல் சித்திரிப்புவழி காட்சித் தன்மையை உள்வாங்கி எழுதப்பட்ட ஜெயசீல னின் "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" நிலவின் இயல்புதன்மையை வர்ணனைப் பாங்குடன் காட்சிப்படுத்துகிறது.

**"தங்க முலாம் பூசித் தள்ளாடிக் கீழ்த்திசையில் / திங்கள் எழுகின்ற/**
**தெய்வீகப் பௌர்ணமிநாள் / வெண்கம்பலம் விரிக்க வீதியெல்லாம்**
**நிலவின்பால் / சிந்துகிறது; / ...இத்தனை வயதினிலும் / இந்தக் கிழநிலவு/**
**சற்றும் நரை மூப்புத் தட்டாமல் / தளதளப்பாய் / மார்க்கண்டேயன் போல்**
**மணிமணியாய்த்தான் சிரிக்கிறது"**

காட்சித்தன்மைவழி இயங்கும் சு.வில்வரத்தினத்தின் "நிலவும் நெகிழ்வும்", "நிலவுக்கு எழுதல்" ஆகிய இருகவிதைகளிலும் அழகுத் தோற்றத்துடன் தனிநபர் அநுபவத் தோய்வு இழையும் பாங்கினைக் காணலாம்.

**மணல் போர்த்த வீதிகள் தோறும் / நிழல் வீழ்த்தும் நெடு மரங்களூடே/**
**வழியும் நிலவில் நனைந்தவாறு / நண்பர்களுடன் நடத்தல் / எனக்குப்**
**பிடிக்கும் / பஞ்சு போல ஒற்றி ஒற்றித் / துன்பம் துடைக்கும் நிலவின்**
**தூய்மை / நெஞ்சு கழுவ நெகிழ்ந்தே நடந்த / தனிவழிப்பயணங்கள்"**

அநுபவ நினைவு கூருவதற்கூடாக விரியும் இக்கவிதை தனிமனித உணர்வின் வழி இயற்கையின் எழிலைப் பாடுகின்றது.

விஞ்ஞானயுகத்தில் நிலவை அறிவியற் பார்வைக்கூடாக அணுகும் சு.வி.யின் "நிலவுக்கு எழுதல்" என்னும் கவிதை ஆதிகாலத்திலிருந்து செய்யுள் வழி போற்றப்படும் நிலவின் நீட்சி யைப் புதிய பொருண்மைக்கூடாகப் புலப்படுத்து கிறது.

மனிதமனத்தின் மனலயிப்பை போர் சிதைக்கிறது. இயற்கைச் சமநிலையைக் குலைத்து மனிதவாழ்வைக் கோரப்படுத்துகிறது. மரணத்துக்கும் வாழ்வுக்கும் இடையில் மனிதன் போராடும் போது நிலவு துயரின் ஆகிருதியாய் பா.அகிலனின் "யாரோ ஏதோ" கவிதையிலும், அம்புலியின் கவிதையிலும் முகம் கொள்கிறது.

**"நிலவே மறைந்துவிடு / உலவுவதற்கும் குலவுவதற்கும் இதுவோ நேரம்? /**
**நேற்றிலிருந்து / பற்றைக்குள்ளே நான் பதுங்கியிருக்கி றேன். / கரிய**
**பனைகளின் இடைவெளிக்குள் / உருமறைந்தபடி... சிதைந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கும் / -மண்ணைச் சிறைமீட்க
இருளுக்குள்ளால்-நான்
முன்னேற வேண்டும் நிலவே / நீ மறைந்து விடு"

யுத்தசூழலுக்குள் முகம்கொடுக்கும் ஒரு போராளியின் உணர்வுத்தளத்திலிருந்து வெளிப்படும் இக்கவிதை அடிமை வாழ்வின் வலியையும் சுதந்திர மீட்புக்காய் போராடத் துணியும் பெண்ணின் வாழ்வையும் எழுதிச் செல்கிறது.

பௌர்ணமி இரவில் பால் விசிறி மதாளித்த வெண்ணிலவு கருணாகரன் கவிதையில் "ஞானம் கலைந்த காலம்" எனச் சுடர்கிறது. யுத்தத்துக்கு முகம் கொடுத்த பௌத்தர்களின் உள்க்கிடக்கையை வெளிப்படுத்தி நிற்கும் இக்கவிதை பேரினவாதத்தின் கோரமுகத்தை மென்னுணர்வுத்தளத்தில் பதிவு செய்கிறது. வெல்லமுடியாது எனக் கருதப்பட்ட ஒரு யுத்தம், மக்களின் மன அமைதியைக் குலைத்து மனித உயிர்களை அநியாயமாகப் பலி கொள்வதை

"புத்தனுக்கு ஞானமளித்த நிலவு...
புத்தன் ஞானம் பெற்ற இரவு...
உருகி வழிகிறது எதிர்காலமற்று"

என்னும் கருணாகரனின் துயர் தோய்ந்த அடிகள் உணர்த்தி நிற்கின்றன. பௌத்தரின் புனித நாளான பௌர்ணமியில் ஒளிரும் அத்துயரம் பேரவலமாய்க் கவிதையெங்கும் கவிகிறது. வட்ட குளிர் நிலவு பொட்டாய் ஒளிர யுத்தத்துக்கு முகம் கொடுத்த மக்களின் அவலங்களை ஞா. கெனத்தின் "இரவுகள்" கவிதையும் எடுத்துரைக்கிறது.

நிலவு என்னும் குறியீட்டு உத்தியை உள்வாங்கிப் படைக்கப்பட்ட மஜீத்தின் "நிலாச் சோறு", மூடுண்ட சுதந்திரத்தை பூடகமாகப் பேசுகிறது. மறைந்திருக்கும் முழுநிலவை தன் குழந்தைகளுக்காக மனோதிடத்துடன் கீழ் இறக்கமுனையும் தந்தையின் உள்ளத்தை மஜீத்தின் நிலாச் சோறு வெளிப்படையாகப் பேசினாலும் அக்கவிதை பன்முகத் தன்மை கொண்ட அர்த்த வெளியை வாசகனுக்குச் மறைமுகமாகச் சுட்டிநிற்கிறது.

பௌர்ணமியை மையமாகக் கொண்டு படைக்கப்பட்ட சோ.பத்மநாதனின் "பாலாய் நிலவு பொழிகிறது" கவிதையும் குறியீட்டு உத்தியை உள்வாங்கிப் படைக்கப்பட்ட கவிதையாகும். தமிழர் தாயகப் பரப்பில் நிகழும் வன்முறைகளைப் பௌத்தத்தின் புனித நாளான பௌர்ணமிக்கூடாக இக்கவிதையில் துல்லியமாக வெளிக்கொணர்கிறார் சோ.பத்மநாதன். மக்களின் இன்ப, துன்பங்களை உள்வாங்கி ஈழத்துக் கவிதைகளில் பிரவேசிக்கும் நிலவு பல்வேறு கோணங்களில் விரிவாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

காற்று

வளிமண்டலத்தில் வளி பெருமளவில் நகரும் போது அது காற்று எனப்படுகிறது. வெவ்வேறு திசையிலிருந்து "காற்று" வீசும் போது அதற்குத் தனித்தனியான பெயர்களை யிட்டு எம்முன்னோர்கள் அழைத்தனர். தென்றலாகவும், கச்சானாகவும், சோளகமாகவும், கொண்டலாகவும் உருவம் பெறும் காற்று வன்காற்றாக மாறி வீசும்போது "சூறாவளி" எனப்படுகிறது.அன்று முதல் இற்றை வரை ஈழத்துக் கவிதைகளில் காற்று காலத்துக்கு காலம் பல்வேறு கவிஞர்களால் பாடப்பட்டும் வந்துள்ளது கண்கூடு. 1978 நவம்பர் 23 வியாழனன்று மட்டக்களப்பைத் தாக்கிய சூறாவளிக்காற்றைச் சித்திரிக்கும் புலவர்மணி அல்ஹாஜ் ஆ,மு,ஷரிபுத்தீனின் "சூறாவளிப் படைப்போர்" 1998 இல் நூலுருப்பெற்றது. கிழக்கு மாகாணத்தின் தெற்கே அக்கரைப்பற்று முதல் வடக்கே வாகரை வரையுள்ள பிரதேசங்களில் ஏற்பட்ட அழிவுகளைப் பாடும் இந்நூல் படைப்போர் என்னும் இஸ்லாமிய இலக்கிய வகைமையை உள்வாங்கிப் படைக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கிலிருந்து வீசுவதாகிய வாடைக் காற்று மு.புஸ்பராஜன் "வாடைக் காற்றே" கவிதையில் மணவறைப் பெண்போல நாண முற்று வருகிறாள். சோழகத்தின் பின் வந்து வரட்சி நிலவ சுழன்றடிக்கும் இக்காற்று மீன வரின் நடைமுறை வாழ்வியலுடன் எடுத்துரைக் கப்படுகிறது.

யாருக்கும் அடங்காது சண்டித்தனம் பண்ணும் வன்மையாக உசுப்பும் பேய்க்காற்று "ஒரு மாதிரி தலையைச் சவட்டி... ஃ கொச்சிக் காய் கடித்த பாலரசி போல" சோலைக்கிளியின் கவிதையில் கொம்பன் காற்றாக உருமாறுகிறது.

18.10.1991இல் இராணுவத்தினரால் வடக்கிலுள்ள தீவுகள் கைப்பற்றப்பட அதன் பின்னரான தமிழ் மக்களின் அவல இருப்பை "காற்று" என்னும் துயர் காவிக்கூடாகப் பதிவு செய்யும் கவிதையே சு.வில்வரத்தினத்தின் "காற்று வழிக் கிராமம்".

ஈழத்துக் கவிதைகளில் "காற்று" கவிஞரின் பாடுபொருளுமைக்கு இயைவாகப் பல்வேறு பொருண்மையில் பரிணமிக்கிறது. மேனியை வருடும் இளந்தென்றல் மேரி மன்ரேசா பறுநாந்துவின் கவிதையில்[34] துயரத்தின் காதையை எழுதிச்செல்ல, ஆதி லட்சுமி சிவகுமாரின் கவிதையில்[35] காலைக் காற்று அழிவிலிருந்து மீள் எழும் செய்தியை எடுத்து உரைக்கிறது.

**நதி**

வனப்புடன் தத்தி ததும்பி முட்டி மோதி பொங்கி பிரவகிக்கும் நதி இயற்கையின் ஊற்று. பசுமையைச் சொரியும் எழிலின் உறைவிடம். ஈழத்துக்கவிதைகளில் நன்மை தீமைகளின் பங்காளியாக உலாவரும் நதி சிவசேகரத்தின் கவிதையில் மாவலியாய் மாறி பொங்கிப் பிரவகிக்கிறது.

**"மார்கழி மேக மழைநீர்ப் பெருக்கில் / மூழ்கி அமிழ்ந்த மாவலி இன்று /**
**சித்திரை வெயிலில் மேனி உலர்ந்தும்... / ஆற்றின் பழுப்பு உடலின் மீது /**
**தேமல் போன்றுதேங்கிய நீரில் / பகலில் மண்ணும் பாசியும் கல்லும் /**
**மெல்லச் சறுக்கும் மீனும் தெரியும் / பள்ளத் தாக்கிற் பரவிய மணல்**
**மேல் / மெல்ல ஊரும்..."**

இப்பின்னணியில் எழும் சிவசேரத்தின் "மாவலியின் மார்கழியில"இ "ஆற்றங்கரையின் அந்தியும் மூங்கிலும்" முதலான கவிதைகளும் அர்த்தமும் இருப்பும் கொண்ட காட்சிக்க விதைளாகவே உருக்கொள்கின்றன. தில்லைச் சிவனின் "மகாவலி" யும் திமுதிமென்று அலை யெறிந்து காடு மேடு எனத் திசைகள் தோறும் பாய்ந்து செல்கிறது. ஈழத்தில் நதி பற்றிய கவிதைகள் காட்சித்தன்மையில் அமைந்த விவரணத் தன்மையிலான கவிதைகளாகவே அதிகம் காணப்படுகின்றன.

**கடல்**

நவீன ஈழத்துக்கவிதைகளில் ஆர்பரிக் கும் அலைகளைக் கொண்ட கடல் சிறப்பான கற்பனையுடன் உணர்வுபூர்வமாகச் சித்திரிக்கப் பட்டுள்ளன. பழம் தமிழில் இயற்கையின் உறை விடமாகவும், யாக்கை நிலையாமையுடனும், பெண்ணின் உள்ளக வெளியுடனும் தொடர்புறும் கடல் நவீன கவிதைகளில் புலம் பெயர்ந்தும் வேர்கொள்ள முடியாத துயரின் ஊற்றுக் கண் ணாகவும் மனித ஆட்கொல்லியாகவும் இயற்கை யின் வனப்பையெல்லாம் தன்னகத்தே கொண்டு விளங்கும் ஆதித்தாயகவும் உருவகம் கொள்கி றாள்.

**"கடல் / நீலம் தெறித்த வெளி / தொலைகின்ற குரல் /**
**காற்று மறிக்க / அலை எழுந்து விழும் / துடுப்பால்**
**தள்ளி / நகர நடுவில் / தனியாய் / தரித்த படகு /**
**வேர் கொள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கவிதையில் பரந்து விரிந்து பாரைக் கவ்வி நிற்கும் கடல், அகதியாகி அந்நிய நாட்டிற் குப் புலம் பெயர்ந்தும் அந்நாட்டில் வேர்கொள்ள முடியாத மனித வாழ்வின் யதார்த்தத்தை இக் கவிதை சுட்டிநிற்கிறது.

இக்கடல் அலறியின் கவிதைகளில் பறவையைப் போல சிறகடிக்கிறது. மீனவனின் வாழ்வாதாரமாகத் துலங்குகிறது. மனித ஆட்கொல்லியாக மாறி உயிரைப் பறிக்கிறது. உடமைகளை விழுங்கி எவ்வித சலனமுமற்று அமைதியாக உறங்குகிறது. எனப் பலவாறாகத் தோற்றம் பெறுகிறது. இக்கடல் றஷ்மியின் ஆயிரம் கிராமங்களைத் தின்ற ஆடு என்னும் தொகுப்பில் உருத் தெரியாத பேரலையாக விரிகிறது.சுனாமியாக மாறி கொந்தளிக்கிறது. உடமைகள், மனித உயிர்களை விழுங்கி ஆர்பரிக்கிறது.

**“எக்கி மூச்சிழுத்து உள்வாங்கி நீரை– தன்**
**மேனி திறந்து காட்டி மயக்கி வானளவு**
**மேலெழுந்து கரும் நிறத்தில் காறி**
**உமிழ்ந்து சூழ்கின்றது கடல்.**

உடமைகளை விழுங்கி மனிதர்களைப் பலி கொண்ட சுனாமியின் அகோர முகத்தைப் பதிவு செய்யும் இத்தொகுப்பு முதல், இடை, கடை என மூன்று காதைகளை உடையது. இயேசு பாலனுக்கு ஒரு நாள் வயதாயிருந்த காலை என்னும் தலைப்போடு தொடங்கும் இந்நூல் “தக்கவை தப்பிப் பிழைத்தமை” என்னும் பகுதியோடு முடிவடைகிறது. பாட்டனின் பாட்டனுக்கு உறவாயிருந்த அலைகள், பச்சைக் கரும்பாறைக்குள் பதுங்கியிருந்த அலைகள் றஷ்மியின் தொகுப்பெங்கும் நீராலான இராட்சத பாம்புகளாய் ஊருக்குள் நுழைகின்றன. புயலாக மாறி அழிவுகளை ஏற்படுத்துகிறது. ஆழிப்பேரலையின் அனர்த்தத்தின் தொடர்ச்சியே நாவண்ணனின் “சுனாமிச் சுவடுகள்”. கடற் கேளால் உயிரையும் உடமைகளையும் இழந்த மக்கள் பற்றியும் பேரலைக்குள் அகப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பிய மக்களின் இன்னல் களையும் இத்தொகுப்பு எடுத்துரைக்கிறது. முல்லைத்தீவு, வடமாராட்சி, தென்மாராட்சி என வடக்கெங்கிலும் தொடரும் இத்துயரம் கிழக்கில் பாற்சேனை, சீலாமுனை, பெரிய நீலாவணை, சாய்ந்தமருது, கோமாரி, திருக்கோவில் வரைத் தொகுப்பெங்கும் தொடர்கிறது.

**“கடற் கோள் கொண்ட மானுடர்கள் / கரையில் ஒதுங்கினர் பிணங்களென**
**உடல்கள் பலது கடலுக்குள் / உணவாய்ப் போயின மீன்களுக்குள்**
**சாகரக் கரையில் நிரையாக / சடல வடிவில் மக்கள் பலர்**
**சோகக் கதைகள் சொல்லினவே / சோதரத் தமிழர் நிலையிதுவோ”.**

தமிழ் விடுதலை அமைப்பொன்றின் தலைவரின் ஆணையை ஏற்று உயிர்களைக் காப்பாற்றவும் சடலங்களை மீட்கவும் மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது செயற்பட்ட கடற் புலிகள், போராளிகள் பற்றியும் இக்காவியம் சொல்கிறது.

**மழை**

கவிதைகளில் மழை பற்றிய இயற்கைச் சித்திரிப்பை அழகுணர்வோடு வெளிப்படுத்தும் ஈழத்துக் கவிஞர்கள் மழையைக் கருவியாக்கி மனித உணர்வுகளை வெளிப்படுத்துவதுடன் மனிதநேய உணர்வுடனும் மழையை அணுகு கின்றனர்.

**“சொட்டும் துளிகொட்டும் வெடிஇடி / தட்டும் தரை தட்டும் புயலது/**
**குட்டும்... தரும் கொட்டம் இது மழைக்காலம் / திட்டம் இடும்**
**நட்டம் ஒளி மி(ன்)னல் / வெட்டும் விழிபட்டும்...செடி கொடி/செட்டும்**
**விழ நிற்கும் இது ஒருபுயற்காலம்”**

ஓசையுணர்வுக்கூடாக மழையை அழகுணர்வுடன் காட்சிப்படுத்தும் மழைப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் ஜெயசீலனின் இக்கவிதை மழையின் தன்மையை அதன் இயல்பு சிதைவுறாதவாறு காட்சிப்படுத்துகிறது. ஜெயசீலனின் பிறிதொரு கவிதையான "நட்பு" அநுபவ உள்வாங்கலுக் கூடாகப் புலன் நுகர்ச்சிக்குரிய பொருளாக மாறுகிறது. இப்பின்னணியில் இயங்கும் தேவ அபிராவின் "மழையெல்லோரெம்பாவாய்" நிலைபேறுடைய "மழை"யைப் பயன்படு பொருளாக மாற்றுகிறது.

**"ஏக்கம் மீதுற விண்ணின் துளிகள் / பின்னிப் பெருமழையெனப் பொழிய /**
**என் சகியின் விழிகளை மருவி / இதழ்களைத் தழுவும் / சாளரக் கரையின்**
**சயனத்துடலில் / படுமோ தூவானம் ?**
**மூசிப்பெய்தும் முழுநிலமும் கரையவோடியும் / பின்னும் பெயரின்றி / ஆழ்**
**கடலில் கலந்து அழியும் மழையே / தேடிப் பெய் என் தேசத்தை..."**

எதிர்பார்ப்புடன் மழையை அணுகும் கவிஞனின் உள்ளத்தை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டும் தேவஅபிராவின் இக்கவிதை துயரத்திலும் மென்னுணர்வின் இனிமையின் இரகசியத்தை எழுதிச் செல்கிறது. கோடையின் அனல் கொதித்து வழிய கருகிச் சுருள்கிறது பூக்கள், செடிகொடிகள். அக்னியின் கொதிப் பைத் தாங்கமுடியா கவிஞன்

**"மழையே**
**இந்நேரம் சீ யெங்கு போனாய்?**
**முகிலாய்த் திரண்டு**
**கடலுக்குள் ஒழித்ததேன்**
**ஒரு பாட்டம் சரியேன்**
**பயிர் பச்சை குடித்து முழுக..."**

எனக்கூறி யாசிக்கிறான். மழை மனிதனுக்கு மாத்திரமன்றி பயிர் பச்சைக்கும் உதவவேண்டும் என்னும் ஆதங்கமும் அவாவும் இக்கவிதையில் வெளிப்படுகிறது.

**"நாய் புல்லைக் கடித்ததும்**
**எறும்புகள் இடம் பெயர்ந்ததும்**
**வீண் போகவில்லை**
**வந்துவிட்டது சோகம் வானத்துக்கு**
**இனி மாரியும் மழையும் தான்..."**

எனத் தொடங்கும் அன்புடீனின் "வானத்துக்கு வந்த சோகம்" பொழியும் மழை யின் இனிமையின் ஊற்றை, இயற்கை ஏற்படுத் தும் பரவசத்தை இதமாகத் தருகிறது. சோலைக் கிளியின் "ஒரு மாரி நோக்காடு" கவிதையிலும் மழைபொழிவதற்கான அறிகுறி அன்புடீனின் கவிதையைப் போலத் துல்லியமாக வெளிப் படுகிறது.

**"இருட்டுது / இனிப் பெய்யும்... / பொச்சுப் பொச்செனக் காற்று / தலை**
**மயிரைப் பொசுக்கி விட்டது போல் / இடைக்கிடை / ஓலையிலே /**
**உரசல் / அம்மி நகரும். / இல்லாட்டி / மலடு தட்டிப் போன / வானம்**
**முக்கி முக்கி / இடி முழக்கத்தை ஈணாது / இந்த மாதிரி மின்னல்**
**வெட்டினால் / ஒரு வானம் என்ன / ஏழு வானமும் பாளமாய்ப்**
**பிளந்து / கடலைக் கொண்டு வந்து ஊற்றும்..."**

மழையை அலகாக்கி மனிதனின் காலத்தையும் அவன் உலகையும் நோக்கும் கவிதைகளும் காணப்படுகின்றன. ஈழத்து நவீன கவிதையில் மனிதவாழ்வின் நிகழ்சம்பவங் களின் வாயிலாகவும் "மழை" வெளிப்படுகிறது. தனிமனித உணர்வின் வெளிப்பாடகத் தோன்றும் அகவுணர்வு, யாழினியின் "மழைக் காலச் சிநேகம்" என்னும் கவிதையில் "மழை" என்னும் இயற்கைச் சித்திரிப்பக்கூடாக வெளிப் படுகிறது.

**"அன்றும் மழைபெய்தது / ஒரு கடைக்காப்பில் / ஒன்றாகவே நடந்தோம் /**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுநேரம் / மழைச்சாரலில் / கரம் நனைத்து, / உனை நனைத்து /
பால்ய காலத்துக்கே பயணப்பட்டிருந்தேன் நான் / அச்சங்களில்லா / அவசரங்களில்லா — நம் / கற்பனைப் பூமியில் / மழையின்
குளிரை விரட்ட / நேசவேள்வியின் சுடர் வளர்த்தோம்"

எம்.ஐ.எம்.சுபைரின் கவிதையில் மழை முகம் கறுத்துப் பெய்கிறது. பேய்மழையில் நிலவும் நட்சத்திரங்களும் கரைந்து போகின்றன. காகித ஓடங்களைப்போல குடிசைகள் மிதக்கின்றன.

ஈழத்துக்கவிதைகளில் மனித உணர்வு களை அதன் இயல்புகளை மழையினூடாக ஏற்றிக் கூறுவதுமுண்டு. மனித வாழ்வைக் கௌவும் வறுமை எம்.ஐ.எம்.சுபைர் கவிதையில் மழையினுடாக தன்னை முன்மொழிகிறது.

"என் / சின்ன மகளே...! / ஓட்டைக்குடை / வேண்டாம் எனக் கூறி /
என் வறுமையின் சின்னத்தைப் / பழிக்காதே!
இவை ஓட்டைகள் அல்ல / குடையின் கண்கள்...! அவற்றினூடே /
ஒழுகுவது; / மழைநீர் அல்ல; / என் ஏழ்மையைக் கண்டு /
குடை அழுகிறது / மகளே.."

வெள்ளத்தால் அழிவுண்ட அறுவடையையும் உழவர்களின் வாழ்வையும் வெளிப் படுத்தி நிற்கும் பஹீமாஜஹானின் "வெய்யில் விரட்ட மழை ஓட" யதார்த்த வாழ்வக்கூடாகவே தன்னை முன்மொழிகிறது.

1986 ஏப்ரல் 20 இல் கந்தளாயில் நாற்பதடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அது ஏற்படுத்திய அநர்தங்கள் ஏராளம். மக்களை, உடமைகளைப் பலிகொண்ட அவ்வெள்ளப் பெருக்கை பதிவு செய்த கவிதைகள் அநேகம்.

"கர்ப்பினிகள் / காதலர்கள் / கண்மணி போல் குழந்தைகள் / தப்பொன்றும்
செய்யாத / தரையிலுள்ள ஜீவன்கள் / அப்படியே நீரோடு / அள்ளுண்டு
போயினரோ / சேற்றுக்குள் / புதையுண்டோர்– / செயலற்று மூர்ச்சித்தோர் /
ஆற்றாமை தாளாமல் / அழிவுற்றோர் ஏராளம் / மற்றோர் விலாசமோயன்றி /
வேறெங்கோ / தொலைந்தனராம்"

சத்திராதியின் "போர்வைக்குள் வாழ்வு" மழைக்காலத்தினூடாக மனித வாழ்க்கையை அணுகுகிறது.போராலும் வெள்ளத்தாலும் வதையுண்ட மக்களின் வாழ்வியற்புலம் உள்ளத்தை உருக்கும் வகையில் இக்கவிதையில் பதிவு செய்யப்படுகிறது.

மழை காதலரின் மனோபாவங்களை அறிந்து காதலுக்கு இதம் தந்து காதலை வளர்க்கிறது. அதே மழை பிரிவாற்றாமையால் வருந்தும் காதலருடைய விரகதாபத்தைத் தூண்டி மேலும் மேலும் அவர்களை வாட்டுகிறது. இம்மழை தரும் இதமும் அது தரும் பரவச உணர்வையும் மைதிலி அருளையாவின் ஒரு மழை நாளில்...", ரேவதியின் "நீ...நான்... மழை[59]" முதலான கவிதைகளிலும் காணலாம். ஈழத்து நவீன கவிதைகளில் மழையின் அழகு சிறப்பிக்கப்படுவதுடன், அது தரும் இன்பம், அவலம் முதலானவற்றுடன் அவற்றுக்கூடாக இயைந்து வரும் மனிதவாழ்வு புலப்படுத்தப் படுகிறது.

**மலை**

நவீன ஈழத்துக் கவிதைகளில் குறித்த ஒரு நிலப்பகுதியில் சுற்றாடலுக்கு மேல் உயர்ந்து காணப்படும் பாரிய நிலவடிவத்தைக் கொண்ட மலைப்பிரதேசம் எழிலோடும் அதன் இயல்போடும் பாடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோரம்மிம்மியத்தை அளிக்கும் மழைப்பிரதேசம் அல் அஸீமத்தின் புலராத பொழுதுகளில் போதையூட்டும் நங்கையாய் உருப்பெறுகிறாள்.

**சல்லாபப் பெண்டிர் / சரசங்கள் ஆடிப்பேர் / உல்லாச உச்சியிலே**
**ஊறிப்போய் / மல்லாந்து / நித்திரையில் ஆழ / நிமிர்ந்திட்ட நெஞ்சகங்கள் /**
**அத்தரையில் பேர்மலைகள் ஆம் / மாதர் முலைகள்மேல் / மாறன் மயிரலை**
**போல் / மோதிப் புரண்டு முறுகிநீண்டு / ஆதிக்கம் / செய்தாற்போல் புற்கள்...”**

நங்கையாய் உருவெடுத்த மலைப் பிரதேசம் அல் அஸீமத்தின் பிறிதொரு கவிதையில் “நித்திரை உழைப்பின் கும்பகர்ணனாகவும் கூன் விழுந்த மானிடனாகவும்[61]” உருப்பெறுகின்றது. இம்மலை கி.பி.அரவிந்தனின் கவிதையில் மலைப்பூதமாய் தோற்றம் பெறுகிறது.

**“மௌனித்துக் கிடந்தது**
**மலைப்பூதம்.**
**கவிந்திருந்தது**
**பனிமூட்டம்**
**படியவாரிய மயிர்க்கால்களாய்த்**
**தேயிலை”**

நாகபூசனி கருப்பையாவின் “வளமுள்ள மலைநாட்டில்” என்னும் கவிதையில் மலை நீள்த்தொடர் குன்றுகளாக எழுந்து நிற்கின்றது. அம்மலை எங்கும் தென்றல் தவழ்ந்து வர, அருவிகள் நெளிந்தோடிக் களி நடனம் புரிகின்றன. வரட்சியின்றி, வாட்டமின்றி எழுந்து நிற்கும் மலையின் அழகை இயற்கை எழில் நகையாட நாகபூசனி எடுத்துரைக்கிறார். அதே மலை வெண்ணிலவு பால் சிந்த ஜெயபாலனின் “நீலகிரி பயணக் குறிப்புக்களாக விரிகிறது[64]. மலையகக் கவிதைகளில் மக்களின் வாழ்வியலுடன் இணைந்த நோக்கப்படும் மலை அளப்பரிய துயரத்தினை உள்வாங்கி எழுந்து நிற்கிறது. மலையக மக்களின் வியர்வையும் இரத்தத்தையும் உறிஞ்சி உறிஞ்சி உருப்பெருத்த மலைகளின் துயரம் விரிந்தளவில் நோக்கப்பட வேண்டியது. தலைப்பின் விரிவு கருதி தவிர்க்கப்படுகிறது.

இயற்கையின் அடிப்படைத்தன்மைகளுடன் அதன் எழிலை பாடுபொருளாகக் கொண்டு பாடப்பட்ட ஈழத்துக்கவிதைகள் இயற்கையுடன் இணைந்த வகையில் மக்களின் வாழ்வியலையும் ஆழமாகச் சித்திரித்தன. இயற்கையின் மீது மனிதத் தன்மைகளைப் புகட்டி அதிலிருந்து அரசியல், சமுதாயம் பற்றிய அறிவுரைகளை வெளிப்படுத்திக் காட்டும் போக்கும் ஈழத்துக் கவிதைகளிடத்தில் இன்றும் காணப்படுகிறது. இவ்வகையில் “இயற்கை“ ஈழத்துக் கவிஞர்களின் ரசனைக்குரிய பொருளாக மாத்திரம் அமையாது மனித வாழ்வியலின் பங்காளியாகவும் செயல் ஊக்கியாகவும் தோற்றம் கொள்கிறது. ஈழத்துக்கவிதைகளில் தூய்மை, ஒழுக்கம் முதலானவற்றின் பிரதிமையாகவும் அபூர்வசக்தி கொண்ட தெய்வ உருக்களாகவும், மனித உணர்வின் ஊற்றாகவும் முகம் கொள்ளும் இயற்கை, மனிதனுக்கும் தனக்கும் இடையிலான ஆழமான உறவையும் புலப்படுத்தி நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**சுலோ!! ததேஜதி தந்நைஜதி தத்தூரே தத்வமதிகே ததந்தரஸ்ய ஸர்வஸ்ய தது பாஹ்யஹ**

என்னும் ஈசா வாஸ்யோபநிஷத் வாக்ய ரீதியாய் கேவல நிராகார பரம்பிரம்மமாகிய நான். தத்துவ விசாரணை இல்லாதவர்களுக்கு தேஹேந்திரியங்களுடையவனாயிருந்து சிருஷ்டிப்பதும் காப்பாற்றுவதும் சம்ஹாரம் செய்வதுமாயிருக்கின்றேன். தத்துவ விசாரணை செய்த ஞானிகளுக்கு அகில சொரூபனாயும் என்றால், தேஹேந்திரியங்களில்லாமல் கேவல நிராகார (வெட்ட வெளியாய்) சைதந்திய சொருபனாய் காணப்படுவேன். பாமர ஜனங்களுக்கு என்றால் இந்த உலகத்தில் தள்ளத் தக்கவிஷய சுகங்களையெல்லாம் தள்ளாமலும் சாஸ்திர விசாரணை செய்யாமலும் இருப்பார்களே பாமர ஜனங்கள் என்று சொல்லப்படுவர். இப்படிப்பட்ட பாமர ஜனங்களென்று சொல்லப் படுவர். இப்படிப்பட்ட பாமர ஜனங்களுக்கு வெகு தூரத்தில் இருப்பவனாயும் காணப்படுகின்றேன். சிரவண மனைநிதித்யாசங்கள் (கேட்டல், சிந்தித்தல், தெளிதல்) செய்யும் பிரம்ம ஞானிகளுக்குச் சமீபமாயிருப்பவனாயும் காணப்படுவேன். அன்றியும் சகல ஜீவ ஐந்துக்களினுடைய சரீரத்திலிருக்கும் மனம் புத்தி சித்தி அஹங்கார மென்னும் அந்தரக் கணக்களுக்கெல்லாம் சாஷியாய் கேவல ஞா சொரூபமான ஆத்மாவாய வியாபித்திருக்கின்றேன். இந்த மாயா பிரபஞ்சத்திற்கு உள்ளும் வெளியிலும் நிறைந்திருக்கின் றேன் மேலும்.

**சுரு!! தஸ்மாத் ஸாகார மநித்யம் நித்யம் நிராகாரமிதி,**

என்னும் மஹா நாராயணோப நிஷத் வாக்யரீதியாய் பெயர் ருபமுடையவன் என் சாகார (விக்கிரக) சொரூபம் என்றால், ராமா கிருஷ்ணா கோவிந்தா நாராயணா, கேசவா, மாதவா, மதுசூதநா, புண்டரீகா பக்தவச்சலா, பரந்தாமா ஈஸ்வரா, விநாயகா, சுப்பிரமண்யா, பார்வதி, லஷிமி, சாமுண்டீஸ்வரி என்னும் இன்னும் இப்படிப்பட்ட அனேக பெயர்களும் ரூபங்களுமுள்ள என் சரீரங்களெல்லாம் பிரளய காலத்தில் அழிந்து விடும். ஆனால் பெயரும் ரூபமும் இல்லாத என் வெட்ட வெளி ரூபம் நித்தியமானதும் சத்தியமாயும் எக்காலத்திலும் இருக்கும். இதுவே என் யதார்த்தமான சொரூபம் அதாவது இதன் முக்கியமான கருத்து எதுவோ அதை இதனடியில் சொல்லுகின்றோம் கேளுங்கள்:

வலது கையில் சக்ரமும் இடது கையில் சங்கும் இன்னொரு இடது கையால் தன் பாதத்தைக் காட்டுவது போலும் வேறொரு வலது கையால் சும்மாயிருவென்று அபய அஸ்தம் போல் காட்டி இவ்விதமாய் விக்கிரங்களைக் கல்லுகளிலும் மரங்களிலும் செம்புகளிலும் செய்து கோவில்களில் வைத்து அவ்விக்கிரகங்களைப் பூசை செய்து வருகின்றார்களல்லவா?

இவ்வாறாக விக்கிரக ரூபமாயிருக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் சொரூபம் ஸாஸ்வதமாய் இருக்கப்பட்ட தல்ல இந்த விக்கிரங்களெல்லாம் பிரளய காலம் வரும்பொழுது சமுத்திர ஜலத்தால் மூடப்பட்டு அழிந்து போகத்தக்கது. ஆனால், எனது நிஜ சொரூபம் இவ்வாறாக வெட்டவெளியாயிருக்கும் எனக்கு ரூபமில்லை. பெயருமில்லை நான் கண் களுக்குக் காணப்பட்டாத வளையும் அரூபியா யும் இருக்கின்றேன் என்றால் சரீரமில்லாதவ னாய் இருக்கின்றேன் இன்னும் நான் எப்படிப் பட்டவனாய் இருக்கின்றேனென்றால்

"யஸ்யாந்தர்நா திமத்யம்" அதாவது முதல் இடை கடை இல்லாதவன் என்றால், நான் இல்லாத இடம் ஊசி நாட்டுமவ்வளவு இடமு மில்லையென்று அர்த்தமாகின்றது.

இந்நூலாசிரியர் மேற்சொன்னவை களுக்கெல்லாம் கேள்விகளைத் தாமாகவே கேட்டு மறுபடியும் அக்கேள்விகளுக்கெல்லாம் சமாதானம் இந்நூலாசிரியரே அடியில் சொல்லு கின்றார்.

"யஸ்யாந்தர்நா திமத்யம்" என்று வேத வாக்கியமாய்ச் சொல்லிவிட்டீரல்லவா? அதாவது கடவுளானவர் இல்லாத இடம் உசி நிற்குமவ்வளவு இடமும் இல்லையென்று சொல்லிவிட்டீரல்லவா? அப்படியிருக்க கடவுள் இல்லாத இடம் ஊசி நிற்குமவ்வளவு இடமும் இல்லையென்று எப்படிச் சொல்லலாம். ஆனால் பூமியின் மேல் நின்றிருப்பதை நாம் பிரத்திய மாய்ப் பார்க்கின்றோம்.

மறுபடியும் இக்கேள்விகளுக்கெல்லாம் இந்நூலாசிரியராகிய யோகீஸ்வரரே சமாதானம் சொல்லுகின்றார்.

ஐயா!

பூமியின் மேல் ஊசி நின்றிருப்பது வாஸ்தவமாயிருந்த போதிலும் ஊசி நின்றிருக் குமிடத்தில் ஒரு பெரிய ஆழமாகிய குழியைத் தோண்டிக்கொண்டே சென்றால் அக் குழிக்குள் வெளியாயிருக்கும் ஆகாயமே வந்து கொண் டிருந்து கடைசியில் ஒரு பெரிய கிணறாய் ஏற்பட்டு அக்கிணற்றில் ஊற்று ஜலம் சுரக்கும். பிறகு, அவ்வூற்று ஜலத்தையெல்லாம் இறைத்துப் பள்ளம் வெட்டிக் கொண்டே சென்றால் அவ்வூற் றின் கீழ் பொன், வெள்ளி, செம்பு முதலாகிய பஞ்சலோகங்கள் அங்கங்குயிருக்கும் அந்த கனிகள் இருக்கின்றன. அக்கனிகளையெல்லாம் வெட்டியெடுத்துக் கொண்டே சென்றால் அக்கனி யின் கீழ் ரெயில் இஞ்சன்களுக்குப் போடும் "கோல்" என்று சொல்லப்பட்ட நிலக்கரி காணப் படும். இக்கரியை பூமியிலிருந்து வெட்டியெடுப் பதனால் இதற்கு நிலக்கரியென்றும் சொல்லு வார்கள். பிறகு அந்நிலக்கரியையும் வெட்டி யெடுத்துக்கொண்டே சென்றால் அதன் கீழ் மறு படியும் மலை இருக்கின்றது. நிலக்கரி எடுக்கு மிடத்தில் இந்நூலாசிரியர் போய் பார்த்தார். மறு படியும் அம்மலையை வெட்டியெடுத்தால் அதன் கீழ் பாதாள கங்கை காணப்படும். அப்பாதாள கங்கையை எடுக்க எவர்களாலும் சாத்தியப்பட மாட்டா. அக்கங்கையில் மூழ்கி அடியில் சென்றால் அக்கங்கையின் கீழ் மறுபடியும் ஆகாயமேயிருக்கின்றது. அந்த ஆகாயமானது பாதாள கங்கையையும், அப்பாதாள கங்கைக்கு மேலிருக்கும் "கோல்" யென்று சொல்லப்பட்ட நிலக்கரியையும், அந்நிலக்கரிக்கு மேலிருக்கப் பட்ட பொன் வெள்ளி முதலாகிய கனிகளையும் அதற்கு மேலிருக்கும் ஜலத்தின் ஊற்றையும் அந்த ஜலத்திற்கு மேல் நாம் நிவசித்துக் கொண் டிருக்கப்பட்ட பூமி வீடு முதலானவைகளெல் லாம் கீழே விழாதபடிக்கு பாதாள கங்கையின் கீழ் இருக்கும் ஆகாயத்தில் கலந்திருக்கும் காற்று மேலுக்குக் கிளப்பித் தாங்கிக் கொண் டிருக்கின்றது. கீழே இருக்கப்பட்ட ஆகாயத்தில் அடங்கியிருக்கும் காற்று எல்லா வற்றையும் மேடுக்குத் தூக்கித் தூக்கித் தாங்கிக் கொண் டிருக்கின்றது. நமக்குக்கீழ் இருக்கப்பட்ட காற்று இவ்வாறு செய்து கொண்டிருக்கின்றது.

நாம் நிவசித்துக்கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமிக்குமேல் இருக்கப்பட்ட ஆகாயம் என்ன செய்கிறதென்றால், நாம் மேலே வீசி எரியும் வஸ்துக்களையெல்லாம் கீழே விழும்படி தள்ளு கின்றது. அதாவது, ஒரு பந்தை மேலே ஏகாவிடுவோமாகில் அதைக் கீழே விழும்படி நமக்கு மேல்யிருக்கும் ஆகாயதில் அடங்கி யிருக்கும் காற்று தள்ளி விடுகின்றது.

பாதாள கங்கையின் கீழ் இருக்கும் காற்றோ எல்லாவற்றையும் மேலே தூக்குகின் றது நாம் நிவசித்துக்கொண்டிருக்கும் பூமிக்கு மேல் இருக்கப்பட்ட காற்றோடு எல்லாவற்றை யும் கீழே விழும்படிச் செய்கின்றது. ஆதலால், நமக்கு மேலும் எங்கும் ஆகாயம் நிறைந்திருப்ப தனால் நான் இல்லாதயிடம் ஊசி காட்டு மவ்வளவு இடமும் இல்லையென்று வேதத்தில் சொல்லியிருப்பது மெய்யேயாம், ஆதலால் பூமியின் மேல் ஊசி நிறைந்திருந்தே கடைசி யில் பொய்யாய் விட்டது.

நல்லது, இன்னும் சொல்லுகின்றோம் கவனியுங்கள், நமக்குமேல் அதிக தூரத்தில் காணப்படும் ஆகாயம் பார்க்கப்பட்டவர்களின் மாம்ஸக் கண்களுக்கு ஓர் நீலவர்ணமாய்க் காணப்படுகின்றதல்லவா? அது வாஸ்த்தவமான நீலவர்ணமென்று நினைக்கின்றீர்களா என்ன? அது வாஸ்த்தவமான நீலவர்ணமல்ல. நமது மாம்ச கண்களானது விசேஷதூலை தூரம் பார்க்கமாட்ட நமது கண்களின் திருஷ்ட்டி எத்தனை மைல் தூரம் சென்று நின்று விடுகிறதோ அந்தத் திருஷ்ட்டி நின்றயிடத்தில் நீலவர்ணமாயிருப்பதுபோல மனத்திற்கு தோன்றுமே யொழியே அவ்விடத்தில் நீல வர்ண மென்பது சிறிதேனும் இராது. நமது சமீபமாய்ச் சுற்றிலுமிருக்கும் ஆகாயம் நீலவர்ணமாய்க் காணப்படாமல் வெறும் ஆகாயமாய் எவ்வாறு காணப்படுகிறதோ இந்த ஆகாயம் போன்ற ஆகாயமே நமது கண்களின் திருஷ்ட்டிக்கு அப்பால் காணப்படுமிடத்தில் இருக்கிறதே யொழிய அவ்விடம் நீலவர்ண ஆகாய மென்பது இல்லவே இல்லை.

நமது திருஷ்ட்டிக்கு நீலவர்ணமாய்க் காணப்படும் இடத்திற்கு நாம் ஏரோபிளானில் சென்று நிற்போமே யாகில் மறுபடியும் அவ்விட மிருந்து அனேக மைல் தூரத்தில் நீலவர்ண மாய்க் காணப்படும். இவ்வாறாக அளவற்ற யோனை தூரங்கள் சென்று கொண்டு இருந்த போதிலும் அந்த நீலவர்ணமானது அவ்வாறே தோன்றிக் கொண்டே போகும் ஆதலால், நமக்குக் கீழும் நமக்கு மேலும் இருக்கப்பட்ட ஆகாயத்திற்கு முடிவே இல்லாமலிருக்கின்றது.

ஆனால், இப்படிப்பட்ட வெரும் வெளி யாயிருப்பதே கடவுளென்று எண்ணுகின்றீர்களா என்ன? அப்படி எண்ண வேண்டாம். கடவுளான வர் எப்படி இருக்கிறாரென்றால் வெளிக்குள் வெளியா இருக்கிறாரென்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அன்றியும்.

**வெட்டவெளி தன்னை மெய்யென் றிருப்பரருக்கு**
**பட்டயம் ஏதுக்கடி குதம்பாய் பட்டயம் ஏதுக்கடி**

என்று சித்தர் பாடலிலும் சொல்லப்பட் டிருக்கின்றது.

ஆனால், இதுவே வெளியாயிருக்க இவ் வெளிக்குள் மறுபடியும் எவ்வாறு வெளியாயி ருக்கின்றாரென்று கேட்கின்றீர்களோ என்ன? அதற்குக் காரணம் சொல்லுகிறோம் கேளுங்கள்.

ஓர் அறையில் சேர்ந்திருக்கும் சபை யில் எல்லோரும் உட்கார்ந்து வேதாந்த கால ஷேபம் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒருவன் பாட்டை (ரோட்டு) வழியாய் மல்லி கைப் புஷ்பம் கொண்டு போகின்றான். அவன் புஸ்பம் கொண்டுபோவதை சபையிலிருப்பவர் கள் யாரும் பார்க்கவில்லை. அப்படிப் பார்க்கா விட்டாலும் அந்த புஷ்ப வாசனையை சபையோர் எவ்வாறு அறிகின்றார்களோ அதை இனி சொல்லுகிறோம் கவனியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை வழியாய் புஷ்பம் கொண்டு போகும் பொழுது புஷ்பத்தில் அடங்கியிருந்த வாசனையானது புஷ்பத்திற்குச் சமீபமாயிருக் கும் காற்றில் கலக்கின்றது. காற்றானது எங்கும் பரிபூரணமாய் நிறைந்திருக்கும் ஆகாயத்திலேயே அடங்கியிருப்பதனால் புஷ்ப வாசனையை இழுத்துக்கொண்டு காற்றானது அதிசீக்கிரமாய் ஓடிவந்து சபையில் உட்கார்ந்திருக்கப்பட்ட வர்களிடம் இருக்கும் காற்றுடன் கலக்கின்றன. அப்பொழுது அவ்வறையிலிருக்கும் காற்றெல் லாம் புஷ்ப வாசனையாயிருக்கும்.

அதன்பிறகு, புஷ்பவாசனையுடன் இருக்கும் காற்றை சபையிலுள்ளவர்களெல் லோரும் மூக்குத் துவாரங்களின் வழியாய் உள்ளுக்கிழுத்து, அப்புஷ்ப வாசனையை அறிந்து புஷ்பம் கொண்டு போக பட்டவனைத் தாம் பார்க்காவிட்டாலும் பாட்டை வழியாய் எவனோ புஷ்பம் கொண்டு போகின்றான் என்று சபையிலுள்ள எல்லோரும் உடனே தெரிந்து கொள்வார்கள். காற்றும் அக்காற்றில் அடங்கிய புஷ்ப வாசைன இவ்விரண்டும் ஆகாயத்திற் குள்ளவே அடங்கியிருக்கின்றார். அந்த ஆகாயத் திற்கே பரப்பிரம்மமென்றும், பரமாத்மாவென் றும் சொல்லப்படும். நாம் எங்கெங்கு இருக்கின் றோமோ அங்கங்கெல்லாம் காற்றானது இருந்து கொண்டேயிருக்கின்றது. இதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமானால் விசிறியினால் விசிறிப்பாருங்கள். காற்றிருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். மீன்கள் ஜலத்திற்குள் எப்படி அடங்கியிருக்கின்றதோ அதுபோல் நாம் காற்று யென்னும் சமுத்திரத்திற்கு அடியில் அடங்கி யிருக்கின்றோம். காற்றும், கடவுளும் கண்களுக் குக் காணப்படும் வஸ்துகளல்ல. இந்த ஆகாயத்தி லேயே நட்ஷத்திர மண்டலம் சந்திர மண்டலம் சூர்ய மண்டலம் முதலானவைகளும் எந்த ஆதாரமும் இல்லாமல் அந்தரமாய் நின்றிருக் கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருகனின் சிறப்புக்களும், வளர்ச்சிப் போக்கும் பற்றிய ஓர் ஆய்வு


தயாளினி குமாரசாமி
2013 (A/L)
யா/இணுவில் மத்திய கல்லூரி


முருகன், தேவர்கள் துயர்துடைத்த தேவ சேனாதிபதி, சூரர்கள் கொட்டமடக்கிய சூரசங்காரி. அழகுக்கோர் அழகன். வள்ளி தெய்வயானை மணாளன் அம்மை அப்பன் அன்பு பெற்ற சோமஸ்கந்தன். ஔவைக்கும் நக்கீரர்க்கும் அன்பு ஈந்த அருளாளன். இத்தகு சிறப்பு மிக்க செவ்வேள் பெருமான் தமிழ் மொழியோடு நெருங்கிய தொடர்புடையவனாக விளங்குகின்றான். அவனது பன்னிரு விழிகளும் தமிழ் நெடுங்கணக்கில் உள்ள உயிர் எழுத்துக் களையும், பன்னிரு கரங்களும், ஆறு திரு முகங் களும் மொத்தம் பதினெட்டும் மெய்யெழுத்துக் களையும் குறித்து நிற்பனவாகும். வேலவன் கையிலே ஏந்திய ஆய்தம் எழுத்துக்களில் ஆய்த எழுத்தைக் குறிக்கின்றது. அதனூடு முருகனுக் கும், தமிழ் மொழிக்குமுள்ள தொடர்பு புலனா கின்றது.

கந்தன் கையிலுள்ள வேலானது எவ்வாறு பரந்து விரிந்து கூர்மையானதாகக் காணப்படு கின்றதோ, அதே போல்

**"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"**

என்று ஔவை செப்பிய வாக்கிற்கிண ங்க மானிடப்பிறப்பெடுத்த நம் ஒவ்வொருவரது அறிவும் பரந்தும் விரிந்தும் காணப்படுதல் வேண்டும். முருக வழிபாடு இன்றோ, நேற்றோ ஆரம்பமானதல்ல. தொன்று தொட்டு வந்த வழிபாடாக விளங்குகிறது. அவ்வகையில் வேலவனது தோற்றம், வளர்ச்சி பற்றி சிறிது நோக்குவோம்.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி காலத்தில் ஆறு தீப்பொறி வருவதாயுள்ள முத்திரையின் மூலம் முருக வழிபாடு நிலவியமையை அறிய முடிகின்றது. சப்பிரமணிய, பிரமணிய ஆகிய சொற்கள் மூலம் வேதகாலத்திலும் முருகவழிபாடு இருந்தமை தெளிவாகின்றது.

தொடர்ந்து இதிகாச காலத்தில் குகன், குமரன், சண்முகன் ,வேலாயுதன் போன்ற பெயர்களால் முருகன் அழைக்கப்பட்டான். புராணங்களிலே கந்தப்பெருமான் அசுரர்களை அழிக்க உற்பத்தியான வரலாறு பற்றி கந்த புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இவை யாவும் முருகவழிபாடு நிலவயமையை குறிப்பிடு கின்றது. மேலும் குப்தர் காலத்தின் நாணயங் களை அடிப்படையாக வைத்தும் அரசர்களது நாமத்தை அடித்தளமாய் கொண்டும் முருக வழிபாடு நிலவியமையை உறுதிப்படுத்தலாம்.

தென்னிந்திய வரலாற்றுக்காலத்தில் இயற்கை நெறிக்காலத்தே செவ்வேள் வழிபாடு நிலவியமையை மலைபடுகடாம், திருமுரு காற்றுப்படை, மதுரைக்காஞ்சி போன்ற நூல்கள் புலப்படுத்துகின்றன. "போரினை வெல்ல வல்ல முருகன்" என மலைபடுகடாமும் "ஆல்கெழு கடவுளின் புதல்வன்" என்று திருமுருகாற்றுப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையும் முருகன் பற்றி விதந்து கூறுகின்றது. அறநெறிக்கால நூலாகிய சிலப்பதிகாரம் "ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்" எனவும் தொல்காப்பியம் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்று குறிப்பிடுகின்றது. இவ் ஆதாரங்களின் மூலம் முருக வழிபாட்டின் சிறப்பை அறிய முடிகின்றது. இதனைத் தொடர்ந்து முருக வழிபாடு பல்லவர் காலத்தில் திகழ்ந்தமையை விக்கிரகங்கள் வைத்து வழிபட்டமை மூலம் அறியலாம். பின் சோழர் காலத்திலும், நாயக்கர் காலத்திலும் காணப் பட்டமையை அருணகிரிநாதர் பாடல், குமர குருபரர் பாடல், அமைக்கப்பெற்ற ஆலயங்கள் என்பனவும் வெளிப்படுத்துகின்றது. இவ்வாறாக முருக வழிபாடு தொன்றுதொட்டு படிப்படியாக வளர்க்கப்பட்டு இன்று ஈழத்திலும், தமிழ் நாட்டிலும் விஞ்சி நிற்கின்றதெனில் மிகை யாகாது.

திருமுருகாற்றுப்படை எனும் இலக்கிய வடிவம் கம்பனது ஆறுபடை வீட்டின் சிறப்பு பற்றி விளக்கி நிற்கின்றது. வேண்டிய மாம்பழத்தை வெள்ளைப் பனித்தலையர் தலையனுக்கு கொடுத்ததற்கு ஆண்டியுங்கோலமிட்டு அமர்ந்த மலை பழனிமலை. தந்தைக்கு பிரணவப் பொருளுணர்த்த குருவாய் மலர்ந்தருளியது சுவாமிமலை. சூரர்கள் கொட்டமடக்கிய மலை திருச்செந்தூர். வள்ளிழயைக்கடிமணம் புரிந்து அமர்ந்த மலை திருத்தணிகை மலை. தெய்வ யானை மணாளனாக வீற்றிருக்கும் மலை திருப் பரங்குன்றம். வள்ளி, தெய்வயானையோடு தெய்வ சமேதரராக வீற்றிருக்கும் மலை பழமுதிர்ச்சோலை. இப்படியெல்லாம் முருகன் வீற்றிருந்து அருள் பொழிவான் என்று நக்கீரர் கூறியுள்ளார்.

முருகப்பெருமான் ஒளவையை நாவற்கனி ஈந்து பச்சை மயில் மீதமர்ந்து ஆட் கொண்டார். அருணகிரிநாதரை இறப்பிலிருந்து தடுத்து திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் அருள வழிசெய்தார். மேலும் கச்சியப்பருக்கு "திகட சக்கர......." என அடியெடுத்துக் கொடுத்து கந்தபுராணம் அருளிச்செய்ய அருள் கொடுத்தார். குமரகுருபரரை பேசச் செய்தார். இவ்வாறாக கந்தனவன் பெருமைகளை சொல்வதற்கு முடியாது. அவன் அருட்கடலை எடுக்க எடுக்க வற்றாத வெள்ளமாகப் பெருக் கெடுக்கும்.

இத்தகு நாயகன் காலனுக்கு காலனாக வும் பாலனுக்கு பாலனாகவும் சரவணப் பொய் கையில் தோற்றம் பெற்ற அழகனாகவும் வேலைத்தாங்கிய வேலவனாகவும், மயிலையு டைய மயில் வாகனனாகவும், ஆறுமுகத்தையு டைய ஆறுமுகனாகவும் வீற்றிருந்து கேட் போர்க்கு வரம் நல்கும் குமரனாகவும் விளங்கு கின்றான். தொன்று தொட்டு இன்றுவரை சிறப்புக்கள் புடைசூழ வளர்ச்சி பெற்ற மதமான கௌமார நெறியின் கதாநாயகனாகவும் வடிவேல் பெருமான் அவனை உளமுருகி வழிபட்டு பதினாறு பேறுகளும் சிறப்புடனே பெற்று வையத்தினுள் வாழ்வாங்கு வாழ் வோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு

கு.றஜீபன்

"இந்திய தரிசனங்களில் சைவசித்தாந்தம் ஒன்றே பதியை விகாரமடைவதாக காட்டாத ஒரு தத்துவக் களஞ்சியம்" என்ற சைவசித்தாந்த கருத்தியலுக்கு ஆணித்தரமான விளக்கம் கொடுத்தவர்களில் ஈழத்தவர்களின் பங்கு உன்னதமானது. சைவசித்தாந்தவளர்ச்சிநிலைக் கண்ணோட்டத்தில் ஈழத்தவர்களின் பங்கை வெறும் வரலாற்றுக் கண்கொண்டு பார்ப்பதை விட "சைவசித்தாந்த கருத்தியலை" இவர்களின் நோக்கீட்டுச் சிந்தனை எவ்விதத்தில் வளர்த்திருக்கிறது அல்லது கனதி சேர்த்திருக்கிறது என்ற வழிகளில் ஆராய்வதே பயனுடைய தொன்றாக கருதப்படுகிறது.

கி.பி. $13^{ம்}$ நூற்றாண்டளவில் உணர்வு நிலைப்பட்ட, அறிவுநிலைப்பட்ட இரண்டு இயங்குதளங்களையும் பெற்று முடிந்த முடிபுகளைக் கூறுகின்ற கணிதவியல் நிறுவுகைத் தத்துவமாக வெளிவந்ததுதான் சைவசித்தாந்தம். இச் சைவசித்தாந்த கருத்தியலமைவு தனது தனது பன்முகப்பரிமாணங்களில் கனதிச்செறிவு விரிவாய் பரிபக்குவ முறையில் உணர்த்தி இருக்கும் பாங்கில் சைவசித்தாந்த அறிஞர்களின் பங்களிப்பு மிகமுக்கியமானதாகும். இவ் அறிவுநிலைப் பங்களிப்பில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு பற்றியே இங்கு நோக்கத்தக்கது.

சைவசமயத்தின் தொன்மை போல, ஈழத்தில் சைவமானது மிகத்தொன்மையான காலத்தில் இருந்தே இருந்துவருகிறது என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. சிவபூமி என்று போற்றப்படுகின்ற அளவிற்கும், நாயன்மார்களால் பாடல்பெறப்படும் அளவிற்கும் புகழ் கொண்ட சிவாலயங்கள் ஈழத்தில் இருந்திருக்கின்றன. அப்படிப்பட்ட சிவவழிபாடும், சிவ வாழ்க்கையும் வளப்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு நாட்டில் சிவதத்துவம் பற்றிய கருத்துநிலை தோன்றுவது இயல்பான ஒன்றே.

சிவம் எனும் செம்பொருள் துணிபாக கொள்ளப்படும் சைவசித்தாந்தம் ஈழத்தில் அறிவியலாகவும்வாழ்வியலாகவும்இன்றுவரை இருந்துவருவதற்கு ஈழத்தறிஞர்களின் சிந்தனை விருத்தி ஈர்ப்பே காரணமாக அமைந்திருக்கிறது. இவர்களின் சித்தாந்தத்தெளிவு ஈழத்துக்கு மட்டுமல்ல உலகத்துக்கே இன்றும் பயன்படுகிறது என்பதை ஆதாரபூர்வமாக நிறுவக்கூடியதாக உள்ளது. அந்தவகையில் சைவசித்தாந்த வளர்ச்சிக்கு தமது பங்களிப்பினைக் கொடுத்தவர்களாக ஞானப்பிரகாசர், ஆறுமுகநாவலர், காசிவாசிசெந்திநாதையர், சபாரத்தின முதலியார், சேர்.பொன். இராமநாதன், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், அ.விசுவநாதபிள்ளை, திருவிளங்கதேசிகர், திக்கம்செல்லையா, பண்டிதமணி கணபதிப்பிள்ளை, அருளாநந்த சிவம், மு.ஞானப்பிரகாசம், இலக்கிய கலாநிதி பண்டிமணி மு.கந்தையா என்று ஈழத்தறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் பங்களிப்பு இன்றுவரை இருந்துவரு மிடத்து இக்கட்டுரையின் எல்லையை இவர்கள் வரை வரையறுத்து இவர்களின் பங்களிப்பைப் பற்றியே இங்கு பேசப்படுகிறது.

ஈழத்துச் சித்தாந்த அறிஞர்கள் வரிசை யில் முதலில் காணப்படுபவர் ஞானப்பிரகாசர். இவர், வாழ்ந்காலம் 16ம் நூற்றாண்டு. இக் காலப்பகுதியில் பசுக்கொலைப்பழிக்கு தாமும் ஆளாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையில் இருந்து விடுபடுவதற்காக இந்தியா சென்றடைந்தவர். அங்கு கிடைக்கப் பெற்ற ஆன்மீகத் தொடர்புகளால் ஆன்ம விழிப்புற்று அதன் விழைவாக வடமொழியில் ஒன்பது நூல்களும், தமிழில் சிவஞான சித்தியாருக்கு உரையும் எழுதியுள்ளார். சைவசித்தாந்த அறிவியல் விளக்கத்திற்கு இரு மொழிவாயிலாக சேவைசெய்யதோடு அவரது உரைகள் சைவசித்தாந்த ஞானம், சிவாகமப் பின்னணி கொண்டதெனும் உண்மையைப் புகுத்திப்பசுமை மங்காமற் புலப்படுத்துவன என பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுகி றார்.

மேலும் சைவசித்தாந்த சாத்திரங்களில் நேரடியாகத் தலையிட்டு உரைவிளக்கம் செய்த ஈழத்து முதல் அறிஞர் என்ற பெருமையும், சிவஞான சித்தியார் உரையாசிரியர்களில் மூன்றாமவர் என்ற சிறப்பும் இவரையே சாரும். இவருடைய உரைகள் முப்பொருள் உண்மை விளக்கத்தெளிவை ஏற்படுத்துவதோடு சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியில் சிவாகமங்களின் பங்கு முக்கியமான தென்றும் சமஸ்கிருத மொழியறிவின் பங்கு அவசியமானதெனும் கருத்துநிலைகளைக் கொண்டவையாக அமைந் திருக்கிறது.

இவரால் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்ட ஒன்பது நூல்களுள் மூன்று சிவாகமப் புதைய லாகவுள்ள சிவயோகம் பற்றியவையாகும். அதாவது, சிவயோகசாரம், சிவயோகரத்தினம், பிரகசதீபிகை என அம்மூன்றும் பெயர் பெறுகி றது. இவற்றுள் சிவயோகரத்தினம் என்ற நூல் புதுச்சேரியிலுள்ள பிரான்சிய ஆகம ஆராச்சி நிறுவனத்தினால் மறுபிரசுரம் செய்யப்பட்டுள் ளது. ஏலவே 1928இல் யாழ். பருத்தித்துறை சிவஸ்ரீ முத்துக்குமாரசாமிக்குருக்களால் பரி சோதிக்கப்பெற்று நல்லூர் த.கைலாசபிள்ளை யால் பருத்தித்துறை கலாநிதி அச்சியந்திர சாலையில் இரண்டும் ஒரேதடவையில் பிரசுரமாகியுள்ளன.[2]

இவர் தமிழிலே செய்த உரையாகக் கருதப்படுவது சிவஞானசித்தியார் உரையாகும். சித்தியார் உரையில் சைவசித்தாந்தத்துக்கு முரணான ஒரு கருத்துப் புகுத்தப்பட்டுள்ளது என சித்தாந்த அறிஞர்கள் கண்டிக்கும் வகையில் சிந்தனைக்குரிய உரையாக இவ்வுரை காணப் படுகிறது. அதில் அவர் குறிப்பிட்ட விடயம், முத்தியடைந்த உயிர் சிவனுக்குச் சமமாக இருக்கும் என்ற சிவசமவாதக் கொள்கையை இவர் உரைகொண்டுள்ளது என்பதாகும். இக் கருத்தினை கண்டிப்பவர்களில் முக்கியமான வராக 18ம் நூற்றாண்டைச் சேர்ந்த சித்தாந்தப் பேரறிஞர் சிவஞானமுனிவர் ஆகும். ஞானப் பிரகாசர் தனது உரை சிவசமவாதக் கொள்கையை பிரதிபலிக்கவில்லையென்று இவரே கூறியிருக்கிறார். எடுத்தகொள்கையை எவரும் மறுக்கமுடியாத வகையில் தர்க்க முறையில் விளக்கும் திறமை ஞானப்பிரகாசரு க்கே உண்டு என்பது ஈழத்துச் சைவசித்தாந்த அறிஞர்களின் கருத்தாகும்.

இவ்வாறு சிவஞானசித்தியாருக்கு இவர் வழங்கிய உரைத்திறம் குறித்து இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப் பிடுவதை இவ்விடத்தில் நினைவுகொள்வது சாலச்சிறந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவஞானசித்தியார்க்கு அவர் கண்டுள்ள வுரை சிவயோகக் காட்சியுண்மைகள்**

**நிரம்ப இழையோடப் பெற்றிருக்கக் காணலாம். நூலில்வரும் அளவையியல்**

**ஏழாஞ்செய்யுள்தரும் தன்வேதனக்காட்சி, யோகக் காட்சிகளை விளக்குகையில்**

**மற்ற உரைகாரார்யாருஞ் செய்யாதவகையில் தன்வேதனக் காட்சியிலிருந்து**

**யோகக்காட்சி பரிணமித்தெழும் விதத்தை அவர் விளக்குந்திறமும் முதலாஞ்**

**சூத்திரத்து 31ஆம் செய்யுளில் வரும் "சுற்ற நூற்பொருளுஞ் சொல்லும் கருத்தினி**

**லடங்கித் தோன்றும் பெற்றி" , "சாக்கிராதி உயிரினிற் பிறந்தொடுக்கமுறுதல்"**

**என்பவற்றை அவர் விளக்குந் தெளிவும், 9ஆம் சூத்திரத்து 7ஆம் செய்யுளில்**

**சோஹம், சோயம், சிவோஹம், சிவமிதம் என்பவற்றை இனங்காட்டும் விதமும்**

**போல்வன இவ்வுண்மைக்கு ஆதாரமாம்.**

**சித்தசிவயோகி, சாத்தியசிவயோகி, சிவசாதி குறித்த சிவபாவனை, சிவப்பொருள்**

**மாத்திரங் குறித்த சிவபாவனை, கிருபா சம்சித்தபஞ்சகிருத்தியகர்த்திருத்வம்,**

**அவர்சனீய சம்சித்த பஞ்சகிருத்திய கர்த்திருத்வம், சாதிமான், சாக்ஷாத் காரவான்**

**என்றாற் போல நுண்பொருள் நிலைகளுள் நுனுகிநுனுகிப் பகுத்துக் கானும் அவரது**

**அகமுக விருத்தி துல்லியமானது. இத்தகைய நுண்ணாய்வுக்குச் சூக்குமவிசாரம் என்ற**

**பெயர் வழக்கு அவராலேயே கொடுக்கப்பட்டிருக்கக் காணலாம்.**

என்றவாறு அமைகின்றது.

சைவசித்தாந்தம் தமிழர்களின் மத்தியில் பிறந்த தத்துவம் என்று ஜி.யூ.போப் போன்ற உலக அறிஞர்களின் பாராட்டைப் பெறுமளவிற்கு ஒரு கனதியான தத்துவமாக இது மிளிர்வதற்கு அதன் இறுக்கமே காரணமெனலாம். அதனால்தான் மெய்கண்ட சாத்திர நூல்களுக்கு முன்னமே எழுந்த ஞானாமிர்தம் என்ற நூலும் சைவசித்தாந்த விரோதப் போக்கெனப்படும் சிவனைப் போல் சிவனின் சக்தியையும் அறிவுடைப் பொருளாகக் கொள்வது சைவசித்தாந்தக் கொள்கை. ஆனால், ஞானாமிர்த ஆசிரியர் ஒரு இடத்தில் சிவனின் கிரியா சக்தியை அறிவற்ற ஒன்றாக கூறிவிட்டமையே ஞானமிர்தம் மெய்கண்ட சாத்திரங்களுக்குள் சேர்க்கப் படாமைக்கான காரணமாகும். அந்தளவிற்கு இறுக்கமான கொள்கைகளைக் கொண்ட சைவ சித்தாந்த உலகு ஞானப்பிரகாசர் கருத்தினை ஏற்க மறுப்பதில் நியாயமும் உண்டு. ஆனாலும் தர்க்கரீதியான விளக்கத்தினை நுணுகி நோக்குவதும் ஆராய்ச்சி முடிவாகையால் அந்த ஆராய்ச்சியின் வழி ஞானப்பிரகாசர் கருத்து சித்தாந்த உலகில் செலுத்திய ஆதிக்கத்தை பண்டிதர் மு. கந்தையா அவர்கள் இருவரது கருத்து நிலையினையும் எடுத்து ஆராய்ந்திருப்பதை இங்கு தருதல் சாலச்சிறந்தது.

"முத்தியில் ஒரு வகையில் , உயிர் சிவத்துக்குச் சமமாக இருக்கும் என்ற கருத்து ஞானப்பிரகாசருக்கு முன்னரே சைவசித்தாந்த உலகில் நிலவியதொன்று. மிருகேந்திரம், சர்வஞ்ஞானோத்திரம் ஆகிய ஆகம நூல்களில் இது பிரதிபலிக்கப் படுகின்றது. என்பது அறிஞர் கருத்து. எட்டாம் நூற்றாண்டில் எழுந்த அடப் பிரகரண நூல்களின் ஆசிரியர்கள் சிலரும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தத்துவப்பிரகாசிகை உரையாசிரியரும், சித்தியாருக்கு உரையெழுதிய மறைஞானதேசிகரும் இன்னும் சிலரும் இக்கருத்தைத் தழுவி எழுதியுள்ளனர் என்று பண்டிதர் முதலில் விளக்குகிறார். பின்னர் வந்த சித்தாந்த நூலாசிரியர்களும் உரையாசிரியர்களுமான சிவாக்கிரயோகிகள், சிவஞானமுனிவர், போன்றோர் இக்கருத்தை விமர்சித்து ஒதுக்குவதை கூறுகிறார். அவர்களின் மறுப்புகளை விரிவாக எழுதியபின் ஞானப் பிரகாசர் தமது சிவசமவாதக் கோட்பாட்டை நிறுவும் திறன் ஆராயப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானப்பிரகாசர் கருத்தின்படி முத்தியில் ஆன்மாக்கள் சிவனுக்கு சமமாக இருப்பினும் சிவ ஆணை வியாபகத்துக்கு (விரிவுக்கு) உட்பட்டே இருக்கும். அவற்றின் செயல்கள் சிவனின் ஆணைக்குட்பட்டு அதிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கும். அதனால் அவை ஐந்தொழில் செய்யவும் கூடும். ஆனால் இது தாமாகச் செய் யாமல், சிவனாணைக்குட்பட்டு செய்யப்படுவ தாகும். ஆகவே சிவன் மட்டுமே பஞ்சகிருத்திய கர்த்தா (ஐந்தொழில் செய்யும் உரிமையுள்ள வர்) ஆன்மாக்கள் அதனைச் செய்பவர்களே ஒழிய, கர்த்தாக்கள் ஆகார். இது போன்ற கருத்துக்களைத் தரும் ஞானப்பிரகாசர், தான் சிவசமவாதியல்ல என்று தனது சித்தியாருரை யில் பின்வருமாறு எழுதுகிறார்.

**"நியாயப்படியானதான ஆன்மாவின் முத்திநிலை இதுவென்கிறேன் என்பதற்காக நான் சிவசமவாதி யல்லேன், அநேகசுரவாதியு மல்லேன்"**

ஞாப்பிரகாசரின் இந்த விளக்கத்தை எடுத்துக் கூறியே அவரது கருத்துநிலை ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஆகவே ஞானப்பிரகாசர் கருத்து சிவசம வாதம் சார்ந்ததா? இல்லையா? என்ற ஐயத்தில் அது சிவசமவாதம் அல்ல எனும் முடிவுக்குவரும் நிலையில் "அரசனுக்கு அடக்கமும் விசுவாசமு மான பத்தினியாய் இருக்குமளவில் அரசிக்கும் தார்மீகரீதியான ஆட்சியுரிமைக்கான மகத்துவம் உண்டு என்பதை மறுப்பதெப்படி? என்ற விளக்கத்தின் ஊடாகவும், வீட்டில் வாடகைக்கு இருக்கும் ஒரு குடும்பம் வீட்டுக் காணியில் சொந்தங் கொண்டாடுவது எப்படி? வரும்படி பெறவும், எல்லையைச் செப்பனிடவும் காணிக்காரனுக்கே உரிமை உண்டு. காணிக் காரனது உரிமைகளில் குடியிருப்பவர்கள் தலையிடமுடியாது. அவன் செய்கையில் இவர்கள் உரிமை கொண்டாடவும் முடியாது என்பது போலத்தான் முத்திநிலையில் சிவத் தோடு ஒன்றுகலக்கும் முத்தான்மாக்கள் சிவனின் பஞ்சகிருத்தியத்திற்கு உரித்துடைய வர்கள் அல்ல. அவர்கள் சிவக்கலப்பில் இருக்கி றார்களே தவிர சிவமாய் ஆகிவிடவில்லை என்பதே சைவசித்தாந்த உலகிற்கு ஞானப்பிர காசர் கொடுக்கும் புதுவிளக்கமாக அமையலாம்.

ஆகவே சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பில் முதன்மையான வர் எனக் கருதப்படும் ஞானப்பிரகாசர் பங்களிப்பும் அவர் சிந்தனையும் இன்றுவரை சைவஉலகத்தால் சரிவர ஆராயப்படாமல் இருக்கிறது. இன்று தென்னகத்தாரால் சிவஞான சித்தியார் அறுவர் உரையில் ஞானப்பிரகாசர் உரையை ஒதுக்கும் அளவிற்கு உள்ளது. 3 இத்தருணத்தில் ஞானப்பிரகாசரின் சித்தாந்த நோக்கினை ஆராய்வுக்கு உட்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக அமைவதோடு அவருடைய தத்துவநோக்கு மேலைத்தேச அறிஞர்கள் டேகாட், சிக்மன் பிரைட் தத்துவங்கள் போல் ஞானப்பிரகாசர் தத்துவம் எனும் தனிப்பெரும் தத்துவமாக வளருவதற்கு வாய்ப்புகள் உள்ளது. ஆகவே சைவசித்தாந்தப் பணியில் அறிவியல் ஆராய்ச் சிப் புரட்சியை ஞானப்பிரகாசர் ஏற்படுத்தி இருக்கிறார் என்றும் எதிர்கால ஈழத்துச் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு இவரின் சிந்தனைகள் உரம் சேர்க்குமென்றும் கூறலாம்.

**ஆறுமுகநாவலர்**

ஞானப்பிரகாசர் மரபின் தொடர்ச்சியாக ஈழத்தில் உதித்த சித்தாந்தச் சூரியன் ஆறுமுக நாவலர் ஆவர். கடந்த நூற்றாண்டின் இந்நிலத் துச் சிவாகமப் பொக்கிசமாய், சைவசித்தாந்த தெய்வீக வைப்பாய் விளங்கியவர் நாவலர் பெருமான். சமய குரவர்களில் ஐந்தாவது குரவராக போற்றத்தகும் தகுதிபடைத்தவர் நாவலர் ஒருவரே. நாவலர் இன்றேல் ஈழத்தில் சைவம் இல்லை எனும் அளவிற்கு ஈழத்துச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவஉலகின் முடிமணியாய் நாவலர் விளங்குகிறார். அவர் ஆற்றிய சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி, நூற்பிரசுரப்பணி, ஆகிய அனைத்திலும் சைவசித்தாந்த உத்வேகமே காணப்பட்டது என பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடுகிறார்.

சைவசமயத்தின் மாட்சிமை பொருந்திய தத்துவமாக விளங்கும் சைவசித்தாந்தத்தை உலகில் எவரும் உணர்த்தியிராத அளவில் **"பெறுதற்கரிய இம்மானுட சரீரத்தை நாம் பெற்றது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறற் பொருட்டேயாம்."** என்று விளக்கியிருப்பது அவரின் சைவசித்தாந்த ஞானத்திற்கு சிறந்த சான்றாகும்.

இதனைத் தொடர்ந்து நாவலர் ஆற்றிய பிரசங்கங்கள் அனைத்தும் விசேட சைவ சித்தாந்த விளக்கங்களாகவும் திருவாவடுதுறை ஆதீனத்தில் அவர் ஆற்றிய பதி, பசு, பாசம் பற்றிய பிரசங்கம் சைவசித்தாந்த செறிவாக இருந்ததனால்தான் "நாவலர்" என்ற உயர் விருதும் இவருக்கு கைகூடியது. இதனைவிட கந்தபுராண படனத்தின் போது "வேதகாட்சிக்கும் உபநிடத காட்சிக்கும்...." என்ற செய்யுளுக்கு இவர் உரைத்த விளக்கவுரை சைவசித்தாந்த சாரமிர்தமாய் போற்றப்பெறுகிறது. 4 இவ் வகையில் இவரின் பிரசங்கத்தின் வாயிலாக சைவசித்தாந்தமே முகிழ்ந்திருக்கிறது ஆகவே சைவசித்தாந்த அறிவியலை சாதாரண மக்கள் வரை எடுத்துச்சென்று விளக்கி, ஈழத்தில் சைவசித்தாந்த பரம்பலை மேற்கொண்ட சித்தாந்தக் களஞ்சியமாக நாவலர் திகழ்கிறார்.

இனி அவரது நூல்களை எடுத்து நோக்கினால் திருத்தொண்டர் புராண சூசனம் சைவசித்தாந்த நோக்கில் எழுதப்பட்டு துரதிருஸ்டவசமாக அவற்றை நிறைவு செய்யா மலே இறைபதம் அடைந்தார். ஆனாலும் அவர் பதிப்பித்த சிவஞானபோத சிற்றுரை, சிவஞான போத மாபாடியம், இரண்டுடன் அவரோத வுந்தியார், கொலை மறுத்தல் முதலிய சைவசித் தாந்த நூல்கள் அவருக்கிருந்த சைவசித்தாந்த ஈடுபாட்டினைக் காட்டுகின்றன. சைவசித்தாந்தம் கூறும் ஒழுக்கவியல் முறைமைகளுக்கு ஏற்ப சைவநீதி ஒழுக்க நூல்களாகிய வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, மூதுரை, ஆகியன அவரால் உரைவிளக்கம் கண்டன. தொடர்ந்து அவரது முதலாம் சைவவினாவிடை சைவசித்தாந்த அரிச்சுவடியும், இரண்டாம் சைவவினாவிடை யின் முதல் ஐந்தியல்களும் சிவஞானசித்தியார் பொருளறிமுகமாகவும் அமைந்திருக்கின்றன.

ஆகவே, ஈழத்துச் சித்தாந்த பரம்பரையில் பெருமைக்குரியவராகக் கருதப்படும் நாவலரின் சைவசித்தாந்த பங்களிப்பானது வெறும் அறிவியல் பூர்வமான ஆராய்ச்சிப் பணியில் மட்டும் நின்றுவிடாது சைவசித்தாந்த வாழ்வியலையும் மக்கள் மத்தியில் உயர்த்தி சமய விழிப்புணர்வினை ஏற்படுத்திய மகானாக நாவலர் விளங்குகிறார்.

**காசிவாசி செந்திநாதையர்**

நாவர் வழியில் அவருக்கு உறுதுணை யாக நின்று பெரும்பணிகள் ஆற்றிச் சைவத்தை வளர்த்தவர் செந்திநாதையர். குப்பிழானில் பிறந்த இப்பெருமகன் பத்தாண்டுகள் காசியி லிருந்து வேதாகம ஆராய்ச்சி செய்தவர். இதனால் காசிவாசி செந்திநாதையர் என்று அழைக்கப்படுகிறார்.

ஈழத்துகச் சைவசித்தாந்த வளர்ச்சியில் செந்திநாதையரின் பங்களிப்பு குறிப்பிடத் தக்கது. சைவசித்தாந்த ஆராய்ச்சி நூல்கள் கண்டனங்கள் உட்பட பல நூல்கள் எழுதி யுள்ளார். காசிவாசி செந்திநாதையர் என்ற நூலில் அவரின் இருபத்தொரு வெளியீடுகள் தரப்பட்டுள்ளன. இவரால் இயற்றப்பட்டவை நாற்பத்தைந்துக்கும் மேல் என்று கூறுவோரும் உண்டு. இவற்றை விடப் பத்திரிகைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகளாக வெளிவந்தவைகளும் வெளி வராதவைகளும் மிகப்பல.

செந்திநாதையர் பற்றிய பண்டிதமணி கணபதிப்பிள்ளையின் பினவரும் கூற்று சிந்திக்கற்பாலது.

**"ஆறுமுகநாவலரின் ஒரு மாணவர் செந்திநாதையர். டாக்டர் உ.வே. சுவாமி நாதையர் தமிழுக்குச் செய்த பணி போன்ற பெரும் பணியைச் செந்திநாதையர் சைவ சமயத்துக்கு செய்திருக்கின்றார்.... அவர் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரதிநிதி"**

மேலும் இவரது நுலாக்கத்திறன் பற்றி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் குறிப்பிடு மிடத்து

"ஐயரின் நூலாலகங்கள் தனித்துவ மானவை. அவர் ஆக்கங்களுள் சிவஞானபோத வசனாலங்கார தீபம் என்ற நூல் சிவஞான போதத்தின் வெளிப்படைப்பொருள், குறிப்புப் பொருள் அனைத்தும் கற்போருள்ளத்தில் அச்சமுழுத்தமாகப் பதிய வைக்கும் விசேட உத்தியோடு கூடியது. அதிலுள்ள ஒவ்வோர் பதமும் அதுவதன் செம்பொருளும் தொடர்ந் தேர்ச்சியாக நினைவிற் பதியவைக்கும் வினாத் தொகுதிகளோடு கூடியது. மற்றொரு பெயர் கொடுப்பின் சிவஞானபோதப் பொருள் நுணுக்கப் பிரகாசிகை எனத்தக்கது. "தமக்குச் சிவஞானபோதப் பொருளில் தெளிவு பிறக்க உதவியது செந்திநாதையரின் வசனலங்காரதீ பந்தான்" எனத் திரு. க. வச்சிரவேல்முதலியார் பாராட்டக் கேட்டதுண்டு. பிரமசூத்திர நீலகண்ட பாஸ்சியம், தேவாரம் வேதசாரம், சைவ வேதாந்தம் என்ற மூன்றும் ஐயரின் ஏனைய நூல்களிற் பிரசித்தமானவை. அவற்றின் பின்னணி, விபரமாக ஆய்ந்துணரத்தக்கதாகும்."

உபநிடதங்கள் பிரசூத்திரம் ஆகியவற் றைக் காட்டி பிரமம் ஒன்றே உண்மைப்பொருள் அதற்கு வேறாக உண்மைப்பொருள் எதுவும் இல்லை. ஆன்மா என ஒன்றில்லை என ஏகான்மவாதிகள் மாயாவாதிகள் ஆகியவரின் கொள்கைகள் அமைந்துள்ளன. அவர்கள் கொண்ட உபநிடதங்களிலும் பிரம்ம சூத்திரத்திலும் இத்தகைய கொள்கை இல்லை. என்றம் அதனை அவர்கள் வலிந்தும் திரித்தும் பொருள் கண்டனர் என்றும் செந்திநாதையரின் ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன. 4

வடமொழி மூலநூல்களில் வேண்டு மென்றே சில மாற்றங்கள் செய்து சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அகற்றப்பட்டிருப்ப தையும் செந்திநாதையர் கண்டார். நீலகண்ட சிவாச்சாரியார் போன்றோரின் சித்தாந்தக் கருத்துக்களும் மாற்றப்பட்டு, வேறுபட்ட கருத்துக்கள் புகுத்தப்பட்டிருந்தன. இத்தகைய முரண்பாடுகளை நீக்கி உண்மை நூற் கருத்தை வெளிக்கொணர்வதாக இருந்த ஒரு பெருநூல் செந்திநாதையரின் நீலகண்ட பாசிய தமிழ் மொழிபெயர்ப்பு அந்நூலில் "உபக்கிரக மணிகை" என்ற பெயரில் செந்திநாதையர் எழுதிய இரு நீண்ட பகுதிகள் உண்டு. இதில் ஒவ்வொரு உபக்கிரக மணிகைக்கும் செந்தி நாதையருக்கு ஒவ்வொரு கலாநிதிப்பட்டம் கொடுக்கலாம் என்று பண்டிதமணி கணபதிப் பிள்ளை எழுதுவதுண்டு.5இவ்வாறாக ஈழத்து அறிஞர்களின் சித்தாந்தப் பங்களிப்பானது சைவ சித்தாந்தத்தை உயர்நிலைத் தத்துவமாக விளங்குவதற்கு காரணமாய் அமைந்திருக்கி றது.

**சேர்.பொன். இராமநாதன்**

ஈழத்தின் சைவசித்தாந்த அறிஞர்களில் அடுத்தவராக நோக்கத்தக்கவர் சேர். பொன். இராமநாதன் அவர்கள். இந்திய மண்ணிலிருந்து எழுந்த விவேகானந்த சூரியன் மேற்குலக நாடுகளில் இந்து தத்துவ ஒளிபாய்ச்சியது போன்று ஈழத்தில் இருந்து எழுந்த இராமநாதன் எனும் சூரியன் மேற்குலக நாடுகளுக்கு சைவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாந்த ஒளிபாய்ச்சி பெருமை சேர்த்திருக்கிறது. இராமநாதன் அவர்களது சித்தாந்தப் பங்களிப்பானது எல்லைகள் விரிந்து மேற்குலகத்தார்க்கு சைவசித்தாந்தத்தை எடுத்துச் சென்று விளக்கிய சித்தாந்தச் செம்மலாக விளங்குகிறார். அவரது அமெரிக்கச் சொற்பொழிவுகள் சித்தாந்த விளக்கமாக அமைந்திருந்தது. 5 மேலும் 1905இல் சென்னை சைவசித்தாந்த மஹாசமாஜம் நிகழ்த்திய முதலாவது மகாநாட்டுக்கு இவரே தலைவராக அன்றைய அறிவியல் மேதைகளால் வரிக்கப் பட்டிருந்தமை அவரின் மெய்யியல் விளக்க ஆளுமைக்கு சான்றாகிறது.

உலகியலில் நிலையாமை பற்றிய உணர்ச்சியே ஆன்மஞானவிசாரத்தின் அடித்தளம் என்பதற்கிணங்கவே இராமநாதனின் சைவசித்தாந்தப் பேச்சுக்கள் அமைந்திருந்தன. அவருடைய இப் பேச்சுக்களை லீலாவதி இராம நாதன் அம்மையார் "கீழைநாட்டு மாணவர் களுக்கான மேலை நாட்டுக் காட்சிகள் (The western pictures to estern students) என்ற நூலும், மிறன் ஃவல்ப் தொகுத்து வெளியிட்ட ஆன்ம கலாசாரம் (Soul culture) என்ற நூலும் அவரது சைவசித்தாந்த அறிவியலையும் சைவ சித்தாந்தத்திற்கு அவரது பங்களிப்பினையும் மதிப்பிடக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு சைவசித்தாந்த வளர்ச்சிக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பில் இராமநாதன் அவர்களது பங்களிப்பு உலகத்தரம் வாய்ந்தது. ஆனால் அவரது சைவசித்தாந்த ஆளுமை, பங்களிப்புப் பற்றிய சரியான ஆய்வுமதிப்பீடு தமிழில் தோன்றவில்லையோ என்ற ஆசங்கை விரிகிறது.

**சைவப்பெரியார் சிவபாதசுந்தரம்**

ஈழத்து அறிஞர்கள் வரிசையில் "சைவப் பெரியார்" என்ற அடைகொடுத்து பெருமை யோடு அழைக்கப்படுபவர் சைவப்பெரியார் சிவபாாதசுந்தரம் ஆவார். கல்விச்சேவை, சைவபரிபாலனம், சைவசித்தாந்த போதனை, ஆகிய துறைகளில் நாவலர் பெருமான் விட்ட இடத்திலிருந்து தொட்டுத் தொடர்ந்த ஒருவர் இவராவர். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் சைவசித்தாந்தம் பற்றி எழுதியவைகள் வெகுபிரசித்தமானது. தமிழில் இவர் எழுதிய நூல்களில் மிகவும் பேசப்படுவது திருவருட்பயன் உரைவிளக்கமாகும். இன்று வரை இவ்வுரையின் பெருமை பேசப்படுவதோடு சாதாரண மாணவர்கள் கூட சைவசித்தாந்தக் கருத்தை எளிதில் விளங்க வைக்கக் கூடிய அளவிற்கு இலகுநடையில் தெளிவுமுறையில் அமைந்த உரையாக இது காணப்படுகின்றது. இதுவொன்றே இவரது சைவசித்தாந்த பங்களிப்புக்குப் போதுமானதாகும்.

மேலும் இவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களில் (The Glories of saivaism, Siva school of Hindusim, An out line of Sivagnanabodham with a pejoinder to a christiam ctitic) என்ற சைவசித்தாந்த நூல்கள் போற்றப்படுபவையோடு சைவசித்தாந்தத்திற்கு அவர் ஆங்கிலத்தில் ஆற்றிய பங்களிப்பாக இது காணப்படுகிறது. இதனைவிட பன்னாட்டு அறிஞர்களின் பாராட்டைப் பெற்றதாக இவரது ஆங்கில நூல்கள் காணப்படுகையில் காசி இந்து பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறைக்கு பாடப்புத்தகமாக இது ஏற்கப்பட்டிருப்பது சைவ சித்தாந்தத்திற்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு உன்னத நிலையில் இருந்தமையை எடுத்துக் காட்டுகிறது. மேலும் பாடசாலை மாணவர்களுக் கென எழுதி வெளியிட்ட இவரது சைவபோதம் 1ம், 2ம், புத்தகங்கள் இவரது ஆழ்ந்த சைவஞான அறிவைப் புலப்படுத்துகின்றன.

இவ்வாறாக சைவப்பெரியார் ஆற்றிய பணிகளும் எழுதிய நூல்களும் ஈழத்துச் சைவ சித்தாந்த வளர்ச்சியை மேலோங்க வைத்தது. இன்று இவரது நூல்கள் மலேசிய சைவசித்தாந்த திருநெறிக் கூடத்தினரால் வருடமொன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பதிப்பு பெற்று வருகிறது. அவர் எழுதிய (The Glories if Sivaism) என்ற நூல் ஏழாலை பண்டிதர் மு.கந்தையா அவர்களால் "சைவமகிமை" என மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதும் ஈழத்தவர்களின் பங்களிப்பு உன்னத நிலையில் இன்றும் இருப்பதை வெளிக்காட்டுகின்றது.

**அ. விசுவநாதபிள்ளை**

விஞ்ஞான மாணவனென தன்னை புனைபெயரில் தோற்றுவித்த அ.விசுவநாத பிள்ளையவர்கள் உபநிடதங்களின் வாயிலாக உண்மைப் பொருளாராய்ச்சியில் அதிகம் ஈடுபட்டவராகத் திகழ்கிறார். இவர் சிவஞான போதம், சிவஞானசித்தியார், உபநிடதங்கள், திருமந்திரம், ஆகியவை பற்றி ஆங்கில மொழி மூலம் இந்துசாதனத்தில் தொடர்கட்டுரைகளாக வந்து பின்பு நூலுருப்பெற்றன. (The Elements of siva siddantha) என்னும் நூல் சிவஞான சித்தியார் பொருளை பிரதிபலிப்பதாக அமைகிறது. 7 உபநிடதங்கள் கூறும் மெய்யியல் உண்மைகள் சைவசித்தாந்த மெய்யியல் உண்மைகளோடு பொருந்தக் கூடியவை என்பதை திறம்பட நிறுவியுள்ளார். இவ்வாறாக உபநிடத விளக்கப்பணியின் ஊடாக சைவசித்தாந்தத்தை விளக்கியுரைத்த பெருமகனாக விளங்குகிறார்.

**திருவிளங்க தேசிகர்**

சைவசித்தாந்த சாத்திரங்களில் சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், ஆகியவற்றிற்கு எளிய உரை எழுதிய சைவசித்தாந்த உலகில் போற்றத்தக்க ஒருவராக திகழ்பவர் மு. திருவிளங்கம் ஆவார். சிவபாதசுந்தரனாரின் திருவருட்பயன் எளிய உரைபோன்று இவரது சித்தியார், சிவப்பிரகாச உரைகள் அமைந்திருக்கின்றன. சித்தியாருக்கு ஏலவே தோன்றி அறுவர் உரையிலிருந்து வேறுபட்டு மாணவர் முதல் விளங்கத்தக்க வகையில் தெளிவாக ஆழமாக எழுதப்பட்ட உரையாக இவரது உரை காணப்படுகிறது. சைவசித்தாந்தத்திற்கு ஈழத்தவர்கள் பங்களிப்பில் மு. திருவிளங்கத்தின் பங்களிப்பு உரையால் சிறப்புப்பெற்றது. சைவசித்தாந்தத்தை சிந்திக்கவும் எழுதவும் தூண்டியதற்கு இவர் உரைகளே காரணமாயின என்ற அறிஞர்களின் புகழ்ச்சி இவரது சைவசித்தாந்தப் பணியை மதிப்பிட உதவுகிறது.

**பிற்பட்ட அறிஞர்களின் பங்களிப்பு**

இவர்களைத் தொடர்ந்து பிற்பட்ட அறிஞர்கள் என்பதை பட்டியல் இடுவதென்பது இன்னமும் தெளிவாக கைகூடவில்லை என்பது தெரிகிறது. காரணம் அறிஞர்களின் பங்களிப்பு என்பது எந்த அளவில் ஆவணப்படுத்தப் பட்டிருக்கிறது என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும் .அந்த வகையில் எனக்குக் கிடைத்த அறிஞர்களின் விபரங்களின் படி அருளானந்த சிவம், மு.ஞானப்பிரகாசம், பண்டிமணி கணபதிப்பிள்ளை, பண்டிதர் மு.கந்தையா ஆகியவர்களின் தரவுகள் மட்டுமே எனக்கு கிடைக்கப் பெற்ற நிலையில் இவ்வாய்வினை மேற்கொள்கிறேன் இதனைவிடை இன்னும் பல அறிஞர்களின் பங்களிப்பும் ஆராய்ச்சியும் இருக்கலாம். அவைகள் அறியப்படமுடிமலிருப்பதால் இவர்கள் வரை எல்லையை வரையறுத்து இவ்வாய்வினை மேற்கொள்ளவேண்டி இருக்கிறது.

அந்த வகையில் முதலில் அருளானந்த சிவம் பற்றி நோக்குகையில் இவர் ஏழாலைக் கிராமத்தில் பிறந்து வைத்தியராக இருந்தவர். ஆன்மஞான ஈாப்பினாலும் சடைவரதர் என்னும் துறவியோடு கொண்ட உறவாலும் ஞானம் கைவரப்பெற்று சைவசித்தாந்த போதனைகள் மேற்கொண்டவர். தொடர்ந்து இச்துசாதனத்தில் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. அவை பெரும்பாலும் உபநிடத உரைவிளக்கங்களாக காணப்படுகின்றன. அவற்றில் தற்பொழுது சுவேதாசுவரத உபநிடதத்திற்கு அவர் எழுதிய உரை தற்பொழுது வெளியிடப்பட்டிருக்கிறது (முன்னாள் யாழ் பல்கலைக்கழக பிரதம நூலகர் திரு. முருகவேள் அவர்களால் குமரன் புத்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தினூடாக வெளியிடப்பட்டிருக்கிறது. வெளியீடு 26.02.2008) இந்த சுவேதாசுவரத உரையானது சைவசித்தாந்த நோக்கில் அதாவது உபநிடதத்தில் காணப்படும் பாடல் பொருள் களுக்கு உரைசெய்யதோடு அவ்வுரை சித்தாந்த பொருள் நயப்பதாக காட்டுவதற்கு சித்தாந்த பாடல்களும், திருமுறைப்பாடல்களும் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. உபநிடதங்கள் சைவ சித்தாந்த கருத்தியலை கொண்டமைந்தவை என்பதை நிறுவுவதற்கு இதுவொன்றே போது மானது. அனாலும் இவ்வறிஞர்பற்றி சைவ சித்தாந்த உலகில் இதுவரை எந்தத் தகவலும் பதிவுசெய்யப்படவில்லை. இவரைப்பற்றிய ஆராய்ச்சி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

இவரைத்தொடர்ந்து பண்டிமணி சி. கணபதிப்பிள்ளையவர்களை எடுத்துநோக்கு கையில் இவரது அத்வைத சிந்தனை என்னும் நூலே இவரது சைவசித்தாந்த புலமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொ.கைலாசபதி அவர்களின் சிந்தனையோடு ஒன்றிப்போய் தனது கருத்தியலை முன்வைத்தவர் திறந்த பல்கலைக்கழகம் என்று சொல்லுமளவிற்கு இவரது புலமைத்திறம் இருந்திருக்கிறது.

இவரைத் தொடர்ந்து வருபவர் பரமேஸ் வராக்கல்லூரியின் முன்னாள் அதிபராக இருந்த ஏழாலை மு. ஞானப்பிரகாசம் அவர்கள். இவரது தத்துவசிந்தனையானது உயர்நிலைப்பட்ட சிந்தனையாகக் காணப்படுகிறது. ஆங்கிலத்தி லும் சமஸ்கிருதத்திலும் நன்குபுலமை வாய்ந்த இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சைவசித்தாந் தக்கட்டுரைகள் எழுதியுள்ளார். தென்னிந்தியா வில் இருந்து வெளிவருகின்ற ஞானசம்பந்தம் இதழில் இவர் மெய்கண்டார் விஜயம் என்ற தொடர்கட்டுரைகள் எழுதியுள்ளார். திருக் கேதீஸ்வர திருப்பணிச்சபைத் தலைவராக இருந் தும் தனது சமயப்பணிகளை ஆற்றியிருக்கின் றார். இவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் ஒன்பது நூல்கள் எழுதியுள்ள போதிலும் சைவசித்தந்த வளர்ச்சியில் இவரது பங்களிப்பு இன்னமும் மதிப்பிடப்படவில்லை.

தொடர்ந்து அண்மைக்காலத்தில் வாழ்ந்து மறைந்த இலக்கிய காலநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்களது சைவ சித்தாந்த பங்களிப்பினை எடுத்துநோக்கினால் இவரது சைவசித்தாந்தப் பங்களிப்பு என்பது முற்றுமுழுதான ஒரு பங்களிப்பாக காணப்படுகி றது. அதாவது முழு நிறை சைவசித்தாந்தியாக வாழ்ந்தவர். நாவலர் அவர்களால் எழுதப்பட்டு முடிவுறாமல் இருந்த திருத்தொண்டர் புராண சூசனத்தை நிறைவுசெய்த பெருமைக்குரியவர். இருபத்தேழுவரையான நூல்களை எழுதியுள் ளார். இவரது சைவசித்தாந்தம் பற்றிய ஆராய்ச் சியை விரிவஞ்சி இங்கே மேற்கொள்ளாது விடப் படுகின்றது. உலகம் பூராகவும் மதிக்கப்பட்ட ஒரு சைவசித்தாந்த பேரறிஞராக திகழ்ந்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். இவரது சித்தாந்தப்பணியும் ஆராயப்படவேண்டிய தொன்றாகும்.

**முடிவுரை**

சைவசித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தவர் களின் பங்களிப்பானது கனதியான ஒரு இடத்தினைப் பெற்றிருக்கிறது என்பது உண்மை. வரலாற்றுகாலம் முதல் சைவசித்தாந்தத்திற்கு ஈழத்தறிஞர்களின் பங்களிப்பு இருந்திருக்கிறது. இன்றும் இருந்து வருகிறது. ஆழமான கனதி யான பங்களிப்பினை ஈழத்தறிஞர்கள் செய்திருக்கிறார்கள் செய்தும் வருகிறார்கள். சைவசித்தாந்த பாரம்பரியம் ஒன்று ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்றும் இருந்துவருகிறது என்பதை உணரமுடிவதுடன் எதிர்காலத்திலும் சைவசித்தாந்தத்திற்கு இப்படி யான கனதியான பங்களிப்பு இருக்குமென குறிப்பிடுவதோடு சைவசித்தாந்தம் ஈழத்தறிஞர் களின் பங்களிப்பினால் வளர்சி கண்டுள்ள தென்பதை இவ்வாய்வின் முடிபாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2011












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றிகரமான வாழ்க்கை

என். சிறிரஞ்சன்
B.com, MA
உதவி சுங்க அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

**வெ**ற்றி என்றால் என்ன? பணமா? புகழா? அல்லது விரும்பியதை அடைவதா? வெவ்வேறுபட்டவர்கள் வெற்றி என்பதனை வெவ்வேறு விதமாக வரையறுக்கலாம். பிறைன் றேசி வெற்றி என்பது பின்வரும் ஏழு கூறுகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்கின்றார். இந்தக் கூறுகள் அனைத்தையும் இணைந்து ஒருவர் பெறும்போதே அவர் வெற்றி அடைந்தவர் ஆகின்றார்.

**1. மன அமைதி**

வெற்றியின் கூறுகளில் முதலாவதும் முக்கியமானதும் மன அமைதியாகும். மன அமைதி இல்லாவிடில் வேறு எது இருந்தாலுமே பயன் இல்லாது போய்விடும். எந்த ஒரு மனிதரும் தான் வாழ்க்கையில் எவ்வாறான நிலையில் இருக்கின்றேன் என்று மதிப்பிட்டுக் கொள்ளும் போது அது அவர் கொண்டிருக்கும் மனஅமைதியின் அளவினைப் பொறுத்தாகவே இருக்கும்.

வாழ்க்கை தொடர்பாக ஒருவர் கொண்டிருக்கும் நம்பிக்கைகள் மற்றும் பெறுமானங்களுக்கு ஏற்ப வாழும்பொழுது அவர் மன அமைதியினைக் கொண்டவராக இருப்பார். பதிலாக அவர் தனது நம்பிக்கைகள் மற்றும் பெறுமானங்களை விட்டுக்கொடுக்க வேண்டி வரும் போது அவரது மன அமைதி பாதிக்கப்படுகின்றது.

மற்றவர்களுடன் சேர்ந்து செயற்படுவதற்கு மன அமைதி மிக அவசியமாகும். மன அமைதி குன்றிய ஒருவர் மற்றவர்களுடன் சிறந்த உறவுகளைப் பேணமுடியாது என்பதுடன் அவர்களது மன அமைதியினையும் குறைத்து விடுபவராக இருப்பர்.

ஒவ்வொருவரது வாழ்க்கையும் மன அமைதியினை உறுதிப்படுத்திக் கொள்வதினை முக்கிய இலக்காகக் கொண்டு அமைக்கப்படுதல் வேண்டும். அவர்களது ஏனைய இலக்குகள் எல்லாம் துணை இலக்குகளாகவே இருத்தல் வேண்டும். அதாவது ஏனைய இலக்குகள் உங்கள் மனஅமைதியினை வசதிப்படுத்துபவையாக அன்றி அதனைக் கெடுப்பனவாக அமைதல் கூடாது. உங்களிடம் மனஅமைதி காணப்படாத போது உங்களால் ஏனைய இலக்குகளை அடைவதென்பது சாத்தியமாகாமற் போய்விடும்.

கோபம், பயம், குற்ற உணர்வு, கவலை, சந்தேகம் போன்ற எதிர்மறையான உணர்ச்சிகளை ஒருவர் கொண்டிருக்காத போது அவர் மன அமைதி உடையவராகக் காணப்படுவார். உண் மையில் மனஅமைதி நிலவுவது என்பது தான் மனதின் இயற்கையான நிலையாகும். அதனை நாம்தான் பல்வேறு எதிர்மறை உணர்ச்சிகளின் மூலம் பாழடித்து விடுபவர்களாக இருக்கின்றோம். எனவே எதிர்மறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிகளைத் தோற்றுவிக்கும் காரணிகளை அடையாளம் கண்டு அவற்றினை இல்லாது ஒழிப்பதன்மூலம் அல்லது அவற்றிலிருந்து நாம் விலகி நடந்துகொள்வதன் மூலம் மனஅமைதி குலைவதனைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

சில மனிதர்கள் எந்த நேரமும் எதிர் மறையான விடயங்கள் பற்றியே சிந்தித்துக் கொண்டும் யோசித்துக்கொண்டும் இருப்பார் கள். அவ்வாறானவர்களை தவிர்ப்பது கூட மன அமைதியினை உறுதிப்படுத்த பயன்படுத்தக் கூடிய ஒரு வழிமுறையாகும். எனது நண்பர் ஒருவர் தான் செய்திப் பத்திரிகைகளை காலை யில் வாசிப்பதை நிறுத்திவிட்டேன் என்றார். ஏன் என்று கேட்டேன். "காலையில் எடுத்து பத்திரி கையைத் திறந்தால் ஒரே கொலை, கொள்ளை, கடத்தல், மனித உரிமை மீறல் என்ற செய்திகளா கவே இருக்கின்றன. அவற்றைப் படித்தால் அன்றைய பொழுது முழுக்க மனக்குழப்பமும் வேதனையுமாகவே இருக்கின்றது" என்றார். "அப்படியா! அப்போ இரவிலா செய்தித்தாள் படிப்பீர்கள்" என்றேன். அதற்கு அவர் "இல்லை. இரவிலும் படிப்பதில்லை. ஏனெனில் இவ்வா றான செய்திகள் மனதில் மீண்டும் மீண்டும் வந்து எனது நித்திரையினை கெடுத்து விடு கின்றது." என்று பதிலளித்தார்.

**2. ஆரோக்கியமும் சக்தியும்**

வெற்றியின் இரண்டாவது கூறு ஆரோக்கி யமும் சக்தியும் ஆகும். மனஅமைதி என்பது எவ்வாறு எமது இயற்கையான மன நிலையோ அதேபோல் ஆரோக்கியமும் சக்தியும் எமது இயற்கையான உடல் நிலையாகும். செய்யக் கூடாத சிலவற்றைச் செய்வதன் மூலமும் செய்ய வேண்டிய சிலவற்றை செய்யாமல் விடுவதன் மூலமும் ஆரோக்கியமும் சக்தியும் பாதிக்கப்படு கின்றது.

உடலில் வலி, வருத்தம், நோய் ஆகி யவை இல்லாத நிலையே ஆரோக்கியமாகும். சிறந்த மனஅமைதியையும் ஆரோக்கியத்தினை யும் கொண்டிருக்கும்போது உடலானது இலகு வாக பெருமளவு சக்தியினை உற்பத்தி செய்கின்றது. நாம் தேவையான சக்தியினை தேவைப்படும் போதெல்லாம் பயன்படுத்தக் கூடியதாக இருக்கும்போதுதான் எமது நாளாந்த நடவடிக்கைகள் தொடக்கம் எமது இலக்குகளை அடைவதற்கான கருமங்கள் ஈறாக ஒவ்வொன் றையும் உரிய முறையில் ஆற்றக்கூடியவர்களாக இருப்போம். "விசையுறு பந்தினைப்போல் உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல் கேட் டேன்" என்று மகாகவி பாரதியாரும் இதனைத் தான் குறிப்பிடுகின்றார்.

இந்த வகையில் உடல் ஆரோக்கியமும் மனஅமைதியும் இல்லாவிடில் எம்மால் எமது வாழ்க்கையின் ஏனைய இலக்குகளை அடைய முடியாது போய்விடும். மறுபுறத்தில் நாம் மற்றைய இலக்குகளை வெற்றிகரமாக அடைந்த வர்களாக இருப்பினும்கூட மனஅமைதியும் உடல் ஆரோக்கியமும் இழந்தவர்களாக இருப்போமாயின் அவற்றின் பலாபலன்களை அனுபவிக்க முடியாதவர்களாகி விடுவோம்.

**3. அன்பான உறவுகள்**

வெற்றியின் மூன்றாவது கூறு அன்பான உறவுகளாகும். ஒருவரை விரும்புபவர்கள் மற்றும் அவர் மீது கரிசனைக் கொண்டிருப்பவர் களுடனும் அவரை விரும்புபவர்கள் மற்றும் அவர் மீது கரிசனை கொண்டவர்களுடனுமான உறவுகளை இது கருதி நிற்கின்றது. "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்று கூறப்படுகின்றது. எனவே மனித வாழக்கையில் உறவுகள் மிகவும் முக்கியம் பெறுகின்றன. மகிழ்ச்சி என்பது பெரு மளவிற்கு ஒருவர் மற்றவர்களுடன் கொண்டி ருக்கும் சிறந்த உறவிலேயே தங்கியிருக் கின்றது.

முதிர்ச்சியடைந்த ஒருவரின் முக்கிய மான பண்புகளில் ஒன்று அவர் ஏனையவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடன் சிறந்த உறவுகளை நீண்ட காலத்திற்கு ஏற்படுத்த கூடியதாய் இருத்தலாகும். ஒருவர் மற்றவர்களுடன் எவ்வாறான உறவுகளிப் பேணுகின்றார் என்பதனையும் மற்றவர்கள் அவருடன் எவ்வாறான உறவுகளை கொண்டுள் ளனர் என்பதனையும் பொறுத்தே அவரது தனி மனிதப் பண்புகள் கணிப்புக்குள்ளாகின்றன.

ஒருவர் மற்றவர்களுடன் சேர்ந்து இருக கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின் றார் என்பதையும் அவர்களுடன் எவ்வளவு தூரம் வெளிப்படையாக விடயங்களை பரிமாறக் கூடியதாக உள்ளது என்பதும் அவர்களுடன் சேர்ந்து எவ்வளவு தூரம் மனம் விட்டு சிரிக்க கூடியதாக உள்ளது என்பதும் கலந்துரையாடல் கள் எவ்வளவு தூரம் சுமூகமாக இடம் பெறு கின்றன என்பதனையும் பொறுத்தே அந்த உறவானது எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்பதனை அளவிட்டுக் கொள்ளமுடியும்.

அன்பான உறவுகள் குடும்பங்களுக்கும் சமூகத்திற்கும் மட்டும் உரியதொன்றல்ல. நிறு வனங்களிற்கும் அவை மிகவும் முக்கிய மானவையாகும். நிறுவன ஊழியர்களிடையே அன்பான உறவுகள் நிலவும் போதுதான் குறிப்பாக வெவ்வேறு அதிகார மட்டத்தில் உள்ள வர்களிடையே சிறந்த உறவுகள் காணப்படும் போதுதான் அந்நிறுவனம் வெற்றிகரமான நிறுவனமாக இருத்க முடியும்.

ஒருவர் தனது வாழ்நாளில் எதிர்நோக் கும் அதிகமான பிரச்சனைகள் உறவுப் பிரச்சனைகளாகும். எனவே சிறந்த உறவு என்பது என்ன? யாருடன் உறவுகளைக் கொண் டிருக்க வேண்டும் யாருடைய உறவுகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது என்பது தொடர் பில் தெளிவான தீர்மானங்களைக் கொண்டிருத் தல் வேண்டும். ஒருவர் இன்னொருவருடன் உறவினைக் கொண்டிருக்கும் போது அந்த இருவரும் அந்த உறவினால் பயன் அடைபவர்க ளாக இருத்தல் வேண்டும். ஒருவர் மட்டும் பயன் அடைய மற்றயவர் ஏதோ ஒன்றினை இழப்பவ ராக இருப்பின் அவை சிறந்த உறவுகளாக இருக்க முடியாது. "நீங்கள் நண்பர்களை உருவாக்கி கொள்ளும் நோக்கில் மற்றவர்களை நாடிச் சென்றால் நண்பர்கள் கிடைக்கமாட்டார்கள். பதிலாக சிறந்த நண்பராக நீங்கள் அவர்களை அணுகினால் பெருந்தொகையான நண்பர்கள் கிடைப்பார்கள்" என ஜிக் ஜிக்லர் கூறுகின்றார்.

பலர் மற்றவர்கள் தங்களை நேசிக்க வேண்டும் என விரும்புகின்றார்கள். ஆனால் தாம் மற்றவர்களை முதலில் நேசிக்கப் பழக வேண்டும் என்ற உண்மையை அவர்கள் உணர் வது இல்லை. ஒருவர் மற்றவர்களை நேசிக்கும் போது அவர்கள் தாமாகவே முன் வந்து அவரை நேசிக்கத் தொடங்குவார்கள். அது அன்பான உறவுகள் பெருக்கெடுக்க வழிவகுக்கும். சிறந்த உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஆறு வழிகளை டேல் கார்னகே (Dale Carnegie) குறிப் பிடுகின்றனர்.

1. மற்றவர்களில் உண்மையான அக்கறையி னைக் கொண்டிருத்தல்.
2. மற்றவர்களை காணும்போது புன்னகைப் பழகிக் கொள்ளுதல்.
3. பெயர்களை ஞாபகம் வைத்துக் கொள்வது டன் அவர்களுடன் உரையாடும் போது பெயரினைச் சரியாக உச்சரித்தல்.
4. மற்றவர்கள் பேசும் போது அதனை அக்கறை யுடன் கேட்டல். தங்களைப் பற்றியும் தாம் விரும்பும் விடயங்களையும் பற்றியும் அவர்கள் பேசுவதற்கு ஊக்குவித்தல்.
5. மற்றவர்களின் விருப்பு வெறுப்புக்களைக் கருத்தில் கொண்டு அவர்கள் விரும்பும் விடயங்களை பேசுவதுடன் விரும்பாதவற் றைக் தவிர்த்தல்.
6. மற்றையவர் தான் ஒரு முக்கியமான நபர் என்பதனை உணரச் செய்தல். இதனை போலி யாகச் செய்யாமல் முழுமனதுடன் செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. நிதியியல் சுதந்திரம்

வெற்றியின் நான்காவது கூறு நிதியியல் சுதந்திரமாகும். ஒருவர் தனது நிதித்தேவைகள் தொடர்பில் கவலைகொள்ளாதளவிற்கு நிதி வளங்களைக் தொடர்ச்சியாகக் கொண்டிருக் கும் போது அவர் நிதியியல் சுதந்திரமுடையவ ராவார். மக்களில் பெரும்பாலானவர்கள் பணம் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளை எதிர் கொள்கின் றனர். “எல்லாப் பிரைச்சனைகளிற்குமான மூலவேர் பணம்தான்“ என்று கூறப்படுவ துண்டு. உண்மையில் பணம் இல்லாமைதான் பெரும் பாலான பிரச்சனைகளிற்கு மூலவே ராகும்.

நிதியியல் சுதந்திரமானது வெற்றியின் நான்காவது கூறாகக் குறிப்பிடப்பட்டாலும் அது முதல் மூன்று கூறுகளான மனஅமைதி, ஆரோக்கியமும் சக்தியும், அன்பான உறவுகள் என்பனவற்றினை அடைவதற்கு மிகவும் அவசியமாகும். கவலை, மனநிம்மதியின்மை, உறவுச்சிக்கல்கள் என்பவை பெருமளவிற்கு பணம் போதாமையினால்தான் ஏற்படுகின்றன. பல மேற்கத்தேய நாடுகளில் விவாகரத்துக் களிற்கு காரணமாயிருப்பது பணம் தொடர்பான கருத்து வேறுபாடுகள்தான். இலங்கை போன்ற பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பலர் குறிப்பாகப் பெண்களின் திருமணத்திற்கு தடை யாக இருப்பதும் பணமின்மைதான். எனவே ஒவ் வொருவரும் தாம் நிதியியல் சுதந்திரமடையக் கூடியளவு பணத்தினைத் தேடிக்கொள்ளக்கூடிய ஆற்றலகளையும் திறமைகளையும் வளர்த்துக் கொளவது அவசியமாகும்.

பணம் தங்களிற்கு தேவையென்பதில் பெரும்பாலானவர்கள் தெளிவாக உள்ள போதும் எவ்வளவு பணம் தேவையென்பது தொடர்பில் அதாவது நிதியியல் சுதந்திரத்தினை அனுபவிப்பதற்கு எவ்வளவு பணம் தேவை யென்பது தொடர்பில் அவர்கள் தெளிவாக இருப்பதில்லை. குறிப்பாக அடுத்த ஆண்டில் எவ்வளவு பணத்தினை உழைக்கவேண்டும் அல்லது இன்றிலிருந்து குறிப்பிட்ட சில ஆண்டு களில் எவ்வளவு பணத்தினை உழைக்க வேண்டும், எவ்வாறான வாழ்க்கையினை முன் னெடுத்துச் செல்ல வேண்டும் அதற்கு எவ்வளவு பணம் தேவைப்படுமா? குறிப்பாக ஓய்வு பெறும் போது எவ்வளவு பணம் இருக்க வேண்டும்? என்ன மாதிரியாக ஓய்வுக் காலத்தை கழிக்க வேண்டும் என்றதொரு தெளிவான திட்டம் பலரிம் இருப்பதில்லை. ஒருவர் தனக்கு என்ன வேண்டும் என்றும் அதில் எவ்வளவு வேண்டும் என்பது பற்றியும் சரியான தெளிவில்லாதபோது அதனை அடைவது முடியாததொன்று என்ற உண்மையினை உணர்ந்துகொள்ள வேண்டும்.

### 5. உன்னதமான இலக்குகள்

வெற்றியின் ஐந்தாவது கூறு உன்னத மான இலக்குகளாகும். ஒருவர் தான் பெறுமதி யானதொரு வாழ்க்கையினை வாழ்வதாக மனசார ஏற்றுக் கொள்ளும் போதே அவருக்கு உண்மையான திருப்தியேற்படும். உன்னதமான இலக்குகளானவை ஒருவரின் ஆழ்மனதில் புதைந்து கிடக்கும் ஒரு வேட்கையாகும். உன்னதமான இலக்குகளைக் கொண்டிருக்கும் போதே வாழ்க்கையில் ஏதாவது ஒன்றினைச் சாதிக்கின்றேன், இந்த உலகிற்கு நான் ஒரு முக்கிய பங்களிப்பினைச் செய்கின்றேன் என்ற திருப்திகரமான உணர்வு ஏற்படும்.

மகிழ்ச்சி என்பது “உன்னதமான இலக்கு களை நோக்கி முன்னேற்றமடைதல்” என்று வரையறுக்கப்படுகின்றது. இலக்குகளானவை மிகவும் முக்கியமானவையாகவும் உங்களால் மிகவும் விரும்பப்படுவதாகவும் இருக்கும் போதே அவை உன்னதமான இலக்குகளாக உங்களிற்குத் தோன்றும். எவற்றினைச் செய்யும் போது நீங்கள் மிகவும் மகிழ்ச்சியாக உணர் கின்றீர்கள்? எவற்றினைச் செய்யும் போது உங்களது வாழ்க்கையானது உன்னத அர்த்தம் பொருந்தியதாக இருப்பதாக நீங்கள் உணரு கின்றீர்கள்? என்பதனைப் பொறுத்தே எவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப் பொறுத்தவரை உன்னத இலக்குகளாக அமையும் என்று தெரிந்து கொள்ள முடியும்.

**6. தன்னறிவும் தன்னறிகையும்**

வெற்றியின் ஆறாவது கூறு தன்னறிவும் தன்னறிகையுமாகும். வரலாற்று ரீதியாக நோக்கும் போது ஒருவர் மனதளவில் பெறும் மகிழ்ச்சி மற்றும் அவரது வெளியகச் சாதனைகளும் அவரது தன்னறிவு மற்றும் தன்னறிகையுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன. ஒருவர் சாதனைகளை செய்வது முடிப்பதற்கு அவர் தான் யார்? என்பது பற்றியும், தான் குறிப்பிட்ட வகையில் சிந்திப்பது மற்றும் செயற்படுவதற்கு காரணம் யாது? என்ற தெளிவினையும் கொண்டிருத்தல் வேண்டும். அவர் தன்னைச் சுற்றியிருப்பவர்கள் மற்றும் தான் எதிர்நோக்குகின்ற சூழ்நிலைகளில் ஏன் குறிப்பிட்ட விதத்தில் நடந்து கொள்கின்றார் என்பது பற்றியும் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். அப்போதுதான் அவர் தன்னையும் சரியாகப் புரிந்து ஏற்றுக் கொண்டு தான் வாழ்க்கையில் அடையவேண்டிய இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும்.

உங்களை மற்றவர்கள் புரிந்து, ஏற்றுக் கொண்டு, நேசிப்பது என்பது முக்கியம்தான். ஆனால் அதிலும் பார்க்க முக்கியமானது நீங்கள் உங்களைச் சரியாகப் புரிந்து ஏற்றுக் கொண்டு உங்களை நேசிப்பதுதான். யார் வேண்டுமானாலும் உங்களை வெறுக்கலாம், நீங்கள் யாரை வேண்டுமானாலும் வெறுக்கலாம். ஏன், கடவுளைக் கூட நீங்கள் வெறுக்கலாம், ஆனால் நீங்கள் உங்களை ஒருக்காலும் வெறுக்கக் கூடாது!

**7. சுய நிறைவு**

வெற்றியின் ஏழாவது கூறு சுய நிறைவாகும். ஒருவர் வாழ்க்கையில் தன்னால் அடையக்கூடியவை எல்லாவற்றையும் தான் அடைந்து கொண்டிருப்பதாக உணர்ந்து திருப்திப்படும் போது சுயநிறைவு ஏற்படுகின்றது.

எனவே மன அமைதி, ஆரோக்கியமும் சக்தியும், அன்பான உறவுகள், நிதியியல் சுதந்திரம், உன்னதமான இலக்குகள், தன்னறிவும் தன்னறிகையும், சுய நிறைவு என்பவற்றினை ஒருவர் கொண்டிருக்கும் போதே அவர் வெற்றிகரமான வாழ்க்கையினைக் கொண்டிருக்கிறார் என்று கூறமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னம்பிள்ளைக்கு மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழா

வேதநாயகம் தபேந்திரன்
சமூக சேவை உத்தியோகத்தர்
கிளிநொச்சி மாவட்டம்

**வ**ட மாகாண மக்களின் மரபுக்களின் தனித்துவமான அம்சங்கள் பல உள்ளன. இவை காலத்திற்கு காலம் வாழையடி வாழை யாகப் பின்பற்றப்பட்டு வந்தன.

வடபுலத்தின் மாவட்டங்களில் இது போன்ற பண்பாட்டு மரபுகள் உள்ளன.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்த பண்பாட்டு நிகழ்வு பன்னெடுங் காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தது.

விவசாயத்தில் மிகப் பெருமளவில் தங்கியிருந்த கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச் செய்கை குறிப்பிடத்தக்க வாழ்வாதாரமாக இருந்து வருகிறது.

தென்னம்பிள்ளைக்கு மங்கைப் பருவ மங்கல நீராட்டும் பண்பாட்டு நிகழ்வு இன்னமும் அருந்தலாகச் சில இடங்களில் தொடரவே செய்கிறது.

கால மாற்றம் கால மாற்றம் இது போன்ற பண்பாட்டம்சங்களில் பலவற்றை மங்கச் செய்து விட்டது.

இப் பிரதேச மக்களின் மரபார்ந்த சடங்குகளில் ஒன்றாக மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழா இன்றும் வலுவான மரபார்ந்த சடங்காக உள்ளது.

பெண் குழந்தை ஒன்று வளர்ந்து சிறுமிப் பருவத்தை எய்திய பின் மங்கைப் பரு வத்தை அடையும் நிலைவரும். மங்கைப் பரு வத்தை அடைந்த உடன் பெண்ணின் தாய் தந்தையர் மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழாவை நடத்துவார்கள்.

இம் மரபு இந்துக்களின் வாழ்வியல் சடங்குகளில் ஒன்றாக பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது. தற்போதும் பெருமளவில் நடைமுறையிலுள்ளது.

பண்பாட்டு மரபிலும் இந்து கிறீஸ்தவ வேறுபாடின்றி இச் சடங்கு தமிழர்களின் சடங்காக தொடருகின்றது.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மட்டுமன்றி வட மாகாணமெங்கும் இம் மரபு முன்னாளில் மிகப் பிரபலமானதாக இருந்நதது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இது தென்னம்பிள்ளைக்கு குமரி கட்டுதல் என அழைக்கப்பட்டது.

அது போல வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இது பிரதேசத்திற்கு பிர தேசம் வேறுபட்ட பெயர்களில் அழைக்கப் பட்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு செய்தால் தென்னைமரம் நிறைய தேங்காய்கள் காய்க்கும் வகையில் விருத்தியாகி வளருமென்ற நம்பிக்கை இருக்கின்றது.

இன்றைய சந்ததியினரில் மிகப் பெருமளவானோர் இதனைக் கைவிட்டுள்ளார்கள்.

மரங்களில் தென்னையை மட்டும் தான் பிள்ளை என அழைக்கும் வழக்கம் இருக்கிறது. ஏனைய மரங்களை இவ்வாறு அழைப்பதில்லை.

அதனால் தான் தென்னைக்கு மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழா நடத்தும் மரபு உருவானது எனலாம்.

ஆனாலும் இப்பண்பாட்டைப் பேணும் மக்கள் இன்றும் இருக்கின்றது. காணி ஒன்றில் புதிதாக நடப்பட்டு வளர்ந்த தென்னம் பிள்ளைகளில் முதலாவதாக பாளையை விடும் தென்னம் பிள்ளைக்கு மங்கைப்பருவ மங்கல நீராட்டு விழாவை நடத்துவார்கள்.

காணியின் உரிமையாளராகிய கணவனும் மனைவியும் தாய் தந்தையராக நின்று இச் சடங்கை நிறைவேற்றுவார்கள்.

பருவமடைந்த பெண்ணுக்கு செய்வது போல அனைத்து சடங்குகளும் நடைபெறும்.

மங்கல நிகழ்வுக்கு உரிய நிறைகுடம் வைத்தல் நிகழ்வு நடைபெறும்.

தென்னம்பிள்ளையைக் குளிப்பாட்டி தூய்மைப்படுத்துவார்கள். பருவமடைந்த பெண்ணுக்கு உடுத்துவது போல புதிய சாறி உடுத்துவார்கள். பின்பு மாலை கட்டிவிடுவார்கள். தங்க நகைகள் அணிவிப்பார்கள்.

தென்னம்பிள்ளைக்கு முன்பாக உள்ள நிலத்தில் கோலமிடுவார்கள். பொங்கலிடுவார்கள். மங்கைப்பருவத்தை அடைந்த பெண்ணுக்கு சடங்கு செய்வது போல பலகாரம் உணவு வகைகள் யாவுமே செய்யப்படும். அவற்றை வைத்துப் படைப்பார்கள்.

பொங்கலிட்ட உணவையும் தலைவாழையிலையில் படைப்பார்கள். நெல் இட்டு நிரப்பிய கொத்து ஒன்றில் சத்தகம் வைத்து ஆராத்தி எடுப்பார்கள். லட்சுமி விளக்கு ஆராத்தி, பலகார ஆராத்தி , பொங்கல் ஆராத்தி, பூக்களால் ஆராத்தி என வழமையான ஆராத்திகள் யாவுமே செய்யப்படும்.

தென்னம்பிள்ளையின் புதுப்பாளையில் சங்கிலி போடும் மரபு சில இடங்களில் பின்பற்றப்படுகிறது. சில இடங்களில் தென்னை மரத்தின் வட்டுக்கு சங்கிலி போடும் மரபு பின்பற்றப்படுகிறது.

வடமாகாணத்தின் பலபகுதிகளிலும் இச் சடங்கு சிற்சில வேறுபாடுகளுடன் செய்யப்பட்டு வந்தது.

இப்பண்பாடு கிளிநொச்சி மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த காலம் இன்றைய சந்ததியினரில் பெரும்பாலானோருக்கு புலன்சார் செய்தியாக மட்டுமே இருக்கும் நிலை வந்து விட்டது.

காலச்சக்கரம் சுழன்று சென்றாலும் மரபுகளும் வழக்காறுகளும் எம் இனத்தின் இருப்பைக் காட்டும் அடையாளமல்லவா ?

பண்பாட்டு கூறுகளை நிழல் படங்களாக வீடியோ தொகுப்புக்களாக ஆவணப் படுத்தி பாதுகாப்போம்.

அத்தகையதொரு நிகழ்வு தான் இங்கு படங்களுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நவீன மயமாதலும் பண்பாட்டுப் பிறழ்வுகளும்

திருமதி. அருள்பிரகாசம் தக்சிலாநிதி
சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் அலுவலகம்
நீதவான் விடுதி ஒழுங்கை
கிளிநொச்சி

"பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலியனவையும், மனிதன் சமுதாயத்தில் ஒர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதி யாகும்" என்று எட்வேட் பேனார்ட் ரெய்லர் என்ற ஆங்கிலநாட்டு மானிடவியல் அறிஞர் தனது தொன்மைப் பண்பாடு என்ற நூலில் குறிப் பிடுகின்றார். இந்நிலையில் பண்பாடென்பது மக்கள் குழுவொன்று தமது சமூகத்தின் வர லாற்று வளர்ச்சிப் படிகளினூடாக உருவாக்கிக் கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆன்மிகக் கருத்துக்கள், மத அனுஸ்டானங்கள், சமூக விழுமியங்கள் என்பவற்றினை ஒன்றிணைத்த ஒரு பல்கூட்டுத் தொகுதி எனலாம். நம்பிக்கைப் பெறுமானம், கலைகள், விஞ்ஞானம், கல்வி, உற்பத்தி முறைகளும் உறவுகளும், தொழினுட்ப வளர்ச்சி முறை என்பவற்றை உள்ளடக்கியதாக ஒரு இனத்தின் பண்பாடு இனங்காட்டப்படு கின்றது. இவ்விதமாக காலங்காலமாக ஒவ்வொரு மக்கள் குழுவினராலும் பேணப்பட்டு வருகின்ற பண்பாடானது நவீனமயமாதல் என்ற செயற்பாட்டினால் பல்வேறு மாற்றங்களைக் கண்டு வருகின்றது. ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறில் கால் பதித்த நவீனத்துவம் பல புரட்சிகளைப் பிரசவித்தது. நவீனத்துவம், நவீன மரபு, நவீனயுகம், நவீன நூற்றாண்டு, நவீன மனநிலை போன்ற புதிய சொல்லாடல்களை உற்பத்தி செய்தது. சுருக்கமாக சொல்வ தென்றால் ரொமான்டிசிசத்தின் புத்தார்வ மனப் பான்மையும், அறிவொளிக்கால அறிவு நெருக் கடியும் புணர்ந்து பெற்ற சிசுவே நவீனத்துவம் எனலாம். இந்த வகையில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வலுவல்ல" என்ற கூற்றுக் கிணங்க ஒவ்வொரு துறையிலும் நவீனமய மாதல் பல்வேறு நேர்முக, எதிர்மறை தாக்கங் களை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறே ஒவ்வொரு இனத்தின் பண்பாடுகளிலும் நவீனமயமாதல் கால் பதித்ததினால், பண்பாட்டுக்கூறுகளில் சில பிறழ்வு நிலைக்கு உள்ளானதுடன், காலமாற்றத் தால் சில கூறுகள் அழிவடைந்தும், சில கூறுகள் புதுநிலை பெற்றும் உள்ளதை அவதானிக்க முடிகின்றது. அந்தவகையில் ஒரு பண்பாட்டின் வரலாறு யாது? என்பது பற்றியும், அதன் மைய அம்சங்கள் எவை? என்பது பற்றியும், பல்வேறு காலகட்டங்களில் பண்பாடு இருந்த நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் உள்ள வேறுபாடுகள் எவை? என்பது பற்றியும் நோக்கும் போது நவீன மயமாதல் எவ்வகையில் பண்பாட்டுப் பிறழ்வு களுக்கு காரணமாயிருந்தது என்பதனை இக் கட்டுரையூடாக நோக்குதல் சாலப்பொருந்தும்.

இன்றைய நவீன காலத்தில் பல்வேறு பண்பாடுகளைப் பின்பற்றும் பல்வேறு நாடு களின் தொடர்புகளால் நவீனமயமாக்கல் என்ற ரீதியில் ஒரு இனத்தின் பண்பாடுகள் அதே முறையில் பேணப்படாமல் கலப்பானதாக, அதாவது வேற்று நாட்டின், வேற்று இனத்தின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டம்சங்களின் ஒரு பகுதியை தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும் ஒவ் வொரு இனமும் தமது பண்பாட்டம் சங்களுக் குள் உட்புகுத்தி விடுகின்றனர். குறிப்பாக மேலைத்தேச நாட்டவருடனான தொடர்புகள், கல்வி, சுற்றுலா, வியாபாரம் போன்ற பலவற் றால் விரிவடைந்துள்ளது. உதாரணமாக எமது தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக்கொள் வோமானால், இன்று போரினாலோ, வியாபார நடவடிக்கைகளாலோ, கல்வி நடவடிக்கை களாலோ, சுற்றுலா நடவடிக்கைகளாலோ பல்வேறு நாடுகளிலும் மக்கள் சென்று வாழ்கின்றனர், தமது தொடர்புகளைப்பேணி வருகின்றனர். இவ்விதமாக பல்லாண்டு கால மாகவோ, சில காலமாகவோ அந்நிய நாடுகளில் வாழ்பவர்கள் தமது உறவுகள், தாய்நாடு என்று திரும்பி வருகின்ற போது தாம் இருந்து வந்த நாட்டின் பண்பாட்டம்சங்களின் சாயலாக தமது நாட்டுக்கு வரும்போது இங்கிருப்பவர்கள் அவர்களை மேன்மையானவர்களாகவும், அவர்களது பண்பாட்டை உயர்ந்ததாகவும் நவீன மானதாகவும் கருதி அவற்றைப் பின்பற்ற முற்படுகின்றனர். இதனால் அவர்களது பண்பாடு சிதைவுற பிறழ்வு நிலையை அடையக் காரண மாகின்றது. இவ்விதமாக பல்வேறு நாடுகளின் தொடர்புகளால் ஏற்படும் நவீனமயமாதல் என்கின்ற சிந்தனைப் போக்கால் ஒரு இனத்தின் பண்பாடு பல்வேறு வகையிலும் பிறழ்வு நிலை யினை அடைவதனை அவதானிக்க முடிகின்றது.

மேலும் தகவல் தொழில்நுட்பத் துறை யின் வளர்ச்சியினால் "உலகம் உள்ளங்கைக் குள் சுருங்கி விட்டது" என்று கூறக்கூடியதாக உள்ளது. காரணம் நாம் இன்று பாவிக்கும் கையடக்கத் தொலைபேசிகளிலே அனைத்து வித அம்சங்களையும் அறிந்துகொள்ள, பார்வை யிட முடிகின்றது. நவீன தொழிநுட்ப வளர்ச்சி யால் பண்பாடுகளின் தனித்துவம் பாதிக்கப்படுவ தாக குறைகூறப்படுகின்றது. அதாவது புதிய உலகத் தொடர்புகள், தகவல் தொழிநுட்பத் துறையின் வளர்ச்சி, செய்திப் பரிமாற்றம் என்பன உலகப் பண்பாடுகளை அவற்றின் தனித்துவத்தைக்கடந்து ஒன்றோடொன்று நெருங்க வைத்துள்ளன. மக்களின் சுவை, சிந்தனை, கருத்துக்கள், வாழ்க்கைமுறை, போக்கு, உடை, உணவு, இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றில் பல்லின பண்பாடுக ளைக் கொண்ட மக்களிடையே பொதுப் பண்பாட்டம்சங்களும், புரிந்துணர்வும் ஏற்பட்டு வருகின்றன. பொதுவாகவே தொடர்பு சாதனங் களின் வளர்ச்சி பண்பாடுகளின் தனித்துவத்தைச் சிதைப்பதாகவே குறை கூறப்படுகின்றது. இனங்களின் தனித்துவப் பண்பாடுகளை தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி செய்திப் பரிமாற்றங் களின் துரிதம் என்பன தாக்கமடையச் செய்துள் ளன என்று சிலர் கூறினாலும் உலகத்தினை ஒரு கிராமமாக்கி சர்வதேச ரீதியிலான பண்பாட்டுக் கோலங்களை சகலரும் அறிந்தொழுக இவை பூரணமாக உதவி வருகின்றன என்பதை மறு தலிப்போர் இல்லை எனலாம். உலகப் பண்பாடு களுடன் உலக மக்கள் ஒன்றிணைந்திட தகவல் தொடர்பு மற்றும் செய்திப் பரிமாற்றங்கள் பேருதவி புரிந்து வருகின்றன. மேலும் ஒரு பண்பாட்டினர் பின்பற்றும் பண்பாட்டுக் கூறு களை இன்னொரு பண்பாட்டுக் குழுவினர் பின்பற்றுவதற்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி உதவி புரிவதுடன் அதனையே நவீனமான தாகவும் கருதிக் கொள்கின்றனர். உதாரணமாக, இலங்கைத் தீவிலுள்ளவர்கள் அந்நிய நாடு களில் இவர்களது உறவினர்கள் வசிக்கின்ற பொழுது, அவர்களது திருமண வைபவங்களை தொழிநுட்பத் துறையின் வளர்ச்சி காரணமாக நேரடிக் காட்சிகளாக இங்கிருந்து பார்த்து விட்டு அவர்கள் பின்பற்றும் ஆடை அலங்காரங்கள், சிற்றுண்டி வகைகளை இலங்கையர்களும் பின்பற்றும் போக்கினைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்விதமாக நவீனமயமாதலின் விளைவாக உருவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பண்பாடுகள் பிறழ்வு நிலை யினை அடைவதனை அவதானிக்க முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியானது சகல இனங்களினதும் பண்பாடுகளின் முக்கிய ஒரு கூறு என்றே கூறப் படுகின்றது. அத்துடன் இது ஒரு பண்பாட்டுக் காவியுமாகும். மக்களின் உணர்வுகள், நம்பிக்கைகள், பண்பாட்டு மரபுகள் என்பன அவர் தம் தாய் மொழியிலேயே பொதிந்துள் ளன. தேசியப் பண்பாட்டின் உயிர் நாடியாக மட்டுமன்றி பண்பாட்டை வளர்க்கக் கூடிய சாதனமாகவும் மொழி விளங்குகின்றது. தாய் மொழியானது ஒரு இனத்தின் பண்பாட்டில் முக்கியம் பெறுகின்றது. ஒரு நாட்டில் சிறு பான்மையினராக உள்ள மக்களின் மொழியை ஒதுக்கிவிட இல்லது நசுக்கிவிட பெரும்பான்மை யின மக்கள் நினைப்பது தவறாகும். அது துரோகமுமாகும். நம்பிக்கைகள், சிந்தனைகள், உணர்வுகள், மரபுகள் போன்றன இனங்களின் தாய்மொழியிலேயே சங்கமிக்கின்றன. பண் பாட்டை வளர்க்கூடியதாகவும் தேசிய பண்பாட் டின் ஊன்றுகோலாகவும் மொழி அமைகின்றது. சிறுபான்மை இனங்களின் மொழியும் பண் பாடும் பாதுகாக்கப்படுவதன் மூலமே நாட்டின் பண்பாட்டுப் பெருமை மேலோங்கும். இவ்வித மாக மிக முக்கிய கூறாகவும், பண்பாட்டுக் காவியாகவும விளங்குகின்ற மொழியானது வேற்று நாட்டவருடனான தொடர்பு, கல்விச் செயற்பாடுகள், ஒரு மொழியிலுள்ள நூல்களை இன்னொரு மொழிக்கு மொழி பெயர்த்தல், ஆங்கில மொழியின் மோகம் என்பவை அடங்கலான நவீனமயமாதல் சிந்தனைகளால் அதனுடைய தரம் கெட்டு தூய்மைத்தன்மை யிழந்து காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. ஒரு பண்பாட்டின் முக்கிய கூறான மொழியே கலப்படமாக தூய்மையிழந்து காணப்படும் போது ஏனைய பண்பாட்டம்சங்கள் எவ்விதம் நவீனமயமாதல் எனும் செயற் பாட்டால் பிறழ்வு நிலையினை அடைந்திருக்கும் என்பதனை சொல்லத் தேவையில்லை.

ஒரு சமுதாய உறுப்பினன் என்ற வகையில் மனிதன் ஈட்டுகின்ற மரபு வழியாலும் அனுபவத்தாலும் கற்றுக்கொள்கின்ற பழக்க வழக்கங்கள், மத அனுஸ்டானங்கள், திறன்கள், மக்கள் குழு உருவாக்குகின்ற உலகாயுதப் பொருட்கள் அனைத்ததையும் தழுவியது தான் பண்பாடு என்ற வகையில், உலகிலுள்ள எவ்வொரு மக்கள் கூட்டமும் பின்பற்றுகின்ற பாரம்பரிய மத அனுஸ்டானங்கள் தற்காலத்தில் நவீனத்துவ சிந்தனைகளால் பல மாற்றங்களைக் கொண்டு திகழ்வதனை தற்காலத்தில் அவ தானிக்க முடிகின்றது. குறிப்பாக தற்காலத்தில் ஆலயம் சென்று இறைவனைத் தரிசிக்கும் முறை அருகி வருகின்றது. காரணம் வீட்டுக்கு வீடு தொலைக்காட்சிப் பெட்டி மூலம் எந்தவொரு தூரதேசத்திலுள்ள ஆலயத் திருவிழாக்களையும் கண்டு கழிக்க முடிகின்றது. உதாரணமாக தமிழர்களது பண்பாட்டுப்படி ஆலயத்திற்குச் செல்லும் போது, பக்திப் பரவசத்துடன் பொருத்த மான ஆடையலங்காரத்துடன் செல்வோரை அரிதாகவே காண முடிகின்றது. தமிழர்களது பண்பாட்டுப்படி பெண்கள் சேலையும், சிறுமிகள் பட்டுப்பாவாடை சட்டையும், ஆண்கள் வேட்டி சால்வையும் அணிந்து செல்லும் மரபு மாறி நவீன சிந்தனைப்போக்கால் மேற்கத்தேச ஆடை யலங்காரத்துடன் ஆலயத்திற்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் நவீன மயமாதல் என்ற சிந்தனைப் போக்கால் மத ரீதியிலான பண்டிகைகளைக் கூட சிறந்த முறையில் நேர்த்தியாக அனுக்ஷ்டிக்காமல் மரபு பிறழ்ந்த நிலையில் குடித்தும், வெறித்தும் அனுக்ஷ்டிப்பதை அவதானிக்க முடிகின்றது. இவ்விதமாக நவீனமயமாதல் என்ற சிந்தனைப் போக்கால் மதரீதியிலான பண்பாட்டுக் கூறுகள் பல்வேறு வகையிலும் பிறழ்வு நிலையினை அடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொரு இனக்குழுக்களதும் பண்பாடு களை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள உதவும் ஒப்பற்ற பண்பாட்டுக்கூறுகளில் ஒன்று அவரவர்களின் உடையணியும் முறை. இது ஒவ் வொரு பண்பாடுகளைப் பின்பற்றுபவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமாகவும் உள்ளது. உதாரணமாக எமது தமிழ்ப் பண்பாட்டினை எடுத்துக்கொள்வோமானால், பெண்கள் சேலை அணிந்து கொள்வது, ஆண்கள் வேட்டி சால்வை அணிந்து கொள்வது தான் வழமை. தற்காலத்தில் நவீனமயமாதல் என்ற செயற்பாட்டின் விளைவால் மேலைத் தேசப் பண்பாட்டினைப் பின்பற்றி பெண்கள் ஜீன்ஸ், ரீ சேட் அணிதல், அரைகுறையாக ஆடையணிவதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் கொலிவூட் சினிமாக்களில் காட்டப்படும் ஆடைகள், நடிகர்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் நவநாகரிகங்கள் அனைத்தையும் நான்கு சுவருக்குள் இருந்தவாறே கண்டு, இரசித்து, தாங்களும் அக்கலாசாரங்களுக்கு அடிமையாகி விட்ட நிலை ஒருபடி மேலே உயர்ந்து செல்லுமிடமெல்லாம் கொண்டு செல்லக்கூடிய கையடக்கத் தொலை பேசியில் அனைத்தையும் பெற்று அனுபவிக்கும் காலம் தற்காலம் என்பதனால் எமது பண் பாட்டினை நாமே பாதுகாத்து அடுத்தடுத்து வரும் சந்ததியினருக்கும் தவறாமல் கையளிக்கத் தக்கவாறு பண்பாட்டுச் சீரழிவை ஏற்படுத்தாதவாறு எம்பண்பாட்டினைப் பாதுகாத்தல் அனைவரதும் கடமையாகும்.

இவ்வாறே பண்பாட்டின் இன்னுமொரு முக்கிய கூறான உணவுப் பழக்கவழக்கங்கள் கூட நவீனமயமாதல் சிந்தனைகளால் · மாறிப் போயுள்ளன என்பதனை சொல்லத் தேவையில்லை. ஒவ்வொருவருடைய உணவுப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் எந்தப் பண்பாட்டை பின்பற்றுபவர்கள் என்பதனை அடையாளம் கண்டு கொள்ளும் காலம்மாறி அவரவர் தம்தம் பண்பாட்டிற்கு பொருத்தமற்ற உணவுப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். தற்காலத்தில் எல்லா இனக் குழுக்களும் பெரும்பாலும் கலப்புப் பண்பாட்டம்சங்களைத் தான் கொண்டுள்ளன.

இன்று நாம் சினிமாத்துறையை எடுத்துக் கொள்வோமானால் அதுவே பண்பாட்டு சீரழிவுக்கான மிகப்பிரதானமான துறையாக உள்ளது. அதிலே வரும் கதாநாயகிகள், நடனக் குழுவினர் அணியும் ஆடைகளால் இதுவா தமிழர்களின் பண்பாடு என என்னத் தோன்றும். ஆனால் தமிழ் சினிமாவின் தாயகமான இந்தியாவிற்கு சென்றால் பெண்கள் தமது பண்பாட்டிற்கு ஏற்ற விதத்தில் ஆடையணிவதை பெரும்பாலும் அவதானிக்கலாம். அதற்காக அங்கு மேலைத்தேச கலாச்சார அம்சங்களை பின்பற்றுபவர்கள் இல்லையென்று சொல்வதற்கில்லை. ஆனால் வியாபார நோக்கிற்காக சினிமா படங்களில் அரைகுறை ஆடைகளுடனும், ஆபாசமுடனும் திரைப்படங்கள் வெளியிடப்படுகின்றன. இதனை உலகில் உள்ள அனைவரும் இலகுவில் பார்த்து இரசிக்கத்தக்கவாறு தொழில்நுட்பம் தனது கைவரிசையை காட்டி புதிய புதிய சாதனங்களை நவீனத்துவ சிந்தனைகளால் உருவாக்கியுள்ளது, உருவாக்கிக் கொண்டும் இருக்கின்றது. குறிப்பாக மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவர் குழந்தை நெருப்பில் கருகிச் சாவதை கைகொட்டிச் சிரிப்பதைப் போல பண்பாட்டம்சங்கள் நெருப்பில் அழியும் போது நாம் சினிமா அரங்குகளில் கைகொட்டி ரசிக்கின்றோம். இவ்வாறு நாம் நடந்து கொள்ளலாகாது. தயாரிப்பாளர்களாகவோ, இயக்குனர்களாகவோ இருக்கலாம். அல்லது அந்த சினிமாவில் நடிக்கும் நடிகைகவோ அல்லது பின்னணி நடனக்குழுவினராகவோ கூட இருக்கலாம். நாம் எமது பண்பாடு என்று அதனைப்பேணிக்காக்க முயற்சித்தல் வேண்டும். இல்லையேல் ஒவ்வொரு பண்பாட்டுக் கூறுகளும் காற்றில் பறந்து காலக்கிரமத்தில் காணாமல் போய்விடும் என்பதோடு எமது அடுத்த தலைமுறையினர் எமது பண்பாடே தெரியாமல் கலப்புப் பண்பாடுகளை பின்பற்றுவது உறுதி. ஆகவே நாமே எமது பண்பாட்டைப் பேணிக்காப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தற்காலத்தில் தொலைக்காட்சி போன்ற செய்தி தொடர்பு சாதனங்கள் நம் கலாச்சாரத்தை மதிக்க வேண்டும். தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் வரும் பெண்களின் தமிழ் உச்சரிப்பும் அவர்களின் ஆடை அலங்காரங் களும் குறிப்பாக அரைகுறை ஆடை அணிந்து வருவார்கள். தட்டிக்கேட்டால் ஆபாசம் உடை யில்லை. அவரவர் மனதில் தான் என்பார்கள். அத்துடன் நாகரீகம், நவீனம் என்று நினைத்து தமிழ் நிகழ்ச்சிகளில் பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்துகின்றனர். இதனால் பண்பாடு பல வகைகளிலும் பாதிப்புற்று தூய்மைத்தன்மை இழப்பதை கண்டு கொள்ள முடிகின்றது. நவீனத்துவம் என்பதற்காக ஒரு பண்பாடு பாதிக்கப்படுவது நல்லதல்ல. நவீனத்துவம் நல்லதுதான். ஆனால் எமது பண்பாடு பாதிப்புறாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில் எமது மொழியை நாமே காற்றில் பறக்கவிட்டுவிட்டு ஆங்கிலக்கலப்பினை அநா வசியமாக அளவுக்கு மேல் பிரயோகிக்கின் றோம். அழகான நடைமுறையில் பிரயோகத்தில் உள்ள சொற்களைவிட்டுவிட்டு தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் ஏனோ ஆங்கில மொழிக் கலப்புடனே தமிழை பிரயோகிக்கின்றனர். இந்நிலை தொடரக்கூடாது. எமது பண்பாடு பற்றிய ஆழமான அக்கறை முதலில் எமக்குத் தான் தேவை. அப்பொழுது தான் எமது பண்பாடு சிதைவுறாமல் நாம் பாதுகாக்க முடியும்.

இன்னுமொரு முக்கியமான விடயத்தை யும் நாம் இங்கு நினைவுகூறுதல் சாலப் பொருந்தும். அதாவது நாம் தமிழ்ப்பண்பாட்டை உற்றுநோக்கி பேசத்தொடங்குவோமானால், மேற்குலகத் தொடர்பால் தமிழ் சர்வதேசிய நிலைப்படுத்தப்பட்டது. தமிழை உலகின் பிற மொழிகளோடும், அவற்றின் பண்பாடுகளுடனும் ஒப்புநோக்கித் தமிழின் தனித்தன்மையையும் பொதுமையையும் பாதுகாக்க வழிசமைத்தது. தமிழிலும் அதன் சமூக அமைப்பிலும், கலை இலக்கியத்திலும் உள்ள உலகப் பொதுமை வாதப் பண்புடைய அம்சங்களையும் அறிந்து கொள்ளவும் முடிந்தது. இம்முயற்சியில் பிற நாட்டவர்களும் கூட ஈடுபட்டனர். இம்முயற்சி களே செம்மொழி அந்தஸ்தினை தமிழுக்குப் பெற்றுத்தந்தது. தமிழ்ப் பண்பாட்டை உற்று நோக்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது தமிழ் இலக்கியத்திலுள்ள சர்வதேசியப் பொதுமை, ஜனநாயகப் பண்பு, மனிதநேய மானுடப் பண்பு என்பன இனங்காணப்பட்டன. திருக்குறள் உலகின் முக்கிய கருவூலச் சிந்தனையாகக் கண்டு கொள்ளப்பட்டது. நவீன உலகின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கு தமிழ் பயன்படத்தக்கது என்பதுவும் கண்டறியப் பட்டது. தமிழ் மரபிலே நின்று கொண்டே புதுமைகள் மேற்கொள்ளவும் முடிந்தது. மேலும் தமிழ்ப் பண்பாட்டின் அம்சங்கள் தமிழர்களை முற்போக்கு வழியில் இட்டுச் செல்வதாகவும் நிறுவப்பட்டது. துமிழ்ப் பண்பாட்டின் கருத்து நிலை அம்சங்கள் தமிழ் மக்களின் நவீன மயப் பாட்டை தடுக்காது என்பது நிறுவப்பட்டதாக பேராசிரியர் சிவத்தம்பி குறிப்பிடுகின்றார். தமிழில் விஞ்ஞானத்தைக் கொண்டு வரும் முயற்சி தொழிநுட்ப மயப்படுத்தப்படும் போதே சாத்தியம் என்று கண்டறியப்பட்டது. மொழி பெயர்ப்பினால் மட்டும் ஒரு மொழியில் மாற்றத்தைச் செய்திட முடியாதென்றும், அவை அந்த மண்ணிலிருந்து கிழம்ப வேண்டுமென்றும் அறியப்பட்டது.

இவ்விதமாக நோக்குகின்ற போது மக்கள் குழுவொன்று தமது சமூகத்தின் வரலாற்று வளர்ச்சிப் படிகளினூடாக உருவாக்கிக் கொண்ட பௌதிகப் பொருட்கள், ஆன்மீகக் கருத்துக்கள், மத அனுஸ்டானங்கள், சமூக விழுமியங்கள் என்பவற்றினை ஒன்றிணைத்த ஒரு பல் கூட்டுத் தொகுதியான பண்பாடு பிறழ்வு நிலையினை அடைவதற்கு ஒவ்வொரு துறை யிலும் நவீனமயமாதல் செலுத்திய தாக்கம் முக்கிய காரணமாக விளங்குகின்றது. குறிப்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி, புதிய உலகத் தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப துறையின் வளர்ச்சி, செய்திப்பரிமாற்றம், மக்களின் சுவை, சிந்தனை கருத்துக்கள், வாழ்க்கை முறைப் போக்கு, உடை, உணவு, இசை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்பவற்றில், நவீனத்துவத்தை பின்பற்றுவதனால் ஒரு குறித்த பண்பாடு பிறழ்வு நிலையினை அடையக் காரணமாயிருக் கின்றன. இவ்விதமாக நவீனமயமாதலால் பண் பாடுகள் பிறழ்வு நிலையினை அடைகின்றன என்பதை மட்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் நவீன மயமாதலின் விளைவான தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி செய்திப் பரிமாற்றங்களின்துரிதம் என்பன இனங்களின் தனித்துவப் பண்பாடுகளை தாக்கமடையச் செய்துள்ளன என்று சிலர் கூறினாலும் உலகத்தை ஒரு கிராமமாக்கி சர்வதேச ரீதியிலான பண்பாட்டுக் கோலங்களை சகலரும் அறிந்தொழுக இவை பூரணமாக உதவுகின்றன என்பதனை மறுதலிப்போர் இல்லை எனலாம். இன்னொரு விதமாக சொல்வதானால் பிற மதங்களின் அல்லது பிற இனங்களின் தாக்கம் ஒரு பண்பாட்டை சிதைவுபடுத்திக் கலாச்சார சீரழிவுகளுக்கு இட்டுச்செல்வதாக பல முனை களிலிருந்து குரல்கள் எழுகின்ற இன்றைய சூழலிலே அது பற்றிய மெய்மைத்தன்மையை நோக்குதல் சாலப் பொருந்தும். இன்னொரு கூட்டத்தின் ஊடுருவல் தாக்கத்தினால் ஒரு பண்பாட்டை சிதைவுற வைத்திட முடியாது என்றும் இன்னும் சொல்வதானால் இப்படியான கூட்டத்தின் ஊடுருவல் தாக்கத்தினால் குறிப்பிட்ட கூட்டத்தின் பண்பாட்டு அம்சங்கள் பற்றிய அக்கறை அதிகரிக்கும் என்றும் கூறப் படுகின்றது. ஆகவே குறிப்பிட்ட பண்பாட்டைப் பின்பற்றுபவர்கள் தான் தமது பண்பாடு பற்றிய அக்கறையுடன் செயற்பட்டு தமது பண்பாட்டை பாதுகாக்க வேண்டும். ஆகவே விழிப்புடன் செயற்பட்டு எமது பண்பாட்டை பாதுகாத்து இனி வரும் சந்ததியினரும் பண்பாட்டு விழிப் புடனிருக்க எம்மாலான உதவிகளை செய்திடு வோம்.

**"இனங்களின் உயர்வினை**
**இந்நிலத்தில் சாற்றிடவே**
**பண்பாட்டை பாதுகாத்து– இந்தப்**
**பாரெல்லாம் புகழ் பெறுவோம்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேராசிரியர் க.கணதிப்பிள்ளையின் நாடகநிலை பற்றிய சில தொடுகை நிலை குறிப்புகள்


தி.கார்த்திகேயன்
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
வடமராட்சி கிழக்கு.


இயல், இசை, நாடகம் என்னும் முத் தமிழ் தழைத்தோங்கி நின்ற ஈழத்திலே நாடகம் என்கின்ற வடிவத்திற்கு உயிர் ஊட்டியாய் கிராமத்தவரும் விளங்கும் நிலைக்கு கொண்டு சென்றவர்களுள் பேராசிரியர் க.கணபதிப் பிள்ளை குறிப்பிடத்தக்கவர். 1903ம் ஆண்டு வடமராட்சியின் பருத்தித்துறையில் பிறந்தார். இவர் இளம் வயது முதல் பல்மொழிகளைக் கற்று ஏகினார். தந்தையாரிடமும் கல்வி கற்றார். இவர் வடமொழி, தமிழ்மொழி ஆகியவற்றிலே சிறப்புற்று விளங்கிய முத்துக்குமாரசாமிக் குருக்களிடம் கல்வி கற்றார். ஆரம்பக் கல்வி யினை யா/ஹாட்லிக் கல்லூரியிலே கற்றார். பின்பு 1930ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரியிலே கலைமாணிப் பட்டத்தி னைப் பெற்றார். பின்னர் இலண்டன் பல்கலைக் கழகத்திலே ஆய்வுநிலைக் கல்வியினை மேற் கொண்டார். புல்கலைக்கழக அரங்கமரபில் கிங்பரிதேசிக அடிகளார், விபுலானந்தர் ஆகி யோரைத் தொடர்ந்து அரங்கப் பணியாற்றினார்.

பேராசிரியர் அவர்கள் இலண்டனிலே வாழ்ந்த காலத்தில் அறிஞர் பேனாட்க்ஷா அவர்களுடைய நாடகங்களை கண்ணுற்றார். இதன் விளைவாக இயல்புநிலை நாடகங்களிலே இவருக்கு ஈடுபாடு வந்ததாகவும் கூறுவர். ஈழத்து நாடக வரலாற்றிலே யதார்த்த நிலையினை வெளிப்படுத்திய பெருமை இவரையே சாரும். “இழிசனருரை” எனப்பட்ட பேச்சு வழக்கினை நாடகத்திலே கொண்டுவந்த பெருமை இவருக்குரியதே. குறிப்பாக யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு பொதுவாயும் பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாயும் உள்ளது. இவர் ஏன் பேச்சு வழக்கிலே எழுதுகிறார் என்பதற்கு நாடக முன்னுரையில் இவ்வாறு கூறுகின்றார். “உலகி யலை ஆதாரமாக கொண்டு எழுதுவது நாடகம். ஆகவே அதில் வழங்கும் மொழி நடையும் உலக வழக்கை ஒட்டியதாக இருத்தல் வேண்டும்” என கூறுவதனூடாக நியாயப் படுத்துகின்றார்.

இவரது நாடக பணி சிறப்பு பற்றி பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் கூறும் போது “பேராசிரியருடைய ஆக்கங்களை எல்லாம் நிரைப்படுத்திக் கூறிய வித்துவான் க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் “பைந்தமிழ் வளர்த்த பதின்மர்” என்ற நூலிலே இறுதியாக “இவற்றை எல்லாம் ஆக்கியிருப்பி னும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பெயர் ஒரு சிறந்த நாடக ஆசிரியர் என்னும் வகையிலேதான் தமிழிலக்கிய வரலாற்றிலே நிலைத்து நிற்கும் என்பது எனது கருத்தாகும்” என்று கூறியுள்ளார். “சொக்கன் அவர்களுடைய இக்கருத்தினை முழுமையாக நான் வழி மொழிகிறேன்” என கூறுவது பேராசிரியரின் நாடகப் புலமையை புடம் போட்டுக் காட்டுகிறது.

ஈழத்து நாடக வரலாறு எழுதுகின்ற எவரும் கணபதிப்பிள்ளையை விடுத்து எழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அவ்வாறு அமைந்தால் அவ்வரலாறு முழுமையாகாது. பேராசிரியரது நாடகங்களை பின்வருமாறு வகைப்படுத்துவர்.

| | |
|---|---|
| நாடகம் (1940ல் தொகுதியாக வெளிவந்தது) | நாட்டவன் நகர வாழ்க்கை. உடையார்மிடுக்கு. கண்ணன்கூத்து. முருகன் திருகுதாளம். |
| இரு நாடகம் (1952) | பொருளோ பொருள். தவறான எண்ணம். |
| வரலாற்று நாடகம் (1956) | சங்கிலி. |
| அச்சில்வராதவை (1955, 1956) | துரோகிகள். சுந்தரம் எங்கே? |
| தழுவல் நாடகம் | மாணிக்கமாலை. |

(இது வடமொழியில் ஹரியவருத்தனன் எழுதிய இரத்தனாவளியினை தழுவி எழுதப்பட்டது)

இவரது வரலாறு பற்றிய அறிவினையும் தமிழ் நிலைப்பட்ட உணர்வின் உந்துதலையும் நாம் சங்கிலி நாடகத்திலே கண்டு கொள்ளலாம். சங்கிலி எனும் பெயருடன் யாழ்ப்பாணத்தை அரசாண்ட மன்னர் இருவராவர். அவருள் செக ராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயருடன் நாட்டை ஆண்ட முதற்சங்கிலியே (கி.பி 1519 முதல் கி.பி 1565 வரை) இந்நாடகத்தின் தலைவனாவான். இந்நாடகத்தின் ஊடாக பண்டைய ஈழத்தமிழர்களின் வீரமும் மானமிகு உணர்வும் வெளிப்படுகின்றது. இந் நாடகமானது ஒருவகையிலே ஈழத்து தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டு நாடகம் எனவும் கூறலாம்.

மாணிக்கமாலை நாடகமானது இவரது வடமொழிப் புலமையையும் யாப்பு இலக்கணத் திறனையும் வெளிப்படுத்துகிறது. இது கி.பி 7ம் நூற்றாண்டில் கண்ணோகி (Kanoci) நாட்டை ஆண்ட ஹரிசவருத்தனன் (Harshavardhanan) எனும் புலமை சான்ற மன்னர் பெருந்தகை வட மொழியில் "இரத்தினாவளி" எனும் பெயரால் இயற்றிய நூலைப் பின்பற்றி எழுந்தது என முன்னுரையில் பேராசிரியர் அவர்கள் குறிப் பிட்டுள்ளார். ஆயினும் இன்று சில அறிஞர்கள் இந்நாடகத்தை மொழி பெயர்ப்பு நாடகம் எனக் கூறுவதும் உண்டு. அது தவறு என்பது குறிப்பிடத் தக்கது. இதன் முன்னுரையில் "இது முதனூலை தழுவி எழுந்த ஒரு தமிழ் நூலெங்க மொழி பெயர்ப்பு நூலன்று" என பேராசிரியர் குறிப் பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இந்நாடகம் சிறப்புறுவதற்கு விபுலானந்த அடிகளார் தனக்கு தந்த ஊக்கமும் ஒரு காரணம் எனக் கூறியுள் ளார். இது வடமொழி மரபின்படி "நாடிகை" என்ற வகுப்பிற்குள் உள்ளடக்கப்படுகிறது.

இவரது மாணிக்கமாலை தவிர்ந்த ஏனைய நாடகங்கள் ஈழத்தமிழரின் வாழ்விய லின் விம்பங்களாக வெளிப்பட்டவையே. சங்கிலி, மாணிக்கமாலை தவிர்ந்த ஏனைய படைப்புக்கள் அவர் வாழ்ந்த கால சமுதாயப் பிரச்சினைகளையும் கட்டுமானங்களையும் வெளிக்கொணர்ந்தன. ஈழத்து நாடக வரலாற் றில் முதன்முதலில் இயற்பண்பு நிலையிலே நாடகத்தை வெளிப்படுத்தியவர் இவராவார். கதை அமைப்பிலும் பாத்திரப் பிரயோகத்திலும் உரையாடல் தன்மையிலும் இயல்புநிலை வெளிப்பட்டது.

சமூக அரசியல் கொள்கைகளை கூறுவதற்கான ஒரு தொடர்புச்சாதனமாக தமிழ் அரங்கை பயன்படுத்தும் முறையை தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடக வெளிப் பாடுகள் ஊடாகக் கண்டு கொள்ளலாம். அத்த கைய புலமையை ஈழத்தில் இவரது நாடகத்தின் ஊடாக காணலாம். பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் பேராசிரியரின் நாடகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி குறிப்பிடும் போது "முதலில் சமூகப் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கும் பின்னர் அரசியல் பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கும் நாடகம் வன்மையான ஒரு சாதனமாயிற்று. இத்துறையில் முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆவார். அவருடைய உடையார்மிடுக்கு, பொருளோ பொருள் போன்றவை சமூகப் பிரச்சனைகளை ஆராய்வதற்கான சாதனமாக அமைய, தவறான எண்ணம், துரோகிகள் ஆகிய இரண்டும் நிச்சயமாக அரசியல் நாடகங்களே ஆகும். துரோகிகள் நாடகத்தில் தமிழர் போராட்டம்இ வன்முறை நிலையான ஒன்றாக மாறும் என்ற பிற்கால வரலாற்றுண்மை முன்மொழிவு செய்யப்பட்டுள்ளமையைக் காணலாம்" எனக் கூறியமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையிலே பார்க்கும்போது 1956ற்குப் பின்னர் ஈழத்து நாடக வளர்ச்சியை நிர்ணயித்த பெரிய சக்தியாக இவரது படைப்புக்கள் காணப்படுவதாகக் குறிப்பிடலாம். இவர் சமகால பிரச்சனைகளை நோக்கிய தன்மைகள் பிற்கால 60கள், 70கள், 80கள் நோக்கிற்கான அரங்கப்போக்கின் அடித்தளமாக அமைகிறது எனலாம்.

இவரது நாடகங்கள் இலங்கைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்களில் சங்கத்து நம்பியர் நங்கையர்கள் ஊடாக மேடையேற்றப்பட்டு வந்தன. இந்நாடகத்திற்கான காட்சிப் பின்னணியில் இயல்பு நிலைகள் முனைப்புப் பெறத் தொடங்கி விடுகின்றது என்பர்.

உடையார்மிடுக்கு என்கின்ற நாடகமானது அக்காலத்து யாழ்ப்பாண சமூகத்தில் உடையார்களின் பதவிநிலை அதிகாரம் கொண்டு அலையும் தன்மையை வெளிப்படுத்துவதோடு சமூகத்தில் உடையார்களிற்கு உள்ள எதிர்ப்பு நிலையையும் ஆங்காங்கே வெளிப்படுத்துகின்றது. முருகன் திருகுதாளம் என்னும் நாடகமானது நகைச்சுவையை வெளிப்படுத்துவதுடன் யாழ் மண்வாசனையையும் வெளிப்படுத்துகின்றது. கண்ணன்கூத்து என்ற நாடகத்தினூடாக யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த இறுக்கமான சாதிய கட்டுமானங்களை வெளிப்படுத்துகின்றார். அதுமட்டுமன்றி காலவோட்டத்தில் வளர்ந்து வரும் சமுதாயம் சாதிய இறுக்கத்தை தளர்த்தும் என்ற நம்பிக்கையையும் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். நாட்டவன் நகர வாழ்க்கை என்னும் நாடகத்தின் மூலம் ஒரு நகரத்தையும் ஒரு கிராமத்தையும் ஒப்பிட்டுக் காட்டுகிறார். குறிப்பாக பருத்தித்துறையில் தும்பளை கிராமத்தையும் கொழும்பையும் மையமாக வைத்து கதையை நகர்த்தி செல்கிறார். இவரது பொருளோ பொருள் அல்லது கார்த்திகேயன் வீழ்கை என்ற நாடகம் உறவுகளுக்கு இடையே பாசத்திற்கும் பணத்திற்கும் இடையிலான நெருடல் தன்மையை வெளிப்படுத்துவதுடன் சீதனம் என்கின்ற சாபக்கேட்டினையும் சுட்டிக்காட்டுகின்றது. தவறான எண்ணம் இலங்கையின் அரசியல் போக்கையும் அதன்பால் மக்களின் தொடர்புகள் எத்தகைய மாற்றத்தை ஏகி நிற்கிறது என்பவற்றைக் கூறி நிற்கின்றது. சுந்தரம் எங்கே? என்கின்ற நாடகம் குடும்ப உறவு நிலையை வெளிப்படுத்துகின்றது.

இவரது நாடகம் பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்கள் "சாதுரியப் பேச்சும் எவரையும் புண்படுத்தாத இங்கிதமும் சிந்திக்க வைக்கும் ஹாஸ்யமும் விசயத்தில் அமிழ்ந்து விடாது விலகி நிற்கும் இயல்பு என்கிறார். இத்தன்மையினை நாம் அவரது நாடகங்களிலே வருகின்ற பாத்திரவார்ப்புக்கள் ஊடாகக் காணலாம்.

இவரது காலத்திற்கு முற்பட்ட கால நாடகங்களிலே பெரும்பாலும் அரசன், தளபதி, கடவுள் போன்ற உயர் அந்தஸ்து நிலைப் பாத்திரங்களே காணப்பட்டன. ஆனால் இவரது நாடகங்களில் சமூகத்தின் நடப்பியல் வாழ்வோடு தொடர்புடைய அனைத்துப் பாத்திரங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் வெளிப்பட்டன. உதாரணமாக குடையுடன் திரியும் புறோக்கர்மாரையும், செருக்கு மிக்கவர்களான சுருட்டுக்கு வழக்கு பேசும் புரக்கிராசிமாரையும், மிடுக்கான உடையார் களையும், பண்டிதர்களையும் மத்திய தரவர்க்கம் உள்ளடங்கலாக சாதாரண கூலித் தொழிலாளர்களையும் வெளிப்படுத்துக றார்கள்.

யாழ்ப்பாணத்து மண்வாசனைக்கு எடுத்துக்காட்டாக பழமொழிகள், வட்டார வழக்குகள், அடைமொழிகள், சொற்றொடர்கள் என்பவற்றுடன் இயல்பு நிலையில் பேசப்படும் தமிழ் மொழிமயப்பட்ட ஆங்கிலச் சொற்களையும் காணலாம். பழமொழிகள் என்ற வகையிலே "பெட்டைக் கோழி கூவியும் பொழுது விடியுமோ" கோழியைக் கேட்டோ ஆணம் காய்ச்சுறது" "மெத்தையிலை வைச்சாலும் சருகுக்குள்ளே போறது சருகுக்குள்ளேதான்" "பாவற்கொட்டையை போட சுரக்கொட்டையோ முளைக்கும்" "பூவில்லாமல் மாலை முடிக்கலாமோ" "நிலவுக்கு ஒழிச்சு பரதேசம் போறதோ" "கிணற்று தவளைக்கு ஏன் நாட்டு விளப்பம்" போன்றவற்றை காணலாம். இது மட்டும் இன்றி குறித்த நபரை குறிப்பிடும் போது ஏதாவது அடைமொழியை வைத்து கூப்பிடுகின்ற யாழ்ப்பாணத்தவரின் சொற்பிரயோகத்தை இவரது நாடகங்களில் காணலாம். உதாரணமாக "குஞ்சங்கலட்டி தாடிச்சுப்பர், "மடத்தடி புரக்கிராசி", "பணவெட்டியாழ்வார்", "பொழுது முளையான் பொன்னுச்சாமி", "தின்னங்கட்டி தாமு கமக்காரர்", "வாக்குச்சாத்திரி", "ஐந்து புளியடி கனகம்", "ஆடுகால்கந்தர்", "கொடுப்பு சப்பி சண்முகம்" போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதுமட்டுமன்றி யாழ்ப்பாண பிரதேச வழக்கில் உள்ள வட்டாரச் சொற்கள் பல யாழ் மண்வாசனையை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக "அங்கினை", அதுக்குள்ளே, இச்சரும், பேந்து, மோனை, சுருக்கல், காத்தாலை, படலை" போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்துடன் கதையோடைகதை, பேசிப்பறைஞ்சு, போன்றனவும் காணப்படுகின்றன. இதுமட்டுமன்றி யாழ் சமூகத்தினிடையே அன்றாட உரையாடலில் வருகின்ற ஆங்கிலச் சொற்கள் மற்றும் பிறமொழிச் சொற்கள் இவரது நாடகங்களிலே இயல்பாக வெளிப்படுகின்றது. உதாரணமாக "விசுக்கோத்து, பஸ், இறைவர், இடாக்குத்தர், கவர்மேந்து, கோச்சி, கொம்பாட்மன்" போன்றவற்றையும் குறிப்பிடலாம். மற்றும் யாழ்ப்பாணத்தவரின் சமய சடங்கு சம்பிரதாயம், கண்திருஸ்டி பார்த்தல், ஆலயமரபு, ஐதீகத் தன்மை என்பனவும் மண்வாசனையை வெளிப்படுத்துகின்றன. இவரது மாணிக்கமாலை தவிர்ந்த வரலாற்று நாடகமாகிய சங்கிலி உட்பட அனைத்து நாடகங்களிலும் வெற்றிலை வைத்தல் என்ற பழந்தமிழ் பண்பாடு வெளிப்படுவதைக் காணலாம். இவ்வாறாக நாடகங்களில் ஒவ்வொரு கட்டமும் சமூக வாழ்வியலில் யாழ்ப்பாணத்து மண்வாசனையை வெளிப்படுத்துகின்றன.

பேராசிரியர் நாடகத்திலே பயன்படுத்திய யாழ்ப்பாணப் பேச்சுவழக்கிற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்க பல்கலைக்கழக மொழியியல் "பேராசிரியர் கேயர்" அவர்கள் மொழியியல் ஆய்வு மேற்கொள்ளும் போது கூறிய கூற்று சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கூற்றுவருமாறு "யாழ்ப்பாண மக்களின் பேச்சுவழக்கு பற்றி ஆராய வேண்டுமாயின் கணபதிப்பிள்ளை அவர்களுடைய நாடகங்கள் பற்றி ஆய்வு மேற்கொண்டால் போதுமானது எனக் குறிப்பிட்டுள்ளார் என்பதனை பேராசிரியர் பற்றிய நினைவுரையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. இவரது நாடகங்கள் பற்றி கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் பின்வருமஉறு கூறுவார். "சமூக விழிப்புணர்வுகால நாடகங்கள்" என்பர். இவ்வாறு கூறும் அளவிற்கு கணபதிப்பிள்ளை அவர்களுடைய நாடகங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு சமூக மட்டங்களையும் உற்று நோக்கி படைக்கப்பட்டுள்ளது எனலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது அரங்க போக்கிலே மிகவும் முக்கியமானது இவரது மாணவர் பரம்பரை குறிப்பாக பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சிவத்தம்பி, பேராசிரியர் கைலாசபதி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவரிற்கு பின்னர் இவர்கள் அரங்க வரலாற்றில் கணிசமான இடத்தை நெறியாள்கை செய்தார்கள். சிவத்தம்பி, கைலாசபதி போன்றோர் இவரது நாடகங்களில் நடித்துள்ளார்கள். இவரது தாக்கம் மாணவர்களிலும் தொடர்ந்து வரும் அரங்கவியலாளர்களிடமும் காணப்பட்டது.

தொகுத்து நோக்கும் போது பேராசிரியரின் நாடகநிலையானது ஈழத்து நவீனநாடகப் போக்கில் முக்கியமான அத்திவாரமாக அமைகிறது. பேச்சு வழக்கினை முதன் முதலில் ஆரம்பித்து வைத்தமை, ஈழத்து அரங்க வரலாற்றில் வாழ்ந்த காலத்து சமகால பிரச்சினைகளை வெளிப்படுத்தியமை, அரங்கின் ஊடாக அரசியல் அரங்க மரபை முதன்முறையாகத் தோற்றுவித்தமை என்பன முக்கியம் வாய்ந்தவை. இவரது பன்மொழியாற்றலும், யாப்பு இலக்கணத்திறனும், சமூகத்தை நேரடியாக தரிசிக்கும் தன்மையும், சமூகத்தின் நடப்பியல் பிரச்சனைகளை உள்வாங்கும் திறனும், தூர நோக்கோடு சிந்தித்து படைக்கும் பாத்திரங்களும் இவரது அரங்க முயற்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். எனவே பேராசிரியரது நாடகநிலையானது அதி உன்னதமான நிலையிலே ஈழத்தின் வரலாற்றில் போற்றப்பட வேண்டிய ஒன்றாகும். கலைத்துவம் மிக்க கலை உலகில் சஞ்சரிக்கும் ஒவ்வொரு அரங்கியலாளனும் கணபதிப்பிள்ளை என்கின்ற அடித்தளத்தை மறந்து விடவோ மறைத்து விடவோ முடியாத அளவுக்கு அழியாத்தடம் பதித்தவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2011













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது உரிமைகளை நாம் அறிவோம்

என்.சுந்தரமூர்த்தி
BA (Honf) M.Pill (P.S)
Dip in Mass media
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
அக்கராயன் குளம்

திருப்திகரமான குடியியல் வாழ்க்கையினையும் அரசியல் வாழ்க்கையினையும் அரசியல் வாழ்க்கையினையும் அனுபவிப்பதற்கு மணிகர்களுக்கு இருக்க வேண்டிய அடிப்படை நிபந்தனைகளே உரிமைகள்.

மனித உரிமைகள் பல உள்நாட்டு, வெளிநாட்டு சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை எமது தனி மனித ஆளுமையினை பாதுகாப்பதுடன் சமூகத்தினை ஒழுங்கமைப்பதற்கும் உதவுகின்றன.

உரிமைகள் பல உள்நாட்டு, வெளிநாட்டு சட்டங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை எமது தனி மனித ஆளுமையினை பாதுகாப்பதுடன் சமூகத்தினை ஒழுங்கமைப்பதற்கும் உதவுகின்றன.

உரிமைகளின் தோற்றம் தொடர்பாக இரண்டு விதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

1. மனிதனுக்கு உரிமைகள் பிறப்பிலேயே உரித்தாகுகின்றன.
2. உரிமைகள் மனிதருக்கு அரச சட்டங்களினால் உரித்தாக்கப்படுகின்றன.

உரிதமைகள் அனுபவித்தல் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து தனக்கும், முழு சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையில் உரிமைகளைக் கட்டாயமாக கடமைகளுட்ன தொடர்புபடுத்தி, கடமைகளை நிறைவேற்றாது உரிமைகளை அனுபவிக்க முடியாது என்பது வலியுறுத்தப்படுகின்றது. இதன்படி பார்க்கும் போது உரிமைகளும், கடமைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளன.

### குடியியல் உரிமைகள்

குடியியல் வாழ்க்கையினைத் திருப்திகரமாக அனுபவிப்பதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத நிபந்தனைகளே குடியியல் உரிமைகள். இவை இருவகைகளாக பாகுபடுத்தப்படுகின்றன.

1. சமூக உரிமைகள்
2. பொருளாதார உரிமைகள்

### சமூக உரிமைகள்

சமூக வாழ்க்கையினைத் திருப்திகரமாக மேற்கொள்வதற்கு மனிதர்களுக்கு இருக்க வேண்டிய நிபந்தனைகளே சமூக உரிமைகள். பின்வருவன சமூக உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

1. வாழ்வதற்கான உரிமைகள்
2. கல்வி கற்பதற்கான உரிமை
3. விரும்பிய மதத்தினை பின்பற்றும் உரிமை
4. சிந்திப்பதற்கும், வெளிப்படுத்துவதற்குமான உரிமை
5. ஒன்று கூடும் உரிமை
6. பேச்சுரிமை எழுத்துரிமை
7. சமவாய்ப்புகளைப் பெறுவதற்கான உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. குடும்ப வாழ்க்கையை அனுபவிக்கும் உரிமை
9. காரணத்தைக் கூறாமல் கைது செய்யப் படாமல் இருப்பதற்கான உரிமை
10. குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கும்
11. காலாவதியான சட்டங்களினால் தண்டிக்கப் படாமல் இருப்பதற்கான உரிமை
12. நடமாடும் உரிமை
13. பொது நடவடிக்கைகளில் பங்கு பற்றும் உரிமை
14. ஒப்பந்த உரிமை

**பொருளாதார உரிமைகள்**

பொருளாதார வாழ்க்கையினைத் திருப்திகரமாக மேற்கொள்வதற்கு மனிதர் களுக்குத் தேவையான இன்றியமையாத நிபந் தனைகள் பொருளாதார தேவையான இன்றி யமையாத நிபந்தனைகள் பொருளாதார உரிமைகள் இன்றியமையாத நிபந்தனைகள் பொருளாதார உரிமைகள் எனப்படுகின்றன. பின்வருவன பொருளாதார உரிமைகளாக கொள்ளப்படுகின்றன.

1. வேலை செய்யும் உரிமை
2. நியாயமான சம்பளத்தினை பெறும் உரிமை
3. தொழிற்சங்கங்களை அமைக்கும் உரிமை
4. தொழிற்சங்கங்களில் அங்கத்தவராக சேரும் உரிமை
5. விரும்பிய தொழில் ஒன்றினை ஆரம்பிக்கும் உரிமை
6. சொத்துரிமை
7. ஓய்வெடுப்பதற்கும் பொழுது போக்குவதற்கு மான உரிமை

**அரசியல் உரிமைகள்**

அரசியல் வாழ்க்கையினை திருப்திகர மாக அனுபவிப்பதற்கு மனிதர்களுக்கு அவசிய மான இன்றியமையாத உரிமைகளே அரசியல் உரிமைகள் எனப்படுகின்றன. பின்வருவன அரசியல் உரிமைகள் எனப்படுகின்றன. பின்வரு வன அரசியல் உரிமைகளாகக் கொள்ளப்படு கின்றன.

1. வாக்களிக்கும் உரிமை
2. தேர்தல்களில் போட்டியிடும் உரிமை
3. அரசாங்கப் பதவிகளை வகிக்கும் உரிமை
4. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை
5. அரசாங்கத்திற்கு மனுச் செய்யும் உரிமை

**மனித உரிமைகளும், அடிப்படை உரிமைகளும்**

மனித இருத்தலுக்கு அவசியமானதும், அவர்களின் சுய கௌரவத்தைப் பாதுகாப்பது மான வாய்ப்புக்களே மனித உரிமைகள் ஆகும். இவை இயற்கை உரிமைகளினதும், குடியியல் உரிமைகளினதும் (சிவில் கலவை ஆகும்.) இவை உலகிலுள்ள சகல இடங்களுக்கும் சகல மனிதர்களுக்கும் பொதுவானதாகும்.

மனித உரிமைகளில் எவற்றை அத்தியாவசியமாக பாதுகாக்க வேண்டும் என ஒவ்வொரு அரசம் தீர்மானித்து அது அரசியல் யாப்பின் உள்ளடக்கும் உரிமைகளே அடிப்படை உரிமைகள் ஆகும். இவை நாட்டுக்கு நாடு வேறு படுகின்றன. அரசுகள் இவற்றை பாதுகாப்பதற்கு சட்ட ரீதியாகக் கடமைப்பட்டுள்ளன.

இலங்கையின் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகள் அனைத்தும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்படவில்லை. ஆகவே மனித உரிமைகள் அனைத்தும் அடிப் படை உரிமைகள் அல்ல.

இலங்கையின் அரசியலமைப்பில் உத்தர வாதப்படுத்தப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது அடிப்படை உரிமைகள் மீறுவதாக கருதப்படும். குற்றவியல் தண்டனை சட்டக் கோவை மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டம் போன்ற சட்ட ஏற்பாடுகளில் கூறப் பட்டுள்ள குற்றங்கள் குற்றவியல் செயல்களாகக் கருதப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் அரசியல் அமைப்பானது இலங்கையர்களுக்கு இருக்கின்ற மனித உரிமைகளை அங்கீகரிக்கின்றது. இவற்றில் சில உரிமைகள்.

- சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க விசேட சந்தர்ப்பங்களில் குறுகிய காலத்துக்கு மட்டுப்படுத்த முடியும்.
- சில உரிமைகள் எக்காலத்திலும் மட்டுப்படுத்த முடியாது.

உ-ம் சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை, விரும்பிய மதத்தினை பின்பற்றுவதற்கான உரிமை.

**உரிமைகள் தொடர்பான முயற்சிகள்**

1215 – மக்னா காட்டா

1688 – உரிமைகள் பட்டயம்

1789 – பிரான்ஸியப் புரட்சி

1789 – அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்

1791 – அமெரிக்க யாப்பின் முதல் 10 திருத்தங்கள்

1945 – ஐக்கிய நாடுகள் சபை பட்டயம்

1948 – மனித உரிரமகள் பிரகடனம்

1959 – சிறுவர் உரிமைப்பிரகடனம்

1966 – ஐக்கிய நாடுகள் சபையினால் உருவாக்கபட்ட குடியியல், அரசியல் உரிமைகள் உடன்படிக்கை மற்றும் சமூக பொருளாதார கலாச்சார உரிமைக்கான உடன்படிக்கை

1979 – ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் உரிமைக்கான பிரகடனம்

1984 – ஐக்கிய நாடுகள் சபையின் சித்திர வதைகளுக்கெதிரான பிரகடனம்

1986 – சகல விதமான இனப்பாகுபாடுகளையும் இழிக்கும் சர்வதேச உடன் படிக்கை மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை

1989 – சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம்

உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஜனநாயக நல்லாட்சி அரசாங்கங்கள் மேற்கொள்ளும் வழிமுறைகள்

1. அடிப்படை உரிமைகளை அரசியல் யாப்பில் உள்ளடக்கல்
2. உரிமைகளைப்பாதுகாக்கும் அதிகாரத்தை நீதித்துறைக்கு வழங்கல்
3. சட்டவாட்சியை உறுதிப்படுத்தல்
4. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஆணைக்குழுக்களை நியமித்தல்
5. ஒம்பூட்ஸ்மன் போன்ற அதிகாரிகளை நியமித்தல்
6. சமமான பிரஜைகள், சமமான வாய்ப்புக்கள் என்ற கோட்பாட்டை நிலைநிறுத்தல்
7. சமூகத்தில் சில பிரசைகளுக்கு மட்டும் சட்டம் பிறப்பிக்கும் அரசாங்கத்தின் ஆற்றலை இல்லாது ஒழித்தல்
8. சுதந்திரமானதும், பாரபட்சமற்றதுமான தொடர்பாடல் சாதனங்களை செயற்பட வைத்தல்
9. அதிகார துஸ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் அரசியல் ஓரிடத்தில் குவிவதை தடுத்தல்
10. பொருளாதார வளங்கள் பிரசைகளிடையே நியாயமான முறையில் பகர்ந்து கொள்வதனை உறுதிப்படுத்துதல்
11. அரசு சமய சார்பற்றதாக இருத்தல்

இலங்கையில் 1972ம் ஆண்டு அரசியல் அமைப்பின் மூலம் முதன்முதலாக அடிப்படை உரிமைகள் அரசியல் அமைப்பில் சேர்க்கப் பட்டன. 1978ம் ஆண்டு அரசியல் அமைப்பில் அது மேலும் வலிமையாக்கப்பட்டது. இலங்கையின் அரசியல் அமைப்பில் வாழ்வதற்கான உரிமை சேர்க்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

1978ம் ஆண்டு அரசியல் அமைப்பின் படி உரிமை மீறலுக்கு உள்ளான இலங்கையர் ஒருவர் உயர் நீதிமன்றத்துக்கு முறையிடுவதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலம் பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம். உரிமை மீறல் நடைபெற்று ஒருமாதத்துக்கு உரிமை மீறலுக்கு உள்ளானவர் உயர்நீதி மன்றத்தில் முறையிடுதல் வேண்டும். மூன்று மாத காலத்துக்குள் உயர்நீதிமன்றம் இதற்கான தீர்ப்பினை வழங்குதல் வேண்டும்.** முறையிடு வதற்கான ஒருமாத காலம் போதாது என்ற குற்றச்சாட்டு தற்போது பலராலும் முன்வைக்கப் படுகின்றது.

இலங்கையில் மனித உரிமை ஆணைக் குழு செயற்படுகின்றது இதன் கிளை நிறுவனங் கள் பல்வேறு மாவட்டங்களிலும் செயற்படுகின் றது. உரிமை மீறலுக்கு உள்ளானவர்கள் மிக இலகுவாக அணுகக்கூடியவையாகவும் விளங்கு கின்றன. இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்பு களிலோ அல்லது மனித உரிமை ஆணைக் குழுவின் தீர்ப்புகளிலோ அதிருப்தியுற்றவர்கள் ஐ.நா வின் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்கும் முறையும் தற்போது நடை முறையில் உண்டு.

இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பின் மூலம் குறைகேள் அதிகாரி என்ற பதவி உருவாக்கப்பட்டது.அரசாங்க அதிகாரிகள் பிரசைகளின் அடிப்படை உரிமைகளை மீறும் போது அது தொடர்பாக விசாரணை செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கை அறிகதை சமர்ப்பிப்பதே இவரின் கடமையாகும். இக்குறை கேள் அதிகாரி நேரடியாகத் தீர்ப்பளிக்க முடி யாமை மிகப்பெரிய குறைபாடாக சுட்டிக்காட்டப் படுகின்றது. இலங்கையின் அரசியல் அமைப்பில் அரச கொள்கையின் தத்துவங்கள் எனும் பகுதி யிலும், அடிப்படை உரிமைகள் என்ற பகுதியி லும் "சமமான பிரசைகள், சமமான வாயப்புக் கள்" என்ற கோட்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

**உரிமைகளின் நடைமுறை முக்கியத்துவம்**

1. அபிவிருத்தியை அளவிடுவதற்கான அளவு **கோலாக இருத்தல் :**

**ஒரு நாட்டின் அபிருத்தியை அளவிடுவதற் கான அளவுகோலாக உரிமைகளும் பார்க்கப்படும்நிலை இன்று சர்வதேச ரீதியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. ஒருநாட்டின் உரிமைகள் பேணப்படும் போது** அங்கு ஜனநாயக நல்லாட்சி சிறப்பாக நடை பெறும். ஜனநாயக நல்லாட்சி சிறப்பாக நிகழும்போதே பொருளாதார வளர்ச்சி, சமத்துவம், அடித்தள மக்களின் மேல் நொக்கிய அசைவ என்பனவும் சாத்தியமான தாக இருக்கும். இதனாலேயே நாடுகளின் அபிவிருத்தியை அளக்கும் அளவுகோல்க ளில் ஒன்றாக உரிமையும் காணப்படு கின்றது.

2. வெளிநாட்டு உதவிகளைப்பெறுவதற்கான அளவு கோலாக இருத்தல்.

இன்றைய நிலையில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கான அளவு கோலாகவும் உரிமை கள் கருதப்படுகின்றன. ஒரு நாடு எவ்வளவு தூரம் உரிமைகளை நடைமுறையில் அங்கீகரித்துச் செயற்படுகின்றதோ அந்த அளவுக்கே அந்நாடுகள் வெளிநாட்டு உதவிகளுக்கான வாய்ப்பையும் பெற்றுக் கொள்கின்றன. உதவி வழங்கும் நாடுகளின் குழு ஒரு நாட்டின் உரிமைகளின் பிரயோகத்தை அடிப்படையாக வைத்தே அந்நாடுகளுக்கு உதவி வழங்க சிபாரிசு செய்கின்றது. உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்களுக்கும் உரிமைகளைப்பொறுத்தே உதவிகளை வழங்குகின்றன.

**உரிமைகளுக்கான பாதுகாப்புக்களும் மட்டுப்பாடுகளும்**

இலங்கையின் தற்போதைய அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கான பாதுகாப்புக்களும் மட்டுப் படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் பற்றி ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப்பிரசையும் அறிந்துவைத்திருக்கின்ற தேவைப்பாடுகள் பல உள்ளன.


1. சிந்தனை செய்வதற்கான உரிமை
   இவ்வுரிமையில் எந்தவிதமான மட்டுப்பாடுகளையும் மேற்கொள்ளமுடியாது. இவ்வுரிமை மீறல் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் அல்லது மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. மதத்தினை பின்பற்றுவதற்கான உரிமை
3. சித்திரவதையிலிருந்து விடுபடுவதற்கான உரிமை
   இவ்வுரிமைகள் மீதும் எந்தவிதமான மட்டுப்பாடுகளையும் மேற்கொள்ளமுடியாது. இவை மீறப்படுகின்ற போது உயர்நீதிமன்றத்துக்கு சட்டத்தரணி மூலமாகவும், மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அதன் அலுவலக அதிகாரி மூலமாகவும் முறைப்பாடு செய்து நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
4. குற்றவாளியென நிரூபிக்கப்படும்வரை சுற்றவாளியென கருதப்படுவதற்கான உரிமை
5. சட்டக்கரணம் மற்றும் விதிமுறையின்றி எந்தவொரு நபரும் தண்டிக்கப்படாமல் இருப்பதற்கான உரிமை
   இவ்வுரிமைகள் மீதும் பொலிஸ் அதிகாரிகள் அல்லது ஆயுதப்படையினருக்கு சில மட்டுப்பாடுகள் பிரயோரிக்கப்படும். இவ்வுரிமைகள் மீறப்படும்போது மேற்குறிப்பிட்ட வழிமுறையின் மூலம் நிவாரணத்தைப் பெறலாம்.
6. சமமாக நடத்தப்பட வேண்டும், இன, மத, மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை, பிறப்பிடம் காரணமாக பாகுபாடு காட்டாமை சட்டத்திற்கு முரணாக எந்தவொரு நபரும் கைது செய்யப்படாமல் இருப்பதற்பதற்கான உரிமை
   இவ்வுரிமையானது தேசிய பாதுகாப்பு, சமூக நலன் ஏனையவர்களின் உரிமைகள் பொதுமக்கள் கட்டளைச்சட்டம், பொது மக்களின் சுகாதாரமும் ஒழுங்கும் என்பன மட்டுப்படுத்தபடலாம். இவ்வுரிமை மீறப்படும் போது மேற்குறிப்பிட்ட வழிமுறையின் மூலம் நிவாரணத்தைப்பெறலாம்.

கடைசியாக, சர்வதேச சட்டத்தில் சில முக்கிய உரிமைகள் மற்றைய நாடுகளில் வாழும் மக்களுக்கு உண்டு. ஆனால் இலங்கையில் இத்தகைய உரிமைகள் இல்லை. எமது அரசியலமைப்பில் கூறப்படாவிட்டாலும் நியாயத் தீர்ப்புக்களின் மூலம் நீதிமன்றங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

"உயிர் வாழ்வதற்கான உரிமை
வாக்களிப்பதற்கான உரிமை
தகவல் பெற்றுக்கொள்வதற்கான உரிமை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முயற்சியாளரின் வெற்றிக்கு வித்திடும் சிறந்த நிதிசார் நிபுணத்துவம்

**சண் குறிஞ்சீதரன்**
மாகாண முகாமையாளர்
வடமாகாணம்
இலங்கை மத்திய வங்கி

## A. பொருளாரத்தில் முயற்சியாளரின் பங்கு

இலங்கைப் பொருளாதாரத்தின் செயற்பாட்டிற்கு முதுகெலும்பாக இருப்பது முயற்சியாளர்களாகும். குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னெடுக்கும் முயற்சியாளர்கள் இலங்கையில் மிகப் பெரிய அளவில் காணப்படுவதோடு இலங்கையில் 85 வீதத்திற்கு மேற்பட்ட தொழில் முயற்சிகள் சிறிய மற்றும் நடுத்தரமானவையாகவும் கருதப்படுகிறது. இத்தகைய முயற்சியாளர்களின் வெற்றிக்கு நேர முகாமைத்துவம், வியாபாரத் திட்டமிடல், தொழிலாளர்களை கையாளுதல், வாடிக்கையாளர்களைக் கவருதல், விற்பனை மேம்படுத்தல், நிதி முகாமைத்துவம் மற்றும் ஒட்டுமொத்த வியாபார முகாமைத்துவம் என்பன மிக முக்கியமான நிபுணத்துவங்களாக காணப் படுகின்றன.

முயற்சியாளர் எனப்படுபவர் தனக்கான ஒரு தொழிலை சுயமாகத் தொடங்குவதோடு அதனால் ஏற்படக்கூடிய இலாப நட்டங்களை பகுத்தாராய்ந்து அதனையும் தானே ஏற்றுக் கொள்ளக்கூடிய தகைமையைக் கொண்டவராக இருப்பர். இவர்கள் எந்த சவால்களையும் முறியடித்து தனது வியாபார இலக்கை அடையப் பாடுபடுபவராகக் காணப்படுவர்.

இந்திய முன்னாள் ஜனாதிபதியும் சிறந்த விஞ்ஞானியுமான திரு அப்துல் கலாம் குறிப்பிட்டது போல ஒருவர் தூக்கத்தில் காண்பது கனவு அல்ல ஒருவரை தூங்க விடாமல் வைத்திருப்பது தான் கனவு. இது முயற்சியாளர்களுடைய பண்பினை எடுத்தியம்புவதற்கு மிகப் பொருத்தமானதாகும். அவர் காணும் வியாபார இலட்சியக் கனவு அவர்களைத் தூங்க விடாது என்பதே உண்மையாகும்.

இம்முயற்சியாளர்கள் 24 மணி நேரமும் தமது தொழில் முயற்சியின் வெற்றிக்காக உழைத்தாலும் பலர் தமது தொழில் முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றியினை பெற முடியாதவர்களாக காணப்படுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இவர்கள் மேற் குறிப்பிட்ட நிபுணத்துவங்களில் ஏதாவது ஒன்றிலோ அல்லது சிலவற்றிலோ பலவீனமாகக் காணப்படுகிறமையே ஆகும். எனவே முயற்சியாளர்கள் தங்களுடைய பலவீனங்களை இனம் கண்டு அவற்றைப் பலமானதாக மேம்படுத்தும் போது அவர்கள் வெற்றிக் கொடியை இலகுவாக பற்றிப்பிடிக்கக்கூடியதாக இருக்கும்.

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் முயற்சியாளர்களின் மிகப் பெரிய பலவீனமாக நிதிசார் நிபுணத்துவத்தினைக் குறிப்பிடலாம். அண்மைக்காலங்களில் வட மாகாண முயற்சியாளர்கள் சந்தித்த பின்னடைவிற்குரிய முதற்காரணம் அவர்களுடைய மிகப் பலவீனமான நிதிசார் நிபுணத்துவத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயாகும். என்னுடைய அனுபவத்தில் நான் சந்தித்த பல முயற்சியாளர்களில் சிலரின் கதைகளைப் பற்றி இங்கு குறிப்பிடலாம் என நினைக்கின்றேன்.

### B. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவரின் கதை

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தைச் சேஃந்த ஒரு முயற்சியாளர் என்னை சந்திக்க வந்திருந்தார். அவர் ஒரு பிரபல்யமான மொத்த சில்லறை வர்த்தகர். பல ஆண்டுகளாக மிகவும் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் தனது தொழில் முயற்சியினை நடாத்தி வருபவர். ஆனால் தற்போது தனது வியாபாரம் மிகவும் மந்த நிலைக்கு வந்து விட்டதாகவும் தான் கடன் தொல் லையால் அவதிப்படுவதாகவும் தனக்கு இக்கடன் தொல்லையில் இருந்து விடுபட எப்படியாவது உதவுமாறும், அவ்வாறு இல்லாவிட்டால் தானும் தனது குடும்பமும் வீதிக்கு வரும் நிலை ஏற்பட்டுவிடும் என்றும் கூறினார்.

அவரது நிலை மிகவும் கவலை தருவதாக இருந்தாலும் அவருக்கு ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை அறிய நான் அவருடைய கடந்தகால வியாபார நிலை பற்றிய பல விடயங்களை கலந்துரையாடினேன். அம் முயற்சியாளரின் கருத்துப்படி போருக்கு பின்னரான காலப்பகுதியிலும் வியாபாரக் கட்டமைப்பிலோ தந்திரோபாயத்திலோ அல்லது அவர் தனது பொருட்களின் கொள்வனவிலோ எந்த வித மாற்றத்தையும் செய்யவில்லை. அவஃ அதே பொருட்களை அதே அளவில் கொள் வனவு செய்திருந்தார். இன்னும் சொல்லப் போனால் இன்னும் அதிகமான பொருட்களை விற்பனை பிரதிநிதியின் வற்புறுத்தலின் பேரில் அல்லது இலவச இணைப்புக்களின் பேரில் கொள்வனவு செய்திருந்தார். இலவச தொலைக் காட்சிப் பெட்டி ஒன்றினைப் பெறுவதற்காக மிக அதிகளவான பொருட்களை கொள்வனவு செய்து அக்கொள்வனவுக்காக பிற்திகதியிடப் பட்ட காசோலையையும் வழங்கியிருந்தார். ஆனாலும் காசோலைக்கான பணம் வழங்கப்பட வேண்டிய திகதி வந்த போது அவர் கொள் வனவு செய்த பொருட்களில் 5% மானவையே விற்கப் பட்டிருந்தது. மற்றைய 95%மான பொருட்களும் இருப்பில் இருந்தது.

இதனால் அம் முயற்சியாளர் தனது நண்பனிடம் மிகக் கூடிய வட்டிக்கு (கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 1% என்கிற அடிப்படையில்) கடனைப் பெற்று காசோலைக்கான பணத்தை செலுத்தியிருந்தார். இன்று அவர் அக்கடனை மட்டுமல்ல அக்கடனுக்குரிய வட்டியையே செலுத்த முடியாது தவிப்பதை காணக்கூடியதாக இருந்தது.

இக்கலந்துரையாடல் மூலம் முக்கிய மானதாக நிதிசார் நிபுணத்துவத்தில் அவர் பலவீனமாகக் காணப்பட்டது புலப்பட்டது. அம் முயற்சியாளர் தனது வாடிக்கையாளர்களிடம் எப்போது எவ்வாறு எவ்வளவு பணம் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி அறியாதிருந்தார். காசோலைக்கான பணத்தினைச் செலுத்தாது விடின் எதிர்கொள்ளவேண்டியசவால்கள் பற்றி மிகக் குறைந்த அறிவையே கொண்டிருந்தார். முறைசாராப் பிரிவினரிடம் இருந்து கடன் பெறும் போது கருத்தில் கொள்ளவேண்டிய விட யங்களை அலட்சியப்படுத்தியிருந்தார். ஒரு நாளைக்கு ஒரு வீத வட்டியைத் தன்னால் செலுத்த முடியுமா? அதனால் நிறுவன இலாபத் தில் ஏற்படும் தாக்கம் என்பன பற்றி அறியாதிருந் தார்.

இக் கலந்துரையாடல் மூலம் அம் முயற்சியாளர் பல இடங்களில் கீழே குறிப்பிட்ட வாறான தவறுகள் இழைத்திருப்பதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

➢ காசுப் பாய்ச்சலைத் திட்டமிட்டு எதிர்கால காசு பெறுவனவுகள் மற்றும் காசு கொடுப் பனவுகளை அனுமானிக்கத் தவறியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ போருக்குப் பின்னரான வியாபாரப் புறச் சூழல் மற்றும் வியாபாரப் போட்டியின் தன்மை சம்பந்தமாகக் கவனத்தில் கொள் ளாமை.
- ➢ திட்டமிடப்படாத வியாபாரச் செயற்பாடுளூ அதாவதுஅம்முயற்சியாளர் தனது எதிர்கால விற்பனையின் அளவு, வாடிக்கையாளரின் புதிய தெரிவுகள் என்பன பற்றிய திட்டத்தை கொண்டிராமை.
- ➢ வாடிக்கையாளர்கள் விரும்பும்படியான பொருட்களின் காட்சிப்படுத்தும் முறை.
- ➢ அதிக பொருட்களை இருப்பில் வைத்திருந் தமை, பொருள் இருப்பு அதிகரிக்கும் போது அப்பொருட்கள் கொள்வனவிற்கான பணத் தினை மீளச் செலுத்த முடியாமை மற்றும் பொருட்கள் பழுதடைதல் அல்லது காலா வதியாதல்.

மேலே குறிப்பிட்ட தவறுகள் பொது வாக நிதிசார் நிபுணத்துவத்தின் பாற்பட்டதாக காணப்படுகிறது. ஒரு வியாபாரத்தின் எந்த வொரு செயற்பாடும் நிதியைக் கையாளுத லுடன் தொடர்பு பட்டது. எனவே நிதிசார் நிபுணத் துவம் ஒரு முயற்சியாளனின் வெற்றிக்கு அடித் தளமாகும்.

### C. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு விவசாயி யின் கதை

இன்னும் ஒருநாள் ஒரு முயற்சியாளர் கிளிநொச்சியில் இருந்து என்னிடம் வந்திருந் தார். அவர் மிகப் பெரிய அளவில் காலம் கால மாக விவசாயத்தில் ஈடுபடும் ஒருவர். அவரும் தான் தனது வாழ்நாளில் முதற்தடவையாக பெரும் கடன் தொல்லையில் அவதிப்படுவதாக கூறினார். அவருடைய கதையும் அவருடைய மிகப்பலவீனமான நிதி முகாமைத்துவத்தின் பாற்பட்டது. அம் முயற்சியாளர் தனது விளை நிலத்தின் மீது தனது பெயரிலும் தனது மகன் மற்றும் மகள் பெயரிலும் கடன் பெற்றிருந்தார். உண்மையிலேயே அவர் தனது நிலத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு தேவை யான பணத்தை விட மூன்று மடங்கு பணத்தை கடனாக பெற்றதை உணரவில்லை. அவர் தனது பெயரில் கடனாக பெற்ற கடனை விவசாயத்தில் முதலீடு செய்தார். தனது மகன் மற்றும் மகள் பெயரில் பெற்ற கடன்கள் மூலம் வீட்டுக்குத் தேவையான மற்றைய பொருட்கள், மோட்டார் சைக்கிள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளடங்களாக கொள்வனவு செய்திருந்தார்.

இன்று அவருக்கு தனது பெயரில் பெற்ற கடனை மட்டுமே தான் செய்த விவசாயத்தின் மூலம் மீளச் செலுத்தக்கூடியதாக இருந்தது. மற்றைய இரு கடன்களையும் மீளச் செலுத்த முடியாத இக்கட்டில் தனது விவசாயக் காணியை விற்பதற்கு தீர்மானித்துள்ளதாகக் கூறினார். இவருடைய இந்நிலைக்கு முக்கிய காரணம் நிதிசார் நிபுணத்துவம் இன்மையேயாகும்.

இம் முயற்சியாளர் தனது முயற்சிக்கு எவ்வளவு பணம் தேவை, எவ்வளவு வட்டி தன்னால் செலுத்த இயலும், எவ்வாறு கடனைத் திருப்பச் செலுத்துவற்கான நிதி மூலத்தைப் பெறுவது என்பது பற்றி எதுவும் சிந்திக்காமல் கடன் பணத்தை கடனாகக் கருதாமல் ஒரு வரு மானமாக கருதிச் செயற்பட்டமையே இந் நிலைக்கு காரணமாகும்.

### D. வவுனியாவைச் சேர்ந்த ஒரு சில்லறை வியாபாரியின் கதை

வவுனியாவில் மொத்த சில்லறை வியாபாரத்தில் மிகப் பெரிய வெற்றியாளராகத் திகழ்ந்த இன்னுமொரு முயற்சியாளர் என்னைச் சந்திக்க வந்த போது தானும் கடன் தொல்லை யால் அவதிப்படுவதாயும் அதற்கு காரணம் தான் பல சொத்துக்களை காணி கட்டிடம் உள்ளடங்க லாக கடன் பெற்ற பணம் முலம் கொள்வனவு செய்ததாகவும் தற்போது தன்னிடம் பல சொத்துக்கள் இருந்த போதிலும் கடனைத் திருப்பிச் செலுத்த பணம் இல்லாததுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துக்களை விற்றுக் கடனைத் தீர்ப்பதற்கும் முடியாமல் இருப்பதாகக் கூறினார். இவர் கூறிய இன்னுமொரு விடயமும் இங்கு வெகுவாகக் கவனிக்கத் தக்கது. இவர் காணியொன்றை வங்கி மேலதிகப்பற்று (Bank Overdraft) வசதியைப் பயன்படுத்தி வாங்கி யிருந்ததாகக் கூறினார்.

உண்மையிலேயே இவருடைய இந் நிலைமைக்குக் காரணம் இவர் நிதி சார் நிபுணத்துவத்தில் பலவீனமாக இருந்ததுதான். இவர் தனது காசுப் பெறுவனவு கொடுப்பனவு களை சரியாகக் கணக்கிடத்தவறியிருக்கிறார். தனது வியாபாரத்தின் மூலமும் தான் கொள் வனவு செய்த சொத்துக்களிலிருந்து எவ்வளவு வருமானம் எப்போது வரும், தான் பெற்ற கடனை மாதாந்தம் செலுத்துவதற்கு போதிய வருமானம் தனக்கு மாதாந்தம் கிடைக்குமா? என்பது பற்றி எதுவும் அறியாதிருந்தார். வங்கி மேலதிகப்பற்றுவசதியை உண்மையிலேயே எதற்காகப் பயன்படுத்துவது அதாவது இவ்வசதி யானது நாளாந்த வியாபார செயற்பாடுகளுக் கான நிதி மூலத்தைத் தருவதேயன்றி நீண்டகால பாவனைக்குரிய சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கல்ல என்ற ஒரு சாதாரண விடயத் தைக் கூட அவர் அலட்சியம் செய்திருந்தாூ. அத்தோடு வங்கி மேலதிகப்பற்றின் வட்டி வீதம் மிக அதிகம் என்பதையும் கணிப்பிடத் தவறியிருந்தார்.

**E. சாவகச்சேரியை சேர்ந்த ஒரு முயற்சி யாளரின் கதை**

சாவகச்சேரியில் இன்னுமொரு சிறு தொழில் முயற்சியாளர் என்னைச் சந்தித்திருந் தார். இவர் ஒரு அரச ஊழியரும் கூட. அவர் தனது சிறுதொழில் முயற்சியில் தோல்வியை சந்தித்ததோடு தனது மாதாந்த அரச ஊதியத்தில் அரைவாசியை இழந்து வருவதாகவும் தன்னை இந்த இக்கட்டில் இருந்து மீட்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்.

அவர் தனது சிறு தொழில் முயற்சியில் தோல்வியடைந்ததற்கும், தனது ஊதியத்தில் அரைவாசியை இழந்ததற்கும் மிக முக்கிய காரணம் பலரின் கடனுக்கு தனது இயலுமை யையும் மீறி பிணை நின்றதேயாகும். வங்கி யானது கடன்பட்டோர் செலுத்தத் தவறிய தொகையை தன்னுடைய கணக்கில் இருந்து அறவீடு செய்துவிட்டதாக குறிப்பிட்டார். உண்மையிலேயே அம் முயற்சியாளருக்கு தான் எத்தனை பேரின் கடன் பிணைக்கு கையெழுத் திட்டதாக ஞாபகம் இல்லை என்று கூறியதோடு ஆகக் கூடுதலாக எத்தனை பேரின் கடனுக்கு பிணை நிற்க முடியும் என்ற கேள்வியையும் கேட்டு வைத்தார். இக் கேள்வியானது எனக்கு அதிர்ச்சியைத் தந்தாலும் அவருடைய பலவீன மான நிதிசார் நிபுணத்துவத்தின் நிலைமையை எடுத்துக்காட்டியது.

உண்மையிலேயே எங்களுடைய வாழ்க்கை முறையில் ஒரு பழமொழியுள்ளது. "துணைக்குப் போனாலும் பிணைக்கு போகக் கூடாது" என்பது. கடனுக்கு பிணை நிற்பது என்பது பிரச்சனைக்குரிய விடயமல்ல ஆனால் கடன் பெற்றவர் அதை திரும்பச் செலுத்த இயலாது போனால் அதனை எம்மால் திரும்பச் செலுத்த முடியும் என்றால் மட்டுமே பிணை நிற்க வேண்டும் என்பது பொதுவிதி. பிணை நிற்பதற்கு எந்த வித வரையறையும் இல்லை ஆனால் பிணை நிற்பவர் அதனை திரும்பச் செலுத்தும் வல்லமை தனக்கு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவும் நிதிசார் நிபுணத்துவத்தின் மிக முக்கியமான பண்பாகும்.

நான் மேற்சொன்ன சம்பவங்கள் நான் சந்தித்தவற்றில் மிகமிகச் சிலவாகும். இவ் வடிப்படையில் நோக்கும்போது நிதிசார் நிபுணத்துவம் என்பது எல்லா தரப்பட்ட முயற்சியாளர்களுக்கும் மிகமிக அவசியமான தொன்றாகும். அம்முயற்சியாளஊகள் வியாபாரியாகவோ, விவசாயியாகவோ, மாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பவராகவோ, சிறிய கைத்தொழில் ஒன்றை நடத்துபவராகவோ இருக்கலாம். ஆனால் எல்லாருக்கும் ஒரு அடிப்படையான நிதிசார் நிபுணத்துவம் இன்றியமையாதது.

நிதிசார் நிபுணத்துவம் என்பது நிதி வளங்களை தொழில் முயற்சியின் நோக்கமான இலாபத்தினை அடைந்து கொள்வதற்காக திறம்பட நிர்வகிப்பதனைக் குறிக்கும். அதன் போது தேவையான நிதியினை மிகக் குறைந்த வட்டியில் தேவையான நேரத்தில் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதும் அந்நிதியினை ஆகக் கூடுதலான இலாபத்தினை அடையக் கூடியவாறு தொழில் முயற்சியில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதும் மிக முக்கிய செயற் பாடுகளாக இருக்கும். ஆகவே முயற்சியாளர் கள் நிதிசார் நிபுணத்துவத்தை இயலுமான வரை மேம்படுத்திக்கொள்வது அவர்களின் தொழில் முயற்சியில் ஒரு உயர்ந்த வெற்றியை அடைய இன்றியமையாததாகும்.

**F. வட மாகாணத்தின் இன்றைய தேவை**

வட மாகாண பொருளாதாரத்தில் மிகப் பெரியளவில் பங்களிப்பு செய்யக் கூடிய விவசாய மற்றும் மீன்பிடித்துறையை தன்னகத்தே கொண்டுள்ள போதும் சேவைகள் துறையே அதி கூடிய பங்களிப்பினைக் கடந்த காலங்களில் வழங்கியுள்ளது. உண்மையி லேயே வட மாகாணமானது விவசாய மீன்பிடித் துறையில் அதி உச்ச பயனைப் பெறத்தவறி யுள்ளதையே இது காட்டுகிறது. இதற்கு கடந்த காலப் போரினைக் காரணமாகக் காட்டினாலும் இன்றும் அந்நிலைமை தொடர்வதானது முயற்சி யாளர்கள் இத்துறைகளில் ஆர்வம் காட்டாமை யையேயாகும்.

சேவைகள் துறையில் அதிகளவில் பங்களிப்புச் செய்கின்ற காரணிகளாக வங்கி நடவடிக்கைகள் மற்றும் சில்லறை மொத்த விற்பனை நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம். வட மாகாணத்தில் உண்மை உற்பத்தியில் ஈடுபடுகின்ற முயற்சியாளஉகளை விட மொத்த சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் முயற்சி யாளர்கள் மிக அதிகமாக, குறிப்பிட்டுச் சொல்லப் போனால் தேவைக்கு அதிகமாக உருவாகியிருப்பதைக் காணலாம். கடந்த காலப் போரானது இலங்கையின் ஏனைய பகுதிகளி லிருந்தான வர்த்தக போட்டியை இல்லாது செய்திருந்தது. இதன் காரணமாக கடந்த காலங்களில் மொத்த சில்லறை வியாபாரங்கள் பல நிபுணத்துவ பலவீனங்களைக் கொண்டிருந் தாலும் மிக வெற்றிகரமாகச் செயற்பட்டது. இந் நிலைமை புதிய முயற்சியாளர்களுக்கு ஒரு முன் மாதிரியாக (role model) அமைந்தது. இதனால் எல்லா முயற்சியாளர்களும் இத் துறையை நாடிச் சென்றனர். ஆனால் இன்று அவ் வாறான நிலை இல்லை. மொத்த சில்லறை வர்த் தகர்கள் பாரிய சவால்களை சந்திக்கின்றனர்.

இதனால் புதிய முயற்சியாளர்கள் புதிய தொழிற்றுறையை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால் வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் இப் புதிய முயற்சியாளர் களுக்கு முன் மாதிரியாக திகழக் கூடிய முயற்சியாளர்கள் விவசாய மீன்பிடித்துறை யிலோ அல்லது கைத்தொழில் துறையிலோ மிக அரிதாகவே காணப்படுகிறார்கள். எனவே புதிய துறைகளை நோக்கிய புதிய முயற்சியாளர் களை உருவாக்குவதோடு அவர்களுக்குரிய வசதி வாய்ப்பினையும் உருவாக்கிக் கொடுப்பது காலத்தின் தேவையாகும். இந்த வகையில் புதிய முயற்சியாளர்கள் எல்லா சவால்களுக்கும் முகங்கொடுக்கக் கூடிய வகையில் தங்களை மேம்படுத்திக் கொள்வதோடு நிதிசார் நிபுணத்துவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைக் கற்பதோடல்லாமல் தமது தொழில் முயற்சியை வெற்றிகரமாக நடத்திச் செல்ல அதனை இயலுமானவரை அறிவார்ந்த ரீதியில் பயன்படுத்தவும் வேண்டியுள்ளது தவிஉக்க முடியாததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மட்டக்களப்பு வடமோடிக்கூத்து ஆடலும் செந்நெறி நடனமும்

செல்வி. சுகன்யா சுந்தரலிங்கம்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்,
கரைச்சி.

தமிழரிடையே பயில் நிலையில் உள்ள கலைகளாக கூத்தும் பரதநாட்டியமும் காணப் படுகின்றது. அந்த வகையில் பரதநாட்டியம் மார்க்க உயர் செந்நெறி நாடகமாகவும் கூத்து தேசி செந்நெறியற்ற நாடகமரபாகவும் கருதப் படுகின்றது. தேசி என்பது அவ்வத்தேசங்களுக் குச் சிறப்பாக உரிய நாடகமரபு. இது இடத்திற்கு இடம் மாறுபடும் கூத்தானது இத்தகையை தேசி மரபை உடையதாகும். அந்த வகையில் இந்த கூத்தினை ஒரு செந்நெறித்தன்மை அடைந் துள்ள நடனத்துடன் ஒப்பிட்டு பார்க்கையில்தான் அதன் செந்நெறித்தன்மையினையும் காணக் கூடியதாக இருக்கும். அதனால் இக் கூத்தானது பரதநாட்டியத்துடன் ஒப்பிட்டு நோக்கப்படுகின்றது.

பரதநாட்டியம் கூத்து பற்றி நோக்கும் போது இவை செந்நெறி மரபாகவும் செந்நெறி யற்ற மரபாகவும் வளர்ச்சியடைந்ததற்கு சமூக அமைப்பிற்கிடையே காணப்பட்ட வேறுபாடே காரணமாகும். அதாவது நடனத்தின் பார்வை யாளரும் ஊக்குவிப்போருமாக கூத்தின் உயர்நிலையிலிருந்த அரசர் பிரபுக்கள் கல்வி மான்கள் அமைந்தனர். அதனை ஆடுவதற்கெனத் தொழிற்திறன் மிக்க ஒரு குலத்தினர் இருந்தனர். இதனால் பரதநாட்டியம் நுணுக்கம் பெற்று வளர்ந்தது. ஆனால் கூத்தின் பார்வையாளர்கள் கிராமிய மக்களாகவும் அதனை ஆடியவர்கள் தொழிற்திறன் அற்றவர்களாகவும் காணப்பட்டத னால் கூத்து நுணுக்கம் பெற்று வளரமுடிய வில்லை. பரதத்தைப் போன்று கூத்தினையும் அதன் ஒழுங்கு கட்டுக்கோப்புடன் வளர்க்க கூடிய விதத்தில் எவரும் செயற்பட்டிருந்தால் இன்று இதுவும் ஒரு செந்நெறி கலையாக வளர்ச்சியடைந்திருக்க முடியும். இரண்டிற்கு மிடையே வேறுபாடுகள் காணப்படினும் இன்று கூத்தானது பரதத்துடன் இணைத்துப் பார்க்கும் வகையில் வளர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் மட்டக்களப்பு வடமோடி கூத்தினுடைய செந்நெறிப் போக்கினை பரதத் தோடு இணைத்து அதன் ஆட்டமுறைகள், உருவக அமைப்பு முறை, இரசனை அம்சங்கள் என்பவற்றினூடாக நோக்குவோம்.

பரதநாட்டியம் பற்றி பார்க்கும் போது இங்கு அடவுகள் முக்கியமானவை இவற்றை கற்பதே பரதத்தின் முதல் பாடங்களாகும். இவை நூற்றுக்கு மேற்பட்டவை இவை அனைத்தையும் தனித்தனியாக பிரித்தெடுத்து கற்றுக்கொள்வ தென்பது கடினம் என்பதனால் ஆரம்ப அடவு களை ஒன்று இரண்டு என பிரித்து வகைப்படுத்தி அவற்றுக்குரிய சொற்கட்டுக்களை குருவானவர் கூற மாணவர்கள் பயிற்சி பெறுவார்கள். அந்த வகையில்

1. தட்டடவு – தெய்யா தெய்
2. நாட்டடவு – தெய்யும் தத்த தெய்யும் தாஹா
3. பரவலடவு – தா தெய் தெய்த
4. குதித்து மெட்டடவு – தெய்ஹத் தெய்ஹி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற இந்த ஆரம்ப அடவுகள் சில வற்றை உதாரணமாகக் கூறலாம். இந்த வகையில் அடவுகளை 9 வகைகளாகப் பிரித்து அதற்குரிய சொற்கட்டுக்களை கொண்டே பயிற்சி பெறுகின்றமையினைக் காணலாம். இந்த அடவுகளே பின்னர் ஒவ்வொரு கோர்வை களில் இடம் பெறுகின்றன. இவையே நிருநத்திய ஒரு உருப்படிகளுக்கும் அடிப்படையாகும். இதே தன்மையினை கூத்திலும் காணமுடிகின்றது. வடமோடிக் கூத்துக்களைப் பழக்கும் அண்ணா வியார் சில அடிப்படை ஜதிகளுக்குக் கூத்தரை கால்போடப் பயிற்றுவிப்பர். வடமோடிக் கூத்திற்குரிய அடிப்படைத் தாளங்களாக

1. தத்தித்தா — தித்தித்தெய்
2. தகதிகதா — திமிதகதெய்
3. தித்தித்தா — தித்தித்தா
4. தாததிந்தக,

இவற்றுக்கே கால்போடுவதற்கு கற்றுக் கொள்வார்கள் இவை அந்தந்த நாடகத்தினூடு தவறாது அடிக்கடி வரும் தாளங்களாகும். பாத்திரத்தாளக்கட்டுக்களுக்கும் இவையே அடிப்படை. வடமோடியில் பாதம் முழுவதும் நிலத்திற்படும்படியாக உரஞ்சி இழுத்தாடுவது முக்கியமானதாகும். இவ்வாறு பரதத்தினை ஆடுவதற்கும் பாதமே அதிகளவு பயன்படுத்தப் படுகின்றது. வடமோடியில் அரசனுக்குரிய தாளக்கட்டு தா–தெய்யா தெய் தெய்ய என்று ஆரம்பமாகிறது. வீரருக்குரிய தாளக்கட்டு தா– தெய்ய தெய் தக ஜோம் தாதரிகிட என்று ஆரம்பிக்கின்றது. இளவயது பாத்திரங்களுக் குரிய தாளக்கட்டுக்கள் தத்தித்தாம் தரிகிட தித்தித் தெய்யா தெய் என்று ஆரம்பிக்கின்றது. இத்தகைய தாளக்கட்டுக்கள் இன்னும் பலவுள் ளன. இவை பரதத்திலே வரும் அடவுகளை ஒத்ததாகக் காணப்படுகின்றன.

அடுத்து பரதநாட்டியத்திலே அலாரிப்பு என்பது குரு தெய்வம் சபை இவர்கட்கு வணக்க முறைக்கின்ற ஆட்டமாகும். பரத உருப்படிகளில் முதலாவதாக அமைவதும் இதுவே இதனை புஸ்பாஞ்சலி என்றும் அழைப்பர். அலாரிப்பிலே கண், கழுத்து, முகம் போன்ற நாட்டியத்துக்கான முக்கிய உறுப்புக்களின் அசைவுகளும் சிறப்பாக காணப்படும். கழுத்துமட்டும் பக்கவாட்டில் அசைவது இதன் சிறப்பம்சம். இது அட்டிமை (அட்டமி) எனப்படும். ஒரு வகையில் இது தூய நிருத்தமே இவ்வலாரிப்புடன் கூத்தில் வரும் பாத்திரங்களின் வரவினை ஒப்பிடலாம். கூத்திற் பிடிக்கப்படும் திரையின் பின்னாலிருந்து பாத்திரம் தன் முகத்தை மாத்திரம் சபையோருக் குக் காட்டி வரவு விருத்தம் பாடி முகத்தை பக்க வாட்டுகளுக்கு அசைப்பதை அட்டிமையுடன் தொடர்புபடுத்தலாம். கூத்தின் பாத்திரங்களின் தலை அசைவு அலாரிப்பின் தலை அசைவினை ஒத்ததாகும்.

உதாரணம் :- நாட்டை ராகத்தில் அமைந்த அலாரிப்பு பின்வருமாறு

**"தா தெய் தெய்யும்**
**தத் தாம் கிடதக**
**தத் தெய் தெய்யும்**
**தத் தாம் கிடதக......"**

இவ்வாறாக ஜதிச்சொற்கட்டுகளுக்கு அலாரிப்பு ஆடுவது போல அரசனுக்குரிய ஆரம்ப ஆட்டம் பின்வரும் தாளக்கட்டுக்களுக்கு இடம் பெறும். அவை பின்வருமாறு

**"தா தெய்ய தெய் தெய்ய**
**தா தெய்ய தோம் தருகிட"**

என்ற வகையில் பரதத்தில் அலாரிப்பு எனவும் கூத்தில் வரவு ஆட்டம் எனவும் இரண்டும் ஒத்திருப்பதாகக் காணப்படுகின்றது.

இதேபோன்று பரதத்தில் ஜதீஸ்வரம் என்று அழைக்கப்படுவது ஜதியும் ஸ்வரமும் சேர்ந்த உருப்படியாகும். இங்கு ராகமும் சேர்வதனால் அலாரிப்பை விட இது பொலிவு கூடியதாகவுள்ளது. இங்கு நிருத்தமே பிரதானம். இதே பண்பினை கூத்தில் வரும் பாத்திர வரவுத்தாளக்கட்டினையும் ஆட்டமுறையினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஜதீஸ்வரத்தோடு ஒப்பிடலாம். கூத்தின் வரவுத்தாளக் கட்டுக்களில் சொற்களும் ஜதிகளும் இணைந்து வருகின்றன. ஜதீஸ்வரம் போல கூத்திலும் வரவுத்தாளக்கட்டுக்களுக்கு தூயநிருத்தமே ஆடப்படுகின்றது. சொற்களும் ஜதியும் இணைவது இதற்கு ஒரு பொலிவு தருகின்றது.

உதாரணம் :- கல்யாணி ராகத்தில் அமைந்த ஜதீஸ்வரம் பின்வருமாறு

**"ஸா் நீதபா தாமா கரிநிரி**
**ஸா் நீரிகா மாகாமாபா தாநி**
**தஜ்ஜம் தரிதகதா**
**தகஜம் தரிதகதெய்**
**தஜ்ஜெம் தரி தகஜெம் தரி**
**தாதீ கிடதக தரிகிடதோம்"**

இவ்வாறு ஸ்வரத்திற்கு முதலில் அட்டமி போட்டு கால்தட்டி ஜதிக்கு தீர்மானம் செய்த பின்பு மெய்யடவு செய்து பின்னுக்கு சென்று முன்வருதல் இவ்வாறு மீண்டும் ஸ்வரத்திற்கு ஜதிக்கோர்வை செய்யவேண்டி வரும். இதே தன்மையினை கூத்தின் வரவுத்தாளச் சொற்கட்டி லும் ஜதிகளிலும் அமைவதைக் காணலாம் அவை வருமாறு

**"கல்விக்குரிய கலைவாணி — உந்தன்**
**கழலடி பணிகிறோம் தாயே"**

இந்த பாடலுக்கு திரும்புதல் சுழலுதல் ஆகிய ஆட்டக்கோலங்கள் நடைபெறுகையில் ஜதிகள் உடனே சேர்க்கப்படும் அது பின்வரு மாறு அமையும்.

**"தத்தீம்தா தகதிக தா தா**
**தகதிக தாதா திமிதக தெய் தெய்"**

பின்னர் அதே பாடல் திரும்பிப் பாடப்பட அதற்குத்தக பொடியடி, வீசாணம், நாலடி, எட்டு, மாறிஆடல், குந்தி சூழலல் ஆகிய ஆட்டக் கோலங்கள் நடைபெற்று முடிய,

**"தாம் தாம் தகதோம் தரிகிடதக**
**தீம் தார தில்லானா தோம்தரி**
**தச்சோம் தோம் தரி தகததிங்கின தோம்**
**தெய்யா திமிதக தொங்க ததிங்கின தோம்**
**தளாங்கு தித்தக தகதிங்கின தோம்"**

என்று தீர்மானம் முடியும். இவ்வாறு பரதத்தில் ஸ்வரமும் ஜதியும் இணைவதைப் போல இங்கு பாடலும் ஜதியும் இணைவதைக் காணலாம்.

அடுத்து பரதத்தில் சப்தம் என்பது ஆடலையும் அபிநயத்தையும் பாவத்தையும் கொண்ட ஆட்டமாகும். இதில் ஜதிகளும் சாகித்திய அடிகளும் கலந்து வரும் இரண்டு அடிகள் பாட்டில் வந்தால் இரண்டு அடிகள் ஜதியாக வரும். வர்ணம் பதத்தின் முக்கிய ஓர் உருப்படி. இதுவரை வளர்ந்து வந்த ஆட்டமும் அபிநயமும் சமனாக அமைந்து பூரண பொலிவை வர்ணத்திற் பெறுகிறது. வர்ணத்தில் ஒவ்வொரு அடிக்குப் பின்னாலும் நீண்ட ஜதிகள் இடம்பெறும். இவ்வாறு சப்தத்திலும் வர்ணத்தி லும் பாடல்களுக்குப் பின்னால் ஜதிகள் அமைக் கப்பட்டுள்ளன. சப்தத்தில் நான்கு கண்டிகைகள் வருமெனில் ஒவ்வொரு கண்டிகையும் ஒவ் வொரு ராகத்தில் அமைக்கப்படும். வர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, முத்தாய்ஸ்வரம், சரணம், சரணஸ்வரம் என அமைக்கப்படும். இதே தன்மையினைக் கூத்தின் வரவுத்தருவிற் காணலாம். அங்கும் பாடலுக்குப் பின்னால் ஜதி வருகின்றது.

உதாரணம் :- இராகமாளிகை இராகத்தில் அமைந்த சப்தம் பின்வருமாறு:-

**"ஆதியந்தம் ஏதும் இல்லா ஜோதி மயஸ்வருபனே"**
**மேதினியில் களிநடனமாடிய ஈசனே . . . . ஏ . . . .**
**ஆனந்த நடன சபேசனே**
**தஜம் தண கண ததீம் தணகண**
**தஜம் தண கண ததீம் தணகண"**

இவ்வாறு மீண்டும் பாடல் வந்து ஜதிக்கோர்வையைச் செய்யவேண்டி வரும். இதே தன்மையினை கூத்தின் வரவுத்தருவிற் காணலாம். அங்கும் பாடலுக்குப்பின்னால் ஜதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றது.

உதாரணம் :- இராவணேசன் நாடகத்தில் இராவணன் தருவும் ஜதியும் பின்வருமாறு அமைகின்றது.

**"ராஜ ராஜ ராஜர் போற்றும்**
**ராஜ மகா ராஜன் வந்தான்**
**ராஜ தீரன் கொலுவில் வந்தானே**
**தகதிக தா திமிதக தெய் தகதாத**
**தெய்யதா தளாங்கு ததிங்கிணதோம்**

**வீரதீர வீரர் எல்லாம்**
**வந்தடி பணியும் வீரன்**
**வீரவீரன் கொலுவில் வந்தானே**
**தகதிக தா திமிதக தெய்தக...**[2]

இவ்வாறு பாடலும் ஜதியும் மாறி மாறி வரும். இங்கு சப்தம் வர்ணம் போல பாடலுக்குப் பின்னால் ஜதிக்கோர்வை வருவதுடன் முக்கியமாக வர்ணத்தின் அமைப்புப்போல பல்லவி அனுபல்லவிக்குப் பின்னால் ஜதிகள் வருவதையும் அவதானிக்கலாம். இந்தவகையில் பரதத்தில் பாவமும் ஜதிகளும் பாடலும் இடம் பெறுவது போல கூத்தின் வரவுத்தருவிலும் ஜதிகளும் பாடல்களும் இடம்பெறுகின்றமையை அவதானிக்கலாம்.

அடுத்து பரதத்தில் பதம் அபிநயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆடப்படும் ஓர் உருப்படியாகும். இப்பதத்தில் நாடக அம்சம் கொண்ட செய்தியொன்று பாவத்துடன் பாடல் மூலம் வெளிப்படுத்தப்படும். முகபாவத்தினாலும் முத்திரைகளினாலும் உணர்வையும் கருத்தையும் இதில் நாத்தகி வெளிப்படுத்துவர். பதத்தின் பாடல்கள் சிருங்கார ரஸம் கொண்டவையாகும். இதே போன்றே கீர்த்தனையும் பதம் போலவே அமைந்தாலும் அதில் இடம் பெறும் பாடல்கள் பக்தி ரஸம் கொண்டனவாயிருக்கும்.

இவ்வாறு கூத்தில் வரும் பாத்திரங்களின் தர்க்கதரு, தனிமொழிகள் என்பன பதம் கீர்த்தனை என்பவற்றை ஒத்தனவே, பரதத்தில் பதம் கீர்த்தனை என்பன பாடல் அம்சம் கூடி ஜதிக்கட்டுக்கள் குறைந்து காணப்படுகின்றது. ஆனால் அடிப்படையான ஆடலும், தாளம் தீர்த்தலும், பதம், கீர்த்தனைகள் போலவே தனி மொழி, தர்க்கதரு என்பவற்றிலும் அமைந்திருக்கும். பரதத்தில் பதம் கீர்த்தனைகளில்தான் நாடக அம்சங்கள் நிறைய உள்ளன. அதே போல தர்க்கதரு தனிமொழிகளில் தான் நாடகத்தின் உயிர்நாடி அமைந்துள்ளது. அவற்றால்தான் நாடகம் வளர்ந்து செல்கின்றது.

உதாரணம் :- தர்மவதி இராகத்தில் அமைந்த பதம் ஒன்றினை கூறலாம்.

**"ஓடோடி வந்தேன் கண்ணா — நான்**
**உனக்கும் எனக்குமுள்ள உறவை அறிந்து"**

என்ற பாடலுக்கு அபிநயம் செய்யப்படும் இது பல்லவி அனுபல்லவி சரணம் என்று காணப்படும். இதே போல் வீரகுமாரன் நாடகத்தில் வரும் ஒரு தனிமொழி பின்வருமாறு.

**"இந்தப் பிரளயத்திற் கென்ன நான் செய்குவேன்**
**ஈஸ்வரா ஈஸ்வரா — நானும்**
**எப்படித்தாண்டிப் போய் அக்கரை சேருவேன்**
**ஈஸ்வரா ஈஸ்வரா ......"**[3]

எனும் பாடலுக்கு கூத்தில் தனியாக பாத்திரத்தின் அகப்பண்பு சூழ்நிலைகள் என்பன உணர்த்தப்படுகின்றன. இவ்வாறு பரதத்திலும் கூத்திலும் ஒரு சூழ்நிலையை உணர்வுகளை வெளிக்காட்டுவதும் பார்வையாளரை அதனோடு ஒன்றவைப்பதுமாக பரதத்தில் கீர்த்தனை பதமும் கூத்தில் தனிமொழி, தர்க்கதரு என்பனவும் காணப்படுவதை அவதானிக்கலாம்.

இதே போன்று அடுத்து பரதத்தில் தில்லானா என்ற உருப்படி காணப்படுகின்றது. இதற்கு தாள லயமே அடிப்படை அம்சமாகும். இது விறுவிறுப்பாக ஆடப்படுகின்றது. இது ஒரு வகையில் நிருத்தியமே வாத்தியங்களின் ஒலியின் அடிப்படையிற் பிறந்த சொற்கட்டுக்கள் (தீம். தன, நாதர் தீம், தில்லானா, டீங்கு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளாங்கு) ராகத்தில் பாடப்படும். இது ஒரு பரதநாட்டிய அரங்கேற்றத்தில் இறுதியாக ஆடப்படும் உருப்படியாகும். இதே போன்ற தன்மையினை கூத்திலும் காணமுடிகின்றது. கூத்தின் இறுதியில் பாத்திரம் மேடையை விட்டுச் செல்லும் போது ஆடப்படும் ஆட்டம் கால மேற்றுதல் ஆகும். இவ் ஆட்டமும் கூத்தில் சுத்த நிருத்தியமாகவே அமையும். இவ்வாறு கூத்திலும் பரதத்திலும் பாதத்திரம் ஒன்று அரங்கில் தனது பங்களிப்பை முடித்து அரங்கினை விட்டு விடைபெற்று செல்கையில் வேகமான ஆட்டம் ஒன்றினை ஆடி முடித்துவிட்டு செல்வதைக் காணமுடிகின்றது. பரதத்தில் அது தில்லானா என்றும் கூத்தில் காலமேற்றுதல் என்றும் அழைக்கப்படுகின்றது.

உதாரணம் :- மோகனகல்யாணி ராகத்தில் அமைந்த தில்லானா ஒன்று பின்வருமாறு அமையும்

**"தஜனு தீம்த தஜனு தீம்த**
**தத்தீரனா திரணா திரணா — தக"**

என்பதற்கு விறுவிறுப்பாக கோர்வைகள் அமைந்திருக்கும் அதே போன்று கூத்தில் காலமேற்றுதல் ஒன்று பின்வருமாறு அமையும்.

**"தச்சோம் தநிதா திந்தா**
**தகஜோம் தா திந்தா திந்தா**
**தச்சோம் தா திந்தா நிந்தா**
**தகஜோம் தா திந்தா திந்தா**
**தகதக தா திமிதக தெய்**
**தகதக தா திமிதா தெய்**
**தளாங்கு தகிங்கினை தோம்"**, [4]

என்றவாறு விரைவும் துரிதமும் கொண்ட தாளக் கட்டினால் இவ்வாட்டம் நிறைவு பெறுகின்றன. இவை பரதத்திலும் கூத்திலும் ஒத்திருப்பதை அவதானிக்கலாம்.

இறுதியாக பரதநாட்டியக் கச்சேரியினை சம்பிரதாயபூர்வமாக முடித்துவைப்பது சுலோகம் ஆகும். இதே போல் நாடகம் முடிந்ததும் நடிகர்கள் அனைவரும் மேடையில் ஏறி வாழிபாடுதல் அல்லது சிலவேளைகளில் பாடிக் கொண்டு ஆடும்மரபு இறுதியில் பிரதானமாக கடைப்பிடிக்கப்படுகின்றுது. இவ்வாறு வழிபாடுதல் தொட்டுக்கும்பிடுதல் என்பன கூத்தினை சம்பிரதாய பூர்வமாக முடித்து வைக்கின்றது.

இவ்வாறு பார்க்கும் பொழுது பரத நாட்டிய உருப்படிகள் ஒவ்வொன்றும் கூத்துடன் ஒத்துச் செல்வது அதன் செந்நெறித்தன்மையை காட்டுவதாக அமைவதைக் காணலாம்.

மேலும் பரதநாட்டியத்தை முறைப்படி ஒரு குருவானவர் பயிற்றுவிப்பது போன்று கூத்தையும் அண்ணாவிமார் பழக்குவது குறிப் பிடத்தக்கது. பரதத்தில் ஆரம்பத்தில் நமஸ்காரம் செய்வது போன்று நட்டுவனாரின் தட்டுக்கு கூத்திலும் அண்ணாவியாரின் மத்தள அடிக்கு கூத்து கலைஞர் தொட்டுக் கும்பிடுகின்றமையும் இரண்டிலும் ஒத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நடனம் ஆடுகையில் வெளிப்படுத்தும் உணர்வுகளும் கருத்தும் ஆடல் மூலமும் இசை மூலமும் புலப்படுத்தப்படும். நடனத்தை ஜதிகளும் சொற்கட்டுக்களுமே வரையறை செய்கின்றன. இவற்றுக்கமைய நடனமும் ஆடப்படுகின்றன. கூத்துக்கலை ஆடலையும் இசையையும் அடிப்படையாகக் கொண்டது. கூத்தின் நிகழ்வுகளுக்கேற்பவே பாத்திரங்களும் ஆடல்களும் வேறுபடும், இவ் ஆடல் அசைவு தாளக் கட்டுக்களுக்கு ஏற்பவே அமையும்.

பரதத்திலும் கூத்திலும் காட்சியமைப்பு இல்லை. பார்வையாளர்களே இடம்பெறும் நிகழ்வுகளுக்கு ஏற்ற வகையில் காட்சியமைப்பைத் தம் மனதில் தோற்றுவித்துக் கொள்ள வேண்டும்.

"பரதமும் கூத்தும் குறியீட்டுத்தன்மை கொண்டன" என்றவகையில் ஒன்றுபடுகின்றன. நடனத்தை பார்க்கின்ற பார்வையாளர்களுக்கு நடனமணி ஜதி செய்யப்போகின்றார் அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோர்வை செய்யப்போகின்றார் எனவும் பாடல் கேட்டதும் அபிநயம் செய்யப்போகின்றார் எனவும் உணரக்கூடியதாக உள்ளது. கூத்தில் வேட்டையாடுதல் படையெடுப்பு தேரேற்றம் என்பன இடம்பெறப் போகின்றது என்பதை குறிப்பிட்ட தாளக்கட்டு கேட்டதும் கூத்து ரசிகர்கள் புரிந்து கொள்வார்கள்.

கூத்தில் கூத்தர் அனைவரும் ஆடுவதே அழகாகும். கூத்தர்களின் அசைவியக்கமே அங்கு முக்கியம். பாத்திரம் ஆடாது நிற்பது மரபில்லை. இதே தன்மையினை பரதத்திலும் காணலாம் அதாவது இரண்டு பரதக்கலைக் கலைஞர் மேடையில் ஆடுகையில் இருவரும் இணைந்தாடுவதும் சிலவேளைகளில் ஒருவர் ஒருநிலையில் நிற்க மற்றவர் ஆடினாலும் இருவரும் ஒன்றாக ஆடிமுடித்தலே அதன் இறுதியாயிருக்கும்.

இவ்வாறாக இரசனை அம்சங்களிற் பரதமும் கூத்தும் ஒத்திருப்பதைக் காணமுடி கின்றது. இதே போல அமைப்பு முறையிலும் ஒற்றுமை காணப்படுகின்றன.

கூத்தில் ஒரு பாத்திரம் வந்து செல்லும் முறை பின்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டுள் ளது. அண்ணாவியாரின் காப்புவிருத்தம், பாத் திரங்களின் வரவு விருத்தம், பாத்திரங்களுக் குரிய தாளக்கட்டும் அதற்கான ஆட்டக் கோலங் களும் பாத்திரத்தின் வரவுத்தருவும் அதனிடையே இடம்பெறும் தாளக்கட்டுக்களும், தர்க்கதரு, தனி மொழிகள், காலமேற்றுதல், வாழிபாடுதல் என ஒரு பாத்திரத்தின் செயல்முறைகள் அமைகின்றன.

இத்தன்மையினை பரதநாட்டியத்திலும் காணமுடிகின்றது. இன்றுள்ள பரதநாட்டிய கச்சேரி அமைப்பு தொடர்ச்சியாக இருந்து வந்தது என்று கூறமுடியாது. சுமார் 150 வருடங் களுக்கு முன்னர் தஞ்சைப் பெரிய கோயில் நட்டுவனார்களான பொன்னையா, சின்னையா, சிவானந்தம், வடிவேலு எனும் சகோதரர்கள் தான் இதனை வடிவமைத்தனர் எனக் கூறப்படு கின்றது. இவ்வமைப்பில் அலாரிப்பு, ஜதீஸ்வரம், பதம் கீர்த்தனை, சப்தம் வர்ணம், தில்லானா, சுலோகம் என்பவை உள்ளடங்குகின்றன. இவற்றிலிருந்து கூத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட ஆடலமைப்பிற்கும் பரத நாட்டிய உருப்படிகளுக்கு மிடையே ஒத்த தன்மை காணப்படுவதை அவதானிக்கலாம்.

மேலும் பரதத்தில் பிரயோகிக்கப்படு கின்ற முத்திரைகள் சில கூத்தில் இடம் பெறுகின் றமையினைக் காணலாம். உதாரணமாகக் குதிரையினை காட்டுவதற்கு பிரயோகிக்கின்ற முறையினை குறிப்பிடலாம். அத்தோடு நடன மானது ஒரு கதையை ஒருவர் நடித்துக்காட்டுவ தாகும். ஆனால் கூத்துக்கலை ஒரு கதையை பலர் சேர்ந்து நடிப்பதாக அமைந்தாலும் இரு ஆடல்களும் நடித்துக்காட்டுகை என்ற விதத்தில் ஒத்திருப்பதைக் காணலாம்.

வடமோடிக் கூத்தில் இதிகாச கதைகளை அல்லது அவற்றின் கிளைக்கதைகளை மைய மாகக் கொண்டு கதைக்கரு அமைகின்றன. பரதநாட்டியத்தில் வருகின்ற பாடல்களிலும் புராணக்கதைகளும் இதிகாசக் கதைகளும் இடம்பெறுகின்றமையும் அவற்றைக் கருவாகக் கொண்டு சஞ்சாரிபாவம் செய்கின்றமையினை யும் காணலாம். நீ உரைப்பாய் அனுமானே நான் சொன்னதாக" எனும் கீர்த்தனைப் பாடலில் அனுமானே நீ சீதையிடம் சென்று கூறு நான் சொன்னதாக என இராமன் கூறுவதாக அமை கின்றது. இவ்வாறு கூத்திலும் பரதத்திலும் இதிகாசக் கதைகளே கருவாக அமைகின்றமை யினைக் காணலாம்.

பக்கப்பாடல் என்பது கூத்திலும் பரத நாட்டியத்திலும் இடம் பெறுகின்றன. கூத்தில் பாடலும் தாளக்கட்டுக்களும் அமைவது போல் பரதநாட்டியத்தில் பாடலும் ஜதியும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றமையை காணலாம். இது போலவே தாளம் தீர்த்தல் என்பது கூத்திலும் பரதத்திலும் உள்ளமையை காணலாம். கூத்தில் ஒரு தரு வினைப்பாட ஆரம்பித்து வரவுதரு ஆடி முடித்து தாளம் தீர்த்த பின்னரே அடுத்த நிகழ்வுகள் தொடங்கும் பரத நாட்டியத்திலும் ஒவ்வொரு கோர்வைகளும் ஆடிமுடிக்கின்ற வேளையில் அறுதி செய்யப்படுகின்றது. இங்கு இரண்டிலும் ஒரே செயலே இடம் பெறுகின்றன. இதனை தாளம் தீர்த்தல் அறுதி என அழைக்கும் சொற் பிரயோகங்களே வேறுபடுகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு வடமோடிக் கூத்தானது அதன் ஆட்டமுறை இரசனை அம்சம், அமைப்பு முறை தாளக்கட்டுக்களுக்கூடாக பரதத்தை ஒத்ததன்மை என்பன பரதத்தோடு ஒப்பிட்டு பார்க்கும் வகையில் அமைந்திருப்பது அதன் செந்நெறிப் போக்கினைக் காட்டுகின்றது எனலாம்.

இது மட்டுமன்றி மட்டக்களப்பு வட மோடிக் கூத்தானது வட்டக்களரியில் ஆடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்று இந்நிலை மாறி பரத அரங்குகளில் கூத்து இடம் பெறுகின்றமையினைக் காணலாம். உதாரண மாக கூத்து பாடசாலைகளிலும் பல்கலைக்கழ கங்களிலும் இடம் பெறுகின்றமையை கூறலாம். இவ்வாறு பரதத்துக்கு இணையாக கூத்தும் அரங்கில் இடம் பெறுவதும் அதனுடைய வளர்ச்சியைக் காட்டுகின்றது.

முன்பு கூத்தானது கிராமத்துக்கே உரிய தாகவும் கிராமிய நாடகம் நாட்டுக்கூத்து என்றும் அழைத்து வரப்பட்டது. அவ்வாறு கிராமிய நாடகங்கள் என அழைப்பதற்கு முக்கியமாக பின்வரும் காரணங்கள் கூறப்பட்டதாக சி.மௌனகுரு அவர்கள் கூறுகின்றார். அதாவது இக்கூத்துக்கள் படித்தமக்களாலே ஆடப்படாது பாமரமக்களாலே ஆடப்படுகின்றன. இக் கூத்திற் பங்கு கொள்ளும் நடிகர் அண்ணாவிமார் பார்வையாளர்கள் ஆகியோரில் மிகப் பெரும் பாலானோர் பாமரமக்களாயிருப்பது, பாமர மக்கள் பங்குகொள்ளுகின்றமையினால் அக் கூத்துக்களின் பாடல், ஆடல், உடை, நடிப்பு அவைக்காற்றுகை ஆகியவற்றில் செம்மை இல்லாமல் இருப்பது நகரப்புறங்களில் இந் நாடகங்கள் நடத்தப்படாமல் கிராமப்புறங்களில் ஆடப்படுவது, இந்நாடகங்களுக்கு எதிர்த் திசையில் நவீன நாடகங்கள் படித்த மக்களால் நடத்தப்படுவது போன்ற இக்காரணங்களினால் தம்மிடையே படித்த மக்கள் கூட சாஸ்திர ரீதியிலமைந்த பரத நாட்டியம் நாட்டிய நாடகம் போன்ற படித்தோர் ஆடும் நடனங்களையே உயர் கலைகளாகக் கருதி கூத்தை கிராமிய நாடகம் அதாவது நாட்டுக்கூத்து என புறந்தள்ளி பார்க்கும் நிலையில் இருந்தது.[5]

ஆனால் இவை இன்று மாற்றமடைந்து பாமரமக்களால் மட்டும் ஆடப்பட்டுவந்த கூத்தானது படித்தவர்களாலும் ஆடப்படுவதோடு இக்கூத்திற் பங்கு கொள்ளும் நடிகர்கள், அண்ணாவிமார்கள் பார்வையாளர்கள் என்பவர்களில் பெரும்பாலானோர் படித்த உயர் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இவர்கள் பெரும் பான்மையில் பங்கு கொள்ளுகின்ற மையினால் இக்கூத்தின் ஆடல், பாடல், உடை, நடிப்பு அவைக் காற்றுகை முறையில் வளர்ச்சியும் செம்மையும் காணப்படுவதுடன் கிராமப்புறங்களில் மட்டு மன்றி நகரப்புறங்களிலும் ஆடப்படுகின்றதோடு நவீன நாடகங்களுக்கு இணையாக எதிர்த் திசையில் படித்தவர்களாலே மேடையேற்றப்படு வதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு இக்கூத் தானது உயர்கலையாக மதிக்கும் பரதத்திற் கிணையாக செந்நெறித்தன்மை அடைந்து வருவதைக் காணகூடியதாக உள்ளது.

கிராமத்துக்கே உரியதான ஒரு கலை வடிவமாக இருந்த இக்கூத்து இன்று பாடசாலை, பல்கலைக்கழகம் வரை ஒரு பாடமாகவும் கற்கை நெறியாகவும் வந்துள்ளது. பரத நாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியத்தைப் போன்று முதுமானிப்பட்டப் படிப்பு வரை வளர்ச்சி பெறவில்லை எனினும் இன்று கிழக்குப்பல்கலைக்கழகம் சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் போன்ற வற்றிலே ஒரு பாடநெறியாக வளர்ச்சியடைந் துள்ளமை அதன் செந்நெறிப் போக்கையே காட்டி நிற்கின்றது.

இவ்வாறு கூத்து பரதத்திற்கு இணையாக பார்க்கும் அளவிற்கு வளர்ச்சியடைந்து வந்திருப்பதைக் காண கூடியதாக இருந்தாலும் அவற்றுக்கு வழங்கப்படும் கிராமிய நாடகம் நாட்டுக்கூத்து போன்ற பெயர்கள் மக்கள் மத்தி யில் அதன் தரத்தைக் குறைத்து பார்ப்பதாகவே அமைந்திருப்பதைக் காணலாம். இதே போன்ற நிலமை முன்பு பரதத்திற்கும் இருந்தமை சுட்டிக்காட்ட வேண்டியது. முன்பு சதிர் தேவதாசி ஆட்டம், சின்னமேளம் என்று அழைக்கப்பட்டு வந்த நடனமானது ஈ.கிருஷ்ணஐயர், ருக்மணி அருண்டேல் போன்ற நடனத்தை வளர்த்தவர்க ளால் “பரதநாட்டியம்” என பெயர் சூட்டி அழைத்த பின்பே ஒரு உயர்கலையாகவும் மக்கள் அனை வராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலையாகவும் மதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதே போன்று கூத்திற்கும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மக்களின் எதிர்பார்ப்பிற்கும் தரத்திற்கும் ஏற்ற ஒரு பெயர் சூட்டப்படுமானால் இன்னொரு படி வளர்ச்சியடைந்து கொள்வதோடு அனை வரது பார்வையும் இதன்மேல் படும் என்பதும் ஆய்வாளரது கருத்தாகும்.

இவ்வாறாக ஒட்டுமொத்தமாக பார்க்கின்ற போது கூத்திலும் பரதத்திலும் வரும் தாளக்கட்டுக்களின் ஓசை அமைதி மிகப் பெரும்பாலும் ஒத்திருப்பதோடு இரண்டிலும் தாளம் தீர்த்தல், ஜதி, சொற்கட்டு, நமஸ்காரம், இரசனை அமைப்பு போன்றனவும் ஒத்திருப்பது கவனிக்கப்படவேண்டியது. இந்த வகையில் ஒரு செந்நெறித்தன்மை அடைந்துள்ள ஒரு நடனத் தோடு இக் கூத்தும் ஒன்றுபட்டு காணப்படுவதாக அமைந்தாலும் பரதநாட்டியத்தைப் போன்று ஒரு நேர்த்தி ஒழுங்கு கட்டுக்கோப்புடன் இன்னும் வளர்ச்சியடையவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. ஏனெனில் பரதநாட்டியம் என்பது ஒரு வரையறைக்குட்படுத்தப்பட்டு எல்லா இடங்களி லும் ஒரே மாதிரியாகவே ஆடப்படுகின்றது. ஆனால் இக்கூத்தானது ஒரு வரையறைக்குள் கொண்டுவரப்படாமல் ஒவ்வொரு இடங்களி லும் ஒவ்வொரு விதமாக ஆடப்படுவதைக் காணலாம். இதற்கு தாளம் தீர்த்தலை உதாரண மாக கூறலாம். மட்டக்களப்பினை எடுத்துக் கொண்டால் தாளம் தீர்த்தல் ஒவ்வொரு இடங்க ளில் ஒவ்வொருவிதமாக ஆடப்படுகின்றது. அந்த வகையில் கூத்து தேசிநாடக மரபாகவே காணப் படுகின்றது. இன்னும் மார்க்க (செந்நெறி அடைந்த) மரபினை அடையவில்லை. மார்க்க மரபினை அடைய வேண்டுமானால் ஒரு வரன் முறைக்குள் கொண்டு வரப்பட்டு எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியாக ஆடப்பட வேண்டும். அந்தவகையில் பரதத்தை ஒழுங்கா கவும் நேர்த்தியாகவும் வளர்த்தவர்கள் இருந்தது போன்று இக் கூத்தையும் ஒருவரன்முறைக்குள் வளர்க்ககூடியவிதத்தில் யாரும் ஆரம்பத்தில் இருந்தே செயற்பட்டிருப்பார்களானால் இன்று கூத்தும் ஒரு செந்நெறித்தன்மையை அடைந் திருக்க வாய்ப்பிருந்திருக்கும்.

**அடிக்குறிப்புக்கள்**

1. மௌனகுரு.சி.கலாநிதி, நாடகம் அரங்கியல் பழையதும் புதியதும், கொழும்பு, 2007, பக்கம் – 22
2. மௌனகுரு.சி.கலாநிதி, இராவணேசன், சென்னை, 1998, பக்கம் – 22
3. மௌனகுரு.சி.கலாநிதி, மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு, மட்டக்களப்பு, 1998 பக்கம் – 355
4. மௌனகுரு.சி.கலாநிதி, நாடகமும் அரங்கியலும் பழையதும் புதியதும், கொழும்பு, 2007, பக்கம் – 20
5. மேலது, பக்கம் – 08


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# கரி காசாகும் போது காசு கரியாகிறதே ...

த.சர்வேஸ்வரன்
முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிளிநொச்சி

அம்மா.. அம்மா.. பசிக்குதம்மா ...... அம்மோய்..... பசிக்குது.. ஏதாவது தாங்கோ.... பொறடா தம்பி தாத்தா வந்து... வந்து கொண்டிருக்கிறார்.. வந்ததும் பிள்ளைக்கு பணிஸ் வாங்கிதாறன்.. கொஞ்சம் பொறடி செல்லம்... தங்கச்சியை கூட்டிட்டுப் போய் ஊஞ்சலாடு..... போங்கோ.. கணேசரின் மகள் வனிதா ஒருவித தயக்கமான வாஊத்தைகளால் தன் பிள்ளைகளை விளையாட அனுப்பிவிட்டு முற்றத்தை கூட்டக்கொண்டருந்தாள். முற்றத்தை கூட்டும்போதே தனது எண்ணத்தையும் கூட்டிக் கொண்டே போனாள். பசித்து வாடும் பிள்ளை யின் வைற்றுக்கு ஏதாவது கொடுக்கணுமே என்று தாய்மையின் தன்மை துடியாய் துடிக்குது. விறு விறுவென கூட்டி முடித்துவிட்டு, வீட்டின் வாசல் ஓரமாக உள்ள மரக்குற்றியில் அமஊந்து பிள்ளைகள் பசிமறந்து விளையாடுவதை பாஊத்தவாறே "கடவுளே என் பிள்ளைகளுக்குப் பசிக்குதப்பா காலையிலிருந்து சாப்பிடாமல் பிஞ்சு வயிறு எப்படித்தான் தாங்கும்... பன்னி ரண்டு மணியாகுது அப்பாவையும் காண வில்லை வேலை தேடிப்போனவர்.. மதியம் வந்திடுவன் என்று சொன்னவர் இன்னும் காணோமே.... இயலாத காலுடன் எப்படித்தான் வேலை செய்து என் பிள்ளைகளை காப்பாற்றப் போகிறார்..." ஒருகணம் தன்னை மறந்து இறைவனை வேண்டுகிறாள் வனிதா. பிள்ளை களுக்கு தண்ணீரை குடிக்க கொடுத்து பசியை தாமதப்படுத்திக்கொண்டே, வீட்டு வாசலில் தந்தையின் வரவுக்காக காத்திருந்தாள்.

உச்சி வெய்யில் அனல் காற்று முகத்தை எரிக்கிறது நிமிர்ந்து பார்க்க கண்கள் கூசும் வியர்வையோ வடிந்து சால்வையும் நனைந்து விட்டது கால் கடுத்தாலும் கோல் பிடித்து வீடு போய் சேரணுமே என்ற ஆதங்கத்துடன் ஒற்றை யடி பாதையூடாக குச்ச வெளியை குறுக்கிட்டு செல்லும்போது முள்ளு ஒன்று காலைப்பதம் பாஊத்ததால் கால் எடுத்து வைக்க முடியாத அளவு வேதனை தோளில் கைப்பை பாரம் முதுகை வாட்ட வயதுக்கேற்ற தள்ளாட்டமும் இயலாமை உணர்வும் வயோதிபத்திற்கு இருக் கத்தானே செய்யும் இது என்ன கணேசருக்கு விதிவிலக்கா... ஆளரவமற்ற ஊர் நடுவே சுழன்று பாஊத்தாலும் ஓரிரண்டு ஓலைக் குடிகள்தான் இங்கொன்றும் அங்கொன்றும் என அருமை யாக காட்சியளிக்கிறது. சற்று அருகில் தெரியும் குடியருகே பெரும் நிழல் மரமொன்று உள்ளதை அவதானித்த கணேசருக்கு அம்மரமருகே சென்று களைப்பாறனும் போல இருந்தது. சடு சடு வென சென்று மர நிழலை அடைந்ததும் வெயில் அகோரம் கண்களில் இருந்து பறந்தது குளிர்மை மனதையும் உடலையும் அணைத்துக்கொள்ள மர அடியில் வசதியாக உட்கார்ந்தார் கணேசர். தாகம் நாவை வரட்ட பையில் இருந்த சிறு போத்தலில் மீதமாய் இருந்த தண்ணீரை பருகி தாகம் தணித்த போது தூக்கமும் கண்ணை கட்டியது. மெல்ல சாய்ந்தார். குட்டித்தூக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலளித்தது: எல்லாம் தற்காலிகம்தானே என்பது போல் பெரு மூச்சுடன் விழித்துக் கொண்டார். பாதி தேய்ந்து போன செருப்பி னூடாக முள்ளு ஒன்று காலை பதம்பார்ததோ உள்ளங்காலை..எடுத்து ஆய்ந்து பார்த்தார் குறும்பார்வைக் கண்ணால். சிறிதாக தான் காலைத் தைத்தாலும் அதன் வலியை நொந்து கொள்ள நேரமில்லை.. பசித்த வையிறுடன் பச்சிலம்பிள்ளை காவலிருக்க என்னமோ ஏதோ என்று ஏங்கியபடியே விறு விறுவென ஊன்று கோலை எடுத்து தன் கக்கத்தில் சொருகி தாவி தாவி செல்கிறார் கணேசர்"

வேலை தேடி செல்லும் கணேசருக்கு என்ன வேலை பொருத்தம் தளர்ச்சியான உடலுடன் தளராத மனதை எப்படித்தான் கட்டி எழுப்புவது மிகுந்த மன போராட்டத்தின் மத்தி யில் உடல் வலியுடன் தினமும் வேலை தேடி சென்றாலும் பரிதாபத்தை காட்டமுனைப வர்கள் அதிகம்தான் ஆனாலும் வேலை கொடுக்க யார்தான் முன்வருவர். பொது நலம் இருந் தாலும் சுயநலமே பெரிதென வாழும் மக்கள் கூட்டமே அதிகம். தினமும் பூக்கள் கொண்டு முருகனை அர்ச்சிக்கும் வழக்கமுடைய கணேசர் பூமாலை கட்டி கோவிலுக்கு கொடுப்பதால் கிடைக்கும் நூற்றி ஐம்பது ரூபாவுடன் எப்படித் தான் ஒரு நாள் வாழ்க்கைப் போராட்டத்தை கழிப்பது. விலை வாசி எகிறிப் போய் உள்ள தற்காலத்தில் நூறு ரூபாவுக்கே எதையும் வாங்கமுடியவில்லை ஐந்துபேர் எப்படித்தான் இதை சமாளிப்பது. இவ்வளவு கிடைத்ததே பெரிதென எண்ணியவாறு கணேசர் வீடு சென்றடைய சூரியனும் உச்சி தாண்டி மேற்கே சற்றே சரிந்து விட்டான்.

"தாத்தா தாத்தா தாத்த வந்துவிட்டார் அம்மா" என பேரப்பிள்ளைகள் மூன்றும் துள்ளிக் குதித்து தாத்தாவை நோக்கி ஓடிவர கணேசரின் முகத்தில் ஒரு மலர்ச்சி மழலை செல்வம் மனதை மயக்கும், கவலைகளை மறக்க வைக்கும் உற்சாகத்தை ஏற்படுத்தும். இத்தனை யும் உணர்ந்தவர் போல் பிள்ளைகளை அணைத்து தடவி முத்தமிட்டு "ம் வாங்கடா.. என் செல்லக்குட்டிகளா" என அணைத்துக் கொண்டு வேலியில் தொங்கும் நான்கு மட்டைப் பட்லையை தூக்கி எடுத்து விலத்திவிட்டு ஊன்று கோலுடன் உள்ளே மெல்ல தாவி வருகிறாஉ கணேசர். தந்தையைக் கண்ட வனிதா அடுக்கி கொண்டிருந்த விறகினை அப்படியே வைத்து விட்டு மலர்ச்சியான முகத்துடனும்.. ஒருவித எதிர்பார்ப்புடனும் அருகே வருவதை கண்ட கணேசர், தன் பையில் இருந்த நூற்றி ஐம்பது ரூபாவையும் எடுத்துக் கொடுத்து "இந்தா பிள்ளை குழந்தைகளுக்கு பணிஸை வாங்கி கொடு.. கெதியா போ. எல்லாம் பசிக்களை யோடு இருக்குதுகள்." என அவசரமாக எடுத்துக் கொடுத்தார் வனிதாவிடம் "சரியப்ப நீங்க மதியம் சாப்பிட்டனிங்களா? நீங்களும் சரியா களைக்கிறீங்க.. தண்ணி தரட்டா முதல்ல தண்ணிய குடியுங்கோ.." என அடுக்களைப் பக்கம் சென்று ஒரு செம்பில் தண்ணீர் எடுத்து கொண்டுவந்து தந்தையிடம் கொடுத்துவிட்டு பணிஸ் வாங் கடைக்கு செல்கிறாள். தண்ணியே ஏழையின் பசியைத் தணிக்கும் முதல் உணவு என எண்ணியது போல் மடக் மடக் என குடித்து விட்டு வெறுமையான செம்பை அருகில் வைக்கிறார்.

"தாத்தா வேலை கிடைச்சிட்டுதா.. இல்லையா..?" பிள்ளையின் கேள்விக்கு என்ன பதில் சொல்ல யோசித்துக்கொண்டே அமைதி யாக "வேலை கிடைக்கும் அப்ப நான் உங்களு க்கு நிறைய எல்லாம் வாங்கித்தாறன்.. என்ன.." ஆறுதல்படுத்தும் வார்த்தையாக பதிலளித்து விட்டு.. ஊன்றுகோலை தள்ளிவைத்துவிட்டு கட்டாந்தரையில் களைப்பினை போக்க மெல்ல சாய்கிறார்..

வனிதா பிள்ளைகளுக்கு பணிஸ் வாங்கிக் கொடுத்துவிட்டு, தனக்கும் தந்தைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைப்பதற்காக அரிசியும் பூசணிக்காயும் வாங்கி சமைக்கிறாள் பூசணிக்காய்தான் சந்தையில் விலை குறைந்த மரக்கறி வரும ானத்திற்கேற்ற சிக்கனத்தை பழகிக்கொண்டவள் தான் வனிதா. காலை உணவும் மதிய உணவும் மாலை ஐந்து மணியளவில்தான் பரிமாறப்படு கிறது. தந்தையின் வேதனையை எண்ணியும் அவர் தனக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் தன் உடல் தளர்ச்சியையும் பார்க்காது வேலை தேடி சென்று வேதனைப்படுவதையும் எண்ணி கவலைப்படும் வனிதா, இறைவனிடம் தினமும் தன் தந்தை ஆரோக்கியமாக இருக்கணும் என்று வேண்டியவளாகவே இருந்தாள்.

வனிதா செல்லப்பிள்ளையாக நல்ல பண்பான குணமுடன் தந்தையின் அரவணைப் பிலே வாழ்ந்தவள். தன் இருபது வயதில் தான் நேசித்தவனை தந்தை தாய் அனுமதியுடன் கல்யாணம் முடித்து மூன்று பிள்கைளுக்கு தாயானாள். வனிதாவுக்கு அன்பான இரண்டு சகோதரரும் ஒரு சகோதரியும் இருந்தனர். கணேசர் குடும்பம் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த ஒரு விவசாயக் குடும்பம். கனகராயன் குளத்தை அண்டிய எழுபது ஏக்கர் வயல் நிலத்தில், பெரும்போகம் சிறு போகம் என குத்தகைக்கும் விட்டு வருமானம் எடுத்து வசதியான வீடுகட்டி ஒன்றாக வாழ்ந்து வந்தனர். ஊரில் செல்வாக்குள்ள குடும்பம், கணேசர் என்றால் தெரியாத ஆட்களே கிடையாது அந்தளவுக்கு அன்பான குணத்துடன் பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை உடையவர். கணேசரின் வீட்டுக்கருகில் உள்ள உறவினர் வீடுகளும் சிறப்பாகத்தான் இருந்தன. கருமேகம் சூழ்ந்து இடி இடிக்க மழை கொட்டியது போல பெரும் போர் சூழ்ந்த காலப்பகுதியான இரண்டா யிரத்து ஏழாம் ஆண்டின் நடுப்பகுதியில் மூண்ட கடும் யுத்தத்தில் ஏறிகணையால் பலியுண்டு போனது கணேசர் குடும்பம். ஊரே சுடுகாடு போல் எரிந்து கருகி காட்சியளித்தது. மக்கள் ஊரைவிட்டு ஓடியபோதும் கணேசர் குடும்பத் திற்கோ: ஓடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்க வில்லை தற்பாதுகாப்பிற்காக வீட்டின் பின் புறத்தே வெட்டி மூடிவைத்த பங்கா ஒன்று உள்ளது. வெடிகுண்டு ஆபத்துக் காலங்களில் பங்கருக்குள்ளேதான் அவ்வூர் மக்களது வாழ்க்கை. தூர கேட்கும் குண்டு சத்தங்களை கேட்டதுமே அவ்வூர் மக்கள் பங்கருக்குள் சென்றிடுவர். அன்றும் வழமையானதுதான் தூரமாகதானே கேட்கது என்ற அலட்சியத்துடன் கணேசர் குடும்பம் உறங்கிக்கொண்டிருக்க, வனிதா மட்டும் கணவனின் உதவியுடன் பிள்ளை களை பங்கருக்குள் கிடத்திவிட்டு பிள்ளை களுடன் இருக்கும் போது, பெரும் சத்தத்துடன் குண்டு ஒன்று கணேசரின் வீட்டில் வெடிக்கிறது. வெளியில் இருந்த அனைவரும் பலியாகிட கணேசர் மட்டும் ஒரு காலுடன் உயிர் பிளைத் துக் கொண்டார். பங்கருக்குள் இருந்த வனிதா வும் பிள்ளைகளும் கத்திக் குளறிய போது அயலவர்களால் காப்பாற்றப்பட்டு வேறு இடத்து க்கு கொண்டுசெல்லப்பட்டனர். துயரத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் தவித்த வனிதா காயமடைந்த தந்தையை காப்பாற்றுவதில் மிகுந்த கவனம் எடுத்திருந்தாள் . வனிதா பட்ட துன்பம் துடிப்பும் கொஞ்சநஞ்சமல்ல பட்ட வருக்கே அது புரியும்.

ஆண்டவனுக்கும் இரக்கமில்லை அவனால் கொடுமைகளை தணித்திடவும் முடிய வில்லை.. வேதனையில் வாடிய காலம் போய் மெல்ல எழுந்துவரும் ஊரில் விழித்துக்கொண்ட உறவுகள் யாருமில்லை வாழ்வதற்கு அங்கு வீடும் இல்லை.. சுடுகாடாய் போன கிராமம் மீண்டும் செழிக்கவில்லை ஆழ் அரவமற்ற இடத்தினைப்போல் அமைதியாக காணப்படும் அக்கிராமம் இன்றும் பசும் இலை குழைகளால் தன்னை மூடிமறைத்து மௌனித்து நிற்கிறது. மீண்டும் குடியமர்ந்தாலும் உறவுகளின் சிரிப் பொலிகளும் அவலக்குரல்களும் ஒருகணம் ஒலித்தும் ஒலியாதது போல ஒரு பிரமிப்பை தற்போதும் ஊட்ட மறுக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவிக்கு கரம் நீட்ட எத்தனைபேஊ வந்தாலும் உள்ளத்தின் மறுவெடுக்க யாரால் முடியும் வாழ்வாதாரம் கொண்டுவரும் உதவிக்கு ஈடாகுமோ கஸ்டமுடன் சேர்த்துவைத்த சொத்துக்கள்.. வீட்டின் மூலையில் இருந்தவாறே கனவு போல் ஒருகணம் யோசித்து முடித்து விட்டாள் வனிதா பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவேனும் முன்நகர்ந்துதானே செல்ல வேண்டும். வேறு வழி தெரியவில்லை வரழ்வை முடித்துக் கொள்ள. தந்தையை பார்த்து அவர் தனக்காகவும் தன் பிள்ளைகளுக்காகவும் படும் பாடு கொஞ்சமா? தானும் வேலை செய்தால் என்ன என்று யோசித்தாலும் தந்தையின் எண்ணம் இடம் கொடுக்காது என்பதை உணர்ந்து வீட்டுடனே உட்கார்ந்துவிட்டாள் "ம் என்ன வாழ்க்கை அச்சமுடன் எத்தனை காலம்தான் வாழ்வது.." என எண்ணியபோது உச்சிமீது நின்ற பல்லி அச்சமில்லை அச்சமில்லை என செல்வதுபோல் சொல்வதைக் கேட்டாள் வருமா மீண்டும் அந்தக்காலம் என ஏங்குகிறாள்

சற்றே அயர்ந்த தந்தை விளித்துக் கொண்டு மெல்ல எழுந்தபோது சோற்றுப் பானை அடுப்பில் சோறாக்கிக் கொண்டிருந்தது. வனிதாவும் தன் ஆழ்சிந்தனையில் இருந்து விடுபட்டு நினைவுக்கு திரும்பினாள். "என்னம்மா சோறு சமைத்து விட்டியா" என கேட்டவாறே தந்தை கணேஸ் மெல்லத் தாவித் தாவி முகம் கால்களை கழுவ சென்றார். "முடியுதப்பா பதினைந்து நிமிடம் பொறுங்கோ சமைத்திடுவேன்" என சொல்லியவாறே பூசணிக் காயை விரைவாக வெட்டினாள். பிள்ளைகளும் சாப்பிட்ட உற்சாகத்தில் அங்கிமிங்குமாக துள்ளிக்குதித்து ஓடித்திரிந்தார்கள்.

சொன்னவாறே அந்த நேரத்துக்குள் சமைத்து தந்தைக்கு உணவளித்தாள். "அப்பா ஏனப்பா இன்னும் வேலை கிடைக்கவில்லை நீங்க அலைந்து திரிய எனக்கு கஸ்டமாக இருக்கப்பா.." பரிவுடன் தந்தயயைப் பார்த்து கேட்டாள் வனிதா. "கவலைப்படாதே பிள்ளை,.. இப்பதானே மீளக் குடியமஊந்திருக்கிறோம் வேலையை நாம்தான் தேடிப்போகணும் வேலை நம்மைத் தேடி வராது. என்னால் உழைக்க முடியும். ரவுணுக்குள்ளே நாலு இரும்பு பட்டறை இருக்கு. அவங்களுக்கு சிரட்டை கரி தேவைப் படும் இரும்பு சூடாக்குவதற்கு, நாளைக்குப் போய் அந்த கடைகளை கேட்பம் கரி எடுப்பியலோ என்று.. கரி இப்ப கிலோ அறுபத்தைந்து ரூபா போகுதாம். எரித்துக் கொண்டுபோய் கொடுத்தால் ஐநூறு ரூபா அளவில் கிடைக்கும்.." என்று ஒரு வழி தெரிந்தவனாக கூறினார் " அது சுலபமான வேலைதானே நான் உங்களுக்கு கெல்ப்பன்றன் அப்பா ..பக்கத்து வீடுகளுக்கு போய் சிரட்டை சேர்க்கலாம், தங்கம்மா வீட்டில செக்கு இருக்கு கொப்பரா தேங்காய் உடைத்து செக்கில ஆட்டி தேங்காயெண்ணை பிளியறவங்கள் அங்க போய் கேட்டும் எடுக்கலாம்" என ஆர்வத்துடன் சந்தோசமாக கூறினாள் வனிதா.. "பிள்ளை நளைக்கு வேளைக்கு மாலை கட்டித்தா கோவிலுக்குப் பேய்விட்டுதானே கடைக்குப் போகணும்.. என்றார்.." "சரிப்பா வேளைக்கு கட்டித்தாறன்." என்கூறிவிட்டு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லி கொடுக்க பிள்ளைகளை கூப்பிட்டாள் "ராகவனும் சிந்துவும் வாங்க அடுத்த திங்கள் உங்களை ஸ்கூல்ல சேர்க்கவேணும். வாங்க படிப்பம்.. தாத்ததாவுக்கு இனிதான் காசு வரும் நீங்கள் நல்லா படிச்சு நல்லா உழைக்கணும்" என்றுகூறி குப்பி விளக்கின் குறுகிய வெளிச்சத்தில் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்தாள்.. சொன்னபடியே கணேசர் மறுநாட் காலையில் எழுந்து நகரத்தில் உள்ள கடைக்கு புறப்பட ஆயத்தமானார்.. வனிதா மா வாங்கி வந்து பிட்டு அவித்து கொடுத்தாள் பிள்ளைகளுடன் சேர்ந்து கணேசரும் சாப்பிட்டுவிட்டு விரைவாக சுறு சுறுப்புடன் வழக்கம் போல பூவும் பூமாலையும் கொண்டு கந்தசாமி கோவிலுக்கு சென்றுவிட்டு இரும்பு பட்டறைக்கு போக திட்டமிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வெய்யில் செம்மஞ்சளாய் முகத்தில் பட்டு தெறிக்க முதுகில சிறு பையுடன் தண்ணியும் பூக்களும் கொண்டு சென்றார்.

காலையில் நல்ல சகுணம் பசு மாடு வீதியின் முன்னே நிற்பதைப் பார்த்து கணே சருக்கு நல்ல முழிவளம் என்று நினைத்தவாறே விரைந்துசென்றார். கோவிலில் பூக்களையும் மாலையையும் ஐயரிடம் கொடுத்து வணங்கி கூலியும் பெற்று கடைக்கு சென்றார். இரும்புக் கடைக்கு சென்ற கணேசருக்கு இரண்டு மடங்கு சந்தோஸம் காத்திருந்தது..தனது அன்புக்குரிய தெரிந்த நண்பரது கடையில்தான் கரி கொடுப்பதற்கான சந்தர்ப்பத்ததை பெற்றார். நல்ல கூலியும் ஒத்துழைப்பும் தருவதாக கணேச ரின் நண்பர் மூர்த்தி கூறியதும் கணேகருக்கு அளவிலா ஆனந்தம் முருகனுக்கு நன்றிகூறி நண்பரிடம் இருந்து விடை பெற்று வீடு நோக்கி விரைந்தார். வரும் வழிகளில் கிடைக்கும் சிரட்டைகள் எல்லாவற்றையுப் பொறுக்கி வந்தார்.. காலை பதினொரு மணியளவில் வீடுவந்து சேர்ந்ததும் மகளிடம் விடயத்தை கூறினார். அன்றே இருவரும் பொறுக்கிச் சேஊத்த சிரட்டைகள் இருபது கிலோ தேறும். வதனி வீட்டின் பின் பக்கமாக ஒரு கிடங்கு வெட்டி அதனுள் சிரட்டைகளை எரிக்க கூடிய வாறு வடிவமைத்தாள். இருவருமாக சிரட்டை களை கொட்டி அரைப்பதமாக எரித்து எடுத்து சேர்த்தார்கள்.. பத்து கிலோ சிரட்டைக்கரியுடன் மறுநாள் விற்பதற்காக விரைந்து சென்றார் கணேசர். கடை முதலாளியான மூர்த்தி கொடுத்த அறுநூற்றம்பது ரூபாவுடன் கணேசர் சந்தோஷமாக வீடு திரும்பினார்.

தன் தந்தை கொடுத்த பணத்தை பயபக்கி யுடன் வாங்கிய வனிதா முன்நூற்றம்பது ரூபாவை சேர்து வைத்துவிட்டு மீதம் முன்நூறு ரூபாவுடன் கடைக்கு சென்று நாளாந்தம் தேவையானவற்றை வாங்கிவந்தாள். இப்போது தான் அடுப்பில் இருந்து புகை வருவதாக தந்தையிடம் புன்னகையுடன் கூறினாள். முருகன் கொடுத்த ஆசிர்வாதம்தான் எல்லாம் என கூறி கணேசர் சிரட்டைகளை எரித் தெடுத்துக் கொண்டிருந்தார்.

கடந்தகால யுத்த அதிர்ச்சியில் இருந்து விடுபடாத மக்களாக கிளிநொச்சி மக்கள் இருந்தபோதும் பண்டிகை வந்துவிட்டால் கொண்டாட தவறுவதில்லை. குண்டு வெடிப்பு அதிர்ச்சி கேட்டு பழகிக்கொண்டதால் என்னவோ பட்டாசு வெடித்து மகிழ பின்னிற்க வில்லை தமக்கேற்பட்ட துன்பங்களை மறந்து பட்டாசு கொழுத்தி பண்டிகை கொண்டாடி மகிழும்போது ஊரோடு ஒத்ததுதானே கணே சரின் பேரப்பிள்ளையின் மகிழ்ச்சியும் அமை யும்.. பள்ளிச் சிறுவர்கள் பட்டாசு கொழுத்தி மகிழ்வதை பார்க்க ஓடிசென்று வீதியின் ஓரமாக நின்று வேடிக்கை பார்க்கின் றனர் கணேசரின் பேரப்பிள்ளைகள்.. ஆசை மேலிட்டதால் ஓடிச்சென்று தாயிடம் கேட்கின்றனர் " "அம்மா.. அம்மா.. நாங்களும் பட்டாசு கொளுத்த போகி றோம் வாங்கி தாங்கோ.." என அடக்கமுடன் அடம்பிடிக்கின்றனர். வறுமை வாட்டினாலும் அந்த அந்த பருவத்தில் துடிக்கும் ஆசையை கட்டுப்படுத்த முடியுமா.. விளையாடும் பருவத் தில் விளையாடாமல் அடங்கியிருப்பதா.. ஒதுங்கியிருந்தால் தாழ்வு மனப்பான்மை வந்துவிடுமே.. ஒரு கணம் யோசித்த வனிதா மறுபக்கமும் யோசித்துப் பார்க்கவேண்டிய வளானாள். வறுமையின் கோரப் பிடியில் இருந்து மீழமுடியவில்லை ஒரு நாளைக் கழிப்ப தென்றாலே பெரும் திண்டாட்டம் அதற்குள் பிள்ளைகளின் ஆசைக்கு இணங்கிப் போவதா.. தன் தந்தை ஒரு காலால் நடந்து உழைத்த பணத்தை ஒரு நொடியில் அழிப்பதா என தனக்குள்ளே யோசித்தவளாக இருந்தாள்.. "அம்மா பட்டாசு வாங்கித்தாங்கோ." தாயின் சேலையை பிடித்து பிள்ளைகள் அடம் பிடிக் கின்றனர். "சரி..வாங்கித்தாறன்..." ஒருநாள் சந்தோசம்தானே ஊர்ப்பிள்ளைகள் கொழுத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழும்போது என் பிள்ளளை என்ன ஜடமா? என தனக்குள்ளே கூறியவாறு சேர்த்து வைத்த காசில் ஐம்பது ரூபாவை எடுத்து சந்தியில் உள்ள கடைக்கு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போய் வாங்கி கொடுக்கிறாள்.. ஆசையுடன் மகிழ்ச்சியுடன் பிள்ளளைகள் ஓடி துள்ளி குதித்து ஓடும் காட்சியை பார்த்து தாய் மகிழ்கி றாள்.

கடைக்கு சிரட்டை கரி விற்க கொண்டு சென்ற கணேசர் கரியை மீண்டும் வீட்டுக்கே கொண்டு வருகிறார்.. பிள்ளைகள் நடு முற்றத் தில் பட்டாசு கொளுத்தி ஆரவாரிக்கின்றனர்.. கணேசர் வெளிக் கதவு கடந்து உள்ளே வரும் போது பிள்ளைகள் கொளுத்திய பட்டாசின் மண்கட்டி ஒன்று கணேசரின் முகத்தில் பலமாக மோதுகிறது. வலி தாங்காது அதே கணம் ஊ.. என கத்துகிறார் பிள்ளைகள் திகைத்து போய் நிற்கின்றனர் தீடீரென அமைதி. கணேசர் அவ் விடத்தில் குந்தியவாறு தன் முகத்தில் இருந்து கையை எடுத்துவிட்டு, வெடித்து சிதறிக்கிடக்கும் பட்டாசின் கருகிய துண்டுகளைப்பார்த்து ஒரு கணம் வேதனை அடைகிறார். "நான் கரியை காசாக்க தவியாய் தவித்த போது அது மீண்டும் ஒருநொடியில் கரியாகிவிட்டதே" என மனதுள் ஒருகணம் ஓடிய வேதனை எண்ணம் மறுகணம் பிள்ளைகளுக்காக விட்டுக்கொடுக்கப்பட்ட சந்தோசமாக மாறிவிட சிரிப்புடன் "வாங்க வாங்க செல்லங்களே.. ஓடி வாங்க.. "என்றதும் மூவரும் ஓடிவந்து தாத்தாவை கட்டி அணைத்து முத்தமிட்டனர்.. "தாத்தா தாத்தா நாளை பொங்கலுக்காக வெடி கொளுத்துறோம்" என வஞ்சமில்லா நெஞ்சமுடன் தாத்தாவிடம் சொல்லிக்கொண்டிருந்தனர். .ஓடி சென்று வதனி "என்னப்பா கரியை விற்காமல் வாறீங்கள்.. ஏன். என்ன நடந்தது" என ஆச்சரியத்துடனும் ஏக்கமுடனும் வினவுகிறாள்." "இல்லை பிள்ளை நாளைக்கு பொங்கல்தானே அதனால் அவங்கள் கடையை பூட்டிட்டு போய்ற்றாங்கள், நின்று பார்த்தன் வரவில்லை அதுதான் வந்திட்டன். மாலைக்காசு மட்டும்தான் இருக்குது" என்று எமாற்ற மனதின் தொனிப்புடன் கூறினார்.

நாளை வெடி கொளுத்திப் பொங்கினா லும் பிள்ளைகளுக்கு புத்தாடை எடுக்க காசில்லை. பிள்ளைகள் அதை கேட்காவிடினும் கோவிலுக்கு போகும் போது எதை அணிவது.. வெளுப்பிலும் ஒரு பழுப்பு இருக்கத்தான் செய்கிறது.. கணேசரின் வாழ்க்கையில் மட்டுமா இந்தக் கொடி பறக்கிறது என எண்ணியவாறு வீட்டின் உள்ளே செல்கிறார் கணேசர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2011









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# கரைசேரா படகுகள்

திருநகர் நடராசா

**கா**லை பத்து மணிக்கே வெயில் மண்டையைப் பிளக்குமாற்போல் கொடூரமாய் எரித்துக் கொண்டிருந்தது. திரு நகர் வீதியில் இருந்து குளுக்காகப் பிரிந்த வீதியில் இறங்கி, கனகபுரம் சந்தையை நோக்கி மெல்ல மெல்ல நடக்கிறார் கதிர் வேல். அவருக்கு எழுபத்தைந் தைத் தாண்டிய வயது. முதுமை முகாந்திடும் பெற்று முக்கால் பகுதிக்கு வந்து விட்டதால் முதுகு சற்று வளைந்து கால்களும் துரிதமற்று இருந்தன. பருமனோ கட்டையோ அல்லாத உடல் வாகு.

எப்போதும் சிரித்த முகம் என்பதால் முகத்தில் அவ்வளவு வாகச் சுருக்கங்கள் விழ வில்லை. நாலுமுழ வேட்டி, தோளில் ஒரு துவாய்த் துண்டு அதற்கும் இதற்கும் ஆசைப் படாத அடையாளமாக அடக்கமான கை வீச்சு முதுமையின் அடையாளம் தெரிந்தாலும் அதைச் சுமையாகக் காட்டிக் கொள்ளாத கம்பீரம், பத்து நாட்களுக்கு மேல் சுகவீனமாக ஆஸ்பத்திரியில் கிடந்து விட்டு உடற் சோர்வு. "ஈஸ்வரா இது என்ன வெயில்! என்ன வெயில்!!" வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டே, தோளில் கிடந்த துவாயை எடுத்து தலையில் போட்டுக் கொண்டு நடக்கிறார் கதிர்வேல.

கனகபுரம் வீதிக்கு ஏறியதும் சந்தை மைதானத்தை ஏறிட்டு பார்த்த கதிர் வேலுவுக்கு பெரிய ஏமாற்றமாய் இருந்தது. சந்தை மைதானம் மயானம் போல் காட்சி அளித்தது. அறை அறையாகக் கட்டப்பட்ட விற்பனை நிலை யங்கள் எல்லாம் உடைக்கப்பட்டு தரை மட்ட மாய் இருந்தது. கதிர்வேலுலக்கு வெயிலில் வந்த களைப்பு மூச்சு வாங்கியது. தலை சுற்றுவது போலிருந்தது. வீதி ஓரமாக மரத்தின் நிழலை நாடி மெதுவாக உட்கார்ந்து கொண்டார்.

கனகபுரத்தின் நேர்வீதியில் வீதி அமைப்பு வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. வீதியைக் கிளறி கூழாங்கற்க ளைப் பரவி தண்ணீர் வார்த்து, உருளையால் அமுத்தி இயந்திரங்கள் செய்து கொடுக்க தாரைக் காய்ச்சி உருக்கி வார்க்கும் வேலை களை ஆட்கள் செய்து கொண்டிருந்தனர். எப்போ எங்கே போனாலும் மாறிமாறி றோட்டு வேலை தான் நடக்குது. இது முடிவுக்கு வார தென்றால் இன்னும் முப்பது வருஷங்களாவது பிடிக்கும்.

வெளிமாவட்ட மக்கள் இங்கு உல்லாச மாக வந்து போவதற்கு இந்த மாவட்டம் எவ்வளவோ முன்னேற்றம் பெற்றிருக்கிறது. என்பதை வருவோருக்கும் எடுத்துக் காட்டுவதற் கான ஜால வித்தையா? இங்கு வாழும் பழங்குடி மக்கள் பொருட்களின் பல மடங்கு விலைச் சுமையை சுமந்து கொண்டிருக்கிறார்களே என்பதை மூடி மறைக்கவா? காலம் காலமாக வாழ்ந்த வன்னி மக்களின் அவலம் பாதியில் பங்கீடு செய்ய வந்தவருக்குத் தெரியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாதது போல் நடிக்கிறார்களா? இல்லை என்றால் கோயில் நிலம், மக்கள் குடியிருப்பு விவசாயப் பண்ணை இவை எல்லாம் ஏன் பகிஸ் கரிக்கப்படுகின்றன. மக்களின் முன்னேற்றந் தானே நாட்டுக்குச் சிறப்பு. கதிர்வேலரின் இயலாமையின் வேகம் இப்படி முரண்பட்ட எரிச்சல் சிந்தனைகளாக வெடித்தன.

வில் என ஓடிவந்த ஒரு மோட்டார் சைக்கிள் அவர் பக்கத்தில் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு இளைஞன் இறங்கி வந்தான் அவன் சந்தையில் மரக்கறிகடை நடத்தும் சுகுமார் பலகாலமாக வாடிக்கையாளராக இருக் கின்றபடியால் அவன் அவருக்கு பரீட்சிய மானவன் "என்ன ஐயா இஞ்ச உட்கார்ந் திருக்கிறியள்"அவன் கேட்டான்.

"சந்தைக்கு வந்தனான் இந்த வெயிலில வந்தது களையால் கிடக்கு இதில குந்திட்டன் சந்தை மயானம் போல் கிடக்கு ஏன் சந்தை இல்லையே"

"ஏன் உங்களுக்குத் தெரியாதே அஞ்சு நாளைகு முதலே சந்தையை டிப்போ சந்திக்கு மாற்றிப்போட்டினம்".

"எனக்குத் தெரியாது தம்பி எனக்குச் சுகமில்லாமல் ஆஸ்பத்திரியில் இருந்திட்டன். இன்றைக்குத்தான் இந்தப் பக்கம் வாரன். தம்பி சந்தைப் பக்கந்தானே போராய் என்னையும் அதில கொண்டு போய்விடன்" நான் சந்தைக்கு போக சுணங்கும் இடையில் வந்து திரும்பி விடுவன் அதுவரைக்கும் வாருங்கோ கடையில் ஜானகி நிற்பாள் என் சுகுமார் மோட்டார் சைக்கிளை ஸ்டாட் ஆக்கி "ஐயா ஏறுங்கோ" என்றான்.

வழியில் சாராயத்தவறனை உள்ள இடத்திற்கு வந்ததும் நான் நிற்கப் போறன் என்று சைக்கிளை நிறுத்தினான் சுகுமார். கதிர்வேல் இறங்கி சந்தை இயங்கும் டிப்போ சந்தியை நோக்கி நடந்தார். அங்கும் இங்கும் பார்த்து விட்டு சாராய பாருக்குள் நுலைந்தான் சுகுமார். சந்தை புது பொழிவோடு விளங்கினாலும் இட விசாலிப்புப் போதாமையால் சனங்கள் முட்டி மோதிக் கொண்டிருந்தனர். அந்த மாவட்டத்தி ற்கு ஏற்ற பரப்பளவு உள்ளதாக அது அமைய வில்லை. குறுகிய பரப்புக்குள் பெருவாரியான வர்த்தக நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்த போது இடம் பெயர்ந்த போது குறுகிய எல்லைக்குள் லட்சக் கணக்கான மக்கள் அடைக்கப்பட்டிருந்தது கதிர்வேலின் நினைவு க்கு வந்தது. பழம், மரக்கறி, வெற்றிலை, மீன், கருவாடு, தேங்காய், சட்டிபானை, பெட்டி பாய், அல்மினியப் பாத்திரம், பலசரக்கு, மருந்து, உடுப்பு, மணிப்பெட்டி, இறைச்சிவகை போன்ற கடைகள் ஒவ்வொன்றும் சிறு சிறு பகுதி அறைகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தன.

புதுச்சந்தைக்கு ஆரம்பவருகையாக இருந்ததால் தன் வாடிக்கையாளரைக் கண்டு பிடிப்பது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது கதிர்வேலுக்கு. ஒவ்வொரு பகுதியாக நுலைந்து பார்த்தார். முதல் தடவையாக மீன் கடைக்குள் நுலைந்து விட்டார். அப்பப்பா! அந்த வாசனையை அவரால் தாக்குப் பிடிக்க முடிய வில்லை. குமட்டிக் கொண்டு வந்தது. வெளியே ஓடிவந்தார். இப்படிப் பல பகுதிகளுக்கும் நுலைந்து கடைசியாக மரக்கறிக் கடையைக் கண்டு பிடித்தார். "அப்பா" என்ற குரல் கேட்டது நின்று திரும்பிப் பார்த்தார். சிரித்த முகத்தோடு ஜானகி நின்றாள்.

"யார் ஜானகியா?"

"ஓம் அப்பா வாங்கோ கொஞ்ச நாளாய் உங்களை சந்தைப் பக்கம் காண இல்லையே"

"வருத்தமாய் கிடந்திட்டன் பிள்ளை வயது போயிட்டா வாற வருத்தங்களைக் கேட்க வேணுமே"

"நல்லா வாடிப் போயிட்டியள் அப்பா"

கதிர்வேல் உள்ளே போய் ஒரு ஓரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்கார்ந்து கொண்டார்.

"சரி சொல்லுங்கோ அப்பா"

அன்றைக்கு வீட்டு அலுவலாய் வெயிலில உலைஞ்சிட்டன் தலையைச் சுற்றி மயக்கமாய் வந்திட்டுது என்ற மகள் ஒருத்தி ஆட்டோவைப் பிடிச்சுக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில விட்டுப் போட்டாள். அங்க மறிச்சிப் போட்டினம். படம் எடுத்துப் பார்த்தினம் சலம் சோதிச்சுப் பார்த்தினம் ரெத்தம் குத்தி எடுத்தினம் கடைசியா பிரஷர் எண்டிச்சினம். வருத்தம் குறைஞ்சி கிடக்கிற கிழவனின் ரெத்தத்தைக் குத்தி எடுத்தால் எப்படி இருக்கும். எனக்குக் கூடுதலாக மயக்கம் வந்து சோர்ந்து போனேன் பிள்ளை அஞ்சு நாளைக்குப் பிறகு வீட்டுக்குள் வந்தன். அவர்கள் தந்த குளிசைகளைப் போட்டன் எழும்பி நடக்க முடியாமல் போச்சு. மகள் காரி விடஇல்லை. அவள் என்னோடு அதிகளவு பாசம் நான் செத்துப் போனா என்ற பயம் அவளுக்கு. அவன் என்னை வேறு வேறு டாக்கர் மாரிட்டும் கூட்டிப் போனாள் அவர்கள் எல்லாரும் உங்களுக்குப் பிரஷர் இல்லை. பெலக் குறைவு உடம்பு பெலவீனப்பட்டிருக்கு நல்லா ஓய்வு எடுங்கோ என்று சொன்னார்கள்.

வெளி வியாபாரத்தையும் கவனித்துக் கொண்டு கதிர்வேலுவின் பேச்சுக்கும் செவி கொடுத்துக் கொண்டிருந்தாள் ஜானகி.

கதிர்வேல் தொடர்ந்தார். இப்ப அரசாங்க ஆஸ்பத்திரியில இருக்கும் டாக்டர் எல்லாம் இளம் பொடியள். முதுமை வைத்தியம் பால சோதிடம் என்று சொல்லுவார்கள் அனுபவம் பத்தாது. படிக்கச் செலவழித்த பணத்தைச் சம் பாதிக்க வேணும் என்ற ஆசையும் இருக்குந் தானே. ஜானகி குறுக்கிட்டுச் சொன்னாள். "அப்பா நீங்கள் நினைக்கிறமாதிரி இல்லை இது விஞ்ஞான காலம் கொம்பியூட்டர் மூலம் நோயைக் கண்டுபிடித்து வைத்தியம் செய்யினம் உங்களின்ற காலத்தில ஒரு ஆஸ்பத்திரியில ஒருவர் இருவர் டாக்டர்மார் இருந்திருப்பினம் நோயாளிகளும் குறைவாய் இருந்திருப்பினம். இப்ப அப்படி இல்லையே இப்போ ஒவ்வொரு டொக்டரும் எங்களின்ற ஒவ்வொரு உறுப்பை யும் தனித்தனியாகப் படித்து சிறப்புப் பெற்று வந்து வைத்தியம் செய்யினம்" என்றாள் ஜானகி.

"நீ இந்தக் காலத்துப்பிள்ளை பதி னோராம் ஆண்டு படித்த நீ அதால அப்படிச் சொல்லுறாய் என்னைப் பொறுத்தவரை ஒரு டாக்டருக்கு ஆத்ம பலம் இருக்க வேண்டும். ஆத்மா தூய்மை பெற்றால் ஆத்ம பலம் பெருகும். ஆத்மபலம் பெருகினால் இதை சக்தி பரவும் அது நிச்சயம் எந்த நோயாளியையும் குணப்படுத்தும். நீ சொல்கிற விஞ்ஞானமும் நான் சொல்கிற மெஞ்ஞானமும் ஒன்றுதான் அப்போது மெஞ்ஞானி சொன்னதை இப்போது விஞ்ஞானி ஆராய்ந்து செய்கிறான். இரண்டை யும் வேறுபடுத்தி பார்த்தால் உண்மை விளங் காது பிள்ளை.

ஆஸ்பத்திரி மாத்திரமில்ல அரசாங்க அலுவலகங்கள் எல்லாவற்றிலும் அசட்டை யீனம் இருக்கு என்ன செய்ய படித்து விட்டோம். பதவியைத் தாருங்கள் என்று முண்டி அடித்துக் கொண்டு நிற்கிறார்களே எப்படியோ ஒரு சிலருக்கு வேலை கிடைக்குது. நாலு பேர் வேலை செய்ய வேண்டிய இடத்தில் பத்து பேர் நிரப்பப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் பதவிக் கேற்ற அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்படுவ தில்லை. மேலிடத்து ஓடர் வரவேணும் என்பார் கள். காத்திருப்பவன் பல் பிடுங்கப்பட்டவன் மாதிரி ஆ...ஊ...என்று கத்திக் கொண்டு காத்திருக்க வேண்டியதுதான். இதுதான் இன்றைய வெளிப்பாடும் நாட்டு நிலவரமும். சரி அது போகட்டும் எனக்கு இப்ப சூப்பு வைத்துக் குடிக்க மரக்கறி தரவேணும்" என்றார் கதிர்வேல்.

"இறைச்சி எலும்புகள் போட்டல்லோ சூப்பு வைக்கிறவை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயய்யோ அதெல்லாம் வேனாம் அந்தக் கடைப்பக்கம் போகவே குமட்டிக் கொண்டு வருது. மச்சம் மாமிசம் சாப்பிடக் கூடாது பிள்ளை. "ஏன் அப்பா அப்படிச் சொல்லுறியள்? அதைப் பற்றிச் சொல்ல இப்ப நேரமில்லை இன்னொரு நாளைக்குச் சொல்றன்".

மரக்கறி ஓவ்வொன்றிலும் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து ஒரு பைக்குள் போட்டு கதிர்வேல் கையில் கொடுத்தாள் ஜானகி.

**"காசு எவ்வளவு பிள்ளை"**

**"வேண்டாம் அப்பா கொண்டு போங்க. சே..சே...அதெல்லாம் கூடாது"** வேட்டித் தலைப்பில் முடிந்து வைத்திருந்த காசில் நூறு ரூபாயை எடுத்து அவள் கையில் திணித்தார் கதிர்வேல்.

பொழுது மையம் என்பதால் கடைக்கு ஆட்களின் வருகை குறைந்திருந்தது. கதிர்வேல் கிளம்ப ஆயத்தமானார்.

பழக்கடை வைத்திருக்கும் கண்ணன் கடைக்கு வந்தான். திராட்சை அப்பிள் பழங்கள் நிரம்பிய பையை ஜானகியிடம் நீட்டினான். அதை அவசரமாக வாங்கிக் கொண்டு "இப்ப ஏன் வந்தநீங்கள் கெதியாப் போங்கோ" என்று அங்குமிங்கும் பார்த்தபடி அவதிப்பட்டாள் ஜானகி.

"ஏன் ஜானகி இன்றைக்கு இப்படிச் சொல்லுறாய்" ஒன்றும் விளங்காமல் கேட்டான் ஹுஓ கண்ணன். கண்ணா இப்ப போங்க பிறகு சொல்றன் கண்ணன் தன் பழக்கடைப் பக்கம் போனான். அவன் மறையும் வரை பார்த்து நின்று விட்டு கதிர்வேலிடம் வந்தான் ஜானகி. கண்ணனை ஏன் பிள்ளை அவசரப்பட்டுக் களைச்சனி என்ன பிரச்சனை என்று கேட்டார் கதிர்வேல்.

அவருக்கு பக்கத்தில் வந்து தன் நிலையைச் சொல்லத் தொடங்கினாள் ஜானகி.

"எனக்கு அப்பா இல்லை அம்மா மட்டுந்தான். இருக்கிற குடும்பத்தில் நானும் அண்ணாவுந்தான் பிள்ளைகள் உங்களை என் அப்பாவாக எண்ணித்தான் சொல்றன். அதட்டிக் கேட்க ஆண் இல்லாமல் அண்ணா பொறுப்பற்று வளர்ந்திட்டார். முரட்டிக்குணம், முன் கோபக் காரார் அந்த பாமாவின்ற சினேகிதம் கிடைச்சாப் பிறகு கடை...யைச் சரியாகக் கவனிக்கிறதில்ல. பாமா வீட்டில்தான் படுகிடையாய் கிடப்பார். அதாலதான் வந்து நிற்கிறன்.

**"ஆர் பிள்ளை அந்தப் பாமா?"**

என்று இடை மறித்துக் கேட்டார் கதிர் வேல். தனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளைதான் வேணும் என்று கன காலமாய் இருந்தவள் எப்படியோ வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைத்தது. கலியாணம் முடிஞ்சு ஒருமாதம் இருந்துவிட்டு அங்கே போய் அழைக்கிறேன் என்று சொல்லி விட்டுப் போனவன் தான் இன்னும் விசா கிடைக்க இல்லையாம் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த மாதிரி அவனின்ற வாழ்க்கை ஆகிவிட்டது." இன்னும் தான் இந்த சனங்களுக்கு வெளிநாட்டுப் பைத்தியம் போக இல்லை. வெளிநாட்டை சொர்க்க பூமியாக நினைக்கினம். அங்கே அதுகள் படுற பாடு ஆருக்குத் தெரியும். அங்க சுதந்திரம் இல்லாத வாழ்க்கை ஓய்வு இல்லாத உழைப்பு, உலாவித்திரிய முடியாத முடக்கம். இது தான் பிள்ளை வெளிநாட்டு வாழ்க்கையின்ற சுருக்கம். அங்கே ஐம்பது ரூபாய் போட்டால் இங்கே ஐம்பதினாயிரமாய் கிடைக்கிறது. பணத்திற் காகத்தான் இந்த பரதவிப்பு என்றார் கதிர்வேல்.

"கண்ணனும் நானும் படிக்கிற காலத் இருந்தே ஒருவரை ஒருவர் விரும்பிட்டம். அண்ணா அதை எதிர்க்கிறார். நீயும் கண்ணனும் கதைத்து திரிகிறதாய் கேள்விப்பட்டேன். எனி மேல் அவனுக்கும் உனக்கும் எந்தத் தொடர்பும் இருக்கக்கூடாது. எனக்குத் தெரிந்தால் அவனைச் சும்மா விடமாட்டேன் என்ற நண்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்திக்குத்தான் உன்னை ஒழுங்காக்கி இருக்கிறன் என்று அண்ணா நேற்று ஏசினார். அண்ணா ஒரு முரடன் நினைக்கப் பயமாய் இருக்கு. இப்ப குடிக்கவும் பழகியிருக்கிறார். நான் என்னப்பா செய்ய கண்ணனுக்கு ஏதாவது என்றால் நான் உயிரோடு இருக்க மாட்டேன்" மனம் கலங்கி விம்மினாள் ஜானகி.

கண்ணனிலும் ஒரு குற்றமும் இல்லை. உன்னிடமும் ஒரு குற்றமும் இல்லை. பருவத்திற்கேற்ற பருவதாகங்கள் இருக்கத்தான் செய்யும். உன்னோடு பழகின மாதிரி கண்ண னோடும் பழகி வாறன். அவன் குற்றம் குறை இல்லாத பிள்ளை. நீ ஒன்றுக்கும் கவலைப் படாதே அவசரப்படாதே பிள்ளை. நாளைக்கு நான் வந்து உன் அண்ணாவோடு கதைக்கிறன். எல்லாம் சரிவரும். இன்றைக்கு கண்ணன்ற கடைக்குப் போக நேரம் இல்லை. நாளைக்குப் பார்ப்பம் என்று எழுந்தார் கதிர்வேல. உருத்திர புரம் பஸ் எப்ப வரும் அதில போனால் திருநகரில் இறங்கி விடுவன் என்று எண்ணியபடி துவாய்த் துண்டை உதறி தலையில் போட்டுக் கொண்டு வீதியில் இறங்கி நடந்தார். கதிர்வேல் இரவு நீண்ட நேரமாக கண்ணன் ஜானகி பற்றிய நினைவுதான் கதிர்வேலருக்குத் தொல்லை கொடுத்தது. கண்ணனுக்கு ஏதாவது நடந்தால் நான் உயிரோடு இருக்க மாட்டேன் என்று ஜானகி சொன்னாளே அது அவள் ஆத்ம வைராக்கியத்தை அல்லவா எடுத்துக் காட்டுகி றது. உன் உணர்வுகள் ஒன்றோடு ஒன்று ஐக்கிய மாகும் போதுதான் உண்மைக் காதல் பிறக்கிறது. அங்கே உடம்பு விலகி நிற்கிறது. ஆயினும் மன அலட்சியால் ஏற்படுகிற ஒரு பலவீனம்.. பருவத்தில் தோன்றுகின்ற இன ஈர்ப்பு. இது இளம் வயதினரை பலமாகப்பற்றிக் கொள்வதால் அது நிறைவேறாத பட்சத்தில் எத்தனையோ பேர் தற்கொலைக்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள். மது சிகரட் பாவிப்பவன் இலகுவில் அதை மறக்க முடியாமல் தவிப்பதைப் போன்ற மனச்சுமை. அதை உள்நுலைந்து உற்று உணர்ந்து பார்த்தால் சர்வ சாதாரணமாகத் தோன்றும்.

பல வருடங்களாக கண்ணன் ஜானகி இருவரோடும் மிக நெருக்கமாகப் பழகியவர் கதிர்வேல். பல உதாரணங்களை எடுத்துச் சொல்லிச் சுகுமாரை எப்படியும் தன் வழிக்குக் கொண்டு வரமுடியும் என அவர் முழுமையாக நம்பினார்.

அதிகாலை சுகுமார்தான் கடைக்கு வந்து காய்கறிகளை கொள்முதல் செய்வான். அதன் பின் தான் ஜானகி வருவாள் அதற்குள் போய் ஒரு இணக்கப்பாட்டை சுகுமாரோடு கதைத்து கொண்டுவரலாம் எனவும் எண்ணினார். பொழுது விடிந்ததும் தான் நினைத்துக் கொண்ட படி பஸ் ஏறி சந்தைக்கு வந்தார். ஜானகியின் மரக்கறி கடை மூடப்பட்டிருந்தது. கண்ணனின் பழக்கடைக்குப் போனார். அதுவும் திறக்கப்பட வில்லை. கொஞ்ச நேரம் இரண்டு கடைகளுக் கும் மாறி மாறி நடந்தார். பழக்கடைக்குப் பக்கத் துக் கடைக்காரன், ஆரைத் தேடுறியள் என்று கேட்டான்.

**"கண்ணன் வர இல்லையா தம்பி"**

**"உங்களுக்கு விடயம் தெரியாதா?**

நேற்று மாலை சுகுமார் வெளியில் வந்து கண்ணனோடு வாக்கு வாதப்பட்டு அடிபட்ட இடத்தில் கண்ணன் செத்துப் போனான்" என்றான் அவன். ஐயோ இறவைா என்று தலை யில் கையை வைத்த கதிர்வேல் ஜானகியின் மரக்கறிகடைக்கு வந்தார். அங்கும் அவருக்குக் கிடைத்த செய்தி ஜானகி நச்சு மருந்து குடித்துச் செத்துப் போனாள். கொஞ்ச நேரம் அசையாமல் அப்படியே நின்றார் கதிர்வேல். நிமிடங்கள் கழிந்தன தன்னை சுதாகரித்துக் கொண்டு மெல்ல மெல்ல வீதிக்கு வருகிறார். மறைந்தும் மறையாத கவிஞர் ஒருவரின் பாடல் வரிகள் நெஞ்சில் வந்து மோதுகின்றன. வாழ்க்கை என்பது வியாபாரம் அதில் ஜனனம் என்பது வரவாகும். மரணம் என்பது செலவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# வண்ணமலர் வாரி அணைத்து

இரா.தணி

கனடாவில் அது சமர்காலம். படிப்பு முடிந்து விட்டது. கோடைகால விடுமுறையும் வந்து அ.கோகிலன் கனடாவந்து ஏழுவருடங்கள் பாய்ந்துவிட்டது. எப்படியென வியந்தவன் தனது இனிய ளுநநஉழில களுக்கு ஈ மெயில்களைத் தயாரித்து அனுப்பினான். அவனின் நண்பர்கள் பல புலம் பெயர் நாடுகளில் இருந்தனர். தனது மனதில் உள்ள ஆசைகள் தன் படிப்பு பொழுது போக்கு இப்படியே ஈமெயிலில் இருந்தது. இனி ஒரு வேலையையும் பெற்றுவிட்டால் மனதில் நின்மதி. ஆனால் வேலையுடன் மேன்மேலும் கம்பியூட்டரில் படிப்பில் உயரவேண்டும். தாய் நாட்டுடன் புகுந்த நாட்டுக்கும் விசுவாசமாக வாழவேண்டும் என எண்ணினான். அந்த இளம் வயதில் இந்த எண்ணம் ஊற்றெடுப்பதற்குக் காரண கர்த்தாவாக இருந்தவர் கதாசிரியரே. அவரும் ஸ்ரீலங்காதான். ஒரு மாதாந்த சஞ்சிகையின் பிரதம ஆசிரியர். அவரின் உள்ளத்தில் வெளிப்படும் கருத்துக்கள் தத்துவங் கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததாக இருப்பதை உணர்ந்தான்.

எதிர்பாராதவிதமாக சஞ்சிகை ஆசிரியர் இளங்கோவனை புகையிரதத்துள் ஏழுவருடம் ஆரம்பத்தில் சந்திக்க நேர்ந்தது. படிப்படியாக தொடர்புகள் சங்கிலித்தொடர்போல் நீண்டது. பாசம், பற்றுக்கள் ஏற்பட்டது. இளங்கோவனின் மனைவியும் அந்த அம்மாவின் உபசரணையும் காந்தம்போல் இழுக்க அவர்கள் வீட்டிலேயே கோகிலன் குடியேறிப்படிப்பைத் தொடர்ந்தான். அப்பா அம்மாவின் பாசத்தைக்கண்டான். வீட்டில் ஊர்ச்சாப்பாட்டைக் கண்டான். படிப்பை வசதி யாக மேற்கொண்டான். கனடாவில் மற்றைய மக்களிலும் பார்க்க உயர்ந்த மானிட நேயம், அறிவு, ஆற்றல் இந்தவயதிலும் அன்னியோன் னியமான ஒற்றுமையான குடும்பம் இருப்பதைக் கண்டான். பென்சனில் இருந்தாலும் தனிக் குடும்பம், உழைப்பு என்பன அவர்களை அலங் கரித்தது. இளங்கோவனும் அவர் மனைவியும் தமது சஞ்சிகையைப் பற்றிக் கதைக்கும் போது சூடான விவாதங்கள் ஏற்படுவதுண்டு கோகிலன் பயந்தே விடுவான். விவாதம் முடிந்ததும் அவர்கள் அன்னியோன்யமாகி விடுவார்கள். இது கோகிலனை மிகவும் கவர்ந்தது. நாளடை வில் கோகிலன் இவைகளைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டான். இளங்கோவன் குடும் பத்தினருக்கு ஒரே ஒரு மகன். இரண்டு பேரப் பிள்ளைகள். ஒன்று பெண், மற்றையது ஆண். மகளும், மருமகனும் படித்து நல்ல வேலை செய்கிறார்கள். கிழமைக்கு ஒரு நாள் வந்து போவார்கள். சந்தோசமான குடும்பம்.

இளங்கோவன் எழுதிக் கொண்டே இருப்பார். அவர் மனைவி விஜயா வாசித்துத் திருத்திக் கொண்டே இருப்பார். சிறுகதைகள், தொடர் கதைகள், நாடகங்கள் இப்படியே தொடரும். கதைகளின் முடிவுகளால் தான் அவர் களுக்கு விவாதம் ஏற்படும் என்பதை கோகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்து கொள்வான். இது நாளடைவில் அவனுக்குச் சாதாரண விடயமாகி விட்டது. மாதாமாதம் வெளிவரும் இதழ்களை வாசித்து வியந்தான். இவர்களைப் பற்றி தனது புலம் பெயர் நாடுகளில் இருக்கும் நண்பர்களுக்கு ஈமெயில் செய்து வந்தான். இதனால் கனடா வைச் சுற்றி வந்த இளங்கோவனின் மத இதழ் வெளிநாடுகளுக்கும் பரவத் தொடங்கிய போது இளங்கோவனின் மாத இதழ் புதுப்பொலிவு பெற்றது.

அன்று ஞாயிற்றுக் கிழமை எல்லோரும் ஓய்வாக இருந்தனர். விஜயா அன்ரி குசினியுள் சமையலைக் கவனித்துக் கொண்டிருக்க இளங் கோவன் செந்தாமரை வாரப்பத்திரிகையை வாசித்துக் கொண்டிருந்தார். படிப்பு முடிந்த படியால் கோகிலன் வேலை தேடும் முயற்சியில் இறங்கியவன் அலைந்தே சோர்ந்து விட்டவனு க்கு மனதில் ஒரு ஐடியாவுடன் தன் அறையில் இருந்து வெளியே வந்து இளங்கோவனின் முன் உள்ள செற்றியில் அமர்ந்தான். செந்தாமரை வார மலரை மடித்து வைத்த இளங்கோவன் கோகிலனை நோக்கினார். மெல்லவும் முடியா மல் கக்கவும் முடியாமல் இருக்கும் இளங் கோவனை, ஆழ்ந்து நோக்கியவர் என்ன? மனம் சொல்லத் துடிக்கிது. வாய் திறக்க மறுக்கிறது. இது எனக்குப் பிடிக்காத விடயம் என்றார். அப்போதும் கோகிலன் மௌனியாக இருந்தான். நேர காலம் வரும் போது கோகிலன் சொல்வான் தானே என்றான். குசினியுள் இருந்த விஜயா அன்ரி அப்படியா என்றவர் பேப்பரைக் கையில் எடுக்க கோகிலன் அங்கிள் என்றான். என்ன கோகிலா என்றார் இளங்கோவன். அதில் அன்பு கலந்து இருந்தது.

அங்கிள் படிப்பை முடித்தாலும் வேலை கிடைக்குதில்லை. நீங்கள் ஏதாவது உதவி செய்ய முடியுமா? உங்களுக்கு பல ஆட்களைத் தெரியும். உங்கள் மாத இதழுக்கு விளம்பர மெல்லாம் போடுகிறீர்கள் பேச்சை ஆரம்பித் தான். உண்மைதான். நீயும் எனக்கு என் மாத இதழ்பற்றிப் பல நாடுகளுக்கு ஈமெயில் அனுப்பி இருக்கிறாய். நன்றாக விலை போகின்றது. கட்டாயம் உனக்கு நானும் உதவத்தானே வேண்டும் என்றவர், உன் கம்பியூட்டர் படிப்பு அதன் பெறுமதி எனக்குத் தெரியும். வேலை செய்ய "எக்ஸ்பீரியன்ஸ்" கேட்பார்கள். எது உன்னிடம் இல்லை. உண்மைதான் அங்கிள் என்றான். அதை என்னால் கொடுக்க முடியும் என்றவர் எனது மாத இதழின் மூலம் நீ அந்த அனுபவத் தைப் பெற முடியும். உனக்குச் சம்மத மானால் சில காலம் என்னுடன் வேலை செய்யலாம் என்றார். மறு பேச்சுக்கு இடமில்லாமல் சரி என்றான்.

தற்போது என் நண்பனின் மகள் தான் மலருக்கு உரிய ரைப் செற்றிங், கிறாபிக் எல்லாம் செய்து பீடிஎப் பைலாகத் தயாரித்து சீடியில் தர நான் அச்சகத்தில் புத்தகமாக அடித்து வெளியீடு செய்கின்றேன் என்றார். நீரும் அவளும் சேர்ந்து இதைச் செய்தால் உனக்கும் அனுபவம் ஏற்படும். நானும் எனது வெளியீடுக ளைப் பிரசுரிக்க இலகுவாக இருக்கும் என்றார். நான் எதற்கும் தயார் என்றான் கோகிலன். மறுநாள் அவர்கள் வீட்டின் ஒரு பகுதி ஆபீ சானது. வேலைகள் சூடு பிடிக்கத் தொடங்கி யது. மூன்று கம்பியூட்டர்கள், பிறிண்டர், போட்டோ கொப்பி, Seecopy இப்படியே முக்கிய சாமான் கள் தேவைக்கேற்ப அமைக்கப்பட்டன. ஒரு அறை மேல்மாடியில் நண்பனின் மகள் கோமதிக்கும், ஏற்கனவே மேல்மாடியில் உள்ள கோகிலனின் அறை அவனுக்குமாக அமைக் கப்பட்டது. ஆனால் கோகுலன் வீட்டுக்கு ஒரு பெண் வேலைக்கு வந்தபடியால் தன்னறையி லேயே உட்கார்ந்து சில வேலைகளைச் செய்ய முடியாமல் திணறினான். பக்கங்கள் எப்படி அமைப்பது? எந்தப் பொன்டைப் பாவிப்பது தெரியாமல் கீழ் வீட்டு இளங்கோவனிடம் முறை யிட்டான். மனதுள் சிரித்துக் கொண்ட இளங் கோவன். டெலிபோனை எடுத்து மேலறையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த கோமதியை அழைத்தார். கோமதியும் ஒய்யாரமாக இறங்கிவந்து இளங்கோவன் முன் நின்றாள். அப்போதுதான் முதன் முதலாக கோமதியைப் பார்த்த கோகிலன் ஒரு கணம் தன்னையே மறந்தான். இதே நிலைதான் கோமதிக்கும்.

மௌனத்தைக் கலைத்த இளங்கோவன், கோமதி இது கனடா யாருக்கும் யாருக்கும் பயமில்லை. நீங்கள் இருவரும் சேர்ந்து தான் நாம் வெளியிடும் மாத இதழை பொலிவடைய வைக்க வேண்டும். உங்கள் திறமையை இருவரும் சேர்ந்து காட்டுங்கள். உங்களுக்குரிய ஊதியம் தாராளமாக வழங்கப்படும் என்றார். சுய நினைவுக்கு வந்த இளசுகள் சரியெனத் தலையை மட்டும் அசைத்தனர். கோகிலனுக்கு வேலையே செய்ய முடியவில்லை. இப்படி அழகான பெண்ணுடன் சேர்ந்து வேலை செய்யப் போகின்றேன். இது தனக்குக் கிடைத்த ஒரு கொடை. வாழ் நாளெல்லாம் இவளுடன் சேர்ந்து வேலை செய்யலாம். வேறு வேலை தனக்கு வேண்டவே வேண்டாம் என மனதுள் எண்ணினான். அவனின் மனம் ஆனந்தக் கூத்தாடியது. ஆனால் கால ஓட்டத்தில் ஒரு பிரளயம் வரப் போவதை அவன் உணரவில்லை. மாதங்கள் ஆறு எப்படிக் கழிந்தது என்பது கோகிலனுக்கும் தெரியாது. கோமதிக்கும் தெரியாது. இரண்டு இளம் உள்ளங்களும் அன்பால் கட்டுண்டன. தம் உணர்வுகளைக் காதல் கவிதையாகவும் இளங்கோவனின் மாத இதழில் வடித்தார்கள். இரண்டு இளம் உள்ளங்களும் மனதளவில் இணைந்தன. உள்ளத்தை வெளிப்படுத்த அந்த இளம் சிட்டுக்கள் துணிவு இல்லாமல் தம்முள் துன்பப்பட்டன. காதல் வந்தால் கவிதை பிறக்கும். கற்பனைக் கதை பிறக்கும் என்ற உண்மையை தத்தம் மனத்தளவில் எண்ணிக் கொண்டனர். ஒவ்வொரு மலரிலும் அவர்களின் கவிதைகள் வரும். புனை பெயரில் தான். இளங்கோவன் கவிதைகளைப் பார்த்து இரண்டு கவிஞர்கள் எமது மலரில் எழுதுகிறார்களே அவர்கள் யாரென்று தெரியவில்லை பாராட்ட வேண்டும் என்றார். உடனே கோமதி ஈமெயிலில் வந்தது என்று சொல்ல, கோகிலனும் ஆமாம் என்று கூறினான். இளங்கோவன் கேள்விக்குறியுடன் அந்த இரு இளம் சிட்டுக்களயும் பார்த்து விட்டு மனதுள் சிரித்துக் கொண்டார்.

கோமதியின் அறையுள் கோகிலன் வந்தவன் என் வேலைகளெல்லாம் முடிந்து விட்டது. உன் பாடு எப்படி என்றவன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். இந்த மாத மலர் உலகமெல்லாம் ஒளி பரப்பி வலம் வரப்போகிறது. புது எழுத்தாளர்கள், நல்ல கருத்துக்கள் கொண்டுள்ள எமது மாத மலரைப் பாராட்டி ஈமெயில்கள் வந்துள்ளன. இது இந்த மலருக்கு மெருகூட்டும் எமது பிரதம ஆசிரியர் இளங்கோவனின் சிந்தனையில் உருவாகும் நல்ல கருத்துக்கள். கதைகளெல்லாம் மக்களைக் கவர்கின்றன. என்றவள் எமது ஆசிரியர் உண்மையில் ஏ, வண் தான் என்றாள். அது சரி உங்களுடன் சில விடயங்கள் கதைக்க வேண்டும் என்றாள். கதைக்கலாமே என்றான். கோகிலன் யோசித்த கோகிலாவின் முகம் நிமிர்ந்து அவனைப் பார்த்து வீட்டில் அப்பா உனக்குத் திருமணம் பேசுகிறார். போட்டோவை என்னிடம் நீட்டினார். நான் வாங்கவில்லை. இப்ப அவசரம் இல்லை என்று கூறிவிட்டேன். அதற்குக் காரணம் நிறைய உள்ளது. நான் ஒருவரை மனமார விரும்புகின்றேன் அவரும் என்னை விரும்புகின்றார் என்றாள். இந்த சொற்கள் கோகிலனுக்குத் தலையில் சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. இதைத் தாங்கிக் கொள்ள முடியாத அவன் உனக்கு என் வாழ்த்துக்கள் என்று கூறியபடி அவரின் அறையை விட்டு வெளியேறித் தள்ளாடிய நடையுடன் தன் அறையை நோக்கி நடந்தான். இது கோமதிக்குப் புரிந்தது. தன்னுள் சிரித்துக் கொண்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போன வேகத்தில் கம்பியூட்டரை இயக்கியவன்**

**பொன் வண்டொன்று கண்டேன்**
**பெருமை கொண்டிருந்தேன்**
**வாரியணைப்பாள் என எண்ண**
**வாரி விட்டாள் என் காலை**

**என்னத்தை சொல்ல**
**ஏங்குகிறேன் மனதில்**
**ஏமாற்றம் தான் வாழ்வோ?**
**எப்படி வாழ்வேன் அவனியில்**

மேலும் அவனால் கவிதை வரிகளை டைப் அடிக்க முடியாமல் கீபோட்டில் தலையை வைத்துக் கண்ணீர் வடித்தான். அவன் அறையுள் பூனை போல் வந்த கோமதி டைப் செய்யப்பட்டு இடையே நிறுத்தப்பட்ட கோகுலனின் கவிதை யைப் பார்த்தவள் அவனின் தோளில் மென் கரத்தை மெதுவாக வைத்தாள். திடுக்கிட்ட அவன் நிமிர்ந்த போது கோமதி அவனைத் தன் கரங்களால் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தம் கொடுத்தவள் என் காதலன் நீதான் கோகிலா என்றபடி அவனின் கண்ணீரைத் துடைத்துவிட்டு ஆண் அழக்கூடாது. நீ என்னை விட்டு ஓட முடியாது. உன்னை எப்போதோ புரிந்து கொண்டேன். எது வந்தாலும் உனக்கு நான் எனக்கு நீ என்றாள். கோகுலன் அவளை அப்படியே வாரியணைத்தான். அங்கே கோப்பி யுடன் வந்த விஜயா அன்ரி, இது ஆண்டவன் போட்ட முடிச்சு. கோப்பியைக் குடியுங்கள். ஆனால் முடியாத இந்தக் கவிதையை முடித்து இந்த மாத மலருக்கு போடுங்கள் என்றவள் தன் கணவனின் அறையை நோக்கி நடந்தாள். அதில் ஒரு கம்பீரம் இருப்பதை அந்த இரு இளசுகளும் கண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# எதிர்பார்ப்பு

விவேகானந்தனூர் சதீஸ்

அம்மா...! அம்மா....! என அழுது கொண்டு தாயிடம் வந்தாள் சர்மி. சமையலில் மூழ்கியிருந்த தாய் காயத்திரி மகளை நோக்கி "என்னம்மா...என்ன?" குசினியில் இருந்து வெளியே வந்தாள். "பாருங்கோம்மா... இவா எனக்கு விளையாட்டு சாமான்கள் தராவாம்... என்னட்ட விளையாட்டு சாமான்கள் இருக்கேக்க மட்டும் வாங்கி வாங்கி விளையாடுவர்! என சினுங்கினாள். பக்கத்து வீட்டு வாணியும், சர்மியும் ஒன்றாகப் படிப்பவர்கள். பாடசாலை விடுமுறை தினங்களில் சேர்ந்து விளையாடுவது வழக்கம். ஏனைய நாட்களில் டியூசன். அது இது என்று விளையாடுவதற்கு அதிக நேரம் கிடைப்ப தில்லை. வாணியின் தந்தை கிளிநொச்சிக் கச்சேரியில் சாரதியாக வேலை செய்கிறார். வாணி அவர்களுக்கு ஒரே பிள்ளை என்ற படியால் செல்லமாகவே வளர்ந்தாள். காயத்திரி மகளை சமாளிக்கும் பொருட்டு "சரியம்மா சண்டை பிடிக்காம விளையாடுங்கோ... நான் வாணியிட்ட சொல்லுறன் பிள்ளைக்கு விளை யாட்டு சாமான் தரச்சொல்லி" என்று சமாளிக்க முயல்கையில்... மகளின் சினுக்கம் அழுகை யாக உருவெடுத்து விம்மல் வரை வந்துவிட்டது. "என்ர அப்பா எங்களோட இருந்தா எல்லா விளையாட்டு சாமானும் வாங்கித் தருவார். தானே அம்மா...?" என விம்மி, விம்மி கேள்வி களை தொடுத்தாள். காயத்திரிக்கு உலகமே ஒரு முறை இருண்டு தலை சுற்றுவது போல் இருந்தது. இருந்தும் பிள்ளைக்கு காட்டிக் கொள்ளாது சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு மகளை ஆற்றுப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக இறங்கினாள்.

"பிள்ளேண்ட அப்பா கிட்டடியில வரு வாரம்மா... என்ர செல்லம் அழாதையடி.... பிள்ளைக்கு தாத்தாட்டச் சொல்லி விளை யாட்டுச் சாமான் வாங்கித் தரலாம்." கரைத்து வைத்திருந்த தேசியத் தன்னிய கொடுத்து பெற்றவள் ஒரு மாதிரி சமாளித்து விட்டாள். ஆனால் காயத்திரியை சமாளிப்பது யார்? அதனை தொடர்ந்து வந்த நிமிடங்களை அவளாள் இலகுவில் கடத்த முடியவில்லை. சுவரில் அடிபட்ட பந்தைப்போல் திரும்பத் திரும்ப நினைவுகள் முட்டி மோதின. காயத்திரி மூன்று சகோதரர்களுடன் கூடிய ஒரு நடுத்தர குடும்பத்தை சேர்ந்தவள். வீட்டில் செல்லப் பிள்ளையும் அவளே. வறுமையின் வடிவம் தெரியாத அளவிற்கு அவளது தந்தை குடும்ப சக்கரத்தை சுழற்றி வந்தார். இப்படி வளர்ந்த காயத்திரி குறிப்பிடும் அளவிற்கு கெட்டிக் காரியாகவும், தந்தையின் மளிகைக் கடை வியாபாரத்திற்கு பக்க பலமாகவும் இருந்தாள். இப்படியிருக்கையில் மேலதிக கல்வி கற்கும் பொருட்டு வவுனியாவில் அவர்களது உறவுக் கார வீட்டில் தங்கி இருந்து கல்வி கற்ற அதே சமயம் அவர்களது முகவர் தபால் நிலையத்தி லும் பகுதி நேரமாக பணிபுரிந்தாள். அவளது படிப்பிற்கான செலவின் சிறு பகுதியை இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தின் மூலம் ஈடு செய்து கொண்டாள். தன்னுடன் பணிபுரிந்த ரமேஷின் குணங்குறிகள் பிடித்துப் போக இருவரும் சாதாரண நண்பர்க ளாக பழகினார்கள். வருவக் கோளாறு காயத்திரியையும் விட்டு வைக்கவில்லை. காலப்போக்கில் இருவரின் நட்பும் காதலாக மாறியது. அனேகமாக காதலர்க்கு சவாலாக இருக்கும் "பெற்றோர் சம்மதம்" இவர்களுக்கும் சிவப்புக் கொடியாகவே காட்டப்பட்டது. இரு குடும்பத்தின் மீதும் இருவரும் வைத்துள்ள நம்பிக்கையால்... காதல்... திருமணம் வரை சென்றது. சொற்ப காலத்தில் இரு தரப்பு ஆதரவும் கிடைத்து...இருவரும் கிளிநொச்சி யில் தனிக்குடித்தனம் புகுந்து வளமாகவும், நலமாகவும் வாழ்ந்து வந்தனர். அதற்குச் சான்றாக பிறந்தவள் தான் சர்மி.

காயத்திரியை கரம் பிடித்த அதிஷ்டம் மும், ரமேஷின் கடின உழைப்பினாலும் குடும்பம் குதூகலமாக இருந்தாலும்... "வீட்டிற்கு வீடு வாசற்படி" என்பது போல் மாமியார் நாத்தனார் மனக்கசப்பும் இடையிடையே வரத்தவற வில்லை. ரமேஷிற்கும் அரச துறையில் வேலை கிடைத்து மேலும் ஒரு படி உயர்வாகவே காயத்திரியையும், பிள்ளையையும் பார்த்து வந்தான். யார் கண் பட்டதோ! தெரியவில்லை. அழகிய குருவிக் கூட்டிற்கு ஆபத்தொன்று வந்தது. அலுவலகப் பணியாக ரமேஸ் கொழும்பு செல்ல வேண்டி இருந்தது. மதியம் வீட்டிற்கு வந்து சாப்பாடும் எடுத்துக் கொண்டு...செல்ல மகளை கொஞ்சி, கட்டித் தழுவி அன்புத் துணைக்கு பல தடைவ கவனம் சொல்லிச் சென்றான். மாலை மங்கி மணி ஐந்தை தாண்டி சூரியனும் மறைந்துகொண்டிருந்தான். சில வேளை சூரியனு தெரிந்துவிட்டதோ... என்னவோ! காயத்திரியின் சிரிப்பு காணாமல் போகப்போகுதென்று. காயத்திரி வீட்டு முற்றத்தில் மூன்றே வயதான செல்ல மகளுடன் மழலைமொழி பேசி சிரித்துக்கொண்டிருந்தாள் கேற்றடியில் மோர் சைக்கிலொன்று வந்து நின்றது. "யாரது...?" வலது கை ஊன்றி மகளை தூக்கிக்கொண்டு படலையை நோக்கினாள் காயத்திரி. ரமேஸ் உடன் வேலை செய்யும் பிரசன்னா...."வாங்கோ அண்ண" அருகிலிருந்த பிளாஸ்டிக் கதிரையை எடுக்க முயல கையில்..."இல்லை வேண்டாமக்கா நான் அவசரமாய் போகோணும்....ம்..ம்ம். என்று தயங்கித் தயங்கி "அக்கா...வவுனியாவில வச்சு ரமேசை பொலிஸ் பிடிச்சு போட்டுதாம்... அவற்றை வாகனத்தில் எதோ வெடிபொருள் இருக்கிறதா மெசேச் கிடச்சதாம்..எங்கட ஒபிசிற்கு பொலிசில இருந்து கோல் பண்ணி சொன்னவங்கள்". பிரசன்னா சொல்லி முடிப்பதற்குள்... என்ர ஐயோ...! நான் என்ன செய்யப் போறன்? என கத்திக் குழறினாள் காயத்திரி. கையிலிருந்த சின்னதும் எதுவுமறியாது தாய் அழுவதைப் பார்த்து தானும் அழுதது. யாரிடம் போவது? என்ன செய்வது என்று ஒன்றுமே புரியாது திகைத்து நின்றாள். அக்கம் பக்கத்தில் அனைவரும் ஓடிவந்து ஆயிரம் ஆறுதல் சொல்லியும் ஆறவில்லை அவளது மனது மட்டும். அன்றைய இரவு மிக நீண்ட இரவாகவே காயத்திரிக்கு இருந்தது. விடிந்தும் விடியாததுமாய் முக்கிய ஆவணங் களை எடுத்துக்கொண்டு கணவன் வேலை செய்த அலுவலகம் நோக்கி விரைந்தாள். அங்கு மேலதிகாரியினால் வழங்கப்பட்ட பணி உறுதிப் படுத்தல் கடிதத்துடன் "விடுதலைப் புலிகளின் பாஸ் ஒபிசிற்கு" சென்று மேலாளரிடம் கடிதத்தை கொடுத்து விபரம் சொன்னாள் காயத்திரி. கடிதத்தைப் பார்த்த மேலாளர்.. "அக்கா! இதற்கு பொறுப்பாளர் தான் வரோனும். நான் முடிவெடுக்கேலாது. இன்னும் ஒரு மணித்தியாலத்தில வந்திடுவார். விசேட சந்திப் பொன்றுக்கு போயிருக்கிறார்" என்று கூறினார் மேலாளர். "ச்சீ இவங்களுக்கெங்க என்ர அவதியும் அவசரமும் புரியப் போகுது" என மனதிற்குள் சபித்துக்கொண்டு சின்னவளை கையிலேந்தியபடி காத்திருந்தாள். பார்த்து, பார்த்து பார்த்த கண்ணும் பூத்துவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளரை காணேல்ல. "என்னடா கடவுள் இப்படி சோதிக்கிறார்...அந்த மனுசன என்ன செய்யிறாங் களோ...அடிக்கிறாங்களோ..." என பலவாறு யோசித்தபடி இருக்க... மாலை மூன்று மணியளவில் பச்சை நிற பிக்கப் வாகனத்திலிருந்து வோக்கியுடன் ஒருவர் இறங்கி வந்தார்.

அவரை ஆவலுடன் பார்த்து எழுந்து நின்றாள் காயத்திரி! வந்தவர் அவரின் பிரத்தியேக அறையாக இருக்க வேணும்... அதற்குள் சென்றார். உடனே மேலாளர் அவ்வறைக்குள் சென்றார். மேலாளருக்கு அவசரம் புரிந்திருக்கும் போல. அங்கு நின்ற ஒரு பெடியன் காயத்திரியிடம் வந்து... "அக்கா! உங்கள பொறுப்பாளர் வரட்டாம்". அவசரமாக ஓடிச் சென்றாள் காயத்திரி. "வணக்கம் தங்கச்சி" முன்பாக இருந்த கதிரையை காட்டி "இருங்கோ" என்றார். "இருக்காட்டால் பரவாயில்ல பயன அனுமதி கிடச்சா காணும்" என மனதிற்குள் நினைத்தவாறு... "பரவாயில்லை நான் நிற்கிறன் அண்ணா". கடிதத்தைப் பார்த்து சில குறிப்புக்களை எழுதிய பொறுப்பாளர்... "தங்கச்சி குறை நினைக்காம ஒரு அரை மணித்தியாலம் இருங்கோ நான் ஒருக்கா கிளியர் பண்ணிப் போட்டு சொல்லுறன்". சரியென்று கைபையில் இருந்த பிஸ்கட்டை பிள்ளையின் கையில் கொடுத்து விட்டு... அங்கு வைக்கப்பட்டிருந்த தண்ணியில ஒரு முடர் குடித்து தொண்டையை ஈரப்படுத்தி விட்டு காத்திருந்தாள் காயத்திரி. அங்கு வேறு சிலரும் பல தேவைகள் நிமித்தம் காத்திருந் தனர். மாலை நான்கு மணியிருக்கும் பொறுப்பாளர் அழைத்து "தங்கச்சி பாஸ் தரலாம் ஒரு ஆள் பிணை வைக்க வேனும்". காயத்திரி இதை எதிர்பார்த்தே தயாராக வந்திருந்தாள். ஏனென்றால் பிடிமானம் இல்லாமல் என்ன அவசரம் எண்டாலும் யாருக்கும் அனுமதி கொடுக்கமாட்டார்கள். "ஓம் அண்ண பிணைக்கு மாமி நிக்கிறா குடும்ப அட்டை எல்லாம் கொண்டு வந்திருக்கிறம்". பதிவுகளின் பின் பாஸ் வழங்கப்பட்டது. இனி நாளைக்குத் தான் தடை முகாம் கடந்து வவுனியா போக முடியும். மனதிற்குள் எண்ணிக்கொண்டு... ஆறு மணிக்கு தாயும் பிள்ளையும் வீடு வந்து சேர்ந்தனர். சாப்பிடவும் மனசில்ல நித்திரையும் வரேல்ல முன்னைய அரவைப் போலவே இன்றைய இரவும் கழிந்தது. மறுநாள் காலை ஐந்து மணிக்கு போக்குவரத்துக் கழக பேரூந்தில் தடைமுகாம் தாண்டி வவுனியா பொலிஸ் நிலையம் சென்று கணவரைப் பார்க்க கேட்ட போது.. பல கோணத்தில் விசாரணைகள் துருவித் துருவி கேட்டதன் பின்பே அனுமதிக்கப் பட்டது. கம்பிக் கூண்டுக்குள் கணவனைக் கண்டதும் கதறி அழுவதைத் தவிர வேறெந்த வார்த்தையும் இருவரின் வாயிலிருந்தும் வரவில்லை. அதற்கிடையில் அவ்விடத்தில் நின்ற பொலிஸ் காரனொருவன் "ஏய் கொட்டி பொம்புள பெரிய தொர இறுக்கிறது சத்தம் வேணாம்" "இவங்களுக்கெங்க தெரியும் என்ர வேதனை" என எண்ணிக் கொண்டு சென்ற உடுப்பையும், சாப்பாட்டையும் பொலிசிடம் கொடுத்தாள் காயத்திரி. கவனமாக பரிசோதித்த பின் அந்த சோற்றில் கொஞ்சத்தை அவளையும், பிள்ளையையும் சாப்பிடச் சொன்னார்கள்.

"என்ர மனுசனுக்கு நான் என்னத்த போட்டு குடுக்கப் போறன்...? அவங்கட கடமை யைச் செய்யிறாங்களாக்கும்". அதன் பின் சாப் பாடு ரமேஷிற்கு கொடுக்கப்பட்டது. இப்படியே அன்று முதல் ஐ.சி.ஆர்.சி, மனித உரிமை நிறுவனம், சட்டத்தரணி என அலைந்து பின் 4ம் மாடி வரை செல்ல நேரிட்டது. எப்படியும் கணவரை மீட்கலாம் என்ற நம்பிக்கையில் கோர்ட், கேஸ் என நான்கு வருடங்களாக அலைந்து கடைசியில் நீதிமன்றத்தால் ரமேஷிற்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டது. காயத்திரி வாழ்க்கையில் அடுத்த பேரிடி விழுந்த அந்த நாளை அவள் என்றும் மறக்கப்போவ தில்லை. சொல்வார்கள் "கடவுள் துன்பத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும்போது அதை தாங்கும் சக்தியையும் சேர்த்தே தருவான்" என்று அது முற்றிலும் உண்மை என்பதை வரலாறு காயத்திரிக்கு புரிய வைத்தது.

அடுத்த படியாக ரமேஷிற்கு வழங்கப்பட்ட தீர்ப்பினை மேன்முறையீடு செய்தாள் காயத்திரி அடிமேல் "அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்ற கூற்றுக்கிணங்க தொடர்ந்து போராடுகி றாள். தன் கணவனை மீட்க. ரமேஷ் கொழும்புச் சிறையில் கடந்து ஐந்து வருடங்களாக ஆயுள் அரசியல் கைதியாக எதிர்காலத்தை எதிர் பார்த்து காத்திருக்கிறான். காயத்திரிக்கு தன் நம்பிக்கையே பெரும் தும்பிக்கையாக இருக்கி றது. "என்ர மனுசன எப்பிடியும் வெளியில எடுப் பன்". என்ற வைராக்கியத்துடன் செல்ல மகள் சாமியின் வளமான எதிர்காலத்திற்காகவும், கணவரின் விடுதலைக்காகவும் அல்லும் பகலும் அயராது இன்றும் உழைக்கிறாள் காயத்திரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலைத்தேச கலைச்சொத்து காமன்கூத்து

அ.ஏழுமலைப்பிள்ளை
மலையாளபுரம்

ஈழத்திரு நாட்டிலே கலைகள் யாவராலும் போற்றி வளர்க்கப்பட்டன. ஆனால் போற்றி வளர்க்கப்ட்டு மேடையேற்றப்பட்ட பல இசை நாடகங்களும், கூத்துக்களும்இன்று எழுத்துருவில் காணப்படவில்லை... இதனை தவற விட்டது எமது முன்னோர்களின் அறியாமையே...

பொதுவாக முத்தமிழையும் வளர்க்கும் விதத்தில் பாமரர்களின் அபிமானத்தைப் பெற்ற மையால், நாட்டுக்கூத்துக்கள் ஒவ்வொன்றும் ஒரே மேடையில் பல முறையோ அன்றேல் ஊருக்கு ஊர் சென்று பல மேடைகளிலோ மேடையேற்றப்பட்டன. நாட்டுக்கூத்து, விலாசம், நாடக அலங்காரம், இசை நாடகமென பல பெயர்களிலும் மேடையேற்றங்கண்டாலும் பாடல், இசை, வடிவம், ஆட்டமுறை, உடையலங் காரம், மேடையமைப்பு என்பனவற்றில் வேறுபாடுகள் இருந்தன என்பது உண்மையே. பாமரர்களின் கையிலிருந்த மரபுவழிக் கலைப் பொக்கிசங்கள் கல்விசார் மக்களின் கைகளில் கல்வித்தேடலுக்காகவும் ஆய்வு முயற்சிகளுக் காகவும் கலை கலாச்சார விழுமிய முயற்சி களுக்காகவும் சமூக, உலக ஓட்டத்திற்கிணை யாக கலை வடிவங்களை நவீனத்துவப்படுத்து வதற்காகவும், மெருகூட்டி, புதுவடிவம் கொடுத்து உலகப்பரம்பலுக்கிணையாக தமிழனின் பாரம் பரிய மரபுவழிக்கலையை கல்விச்சமூகம் புடம் போட, நவீன மயப்படுத்த முன்வந்த போதிலும் ஒரு அளவிற்கு மேல் அவர்களால் வெற்றி கொள்ள வைக்கமுடியவில்லை என்பது யதார்த்தமானதாகும்.

அந்தவகையில் மலையகத்தமிழரின் மரபுவழிக் கலைவடிவங்களான "காமன்கூத்து" "பொன்னர்சங்கர்" "பொம்மலாட்டம்", "அர்ச்சு னன் தபசு", "தப்பு", "ஒப்பு", போன்ற கலை நிகழ்வு களும் பிரபல்யம் பெற்றவை என்பதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது. அழிந்து போகும் நிலையிலிருக்கும் மலைக்குன்றின் கலைச்சொத்தான "காமன் கூத்தை நினைவு படுத்துவதற்காகவும், அதனைப் பின்பற்றிச் செயல்படுத்த கலைஞர்கள் முன்வரவேண்டும் என்பதற்காகவும் எந்தக்கூத்துக்கும், நாடகத்திற் கும் இல்லாத அதன் பெருமையை, அதனை ஆரம்பிக்கும் தெய்வீக நடைமுறையை, கலை கலாச்சார பாரம்பரிய நடைமுறையை யாவரும் கைக்கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இக்கட்டுரையைப்படைக்கின்றேன்.

**காமன் கூத்து என்றால் என்ன?**

மதன் ரதி சல்லாபிப் பதையும் ஈஸ்வரனின் தவத்தை குழப்பும் நிகழ்வுகளையும் நடத்திக்காட்டும் கூத்து காமன்கூத்து...

காமன் கூத்தை மலையகத்தில் பெரும் விழாவாக கொண்டாடுவார்கள். உலகப்பரப்பில் காமன் கூத்திற்கு கொடுக்கப்படும் பெருமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகத்துவம் வேறொன்றிற்கும் இல்லை என்பது மிகையில்லை.

முதல் நாள் காமனுக்குப் பதிலாக கரும்பை நட்டு, அதற்கு பதினைந்துநாள் விளக் கேற்றி பூசை செய்து வழிபடுவதுடன் தெருத் தெருவாக மக்கள் சேர்ந்து ஆடிப்பாடி அக மகிழ்வார்கள்.

பதினைந்து நாளும் லயம் முழுவதும் மக்கள் சென்று இரவிரவாக ஆடிப்பாடுவதுடன் விடியப்பூசையும் நடைபெறும்.

பூசையின்போது பூசாரி மட்டும் உள்ளே இருப்பார். மக்கள் வெளியேறிவிடு வார்கள். பதினைந்து நாளும் லயனிலுள்ள ஒவ்வொரு இடத்திலும் பூசை நடைபெற்று இரவு உணவுப்பண்டங்கள் வழங்கப்படும். மேள வாத்தியம், தாளம், முக்கியமாகத்தப்பு வாக்கியத்துடன் லயனைச்சுற்றி நிகழ்வுகள் நடாத்தப்படும். நிகழ்வில் ரதிமேல் மதன் கோபம் கொள்ளும் காட்சியில் மதனுக்கு கண்ணாடி காட்டும்போது மதன் கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டவுடன் சாந்தமடைவார்... இது காலத்தால் அழியாத கண்கொள்ளாக்காட்சி ... அதன் பிறகு பூசை நடைபெறும்.

**வீதி உலா நிகழ்வுகளிலே**

**(பாடல்)**

**அட்டலம் மிட்டவள் என்று சொல்லி**
**நான் அன்பாய் வணங்குவதற்கு**
**அடி நான் அன்பாய் வணங்குவதற்கு**
**பொன்னாய் மலர் எடுத்தேன்**
**போற்றி உனைத்தொழுவேன்...**

**ஆர வீர சூர சிங்கம்**
**கோரை மாமலர் எடுத்து**
**பொன்னாய் மலர் எடுத்து**
**போற்றி உனைத் தொழுவேன்...**

**பொன்னார் மேனியனே..**
**டம்...டம்...டம்...**

**(தப்பு அடித்தல்)**

**டங்கணக்க... டங்கணக்க... டங்கணக்க...**

**மக்கள் தெருத்தெருவாக ஆடிப்பாடுவதுடன்...**
**நிகழ்வரங்கு இடம்பெறும்...**

நடிகர் நடிகைகள் காட்சிக்கு வரு வார்கள். ஈஸ்வரன் 25 அடி உயரமான இடத்தி லிருந்து தவம் புரிவது போன்ற நிலையில் அமர்ந்திருக்க, ஈஸ்வரனின் தவசை அழிப்பதற் காக பின்னால் 32 பேரும், முன்னால் 32 பேரும் தீப்பந்தம் சுழற்றுவார்கள்... அத்தோடு ஈஸ்வரனை முன்னால் நாலுபேர் இழுப்பார்கள். பின்னால் நாலுபேர் இழுப்பார்கள்... அப்போது கோபம் கொண்ட ஈஸ்வரன் நெற்றிக் கண்ணைத்திறந்து பார்த்தபோது காமன் எரியும் காட்சி காட்டப்படும்...

**செய்முறை**

மூலைப்புறத்தில் காமனுக்குப் பதிலாக கரும்பைக்கட்டிவிடுதல்...

ஈஸ்வரனுக்கும் காமனுக்குமிடையில் நூல் தொடர்பு அந்த நூலில் சிகப்பு போளை கோர்க்கப்பட்டிருக்கும்... போளை காமனை நோக்கி வரும்போது கரும்பை பெற்றோல் ஊற்றி எரிக்கவேண்டும்... காமன் இறத்தல்

ரதியை குளிப்பாட்டி தலையில் முக்காடு போட்டு செத்தவீட்டுத்தப்பு அடிக்க வேண்டும்... காமனைச்சுற்றி சுற்றி ரதியைக் கொண்டுவரவேண்டும், காமனை எரிக்கும் போது ரதி ஒப்புப்பாடல் படிக்க வேண்டும்.

**ஐயோ திரு வலமே...**
**என்னைப்பெற்ற ராசா, என்னை விட்டிட்டு போயிட்டியே..**

**(தப்பு அடித்தல்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**டிங்கு... டிங்கு... டிங்கு... டிங்கு.....**

**டிங்கு ... டிங்கு ... டிங்... டிங் ...**

**காமன் பொம்மை எரிந்து முடியும்போது சாவுத்தப்பு அடிக்கவேண்டும்...**

கரும்பு எரிந்த சாம்பலை எடுத்து அதிகாலை 5.30 மணிக்கு ஆற்றங்கரையில் சாம்பலை கரைக்கவேண்டும். பின்னர் கோவிலுக்கு அபிசேகம் செய்ய வேண்டும்.

அன்று இரவு மேடை போட்டு காமன் கூத்து நடைபெறும்

காமன் கூத்தைப்போன்று பிரமாண்ட மான முறையில் பெரும் ஆள், பொருட் செலவிலும் காட்சி அமைப்பிலும் 16 நாள் கொண்டாட்டத்துடன் எந்தவொரு நிகழ்வும் நடைபெறவில்லையென்பது என் கருத்து. இது எமது பொக்கிசம் இதனை அழியவிடாது காப்பாற்றுவது, பேணுவது முழு இலங்கை வாழ் மக்களின் தலையாய கடமையாகும்.

இலங்கை கலைமரபை அலங்கரித்த மரபுவழிக்கலைப்பொக்கிசங்கள் பல இருந் தாலும் மதவழிபாடு, இன பண்பாடு, கலைத்துவச் செழுமை, மகிழ்ச்சிக்கொண்டாட்டங்கள் உள்ள டங்கிய தோட்டத்தொழிலாளர்களால் ஆடப் பட்ட வந்த காமன் கூத்துக்கு ஈடு இணை யில்லை என்பதை எவராலும் மறுக்கமுடியாது. மலை யகத் தமிழர்களின் இரத்த வியர்வையில் உரம் பெற்று, அவர்களது அயராத உழைப்பினால் விளைந்த தேயிலையும் இறப்பரும் இலங்கை க்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தது போல்.....

மலையக மக்களின் "இன்பம் துன்பம்" அவலம், ஆடல் பாடல், தேடல் அனைத்தும் இணைந்த கலைப்பொக்கிசமான காமன் கூத்து பொன்னர் சங்கர், பொம்மலாட்டம், ஒப்பு, தப்பு, பறை போன்ற கலை நிகழ்வுகள்......

காலத்தால் அழிக்க முடியாத தங்கச் சுரங்கமாகும்...இது கலைஞர்களால் சரியாகப் பேணப்பட்டால் ஆடப்பட்டால் சர்வதேச அங்கீ காரம் பெறும் என்பது உறுதியானதே.....

நவீனத்துவ எதிர்கால மரபினரால் கைக்கொள்ளப்படவேண்டிய இன்னும் சுமார் பல நூற்றாண்டுக்குப்பின்னேயும் பேசப்படக்கூடிய, ஆடப்படக்கூடிய அருந்தமிழ் கலைமகுடம். செந் தமிழ் பொக்கிசமான குன்றின்குரல் காமன்கூத்து நலிவுற்று அழிவுறும் நிலையிருப்பது வேதனைக் குரியதே. இதனை இலங்கைவாழ் கூத்து, இசை நாடக கலைஞர்கள் கவனத்தில் எடுத்து இந்தக் கலைப்பொக்கிசத்தை காப்பாற்றவேண்டியது அவர்களின் தலையாய கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரங்கினூடாக சிறுவர்களுக்கான உளரன் (மனோதிடம்) மேம்பாடு

**எஸ்.ரி.அருள்குமரன்** BA(Hons)MA(M erit)
ஆசிரியர்
மானிப்பாய் இந்துக்கல்லூரி

நாடகக் கலை தனக்கென தனித்துவமான பண்புகளினை கொண்டுள்ளது.மனித நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப புள்ளி முதல் இக்கலையின் வகிபங்கு முதன்மை பெறுகின்றது. மனிதர்கள் தமது உணர்வியலினை பிறரிடம் காவுவதற்கும் தமது கருத்தினை பகிர்ந்து கொள்வதற்கும் உறவினை தகவமைத்துக்கொள்வதற்கும் இக்கலை உதவின.

இக்கலையின் தொடர்நிலை இயங்குதல் காலமாறுதலுக்கு ஏற்ற வகையில் வடிவங் களினை தரநிர்ணயம் செய்தன. அவ்வடிவங்கள் தமக்கான தனித்துவத்துடனும் சமூகத்தில் பல் பரிமாண பிரச்சினைகளினையும் ஊடு பொருளாக கொண்டு வெளிப்படுத்தின.

இதன் முக்கியத்துவம் காலமாறுதலில் வெறுமனே உணர்ச்சிக்குரியது என்பதினை தாண்டி அறிவு பூர்வமான விடயமாக பார்க்கப் படலாயிற்று.

எவ் விடயத்தினையும் அவற்றில் காணப் படுகின்ற பிரச்சினைகளினையும் அறிவியல் பூர்வமாகவும் யதார்த்த பூர்வமாகவும் பதிவு செய்ய முனைந்தன. அப்பகைப்புலத்தில் பிரச்சினைகள் என்ன? அப்பிரச்சினைகளினை தீர்ப்பதற்கான வழிவகைகள் என்ன? அத்தீர்வு களின் ஊடாக சமூகவியல் பெறுமானத்தில் எத்தகைய மாறுதல்களினை கொண்டுவர முடியம் என்பன தொடர்பாக நாடகப்படைப் பாளிகள் சிந்தித்தனர். அச்சிந்தனைப் பெறு மானம் சமூகவியலில் தாக்கத்தினை ஏற்படுத்தின.

சமூகம் காலமாற்றமடையும் போது புதிய புதிய பிரச்சினைகள் முகிழ்த்தெழும் போது அவற்றினை வெளிப்படுத்துவதற்கும் தீர்த்துக் கொள்வதற்கும் நாடகங்கள் துணை செய்கின்றன.

பிரச்சினைகள் எனும் போது பல்வேறு பிரச்சினைகளினை குறிப்பிடுவார்கள். பெண் களது பிரச்சினைகள் முதியவர்களது பிரச்சினை கள் சிறுவர்களது பிரச்சினைகள் பண்பாட்டு பிறழ்வுகள் என பிரச்சினைகள் சமூகவியல் சூழமைவுகளுக்கு ஏற்ப மாறுபடுகின்றன.

கலைகள் மனித வாழ்வியலில் பிரிக்க முடியாத கூறுகளாக விளங்குகின்றன. கலைப் படைப்புக்கள் காலத்தினை பிரதிபலித்து நிற்கும் கண்ணாடி ஆகும். சமூகத்தில் மனிதர்களது வாழ்வியல்கள் பதிவுகள் மனிதர்களது வலிகள் என்வற்றினை வெளிப்படுத்தும் வல்லமை பொருந்தியவை ஆகும். இத்தகைய பணியினை நாடகப் படைப்புக்கள் மூலம் செயற்படுத்த முடியும்.

இன்றைய சூழ்நிலையில் சம காலத்தில் எமது வாழ்வியல் நீரோட்டத்தில் பலரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாடல் வெளிகளில் சிறுவர் துஸ்பிர யோகம் அதனூடான பண்பாட்டு பிறழ்வுகள் பற்றிய பார்வை முதன்மை பெறுகின்றன.

சிறுவர்கள் நாட்டின் சொத்துக்கள். எதிர் காலத்தின் தலைவர்கள். அவர்கள் இக்காலத்தில் பெற்றுக்கொள்கின்ற அறிவப்புலமையானது அவர்களது எதிர்கால வாழ்வியலுக்கான அடிப்படைகளாகின்றன எனும் கருத்து நிலைகள் முதன்மைபெறுகின்றன.ஆனால் அவர்களது சுதந்திரமான வாழ்வியல் தகவமைப்பிற்கான செயற்பாடுகள் முழுமையாக இடம்பெறுகின்ற னவா? எனும் வினாவெழுகின்றது. காரணம் யாதெனில் ஊடகங்களிலும் பல்வேறு நிலை களிலும் சிலாகிக்கப்படுகின்ற சிறுவர் துஸ்பிர யோகங்கள் அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமுறைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்ற உரிமைகள் எனப்பலவற்றினை குறிப்பிட முடியும்.

சிறுவர்களுக்கான சுயமுனைப்பு செயற் பாடுகளும் அவர்களுக்கான கருத்தாடல் வெளி களும் தம்மை வெளிப்படுத்திக் கொள்வதற்கான வெளிகளும் உருசமைக்கப்படுகின்ற போதே ஆரோக்கியமான சமூகம் மேற்கிளம்பும்.

சிறுவர்களது உளரன் (மனோதிடம்) மேம்பாட்டிற்கானதும் வாழ்வியல் மேம்பாட்டிற் கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது காலத்தின்தேவையாகும். காரணம் யாதெனில் அவர்களது மனப்பதிவுகளில் உயரிய சிந்தனைகளினையும் அச் சிந்தனையின் ஊடாக தன்னம்பிக்கையினையும் ஏற்படுத்துவது அவசியமானதாகும். அத்தகைய சிந்தனை சார் மாற்றத்தினை வெளிக்கொணர்வதற்கு கலையி யல் சார் செயற்பாடுகள் துணை செய்யும்.

பதினெட்டு வயதிற்குட்பட்டவர்களினை சிறுவர்கள் எனும் வகுதிக்குள் உட்படுத்துகின் றார்கள். அவ்வகையில் பாடசாலைப் பருவத் தினை உடையவர்கள் இவ்வகுதிக்குள் வருகின்றனர். எனவே அவர்களுக்கான சரியான வழிகாட்டுதல்களும் நல்லன தீயனவற்றை பகுத்தாராய்வதற்கான வளவகைகள் மேற் கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்.

சிறுவர்களுக்கான அரங்க செயற்பாடு எனும் போது அவர்களுக்கான கற்பனையை தூண்டும் வகையில் ஆடல் பாடல் விநோதம் நிறைந்ததாகவும் அப்படைப்பின் பேசு பொருள் அவர்களது உளவியல் சார் அணுகுமுறையு டனும் அவர்களது கற்பனையை தூண்டக் கூடியவகையிலுமே உருசமைக்கப்படுகின்றன.

சிறுவர்கள் அரங்க செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் அவர்களிடையே ஆளுமை வெளிப்படுத்தல்கள் தலைமைத்துவப்பண்பு கற்பனாசக்திவிருத்தியடைதல் எதையும் கூர்ந்து நோக்கும் திறன் விருத்தியடைதல் விட்டுக் கொடுப்புகள் சகோதரத்துவம் சுயதேடல் சுய முனைப்பு போன்ற பண்புகளினை மாணவர்கள் உள்ளீர்த்து கொள்வதற்கு இவ் அரங்க செயற் பாடுகள் துணை செய்கின்றன.

சிறுவர் தலை முறை உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டால் அதன் எதிர்கால தலை முறை யானது செயல்முனைப்பற்ற வகையிலும் சுய தேடல் அற்ற தலைமுறையாகவுமே முகிழ்ந் தெழும். ஆத்தகைய சூழ்நிலை உருவாகும் போது ஆரோக்கியமற்ற சமூகம் உருவாவதினை தவிர்க்க முடியாது போகும்.

எனவே அவர்களது கனவுகளினை உரு வாக்குவதற்கும் அவர்களது சுய முனைப்பிற் கான வகையில் அவர்களுக்கு விழிப்பூட்டல் சார்ந்த செயற்பாடுகளுடன் அவர்களினை படைப்பில் ஈடுபடுத்துவதன் மூலம் ஆளுமை நோக்கிய சமூக உருவாக்கத்திற்கு வித்திட முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2011













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடகம்

# வணங்காமுடி வெடியரசனின்

## பசுத்தீவின் வரலாற்றுக் காவியம் சரித்திர நாடகம்

இரா-தணி
இராமநாதபுரம்

கதை வசனம் : இரா. தணி
நெறியாள்கை : இரா. தணி

**காட்சி – 1 – 2**

**இடம் – அரண்மனை**

**பாத்திரங்கள் – (வீரநாராயணன், விளங்கு தேவன்)**

(கோபத்தோடு அண்ணன் வீர நாராயணனிடம் விளங்கு தேவன் வருகிறான்)

விளங்கு : அண்ணா! குள்ளநரி மீகாமன் புலியின் குகைக்குள் புகுந்து தன் நரிப்புத்தியைக் காட்டி விட்டான்.

வீரநாரா : தம்பி! விளங்குதேவா என்னதான் சொல்கிறாய்?

விளங்கு : ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து எம்மையே கடிக்க வந்து விட்டான் மீகாமன் என்ற ஓநாய்.

வீரநாரா : பதறாதே தம்பி என்னதான் நடந்து விட்டது விபரமாகக் கூறு.

விளங்கு : பசுத்தீவில் இருந்து இராமேஸ்வரம் கோவிலுக்குச் சென்ற எமது அண்ணன், பசுத்தீவு மன்னன் வெடியரசனை வஞ்சகமாக சிறை செய்து விட்டானாம் மீகாமன்.

வீரநாரா : என்ன! அண்ணாவைச் சிறை பிடித்து விட்டானா மீகாமன் என்ன துணிவெடா தம்பி? இதை சோழ மன்னர் புலிகேசி தட்டிக் கேட்க வில்லையா?

விளங்கு : சோழ மன்னர் புலிகேசியைத் தன் கைப்பொம்மையாக்கி விட்டா னாம் மீகாமன் என்று ஒரு கதை.

வீரநாரா : இதை என்னால் நம்ப முடிய வில்லை. மன்னர் புலிகேசி மௌனியாகி இருப்பதில் ஏதோ அர்த்தம் இருக்கிறது. அது சரி உனக்கெப்படித் தெரியும் தம்பி.

விளங்கு : சோழ நாட்டு மந்திரி நந்திவர்மர் யாரும் அறியாமல் ஒற்றன் மூலம் ஓலை அனுப்பியுள்ளார்.

வீரநாரா : அப்படியானால் நிச்சயம் மன்னர் புலிகேசி அந்தப் பேடியிடம் மதி மயங்கி இருக்கமாட்டார். இதில் பல உண்மைகள் மறைந்து இருக்கிறது தம்பி.

விளங்கு : அப்படியானால் அண்ணன் வெடி யரசன் நிலை என்னாவது?

வீரநாரா : முள்ளை முள்ளால்தான் கழைய வேண்டும். சோழ ஆட்சியைக் கவிழ்த்து, சோழ இளவரசி காஞ்சனாவை அடைந்து தன்னதி காரத்தை நிலைநாட்ட மீகாமன் துடிக்கிறான் போலும்!

விளங்கு : எனக்குரிய சோழ இளவரசி காஞ் சனாவை மீகாமன் அடைவதா? என் வாள் உறைக்குள் உறங்க வில்லையண்ணா.

வீரநாரா : உன் வீரம் எனக்குத் தெரியாதா என்ன? உன் ஒவ்வொரு எண்ணத் துடிப்பும், எம் மண்ணின் வீரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்காமல் கொக்கரிக்கின்றான் மீகாமன்.

விளங்கு : அது மட்டுமல்ல அண்ணா. சோழ மன்னரைச் சிறைபிடித்து, சோழ இளவரசியைப் பலாத்காரமாக மணம் முடித்து, மந்திரி நந்திவர்ம ரைக் கொன்று, சோழ மண்டலத்து க்கே அதிபதியாகக் கனவு காண்கிறான்.

வீரநாரா : இதை இப்படியே விட்டு விட்டால்...

விளங்கு : எம்மை ஒரு ஏமாளியாக எண்ணி விடுவான். அந்தக் குள்ளநரி.

வீரநாரா : அண்ணன் வெடியரசனை மீகாமன் சிறை பிடித்ததன் உள் நோக்கம் என்னவாக இருக்கலாம் தம்பி.

விளங்கு : சோழ நாட்டின் தளபதியாக இருக் கும் மீகாமனுக்கு மக்கள் ஆதரவு தேவைப்படுகின்றது. வேறு வழி யின்றி சோழப் பேரரசின் தலை விதியை மாற்றியமைக்கப் பார்க்கிறான்.

வீரநாரா : புரியும்படி விபரமாகக் கூறு.

விளங்கு : தமிழ் நாட்டில் கண்ணகிக்குச் சிலை எடுப்பதாகக் கதை கட்டி மாணிக்கமும், முத்தும், பவளமும் கண்ணகி சிலம்புக்குத் தர மறுத்தான் வெடியரசன் என்று மக்கள் மத்தியில் பறை சாற்றி பசுத்தீவுக்கு எதிராக தமிழ் மக்களை கிளர்ச்சி செய்ய...

வீரநாரா : தமிழ் மக்கள் மத்தியில் கதை பரப்பி வெடியரசனைச் சிறைப் பிடித்தான் மீகாமன் என்று கொக்கரிக்கிறான் அப்படித்தானே.

விளங்கு : ஆமண்ணா. அண்ணா வெடியர சனின் வீரமும், தம்பிமாராகிய எங்கள் வீரமும் தூங்கி விட வில்லை என்பதை மீகாமனுக்கு உணர்த்த வேண்டும்.

வீரநாரா : அது மட்டுமல்ல, மன்னர் புலி கேசிக்கும் மீகாமனின் பயங்கரத் திட்டங்களை உணர வைத்து இளவரசியாரையும் மீட்டெடுக்க வேண்டும்.

விளங்கு : முத்தும் பவளமும், இரத்தினமும் எமது பசுத்தீவின் தனி பரம்பரைச் சொத்து.

வீரநாரா : அதிகாரத்தை விடுத்து அன்பாகக் கேட்டிருந்தால்! அண்ணா, வெடியரசன் அள்ளிக் கொடுக்க மாட்டாரா என்ன?

விளங்கு : கண்ணகிக்குச் சிலையெடுத்தால் அது நமது பசுத்தீவுக்கும் பெருமை தானேயண்ணா.

வீரநாரா : அதை உணராமல் அதிகாரத்தால் எம்மைப் பணிய வைக்கப் பார்க்கி றான் மீகாமன். ஆழம் தெரியாமல் காலை வைத்து விட்டான்.

விளங்கு : அண்ணா! பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. சீறிப்பாயும் கடல் அலையைப் போல எமது இணைந்த கரங்கள் வீர வாளுடன் உடனே செயற்பட வேண்டும்.

வீரநாரா : பொறுத்தது போதும் தம்பி. பொங்கி எழுவோம். நந்தி வர்மரின் அநுசரணையுடன் செயல்படுவோம். படை நடத்து வதிலும் பார்க்கச் சாணக்கியமே மேலானது.

விளங்கு : நந்திவர்மன் சோழ நாட்டில் உள்ள வரை மீகாமானால் வெடியர சனை எதுவும் செய்து விட முடியாது. பட்ட கட்டையில் ஏறிப் பகற்கனவு காண்கின்றான் மீகாமன்.

வீரநாரா : தம்பி! காலம் தாழ்த்தாது இப்போதே காஞ்சி நகர் செல்ல வேண்டும். நடக்க வேண்டியதை அங்கிருந்தே செயற்படுத்த வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கு : அண்ணனை மீட்டெடுத்து மீகாமனைச் சிறைப் பிடிக்காதவரை என் வீர வாளுக்கு ஓய்வேயில்லை.

வீரநாரா : அத்தோடு ஒன்றை மறந்து விட்டாயா?

விளங்கு : தாங்கள் கூறுவது....

வீரநாரா : உனக்கென்றே பிறந்தவள்தான் சோழ இளவரசி காஞ்சனா. அவளையும் எம்முடன் கொண்டு வர வேண்டும்.

விளங்கு : நந்திவர்மரின் எண்ணமும் அது தான். செய்வோம், செயலாற்று வோம்.

வீரநாரா : வீரமும் காலமும் எமக்குத் துணை நிற்கும்போது, தானமும், தர்மமும் விழித்திருக்கும் வரை, எதுவும் எமக்குச் சாதகமாகவே இருக்கும் தம்பி.

விளங்கு : அண்ணா! இணைந்து விட்ட எமது வீரப்புஜங்களும், வீச்சுவாளும், அண்ணனை மீட்டெடுத்து எமது மண்ணின் பசுத்தீவின் புகழ் காத்தான் மறத் தமிழன் என்று ஏட்டில் மட்டுமல்ல எம மண்ணைச் சூழ்ந்துள்ள கடலலைகளும் கரையை முத்தமிடும்போது புகழ் பாடட்டும். வாருங்களண்ணா இப்போதே புறப்படுவோம்.

வீரநாரா : சரி தம்பி.

**திரை**

**காட்சி – 2-3**

**இடம் : சோழன் அரண்மனை**

பாத்திரங்கள்: (மன்னன் – ராணி – இளவரசி – நந்திவர்மன்)

மன்னன் : மந்திரி நந்திவர்மரே நாட்டு நிலைமை எப்படி இருக்கிறது? வெடியரசன் மீகாமனால் சிறைப் பிடிக்கப்பட்டு மதுரைக் கோட்டையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறினீரே.

நந்திவர் : ஆமாம், எல்லாம் அறிந்த சோழ மன்னா நான் கூறுவதற்கு இதில் என்ன உள்ளது?

மன்னன் : சோழ மண்டலத்தின் தலைமை மந்திரி நீர். அரசியல் நீரோட்டம் உமக்குத் தெரியாதா என்ன?

நந்திவர் : நாட்டின் தளபதி மீகாமன் படை நடத்தி எதிரிகளைப் பணிய வைத்தவன். பதவி மோகம் கொண்டு நம் எல்லோரையும் எதிர்க்கத் துணிந்து விட்டான். நீங்களோ ஏகப்பட்ட அதிகாரங்களை மீகாமனுக்குக் கொடுத்துள்ளீர்கள். இது பெரிய தப்பு மன்னா.

மன்னர் : அரசியல் சதுரங்கத்தில் காய்களை எப்படி நகர்த்த வேண்டும் என்பது உண்மையே. ஆனால் அரசியல் நீரோட்டத்தில் சரியெது. தப்பு எது என்பது முக்கியமல்ல. நாடு பிளவு படக்கூடாதல்லவா.

நந்திவர் : உண்மைதான். ஆனால் அளவுக்கதிக அதிகாரங்களைக் கையில் எடுத்து வெடியரசனைச் சிறை பிடித்தது மட்டுமல்ல அவனின் தம்பிமாரின் பகையையும் தேடிக் கொண்டான் மீகாமன்.

மன்னர் : ஓ... அதைக் கூறுகிறீரா?

நந்திவர் : அது மட்டுமல்ல, எமது ஆட்சிக்கு எதிராக மக்களைத் தூண்டி மதுரையில் கொலை. கொள்ளை போன்ற அடாவடித்தனம் செய்விக்கின்றான் மீகாமன். அதன் உள் நோக்கம்பயங்கரமானதாக உள்ளது.

மன்னன் : களம் பல நடத்தியவன் மீகாமன். ஏகப்பட்ட அரசுகளைப் பணிய வைத்தவன். அவசரப்படாமல் விட்டுப் பிடிப்போமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசி : அப்பா! வெள்ளம் தலைக்கு மேல் போகும்வரை பொறுமையாக இருக்க முடியாது. உடனடியாக மீகாமனை அடக்க வேண்டும்.

மன்னர் : மகளே காஞ்சனா உனக்கு அரசியல் அறிவு போதாது. அமைதியாக இரு.

இளவரசி : அப்பா சிறுவயதில் இருந்தே சோழ நாட்டு அரசியலை அறிந்தவள் தான் நான். இவ்வளவு அதிகாரத்தை மீகாமனுக்கு நீங்கள் கொடுத்தது தப்பு.

மன்னர் : பெத்த மகளே எனக்கு அறிவு புகட்டுகிறாயா?

இளவரசி : அறிவு புகட்டவில்லை அப்பா. மனம் கொதிக்கும் வேதனைகளை விளம்புகின்றேன். பெரியத்தான் வெடியரசனை மீகாமன் சிறை பிடித்தான். இதைக் கேள்வியுற்ற அவர் தம்பிமார் வீரநாராயணனும், விளங்குதேவனும் காஞ்சியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்.

மன்னர் : எதிரிகளுக்கு, மந்திரியும், இளவரசியும் உடந்தையாக இருப்பதாக ஒரு செய்தி என் காதில் அடிபட்டதே.

நந்திவர் : மன்னா! என்ன இது அபாண்டம்.

மன்னர் : பதற்றம் வேண்டாம். அமைதியாக இருங்கள் மந்திரியாரே.

இளவரசி : வேலியே பயிரை மேயும்போது நாம் எப்படித்தான் மௌனமாக இருக்க முடியும்?

மன்னர் : அதனால்தான் விளங்குதேவனுக்கு சோழ இளவரசி மந்திரி நந்திவர்மருக்கு ஊடாக செய்தி அனுப்பினாரோ?

இளவரசி : விளங்குதேவன் எமக்கு நண்பர். எமது சோழ அரசின்மீது விசுவாசம் கொண்டவர். எமக்கு அவர்களால் நன்மையே ஒழிய தீமையில்லை.

மன்னர் : விளங்குதேவன்மீது கொண்ட காதல் அப்படிக் கூறுகின்றதோ?

இளவரசி : மீகாமன் செயலால் கொண்ட வெறுப்புத்தான். தப்புக் கணக்கு வேண்டாம் சோழ மன்னா.

மன்னர் : மந்திரியாரே! கேள்விக் கணைகள் பறக்கும்போது சோழ இளவரசிக்கு பெத்த அப்பன் கூட மன்னனாக மாறும் விந்தையைக் கேளும்.

இளவரசி : மன்னிக்க வேண்டும் அப்பா. அவசரத்தில் வார்த்தைகள் தவறாக வந்து விட்டன.

மந்திரி : மன்னா! காஞ்சனா சிறு பிள்ளை. நீங்கள் கோபிக்கக் கூடாது.

மன்னர் : மன்னருக்குத் தெரியாமல் ஒரு பொறுப்புள்ள நாட்டின் இளவரசி இன்னொரு நாட்டின் இளவரசனுக்கு தூது அனுப்புவதா? இது சோழ மண்டலத்துக்கே வெட்கக்கேடு மந்திரியாரே.

இளவரசி : பொறுப்புள்ள சோழ மண்டலத்துத் தளபதி மீகாமன் பசுத்தீவு வெடியரசனை மன்னர் புலிகேசிக்குத் தெரியாமல் சிறை பிடித்தது எப்படி மந்திரியாரே.

மன்னர் : எனக்கு எல்லாம் தெரியும்.

இளவரசி : தெரிந்தும் மீகாமனின் செயலுக்கு ஒரு முடிவும் கட்டாமல் இருக்கிறீர்களே, பசுத்தீவின் பகையைத் தேடிக் கொள்கிறீர்களே, இது நியாயமா அப்பா?

மன்னர் : பெரிய மீன் கிடைக்கும்வரை கொக்குக் கூடச் சோம்பித்தான் இருக்கும். இதை உணர்ந்து கொள் மகளே.

நந்திவர் : இளவரசியாரே! உங்கள் கோபம் அப்பாவிடம் வேண்டாம். அமைதியாக இருங்கள். கோபமும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதமும் தேவைதான்.

மன்னர் : ஆனால் என் மகளின் அவசரம் எனக்குப் புரிகிறது. எல்லோரும் பொறுத்திருந்து பாருங்கள். மந்திரியாரே! உம்மோடு சில பல விடயங்கள் கதைக்க வேண்டும். இரவு என்னை சந்தியுங்கள். மகளே! வீண் பிரச்சினையை மனதில் போட்டுக் குழப்பாமல் நிம்மதியாக இரு.

இளவரசி : எப்டியப்பா என்னால் நிம்மதியாக இருக்க முடியும்?

மன்னர் : ஏன் முடியாது. உன் அம்மாவைப் பார். பாமல்ல சக்கரவர்த்தியின் மகள். எமது பேச்சுக்களில் கலக்காமல் எப்படி மௌனமாக இருக்கிறாள் பார்.

இளவரசி : நீங்கள் அம்மாவைத் திருமணம் செய்யுமுன் இளவரசி குந்தவை என்றால் தாத்தாவுக்குப் பயமாமே அப்பா.

மன்னர் : ஓ..எல்லாம் அறிந்து வைத்திருக்கி றாய். அப்படித்தானே? நீ அம்மா பிள்ளைதான்.

இளவரசி : நான் அப்பா பிள்ளையும், அம்மா பிள்ளையும் தான்.

மன்னர் : அதுதான் நா இவ்வளவு நீளுகிறது. மகளே! பொறுமையை இழக் காதே. இந்தப் புலிகேசிக்குத் தெரி யாமல் இந்தச் சோழ மண்டலத் துள் ஈ, எறும்பு கூட நுழைய முடி யாது. போ...நிம்மதியாக இரு.

இளவரசி : சரியப்பா.

**திரை**

**காட்சி – 3 - 4**

**இடம் : காஞ்சி**

பாத்திரங்கள்: வீர நாரயணன், விளங்குதேவன், இளவரசி, மன்னர், நந்திவர்மர்

வீரநாரா : தம்பீ! விளங்குதேவா இந்தப் பூங்காவில் நில். நான் நந்திவர் மரை இரகசியமாகச் சந்தித்து மீகாமன் இருக்கும் இடத்தையும், அண்ணா வெடியரசன் சிறை வைக்கப்பட்ட இடத்தையும் அறிந்து வருகின்றேன் உசாராக இருந்து கொள்.

விளங்கு : யார் வந்தாலும் தலையைச் சீவி விடுகின்றேன் அண்ணா, சென்று வாருங்கள்.

வீரநாரா : அவசரப்படாதே. அண்ணாவை மீட்டெடுக்கும் வரை நாம் நிதான மாகவும், அவதான மாகவும் செயற்பட வேண்டும். சோழ நாட்டுக்குப் பல காதுகள் உண்டு.

விளங்கு : எமது இரத்தமும் சோழ இரத்தம் தான். பசுத்தீவு வீரத்தில் சோடை போனதில்லை. சென்று வாருங்க ளண்ணா. (வீர நாராயணன் மறைய இளவரசி காஞ்சனா வருகிறாள்)

இளவரசி : புகை புகாத இடத்திற்குள் கூட இளவரசர் புகுந்து விடுவார் போல இருக்கே. எவ்வளவு துணிச்சல்.

விளங்கு : ஓ... இளவரசியாரா. சோழ மண்டலத்து இளவரசியின் உதவி கள் இருக்கும்வரை விளங்கு தேவன் எங்கு தேவையானாலும் புகுந்து வருவான். இளவரசியாரே உங்களை என்னால் மறக்க முடியாது.

இளவரசி : ஓ... அப்படியா. எனக்குப் புகழாரம் வேண்டாம். எம் மானம் மரியாதைதான் முக்கியம். எம் முன்னோர்களால் கட்டி எழுப்பிய இந்த சோழ சாம்ராச்சியம் எனது அப்பா புலிகேசி காலத்தில் பிளவு பட்டு அழிந்தது என வரலாறு சொல்லக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கு : அது மட்டுமல்ல இளவரசியாரே, சோழருக்கு விசுவாசமாக இருந்து புலிக்கொடியை ஏற்ற பசுத்தீவும் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமானால்....

இளவரசி : மீகாமனின் கொட்டத்தை அடக்கி, அவனைக் குற்றவாளியாக்கி மன்னர் முன் நிறுத்த வேண்டும் அப்படித்தானே.

விளங்கு : மீகாமனின் பயங்கரத் திட்டங்களை அம்பலப்படுத்தி, அநியாயமாகப் பழிசுமத்தி இராமேசுவரம் கோவிலுக்குப் போன வெடியரசனை சிறைப்பிடித்தான் மீகாமன் என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

இளவரசி : பலாத்காரமாக சோழ இளவரசியை மணம் முடித்து, சோழ மண்டலத்துக்கு மன்னனாக ஆசை கொண்ட மீகாமனின் முகத்திரையைக் கிழிக்க வேண்டும்.

விளங்கு : கண்ணகிக்குச் சிலையெடுக்க முத்தும், பவளமும், இரத்தினமும், தர மறுத்தான் வெடியரசன் என்ற பொய்ப்பிரசாரத்தை முறியடிக்க வேண்டும் இளவரசியாரே.

இளவரசி : எதற்கும் எமது திட்டங்கள் நிறைவேறும்வரை இரகசியமாக இருக்க வேண்டும் இளவரசே.

விளங்கு : உங்கள் உதவியும், அன்பும், ஆதரவும் உள்ளவரை எதுவும் எமக்கு வெற்றியே காஞ்சனா.

இளவரசி : இளவரசே! அப்பாவைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவரின் உள் நோக்கமும் தெரியவில்லை.

விளங்கு : காஞ்சனா, நீங்கள் கவலைப்படுவதில் அர்த்தமே இல்லை. சோழ மண்டலத்து அதிபதி புலிகேசிக்கு எது சரி, எது பிழை, எது தப்பு என்பது புரியும்.

இளவரசி : உங்கள் எண்ணம் சரியாகவே இருக்கட்டும். தவறானால் என் வாழ்க்கையை நானே அழித்துக் கொள்வேன்.

விளங்கு : வாழ்க்கை அழிப்பதற்கல்ல, வாழ்வதற்கே. வீணாக கற்பனை செய்து கவலைகளை வளர்க்காதே காஞ்சனா.

இளவரசி : அப்படியானால் நான் அதிஸ்டசாலிதான். (வெட்கத்துடன் போக முயலுதல்)

விளங்கு : (பாட்டு) (செங்கனி வாய் திறந்து – பாட்டு முடிவில் மன்னர் வருதல்)

மன்னர் : க.... க.... கா.... மகளே. காதல் செய்வது தமிழரின் பழமையான சொத்து. ஆனால் உன் அப்பா காணும் அளவுக்கு காதல் உங்கள் கண்களை மறைத்ததுதான் தப்பு.

இளவரசி : அ...ப்...பா....

விளங்கு : அரசே என்னை மன்னித்து விடுங்கள்

மன்னர் : மன்னிப்பு... க... கா... மாற்று நாட்டான், தற்போது எமக்கு எதிரி.

விளங்கு : உங்களுக்கல்ல அரசே...

இளவரசி : மீகாமனுக்குத்தான் எதிரி அவர்

மன்னர் : நீங்கள் இருவரும் தனிமையில் சந்தித்தது குற்றம். சதித்திட்டம் தீட்டியது குற்றம். காதலித்தது மகா பெரிய குற்றம்

விளங்கு : அரசே! நான் செய்தது குற்றம் என்றால் என்னைத் தண்டியுங்கள். ஆனால், ஒரு குற்றமும் அறியாத இளவரசிமேல் குறை காணாதீர்கள்.

மன்னர் : ஓ... என் மகளைப்பற்றி எனக்கே பரிந்துரைக்கிறாயா. இருவரும் வாருங்கள் என் பின்னே (இளவரசியும், விளங்குதேவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர் பின்னே போகின்றார்கள்)
(திரை மாறல்)

வீரநாரா : மந்திரியாரே, நீங்கள் கூறியபடி நானும் என் தம்பியும் காஞ்சி வந்து விட்டோம். அடுத்து என்ன செய்ய வேண்டும்.

நந்தி : நீங்கள் இருவரும் மதுரைநகர் சென்று அங்குள்ள கோட்டையில் இரகசியமாகப் புகுந்து மீகாமனைச் சிறைப் பிடிக்க வேண்டும். மதுரைக் கோட்டையில்தான் வெடியரசனை மீகாமன் சிறை வைத்துள்ளான்.

வீரநாரா : மீகாமனுடன் நேரடியாக மோதி அவனை நிராயுதபாணியாக்கி விடுகின்றேன். அப்போது அவன் அடிபணிந்து விடுவான்.
(திடீரென மன்னர், இளவரசி, விளங்குதேவன் வருதல்)

மன்னர் : ஆகா...அற்புதம்...அபாரம்...

நந்தி : அர...சே...

வீரநாரா : மன்...னா....

மன்னர் : உண்ட வீட்டுக்கு இரண்டகம். புனித நாட்டுக்குத் துரோகம். மன்னருக்குத் தெரியாமல் தளபதி மீகாமனுக்கு எதிராகப் போராட்டம். மந்திரியாரே! என்ன இது. கேவலம். இந்தப் பெரிய சோழ சாம்ராச்சியத்தை.. பசுத்தீவுக்கு விலை பேசிவிட்டீரா என்ன?

நந்தி : அரசே நீங்கள் நினைப்பதில் நியாயம் இல்லை. என்னை ஏன் வதை செய்கிறீர்கள்?

மன்னர் : மந்திரியாரே! உத்தரவு இல்லாமல் உட்புகுந்துள்ளார்கள் இந்த வீரநாராயணனும் அவன் தம்பியும், மன்னருக்குத் தெரியாமல் மறைமுகப் பேச்சுவார்த்தயல்லவா இது.

நந்தி : மன்னிக்க வேண்டும் அரசே, கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்.

மன்னர் : சோழ இளவரசியோ பொறுப்பு இல்லாமல் பூந்தோட்டத்தில் காதல். பொறுப்புள்ள மந்திரி எதிரியுடன் கூடிக்குலாவல். இதற்கெல்லாம் பெயரென்ன மந்திரியாரே!

நந்தி : இதற்கும் மாட்சிமை தங்கிய மன்னரவர்கள்தான் பதில் கூற வேண்டும். இதுதான் என் அபிப்பிராயம்.

மன்னர் : சரி போனது போகட்டும் வீர நாராயணா, விளங்குதேவா, உங்கள் இருவரையும் கைது செய்ய என்னால் முடியும் ஆனால் அன்பும், பாசமும், பண்பும், என்னைத் தடுக்கின்றது. இங்கிருந்து உடனே போய்விடுங்கள்.

நந்தி : நன்றி மன்னவா. (வீர நாராயணனும், விளங்குதேவனும் போகிறார்கள்)

மன்னர் : மந்திரியாரே, உமக்கும் எனக்கும் இனித்தான் வேலை இருக்கிறது. உடனே நாமிருவரும் மதுரைக்குப் புறப்பட வேண்டும்.

**திரை**

**காட்சி – 3 - 4**

(மதுரைக்கோட்டை. வெடியரசன் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளான். மீகாமன் இரண்டு ஓலையில் வெடியரசன் கையெழுத்துப் போடும்படி சாட்டையால் அடித்து, தனது உதவியாளன் பொறுக்கியிடம் ஒப்படைத்து கட்டளை இடுகின்றான்)

பொறுக்கி : ஐயா, பசுத்தீவுத் தலைவரே, மரியாதையாக உமது கையொப்பத்தைப் போடும். இல்லாட்டி எமது தலைவர் மீகாமனிடம் தப்ப இயலாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியரசு : முட்டாளே! ஒப்பத்தை இட்டு மண்டியிட்டுப் போகும் பரம்பரை யல்ல பசுத்தீவுப் பரம்பரை. இதை உன் தலைவன் மீகாமனுக்குச் சொல்லிவை.

பொறுக்கி : சங்கியில், போட்டுக் கட்டி, பட்டினி போட்டும் மமதை அடங்க வில்லை. இந்தத் தடியனுக்கு. மீகாமன் கஷ்டப்படப் போறான்.

வெடியரசு : அடக்கியாண்ட பரம்பரையடா எனது பரம்பரை. நீ அடக்கியாள நினைத்தால் அது பகல் கனவு. உன் தலைவனுக்குச் சொல்லிவை.

பொறுக்கி : ஐயோ! ஐயோ! எத்தனை தடவை சொல்லிப் போட்டன். இது விளங் காமல் துள்ளுகிறானே மீகாமன். என்னையும் இந்த இக்கட்டுக்கை மாட்டிப் போட்டுத் தனிய விட்டிட் டுப் போயிட்டானே. இவன் சங்கி லியை அறுத்தாலும் அறுத்துப் போடுவான்போல இருக்கு. எடே மீகாமா இந்த ஓட்டை, கறள் பிடிச்ச வாளையும் தந்து போட்டுப் போட்டியேடா. என்ன செய்ய லாம். தீட்டிப்பாப்பம். என்னைப் பற்றி இவனுக்குத் தெரியாது. இப்பதான் ஒருத்தரை கீலம் கீலமாக வெட்டிப் போட்டு வந்தனான். பயம்.... எனக்கோ... (நடுங்குதல்) வாள்தான் நடுங்குது. நானில்லை. என்ரை நீட்டு முடக்கு தெரியாமல் கதைக்கிறார். ஐயா, உங்களை கும்பிடுகிறன் இதில் கையொப்பம் போடுங்கோ. நானும் தப்பிடுவன். உங்களுக்கும் ஆக்கினை இல்லை.

வெடியர : (காலால் உதைத்து) நீ வந்தா லென்ன உன் தாத்தாவே வந்தாலும் என்னுடைய ஒப்பத்தை வாங்க முடியாது.

பொறுக்கி : ஐயோ! இவன் உதைஞ்ச உதை யில நாரி அக்கு வேறு ஆணி வேறையாப் போச்சு. எனக்கும் வேணும். ஆசை....ஆசை... மீகாமன் அரசனாக வந்தால் மந்திரியாக வரலாம் எண்ட ஆசை. பதவி ஆசை. ஐயோ எழும் பவே முடியல்லையே. (அப்போது மீகாமன் வருதல்)

மீகாமன் : டேய் பொறுக்கி

பொறுக்கி : பொறுக்கின பொறுக்கலுக்குத் தான் நாரியைக் கழட்டி விட்டான்.

மீகாமன் : என்ன சொல்கிறாய்?

பொறுக்கி : இது இலேசுப்பட்ட சாமானில்லை. இடம் தெரியாமல் மாட்டுப்பட்டுப் போனம் தலைவா.

மீகாமன் : பொறுக்கி எடுத்து வாடா சாட் டையை (கொடுத்தல்) வெடியரசா மரியாதையாகக் கேட்கிறேன், நீயும் தமிழன், நானும் தமிழன் அதனால் சொல்கிறேன். இந்த ஓலை இரண்டிலும் உன் கையொப்பத்தை இட்டுப் பணிந்து போய்விடு. இல்லையானால் நீ அநியாயமாக இறக்க நேரிடும்.

வெடியர : சீ! சிந்தனை அற்றவனே! வந்த னையா பாடுகிறாய். தயவாகக் கேட்டால் முத்தும், பவளமும், இரத்தினமும் வெடியரசன் கொடுத்திருப்பான். அதிகாரத் தால் இந்த வெடியரசனைப் பணிய வைக்க முடியாது. எனது கஜானாவில் இருந்து ஒரு தம்பிடி கூட எனது தம்பிமார் உனக்குத் தரப்போவதில்லை.

மீகாமன் : உனது குற்றங்களைக் கூட்டிக் கொள்ளாமல், ஒப்புக் கொண்டா வது, சோழ மன்னனுக்கு அனுப்பும் ஓலையிலாவது உனது ஒப்பத்தை இட்டுப் பிழைத்துக்கொள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடியரச : குற்றம் புரிந்தவன்தான் குற்றத்தை ஒப்புக் கொள்ள வேண்டும். உன் மிரட்டலுக்கு நான் அடிபணிய மாட்டேன்.

மீகாமன் : அடிபணிய வைக்கிறேன் பார். (சாட்டையால் அடித்தல். அப்போது இரண்டு சேவகர்கள் வருதல்)

வெடியரச : புலிகேசி மன்னரை நான் நேசிக்கின்றேன். நல்ல மதிப்பும் வைத்திருக்கிறேன். உன் நஞ்சுத்தனத்தை அவர் நிச்சயம் ஏற்க மாட்டார்.

மீகாமன் : க...க....கா....மன்னராம். புலிகேசியாம். க...க...கா...நாடும் நாட்டு மக்களும் என்னை மலர் தூவி வரவேற்று, சோழ சாம்ராச்சியத்தின் அரியணையில் ஏறி ஆட்சி செய்யப் போகின்றேன்.

வெடியரச : மீகாமா! நீ நினைக்கிறாய், உன் வாழ்வு நிலைக்கும் என்று.

மீகாமன் : வாழ்வும் தாழ்வும் மனிதன் கையில்தான். இதை உணர்ந்து கொள்.

வெடியரச : அப்படியென்றால்....

மீகாமன் : உன்னிடம் இந்த ஓலையில் ஒப்பம் வாங்காமல் விடப்போவதில்லை.

வெடியரச : கணக்கைத் தப்பாகப் போட்டு விட்டாய் மீகாமா. நான் சிறைப்பட்டதைக் கேள்வியுற்ற என் தம்பிமார் இப்போது புறப்பட்டிருப்பார்கள்.

மீகாமன் : எங்கே....?

வெடியரச : உன்னைத் தேடி மதுரைக்கு

மீகாமன் : க...க...கா...ஓ வெள்ளாடு புலியின் கோட்டையை நோக்கிப் புறப்பட்டு விட்டது. அண்ணனுடன் சேர்ந்து தம்பிமாரும் இருக்கட்டும் இங்கே.

வெயடிர : பகல் கனவு காண்கிறாய்

மீகாமன் : இரவிலேயே நித்திரை செய்யாதவன் நான்

வெடியரச : இந்தக் கதையை எனக்கு விடாதே அப்பனே

மீகாமன் : உன் திமிர் அடங்கவில்லை

வெடியரச : நியாயம் இருக்கும் இடத்தில் திமிர் அடங்க வேண்டியதில்லை

மீகாமன் : உன் இறுதி முடிவு

வெயடியர : முடியாது...முடியாது...

மீகாமன் : உன்னை ஓரேயடியாகக் கொல்லக்கூடாது. கொஞ்சம்... கொஞ்சமாகக் கொல்ல வேண்டும்

வெடியரச : மீகாமா! பசுத்தீவு மக்கள் வீரர்கள். சூரர்கள், கோபக்காரர்கள், வந்தாரை வரவேற்று, பசித்தவர்களுக்கு விருந்தோம்பல் செய்பவர்கள். அறம் செய்து தருமத்தின் காவலரானவர்கள். அம்மக்களை சீண்டிவிட்டு விளையாடாதே.

மீகாமன் : என்ன செய்து விடுவார்கள்?

வெடியரச : எதிரியைக்கூட மன்னித்து அனுப்பும் பண்பு கொண்டவர்கள். நாட்டுப் பற்றுடன்கூடிய தெய்வ பக்தியும் கொண்டவர்கள், ஆகையால் மீகாமனே, நல்லதை நினை. நல்லதையே செய். நன்மையே பெறுவாய்

மீகாமன் : உன் கீதையின் போதனைகள் எனக்குத் தேவையில்லை. முடிவான உன் பதில் தானென்ன. (அப்போது வாளுடன் வீர நாராயணன், விளங்குதேவன் வருதல்) சேவகர்களே இவர்களைப் பிடித்துக் கட்டுங்கள். (சேவகர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துத் தலையை ஆட்டிவிட்டுப் பேசாமல் நிற்றல்) சண்டை. மீகாமன் வாள் விழல். மாறு வேடத்தில் நின்ற சேவகனான, மன்னரும் மந்திரியும் வருதல்)

மன்னர் : மீகாமா ஏன் விழிக்கிறாய். உன் குட்டு வெளிப்பட்டதையிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிக்கிறாயா? என்றென்றும் துரோகிகளை இந்தச் சோழ மண்டலம், மன்னிக்காது.

மீகாமன் : அரசே, பேராசையால் மதியிழந்து விட்டேன். மந்திரியாரே, எனக்காகப் பரிந்து பேசுங்கள்.

மன்னர் : வெடியரசா, மீகாமனை என்ன செய்யலாம் நீயே சொல்

வெடியர : அரசே, மீகாமனை நான் பசுத் தீவுக்குக் கொண்டுபோய் அவன் பெயரால் கோட்டை கட்டி அங்கு சிறை வைக்கிறேன். இப்படிச் செய்தால் வருங்காலத்தில் உருவாகும் இனத்துரோகிகளுக்கு இது ஒரு படிப்பினையாகவும், வரலாற்று ஞாபகமாகவும் இருக்கும்.

மன்னர் : அருமையான யோசனை. வெடியரசா. பசுத்தீவின் வீரவேங்கையே வணங்கா முடியே உன் தம்பி விளங்கு தேவனுக்கும் என் மகள் காஞ்சனாவுக்கும் மணம் முடித்து வைக்க எண்ணியுள்ளேன்.

வெடியர : இதில் எனக்குப் பூரண சம்மதம் மன்னா. ஆனால் ஒன்று...

மன்னர் : என்ன வெடியரசா

வெடியர : பசுத்தீவில் சிறைவைக்கப்படும் மீகாமன் நல்லவனாக உண்மையில் மாறினால் அவனை விடுதலை செய்யும் அதிகாரத்தை எனக்கு வழங்க வேண்டும்

மன்னர் : ஆகட்டும். பசுத்தீவின் வீர வேங்கைகளே, தானம். தருமம், மன்னிக்கும் மனப்பான்மையும், உங்கள் அழியாத சொத்து. வாழட்டும் பசுத்தீவின் வீரம். வளரட்டும் அன்புடன் கூடிய அறம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2012













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பாத்திரங்கள்**

1. அரிச்சந்திரன்
2. சந்திரமதி
3. சத்தியகீர்த்தி
4. லோகிதாசன்
5. தேவேந்திரன்
6. நாரதர்
7. வசிட்டர்
8. விசுவாமித்திரர்
9. சுக்கிரன்
10. காசிராஜன்
11. வீரவாகு
12. காவலர்
13. நடனமாது

அரிச்சந்திரன் அனைத்து வசதிகளும் பெற்ற சிறந்த மன்னன். அவன் வாய்மையைத் தன் உயிரினும் மேலாகக் கருதினான். விசுவாமித்திரர் முனிவர் கொடுத்த துன்பங்களிலெல்லாம் மூழ்கி, புடம் போட்ட தங்கமாக, சத்தியத்தின் காவலனாக, விளங்கினான். உண்மைக்காக உயிரையும் தர இருந்தான் அந்த வரலாற்றிற்கு நாம் செல்வோம்... அன்றொருநாள்......

**வாய்மை காத்த மன்னன்**

**காட்சி 01**

இடம் : தேவலோகம், தேவேந்திரன் சபை

பாத்திரங்கள் : தேவேந்திரன், நாரதர், வசிட்டர், விசுவாமித்திரர்.

**(தேவேந்திரன் அரியணையை விட்டு எழுந்து)**

தேவேந்திரன் : அகிலத்தை ஆளுகின்ற அரசர்களில், அநீதிகள், தீமைகள் செய்திடாமலும், பொய்மைகள் புரட்டுகள் புரிந்திடாமலும், நற்குணங்கொண்ட, வாய்மை காக்கும் மன்னன், வாரி வழங்கும் வள்ளல் பூவுலகில் யாரேனும் உண்டா?

**சம்போ மகாதேவா நாராயணா.....**

நாரதர் : தேவேந்திரா! பூவுலகில் எல்லா விடயங்களையும் அறிந்தவர், புரிந்தவர் வசிட்டர்... இதெல்லாம் அவருக்குத்தான் தெரியும் அவரையே கேளுங்கள்...

தேவேந்திரன் : வசிட்டமா முனிவரே! வாய்மைக்கோர் இலக்கணமாய் உண்மைபேசி, பாதகங்கள் புரிந்திடாமல் அன்புசால், அறத்தின்பால், ஆட்சிசெய்யும் மன்னன் யாரும் உண்டா, தாங்கள் கூறுங்கள்...

வசிட்டர் : தேவேந்திரா பூலோகத்தில் அரிச்சந்திரன் என்றொரு மன்னன் இருக்கிறான்... அவன் எந்தத் தீய செயல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் செய்யாமல் உண்மையை உயிராக மதித்து வாழ்ந்து வருகிறான்...

விசுவாமித்திரர்: தேவேந்திரா வசிட்டர் கூறுவது முழுப்பொய்... அயோத்தி மன்னன் அரிச்சந்திரன் பொய் பேசுவதில் மகா கில்லாடி ... பொறாமைக் குணம் கொண்டவன், பிறரை ஏமாற்றுவதில் அவனுக்கு நிகர் அவனே...

வசிட்டர் : விசுவாமித்திரரே! அபாண்டமாகப் பேசாதீர்கள் அரிச்சந்திரன் நல்ல குணம் கொண்டவன், நேர்மையானவன், அவனை இப்படித் தரக் குறைாவகப் பேசுவது உமது தரத்திற்கு ஏற்றதல்ல...

விசுவாமித்திரர்: வசிட்ட முனிவரே அரிச்சந்திரனைப் பற்றி உமக்குத் தெரியாது,.... என நினைக்கிறேன்...நான் கூறுவது பொய் என்றால், எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

தேவேந்திரன் : அமைதி அமைதி ஆத்திரத்தில் அறிவிழக்காதீர்கள் நிதானமாகப் பேசுங்கள்.

நாரதர் : தேவேந்திரா இது என்ன புதுக் குளப்பம் ... விளையாட்டு வினையாகிவிட்டதே...

வசிட்டர் : விசுவாமித்திரரே அரிச்சந்திரன் கெட்டவன், பொய் பேசுவதில் வல்லவன் என நீர் நிரூபித்தால் அன்றுமுதல் நான் தவம் செய்வதை விட்டு விடுகிறேன்...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரன் சுத்தப் பொய்யன், வாக்கு நாணயம் அற்றவன், பித்தலாட்டக்காறன்... அவன் நற்குணம் அற்றவன், எல்லாம் நடிப்பு என்பதை என்னால் நிரூபிக்க முடியும்... முடியாவிட்டால் எனது தவவலிமையில் பாதியை வசிட்டருக்கு வழங்கத் தயாராக இருக்கிறேன்...

நாரதர் : சபாஷ் சரியான போட்டி... சம்போ மகாதேவா நாராயணா.. விசுவாமித்திரரே அரிச்சந்திரன் பொய் பேசுபவனென்று பூலோகம் சென்று நீங்கள் நிரூபித்துக் காட்டுங்கள்... பார்க்கலாம்.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரன் பொய்பேசக் கூடியவன், நேர்மை அற்றவன் என்பதை நான் பூலோகம் சென்று நிரூபித்துக் காட்டுகிறேன்.

**காட்சி 02**

இடம் : பூலோகம்

விசுவாமித்திரன் சபதம்.....

விசுவாமித்திரன்: இந்திரன் சபையிலே அந்த வசிட்டன் சபதமிடுகிறான்... விசுவாமித்திரனின் மகிமை அறியாத மூடன்... அரிச்சந்திரன் பொய் கூறமாட்டானாம், பொய்யே கூறமாட்டானாம். பொய் கூற வைக்கிறேன். ஒரு பொய் என்ன ஓராயிரம் பொய் சொல்ல வைக்கிறேன். என் திட்டம் வெற்றி பெற்றால் வசிட்டன் என் காலடியில் வீழ்வான்... பூலோகத்தில் என்ன, தேவலோகத்திலும் என் புகழ் ஓங்கி ஒலிக்கும்... அரசுரிமை, அழகுமிகு மனைவி, அருந்தவப்புதல்வன், ஆட்சி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம், பொன், பொருள் அத்தனையையும் அவனால் வாரி வழங்கமுடியுமா? அடக்குகிறேன் வசிட்டனின் கொட்டத்தை... முதலில் யாகம் செய்வதற்காக அரிச் சந்திரனிடம் உதவி கேட்டுச் செல்வோம்.... என் ஆட்டம் தொடங்கிவிட்டது..(சிரிப்பு)

### காட்சி 03

அரிச்சந்திரன் அரண்மனை

பாத்திரங்கள் : அரிச்சந்திரன், விசுவாமித்திரர்

அரிச்சந்திரன் : வாருங்கள் ராஜகுருவே, வாருங்கள் தங்களின் வருகையால் என் அரண்மனை பெருமை அடைகிறது.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா மாபெரும் யாகமொன்று செய்வதற்காக உனது கோசல நாட்டிற்கு வந்திருக்கிறேன்.

அரிச்சந்திரன் : நல்லது ராஜகுருவே! அது எம் மண் செய்த பாக்கியம், அயோத்தி வாழ் மக்களுக்கு கிடைத்த யோகம்.

விசுவாமித்திரர்: அதற்கு உன் உதவிதேவை அரிச்சந்திரா...

அரிச்சந்திரன் : என்ன உதவி தாராளமாகக் கேளுங்கள் ராஜகுருவே...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா நான் செய்யப் போகும் யாகத்திற்கு ஏராளமான பொன், பொருள் வேண்டியுள்ளது. அதை உன்னால் தரமுடியுமா?

அரிச்சந்திரன் : சுவாமி உங்களுக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு பொருட்களையும் நான் தருகின்றேன்...

விசுவாமித்திரன்: அரிச்சந்திரா உன்னால் எவ்வளவு பொருள் வேண்டுமானாலும் தரமுடியுமா? அவசரப்பட வேண்டாம், நிதானமாக சிந்தித்துச் சொல்....

அரிச்சந்திரன் : சுவாமி நீங்கள் என்மீது சந்தேகப்பட வேண்டாம்...நான் வாக்குத் தவறாதவன், உங்கள் யாகத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் என்னால் தரமுடியும்...

விசுவாமித்திரன்: அரிச்சந்திரா சொல்கிறேன் கேள்.. யானையின் மேல் ஒரு பலமான மனிதன் அமர்ந்து கொண்டு கல்லை விட்டெறிந்தால் அது எந்த அளவு உயரத்துக்கு போகுமோ... அந்த அளவுக்கு பொருள் வேண்டும்....

அரிச்சந்திரன் : முனிவர் பெருமானே... நீங்கள் கூறியபடியே பொருட்களைத் தருகிறேன்....

விசுவாமித்திரன்: நல்லது அரிச்சந்திரா எனக்குத் தேவைப்படும் பொழுது, நான் பெற்றுக் கொள்கிறேன்.... அப்பொழுது நான் கேட்ட முறையில் பொருட்களைக் கொடுத்தால் போதும்... எனது சிஷ்யன் சுக்கிரன் உன்னிடம் வருவான் அவனிடமே கொடுத்துவிடு...

### காட்சி 04

பாத்திரங்கள் : விசுவாமித்திரர், சுக்கிரன்

(விசுவாமித்திரர் சிந்தனையுடன் அங்குமிங்கும் நடந்து கொண்டு)

விசுவாமித்திரர்: சுக்கிரா...சுக்கிரா

சுக்கிரன் : முனிபுங்கவா என்னை எதற்காக அழைத்தீர்கள்...

விசுவாமித்திரர்: சுக்கிரா இந்திரன் சபையிலே வசிட்டன் என்னை அவமதித்து விட்டான், அயோத்தி மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரன் பொய் கூறமாட்டானாம், அவன் வாரி வளங்கும் வள்ளலாம், ம்... அரிச்சந்திரனை பொய் சொல்ல வைக்கிறேன் என்று சபதமிட்டு வந்துள்ளேன். அதன்படி அரிச்சந்திரனிடம் உதவிகேட்டுள்ளேன்..அதற்கு நீ என்னுடன் ஒத்துளைக்க வேண்டும்.

சுக்கிரன் : முனிபுங்கவா அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்.

விசுவாமித்திரர்: நான் சொல்வதைச் செய்ய வேண்டும்

சுக்கிரன் : அயோத்தி மன்னன் அரிச்சந்திரனை சத்திய வந்தனென்று உலகமே போற்றுகிறதே... அதையும் மீறி எம்மால் என்ன செய்ய முடியும்.

விசுவாமித்திரர்: என்ன செய்ய முடியுமா? என்னால் முடியும்...என் தவத்தின் வலிமையால் அவனை பொய் சொல்ல வைப்பேன்... ஆசை யாரை விட்டது. பாசத்தை வென்றவர் உலகில் யாருமில்லை. அவன் விதியைக் கொண்டே அவனைப் பொய்சொல்ல வைக்கிறேன். அதற்கு நான் சொல்வதை நீ செய்ய வேண்டும்.

சுக்கிரன் : சொல்லுங்கள் செய்கிறேன்

விசுவாமித்திரர்: நான் செய்யும் யாகத்திற்கு அவனிடமுள்ள பொன், பொருள் அனைத்தையும் வாங்கப் போகிறேன்.

சுக்கிரன் : அவன் தந்து விட்டால்

விசுவாமித்திரர்: அடுத்து அரிச்சந்திரனது ஆட்சி அதிகாரங்களைக் கேட்பேன்...

சுக்கிரன் : அதையும் அவன் தந்து விட்டால்

விசுவாமித்திரன்: எல்லாவற்றிற்கும் மேலாக அவனுக்கு பல கொடுமைகளைப் புரிவேன். தாங்கொணாத் துன்பங்கள் கொடுப்பேன் அவன் மனம் மாறுவான், வாக்குத் தவறுவான், நான் வெற்றி பெறுவேன், என் சபதம் நிறைவேறும் ... அதன் பிறகு ஏழேழுலோகத்திலும் நான் தான் பெரியவன்... நான் தான் பெரியவன், வசிட்டன் வெட்கித்தலை குனிவான் (சிரிப்பு)

சுக்கிரன் : மாமுனிவரே அடுத்து என்ன செய்யப் போகின்றீர்கள்

விசுவாமித்தரர்: நடனப் பெண்ணை அனுப்பப் போகிறேன். அவள் நடனமாடுவாள், அரிச்சந்திரன் வெகுமதி கொடுக்க முன்வருவான், மறுத்து திருமணம் செய்ய வேண்டுமென்று அவள் வற்புறுத்துவாள், அரிச்சந்திரன் திகைப்பான்...அந்த நேரம் பார்த்து நான் உள்ளே புகுவேன்..(சிரிப்பு)

### காட்சி 05

பாத்திரங்கள் (அரிச்சந்திரன் அரியணையில் அமர்ந்திருத்தல், நடனமாது வருதல்)

நடனமாது : வணக்கம்... அரிச்சந்திர மகாராஜா...

அரிச்சந்திரன் : வா நடனமாதே, வந்தகாரியம் யாதோ....

நடனமாது : தங்கள் முன்னால் நடனமாடி மகிழ்விக்க வந்துள்ளேன்...

அரிச்சந்திரன் : சரி ஆடு பார்க்கலாம்... (நடனமாது நடனமாடுதல்)

பாடல் : கலைத்தாயின் அருளோடு கலை பரப்பி புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மா மன்னா நின் நாடு வாழ்க...
மலைமகள் துணையோடு மலைபோன்று அயோத்தி காக்கும் மாவீரா நீ... வாழ்க.....வாழ்க...
திருமகள் கடாச்சத்தால் அயோத்தி மண் ஜொலிக்க வைத்த வள்ளலே நின் பாதம் போற்றி...போற்றி...
உன் புகழ்பூத்த மரபினரின் கால்பட்ட அயோத்தியிலே என் காலும் பட்டிங்கு ஆடுதையா ரதியைப் போலே...
ஆடுதையா ரதியைப் போலே.....

அரிச்சந்திரன் : ஆகா அற்புதமான நடனம்... உங்களுக்கு பரிசு அளிக்க விரும்புகிறேன். என்ன வேண்டும் கேளுங்கள்.

நடனமாது : கேட்பதைக் கொடுக்கும் வள்ளலே நான் கேட்பதை நீங்கள் தருவீர்களா?

அரிச்சந்தரன் : ஆம் தருகிறேன் கேளுங்கள்...

நடனமாது : என்னை நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும். அதுதான் எனக்கு தாங்கள் அளிக்கும் மிகப் பெரிய பரிசு..

அரிச்சந்திரன் : (அதிர்ச்சியுடன்) காவலனே இவளை வெளியே அனுப்பு... (இதே வேளையில் விசுவாமித்திரர் கோபமாக வெளியே வருதல்)

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா நீ கேட்பதைக் கொடுப்பவனென்றால், நான் அனுப்பிய பெண்ணை ஏன் மணம் செய்து கொள்ள மறுத்தாய்? அவளில் என்ன குறை கண்டாய்...

அரிச்சந்திரன் : மாமுனிவரே, எனக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது... என் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் நான் நினைப்பதில்லை... உங்கள் பெண்ணைநான் திருமணம் செய்து கொள்வது முறையாகாது... தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள்.

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா மன்னர்கள் மனது வைத்தால் மணக்க நினைக்கும் பெண்களை மணக்கலாம்...

அரிச்சந்திரன் : மன்னிக்க வேண்டும் மாமுனிவரே... நியாயமற்ற எந்தக்காரியத்தையும் நான் செய்ய உடன்படமாட்டேன்...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா நன்றாக யோசித்துத்தான் பேசுகிறாயா? என்னுடைய கடுங்கோபத்திற்கு நீ ஆளாகப்போகிறாய், அப்போது உன் கதி என்னவாகும் தெரியுமா?

அரிச்சந்திரன் : மன்னிக்க வேண்டும் முனிவரே! என் நாட்டையும் செல்வத்தையும் கூட கொடுக்கத் தயாராக இருப்பேனே தவிர, தங்கள் பெண்ணை நான் மணம் செய்யமாட்டேன் தயவு செய்து என்னை வற்புறுத்தாதீர்கள்...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா! நான் கூறியதை நீ ஏற்க மறுப்பாயே ஆனால், உன் நாட்டையும் செல்வத்தையும் எனக்குக் கொடுத்து விடு...

அரிச்சந்திரன் : முனிவரே..... நான்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா என்ன யோசிக்கிறாய்? நாட்டை எழுதித் தருவதாக சொல்லிவிட்டோமே, என்ன செய்வது என்று யோசிக்கிறாயா?

அரிச்சந்திரன் : இல்லை முனிவரே! தங்களிடம் கூறியபடி எனது நாட்டையும் செல்வத்தையும் தங்களுக்கு தந்துவிடுகிறேன் எனது வாக்கில் எந்தவித மாற்றமும் இல்லை...

விசுவாமித்திரர்: நல்லது அரிச்சந்திரா! உன் கூற்றுப்படி உன் நாட்டையும் செல்வத்தையும் எனக்கு எழுதிக்கொடுத்துவிடு...

அரிச்சந்திரன் : அப்படியே தருகிறேன்...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா! நான் கூறியபடி என்னுடைய யாகத்திற்கு நான் கேட்கும் பொருட்களைத் தருவதாக கூறினாயே அந்தப் பொருட்கள் இப்பொழுது எனக்கு வேண்டும்

அரிச்சந்திரன் : முனிவர் பெருமானே! தாங்கள் கேட்கும் பொருட்கள் அரண்மனையில் உள்ளது, அது உங்களுக்கு சொந்தமாகி விட்டது, இப்பொழுது அதை நான் தர இயலாது அல்லவா?

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா எனக்கு உன் நாட்டையும் அரண்மனையையும் வழங்கியபோது யாகத்திற்குரிய பொருட்களையும் சேர்த்து விடுவதாக சொல்லவில்லையே, அரிச்சந்திரா நீ என்னிடம் வாக்கு கொடுத்தபடி நான் செய்யப்போகும் யாகத்திற்கு உரிய பொருட்களை வழங்கவேண்டும். உன்னால் தர இயலாது விட்டால் உன்னை சத்தியம் தவறியவனென்றும், பொய்காரனென்றும் ஊரெல்லாம் பேசவைத்து விடுவேன்...

அரிச்சந்திரன் : முனிவரே தங்களிடம் கூறியபடி யாகத்திற்கு வேண்டிய அனைத்துப் பொருட்களையும் தருகிறேன், அதற்கு சில நாட்கள் அவகாசம் கொடுங்கள்

விசுவாமித்திரர்: சுக்கிரா இங்கே வா... (சுக்கிரன் வருதல்) அரச்சந்திரா உன்னை நான் நம்புவதாக இல்லை, உன் பின்னால் என்சீடன் சுக்கிரன் தொடர்ந்து வருவான். நான் கேட்டிருந்த பொருட்களை அவனிடம் கொடுத்துவிடு... இல்லையென்றால் உன்னைப் பற்றி கேவலமாகப் பேசுவேன்... உன் நேர்மை அற்ற முறையை மக்களுக்கு எடுத்துரைப்பேன். நீ இதுவரை கட்டிக்காத்த பேரும் புகளும் என்னவாகும் என்பதை நீயே தீர்மானம் செய்து கொள் (விசுவாமித்திரர் வெளியேறல்)

(சத்திய கீர்த்தி அரிச்சந்திரனைச் சந்திக்க வருதல்)

சத்தியகீர்த்தி : மகாராஜா! இதுவெல்லாம் என்ன சோதனை

அரிச்சந்திரன் : சத்திய கீர்த்தி இந்த நாடு இனி விசுவாமித்திரருக்குத்தான் சொந்தம், எனது மனைவியையும், மகனையும் அழைத்துக் கொண்டு நாட்டை விட்டுப் போகப் போகிறேன்...

சத்தியகீர்த்தி : மகாராஜா" தங்கள் முடிவை மாற்றிக்கொள்ளுங்கள்...

அரிச்சந்திரன் : சத்தியகீர்த்தி நான் கொடுத்த வாக்கை மீறமாட்டேன், நீ அரண்மனையிலே இரு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியகீர்த்தி : மகாராஜா! தங்கள் வாக்கை மீறுவதற்காக மன்னிக்கவும் தாங்கள் இல்லாத அரண் மனை... பதவி, அதிகாரம், எனக்கு வேண்டாம். நானும் உங்களுடன் வருகிறேன்...

**காட்சி 06**

பாத்திரங்கள் : அரிச்சந்திரன், சந்திரமதி, லோகிதாசன், சத்தியகீர்த்தி, சுக்கிரன்

அரிச்சந்திரன் : சந்திரமதி எமக்கு நடக்கும் சோதனைகளைப் பார்த்தாயா கொடுத்த வாக்கையும், கொடுத்த பொருளையும் திரும்பப் பெறாத எம்வம்சத் திற்கு விசுவாமித்திரரால் ஏற்பட்ட சோதனைகளைப் பார்த்தாயா, நாடு, நகர், அரண்மனை, அரசுரிமை அத்தனையையும் இழந்து விட்டேன்...இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை.

சந்திரமதி : நாதா எது வருகினும் வரட்டும் கலங்காதீர்கள்...நான் உங் களுக்கு துணையாக நிற் பேன், சத்தியம் காப்போம்...

சத்தியகீர்த்தி : மன்னா கலக்கமடைய வேண்டாம். எந்த மன்னர் மர பிற்கும் ஏற்படாத சோதனை இது... தங்களுக்கு துணை யாக நான் நிற்பேன்...

அரிச்சந்திரன் : விசுவாமித் திரருக்கு கொடுத்த வாக்குப்படி நாட்டைவிட்டு வெளியேறு வோம்... மகனே லோகிதாசா உன் தந்தை சத்தியம் காக்க வும், கொடுத்த வாக்கை காப்பாற்றவும் எந்த இன்னல் களை அனுபவிக்கவும் தயாராகிவிட்டேன்...

லோகிதாசன் : தந்தையே.. கவலையை விடுங்கள்.. வாய்மை காக்கும் மரபில் வந்தவன் நான்... எதற்கும் கலங்க மாட்டேன்...

அரிச்சந்திரன் : மகனே லோகிதாசா....என் செல்வமே...என் சந்ததி காக்க வந்தவனே..உன்னை மகனாகப் பெற்றதையிட்டு மகிழ்வடைகிறேனடா...சரி புறப்படுவோம்...சுக்கிரா வா... விசுவாமித்திரரின் யாகத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்கித்தருகி றேன். (நடந்து செல்லல்)

சுக்கிரன் : அரிச்சந்திரா நீயும் உன் குடும்பத்தினரும் படும் துன்பத் தைப் பார்க்கும் போது மிகவும் சங்கடமாக உள்ளது. விஸ்வாமித்திரருக்கு தருவ தாகக் கூறிய பொருளை தர இயலாது என்று கூறிவிட்டால், நீயும் உன் குடும்பத்தினரும் இப்படி கஸ்டப்பட வேண்டிய தில்லை..நான் உடனே சென்று முனிவரிடம் சொல்லி விடுகி றேன். உனக்கு நாடும் நகரமும் திரும்பவும் கிடைத்துவிடும்.

அரிச்சந்திரன் : எனக்கும் எனது மனைவி மகனுக்கும் என்ன தீங்கு நடந்தாலும் நான் வாக்குத் தவற மாட்டேன்.

சுக்கிரன் : அரிச்சந்திரா நீ வாக்குத்தவற மாட்டேன் என்று சொல்கிறாய் சரி...முனிவருக்கு கொடுக்க வேண்டிய பொருளையாவது கொடுத்துவிடு, நான் ஊருக்கு செல்கிறேன்....

அரிச்சந்திரன் : சுக்கிரா காசிமா நகரில் உள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களிடம் விசுவாமித்திரருக்கு சேரவேண்டிய பொருட்களை வாங்கித் தருகிறேன்.

**காட்சி 07**

பாத்திரங்கள் : அரிச்சந்திரன், விசுவாமித்திரர்

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா! நீயும் உன் குடும்பத்தினரும் அனுபவிக்கும் கொடுமைகளை என்னால் கண்டும் காணாமல் இருக்க முடியவில்லை. என் மனத்தை மிகவும் வருத்தமடைய வைக்கிறது. உன் நாட்டை உனக்கு திருப்பி அளிக்கத் தயாராக இருக்கிறேன்... உன் நாட்டையும் உனது சொத்தையும் எனக்கு தரவில்லை என்று மட்டும் கூறிவிடு! மீண்டும் அயோத்தியை ஆள்வதற்கு எந்தத் தடையும் இல்லை...

அரிச்சந்திரன் : மன்னிக்க வேண்டும் முனிவர் பெருமானே என் குடும்பமே அழிந்தாலும் சொன்ன சொல் தவறமாட்டேன்... உங்களுக்கு கொடுத்த பொருளை கொடுக்கவில்லை யென்று கூறமாட்டேன்..ஆகவே என்னை பொய் கூறுமாறு வற்புறுத்த வேண்டாம்...

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா செல்லும் வழியில் பல துயரங்களை நீ சந்தித்தாக வேண்டும்... காட்டு விலங்குகளை கடந்து செல்ல வேண்டும்..அரசனாக வாழ்ந்த உனக்கு இதெல்லாம் தேவையா? ஒரு பொய் கூறிவிடு.

அரிச்சந்திரன் : வேண்டாம் முனிவர் பெருமானே... என்னை பொய் சொல்லத் தூண்டாதீர்கள்! எந்தச் சூழ்நிலையிலும் நான் மனம் தளரமாட்டேன் என்னை மாற்றி விடலாம் என்று நினைக்க வேண்டாம் தயவு செய்து உங்கள் எண்ணத்தை மாற்றிக் கொள்ளுங்கள்..

**காட்சி 08**

பாத்திரங்கள் : விசுவாமித்திரர், சுக்கிரன்

விசுவாமித்திரர்: சுக்கிரா அரிச்சந்திரனுக்கு தொந்தரவு கொடுத்துக் கொண்டே இரு, அப்பொழுது தான் வேதனை தாங்காது அவன் மனம் மாறும், என் சபதமும் வெற்றி பெறும்.

சுக்கிரன் : ராஜகுருவே தாங்கள் எது செய்தாலும் அரிச்சந்திரனை மாற்றமுடியாது...

விசுவாமித்திரர்: சுக்கிரா என்னை யாரென்று நினைத்தாய், நெஞ்சத்திலே வஞ்சினம் மூண்டுவிட்டால் அஞ்சாது செயல் முடிக்கும் விசுவாமித்திரனடா நான் விசுவாமித்திரன், எனக்கே பாடம் புகட்டுகிறானா அந்த அரிச்சந்திரன்...அக்கினி தேவா... அரிச்சந்திரன், அவன் மனைவி, மகன் ஆகியோரைப் பொசுக்கு... ம்... (பெரும் தீ அரிச்சந்திரன் போகும் பாதையை சுற்றி வளைக்கிறது). அரிச்சந்திரன் பதட்டத்தோடு)

அரிச்சந்திரன் : சுக்கிரா! எதனால் இந்தத் தீ....

சுக்கிரன் : அரச குலத்தில் அவதரித்த ஓர் உயிரைப் பழிவாங்கிய பின்பு தான் இந்தத்தீ அடங்கும்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரன் : இந்தத் தீக்கு என்னை இரையாக்கிக் கொள்கிறேன். சந்திரதமதி, சத்தியகீர்த்தி, லோகிதாசனை அழைத்துக் கொண்டு அப்பால் சென்று விடுங்கள்.

சத்தியகீர்த்தி : மன்னா இந்தக் காட்டுத்தீ என்னை அழிக்கட்டும். தாங்கள் இவ்விடத்தைவிட்டு சீக்கிரம் சென்றுவிடுங்கள். (தீயில் விழச்செல்ல, அரிச் சந்திரன் தடுத்தல்)

அரிச்சந்திரன் : (தடுத்து) அமைச்சரே அரச குலத்தில் பிறந்தவரது உயி ரைத்தான் இந்தக் காட்டுத்தீ பலிவாங்கத் துடிக்கிறது என்று சுக்கிரன் கூறினான் அல்லவா? ஆகவே நான்தான் பலியாக வேண்டும்... எனக்குப் பின் சந்திரமதி யையும், லோகிதாசனையும் பாதுகாக்க உம்மைத் தவிர வேறுயார் இருக்கிறார்கள்... (அரிச்சந்திரன் தீயில் விழச் செல்ல சந்திரமதி தடுத்தல்)

சந்திரமதி : தாங்கள் இந்தத் தீக்கு இரை யாக வேண்டாம், என்னைப் பலிகொடுக்கிறேன்....(தீக்கு அருகே செல்லல்)

லோகிதாசன் : தாயே தாங்கள் இந்தத் தீயில் விழவேண்டாம். என்னைப் பலிகொடுத்துக் கொள்வது தான் முறை...பெற்றோர்க்கு துன்பம் ஏற்பட்டால் அதைப் போக்குவது மகனின் கடமை, என்னை இந்தக் காட்டுத்தீ... பலிவாங்கட்டும். (லோகிதாசன் தீயில் விழச் செல்லல்...)

சந்திரமதி : (கண்ணீர் ததும்ப) மகனே நீ தீக்கு இரையாக வேண்டாம் அக்கினி பகவானே! நாங்கள் வேதங்களை பழித்தது இல்லை, சத்தியம் தவறி ஆட்சி புரிந்ததில்லை, மூத் தோரை பழிக்கவில்லை. மற்ற வர் பொருளுக்கு ஆசைப் பட்டதில்லை. கற்புநெறி தவறி நடந்தது இல்லை.... இதை யெல்லாம் மீறி நாங்கள் நடந் திருந்தால், தவறுகள் புரிந் திருந்தால் காட்டுத்தீ, அக்கினி பகவானே, தீச்செல்வா... நாங்கள் மனதினால், வாக்கி னால், காயத்தினால் காயப் பட்டே எனில் தீச்செல்வா சினத்தினால் எங்களைச் சுடு இந்தத் தீ எங்களை எரித்து சாம்பலாக்கட்டும், என்னைக் கொல்லட்டும்... (காட்டுத் தீ அணைந்தது)

### காட்சி 09

(காசிமாநகரில்)

சுக்கிரன் : அரிச்சந்திரா....நீ நாட்டை விட்டு வந்து பல நாட்களாகி விட்டன! விசுவாசமித்திரரு க்கு தரவேண்டிய பொருட் களை நீர் இதுவரை தர வில்லை. நான் உன்னுடன் வந்து எனக்கு கால்வலி வந்து விட்டது. முனிவர் கூறிய பொருட்களை கொடுத்து விட்டு இந்த இடத்தை விட்டுச் செல்....

அரிச்சந்திரன் : அன்பே நம்மிடம் பொருள் இல்லை என்பதை நன்றாக அறிந்து கொண்டுதான் விசுவாமித்திரர் நம்மிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் கேட்டு சுக்கிரன் மூலம் தூண்டி இருக்கிறார் என்ன செய்வது...

சந்திரமதி : என்னையும் லோகிதாசனையும் யாரிடமாவது விற்று விட்டு அந்தப்பொருளைக் கொடுத்து, விசுவாமித்திரருக்கு கொடுத்த வாக்கைக் காப்பாற்றுங்கள்...

அரிச்சந்திரன் : இது என்ன கொடுமை, மனைவியையும் மகனையும் விற்றுவிட்டு எப்படி வாழ்வது?

சந்திரமதி : நாதா இதில் தாங்கள் வருத்தப்பட வேண்டாம், விதியின் கொடுமையை எண்ணி நாம் துன்பத்தைத் தாங்கிக் கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை... எங்களை விற்றுவிட்டு அதன்மூலம் பெறும் பொருட்களை விசுவாமித்திரரிடம் கொடுத்து விடுங்கள்... இதுதான் இப்போதைக்கு சாத்தியப்படக் கூடிய வழிமுறை....

அரிச்சந்திரன் : அன்பர்களே....செல்வச் சீமான்களே! என் மனைவியையும், மகனையும், விதி வசத்தால் விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறேன். இவர்களை விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்....

காலகண்ட ஐயர்: நான் இவர்களை வாங்கிக் கொள்கிறேன். என்ன விலை தரவேண்டும்.

அரிச்சந்திரன் : ஐயா ஒரு யானையின் மேலிருந்து கல்லை எறிந்தால் அந்தக்கல் போகும் அளவிற்கு உரிய பொன்தான் இவர்களுக்கு தரும் விலையாகும்.

காலகண்ட ஐயர்: சரி தருகிறேன்...

அரிச்சந்திரன் : அந்தணரே...பொருளை இவரிடம் கொடுத்து விடுங்கள்... சுக்கிரா வாங்கிக் கொள்...

சுக்கிரன் : (பொருளை பெற்றுக் கொள்ளல்) விசுவாசமித்திரர் கூறியபடி பொருளை பெற்றுக் கொண்டோம்.

அரிச்சந்தரன் : (கண்ணீர் மல்க) சந்திரமதி லோகிதாசனையும் கூட்டிக் கொண்டு அந்தணருடன் செல்லுங்கள். (சந்தரமதி பிரிவுத்துயர் தாங்காது அழுதல்)

அரிச்சந்திரன் : (சுக்கிரனைப் பார்த்து) ஐயா இன்னும் ஏன் இங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்.

சுக்கிரன் : விசுவாமித்திரருக்கு தர வேண்டிய பொருட்களைக் கொடுத்துவிட்டீர், இது நாள் வரையில் இரவுபகல் பாராமல் பல நாட்கள் உங்களோடு வந்தேனே அதற்கான கூலியைக் கொடுத்துவிட்டால் நான் உடனே போய்விடுவேன்...

சத்தியகீர்த்தி : சுக்கிரா! என்ன கூறுகிறாய்...

அரிச்சந்திரன் : அமைச்சரே...இப்போதுதான் நீர் பொறுமை காக்க வேண்டும்.... சத்தியகீர்த்தி என்னை விற்றுவிட்டு சுக்கிரனுக்கு தரவேண்டிய கூலியைக் கொடுத்து விடுங்கள்...

சத்தியகீர்த்தி : பார்புகழும் உங்களை விற்பதா? இது என்ன கொடுமை, வேண்டாம் அரசே! என்னை விற்றுவிடுங்கள், அந்தக் கூலியை சுக்கிரனிடம் கொடுத்து விடலாம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரன் : அமைச்சரே வேண்டாம்... எனக்காக தங்களை விற்பது நீதியாகாது நேர்மை யாகாது என்னை விற்றுவிட்டு, சுக்கிரனிடம் கூலியைக் கொடுத்துவிடுங்கள்.. இனியும் தாமதிக்க வேண்டாம்....

சத்தியகீர்த்தி : (கதறி அழுதல்) அரசே... இது என்ன கொடுமை...

அரிச்சந்திரன் : அமைச்சரே தயங்க வேண்டாம்...

சத்தியகீர்த்தி : கனவான்களே! சீமான்களே வாங்குவோர் உண்டா, இவரை வாங்குவார் உண்டா (தோட்டி வருதல்)

வீரவாகு : இவரை நான் விலைக்கு வாய்குகிறேன்...

சத்தியகீர்த்தி : நீயா இவரை வாங்கப் போகிறாய்?

அரிச்சந்திரன் : அமைச்சரே இவரிடமே என்னை விற்றுவிடுங்கள்.

வீரவாகு : சரி நான் இவருக்கு பதினான் காயிரம் பொன் தருகிறேன்...

சத்தியகீர்த்தி : சரி தாருங்கள்,... சுக்கிரா இந்தா உன் கூலி...(கதறி அழுகிறான்)

(அரிச்சந்திரனை வீரவாகு அழைத்துச் செல்லல்)

வீரவாகு : அரிச்சந்திரா உனக்கு என்ன வேலை என்பதைச் சொல்கி றேன். நன்றாகக் கேட்டுக் கொள் இந்தச் சுடுகாட்டைக் காவல் காக்கும் வேலை உன்னுடையது. இங்குவரும் ஒவ்வொரு பிணத்திற்கும் முழத்துண்டும், தட்சனை கால் பணமும், கால்படி வாய்க் கரிசியும் தருவார்கள். அதில் முழத்துண்டையும், கால் பணத்தையும் பத்திரப்படுத்தி எனக்கு கொடுத்துவிட வேண்டும். வாய்க்கரிசியை நீ எடுத்துக் கொண்டு போய் பொங்கிச் சாப்பிடு....

அரிச்சந்திரன் : சரி...அப்படியே செய்கிறேன்

### காட்சி 10

(பல நாட்களின் பின்)

(அரிச்சந்திரனை தேடி அலைந்த சத்திய கீர்த்தி சுடலையில் சந்திக்கிறான்)

சத்தியகீர்த்தி : அண்ணலே தங்களை இப்படிப்பட்ட இடத்திலையா நான் சந்திக்க வேண்டும்... மனுநீதி கண்ட மன்னா, வையகம் போற்றிடும் வள்ளலே உனக்கு இந்த நிலையா...

அரிச்சந்திரன் : சத்திய கீர்த்தி...விதியை வெல்ல யாரால் முடியும்... முன் வினைப் பயனால் என்ன காரியம் நடக்க இருக்குமோ அதெல்லாம் நடந்துதானே ஆகும் ... கலங்காதே அன்புள்ளவனே திடமாக இரு...

காட்சி திரும்பல் (தேவ லோகத்தில் விசுவாமித்திரர்)

விசுவாமித்தரர் : அரிச்சந்திரா இதுதான் சந்தர்ப்பம் உன்னை வாக்கு தவறவைப்பேன்....காலகண்ட ஐயர் வீட்டில் இருக்கும் உன் மகன் லோகிதாசன் தர்ப்பை கொய்யப்போய் அரவம் தீண்டி இறந்து விட்டான். உன் மனைவி சந்திரமதி நீ காவல்காக்கும் சுடலைக்கே உன்பிள்ளையைத் தகனம் செய்ய கொண்டு வருகின் றாள்.. என்ன நடக்குதென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் பார்த்து விடுகின்றேன்...

காட்சி திரும்பல்: (அரவம் தீண்டி இறந்த லோகிதாசனை சந்திரமதி அணைத்துக் கொண்டு)

சந்திரமதி : ஐயோ மகனே லோகிதாசா நீ அரவம் தீண்டி இறந்து விட்டாயா? நாம் என்ன பாவமடா செய்தோம், எமக்கேன் இத்தனை சோதனைகளும், வேதனைகளும், என் செல்வமே...உன் தந்தை, என் மகன் எங்கே என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்.. உன்னை இந்தக் கோலத்தில் காண எனக்கு காலம் தந்த பரிசா இது... கடவுளே யாருக்கும் தீங்கு நினைக்காத எமக்கு இது என்ன சோதனை... (மகனை சுமந்து கொண்டு சுடலைக்கு செல்கிறாள்..)

சந்திரமதி : (லோகிதாசனை சுடலையில் கிடத்திவிட்டு கதறி அழுகிறாள்)
எமக்கு கொள்ளி இடுவாய் என்று எதிர்பார்த்தேன். உனக்கு கொள்ளி இடவைத்து விட்டதடா...எம்விதி...(கட்டை அடுக்கி கொள்ளி வைக்கிறாள் இதே நேரத்தில்)

அரிச்சந்திரன் : ஏ பெண்ணே என்ன காரியம் செய்கின்றாய், என் அனுமதி இல்லாமல், இந்த நள்ளிரவில் பிணத்தை எரிக்கின்றாயே... நீயார்....

சந்திரமதி : ஐயா நானொரு அபலை, என் மகன் அரவம் தீண்டி இறந்து விட்டான்...

அரிச்சந்திரன் : அதற்கு இப்படித் திருட்டுத்தனமாகப் பிணத்தை எரிக்க வேண்டுமா?

சந்திரமதி : ஐயா எனக்கு யாருமில்லை..

அரிச்சந்திரன் : எனக்குத் தரவேண்டிய கூலியைத் தந்துவிட்டு நீ பிணத்தை எரிக்கலாம்... (சடலத்தை தள்ளி விடல்)

சந்திரமதி : (கதறி அழுது கொண்டு) ஐயா என்னை மன்னித்து விடுங்கள்.. உங்களுக்கு கூலி தரவேண்டும் என்று எனக்குத் தெரியாது...

அரிச்சந்திரன் : ஏ! பெண்ணே... என்ன பொய்யா சொல்கிறாய்... என் கூலியைக் கொடுக்காமல் நீ பிணத்தை எரிக்க முடியாது.

சந்திரமதி : என்னிடம் எந்தப் பொருளும் இல்லை. நான் ஒரு அந்தணருக்கு அடிமையாக இருக்கிறேன். தயவு செய்து என் மகனை எரிப்பதற்கு அனுமதி கொடுங்கள்... (தோட்டியின் காலைப் பிடிக்கிறாள்)

அரிச்சந்திரன் : பெண்ணே பிணத்தை எரிப்பதற்கு முழத்துண்டும், கால் பணமும், கால்படி வாய்க்கரிசியும், வாங்க வேண்டும் என்பது என் எசமானரின் உத்தரவு. கால் பணமும் முழத்துண்டும் என் எஜமானருக்குப் போய்ச் சேரவேண்டும்... வாய்க்கரிசி என்னுடைய கூலியாகும்... எனது கூலியை நீ தரவேண்டாம்....மற்றதை நீ எப்படி யாவது தரத்தான் வேண்டும்....

சந்திரமதி : ஐயா என்னிடம் எந்தப் பொருளும் இல்லை..தயவு செய்து என் மகனுக்கு கொள்ளியிட விடுங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தோட்டியின் காலைப் பிடித்துக் கெஞ்சுகிறாள்)

அரிச்சந்திரன் : (அவளின் கழுத்தில் தாலி தொங்குவதைக் கண்டு விட்டு ஆத்திரத்துடன்)
ஏ பெண்ணே பொய்யா சொல்கிறாய். பொன் இல்லை, பொருள் இல்லை, உதவியில்லை, ஆருமற்றவள் என்று பாசாங்கு செய்கிறாயா? கள்ளி, நீலிக் கண்ணீர் வடிக்கிறாயா? நீலிஇ விலை மதிப்பற்ற மாங்கல்யத்தை அணிந்து கொண்டு என்னை ஏமாற்றுகிறாயா மோசக்காறி....

சந்திரமதி : கடவுளே இதென்ன சோதனை என்னுடன் பிறந்த இந்த மாங்கல்யம், என் கணவரைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது என்று கடவுள் எனக்கு அளித்த வரம் தவறிவிட்டதே, சுடுகாடு காப்போனுக்கு இந்த மாங்கல்யம் தெரிந்து விட்டதே இதற்கு விசுவாமித்திர முனிவர்தான் காரணமாக இருக்க வேண்டும்.. கடவுளே நான் என்ன பாவம் செய்தேன் இன்னும் ஏன் நான் உயிரோடு இருக்க வேண்டும்..நான் இறப்பது தான் நியாயம்...

அரிச்சந்திரன் : (வந்திருப்பவள் சந்திரமதி தான் இறந்தது தன்மகன் லோகிதாசன் தான் என்பதை புரிந்து கொண்டான்) ஐயோ சந்திரமதி நான் தான் அரிச்சந்திரன்...என் மகன் லோகிதாசனா அரவம் தீண்டி இறந்தது.. ஐயோ என்மகனே இறந்து விட்டாயா? உன்னை எனி எப்போது காண்பேன்... என் மகனை அந்த அந்தணருக்கு விற்றதால் தான் இந்தக் கொடுமை நிகழ்ந்தது... மனைவியையும், மகனையும் காப்பாற்ற முடியாத மாபாவியாகிவிட்டேனே....
(கலங்கினான் – கதறினான்)

சந்திரமதி : (அரிச்சந்திரனின் காலில் விழுந்து) நமது துயரத்துக்கெல்லாம் காரணம் நாம் முற்பிறவியில் செய்த பாவம்தான். கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்று குறிக்கோளுடன் இருந்தபடியால் இத்தனை துன்பங்களும் நேர்ந்திருக்கிறது...பரவாயில்லை நீங்கள் வருந்த வேண்டாம், சத்தியம் தவற வேண்டாம்...கலங்காதீர்கள் நாதா...

அரிச்சந்திரன் : சந்திரமதி வீரவாகுவின் அடிமையாகிய நான் முழத்துண்டும் கால்பணமும் பெறாமல் பிணத்தை எரிப்பது முறையாகாது, அந்தணரிடம் சென்று அதை வாங்கி வா...

சந்திரமதி : நாதா காலகண்ட ஐயரிடம் சென்று அதை வாங்கி வருகிறேன்...
(புறப்பட்ட சந்திரமதி வழியில்)

சந்திரமதி : ஐயோ என்மகனின் உடல் இங்கு எப்படி வந்தது.. இதெல்லாம் விசுவாமித்திரரின் மாஜா ஜாலம் தான்...
(அசரீரிக்குரல் ஒலிக்கிறது)

விசுவாமித்திரர்: கொள்ளையர்களால் கொல்லப்பட்ட காசிராஜனின் மகனின் கொலையை சந்திர





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியின் மேல் போட்டு விட்டேன். சந்திரமதி தண்டிக்கப் படுவாள், அதற்கு அரிச்சந்திரன் என்ன செய்கிறான் என்று பார்ப்போம்....

காவலன் : எம் இளவரசனைக் கொன்று விட்டாய் பாதகி...(இழுத்துச் செல்லல்)

காசிராஜன் : காவலனே.. இந்தப் பெண் என்ன குற்றம் செய்தாள்.

காவலன் : அரசே... இந்தப் பெண் தங்கள் மகனை கடத்திக் கொண்டு போய் கொலை செய்திருக்கிறாள். இவளை கையும்களவுமாகப் பிடித்து வந்திருக்கிறேன்...

காசிராஜன் : என்ன என்மகன் கொல்லப் பட்டு விட்டானா? என்ன நடந்தது, காவலனே சொல்....

காவலன் : ஆம் அரசே பொன் பொருளுக்காக இந்தப் பெண்ணே கடத்திச் சென்று எம் இளவலைக் கொன்றுவிட்டாள்...

காசிராஜன் : பெண்ணே... இவர்கள் சொல்வது உண்மையா என்மகனை நீயா கொலை செய்தாய்......

சந்திரமதி : அரசே...இவர்கள் கூறுவது உண்மைதான் உங்கள் மகனை கொலை செய்தது நான் தான்....

காசிராஜன் : பெண்ணே... நான் நீதி தவறாதவன், உண்மையைச் சொல், நீயா என் மகனைக் கொன்றாய்

சந்திரமதி : உண்மைதான் அரசே நான் தான் கொன்றேன்...

காசிராஜன் : காவலனே...வீரவாகுவிடம் சென்று...இவளுக்கு மரண தண்டனை வழங்கச் சொல்

**(காட்சி) II**

பாத்திரங்கள் (வீரவாகு, அரிச்சந்திரன், விசுவாமித்திரர், சந்திரமதி)

வீரவாகு : அரிச்சந்திரா! இந்தப் பெண் காசி அரசனின் மகனை கடத்தி பொன் பொருளுக்காக கொலை செய்திருக்கிறாள். இவளுக்கு மன்னர் மரண தண்டனை விதித்திருக்கிறார், நீ இவளது தலையை வெட்டி விடு...

அரிச்சந்திரன் : இது என்ன கொடுமை கடவுளின் திருவிளையாடலில் இதுவும் ஒரு காட்சியா....

சந்திரமதி : நாதா சத்தியம் தவறாமல் ஆட்சிபுரிந்த வம்சத்தில் வந்த நீங்கள் கலங்கக்கூடாது. உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள்..தயங்காதீர்கள் (விசுவாமித்திரர் வருதல்)

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா உன்னிடம் நான் பெற்ற நாட்டையும், நகரத்தையும் எனக்கு கொடுக்கவில்லை என்று மட்டும் சொல்லிவிடு...இப்பொழுதே உன் நாட்டிற்குச் சென்று மனைவி மக்களுடன் மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்தலாம். உன் அரசாட்சியைத் தொடரலாம்...

அரிச்சந்திரன் : உயிர் பிரிந்தாலும் சத்தியம் தவறுவதில்லை. முனிவர் பெருமானே என்முடிவில் எந்த மாற்றமும் இல்லை, என் உயிர் பிரிய நேரிட்டாலும், சத்தியம் தவற மாட்டேன். இன்னும் எத்தனை சோதனைகள் நேரிட்டாலும் கலங்க மாட்டேன்.. நரகத்திற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்படுவேன் என்றாலும் சத்தியத்தை எக்காரணம் கொண்டும் தவறவிடமாட்டேன்

சந்திரமதி : (அரிச்சந்திரனது பாதங்களைத் தொட்டு வணங்கினாள்) தாங்கள் கடமையில் இருந்து தவறாமல் தங்களுக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்...

அரிச்சந்திரன் : (வாளை எடுத்தான்) இறைவா தர்ம சாஸ்த்திரத்தில் சிறந்தது சத்தியம் என்பது உண்மையானால்....என் மனைவி கற்பில் சிறந்தவள் என்பது உண்மையானால், என் வம்சம் சத்தியம் தவறாதது என்பது உண்மையானால், இந்தவாள் தன் பணியைச் செய்யட்டும்...(வாளை ஓங்கினான்)

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா நில்... சந்திரமதியின் தலையை வெட்டப் போகிறாய் என்பதை மறந்து விடாதே...

அரிச்சந்திரன் : சத்தியத்திற்காகவும், கொடுத்த வாக்கிற்காகவும், ஏற்ற பணிக்காகவும் எடுத்த காரியத்தை கைவிடமாட்டேன்...(அரிச்சந்திரன் வீசியவாள், சந்தரமதியின் கழுத்தில் மாலையாய் விழுந்தது)

விசுவாமித்திரர்: அரிச்சந்திரா எனக்கும் வசிட்டருக்கும் நடந்த விவாதத்தில் உன்னை சோதிப்பதற்காக, நானும் சிவபொருமானும் சேர்ந்து செய்த நாடகம்தான் இது...லோகிதாசனும், காசிராஜன் மகனும் உயிர் பெறுவார்கள்...நீ இத்தனை நாளும் காத்தது மயானம் அல்ல, யாகசாலை!
உண்மையில் நீ சத்தியவந்தன் தான்...
வாய்மை காத்த அரிச்சந்திரன் தான்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோழ மன்னர் கோப்பெருஞ் சோழனும் , புலவர் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் பார்த்ததும் இல்லை; பழகியதும் இல்லை; ஆனால் அவ்விருவரும் ஒருங்கிணைந்த உள்ளத்தினர். அதனால் அவர்கள் உயிரும் சிறந்த உத்தம நண்பர்கள் ஆயினர். மன்னரின் வடக்கிருத்தலுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் போது மன்னர், "எனது நண்பர் பிசிராந்தையாரும் என்னுடன் வடக்கிருத்தலுக் காக வருகிறார். அவருக்கும், சேர்த்து எற்பாடு களை செய்யவும்" என்று ஆணையிட்டார். அவர் கூறியது போலவே வடக்கிருக்கும் நாளன்று பிசிராந்தையாரும் அங்கு வந்து வடக்கிருந்து மன்னருடன் உயிர் நீர்த்தார்.

சார்லீன் புக்கின்ஸின் "ரேல் ஒப் டு சிட்டீஸ்" (Tale of too cities) என்ற படைப்பின் கதாநாயகன் சிட்னி கார்டன் என்பவன் அவன் காதலித்த பெண்ணையே தனது நண்பனும் காதலிக்கிறான், மணம் செய்யவிரும்புகிறான் என்பதையறிந்தும், அவளை தன் நண்பனே மணந்து கொள்ள இசைந்தான்.

இவ்வாறு நட்பிற்காக உயிரையும், காதலையும் துறந்த சம்பவங்களை இலக்கியத்தி லும் கதையிலும் காணமுடியுமே தவிர, நடைமுறை வாழ்க்கையில் காண்பது அரிதினும் அரிது; காணமுடியாத ஒன்று. ஆகவே யதார்த்த வாழ்க்கயில் செயற்படுத்துவதற்கேற்ப நட்பும் நண்பர்களும் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை அறிவுறுத்தும் பத்து குறட்பாக்களால் ஒன்றிணைந்து.....

மனிதனுக்கு மனிதன் உதவும் மன நிலையை வைத்து மனிதர்களை மூன்று வகையாக பிரித்துள்ளார்கள். பல நூற்றாண்டு களுக்கு முன்பே ஔவையார் முதல் கொண்டு பலரும் "சொல்லாமல் செய்வோர் பெரியோர்இ சொல்லிச் செய்வோர் சிறியோர்இ சொல்லியும் செய்வோர் கயவர் எனவும் பிறருக்காக வாழ்ப வன் மனிதருள்தேவன் தனக்காகவும் பிறருக்கா கவும் வாழ்பவன் மனிதருள் மனிதன் தனக்காக மாத்திரம் வாழ்பவன் விலங்கு எனவும் வகைப் படுத்தி உள்ளனர்.

மனிதனுக்கு நேரும் பலவித இடையூறு களும் துன்பங்களும் பெரும்பாலும் வறுமை, பணமின்மையாலேயே ஏற்படுகிறது. அதனபல் பணஉதவியை நாடுவது பலரது வாழ்க்கையில் நிகழும் தவிர்க்க முடியாத செயல். அவ்வாறான ஒரு சராசரி மனிதனின் மகனுக்கு நல்லதோர் உயர்படிப்பு (பொறியியல், மருத்துவம், போன் றவை) படிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்ததை அறிந்து, அருடன் பழகிய நண்பர்கள் அவருக்கு வாழ்த்துக்கூறி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். அது அவருக்கு மகிழ்ச்சியையும் பெருமையை யும் அள்த்தஅதன்றாலும், உடனே வெளிவூரி லுள்ள பல்கலைக்கழகத்தில் கொண்டு போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனைச் சேர்ப்பதற்கு வேண்டிய பணவசதியில் லாததால் கலங்கினர்: வருந்தினர். அந் நிலை யில் பிறரிடம் கடனுதவி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை, தயங்கினார். இருப்பினும் மகனது எதிர்கால நலநன எண்ணி அதனை செய்ய தீர்மானித்தார்.

வாழ்த்திய நண்பர் ஒருவரிடம் தம் நிலையைக் கூறினார். அந்த நண்பரிடம் பணம் இருக்குமளவிற்குக் கொடுத்துதவும் மனம் இல்லை. அதனால் சில கற்பனைக் காரணங் களைக்கூறி உதவ இயலாமைக்கு வருந்துவதா கவும் சொன்னார். வரும் இவரைப் போன்றவ ருமே கயவர். மனதுக்குள் விலங்கு என்று கருதப்படுவார்கள்..........................................

தங்களுக்கு தேவைப்படும் பணம் என்னிடம் உள்ளது. அது வேறொரு செயலுக் காக வைத்துள்ளேன். இருப்பினும் அதனைத் தந்துதவுகின்றேன் என்றார். இவரும் இவரை யாகத் மனமுடையோரும் சிறியோர், மனிதருள் மனிகன் எனக் கூறப்படுவார்கள்.

வேறொரு நண்பர் அவரை மனமார வாழ்த்திவிட்டு உங்கள் நிலைமை எனக்குத் தெரியும் பணம் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். மகனின் வாழ்வு சிறப்புறுவதற் கேற்ற நல்ல படிப்பு உடனே பல்கலைக்கழகத்தில் சேர்க்கவும் என்று கூறி அப்பணத்திற்கான காசோலையையும் அப்போதே அவரிடம் கொடுத்தார். இவரைப் போன்று குறிப்பறிந்து அவர் கேட்காமலேயே உளமுவர்ந்து உதவுப வர்கள் தான் பெரியோர் மனிதருள் தேவன் என்று புகழத்தக்கவர். மேற்கூறிய மூவகையி னரில் கடைசியாக விபரிக்கப்பட்டவரே ஈராயி ரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை நட்பிற்கு வகுத்த இலக்கணத்தின் நாயகன் நல்ல நண்பன்.ஏனெனில் ஒருவன் உடுத்திய ஆடை அவிழ்ந்து விழ நேரிடும் போது அவன் சொல்லா மலேயே அவனது கைகள் சரி செய்வது போல் நண்பருடைய நிலை அறிந்து அவர் கேட்காம லேயே அவருக்குத் தேவையான உதவியைச் செய்து அவர் துயர் துடைப்பதே நட்பு என்ற இலக்கணத்தைக் கூறும்

**"உடுக்கை யிழந்தவன் கை போல் ஆங்கே**
**இடுக்கன் களைவதாம் நட்பு"**

**குறள் 788**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலியுகத்தில் அமைதியாய் வாழ

கலாபூஷணம்
திருமதி செல்வராணி சோமசேகரம்பிள்ளை
செயலாளர்
கிளி மாவட்ட சைவ மங்கையர் கழகம்

**"நாளது ஒன்று போற் காட்டி – உயிரீரும்
வாளது உணர்வார் பெறின்"**

கலியுகம் 4,32000 வருடங்களைக் கொண்டது. மனிதவாழ்வு நிலையற்றது. மரணம் என்னும் கம்பத்தை நோக்கி தினசரி அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றோம். இரவும் பகலும் புவிச்சுழற்சியினால் ஏற்பட்டு நாட்கள் ஒவ்வொன்றாக நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நாட்களானது எமது உயிரினை அறுக்கும் வாள் என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்தை கொள்கின்றோமா? எனின் இல்லை என்பதே பதிலாக அமைகின்றது. ஒவ்வொரு மானிடனும் அமைதியாகவும் மகிழ்வாகவும் வாழவே விரும்புகின்றான்.ஆனால் "நில்லாதவற்றை நிலையென என்றுணரும் புல்லறி வாண்மை கடை"

என்ற தெய்வத் திருமொழிக் கொப்ப நிலையற்ற பொருட் செல்வத்தினை தேடுவதி லையே தனது வாழ்நாளில் பெரும் பகுதியை அமைதியின்றிச் செலவு செய்கின்றான். நிலைத்த பேரிண்பத்தினை அளிக்கும இறை அன்பில் ஈடுபட, ஆலய வழிபாட்டினைச் செய்ய மனம் ஒருப்படுகின்றாரில்லை. கலியுகத்தில் நாம் அமைதியாய் வாழ இறைக்குப் பிரியமான நாமஜெபம், பஜனை, அர்ப்பணம், சரணாகதி ஆகியவற்றில் ஈடுபட முற்படுகின்றோமில்லை. இவற்றை இடைவிடாது நம்பிக்கையோடு செய்வதற்கு பக்தியும் இறை நம்பிக்கையும் முக்கியமாகும். இவற்றை வேதங்கள் எமக்கு உணர்த்துகின்றன. கீதை சொன்ன கண்ணனும் அதையே சொன்னார். இராமகிருஸ்ண பரமஹம்சர், சாரதாமணி, விவேகானந்தர், சத்தியசாய்பாபா, ஆறுமுகநாவலர் போன்றோரும் இதையே கூறினார்கள். கூறியதோடு மட்டுமில்லாமல் வாழ்ந்தும் காட்டினார்கள்.

நாம் அன்றாடம் கோயிலுக்கு செல்கின்றோம் பூசை விழாக்களில் கலந்து கொள்கின்றோம். இவற்றை விட உலக நன்மை கருதி யாகங்கள் ஹோமங்களையும் செய்கின்றோம். இவைகள் பயனைத்தர உலகில் நன்மைகள் விளைய நல்ல சத்சங்கங்கள், சொற்பொழிவு கள், கூட்டுப்பிரார்த்தனைகள் போன்றவற்றை கோயில்களில் நிகழ ஒழுங்குகள் செய்வோமாயின் நன்மை விளையும் நல்ல நூல்களையும் அவற்றின் பொருள் உணர்ந்து வாசிக்கும் அறிவினையும் வளர்க்க வேண்டும். நாம சங்கீர்த்தனம் நற்சிந்தனையை ஊட்ட வல்லது.

இன்றைய காலகட்டத்தில் இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டிருந்தாலும் இவற்றின் வலிமையால் அமைதி நிலவாமல் சாந்தி இன்மையும் குழப்பமும் விளைய காரணம் இவற்றில் பூரண நம்பிக்கை இல்லாமையும் நம் நடைமுறை வாழ்க்கையில் இவற்றை கடைப் பிடிக்காமையே ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறம் இவ்வாறு நல்ல நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது மறுபுறம் ஊழல், இலஞ்சம், கொலை, களவு, மதுப்பிரியர் களின் ஆர்ப்பாட்டம் இசிறுவர் துஸ்பிரயோகம் ஆகியவை மக்களை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

**"களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும்"**

நீண்ட நாட்களாக பாடுபட்டுச் சேர்த்த பொருட்களை ஒருசில நிமிடங்களிற் கவர்ந்து செல்லும் கள்வர்களின் ஆக்கம் அல்லது உயர்வு உயர்வது போன்று தோன்றினாலும் இறுதியில் கெட்டழிந்து போகும். இஃது கண்கூடு. அறவழி களிலன்றி பொருள் சேர்ப்பது அமைதியான வாழ்வினை சிதைத்து விடும் என்பதை ஏனோ உணர்கின்றார்களில்லை. அமைதியின்றேல் வாழ்வு போராட்டமாகவே அமையும்.

பணத்திற்காக, ஆடம்பரத்திற்காக எதையும் செய்யும் அளவிற்கு பணப்பேய் மனிதரை பிடித்தாட்டுகின்றது. நல்லவற்றை இளைய சமூதாயம் ஏற்றுக்கொள்ள முடியாமல் சிதைந்து போய்க்கொண்டிருக்கிறது. காரணம் நடைமுறை வாழ்க்கை வேறு சமய போதனை கள் வேறாக இருப்பதுதான். தென்னிந்திய திரைப்படங்கள் எமது இளைய தலைமுறை யினரின் கலை, கலாச்சாரம், நடைஉடை பாவனை ஆகியவற்றை முற்றாகவே சிதைத்து விடும் போல தெரிகின்றது. ஆடைகளை அரை குறையாக அணிந்து அங்கங்களை யாவர்க்கும் காட்டுவதுதான் உகந்தது என்ற மனோபாவம் எம்மிடையே தோற்றம்பெற்று நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. என் கணவன் கள்வனா? என்று தலைவிரி கோலமாக பாண்டி யனின் அரண்மனை சென்றாள் கண்ணகி. துச்சாதனனால் துகிலுரியப்பட்ட பாஞ்சாலி, எனது கணவன் வீமனால் துச்சாதனனின் தொடையைக் கிளித்து அந்த இரத்தத்தினை என் தலையில் பூசும்வரை தலைமுடியேன், என தலை விரித்தாள் ஆனால் இன்று இச்சோகமய மான கோலத்தினை தாயும் மகளும் சம காலத்தில் ஏற்று தலைவிரி கோலமாக வீதிகளில் மட்டுமன்றி ஆலயத்தினுல் சென்று ஆகம விதியையும் ஆறுமுக நாவல பெருமான் கூறிய கூற்றையும் அசட்டை செய்கின்றனர் இது தவறென்று ஆலய பரிபாலன சபையினரோ அன்றி அந்தணப்பெருமக்களோ பகர்கின்றிலர். இஃது பெரும் சாபக்கேடாகும். ஒருத்தனுக்கு ஒருத்தி எனும் அறநெறிக் கோட்பாட்டினை மீறி நடக்கும் சமூதாயத்தில் சாந்தியும் அமைதியும் ஏற்படுமா? நல்லது தீயது எது என்று தெரிந் திருந்தும் அதைக்கடைப்பிடிக்க முடியாதுள்ளது. இதற்கு காரணம் தன்னம்பிக்கை இன்மையே ஆகும். எதிரிகளான துஷ்ட சக்திகள் எம்மை அணுகாதிருக்க எப்போதும் இறைவன் நாமத்தை ஜெபித்துக் கொண்டே எமது கடமைக ளைச் செய்ய வேண்டும். இவற்றைப் பணி நேரங் களில்கூட இருப்பவர்களுக்கு இடையூறின்றி மனத்தினுள் நமக்கு மட்டும் கேட்கக்கூடியதாகச் சொல்ல வேண்டும். ஒவ்வொருவருக்கும் இறை வனின் ஒவ்வொரு ரூபம், நாமம் நம்பிக்கை யைத் தரலாம். ஆதலால் அவரவர் விரும்பிய நாமத்தை ஜெபிக்கலாம். விரும்பிய ரூபத்தினை வழிபடலாம். கடவுள் ஒருவரே நாம ரூபங்கள் எல்லாமே அந்த ஒரே கடவுளுடையவை தான் என்ற நம்பிக்கை முக்கியம்.

இவ்வாழ்க்கை முறையை பெற்றோர் வாழ்வில் கடைப்பிடிப்பதோடு தமது பிள்ளை களுக்கு இளமைப்பருவத்திலையே இந்த நம்பிக்கையை ஊட்டி வளர்க்க வேண்டும். பள்ளிப்படிப்பிற்கு முக்கியத்துவம் தருவதுடன் ஒழுக்கத்திற்கும் முக்கியத்துவம் அளித்து கோவில் சற்சங்கங்கம் முதலியவற்றுக்கு பிள்ளைகளை அழைத்துச்செல்ல வேண்டும். உடலிற்கு சத்தான உணவைக் கொடுப்பதோடு உள்ளத்திற்கும் வாழக்கைக்கும் சத்தான கடவுள் நம்பிக்கையை ஊட்டும் கதைகளையும் பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் வாழும் மக்களில் பலர் பேராசையை உடையவர்களாக காணப்படுகின் றனர். வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து மனத் திருப்தியின்றி வாழ்கின்றனர்.

**"யாதெனின் யாதெனின் நீங்கியான நோதல்**
**(அ)அதனின் அதனின் இலன்"**

எப்பொருளிலிருந்து எப்பொருளி லிருந்து பற்றுக்கள் இல்லையோ அப்பொருளி லிருந்து அப்பொருளிலிருந்து துன்பமில்லை. ஆசையே துன்பம் எல்லாவற்றிற்கும் காரண மாகின்றது. துன்பமிருந்தால் எப்படி யாம் அமை தியாக வாழமுடியும் எனவே பேராசையை களைந்து விட்டு அமைதியையும் சாந்தியையும் பேணுதல் வேண்டும். இதன் முலம் நிம்மதியா கவும் அமைதியாகவும் வாழ முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2012













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் சிந்தனைகள்

தமிழன்

மனிதர்களே! மனிதர்களே!!
மனிதத்தை தொலைத்து விட்ட மனிதர்களே!
ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!!
ஓட்டை விழுந்து விட்ட ஓசோன் மண்டலத்தை.
பாாக்க முடியவில்லை எனினும்...
கேட்க முடிகிறது அந்தக் குரலை.

போக்க முடியாத பதை பதைப்பு வெயிலில்.
யாக்கை துடித்துத் துடித்துச் சோர்கிறது.
குளிரூட்டிகளால் வந்த பதை பதைப்பு என்று
களிப்படையவா முடியும்?
பாவம் அறிவியல்....!
தாகம் அளவு மீறிப் போனதால்.....
காரணத்தைக் கண்டறிந்தது அறிவியல்
வாரணப்பலத்தோடு வெப்பம் சிரித்தது.

அறிவியல்......
அனைத்தையும் அறிவதே!
அதனால் அறிந்தது.
நிவாரணமாகக் குளிரூட்டி (A/L Room, Fridge) கண்டுபிடிக்கப்பட்ட
அப்பாடா! என்று மனித மனம் அமைதி கொண்டது.
சூரியனைத் தேவ தேவனே என்று வழிபட்டவரெல்லாம்....
ஆரியப் பிசாசுகளின் ஆகாத கதைகளையெல்லாம்
குப்பைக்குள் கொட்டிக் குதூகலித்தது.
சூரியனே உன்னால் முடியுமா? எம்மைச் சுட என்று
எக்காளமிட்டுச் சிரித்தான் மனிதன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியலின் ஆதர்சமான அணைப்பு.
வெப்பத்தின் கொடுமை தணிக்கப்பட்டது.
அறிவியலின் உழைப்பே குளிரூட்டிகள்.
குறித்த வெப்பத்தைக் குறைக்கக் கண்டறிந்தவை
குளிரூட்டிகள் பணப் பொருளாகியது!
விற்பனையின் பொருட்டுச் சந்தைக்கு வந்தது.
உற்பத்தி அதிகரித்தது உலகெங்கும் குளிரூட்டிகள்.

பாவம் ஏழைகள்....?
பஞ்சத்தை வாழ்க்கைத் துணையாகக் கொண்டதாலோ...?
எதையுமே அனுபவிக்கும் வாய்ப்பற்றவர்கள்.
அனுபவித்த பணக்காரனின் சுகத்தில் ஏழைக்குப் பங்கில்லை...
ஆனால்... அந்த சுகத்தின் மூலமான உழைப்போ...
உழைப்பவர்களைவிட சுகில்பவர்களையே மகிழ்விக்கின்றது.
அனுபவிப்பவன், விதி, ஊழ்வினை என்ற விதிகளைக் கூறி நியாயப்படுத்தி விடுவான்
தனது அனைத்து சுகங்களும்
உழைப்பாளர் வியர்வை என்பதை அவன் உணர்வதும் இல்லை.
ஏற்பதும் இல்லை.
ஏற்றுவிட்டால்....உழைப்பாளர் தம் பங்கிற்கு விடை இறுக்க நேருமே!
விதியையும் ஊழ்வினையையும் நம்பிய ஏழைகளோ...
துன்பம் பணம் படைத்தவர்களால் உருவாக்கப்பட்டதென்ற உண்மையை எவருமே
ஏற்றுக் கொண்டதாகவும் இல்லை.
துன்பத்தில் துவண்டோர்க்கும்....
இன்பத்தில் திழைத்தோர்க்கும்....
பூமி இப்போது அனலாகிச் சுடுகிறது.
பூமிக்கு வந்த துன்பம் எல்லோர்க்கும் உடைமையானது.

மனிதர்களே! மனிதர்களே!!
பணம் படைத்தவர்களால் வரும் துன்ப துயரங்கள்
எல்லோர்க்கும் பொதுவுடைமை ஆகிவிடுகிறது.
பொதுவுடைமைக்கு எதிரி பணம் படைத்தவ(னே!)ன்.
இப்போது துன்பத்தின் பங்குடைமை
எல்லோர்க்கும் பொதுவுடைமை ஆகிறது.
இதனை ஏற்றுக் கொள்கின்ற மனிதர்களே...! சிந்தித்துக் கொள்ளுங்கள்
சுயநலச் சுறாக்களாக சமூகப் பேராழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கி அடித்துக் கலங்க வைப்பவர்களே! சிந்தியுங்கள்...
அந்த சிந்தனையை சித்தத்தில் ஏந்துங்கள்
ஆதிக்கம், ஆதிக்க மேலாண்மை என்பவற்றை மறவுங்கள்.
இயற்கை என்ற இன்பச் சுரங்கத்தில் அனைவரும் நீராடலாம்.
ஈடு இணையற்ற இன்பசுகம் மனிதத்தின் மகத்துவமானது.
ஆனால் மனிதன் இயற்கையை நேசித்தானா? பகைததானா?

பணத்தின் பாவக்கரங்கள் பலம் கொண்டவை!
மனிதத்தை மண்ணாக்கும் பண்புடையது.
சதிராடிச் சிரிக்கும் சாகசம் நிறைந்தது பணம்.
துதி பாடிக் களிப்போர்க்கும் வளமீயும்
கவி பாடிப் பிழைப்போர்க்கும் உயிர்காக்கும்.
சதி ராடிப் பிழைப்போர்க்கும் கதியாகும்.
பணம் தனது எசமானர்களுக்கு ஏற்ற மளிக்கிறது.
கொதிக்கும் வெயிலின் வெம்மையை தகர்த்தனர்
வதிவிடத்தை குளிரூட்டிக் களித்தனர்
கொதிப்பைக் குளிரால் சமப்படுத்திக் கொண்டனர்.

குளிரூட்டிகளால் உலகைக் குளிரூட்டவா முடியும்?
ஓசோன் மண்டலத்துவாரம் இன்னு மின்னு மென...
விரிந்து அகன்று பருத்து...தடைதாண்டி
மடைதிறந்த வெள்ளமாய் ஊதாக்கதிர்கள்
தடையோட்டத்தில் வென்றுவிட்ட மாணவனின் மகிழ்வோடு
புவியின் நீர்மையை விழுங்கத் தொடங்கியது.
விரிகதிரும் சுடுகலனும் ஆகிய ஊதாக் கதிர்கள்..
பூமியின் சூடு அதிகரிப்பதற்கு ஊக்க மாத்திரையானது.
துருவங்களின் வைரக் கண்ணாடிகளாக மின்னிக்கிடந்த.
பருவப் பணித்திட....இளகிய மெழுகென ஆயின
கரைவதே தெரியாமல் உருகி ஊரத் தொடங்கின.
புதிய நதிகள் துருவங்களில் நெளியத் தலைப்பட்டன.
புவிக்கோளத்தை விழுங்கி ஏப்பமிடத் துடிக்கத் துடித்து...
கூத்தாடிய அலைகள் இப்போது எக்காளமிட்டது.
கடல் மட்டம் உயர்கிறது.....
“பூமி கடலுக்குள் அமிழத்தான் போகிறது”.
அபாய அறிப்பாக “எச்சரிப்புகள்”.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் விழிகள் விழிக்கத் தொடங்கின.
இனிமையை அனுபவித்தவன் பணம் படைத்தவன்
உலகின் சுகங்களை முழுமையாக அனுபவிப்பவனும் அவனே!

இயற்கை அழகானது என்றான் ஒருத்தன்
இல்லை, இல்லை, ஏற்றத் தாழ்வுகளைக் கற்பிக்கிறது என்றான் இன்னொருத்தன்
இயற்கை அறிவின் ஊற்று என்றான் ஒருத்தன்
இயற்கை மூடத்தனத்தை வளர்க்கத் துணை போகிறது என்றான் இன்னொருத்தன்
எல்லோரது கூற்றிலும் தவறுண்டு...இன்னொருவன் தொடர்ந்தான்...
இயற்கை மனிதனை மனிதனாக்க வழி சமைத்தது.
சிந்தையைக் கிளறியது....தூண்டியது
இயற்கை இதமளித்து துன்பநுகர்ச்சியைக் காட்டியது.
வைகறை கண்ணில்பட்டு வளப்பினை உணர்ந்தான்.
மனம் நிறைந்தான், கதித்துக் கூத்தாடினான்.
ஆகா! செங்கதிரும், வெண்மலரும், செவ்வானச் சிரிப்பும்...
ஆட்கொண்டபோது இருளின் விடிவே ஒளி எனின்....
மனமதின் நிறைவும் விடிவே! ஆம் அறியாமையின் விடிவு...?
ஒளியால் முடிகின்றது.
ஒளியின் முன்னே எந்த இழிவுகளும் நிலைநிற்க முடியாது.

ஒளி உன்னதங்களின் உன்னதம்.
மனத்திற்கு கிடைத்த வரப்பிரசாத மகத்துவம்.
ஒளி ஒளிர்வதால் தான் மண்ணில் மிளிர்தல் விசாலிக்கிறது.
ஒளி உயிராகிறது! உணர்வாகிறது உணவுமாகிறது.
ஒளி மருந்தாகிறது விருந்தாகிறது, விழியாகிறது.
வளியாகவும் நிலைக்கிறது.
ஒளியே உலகாகிறது பிரபஞ்ச சாகரத்தின் விரிவாகிறது.
ஒளியே ஒளியே உனக்கு மேலான எதுவுமே இல்லை.

ஒளியின் முழுமை அறிவெனலாகும்.
அறிவின் முழுமை தெளிவெனலாகும்.
ஒளியில் இருந்து சக்தி பிறக்கும்.
சக்தி என்பதோ வலிமையின் சுரங்கம்.
ஒளியின் வலிமையில் ஆயிரமாயிரம் கூறுகளுண்டு.
நிறங்கள், குணங்கள், சுவைகள் எனும் பல் கூறுகள் சேர்க்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுத்துப் பகுத்து உணர்வதும் உணர்த்தலும் பகுத்தறிவாக...
தொகுத்து நிற்பதும், நிறைப்பதும் ஒளியே எனவே

ஒளியின் முழுமை அறிவெனல் சாயலே.
அறிவெனப்படுவது பகுத்துப் பகுத்து நுண்ணிழை புகுதல்
நுண்ணிழை புகுந்து அணுவினும் சிறிதாம் கோணிடை தன்னின்...
நுண்மான் நுழைபுலம் தெளிதலும் மேலாம் அறிவே.
மேலாம் அறிவும் பகுத்தறிவென்பதும் சிந்தனைப் பகுப்பே!
சிந்தை தெளிந்தோர் செய்வது யாவும் முழுமையின் நிறைவாய்
முகிழ்த்திடலாலே மூர்க்கம் மூடத்தனங்கள் தம்மை
பழமை வாதச் சாத்திரக் குப்பையும் மதங்கள் மதநெறிச் சடங்குகள்
நீங்கியே மகிழ்ந்து பேதம்பிரிவு உயர்வொடு தாழ்வும்
ஏதும் அற்றதோர் ஏகாந்த நிலை. யெனு மினிழை தனையே...
நாடவும் தேடவும் முழுமையாய் கல்வியை.....
முற்றும் உணர்ந்திடா அனைத்து நெறிமதக்,
குப்பைகள் தம்மை நீக்கிப்புதைத்து அழித்து,
இப்புவி மாந்தரின் மானுட வாழ்வினை
மக்துவம் பெற்றிட வகுத்திடும் சிந்தனை
ஒன்றே மனிதம் வாழ்ந்திடச் செய்திடும் சிந்தையின் நிறைவாய்
ஒன்றே மலர நாடும் வீடும் இனம் மொழி யாவும் சிறந்து
முழுமை காணும் மானுடம்தானே மண்ணில் வெல்லும்
மண்ணில் வெல்லும் மானுடம் சிறக்கும், மாண்புகள் ஓங்கும்
ஓங்கிய உலகம் இனிமைகண்டு சிலிர்த்து நிறைவினைக் காணும்...

நிறைவுகள் நிறையின் குறை என ஏதும் இருந்தற்கில்லை,
கறைகள் சூட்டும் காரண காரியம்
வரைபுகளிற்குள் வந்திட வருந்தும்
சிந்தை ஏங்கும் நிறைவின் பெருக்கமாய் மலர்ந்து மணக்கும்
நொந்தவர் வீழ்ந்தவர் வேதனை மூழ்கிப் பாடு சுமக்கும்
வெந்துபோன வெறும் சடமாக மானிடர் சிந்தை மாறிவடாது
எங்கும் எதிலும் எப்பொழுதும் இன்பம் இன்பம் என்பதே பேச்சாய்,
தங்கும், தங்கிச்சிரிக்கும் சிறக்கும்... உன்னதம் தன்னை...
சிறப்பென பெறுவதே காப்பின் மகிமையாம்
சால்பெனப்படுவது அறிவின் முழுமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸமான் கவிதைகள்

## 1. அது எவ்வளவு அழகாக இருந்தது

ஒரு தேநீர் கோப்பையை போல
கொஞ்சம் கசப்பாயும்
கொஞ்சம் இனிப்பாயும்
அது எவ்வளவு அழகாக இருந்தது
ஒரு புத்தகம் என்றோ
ஒரு வண்ணத்து பூச்சி என்றோ
ஒரு கொடுகிய புறாக் குஞ்சாகவோ
அதை நீங்கள் நினைத்திருக்கலாம்
நீங்கள் நினைப்பதுபோல
அது எதுவாகவும் இருக்கவிலை
அது அதுவாக இருந்தது
ஒரு அவமானத்தின் போது ா ய் பொத்தி அழவும்
காதல் தோல்வியை மறப்பதற்கும்
கூதல் கண்ணாடியின் முன்பு
முகம் பார்த்து பேசிக்கொள்ளவும்
அது எனக்கு தேவையாக இருந்தது

பொம்மைகளோடு விளையாடிய காலம் முதல்
அது என்னுடன்தான் இருந்தது
இப்போது அது இருக்கக் கூடும்
கடலின் அந்தப் பக்கம்
தேம்ஸ் கரையின் அமைதியில்
பழத்தோட்ட மர நிழல் ஒன்றில்
ஏன் வான் வெளியில் தாழப் பறக்கும்
பறவைகளின் வெளிகளிலும்..

யன்னல் திறக்கிறேன்
சிறு தோட்டம்
இலைகளை தூக்கி அலைகிறது காற்று
வலசை பறவைகள் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலை செவ்வானில் பறந்து திரிகின்றன

விருந்தாளிகளின் வருகைக்காய்
எப்போதோ போடப்பட்ட நாற்காலிகளிலும்
வெள்ளை மேசைகளிலும்
கருகி கிடக்கிறது
சில மஞ்சள் பூக்கள்...

## 2. வன்புணர்வு

வன் புணர்வின் பின்
பாசிக் குளத்தில் நிர்வாணமாக கிடக்கிறது
அவளுடைய செத்த உடல்
அடி வயிறு பொத்தி கதறி அழும் தாயின்
புழுதி மணல் ஒட்டிய கால்களுக்கு கீழ்
காளான்கள் நசுங்கி மனிதம் நாறின

கதறி அழும் தாயின் ஈர விழி முன்
பொம்மைகளோடு குதித்து விளையாடினாள்
பத்து வயது சிறுமி

பறக்க வேண்டிய சிறகுகள்
உளுத்து மண் கௌவின

அவளுடைய வெள் உடுப்புகள்
வறள் நில முள் பற்றை மீது கன்னி ரத்தம்
ஊறிகிடந்தது

மலை கல்லில் விழுந்து
சிதறின பிள்ளை முகம்
நீர் தாவர அடைசலில் வெ ள்ளை சப்பாத்துகள்
மிதந்த

முளை கருகி கிடந்தது வம்மி பிஞ்சு
சின்ன விரல்கள் செய்த
காகித படகுகள் கசக்கி எறியப்பட்டன

வண்ணத்து பூச்சின் இறகுகள்
பிய்க்கப்பட்டு உடலை கடியன்கள் அரித்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் குழிக்குள் ஈர குறி நீர்
நிரம்பி வழிந்தது
கரு அறையில் சினை கூடி
நரி நகங்களுக்கு பயந்து
ஜனிக்கமாட்டோம் என கத்தின
மீன் குஞ்சுகள்

மறுநாள்
மலையின் அடி வான் இருட்டில்

கதற கதற
கற்பழிக்கப்பட்டு கிடக்கிறது
பனி குளிரில் உடல் விறைத்த
சில நட்சத்திரப் பிஞ்சுகள்..

## 3. பெருநகர்வொன்று

அதிர்வில் உடையும்
கண்ணாடி இரவு
பின்னிரவில் முகம் சுழித்து
கதறுகிறது நிலா
ஊழிக்காலத்து பெரு நிலமொன்றில்
நகர்வொன்றின் பின்
நிறைந்து கிடக்கிறது
சஞ்சாரமில்லா அப் பெரு வெளி
கடிகார முள் ஒவ்வொன்றிலும்
துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் புதைக்கப்படுகின்றன
பிஞ்சில் வீழ்த்தப்பட்டோமென
கதறியபடி
சூறையாடப்பட்ட நிலத்திலிருந்து
குடியெழும்பி போகிறது கறையான் குஞ்சுகள்
பாடப் புத்தகங்களை கௌவியபடி மயானம் நோக்கி நகர்கிறது
அந் நாயும்
இவ்விரவும்..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2012












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளையற்று அலையும் பறவையின் பெயர்

கிரிஷாந்

நீ
தொடக்கவுரை

கடல்களிடமும், அதன் உறக்கத்திலிருக்கும்
புயல்களிடமும், இருந்து உன்போன்ற ஒருத்தி
உருவாகிறாள்.
ஆணின்கர்ப்பத்துள் ஆண்டாண்டு காலமாக உறைந்திருக்கும்
தீயைக்கள வாடிச்செல்ல! .

**1**

எது போலிருக்கிறேன்...
உன்போன்ற ஒருபெண்ணிடமிருக்கும்
ஆபத்தான கணங்களில்,
ஊடுருவும் விழிகளில் பதுங்கியிருக்கும்
என்மிருகத்தை!
ஒரு வளர்ப்பு நாயைப்போல் தடவிக்கொடுப்பவளிடம். .

**2**

காவல் தேவதைகளே அற்ற ஒரு இரவில், அவளை
அடையாளம் கண்டு கொண்டேன்.
மன்னிப்புக்களே அற்றகாலத்திலிருந்து
திரும்பி வந்திருப்பவளிடம்,
நான்யார் என்பதை எப்படிக் காட்டிக் கொள்வது?
தொலைந்து போனகாதலனாகவா அல்லது
வழிகாட்டியாகவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்களின் வரைபடங்களை
எப்படி வாசிப்பதென்று கற்றுத்தந்ததே அவள்தான்.
பின்எப்படி? .

ஏதேனும்ஒருகணத்தில்
அவள்பாம்பாகவோஅல்லதுஎரியும்அஸ்திரமாகவோமாறி
என்மார்பில்நெளியக்கூடும்என்பதால்.....
இன்னும்எவ்வளவுபறந்தாலும்,
கடக்கவேமுடியாதஇரவின்சிறகுகளை
அணிந்துகொள்கிறேன் .

3
சூரியனிலிருந்துதிரும்பிவரும்
முதற்பறவையிடம்அதன்பெயரைக்கேட்டேன்.
அதுஉன்போலஏதோஒன்றாய்மாறி
அலைகளிடமும்அதன்நிலையற்றவடிவத்திற்குள்ளும்
மூழ்கியது. .

**முடிவுரை**
பூமியின்புராதனத்திலும்அதன்பிரம்மிப்பூட்டும்
கதைகளிலும்,
உன்போன்றஒரு பெண்ணின்பெயர்
நிலையற்றுஎங்குமாய்அலைகிறது .


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போன நண்பன்

தீபச்செல்வன்

மீண்டுமொரு நாள்
பாதியுடைந்த பள்ளிக்கூட அறையில்
படிக்க முடியுமெனில்
மீனாட்சி அம்மன் வீதியிலுள்ள
உன் வீடு இருக்குமெனில்
அந்த ஒரு பேனாவை
நீயும் நானும் திருடிக்கொள்வோம்

இப்படி ஒரு கடற்ரை மணலுக்காக
ஒரு கிண்ணம் மதுவுக்காக
ஒரு உரையடாலுக்காக
ஒரு வயிறு குலுங்கும் பகிடிக்காக
எல்லாம் திரும்பிய ஒரு பொழுதுக்காக
அந்த ஒரு பேனாவை
நீயும் நானும் திருடிக்கொள்வோம்

அன்று நான் பேனாவைத் திருடவில்லை
நமது பால்யத்தை யாரோ திருடினர்
நமது வீடுகளை
நமது வகுப்பறை
நமது நகரத்தை
எல்லாவற்றையும் திருடினர் யாரோ

அன்றைய பேனா சண்டை போகட்டும்

இப்பொழுது ஒரு நண்பன்
அக் கனவுக் காலத்தை எழுத
நமக்கு இரண்டு பேனாக்களைக் தந்திருக்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று எனது பேனாவை
நீ பறித்துக்கொண்டாய்
அப்படியெனில்
உனது பேனாவை திருடியவன் யார்?

நாம் அந்த நண்பனைத் தேடுவோம்!
உன்னை என் பேனா நண்பனாக்கியவன்
அவனல்லவா?

மறுபடியும் ஒரு இலையுதிர்காலத்தில்
உன் தாய்மண்ணுக்கு வா
இன்னும் சில நண்பர்களைத் தேடுவோம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா - 2012









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ககனா கவிதைகள்

## 1. உயிரில் சேமித்த உன் நினைவுகள்

மணித்துளிகள் மதிப்புத்தெரியாமல்
மறைந்தநாட்கள் பல
இன்று நிமிடங்கள்கூட மணித்துளியாய்
கனகின்றன
தொட்டுச்செல்லும் தென்றல்கூட முள்ளாய்
உறுத்துகிறது
இதமான இரவுகள்கூடஇம்சையாகிறது
விழியெட்டும் தூரம்வரை உன்முகம்தேடியே
என்மனம் அலைகிறது
என் சுவாவத்தில் கலந் தஜீவனே,
என் உயிரிலே கலந்தவனே,
உன்னை மறந்தால் என் இதயம்
துடிக்கமறந்துவிடும்
என் இருவிழிகளுடன் கலக்கும்
உன் ஈரவிழிகளின் ஏக்கம்
என் உயிர்வரை ஊடுருவி
என்னை உருக்குலைக்கிறது
என்மீது நீ பொழியும் பாசமழையில் நனைந்து
நான்
தடுமாறிப்போகிறேன
உன்விழிகளின் தீண்டல் மட்டும் போதும்
என் இதயம் நிறைந்துவிடும் ...
என்காதோடு நீ பேசிச்செல்லும் சில வார்த்தைகள்
கூட
எனக்கு காவியமாகின்றது
கனவாய் ஒருகாதல் வாழ்கையிது
கலையாமல் வாழவேண்டும
உன்நினைவலையில்
என்னைத் தொலைத்தேன்...
சில்லறையாய் சிதறிப்போன கனவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயில்லாமல்
கனவுகளாகவே...
நீ தந்த நினைவுகளையெல்லாம்
நான் உயிரிலே பத்திரமாய் சேமிக்கிறேன்
என் முதுமையில் கூட
நான் வாழ்வதற்கு உன் நினைவுகள் வேண்டும்.

## 2. கதைக்கும் கணத்திற்காய் ஏக்கம்

வலசைபோகும் குருகினங்களாய்
காலைதொட்டு மாலைவரை
உன்நினைவகளில் என்மனம்கனதியாகித் தவிக்கிறது
ஏன் ஏன் என்றே அது தன்னை வினவுகிறது
உனது ஒப்பிடமுடியாத அன்பினால் என தன்னைத் தேற்றுகிறது
கணம்கணமாய் எழும் தவிப்பில்
நெஞ்சின் உவ்வொரு ஒலியும்
உன்முகத்தையும் உன் பெயரையும்
கண்ணுள் மின்னச்செய்கின்றன
என் அன்பு மொழிகளால் நீ
கட்டுண்டு போனதைச்சொன்னாய்

அன்பே,
இதுகாரும் யாரும் தேடியெடுக்காத அதை
நீ தேடியெடுத்ததாகவே உரைப்பேன்.
அது உனது அதிட்டமா
எனது அதிட்டமா சொல்?
பச்சைப் பசேலென எறியும் தாவரங்களின் சிரிப்பெல்லாம்
நீயா
மெல்லிய தென்றலில் இருபுரமும்தலையசைக்கும்
தென்னங் கீற்றெல்லாம்
நீயா
விட்டு விட்டுப் பறக்கும் வீட்டுக்குருவியின் துடுக்கெல்லாம்
நீயா
அன்பே,
ஆற அமர இருந்து அணைத்தபடி கதைக்கம் ஓர் நாள்
எப்போ?.........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கார் காலத்து மாலையும் அவளும்

வசந்தம் தொலைத்த இந்தமாலை வேளையில்
சடுதியாய் விரித்தெறிக்கிற
கருமேகங்கள் நிறை பொழுதாய்
உள்ளத்தில் கருத்தரிக்கும்
குருத்தின் கனதியாய்
உன்காதல் அரும்புகையில்
வெய்யில் நாவாய் உன்அரும்பை கருக்கும்
இந்த கயவர்கண்கள்.
வீரியமாய் ரகசியமாய் நீ சிலிர்ப்பாய்
நெஞ்சுக்குள் நெய்யூற்றி
பஞ்சணையாய் மலர் விரித்து
உனக்குள் என் அன்பைப்
பந்தலிடுவாய்.
எனக்கு நீங்க வேணும் என்ற குரலாய்
ஏங்கி ஏங்கி என்னை அழைக்கிறாய்
உன்காதல் நிறை அழைப்பால் அன்பே,
மாலையும் காலையும்,
ஒரு மந்தை மேய்க்கும் இடையனாய்
உன் நினைவுகளின்பின் சஞ்சரிக்கும் நான்
இதோ
பெய்ய இருக்கும்அரும்பு மழைத்துளி நிலம்தொடுகையில்
நீ என் அணைப்பில் கருமுகில்சூழ் வானத்தை
அண்ணார்ந்தபடி காட்டருகின் பிள்ளையார்கோயிலில்
தனியே உன்னோடும்
உன் தலை சூடிய முல்லை வாசனையோடும்
நான் கிரங்கி
உன் மடியில் சாய்கிறேன்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர், எழுத்தாளர், சமூகசேவையாளர் விபரக்குறிப்பு கரைஎழில் விருது நூலில் இடம்பெறும் கலைஞர்கள் பற்றிய சுருக்கமான விபரக்குறிப்பு



**இரா – தணி**

இரா – தணி – கதிராமு தனிகாசலம் 1960ம் ஆண்டு முதல் இன்றுவரை எனக்கு களம் அமைத்தது. இராமநாதபுரம் – கிளிநொச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 1994ம் ஆண்டு கனடா குடிபெயர்ந்தும் எமது கலை – கலாச்சாரத்தை கனடிய அரசின் உதவியுடன் வளர்த்துக் கொண்டிருக்கின்றேன். நான் கோப்பை கழுவி கஸ்ரப்பட்டும் படித்தும் பட்டம் பெற்றும் பொறுப்பாளராக இருந்தும் இன்று வரை எமது கலை கலாச்சாரத்தை வளர்க்கின் றேன். பல துறைகளில் பல எதிர்ப்புக்கள் இருந்த போதும் கனடாவில் இருந்து வந்து எனது பணத்தை செலவழித்து இராமநாதபுரத்தில் நாடகம் போட்டு மகிழ்வித்துள்ளேன்.

அது மட்டுமல்ல பட்டம் பதவிகள் கனடா வில் பெற்றுள்ள நான் இந்நாட்டுக்கு (கிளி நொச்சி) ஏன் செய்தேன். அரசியல் ஆனதுக்காக அல்ல பதவியாசைக்காக அல்ல மக்கள் நலன் கருதியே செய்துள்ளேன். இன்னமும் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின் றேன். ஏன்? காரணம் இந்த நாடகத்திற்கு (கிளிநொச்சி) சிறுவனாக இருந்த போது எனது தந்தையுடன் 08 வயதில் வந்தேன். இங்கே படித்தேன். அன்பு நண்பர்களை கண்டேன். எனது கலைத் துறை மேலீட்டால் எனது சேவையை நீடித்தேன். எனக்கு போலி அரசியல் தேவையில்லை. ஆனால் துப்பாக்கி செய்யும் வேலையைவிட எமது பேனாவுக்கு மக்களோ அரசோ பதில் கூறட்டும். எனது கொள்கை கலா கலாச்சாரம் தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி.சி.பரமேஸ்வரி

ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்னரே பூஃவேரவில் பிரதேசத்தில் சைவமும் தமிழும் வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு முத்துக்குமாரசாமி வித்தியாசாலை (வேரவில் இ.த.க) 1914ஆம் ஆரம்பத்துடன் வெள்ளிப் பள்ளத்திலே வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு ஆலயத்தையும் சமூகத்தின் துணையுடன் அமைத்து, புராணபடனம் பயிற்றுவித்தலுடன் ஆலயத்தில் புராண படனத்தைச் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட முருகர் தில்லைநாதா மகன் குமாரசாமி - வள்ளியம்மை தம்பதியின ரின் மூன்றாவது பிள்ளையாக 1949 – 12 – 14 இல் பரமேஸ்வரி ஆரம்பக்கல்வியை வேரவில் இ.த.க. பாடசாலையிலும் தொடர்ந்து க.பொ.த. பரீட்சை வரை திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையிலும் கற்றமை 1977 ஆண்டு உதவி ஆசிரியர் நியமனம் அத்தாய் முத்துக் குமாரசாமி வித்தியாசாலையிலும் வேரவில் இ.த.க. பாடாசலையிலும் 1980- 1982 வரை கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயிற்றப்பட்ட சைவசமய பாட ஆசிரியராக 1983 – 1992 வரை வட்டக்கச்சி ம.வி. வேரவில் இ.ம.வி. 1993 ஆம் ஆண்டு தொடக்கம் 2009-12-14 வரை ஆசிரிய ஆலோசகராக.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தி லிருந்து (1993) இற்றைவரையும் ஆலயங்களில் சமயப் பிரசங்கம் செய்தல் தொடர் நிகழ்வுகளின் போது கௌரவிப்பு இடம் பெறும்.

தொலைக்கல்விப் பாடநெறியூடாகப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு 1993 - 1996 வரை பொதுவாகவும் சமயபாடக் கற்கைநெறியி னருக்குச் சிறப்பாகவும் பயிற்சி வழங்கியமை. 2006–12–25 இல் கிளிநொச்சி மாவட்டத்தில் சைவ மங்கையர் கழகம் HA/4/KL 15 ஒன்றினை உருவாக்கி இற்றைவரை தலைவர் பதவியுடன் செயற்படுதல்.


2006 இல் சைவ சமய விழுமியப் பாசறைச் செயற்றிட்டம் உருத்திரபுரம் சிவன் கோயிலில் 15 நாட்கள் தொடர்பயிற்சியினால் கவரப்பட்ட நிர்வாகத்தினர் கௌரவிப்பு 2008 வரை மாவட்டத்தின் சகல கோட்டங்களிலு முள்ள மாணவர் பயன்பெற்றது மட்டுமல்ல இச் செயற்றிட்டத்தை சிவன் மாநுட மேம்பாட்டு நிறுவனத்தினர் மன்னார், முல்லைத்தீவு, மட்டக் களப்பு, திரிகோணமலை நிலா வெளிவரையும் பயிற்றுவிப்பாளராகச் செயற்பாட்டிற்காக அநுட் டாளவீதி உராத்துணை நூல் ஆக்கி தொடர்ந்தது இவ்வாண்டிலும் 10 நிலையங்களில் சமயப் பிரவேசம் செய்வித்து உதவுதல்.

யோகர் சுவாமி திருவடி நிலைய முதியோர் இல்லத்தின் செயற்குழு உறுப்பின ராக இடப்பெயர்வு வரையும் செயற்பட்டமை. அறநெறி ஆசிரியர்கள் மடு, கிளிநொச்சி, வலயத்தில் வாண்மை விருத்தி இலங்கை இந்துப் பேரவை மன்னார் மன்னார் மாவட்ட அறநெறி ஆசிரியர்களின் வதிவிடப் பயிற்சிப் பாசறையில் பயிற்றுவிப்பாளராகச் செயற்பட் டமை முல்லைத்தீவு மன்னார் பிரதேசத்திலும் சமயச் சொற்பொழிவு.

இந்து சேவாசங்கத்திற் சுயம் சேவதி யாக சுவாமி விவேகானந்தரின் 150ஆவது ஜெயந்தி விழாக்குழு பிரதேசச் செயற்பாடு. இந்து மகா சபையின் செயற்குழு உறுப்பினர் சைவப்பாதுகாப்பும் பேரவையின் திருமுறை முற்றோதல் பணியிலும் ஈடுபடுதல் வவுனியா கோயிற்குளம் அகிலாண்டேஸ்வரி அருளகச் சிறுவர்களுக்கு அறநெறிபுகட்டியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவத்திரு து. உலகநாத ஐயர்

தொழில் நிறுவனம் – மகாதேவ ஆச்சிரம ஆலயம் ஜெயந்தி நகர் – கிளிநொச்சி. தே.அ.அ.இல – 420593015V பூசகர் சிவத்திரு. து. உலகநாத ஐயர். கலை நிகழ்வு ஆரம்ப காலம் – பல கொல்ல (ஹங்குரன் கெத்த – கண்டி) அருள் மிகு ஹ் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ கரக பாலிப்பு பிரபல குருஜீ சுப்பையா சுந்தரம் பிள்ளை பிரபல கரகாட்ட கலைஞர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் 1954ம் ஆண்டு ஆரம்பிக்க தொடர் விழாக்களின் வரிசையில் உருவெடுத்து 1968ம் ஆண்டில் பொய்க்கால் குதிரை ஆட்டத்துடன் முன்னேற்ற மடைந்து சுபாஷினி கலை மன்றம் என்ற சிங்கள பெயரில் உருவாக்கப்பெற்று கரக சாகச நிகழ்வு வாற்சண்டை சரித்திர மேடை நாடகங்கள் என்பன எழுதி முடித்து மேடையேற்றப்பட்டன.

நாடக நிகழ்வுகள் – "வீரசேன" சிங்கள சரித்திர மேடை நாடகம் இடமேலந்த விகாரை முன்றல் 1978ம் ஆண்டு.

"சுவரீன பத்திவத்த" 1979 முற்பகுதி மேற்படி மேடை என்னதான் மௌனம் 1984 கிளி. கிருஷ்ணபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய முன்றல் மேடை "கசிப்பு கந்தையா" சமூக சீர்திருத்த நாடகம் "சுவர்ணாவின் சபதம்" சரித்திர மேடை நாடகம் 1986 "இராமர் பட்டாபி ஷேகம் சரித்திர மேடை நாடகம் 1987" "பூலோக தரிசணம்"பாரதி வித்தியாலய மேடை 1995 "கரக மெஜிக் நிகழ்வு" வட்டக்கச்சி வயலூர் முருகன் ஆலய 2007 "அதன் படியே தந்தோம்" சரித்திர குழு நாடகம் மன்னார் திருக்கேதீஸ் வரம் கௌரி அம்பால் வித்தியாலய வாணிவிழா 2009

கரகாட்ட சாகஸ நிகழ்வு 2011 கலைவிழா கிளிமத்திய கல்லூரி

கரகாட்ட சாகஸ நிகழ்வு 2012 கற்பகபுரி அம்மன் கிளி மலையாளபுரம்

கரகாட்ட சாகஸ நிகழ்வு 2012 விநாயபுரம் கிளி சித்தி விநாயக ஆலயம்

கரகாட்ட சாகஸ நிகழ்வு 2013 கற்பகபுரி அம்மன் மலையாளபுரம்

கரகாட்ட சாகஸ நிகழ்வு 2013 அறிவியல் நகர்

இத்துடன் இன்னும் தொடருமென்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ந. சிவபாலசுப்பிரமணியம்

நான் 1947-06-29ல் யாழ்ப்பாணம் இனுவிலில் பிறந்தேன். எனது தந்தையார் யாழ் நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இந்தியாவைச் சேர்ந்த கிட்டப்பா பாகவதர் குழுவினருடன் கர்நாடக இசை பயின்றவர். அவர்கள் இலங்கை வந்த போது அவர்களுடன் சரித்திர நாடகங்களும், புராண நாடகங்களும் நடித்து புகழ் பெற்றவர். எனது தகப்பனாருடன் CP. செல்வராஜா (C.T.B) பலூன் இரத்தினம் வடிவேலு ஜெயராசா சின்னச் செல்வராஜா சின்னையா தேசியர் மற்றும் இராம லட்சுமி இந்திரா, சந்திரா மாலா போன்ற நடிகை களுடன் ஆர்மோனியம் பொன்னுச்சாமி சரவண முத்து பஞ்சலிங்கம் போன்ற கலைஞர்களுடன் ஒன்றாக இணைந்து அங்குமான நாடகங்களில் பங்கு பற்றி புகழ் பெற்றவர். குறிப்பாக அவரது வேடப்பொருத்தமானது. கிருஷ்னர், பரதர் இவர் கிருஷ்ணர் வேடத்தில் தோன்றும் காட்சியை கண்டதும் பார்வையாளர்கள் எழுந்து நின்று வணங்கியதை நான் நேரில் கண்டுள்ளேன். அந்த நாடகத்தின் நான் சிறுவன் புலந்திரனாக நடித்துள்ளேன். அது பவளக் கொடி நாடகம் 1956ம் ஆண்டாக இருக்கலாம். என நினைக்கின் றேன். எனது தாயாராக நடித்த பொன்னுச்சாமி ராமலட்சுமி அம்மா அவர்கள் என்னைத் தூக்கி முத்தம் கொடுத்து நடித்தார். இப்படியாக தொர்ந்து எனது தந்தையார் எழுதி நடித்த பல நாடகங்களில் நானும் அவரும் சேர்ந்து நடித்துள்ளோம் எனது தமையநாராகிய தேசிகர் என்று அழைக்கப்படும் தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய "கண்ணீர் பூக்கள்" என்ற நாடகத்தில் எனது பிள்ளைகள் இருவரும் பெண் பிள்ளை வயது 7, ஆண்பிள்ளை வயது 5 நடித்திருந்தார்கள். அது ஒரு சோகநாடகம். அது பல இடங்களில் நடித்திருந்தோம். இதே போல் எனது அண்ணாவாகிய தேசிகருடன் "தனிமரம்" என்ற சீர்திருத்த சமூக நாடகம் நடித்து மக்களின் ஆதரவைப் பெற்றோம். எனது சகோதரிகள் பத்மாவதி, லீலாவதி இவர்கள் பாடசாலை மேடைகளில் பரத நாட்டியம், பாம்பு நடனம் ஆடிப்பெயர் பெற்றவாகள். மொத்தத்தில் எங்கள் குடும்பம் ஒரு கலைக்குடும்பம். எனது தந்தை யார் என்னை சிறுவயதிலேயே ஆர்மோனியம் வாசிக்க கற்றுத் தந்தார். அதனால் நான் ஒரு பாட கனாகவும் இருந்தேன். தொடர்ந்து நான் பாத்திரங்களில் தாடி நயத்துடன் வாசிப்பதை பார்த்து எனது பாமராகிய கோடையிடி எனப் பட்டம் சூடப்பெற்ற ஆறுமுகம் அவர்களின் வாத்தியத்தில் என்னை வாசிக்க பளக்கினார். எனது தகப்பனார் அதில் இருந்து கேள்வி ஞானத்தில் நான் வாசிக்கத் தொடங்கினேன். அந்த வேளை தகப்பனார் ஒரு தபேலா எடுத்துத் தந்தார். அதில் இருந்து நான் முழுமையாக வாசிக்கக் கற்றுக்கொண்டேன். ஆனால் அனைத் தும் கேள்வி ஞானமே முற்று முழுதாக கரு நாடகக்கலையில் ஊறிய எமது தந்தையாரிட மிருந்து நாங்கள் சங்கீதத்தை முழுமையாக பயில முடியவில்லை என்பதை நினைத்து இப்போது நான் வருத்தப்படுகிறேன். வருந்திக் கொண்டே இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சு. சோமசுந்தரம்

சுப்பிரமணியம் - சோமசுந்தரம் ஆகிய நான் 1943ம் வருடம் வைகாசி மாதம் இருபத் தொன்பதாம் திகதி நெடுந்தீவில் பிறந்தேன். எனது தாய் - தந்தையர் சுப்பிரமணியம் - வள்ளியம்மை என்பபோர் ஆவர்.

2. நெடுந்தீவில் உள்ள இராமநாத வித்தியாசாலையிலும், பின்னர் நெடுந்தீவு மகா வித்தியாலத்திலும் கல்வி கற்றேன். சிரேஸ்ட பாடசாலைத் தராதரப்பத்திப் பரீட்சையில் சமயம், கணிதம், சுகாதாரம் போன்ற பாடங் களின் விசேட சித்தியுடன் சித்தியடைந்தேன்.

அதன்பின் நெடுந்தீவு ஆலைமாவனப் பிள்ளையார் ஆலயத்தில் திருவாதவூரடிகள் புராணத்துக் உரை சொல்வதில் பத்தொன்பதா வது வயதில் தொடங்கி பல ஆலயங்களில் உரை சொல்லியும் கதாப்பிரசங்கம் செய்தும் வருகி றேன். கிளிநொச்சி, வவுனியா போன்ற ஊர் களில் நூற்றுக்கணக்கான ஆலயங்களில் பிரசங் கம் செய்துள்ளேன். பல ஆலயங்களில் பொன் னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளேன். அதனோடு பல ஆலயங்களுக்கு ஊஞ்சல்பாட் டும், திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாளு க்கு, அந்தாதி நூறு, வரலாற்றுப் புராணம் என்பன யேற்றிஉள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு.ந.சிவபாலசுப்பிரமணியம்**

இல A 118 ஜெயந்தி நகர் கிளிநொச்சி என்னும் முகவரியில் வசிக்கும் திரு. தேவராசா தியாகராசா என்பவரை கடந்த முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக நன்கு தெரியும். நான் கல்வி கற்ற பாடசாலையில் மேல் வகுப்புகளில் கல்வி கற்ற பாடசாலையின் அயற்சூழலிலும் வசித்து வருகின்றார்.

இவர் நாடகத்துறையில் தன்னை வளர்த்துக் கொண்டதுன் கிளிநொச்சி மாவட்ட ஸ்ரார் நாடக மன்றத்தின் மூலம் பல நாடகங்களில் சிறப்பாக பெண் பாத்திரமேற்று நடித்து வந்தவர். இவரது பெண் பாத்திரமேற்பு பலரால் பேசப்பட்டு நாடக ரசிகர்களாக மிகச்சிறப்பாக பாராட்டப்பட்டும் வந்தது.

சிறப்பாக 1970 களில் ஆரம்பித்து 1980 வரை நாடகத்துறையில் உயர்மதிப்புப் பெற்றது டன் தன்னை முழுமையாக நாடகத்துறை யுடன் இணைத்து வாழ்ந்து வந்தார். புகழ் மேன் மேலும் சிறந்து விளங்க நற்சான்றிதழ் வழங்குவதில் பெருமையடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிகழ்த்து கலைகளின் சமூக தேடல்

வண.T.S.யோசுவா

**ந**மது சமூகம் உலக முன்னேற்றங்களின் எல்லா தளங்களிலும் கால்பதிக்க முடியாவிட்டாலும் தகவல் தொழில் நுட்ப பயன்பாட்டில் சகல வழிமுறைகளையும் அனுகும் ஒரு சமூகமாக மாறிக்கொண்டு இருக்கிறது. இப் யன்பாட்டின் மூலம் சமூக அபிவிருத்தி, அரசியல், பொருளாதாரம், அறிவியல், மருத்துவம், அறம் சார்ந்த விடயங்கள் குறித்த தேடல்களும் அதிகரித்திருக்கின்றன. இது தகவல் தொழில்நுட்பத்தினை சரியாக கையாழும் மாந்தர்க்கு கிடைக்கக் கூடிய பலாபலன்கள் சிறப்பானவைகள் எனலாம். எனினும் மனிதர்களுக்கு இடையான உறவு நிலையில் மாயையான ஒரு வெற்றிடத்தை உருவாக்கி செல்லும் இந்த தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் சமூகரீதியான பிணைப்புகளுக்கும் கூடுகைகளுக்கும் பெரும் சவாலையும் ஏற்படுத்தி வருகின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் உறவுகளின் பிணைப்புகளும் சமூகத்தின் ஒருங்கிணைப்பும் மிகவும் அவிசியமானது. என்பதை ஏற்றுக்கொள்ளும் எவரும் சமூக கொண்டாட்டங்களுக்கும் கூடுகைகளுக்கும் நம் சமூகத்தில் தற்போது கொடுக்கப்படும் முக்கியத்துவங்கள் வெகுவாக குறைந்து தனி மனித தனித்திருப்புக்களின் நேரம் அதிகரித்து செல்வதை அவதானிக்க கூடியதாய் இருக்கும்.

தொலைக்காட்சி, இணையதளம், முக நூல் போன்ற பயன்பாடுகளின் வழி தனி மனித உறவுகள் பலப்படுத்தப்படும் அதே நேரத்தில் சமூக கூடுகைகளை நோக்காகக கொள்ளும் நிகழ்வுகளில் இவை தாக்கம் செலுத்துவது அரிதாகவே காணப்படுகிறது. நமது பிரதேசத்தின் அபிவிருத்தி வளர்ச்சியில் ஈடுபடும் மாந்தர் யாவரும் பொதுவாக சொல்லும் ஒரு சொல் "சிதைவு" தனி மனித உள சிதைவு ஏற்படுத்தியுள்ள உளவடு குடும்பம், சமூகம், பிரதேசம் என பல்வேறு நிலைகளில் பரவிவருகிறது. இப்படியான உள சிதைவுகளுக்கான காரணிகளை இப் பகுதியில் நோக்காது இவைகளில் இருந்து சமூகத்தை அல்லது மனிதத்தை மீளமைப்பது குறித்த சிந்தனைகளை அரங்க செயற்பாட்டு வழிமுறையில் அனுகுவது குறித்த தேடலை முன்வைக்கலாம் என்று நினைக்கின்றேன்.

தமிழர் கலாசார மரபில் உள மேம்பாட்டு நிலையை பரிபாலிக்கும் மிகப்பெரிய சத்தியாக வழிபாடும் அத்தோடு இணைந்த நிகழ்த்து கலைகளும் ஆதி தொட்டு இருந்து வந்திருக்கின்றன. சமூக கூடுகைகளை மையமாய் கொண்ட நிகழ்த்து கலைகளின் வழி மானிடர் பூத்து குலுங்கிய காலங்களும் வரலாறுகளும் உண்டு.

**"நம் காலத்து மாந்தர் போல்**
**நன் நெறி மதித்து நடந்த**
**நம் முன்னோர் எல்லாம்**
**நலம் பெற்றது நாடகத்திலே.....** என்று கூறலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போர் வெற்றியோ, தோல்வியோ ஏற்படுத்தும் உள காயங்களுக்கான மருந்தாக நிகழ்த்து கலைகள் அரச சபை தொடக்கம் அடிமட்ட குடி வரையும் ஆடப்பட்டும், பாடப்பட்டும், நிகழ்த்தப்பட்டும் வந்ததை கலை நிகழ்வு களின் தொகுப்பின் ஒரு பகுதிகளையே நாம் இலக்கி யங்களாய் போற்றி வருகின்றோம்.

**கண்ணினும் செவியினும் தண்ணிதின் உனரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்யைப்பொருள்கோள் எண்ணருங் குரைத்தே**

**தொல் மெய்ப் 27**

கண்ணுக்கும் செவிக்கும் இனியதாய் இருந்து மக்களை ஒருங்கினைத்த பெருமையை தொல்காப்பியர் காலம் தொட்டே தமிழ் சமூகம் அனுபவித்து வந்திருப்பதை இப்பாடல் மூலம் நாம் அறியலாம். முத்தமிழ் வடிவங்களில் நாடகம் எண்பது சமூக அபிவிருத்தி, ஆற்றுப் படுத்தல் பாங்கில் அனுகுவதும் ஆற்றுப்படுத்துவ தும் நம் காலத்தின் தேவை என்பதை இன்னும் கலைசார் அமைப்புக்கள் சிந்திக்காமல் இருப்பது துரதிஸ்டவசமாகும். மீள்குடியேற்றத்திற்கு பின்னரான மீள் புணரமைப்பில் கலை கலாசார பணியும் உள்வாங்கப்பட்டுள்ளது மிகவும் போற்றதக்கது. நமது பிரதேசங்களில் கலைசார் புணரமைப்புக்கள் நடைபெற்று வருகின்றன எணிணும் சமூக ஆற்றுப்படுத்தலுக்கான ஒரு ஊடகமாய் கலைத்துறையை ஊக்குவிக்கும் போங்கு மிகவும் பலவினமாகவே காணப்படு கின்றது. கலைத்துறை மேம்பாடு என்பது "அருகி வருவதை காப்பற்றுதல் என்ற தோரனையில்" நிகழ்வுகளை ஞாபகப்படுத்துவதாக மட்டுமே கலை நிகழ்வுகள் அமையப் பெறுகின்றன. இதன் மூலம் நிகழ்வுகளின் நோக்கங்கள் ஆழமாய் ஆராயப்படுதல் அல்லது அர்த்தப்படுத்துதல் போன்றவை தவற விடப்படுகின்றன.

சமூக வாழ்வியலுக்காய் படைக்கப்படாத எப்படைப்புக்களும் நிலைத்து வாழ முடியாது என்பதை நமது வரலாறுகள் பதிவு செய்துள்ளன. குறிப்பாக பாரம்பரியம் பழக்கவழக்கம், வரலாறு என நமது கடந்த கால நிகழ்வுகளின் பதிவுகளை மீள் பதிவு செய்வதாக நிகழ்த்து கலைகள் படைக்கப்படுவதன் மூலம் எதை நம்மால் நம் கால சமூகத்திற்கு கொடுக்க கூடிய தாய் இருக்கிறது என்பதை ஆராய வேண்டும். குறிப்பாக தமிழ் நாடக வரலாற்றை ஆய்வு செய்யும்போது, காலத்திற்கு காலம் கால தேவையின் அடிப்படையில் நிகழ்த்து கலைகள் ஆற்றுகை செய்யப்பட்டதை காணக் கூடும். தமிழ் நாடக வரலாற்றில் முதலாவது சமூக நாடகமான "டம்பாச்சாரியின் விலாசம்" என்ற சமூக விழிப்புணர்வு நாடகத்தை 1821 ஆம் ஆண்டு காசி விசுவநாத முதலியார் எழுதி அரங்கேற்றினார். ஒரு பணக்காரன் தாசியின் நட்பினால் சொத்திழந்து சுகமிழந்து உறவு இழந்து தெருவிழந்து அந்தோ கதியென அலறும் நிலையே டம்பாச்சாரியின் விலாசம் கூறும் செய்தி. அக்கால குடும்பங்களில் இருந்த குடும்ப பினைப்புகளின் பிணைப்பற்ற நிலையை அறிந்த விசுவநாத முதலியார் குடும்ப ஆற்றுப்படுத்தலுக் கான ஆற்றுகையாக டம்பாச்சாரியின் விலாச த்தை அறிமுகப்படுத்தியதையும் அவர் அடி யொற்றி பல நாடகங்கள் உருப்பெற்றதையும் நாடக வரலாற்றில் காணலாம். குறிப்பாக பின்பு தமிழ் வளர்ச்சிக்கும் சுய மரியாதைக்கும் மூட நம்பிக்கையை அகற்றுவதற்கும் எழுந்த தமிழ் சமூக சீர்திருத்த சித்தாந்த வாதிகளான பெரியார், அண்ணா, பாரதிதாசன், பாரதியார், கருணநிதி, பா.கண்ணன், A.K.வேலன், இர.செலியன் போன்றோர் நாடகத்தை சமூக சீர் திருத்தம், மூட நம்பிக்கை எதிர்ப்பு, பெண்கல்வி விழிப்புணர்வு, தமிழ் வளர்ச்சி, விதவைகள் திருமணம் போன்ற விடையங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான ஊடகமாக பயன்படுத்தினார்கள்.

குறிப்பாக சுப்பிரமணியபாரதியாரின் சமூக விடுதலை கருத்துக்கள் கவி நாடகங்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்ததுமட்டுமல்ல புராண கதைகளை தழுவிய பெண்விடுதலைப்படைப்புக்களை படைத்ததன் விளைவாகவே பாஞ்சாலி சமதம் போன்ற இசைநாட்டியங்கள் வெளிவந்தன. இப்படிப்பட்ட எழுத்தாளர்களும் நாடக நெறி யாளர்களும் "அறிவிலே தெளிவும் நெஞ்சிலே துணிவும்" இருந்தவர்களாய் நாடகத்துறையை சமூக மேம்பாட்டுக்காய் பயண்படுத்தியதினால் ஊசலாட்டம் அல்லது தடுமாற்றம் இல்லாத சமூகத்தை கட்டியெழுப்பனார்கள்.

கலைத்துறை சார் மாந்தரது திறன்களை ஒருங்கினைக்கவும் புதுப்பிக்கவும் வெளிப்படுத் தவும் பொருத்தமான தளங்கள் இன்னும் இறுக்கமாக ஏற்படுத்தப்படவில்லை என்று கூறும் பலரும் அதற்கான காரணிகளையும் வழிமுறை களையும் முன்வைக்கிறார்கள்.

கலை சார் பணிகளுக்கான நிதி மூலங் கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. இதனால் இம் முயற்சியில் ஈடுபட தயங்கும் நிலையே காணப்படுகின்றது. இன்று உளவளத் துணைக்கான நிதி வளங்கள் சகல நிறுவணங் களிலும் கனிசமான அளவு பங்கீடு செய்யப்படு கின்றன. அப்படியான நிதிவளங்களை இந் நிறுவணங்கள் கலை வழி ஆற்றுப்படுத்தலுக் கான பொறிமுறை ஒன்றை உள்வாங்குமானால் சமூக ஆற்றுப்படுத்தலுக்கான சிறந்த ஊடகத்தை யும் அதன் வழி நிகழ்துகலை தற்பாதுகாப்பினை யும் உறுதிப்படுத்த முடியும். இப்படிப்பட்ட ஒருங் கிணைப்பை அரச நிறுவணங்கள்தான் அரச சார்பற்ற நிறுவணத்திற்கு ஏற்படுத்தி கொடுக்க முடியும். இதன் மூலம் கிராம மட்டங்களில் கலை மன்றங்களின் செயல்திறன் நிலைத்திருப்பது மட்டுமல்ல சமூக கூடுகைகளையும் நடத்த முடியும்.

அடுத்ததாக வழிபாட்டுதளங்களின் ஈர்ப்பு விசையில் கலை நிகழ்வுகள் பெரும் பங்கினை வகிப்பதும் வழிபாட்டு ஈர்ப்பு விசை கலை நிகழ்வுக்கான கூடுகையை நிலைத்து நின்றத்தை யும் நம் சமூகலாசார வரலாறு மூலம் அறிய லாம். நமது பிரதேசங்களில் சில வழிபாட்டு தளங்களில் கலை நிகழ்வுகள் முக்கிய இடத்தை இன்றும் இழக்காமல் இருப்பது இதற்கொரு தனிச்சான்று. சில சந்தர்ப்பங்களில் இப்படியான கலை நிகழ்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவ த்தை விட ஒலி, ஒளி மற்றும் இலத்திரணியல் நிகழ்வுகளுக்கு கொடுப்பதற்கு தமது நிதி வளத்தை பெரிதளவிலே நிர்வாகங்கள் வாரி இரைப்பதும் உண்டு இதன் மூலம் நிகழ்த்துகலை கிராம மட்டங்களில் அடியோடு வேரிழந்து நிற்கும் நிலையை காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் கல்விதுறையில் நாடகமும் அரங்கியலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த துறையாக அனேக மாணவர்கள் படிக்கும் துறையாக வளர்ந்து வருகின்றது. நாடகமும் அரங்கியலும்கற்கும் மாணவர்களுக்கு சமூக உருவாக்கத்திற்கான வெளித்தளம் இப்பாட விதானத்தில் மிகசிறியளவிலே காணப்படுகிறது. இதன் மூலம் வகுப்பறை நடிப்புக்களோடும் படிப்புக்களோடும் இத்துறைச் சார்ந்தவர்கள் பட்டம் பெற்று பதவி ஏற்று சென்று விடுவர். குறிப் பாக பல்கலை கழகங்களில் நிகழ்த்து கலை குறித்த ஆய்வுதேடலின் பரப்புக்கள் கடந்த காலத்தை தேடுவதாகவே அதிகமாக காணப்படு கின்றது. தற்காலத்தின் சமூக தேவைகளுக்கும் அரங்கை பயன்படுத்துவதற்கான வழிமுறையை ஆய்வுப்பரப்பில் மாணவர்கள் கால் பதிப்பது குறித்து அதிகமாய் சிந்தியக்கப்படாமலே இருந்து வருகின்றது.

மேலும் ஆய்வுகள் யாவும் மேற்கோள் களை மையப்படுத்தியதாகவும் கடந்த காலப் பதிவுகளை மீள் பதிவு செய்யகூடியதாகவும் இருப்பதால் புதிதாகப் படைக்கும் ஆற்றல் அரிதாகி வருகின்றது. சமூக அபிவிருத்திக்கான பயணம் உள மேம்பாடு குறித்த ஆதங்கத்திற்கு விடை கான முன்வைக்கப்படும் வழிமுறைகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகக் அரங்க செயற்பாடு மேற்கதேய நாடுகளில் மிக வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கு உதாரணமாக Play Back Theatre என்ற வாழ்வு நிகழ்வு அரங்கு 1971 ஆம் ஆண்டு திரு.யோனத்தன் பொக்ஸ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. 1971 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நேபாள சமூகத்தின் சமூக விடுதலைக் கும் முன்னேற்றத்திற்குமான மிகப்பெரியதொரு தேடல் இருந்த காலத்தில் அமெரிக்கரான திரு.யோனத்தர் பொக்ஸ் நேபாள சமூகத்தோடு வாழ்ந்த அனுபவத்தின்படி இவ் அரங்கை படைத்தார்.

வாழ்வு நிகழ்வு அரங்கு என்பது மக்க ளின் உள்ளக்கிடக்கைகளில் உறங்கி கிடக்கும் ஏக்க கதைகள் அல்லது கனவு கதைகளை அரங்கிக்கு முன் வந்து சொல்ல வைப்பதும் அவர்கள் முன்பாகவே அதை நடித்து காட்டுவதும் அக்கதைகள் கதை கூறுபவரின் உள ஏக்கத்தை பிரதிபலிக்கும் தன்மையின் ஊடாக கதை சொல்பவர் புது உத்வேகத்தை பெறுவதற் கும் வழிவகை செய்தது. இந் நாடக முயற்சிக்கு பிரதி எழுதல் நெறியாளுகை செய்தல் மேடை, ஒலி, ஒளி அமைப்பு என்பன முதன்மைபடுத்தப் படுவதில்லை. கூலி தொழில் செய்யும் சமூகம் தமது ஓய்வு நேரத்தில் தமே தமது கதைகளை சொல்லி தம் கதைகளை தாமே நடிக்கும் பழக்க த்தை திரு.யோனத்தக் பொக்ஸ் கிராமங்கள் தோறும் உருவாக்கினார் இதன் மூலம் நேபாள கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் ஒழுக்கம், அறம், கல்விசார் முன்னேற்றங்கள் மிகப் பெரியளவில் மாற்றத்தை ஏற்படுத்தின இவ் அரங்க செயற்பாட்டு முறை இன்று அமரிக்காவி லும், அவுஸ்ரேலியாவிலும் பொருளாதார முன் னேற்றங்களில் மனிதர்களின் உள ஊடாட்டத்திற் கான ஒரு தூன்டு கோளாக பயண்படுத்தப்பட்டு வருகின்றது. கிழக்காசிய நாடுகளின் உள்ளாசத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு இவ் அரங்கச் செயற்பாட்டு முறை கைகொடுத்து வருகின்றது.

2004 ஆம் ஆண்டு இலங்கையில் சுனாமி தாக்கம் ஏற்பட்ட போது இவ் அரங்க செயற் பாடானது தென் மாகனத்தில் உள ஆற்றுப் படுத்தலுக்கான ஆற்றுகையாக பயன்படுத்தப்பட தொடங்கியது. தற்போது தென்மாகானத்திலும் மத்திய மாகானத்திலும் ஊவா மாகானத்திலும் வட மாகானத்தின் சில கலைஞர்கள் மத்தியில் இவ் அரங்கசெயற்பாட்டு முறை தத்தமது பிரதேச் தேவைக்கு ஏற்ற வகையில் பயன்பட்டு வருகின் றது. இலங்கையை பொறுத்தவரையில் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் சமாதானத்திற்குமான ஒரு ஆற்றுகையாக இதை பயன்படுத்த பலரும் எண்ணி வருகின்றனர். இதே போன்ற நெறி முறைகளையும் வழிமுறைகளையும் உள்ள டக்கியதான நமது சமூகத்திற்கே உரித்தான தேவைகளை நிறைவு செய்வதற்கான புதிய அரங்க செயற்பாட்டு படைப்புகளை படைப்பதற் கும் கலைப்பாரம்பரியங்களை புத்தாக்கம் செய்வதற்கும் அதை சமூகத்தின் தற்போதைய வேவைகளை பயண்படுத்துவதற்கும் கலாசார அமைப்புக்களும் கலைத்துறை ஆர்வலர்களும் அரங்கியல் மாணவர்களும். தமது ஆய்வு தேடல்களை ஆரம்பிக்வேண்டிய காலம் வந்துள் ளது. தமது ஆய்வுகளை மேற்கோள்களை மையப்படுத்தாமல் தமது சிந்தனை உருவாக்கத் தின் மையமாக சிந்தித்து சுயபடைப்புகளை படைக்க தொடங்கினால் அதுவே நிகழ்த்து கலை களுக்கான ஒரு புது யுகத்தை நமது சமூகத்தில் உருவாக்குவதற்கான அடித்தளமாக அமையும் என்பது உறுதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைஎழில் 2013 சிறப்புற எமது வாழ்த்துக்கள்

**Mas Intimate Vidiyal**

**இலங்கை வங்கி கிளிநொச்சி**

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கரைச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MATHI COLOURS
Nallur 021 2229285

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org